2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆம் திகதி நடாத்தப்பட்ட சனாதிபதித் தேர்தல்

தேர்தல்கள் ஆணையாளரின் அறிக்கை

மஹிந்த தேசப்பிரிய
தேர்தல்கள் ஆணையாளர்

முன்னுரை

1978 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்திற்கமைய இலங்கையில் நிறைவேற்று அதிகாரமுள்ள சனாதிபதியை தெரிவுசெய்வதற்கான தேர்தல் முதன்முதலாக 1982.10.20 ஆம் திகதி நடாத்தப்பட்டது. அதன் பின்னர் முறையே 1988 திசெம்பர் 19, 1994 நவம்பர் 09, 1999 திசெம்பர் 21, 2005 நவம்பர் 17, 2010 ஜனவரி 20 ஆகிய ஆண்டுகளில் நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்ட சனாதிபதியைத் தெரிவுசெய்துகொள்வதற்கான தேர்தல்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் இந்த அறிக்கையுடன் தொடர்பான சனாதிபதித் தேர்தல் 2015 சனவரி 08 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

1978 அரசியலமைப்புச் சட்டத்தின் 30(2) உறுப்புரைக்கமைய நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதியின் பதவிக்காலம் 05 வருடங்களாகும். மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தின் 31 ஆவது உறுப்புரைக்கமைய தனது முதலாவது பதவிக்காலம் ஆரம்பமாகி நான்கு வருடங்கள் நிறைவடைந்ததன் பின்னர் ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் மீண்டுமொரு பதவிக்காலத்திற்கான மக்கள் ஆணையைப் பெற்றுக் கொள்வதற்காக சனாதிபதிக்கு தனது விருப்பத்தை வெளியிடுவதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றது. அதற்கிணங்க மீண்டுமொரு பதவிக்காலத்திற்கான சனாதிபதியின் விருப்பத்தை 2014.11.20 ஆம் திகதி வெளியிட்டதன் பின்னர் தேர்தல்கள் ஆணையாளரால் சனாதிபதியைத் தெரிவுசெய்வதற்கான சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் பெயர் குறித்த நியமனப் பத்திரங்களை 2014.12.08 ஆம் திகதி கையேற்பதற்கும் 2015.01.08 ஆம் திகதி வாக்கெடுப்பை நடாத்துவதற்குத் தீர்மானித்து வர்த்தமானி ஊடாக கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

தேர்தலை நடாத்தியதன் பின்னர் அதனுடன் தொடர்பான அனைத்து விடயங்கள், தகவல்கள், குறிப்புக்கள், பெறுபேறு ஆகியன தொடர்பாக ஆராய்ந்து முறையான அறிக்கையொன்றை வெளியிடுதல் தேர்தல் ஆணைக்குழுவின் கட்டாயக் கடமையாகும். அதற்கிணங்க தேர்தலொன்று நடாத்தப்பட்டதன் பின்னர் வெளியிடப்படும் தேர்தல் ஆணையாளரின் அறிக்கையானது அரசியல் கட்சிகள் மற்றும் அரசியல் நடவடிக்கைகள் சம்பந்தமாக ஆர்வம் காட்டும் அனைவருக்கும் முக்கிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்குப் போன்றே இலங்கையின் தேர்தல் செயற்பாடுகள் சம்பந்தமான ஆராய்ச்சிகள், ஆய்வுகளில் ஈடுபட்டிருக்கும் மாணவர்களுக்கு, ஆய்வாளர்களுக்கு மற்றும் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு அவர்களது கல்வி நடவடிக்கைகளுக்கு மிகவும் உதவியாக இருக்கின்றதென்பதனை எமக்குக் கிடைக்கப்பெறும் பதில் குறிப்புக்களிலிருந்து தெரியவருகின்றது. எனவே இந்த அறிக்கையும் சட்டரீதியான விடயங்கள், தேர்தல் செயற்பாடுகள், சட்ட விதிமுறைகள், நெறிமுறைகள், கட்டளைகள், ஒழுக்கநெறிகள், பெறுபேறுகள் மற்றும் புள்ளிவிபரங்களைக் கொண்டிருத்தல் அவர்களது கல்வித் தாகத்தை தணிக்குமென நான் கருதுகின்றேன்.

இந்த தேர்தலுடன் தொடர்புடைய அலுவல்கள் மற்றும் கடமைகளை ஏற்பாடு செய்யும் பொறுப்பு திணைக்களத் தலைவர் என்ற வகையில் தேர்தல் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பினும் இது உண்மையிலேயே கூட்டுச் செயற்பாடின் பெறுபேறாகும். இச்செயற்பாட்டில் ஈடுபட்ட அனைத்து அலுவலர்களினதும் எல்லையற்ற அர்ப்பணிப்பின் காரணமாக இந்தத் தேர்தல் பணிகளை சிறப்பான வகையில் நிறைவுசெய்வதற்கு முடியுமாக இருந்ததென தெரிவிப்பதற்கு நான் தயங்கமாட்டேன். அந்தக் கூட்டுச் செயற்பாட்டிற்குப் போன்றே இந்த அறிக்கையைத் தயாரிக்கும் போது திரு.யூ.அமரதாச (முன்னாள் மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர், தேர்தல்கள் பணிப்பாளர் நாயகம்) உட்பட்ட தேர்தல் திணைக்களத்தின் ஒட்டுமொத்த பணியாட் குழுவினரும் எனக்கு வழங்கிய ஒத்துழைப்பு மற்றும் அர்ப்பணிப்பை மிகவும் மெச்சுகின்றேன். அத்துடன் இந்த அறிக்கையின் மொழிபெயர்ப்பு அலுவல்களை சிறப்பான வகையில் மெற்கொண்ட இலங்கைத் தேர்தல் தொழில்வல்லுநர்கள் ஒன்றியத்தின் தலைவர் ஓய்வுபெற்ற மேலதிக செயலாளர் (பாதுகாப்பு அமைச்சு) திரு. எஸ் மெதவெவ மற்றும் தேர்தல் ஆணைக்குழுவின் மொழிக்கொள்கையை அமுல்படுத்தல் தொடர்பான ஆலோசகர் ஓய்வுபெற்ற தேர்தல்கள் ஆணையாளர் திரு.எம்.எம். மொஹமட் ஆகியோருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.
(2011.03.25– 2015.11.13)

2019.08.31 ஆம் திகதி
தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை, இராஜகிரிய.

பொருளடக்கம்

I ஆம் பகுதி

- அரசியலமைப்பின் ஏற்பாடுகள் மற்றும் சனாதிபதித் தேர்தல் சட்டத்தின் ஏற்பாடுகள் 01
- அரசியலமைப்பின் வெளிப்படுத்துகை 02
- 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதி தேர்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான கட்டளை 03
- சனாதிபதி வேட்பாளராவதற்கான தகைமைகள் 03
- தேர்தல் மாவட்டங்கள் 04
- வாக்கெடுப்புப் பிரிவு 04
- தெரிவத்தாட்சி அலுவலர்களையும் மற்றும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களையும் நியமனம் செய்தல் 04

II ஆம் பகுதி

- பெயர் குறித்த நியமனத்திற்கு முன்னரான பூர்வாங்க நிகழ்ச்சித் திட்டம் 05
- செல்லுபடியாகும் தேருநர் இடாப்புக்கள் 05
- வாக்கெடுப்பு நிலையங்கள் 06
- அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் 07

III ஆம் பகுதி

- வேட்பு மனுத் தாக்கல் செய்தல் 10
- கட்டுப்பணம் 11
- கட்டுப்பணம் வைப்புச் செய்தல் 11
- நியதிச் சட்ட அலுவல்கள் 12
- வாக்குச் சீட்டில் பெயர் ஒழுங்குவரிசை 13
- தேர்தல் தொடர்பான அறிவித்தல் 13

IV ஆம் பகுதி

- தேர்தலுடன் தொடர்புடைய பூர்வாங்க அலுவல்கள் 14
- வாக்குச் சீட்டுக்களை அச்சிடல் 15
- அஞ்சல் வாக்களிப்பு 15
- அஞ்சல் வாக்காளர்களின் தேருநர் இடாப்பு 17
- வேறொரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான வசதிகளைச் செய்து கொடுத்தல் 18
- உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் 18
- 2013 இன் 27 ஆம் இலக்க வாக்காளர்களைப் பதிவு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டம் 19
- துடைத்தழிக்க முடியாத மை 19
- வாக்காளரை வாக்கெடுப்பு நிலையத்தில் இனங்கண்டு கொள்வதற்காக ஆளடையாள ஆவணங்களைப் பயன்படுத்துதல் 19
- வெளிநாடு சென்றுள்ள அல்லது இறப்பெய்திய தேருநர்கள் 20
- உத்தியோகபூர்வ முத்திரையை வாக்குச் சீட்டில் பொறித்தல் 21
- உடற்றகுதியீனத்துக்குள்ளான நபர்களுக்காக விசேட பிரயாண வசதிகள் 21

V ஆம் பகுதி

- ஊழியர்களுக்கு தமது வாக்கை அளிப்பதற்காக விடுமுறை வழங்குதல் 22
- பணியாட்டொகுதியினர் தேவைப்பாடுகள் 22
- போக்குவரத்து வசதிகள் 23
- தேர்தல் கண்காணிப்பு அலுவல்கள் 25
- உள்நாட்டு கண்காணிப்பு அமைப்புக்கள் 25
- வெளிநாட்டு கண்காணிப்பு அமைப்புக்கள் 27

VI ஆம் பகுதி

- தேர்தல் சட்டங்களை செயல்வலுப்பெறச் செய்தல் 29
- பாதுகாப்பு அலுவல்கள் 29
- அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கு வெளியிடப்பட்ட வழிகாட்டுநெறிகள் 30
- அரச வளங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதைத் தடுத்தல் 31
- தேர்தல் முறைப்பாடுகள் விசாரணை பணியகம் 32
- சனாதிபதித் தேர்தல் காலப்பகுதிக்குள் ஏற்பட்ட தேர்தல் சட்ட வலுவாக்கம் தொடர்பான விஷேட சந்தர்ப்பங்கள் 33

VII ஆம் பகுதி

- வேட்பாளர் உரிமைகள் 36
- வேட்பாளர்களுக்கு வானொலி மற்றும் தொலைக்காட்சி பிரசார வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல். 36
- கட்டணமின்றி வாக்காளர்களுக்கு அஞ்சலில் நிருபமொன்றை அனுப்பிவைப்பதற்கு வேட்பாளருக்குள்ள வசதி 36

VIII ஆம் பகுதி

- வாக்கெடுப்பு 38
- வாக்கெடுப்புத் தினம் 39

IX ஆம் பகுதி

- வாக்கெண்ணல் 43
- வாக்கெண்ணலை ஆரம்பிப்பதற்காக சில அடிப்படை நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்படல் வேண்டும். 45
- மூன்று கட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படும் வாக்கெண்ணல் சுருக்கமாக கீழே காட்டப்பட்டுள்ளது. 45

X ஆம் பகுதி

- பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தலும் வெளியிடுதலும் 47

XI ஆம் பகுதி

- தேர்தலுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் 51

XII ஆம் பகுதி

- அவதானிப்புக்களும் பரிந்துரைகளும்.....53
- அரச சேவை.....53
- அஞ்சல் வாக்களிப்பு மற்றும் அவ்வாறான ஏனைய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.....54
- துடைத்தழிக்க முடியாத மையின் பயன்பாடு மற்றும் பிரச்சினைகள்.....55
- அரசியல் கட்சிகளும் சுயேச்சை வேட்பாளர்களும்.....56
- தேர்தல் பிரசார நடவடிக்கைகள்.....57
- அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்காக அரச சொத்துக்களைப் பயன்படுத்துதல்.....58
- அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் பயன்பாடு.....59
- தேர்தல் காலப்பகுதியில் அரச வைபவங்களை நடாத்துதல்.....60
- அனைத்து தகைமைகளையும் கொண்ட பிரசைகள் உள்ளடங்கிய தேர்தல் செயற்பாடு..60

XII ஆம் பகுதி

- மதிப்பீடு.....64

சனாதிபதித் தேர்தல் அறிக்கைக்குரிய புள்ளிவிவரக் குறிப்புக்கள் தொடர்பான விபரம்

குறிப்பு I

- சனாதிபதித் தேர்தலுக்காகப் பயன்படுத்தப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்களின் எண்ணிக்கை மற்றும் பயன்படுத்தப்பட்ட கட்டிடங்கள் தொடர்பான வகைப்படுத்தல்.....69

குறிப்பு II

- சனாதிபதி தேர்தலுக்கு பெயர்குறித்த நியமனங்களை கையளிப்பதற்காக கட்டுப்பணம் செலுத்திய வேட்பாளர்கள் தொடர்பான விபரம்.....70

குறிப்பு III

- பெயர்குறித்த நியமனப் பத்திரங்களைக் கையளிப்பதற்காக வேட்பாளர்கள் வருகைதந்த நேரம் மற்றும் பெயர்குறித்த நியமனப் பத்திரங்களை கையளித்தல் தொடர்பான விபரங்கள்.....71

குறிப்பு IV

- சனாதிபதித் தேர்தலுக்காக கிடைக்கப்பெற்ற அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றில் அங்கீகரிக்கப்பட்ட, நிராகரிக்கப்பட்ட எண்ணிக்கை தொடர்பான விபரங்கள்.....72

குறிப்பு V

- சனாதிபதித் தேர்தலுக்குரியதாக விநியோகிக்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகள் தொடர்பான விபரங்கள்.....73

குறிப்பு VI

❖ சனாதிபதித் தேர்தலுக்குரியதாக ஒவ்வொரு மாவட்டத்தின் கீழும் தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள, இருப்பினும் தேர்தல் நடைபெறும் தினத்திற்கு முன்னர் இறப்பெய்திய அல்லது வெளிநாடு சென்றுள்ளதாக அறிக்கையிடப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் 74

குறிப்பு VII

❖ ஒவ்வொரு மாவட்டத்திற்காகவும் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்ட அலுவலர்கள் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் 75

குறிப்பு VIII

❖ சனாதிபதித் தேர்தலுடன் தொடர்பாக தேசிய முறைப்பாட்டு நிலையத்திற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை 76

குறிப்பு IX

❖ ஒவ்வொரு மாவட்டத்திற்குமுரிய வாக்கெண்ணல் மண்டபங்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் 77

குறிப்பு X

❖ சனாதிபதித் தேர்தலுக்குரியதாக விநியோகிக்கப்பட்ட தேருநர் இடாப்பின் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட இறுவட்டுக்கள் தொடர்பான தகவல்கள் 78

குறிப்பு XI

❖ ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தின் கீழ் வேட்பாளர்கள் பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் 81

குறிப்பு XII

❖ ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்குமுரிய ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரதேசங்களின் பிரகாரம் ஒவ்வொரு வேட்பாளரும் பெற்றுக்கொண்ட வாக்குகள் எண்ணிக்கை தொடர்பான விபரம் 82

சனாதிபதித் தேர்தல் அறிக்கைக்குரிய அட்டவணைகள்

அட்டவணை I

❖ அரசியலமைப்பின் 31 (3அ) உறுப்புரைக்கமைய மேலதிக காலமொன்று பதவி வகிப்பதற்காக மக்கள் ஆணையைப் பெற்றுக்கொள்வதற்காக தமது விருப்பத்தை தெரிவித்து பதவி வகிக்கின்ற சனாதிபதி அவர்களால் செய்யப்படுகின்ற வெளிப்படுத்துகை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் 107

அட்டவணை II

❖ சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவிற்கமைய பெயர்குறித்த நியமனத் திகதி மற்றும் வாக்கெடுப்புத் தினம் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளரால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல 108

அட்டவணை III

❖ தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களை பெயர் குறிப்பிடப்பட்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல். 109

அட்டவணை IV

❖ போட்டியிடும் வேட்பாளர்கள் பற்றிய விபரங்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல். 112

அட்டவணை V

❖ சனாதிபதி தேர்தல் பிரசார நடவடிக்கைகளை வாக்கெடுப்பு நடாத்தப்படுவதற்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்னர் நிறைவுசெய்தல் சம்பந்தமான வர்த்தமானி அறிவித்தல். 115

அட்டவணை VI

❖ இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஊடக நெறிமுறைகள் சம்பந்தமாக ஊடக நிறுவனங்களை அறிவுறுத்தி தேர்தல்கள் ஆணையாளரால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்..... 116

அட்டவணை VII

❖ ஒரு வேட்பாளரால் வெளியிடப்பட்ட கூற்றுக்களை வேறு வேட்பாளரொருவரை ஊக்குவிப்பதற்கு பயன்படுத்த கூடாதென அறிவிக்கப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல். 120

அட்டவணை VIII

❖ அரச சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவித்து அனைத்து அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், முப்படை தளபதிகளுக்கு அனுப்பப்பட்ட கடிதம்..... 121

அட்டவணை IX

❖ தேர்தல் சட்டங்களை மீறுவதனை தடுப்பதற்கான தேவை 128

அட்டவணை X

❖ தொலைபேசி வலையமைப்புக்களினூடாக மேற்கொள்ளப்படும் பிரசார அறிவித்தல்கள்.... 131

அட்டவணை XI

❖ கட்சிகள்/ வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்காக நிதிசார் மற்றும் பொருட்கள் சார் உதவிகளைப் பகிர்ந்தளித்தல். 132

அட்டவணை XII

❖ வாக்கு உங்கள் உரிமையாகும் 133

அட்டவணை XIII

❖ வாக்களிக்கும் முறை 134

அட்டவணை XIV

❖ ஊழியர்களுக்கு விடுமுறை வழங்குதல் தொடர்பான அறிவித்தல் 135

அட்டவணை XV

❖ 2014.11.21 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் நிரந்தர முகவர்களுடன் தேர்தல்கள் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் குறிப்பு. 136

அட்டவணை XVI

❖ 2014.12.05அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் நிரந்தர முகவர்களுடன் தேர்தல்கள் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் குறிப்பு. 151

அட்டவணை XVII

❖ 2014.12.12 போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் / முகவர்களுடன் தேர்தல்கள் செயலகத்தின் கேட்போர் கூடத்தின் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் குறிப்பு. 164

அட்டவணை XVIII

❖ 2014.12.19 போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் / முகவர்களுடன் தேர்தல்கள் செயலகத்தின் கேட்போர் கூடத்தின் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் குறிப்பு.. 173

அட்டவணை XIX

❖ 2014.12.26 போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் / முகவர்களுடன் தேர்தல்கள் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் குறிப்பு. 187

அட்டவணை XX

❖ சனாதிபதித் தேர்தல் முடிவடைந்த பின்னர் தேர்தல் ஆணையாளரால் வெளியிடப்பட்ட அறிவித்தல் 205

I ஆம் பகுதி

அறிமுகம்

அரசியலமைப்பின் ஏற்பாடுகள் மற்றும் சனாதிபதித் தேர்தல் சட்டத்தின் ஏற்பாடுகள்

1978 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்புக்கமைய 1982 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 20 ஆம் திகதி முதலாவது சனாதிபதித் தேர்தல் நடாத்தப்பட்டதோடு,ஏழாவது சனாதிபதித் தேர்தல் 2015 சனவரி மாதம் 08 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

02. 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின் சட்ட ஏற்பாடுகளுக்கமைய 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள்சட்டம் மற்றும் அச்சட்டத்தில் கொண்டுவரப்பட்ட 1988 ஆம் ஆண்டின் 16 மற்றும் 35 ஆம் இலக்க திருத்தச் சட்டங்கள் மூலம் சனாதிபதியைத் தேர்ந்தெடுத்தல் தொடர்பான தேர்தலுக்குரிய சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

03. பதவி வகிக்கும் சனாதிபதியின் உத்தியோகபூர்வ பதவிக்காலம் நிறைவடைவதற்கு முன்னர் ஒரு மாதத்தை விடக் குறையாத மற்றும் இரண்டு மாதங்களுக்கு மேற்படாத காலப்பகுதியினுள் அல்லது சனாதிபதியின் முதலாவது பதவிக் காலம் நான்கு வருடங்கள் நிறைவடைந்த பின்னர்,சனாதிபதியாக மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக தமது விருப்பத்தை பொது மக்களுக்கு வெளிப்படுத்துதல் காரணமாக சனாதிபதித் தேர்தலொன்றை நடாத்துவதற்கான சட்ட அவகாசம் காணப்படுகின்றது.

04.(I) **பதினெட்டாவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் அரசியலமைப்பின் 31(2) ஆம் இலக்க உப உறுப்புரை நீக்கப்பட்டு அரசியலமைப்பின் (3அ) (அ) (1) உப உறுப்புரை திருத்தம் செய்யப்பட்டமையினால் ஒரே நபருக்கு சனாதிபதியாக பதவி வகிப்பதற்கான சந்தர்ப்பங்களுக்கான மட்டுப்பாடு நீக்கப்பட்டதன் காரணமாக, இரண்டாவது தடவையாக பதவி வகித்துக்கொண்டிருந்த தற்போதைய சனாதிபதிக்கு மீண்டும் சனாதிபதி பதவிக்கு போட்டியிடுவதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தனது தற்போதைய பதவிக் காலத்தில் நான்கு ஆண்டுகள் கழிந்த பின்னர் தனது விருப்பத்தை பொதுமக்களுக்கு வெளிப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றது.**

(II) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பில்மீண்டும் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு பதினெட்டாம் அரசியலமைப்புத் திருத்தம் 2010 செப்தெம்பர் 09 ஆம் திகதி நிறைவேற்றப்பட்டது. அரசியலமைப்பின் 31(2) உப உறுப்புரையின் பிரகாரம் “மக்களால் இரண்டு தடவைகள் சனாதிபதியொருவராக தேர்ந்தெடுக்கப்பட்ட எந்தவொரு நபரும் அதன் பின்னர் அப்பதவிக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகைமையற்றவராவார்” என்ற உறுப்புரைக்கமைய சனாதிபதியொருவருக்கு பதவி வகிக்க முடியுமாகவிருந்த இரண்டு தடவைகள் என்ற மட்டுப்பாடு நீக்கப்பட்டது. தடவைகளின் எண்ணிக்கை வரையறையின்றி சனாதிபதி பதவிக்குப் போட்டியிடுவதற்கு எந்தவொரு நபருக்கும் சட்டரீதியான சாத்தியப்பாடு கிடைக்கப்பெற்றது. பதினெட்டாம் அரசியலமைப்புத் திருத்தம் செயல்வலுப் பெறுவது எதிர்காலத்தில் நியமனம் செய்யப்படுகின்ற சனாதிபதியொருவருக்கு, அதாவது 2010.09.09 ஆம் திகதியின் பின்னர் நியமனம் செய்யப்படுகின்ற சனாதிபதியொருவருக்கெனவும் அச்சந்தர்ப்பத்தில் பதவி வகிக்கின்ற சனாதிபதி பழைய அரசியலமைப்புக்கமைய சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளமையால் அவருக்கு செயல்வலுவிலிருப்பது பதினெட்டாம் அரசியலமைப்புத் திருத்தத்திற்கு முன்னர் காணப்பட்ட சட்ட நிலைமையாகுமென்ற, கருத்தொன்று இது தொடர்பில் ஆர்வம் காட்டுகின்ற சில அரசியல் கட்சிகள், சட்டத்துறை வல்லுனர்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் பலவற்றாலும் வெளியிடப்பட்டன.

(III) ஆதலால், சனாதிபதி அவர்களால் இவ்விடயம் உயர்நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டு பதினெட்டாம் அரசியலமைப்புத் திருத்தத்திலிருந்து 31(2) உப உறுப்புரையை நீக்குதல் மற்றும் அது தாக்கம் செலுத்தும் முறை தொடர்பாக இலங்கை அரசியலமைப்பின் 125 ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர்நீதிமன்றத்தில் சட்ட ரீதியான பொருள்கோடல் உசாவப்பட்டது. உயர் நீதிமன்றத்தினால் அரசியலமைப்பு மற்றும் பதினெட்டாம் அரசியலமைப்புத் திருத்தம் ஆராயப்பட்ட பின்னர்,பதினெட்டாம் அரசியலமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட்ட 2010.09.09 ஆம் திகதி தொடக்கம் அது செயல்வலுப்பெறுவதாகவும் அதற்கமைய பதவிவகிக்கின்ற சனாதிபதிக்கும் பதினெட்டாம் அரசியலமைப்புத் திருத்தம் ஏற்புடையதெனவும் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய மூன்றாவது தடவையாகவும் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பம் அப்போதைய சனாதிபதி அவர்களுக்குக் கிடைக்கப்பெற்றது.

அரசியலமைப்பின் வெளிப்படுத்துகை

05. 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல் தொடர்பான சட்டத்தின் 56(2) ஆம் பிரிவின் கீழ்,2010 சனவரி 26 ஆம் திகதி நடாத்தப்பட்ட சனாதிபதித் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டு 2010 நவம்பர் மாதம் 19 ஆம் திகதி சனாதிபதி பதவியில் பதவி பிரமாணம் செய்து கொண்ட,தற்போது சனாதிபதிப் பதவி வகிக்கின்ற சனாதிபதி அவர்களால் அரசியலமைப்பின் 31(3அ) உறுப்புரைக்கமைய மேலதிக காலமொன்று பதவி வகிப்பதற்கான ஆணையைப் பெற்றுக் கொள்வதற்கானதனது விருப்பம் 2014 நவம்பர் மாதம் 20 ஆம் திகதி பொதுமக்களிடம் வெளிப்படுத்தப்பட்டது. அவ்வறிவித்தல் 2014 நவம்பர் மாதம் 20 ஆம் திகதிய 1889/31 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. அவ்வர்த்தமானி அறிவித்தல் இவ்வறிக்கையின் முதலாம் அட்டவணையில் இணைக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 30(2) ஆம் இலக்க உறுப்புரைக்கமைய சனாதிபதியின் பதவிக் காலம் ஆறு ஆண்டுகள் என்பதோடு, மேலே குறிப்பிடப்பட்ட சனாதிபதி அவர்களின் விருப்பம் வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் சனாதிபதி அவர்கள் 04 வருடங்களும் ஒரு நாள் மாத்திரமே பதவி வகித்திருந்தார்.

1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதி தேர்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

06. 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பிற்கான, மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்பின் 31(3அ) ஆம் உறுப்புரைக்கமைய சனாதிபதியொருவரால் மேற்குறித்தவாறு தமது விருப்பம் வெளிப்படுத்தப்படுகின்றமை, 31(3அ) (II) ஆம் உறுப்புரைக்கமைய சனாதிபதியொருவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலொன்றை நடாத்துவதற்கு தேர்தல்கள் ஆணையாளருக்கு விடுக்கப்படும்ஆணையாகும். சனாதிபதியொருவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலொன்றை நடாத்துவதற்கு அரசியலமைப்பினால் தேர்தல்கள் ஆணையாளருக்கு ஆணை பிறப்பிக்கப்படும் சந்தர்ப்பமொன்றில், அவர் 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவிற்கமைய வர்த்தமானியில் வெளியிடப்படுகின்ற கட்டளையொன்றின் ஊடாக அக்கட்டளை வெளியிடப்பட்ட திகதியிலிருந்து 16 நாட்களுக்குக் குறையாத மற்றும் 21 நாட்களுக்கு மேற்படாத **(காலத்திற்குள்) ஒரு தினத்தை** வேட்பாளர்களின் வேட்புமனுத் தாக்கல்செய்யும் தினமாகவும், வேட்புமனுத் தாக்கல் செய்யும் தினத்திலிருந்து 04 வாரங்களுக்கு குறையாத மற்றும் 06 வாரங்களுக்கு மேற்படாத தினமொன்றை வாக்கெடுப்பு நடாத்தப்படும் தினமாகவும் நிர்ணயித்தல் வேண்டும். அதற்கமைய தேர்தல்கள் ஆணையாளரால் சனாதிபதியொருவரை தேர்ந்தெடுத்தல் தொடர்பான சட்டத்தின் 02 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் 2014 நவம்பர் மாதம் 21 ஆம் திகதி 1889/35 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. அவ்வர்த்தமானி அறிவித்தல் இவ்வறிவித்தலில் இரண்டாம் அட்டவணையாக இணைக்கப்பட்டுள்ளது.

07. சனாதிபதி வேட்பாளராவதற்கான தகைமைகள் :-

வாக்காளராவதற்கான தகைமை பெற்ற அனைத்து நபர்களும், அந்நபர்,

அ. முப்பத்தைந்து வயது பூர்த்தியடையாதவராக இருத்தல்,

ஆ. 91 ஆவது உறுப்புரையின்(1)ஆவது உப உறுப்புரையின் (ஈ), (உ), (ஊ) அல்லது (எ) பந்தியின் கீழ் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்படுவதற்கு தகுதியற்றவராக இருத்தல்,

இ. அவர் மக்களால் இருமுறை சனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டிருத்தல்,

ஈ. 38 ஆவது உறுப்புரையின் 2 ஆவது உப உறுப்புரையின் (உ) பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் சனாதிபதிப் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருத்தல்,

போன்ற தகுதியீனங்களில் ஒன்றை அல்லது சிலவற்றை கொண்டிருக்கும் ஒருவர் சனாதிபதியாக தெரிவுசெய்யப்படுவதற்கு தகுதியற்றவராவார்,

08. தேர்தல் மாவட்டங்கள் :- தேர்தல்களை நடாத்தும் பணிகளுக்காக இலங்கை 22 தேர்தல் மாவட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளதோடு,இத்தேர்தல் மாவட்டங்கள் 1978 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட தேர்தல் மாவட்டஎல்லை நிருணய ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டதாகும். இவ்வாணைக்குழுவின் பரிந்துரைகள் அரசியலமைப்பின் 97 ஆம் உறுப்புரையின் கீழ் சனாதிபதி அவர்களால் வெளியிடப்பட்ட 1981 சனவரி மாதம் 15 ஆம் திகதிய 1233 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலில் உட்சேர்க்கப்பட்டுள்ளது. **இக்கட்டளைக்கமைய இலங்கை இருபத்தி இரண்டு (22) தேர்தல் மாவட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளதோடு,மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய நிருவாக மாவட்டங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு வன்னி தேர்தல் மாவட்டமும்** பிற்பட்ட காலத்தில் கிளிநொச்சி என்ற பெயரில் தனியான மாவட்டமொன்று தாபிக்கப்பட்டதன் பின்னர், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய நிருவாக மாவட்டங்கள் ஒன்றிணைக்கப்பட்டயாழ்ப்பாண தேர்தல் மாவட்டமும்தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தினதும் பரப்பளவு அப்பெயரிலான தேர்தல் மாவட்டத்திற்கு சமமானதாகும். **அம்பாறை நிருவாகம் மாவட்டம் திகாமடுல்லை தேர்தல் மாவட்டமென அழைக்கப்பட்டதோடு, ஏனைய நிருவாக மாவட்டங்கள் உரித்தான தேர்தல் மாவட்டங்கள் அந்நிருவாக மாவட்டங்களின் பெயர்களினாலேயே அழைக்கப்பட்டன.** இவ்விருபத்திரண்டு தேர்தல் மாவட்டங்களும் சனாதிபதிதேர்தலுக்காக நடைமுறையிலுள்ளதேர்தல் மாவட்டங்களாகும்.

09. **வாக்கெடுப்புப் பிரிவு** :-வாக்கெடுப்புப் பிரிவு மற்றும் வாக்கெடுப்பு மாவட்டங்களை வேறு பிரித்துக் குறித்தொதுக்குதல் தேர்தல்கள் ஆணையாளரினால் வெளியிடப்படக்கூடிய கட்டளைகளுக்கமைய அந்தந்த தேர்தல் மாவட்டத்தின் பதிவு அலுவலருக்குரிய பொறுப்பாகும். 1978 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பின் 97 ஆம் உறுப்புரைக்கமைய 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் அவ்வாறு வேறு பிரித்தொதுக்கப்பட்ட வாக்கெடுப்புப் பிரிவுகள் மற்றும் வாக்கெடுப்பு மாவட்டங்களுக்குரிய விபரங்கள் 1981.02.03 ஆம் திகதி தொடக்கம் 1981.02.13 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியினுள் ஒன்பதுஅதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல்களில் வெளியிடப்பட்டுள்ளது. அதன் பின்னரும் வாக்குகளின் எண்ணிக்கை அதிகரித்தமை போன்ற விடயங்களைக் கருத்தில் கொண்டு வாக்கெடுப்பு மாவட்டங்கள் அமைந்துள்ள வாக்கெடுப்புப் பிரிவுகளின் எண்ணிக்கைகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தெரிவத்தாட்சி அலுவலர்களையும் மற்றும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களையும் நியமனம் செய்தல்.

10. சனாதிபதித் தேர்தல் சட்டத்தின் 7ஆம் பிரிவிற்கமைய ஆணையாளரினால் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலராக எவரேனும் நபரொருவரை பெயர் குறித்து அல்லது பதவிவழி அடிப்படையில் நியமனம் செய்தல் வேண்டுமென்பதோடு, அத்தெரிவத்தாட்சி அலுவலரின் பணிகளை ஆற்றுவதற்கு அவருக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக நபரொருவரை அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையை பெயர் குறித்து அல்லது பதவியின் அடிப்படையில் நியமனம் செய்ய முடியும். அவ்வாறு நியமனம் செய்யப்படுகின்ற ஒவ்வொரு தெரிவத்தாட்சி அலுவலருக்கும் தமக்குரிய தேர்தல் மாவட்டத்தின் தேர்தலை நடாத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்படும்.

11. சனாதிபதியைத் தேர்ந்தெடுத்தல் தொடர்பான சட்டத்தின் 7 ஆம் பிரிவினால் தமக்குக் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமைய தேர்தல்கள் ஆணையாளரினால் 2014 நவம்பர் மாதம் 21 ஆம் திகதிய 1889/36 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபர் ஆகியோரில்வவுனியா மாவட்டத்தின், மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபரை வன்னி தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலராகவும்,யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபர் ஆகியோரில் யாழ்ப்பாண மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபரையாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலராகவும், அது தவிர ஏனைய அனைத்து மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள் அந்தந்த நிருவாக மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களாகவும் நியமனம் செய்யப்பட்டனர். இவ்வறிவித்தல் இவ்வறிக்கையின் 3 ஆவது அட்டவணையாக குறிப்பிடப்பட்டுள்ளது.

12. சனாதிபதித் தேர்தலுக்குரிய பூர்வாங்க அலுவல்கள் ஒழுங்கமைப்பின் போது ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் தெரிவத்தாட்சி அலுவலருக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக 2014 நவம்பர் 21 ஆம் திகதிய 1889/36 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கமைய 29 உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் பதவிப் பெயரில்நியமனம் செய்யப்பட்டதோடு, 2014 திசெம்பர மாதம் 04 ஆம் திகதிய 1891/33 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் அலுவலர்கள் பெயர்வழியில் தெரிவத்தாட்சி அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டனர்.

II ஆம் பகுதி

பெயர் குறித்த நியமனத்திற்கு முன்னரானபூர்வாங்க நிகழ்ச்சித் திட்டம்

13. சனாதிபதித் தேர்தலுக்குரிய அறிவித்தல் தேர்தல்கள் ஆணையாளரினால் 2014.11.21 ஆம் திகதி வெளியிடப்பட்டதைத் தொடர்ந்துதேர்தலுக்குரிய பூர்வாங்க அலுவல்களை ஏற்பாடு செய்யும்நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.ஏனைய தேர்தல் சட்டங்களோடு ஒப்பிடும்போது சனாதிபதித் தேர்தல்சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள கால எல்லை குறுகியதாகவுள்ளதைக் கருத்தில் கொண்டு குறித்த பணிகளை நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் நிறைவு செய்வதற்குத் தேவையானமுன்னேற்பாடுகள் அனைத்தையும் மேற்கொள்வதற்கு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் மற்றும் மாவட்ட மட்டத்தில் தேர்தல்கள் திணைக்களத்தின் பதவிநிலை அலுவலர்களான பிரதி/உதவித்தேர்தல்கள் ஆணையாளர்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

செல்லுபடியாகும் தேருநர் இடாப்புக்கள்

14. 2014 நவம்பர் 21 ஆம் திகதி சனாதிபதித் தேர்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான கட்டளை தேர்தல்கள் ஆணையாளரினால் வெளியிடப்பட்டபோது, 2014 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வு அலுவல்கள் நிறைவுசெய்யப்பட்டு 2014 ஒக்தோபர் மாதம் 31 ஆம் திகதி தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இரண்டாம் பிரிவின் கீழான கட்டளை வெளியிடப்படுகின்ற தினத்தில் நடைமுறையிலுள்ள தேருநர் இடாப்பு தேர்தலுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டுமென சனாதிபதித் தேர்தல் சட்டத்தின் 5 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் கீழ் எவரேனுமொரு நபருக்கு வாக்களிப்பதற்கான உரிமை உண்டா? இல்லையா? என்பதை தீர்மானிப்பதற்கான முடிவான சாட்சி தேருநர் இடாப்பாகுமெனசட்டத்தின் 6 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏதேனுமொரு வருடத்தின் தேருநர் இடாப்பை அத்தாட்சிப்படுத்தல் பொதுவாகஅடுத்த ஆண்டின்மே மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த தினமொன்றில் மேற்கொள்ளப்பட்டாலும் 2012 ஆம் ஆண்டிலிருந்து குறித்த வருடத்தின் தேருநர் இடாப்பின்பணிகளை அவ்வருடத்தினுள்ளேயே நிறைவுசெய்யப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்படுகின்றது.அதன் காரணமாக 2014 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்புக்கமைய நடாத்தப்பட்ட இச்சனாதிபதித் தேர்தலின்போது 18 வயது பூர்த்தியடைந்த புதிதாகப் பதிவு செய்யப்பட்ட ஏறத்தாழ மூன்று இலட்சத்துக்குக் கிட்டிய வாக்காளர்களுக்கு வாக்குரிமையைப் பெற்றுக்கொடுக்க முடியுமாயிற்று,தேருநர் இடாப்புத் தயாரித்தல்,கணனிகளில் உட்சேர்த்தல், அதன் பின்னர் கணனித்தொகுதியில் மேற்கொள்ளப்பட்ட மேம்பாட்டுப் பணிகள் மற்றும் 2014 ஆம் ஆண்டில் தேசிய மட்டத்தில் தேர்தல்களை ஒழுங்கமைப்புச்செய்ய வேண்டிவராமை போன்றன தேருநர் இடாப்பின் பணிகளை ஒக்தோபர் 31 ஆம் திகதி நிறைவு செய்வதற்கு பிரதான காரணங்களாக அமைந்தன.

15. ஒரு தேர்தல் மாவட்டத்திற்கு ஒரு தேருநர் இடாப்பு எனும் பிரகாரம் தேருநர் இடாப்பு தயாரிக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்படுகின்றது. தற்போதைய தேர்தல் மாவட்டங்களில் பழைய தேர்தல் தொகுதி அதிகார எல்லைகள் வாக்கெடுப்பு பிரிவுகளாக மாறியுள்ளமையினால் அவை பழைய தேர்தல் மாவட்டம் அவற்றுடன் தொடர்பான தேருநர் இடாப்பு தற்போதைய தேர்தல் மாவட்டத்தின் தேருநர் இடாப்புப்பாகமாக தயாரிக்கப்பட்டுள்ளது.அவை பழைய தேர்தல் தொகுதி அல்லது 160 வாக்கெடுப்பு பிரிவுகளுக்குச் சமமான விதத்தில் தயாரிக்கப்படுகின்றன. 2012 ஆம் ஆண்டு வரை வாக்கெடுப்புப் பணிகளுக்காகப்பயன்படுத்துவதற்காக வருடாந்தம் தேருநர் இடாப்பின் 100-150 வரையான பிரதிகள் புத்தகங்களாகத் தயாரிக்கப்பட்டன. வருடாந்தம் மேற்கொள்ளப்படும் தேருநர் இடாப்புத் திருத்த வேலைகள், தேர்தல் அலுவலகத்தின் பணிகள் மற்றும் தேர்தலொன்றின் போது வாக்கெடுப்பு நிலையங்களின் அலுவல்கள் என்பவற்றிற்கென தேருநர் இடாப்பின் 15 பிரதிகள் மாத்திரம் புதிதாக தயாரிக்கப்படல் போதுமானதென,2012, 2013 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தல்களின் போது தெரியவந்தது. வாக்கெடுப்பு மற்றும் தேருநர் இடாப்பு மீளாய்வின் போது மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்கும் மற்றும் வாக்கெடுப்பு நிலையங்களுக்கும் தேவையான பிரதிகளைக் கருத்தில் கொண்டு 15 பிரதிகள் வரை புத்தகங்களாகத் தயாரிப்பதற்கும் ஏனைய அனைத்துத் தேவைப்பாடுகளுக்காகவும், தேருநர் இடாப்பின் இறுவட்டுக்களைப் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கையெடுக்கப்பட்டது. அஞ்சல் வாக்கு அலுவல்களுக்காக தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் மாத்திரம் தேருநர் இடாப்புக்கள் புத்தகங்களாகக் காட்சிப்படுத்தப்பட்டதோடு, ஏனைய அனைத்து காட்சிப்படுத்தப்படும் நிலையங்களிலும் தேருநர் இடாப்பின் இறுவட்டுக்களைப் பயன்படுத்தி அஞ்சல் வாக்காளர்களின் விபரங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான திட்டமொன்று தயாரிக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக தேர்தல்களுக்காக அனைத்து அரசியல் கட்சிகள்/ வேட்பாளர்களுக்கு தேருநர் இடாப்பின் இறுவட்டுக்கள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டன. இறுவட்டுக்கள்

பயன்படுத்தப்பட்டமை காரணமாக குறித்த நபர்களுக்கு தகவல்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக விஷேட திட்டமொன்றை நடைமுறைப்படுத்த நேரிட்டது. அதன் கீழ் அஞ்சல் வாக்காளர்களின் தேவைப்பாடுகளுக்காக தேருநர் இடாப்பு காட்சிப்படுத்தப்பட்ட இடங்களில் கணனிகளைப் பொருத்தி மேலதிக பணியாட் குழுவினரை அமர்த்த நேரிட்டதோடு,மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள் மற்றும் தேர்தல்கள் செயலகத்தில் விஷேட பிரிவுகளை நிறுவி தொலைபேசி, தொலைநகல், மின்னஞ்சல் செய்திகளூடாக கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளின் அடிப்படையில் உரிய தகவல்கள், அரசாங்க தகவல் மையத்தின் 1919 என்றதொலைபேசியூடாகப் பெற்றுக் கொடுக்கப்படநடவடிக்கையெடுக்கப்பட்டது. அதற்கமைய தேருநர் இடாப்பின் அதிக எண்ணிக்கையான பிரதிகளை தயாரித்தல் அவற்றை உரிய இடங்களில் காட்சிப்படுத்தல் மற்றும் ஆவணங்களின் பாதுகாப்பு போன்ற விடயங்களை கருத்தில் கொள்ளும் போது தேருநர் இடாப்பின் இறுவட்டு பாவனை மிகவும் வசதியான செயலொன்றாக அமைந்தது.

16. வாக்கெடுப்பு நிலையத் தேவைப்பாட்டிற்காக மூன்று பிரதிகளும், அஞ்சல் வாக்களிப்புக்கான தேருநர் இடாப்பு காட்சிப்படுத்தலுக்காக இரண்டு பிரதிகளும்,உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைக்காக ஒரு பிரதியும் அலுவலகத் தேவைப்பாடுகளுக்காகஇரண்டு பிரதிகளும் என்ற அடிப்படையில் எட்டுப் (08) பிரதிகளும் மற்றும் தேருநர் இடாப்பு மீளாய்வு, அதற்குரிய அலுவலக பணிகளுக்காக ஏழு பிரதிகளுமாக மொத்தம் 15 பிரதிகள் தேர்தல்கள் செயலகத்தினால் தேருநர் இடாப்புக்கள் புத்தகங்களாக ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்காகவும் தனியார் பிரிவினூடாக அச்சிடப்பட்டு தேர்தல் மாவட்ட அலுவலகங்களுக்கு தேருநர் இடாப்புக்கள் தயாரிக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்டதன் பின்னர் வழங்கப்பட்டிருந்தன. அரசியல் கட்சிகளின் மற்றும் வேட்பாளர்களின் அனைத்து கோரிக்கைகளுக்குமான இறுவட்டுக்கள், பணம் செலுத்திபெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டதோடு,மாவட்ட மட்டத்தில் மற்றும் வாக்கெடுப்புப் பிரிவு மட்டத்திலான இறுவட்டுக்களை பெற்றுக் கொள்ள முடியுமான விதம் பற்றி அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டனர். அதற்கமைய தேர்தலுக்குரிய தேருநர் இடாப்பின் 161 இறுவட்டுக்கள் பல்வேறு அரசியல் கட்சிகள்/ வேட்பாளர்களால் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததோடு, அதன் மூலம் கிடைத்த வருமானம் 985,000.00 ரூபாவாகும்.

வாக்கெடுப்பு நிலையங்கள்

17. வாக்கெடுப்பு நிலையங்களின் தன்மை அவற்றிற்குத் தேவையான அனைத்து வசதிகளும் காணப்படுகின்றனவா என்பது தொடர்பாக உறுதிசெய்துகொள்வதற்காக வாக்கெடுப்பொன்று நடாத்தப்படுவதற்கான காலம்நெருங்கும்போது அவை தொடர்பாக பரீட்சித்துப் பார்க்கப்படும். இக்கட்டிடங்களில் சில தொடர்ந்து பாவிக்கப்படாமை காரணமாக பொதுவாகக்குறைபாடுகளை இனங்கண்டு அவற்றைப் பொருத்தமான வகையில் தயார்செய்தல் அத்தியாவசியமாகும். பெயர் குறித்த நியமனத் திகதியிலிருந்து 02 வாரங்களினுள் ஆணையாளரால் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தினதும் அந்தந்த வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கான வாக்கெடுப்பு நிலையம் அல்லது வாக்கெடுப்பு நிலையங்கள், அமையப் பெற்றுள்ள இடம் மற்றும் பெண் வாக்காளர்களுக்காக குறித்தொதுக்கப்பட்ட ஏதேனுமொரு, வாக்கெடுப்பு நிலையம்அல்லது நிலையங்கள் காணப்படுமாயின்அவற்றின் அமைவிடமும் நிச்சயிக்கப்பட்டு அறிவித்தலொன்று வர்த்தமானியில் பிரசுரிக்கப்படல் வேண்டும்.பெண் வாக்காளர்களுக்காக குறித்தொதுக்கப்பட்ட ஏதேனுமொரு வாக்களிப்பு நிலையம் காணப்படுமாயின் அதுதவிர ஒருவாக்கெடுப்பு மாவட்டத்திற்கென காணப்பட வேண்டியது ஒரு வாக்கெடுப்பு நிலையம் மாத்திரமேயென சட்டத்தின் 04 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய 2014 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்புக்கமைய 12021 வாக்கெடுப்பு மாவட்டங்களின் தேவைப்பாடுகளை நிறைவு செய்து கொள்வதற்காக மொத்தமாக 12314 வாக்கெடுப்பு நிலையங்கள் தாபிக்கப்பட்டன. இவ்வாக்கெடுப்பு நிலையங்களின் அமைவிடத்தை வரையறுத்துக் காட்டும் சட்டத்தின் 4(1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் 2014 திசெம்பர் மாதம் 08 ஆம் திகதிய1892/9 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. பெண் வாக்காளர்களுக்காக விஷேடமாகக் குறித்தொதுக்கப்பட்ட 293 வாக்கெடுப்பு நிலையங்களும் மொத்த வாக்கெடுப்பு நிலையங்களின் எண்ணிக்கையில் அடங்கும். தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவிற்கமைய ஆணையாளரினால் வேறு விதமாக கட்டளை பிறப்பிக்கப்பட்டாலேயொழிய அவ்வாறான தேர்தல் மாவட்டமொன்றிற்கு 1500 வாக்காளர்களை விடஅதிகமாக உட்சேர்க்கக் கூடாது. இத்தேர்தலின் போது வாக்கெடுப்பு நிலையமொன்றின் சாதாரண வாக்காளர்களின் எண்ணிக்கை 1251 ஆகக் காணப்பட்டது. இருப்பினும்,1500 வாக்காளர்களை விட அதிகமான 3202 வாக்கெடுப்புமாவட்டங்கள்காணப்பட்டன.

17.1. வாக்கெடுப்பு நிலையமாக இடங்களைத் தேர்ந்தெடுக்கும் போது கவனம் செலுத்தப்படுகின்ற முக்கிய விடயங்கள் கீழ்வருமாறு

17.1.1. வாக்கெடுப்பு நிலையமொன்றின் ஆகக் கூடிய வாக்காளர்களின் எண்ணிக்கையை 1500 ஆக மட்டுப்படுத்த முயற்சித்தல்.

17.1.2. வாக்காளரொருவர் தனக்குரிய வாக்கெடுப்பு நிலையத்திற்கு நடந்து செல்ல வேண்டிய தூரம் முடியுமானவரை குறைவாக இருக்கும் விதத்தில் அவற்றைத் தேர்ந்தெடுத்தல்.

17.1.3. முடியுமானவரை வாக்கெடுப்பு மாவட்டத்தின் மத்திய இடமொன்றில் வாக்கெடுப்பு நிலையத்தை நிறுவுதல்.

17.1.4. அரச கட்டிடங்கள் அல்லது வேறு பொருத்தமான நிரந்தர கட்டிடங்களை இயன்றவரை வாக்கெடுப்பு நிலையங்களுக்காகப் பெற்றுக் கொள்ளல்.

17.1.5. வாக்கெடுப்பு நிலையத்திற்கு இலகுவாக செல்லக்கூடிய பாதைகள் காணப்படுவதைஉறுதிசெய்து கொள்ளல்.

17.1.6. வாக்கெடுப்பு கடமை பணியாட் குழுவினருக்குப் பொருத்தமான தங்குமிட வசதிகள், நீர், மின்சாரம் போன்ற அடிப்படை தேவைகள் காணப்படுவதை உறுதிசெய்து கொள்ளல்.

17.1.7. விஷேட தேவையுடைய வாக்காளர்கள் வாக்கெடுப்பு நிலையத்தை இடையூறுகளின்றி அணுகுவதற்கான வசதிகள் காணப்படல்.

17.1.8. குறித்த கட்டிடம் வெள்ளம், மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களுக்கு உட்படக்கூடிய ஆபத்து குறைவான ஒன்றாக விளங்கல்.

18. சனாதிபதித் தேர்தலின்போது 87 வாக்கெடுப்பு மாவட்டங்களில் வாக்கெடுப்பு நிலையங்களாகப் பயன்படுத்துவதற்கு பொருத்தமான கட்டிடங்களைத் தேடிக்கொள்ள முடியாமற் போனமை காரணமாக தற்காலிகக் கொட்டில்களை அமைக்க நேரிட்டதோடு, அதற்காக அரச காணிகள் அல்லது உள்ளூர் அதிகார சபைக்குச் சொந்தமான காணிகள் பயன்படுத்தப்பட்டன. அதற்காக வசதியீனங்கள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களின்போது அரசியலில் ஈடுபடாத ஆட்களுக்குரிய தனியார் உரித்துடைய காணிகள்அவ்வாறான தற்காலிக கொட்டில்களை அமைப்பதற்காகத்தேர்ந்தெடுக்கப்பட்டன.

19. வாக்கெடுப்பு நிலையங்கள் தொடர்பில் கிராம அலுவலர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அலுவலர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்களை போக்குவரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகளை, வாக்கெடுப்பு தினத்திற்கு முன்னரும் வாக்கெடுப்புத் தினத்தன்றும் செயற்படுத்துவதற்காக திட்டமிடல் வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் செல்ல முடிந்த சரியான பயண வழிகள் தொடர்பான விபரங்களைத் தயாரித்துக் கொள்வதும் மிகவும் அவசியமாகும். இதற்காக பிரதேச செயலாளர்களின் ஒத்துழைப்பும் பெற்றுக் கொள்ளப்படுவதோடு,தேவையான சந்தர்ப்பங்களின் போது மாவட்ட பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களும், உரிய பரிசீலனைகளை மேற்கொண்டு சரியான விதத்தில் வாக்களிப்பு நிலையங்களை நோக்கிச் செல்லும் பயண வழி விபரங்கள் தயாரிக்கப்பட்டன. அதற்கமையஒவ்வொரு நிலையத்தையும் அணுகுவதிலுள்ள வசதியீனங்கள் இனங்காணப்பட்டு, அதற்கான மாற்று வழிகளை இனங்கண்டு, ஏற்புடைய பொருத்தமான வாகனங்களும் இணைப்புச் செய்யப்பட்டன. தேர்தல் மாவட்டங்களில் அமையப்பெற்றிருந்த சில வாக்கெடுப்பு நிலையங்களுக்கானமுழுத்தூரத்தையும் வாகனங்களில் பயணிக்க முடியாத காரணத்தால் அவ்வாக்கெடுப்பு நிலையங்களின்பணியாட் குழுவினர் சிறிது தூரத்தை நடந்துசெல்ல வேண்டியேற்பட்டதாகவும்அறிக்கையிடப்பட்டது. வட மாகாணத்தின் தீவுகளில் அமையப் பெற்றுள்ள வாக்கெடுப்பு நிலையங்களுக்குச்செல்வதற்காக வள்ளங்கள்,ஹெலிகப்டர்களைப் பயன்படுத்த வேண்டியும் நேரிட்டது. சனாதிபதித் தேர்தல் தினத்தன்று வெள்ளம், புயல் காற்று போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்பாடாமை காரணமாக ஆகாய மார்க்கமாக வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் செல்வதற்கு அல்லது திரும்பி வருவதற்கானதேவையேற்படவில்லை. இருப்பினும்,அதற்குத் தேவையான முன்னேற்பாடுகள் தேர்தல்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தன. வாக்கெடுப்பு நிலையங்களின் எண்ணிக்கை மற்றும் பயன்படுத்தப்பட்ட கட்டிடங்கள் தொடர்பான வகைப்படுத்தலொன்று **I** ஆம் இலக்கக்குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள்

20. அரசியலமைப்பின் 31(1) ஆம் உறுப்புரைக்கமைய சனாதிபதி பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு தகைமைப் பெற்றுள்ள எவரேனும் ஆளொருவரின் பெயரை

20.1. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றினால் அல்லது

20.2. அவர் சட்டவாக்க சபையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவராக இருப்பின் அல்லது அவ்வாறு உறுப்பினர் ஒருவராக இருந்திருப்பின், வேறு ஏதேனுமோர் அரசியல் கட்சியொன்றினால் அல்லது ஏதெனுமொரு தேருநர் இடாப்பில் பெயர் உட்சேர்க்கப்பட்டுள்ள

வாக்காளரொருவரினால் சனாதிபதி பதவிக்காக முன்மொழியப்பட முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

21. 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி,சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்திலும் அவ்வாறேகருதப்படும்.சனாதிபதித் தேர்தல் சட்டத்தின் 02 ஆம் பிரிவின் கீழான கட்டளை வெளியிடப்பட்ட சந்தர்ப்பத்தின்போது பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 07 ஆம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் சனாதிபதித் தேர்தலின் போது அரசியல் கட்சிகளாக அங்கீகரிக்கப்படுவதற்கு தகைமையைப்பெறும். 2015.01.08 ஆம் திகதி நடாத்தப்பட்ட சனாதிபதித் தேர்தலுக்காக பெயர் குறித்த நியமனம் கோரப்பட்ட திகதியாகும்போது அங்கீகரிக்கப்பட்ட 64 அரசியல் கட்சிகள் தேர்தல்கள் ஆணையாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

22. அவற்றில் அங்கீகரிக்கப்படுவதற்காக எதிர் கோரிக்கை சமர்ப்பித்த 03 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் காணப்பட்டன. ஐக்கிய ஜனநாயக முன்னணி, ஜாதிக சங்வர்தன பெரமுண, இலங்கை முற்போக்கு முன்னணி என்பன அம்மூன்று அரசியல் கட்சிகளுமாகும். 1981 இன் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 07 ஆம் பிரிவின் கீழ் இம்மூன்று அரசியல் கட்சிகளும் சனாதிபதித் தேர்தலுக்காக அரசியல் கட்சிகளாக ஏற்றங்கீகரிக்கப்பட்டிருந்தன. சனாதிபதித் தேர்தல் தொடர்பாக எழக்கூடியதாகக் காணப்பட்ட சிரமம் காரணமாகப் பரஸ்பர எதிர்ப்புரிமை தெரிவிப்போரில் எவ்வுரிமை கோருவோர் முறையே ஒவ்வொரு கட்சியினதும் அதாவது ஐக்கிய சனநாயக முன்னணி, ஜாதிக சங்வர்தன பெரமுன மற்றும் இலங்கை முற்போக்கு முன்னணி என அங்கீகரிக்கப்பட வேண்டுமென்பதை பரீட்சித்துப் பார்த்து தீர்மானிப்பதற்காக சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் தேர்தல்கள் ஆணையாளரால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

23. ஐக்கிய ஜனநாயக முன்னணியாக ஏற்றுக் கொள்ளப்படுவதற்காக இரு குழுக்களால் பரஸ்பரஎதிர்ப்புரிமை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன்,ஜாதிக சங்வர்தன பெரமுன என அங்கீகரிக்கப்படுவதற்காக கீழே காட்டப்பட்டுள்ள இரு குழுக்கள் பரஸ்பர எதிர்ப்புரிமையை சமர்ப்பித்திருந்தன. அது தவிர இலங்கை முற்போக்கு முன்னணி என அங்கீகரித்துக் கொள்வதற்காக மூன்று குழுக்களினால் பரஸ்பர எதிர்ப்புரிமைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

இம்மூன்று அரசியல் கட்சிகளதும் பரஸ்பர எதிர்ப்புரிமை தொடர்பான தீர்மானத்திற்கு வருவதற்காக அவரவர்களின் கருத்துக்களை முன்வைப்பதற்கு முடியுமான விரிவான சந்தர்ப்பமொன்றை வழங்கி எதிர்ப்புக் குழுக்களின் பதில்களுக்கும் செவிசாய்க்க அவ்வனைவருக்கும்வசதி செய்து கொடுப்பதேயாகும். எதிர்ப்புரிமைக் கோரும் குழுக்கள் எழுத்து மூலமாகவும், வாய்மொழி மூலமாகவும் கருத்துக்களை முன்வைப்பதற்கு அழைக்கப்பட்டிருந்ததோடு, அவர்களுக்கிடையில் இணக்கப்பாடு ஏற்படாமை காரணமாக கீழே காட்டப்பட்டுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

23.1. வாய்மொழி மூலம் விடயங்களை முன்வைப்பதற்காக பரஸ்பர எதிர்ப்புரிமை கோருவோரை அழைத்தல்; மற்றும்

23.2. பரஸ்பர எதிர்ப்புரிமை கோருவோர் ஒருவருக்கொருவர் நேருக்கு நேர் அமர்ந்து அவர்களின் உரித்துத் தொடர்பாக அனைத்து விபரங்களையும் கலந்துரையாடி ஏனைய குழுக்களின் பதில்களுக்கு செவிசாய்ப்பதற்கான சந்தர்ப்பமொன்றை அவரவர்களுக்குஏற்படுத்திக் கொடுத்தல்.

24. தேர்தல்கள் ஆணையாளரின் முன்னிலையில் வாய்மொழி மூலம் விடயங்களைத் தெரிவித்து இறுதியில் இம்மூன்று அரசியல் கட்சிகளினதும் பரஸ்பர எதிர்ப்புக் குழுக்களதும் அங்கத்தவர்கள் கீழே காட்டப்பட்டுள்ள விடயங்களை ஏற்றுக் கொண்டனர்.

24.1. அவரவர்களின் உரிமைகளுக்கு முழுமையாக செவிமடுப்பதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பமொன்று கிடைக்கப்பெற்றதென ; மற்றும்

24.2. அவர் அவர்களின் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு அவரவர்களுக்கு சாத்தியமான விதத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாகஅவர்கள் திருப்தியடைந்தார்களென,

24.3. மேற்குறித்த செயன்முறைகளை அடிப்படையாகக் கொண்டு ஐக்கிய சோசலிச முன்னணியின் பரஸ்பர எதிர்ப்புரிமை தொடர்பான விசாரணையொன்று 2014 நவம்பர் 27 ஆம் திகதி நடாத்தப்பட்டது.அதற்கமைய குறித்த எந்தவொரு தரப்பும் அக்கட்சி சார்பில் இத்தேர்தலில் போட்டியிடுவதற்கு ஏற்றுக் கொள்வதில்லையென தீர்மானிக்கப்பட்டு அது தொடர்பாக குறித்த தரப்பினர் அறிவுறுத்தப்பட்டனர்.

24.4. மேற்குறித்தவாறே ஜாதிக சங்வர்தன பெரமுனயின் பரஸ்பர எதிர்ப்புரிமை தொடர்பான விசாரணையொன்று 2014 நவம்பர் 27 ஆம் திகதி நடாத்தப்பட்டு,இருதரப்பினரும் இணக்கப்பாட்டுக்கு வருவார்களாயின் அது தொடர்பாக 2014 திசெம்பர் 03 ஆம் திகதிக்கு முன்னர், எழுத்து மூலம் அறிவிக்க வேண்டுமென அத்தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டது. அவ்வாறு செய்யப்படாமை காரணமாக குறித்த எந்தவொரு தரப்பையும் இத்தேர்தலில் போட்டியிடுவதற்காக அங்கீரிப்பதில்லையெனத் தீர்மானிக்கப்பட்டதோடு குறித்த தரப்பினர் அது தொடர்பாகஅறிவுறுத்தப்பட்டனர்.

24.5. இலங்கை முற்போக்கு முன்னணியின் பரஸ்பர எதிர்ப்புரிமை தொடர்பான விசாரணையொன்று 2014 நவம்பர் 27 ஆம் திகதி நடாத்தப்பட்டு கட்சியின் உரித்துத் தொடர்பாக ஒரு தரப்பினர் நீதிமன்ற நடவடிக்கைகளுக்குச் சென்றுள்ளமையால், கட்சியின் செயலாளர் பதவி தொடர்பில் எந்தவொரு தீர்மானமும் இச்சந்தர்ப்பத்தில் எடுக்க முடியாதெனவும் இக்கட்சிக்கு இத்தேர்தலில் போட்டியிடுவதற்கு அவகாசம் வழங்காதிருக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

III ஆம் பகுதி

வேட்பு மனுத் தாக்கல் செய்தல்

25. திகதி, நேரம் மற்றும் இடம் :- 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல் சட்டத்தின் இரண்டாம் 2 ஆம்பிரிவின் கீழான அறிவித்தல் தேர்தல்கள் ஆணையாளரால் 2014 நவம்பர் 21 ஆம் திகதி 1889/35 ஆம் இலக்க விஷேட வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்டது. அதற்கமைய 2014 திசெம்பர் மாதம் 08 ஆம் திகதி சனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுக்களைக் கையேற்பதற்கும்,வாக்கெடுப்பை 2015 சனவரி 08 ஆம் திகதி நடாத்துவதற்கும் திகதி குறிக்கப்பட்டது. வேட்பு மனு கையேற்புத் தினம் வாரத்தின் திங்கட் கிழமையொன்றென்பதால், கட்டுப்பணம் செலுத்துவதில் பிரச்சினைகள் ஏற்படுவதைக் கருத்தில் கொண்டு வேட்பு மனுக் கையேற்பை 2014 திசெம்பர் 09 ஆம் திகதிக்கு காலநீடிப்புச் செய்யும் சாத்தியம் காணப்பட்ட போதும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை ஆரம்பிக்கப்படவிருந்தமை மற்றும் வேட்பு மனுக் கையேற்பு நிலையமாகியதேர்தல்கள் செயலகத்திற்கு அண்மித்ததாகவிருந்தஇரண்டு பாடசாலைகளில் பரீட்சை நிலையங்கள் அமையப்பெற்றிருந்தமை ஆகிய காரணங்களால், பரீட்சார்த்திகளுக்குபல்வேறு விதமான இடையூறுகள் ஏற்படுவதற்கான சாத்தியப்பாடுகளைக் கருத்தில் கொண்டு 2014 திசெம்பர் மாதம் 08 ஆம் திகதி வேட்பு மனுக்களைக் கையேற்கும் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

26. சனாதிபதித் தேர்தல் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவிற்கமைய வேட்பு மனுத் தாக்கல்தினம் மு.ப 9.00 மணிக்கும் மு.ப 11.00 மணிக்கும் இடையிலான காலப்பகுதியினுள் வேட்பு மனுக்களைக் கையேற்றல் வேண்டும். சட்டத்தின் 14(2) ஆம் பிரிவிற்கமைய வேட்பு மனுத் தாக்கல் தினத்தன்று மு.ப 9.00 மணிக்கும் மு.ப 11.30 இடையில் ஆட்சேபனைகளைச் சமர்ப்பிக்க முடியும்.இவ்விபரங்கள் உள்ளடங்களாக வேட்பாளர்கள் வைப்புச் செய்ய வேண்டிய கட்டுப்பணம் மற்றும் தேர்தல்கள் செயலகத்தில் கட்டுப்பணங்களைக் கையேற்பதற்காக அலுவலரொருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளாரென்பதையும் குறிப்பிட்டு தேர்தல்கள் ஆணையாளரினால் 2014 நவம்பர் மாதம் 21 ஆம் திகதி பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்பட்டது.

27. வேட்பு மனுக்களைக் கையேற்கும் இடம் இராஜகிரிய, சரண மாவத்தையில் அமையப்பெற்றுள்ள தேர்தல்கள் செயலகமாகும்.

28. வேட்பு மனுக்களைக் கையேற்கும் போது வருகை தருவதற்கு உரித்துடைய நபர்கள் தொடர்பாக சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 16 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. வேட்பாளர்களுக்காக கட்டுப்பணத்தைச் செலுத்துவதற்கு மற்றும் தினத்திலும் வேட்பு மனுக்களைக் கையளிப்பதற்காக இராஜகிரியவில் அமையப்பெற்றுள்ள தேர்தல்கள் செயலக அலுவலகத்திற்கு வருகை தருகின்றவர்களுக்கு இடையூறுகளின்றியும் பாதுகாப்பாகவும் வருகை தருவதற்குத் தேவையான வசதிகள் பொலிஸ் மா அதிபரின் ஒத்துழைப்போடு மேற்கொள்ளப்பட்டதுடன் வேட்பு மனுக்களைக் கையேற்கும் இடத்திற்கு வேட்பாளருக்கும், வேட்பாளரின் வேட்பு மனுவில் கையொப்பமிட்ட நபர்கள் மற்றும் வேட்பாளர் சார்பில் மேலுமொருவருக்கும் வருகை தருவதற்கான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. அது தவிர, ஒரு வேட்பாளர் சார்பாக 10 விருந்தினர்கள் வருகை தருவதற்கு அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டதோடு, அவர்களுக்கு தேர்தல்கள் செயலகத்திற்கருகிலுள்ள கொழும்பு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் தேவையான வசதிகள் செய்துகொடுக்கப்பட்டன.

29. வேட்பு மனுக்களைக் கையேற்கும் அலுவல் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சந்தர்ப்பமாகக் கருதப்பட்டு நேரடி ஒளிபரப்புச் செய்வதற்காக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு அனுமதி பெற்றுக் கொடுக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக ஏனைய அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்களுக்கும் தமது இரண்டு முகவர்களை கலந்து கொள்ளச் செய்வதற்கான சந்தர்ப்பமும் செய்து கொடுக்கப்பட்டதோடு,அவர்கள் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துடன் இணைந்து தமது ஒளிபரப்பை தடங்கல்களின்றி வேட்புமனுத் தாக்கல் பணிகளுக்கு இணையான வகையில் மேற்கொண்டனர்.இதற்கு முன்னர் நடாத்தப்பட்ட தேர்தல்களின் போது அரச ஊடகங்களால் ஒரு வேட்பாளருக்கு விஷேட பக்கச்சார்பு காட்டியமை தொடர்பாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டமையால், அவ்வாறான குற்றச்சாட்டுக்கள்/ முறைப்பாடுகள் முன்வைக்கப்படாதவாறு செயற்படுதல் வேண்டுமென அரச ஊடகங்களுக்கு (மற்றும் ஏற்புடையவாறு தனியார் ஊடகங்களுக்கும்) அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் சனாதிபதித் தேர்தல்வேட்பு மனு கையேற்கும் நிகழ்வை ஒளிப்பரப்புகையில்ஒரு தொடர்பாடல் தடங்கல் காரணமாக ஒரு தனியார் தொலைகாட்சி ஊடகத்தின் ஒளிபரப்பிற்கு குறுகிய நேர இடையூறு ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டபோதிலும் அது வேண்டுமென்றே

மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையல்லவென பின்னர் தெளிவாகியது. அத்துடன் வேட்பு மனுக்களைக்கையேற்கும் சந்தர்ப்பத்தின் போது எந்தவொரு சனாதிபதி வேட்பாளரையும் ஊக்குவிப்பதற்கோ பாதிப்பை ஏற்படுத்துவதற்கோ தமது ஒளிப்பரப்பு நேரத்தின் போது நடவடிக்கை மேற்கொள்ள கூடாதென அனைத்து ஊடக நிறுவனங்களுக்கும் அறிவித்திருந்த போதிலும், ஊடகமொன்று ஒரு வேட்பாளரை ஊக்குவிப்பதற்கு மேற்கொண்ட முயற்சி காரணமாக அவ்வாறான நடவடிக்கைகளிலிருந்து தவிர்ந்திருக்குமாறு ஆணையாளர் அறிவுறுத்தினார்.

வேட்புமனுக்களைக் கையேற்கும் சந்தர்ப்பத்தில் ஓர் அரச இலத்திரனியல் ஊடக நிறுவனம் தமது ஒளிபரப்பின் போது பயன்படுத்திக்கொண்ட துணைத் தலைப்பு வாக்கியங்களை ஒரு வேட்பாளரை ஊக்குவிக்கும் வகையில் ஒளிபரப்பியமை அவதானிக்கப்பட்டமையினால் அச்சட்டவிரோத செயற்பாட்டைத் தடுப்பதற்கு தேர்தல்கள் ஆணையாளர் அறிவுறுத்தல் வழங்கினார்.

கட்டுப்பணம்

30. கட்டுப்பணம் வைப்புச் செய்தல் தொடர்பாக சனாதிபதித் தேர்தல் சட்டத்தின் 08 ஆம் பிரிவின் கீழ் விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அதற்கமைய பெயர் குறித்த நியமனத்திற்காக இரண்டு விதங்களில்கட்டுப்பணம் செலுத்துதல் இடம்பெறும்.

30.1. வேட்பாளர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றினூடாக வேட்புமனு செய்யப்படுகின்ற சந்தர்ப்பமொன்றில் செல்லுபடியான பணத்தில் ஐம்பதாயிரம் ரூபா (50,000.00) தொகையையும்,

30.2. வேட்பாளர் வேறு ஏதேனும் அரசியல் கட்சி அல்லது வாக்காளரொருவரினால் பெயர் குறிக்கப்படுகின்ற சந்தர்ப்பமொன்றில் செல்லுபடியான பணத்தில் எழுபத்தையாயிரம் ரூபா (75,000.00) தொகையையும் கட்டுப்பணமாக வைப்புச் செய்தல் வேண்டும்.

கட்டுப்பணம் வைப்புச் செய்தல்

31. கட்டுப்பணம் வைப்புச் செய்யும்போது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றின் வேட்பாளருடன் தொடர்புடையதெனில், அவ்வேட்பாளர் தமது கட்சியை பிரதிநிதித்துவப்படுத்துவதாக கட்சிச் செயலாளரினால் வழங்கப்பட்ட கடிதமொன்றைஅல்லது வேட்பாளரினால் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு விருப்பம் தெரிவித்து கடிதமொன்றையும், சட்டத்தின் 8(2)(ஆ) பிரிவிற்கமைய வேறு ஏதேனும் அரசியல் கட்சி அல்லது வாக்காளரொருவரினால் வேட்பாளரை பெயர் குறிக்கின்ற போது அவ்வேட்பாளர் சட்ட சபையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவரென அல்லது சட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு உறுப்பினராகவிருந்த ஒருவரென உறுதிப்படுத்துகின்ற பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் கையொப்பத்துடனான சான்றிதழொன்றை சமர்ப்பித்தல் வேண்டும். வேட்பாளரொருவரினால் அல்லது அவர் சார்பாக வேறு எவரேனும் ஒரு நபரினால் வேட்பு மனு கையேற்புத் தினத்திற்கு முந்திய தினம் அதாவது,2014 திசெம்பர் 07 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் தேர்தல்கள் ஆணையாளரிடம் கட்டுப்பணத்தை வைப்புச் செய்தல் வேண்டும். வேட்புமனுக் கையேற்புத் தினமாக திங்கட் கிழமையான 2014 திசெம்பர் 08 ஆம் திகதிபயன்படுத்தப்பட்டமை காரணமாக வேட்புமனு கையேற்புத் தினத்திற்கு முந்திய தினம் விடுமுறை தினமான ஞாயிற்றுக் கிழமையாகவிருந்தபோதும் கட்டுப்பணங்கள் கையேற்கப்பட்டன.

32. வைப்புப் பணங்களைக் கையேற்றுக் கொள்வதற்காக தேர்தல்கள் செயலகத்தின் தலைமைக் கணக்காளர் திரு. ஈ.ஏ. வீரசேன, அவருக்கு உதவுவதற்காக கணக்காளர் (பெறுகை)திரு. எச்.டப்ளிவ்.என். குமார மற்றும் கணக்காளர் (கொடுப்பனவு) செல்வி. சுஜானி யசரத்ன ஆகியோர் நியமனம் செய்யப்பட்டனர். வேட்பாளரிடமிருந்து அல்லது வேட்பாளர் சார்பாக வேறு நபர்களிடமிருந்து கட்டுப்பணத்தைக் கையேற்பதற்காக 2014 நவம்பர் மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் 2014 திசெம்பர் 07 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை அலுவலக நேரத்தினுள் மேற்குறித்த அலுவலர்கள் அதற்கு தயாரான நிலையில் அலுவலகத்தில் தரித்திருந்தனர். இக்காலப்பகுதியினுள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தி 17 வேட்பாளர்களாலும் வேறு இரண்டு வேட்பாளர்களாலும் கட்டுப்பணம் வைப்புச் செய்யப்பட்டது.வைப்புப் பணம் வைப்பிலிட்ட வேட்பாளர்களுக்குரிய விபரங்கள் **IIஆம் இலக்க** குறிப்பில் காட்டப்பட்டுள்ளது.

33. கட்டுப்பணம் கையேற்கப்பட்டவுடன் கட்டுப்பணங்களைச் செலுத்திய நபர்களுக்கு கீழே காட்டப்பட்டுள்ள எழுத்தாவணங்கள் விநியோகிக்கப்பட்டன.

33.1. 08 ஆம் பிரிவின் கீழான பற்றுச் சீட்டு

33.2. 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டம்

33.3. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலான 6வேட்புமனுத் தொகுதிகள்

33.4. வேட்பாளர்களுக்கான சொத்துக்கள், பொறுப்புக்கள் வெளிப்படுத்துகைப் படிவம்

33.5. வேட்புமனு கையேற்பு நிலையத்துக்கு உட்பிரவேசித்தல் தொடர்பான அறிவுறுத்தல்

33.6. வேட்புமனுக் கையேற்பு நிலையத்திற்குச்செல்வதற்குரிய உட்பிரவேசித்தல் அனுமதிப் பத்திரங்கள் மற்றும் மோட்டார் வாகன அனுமதிப் பத்திரம்

நியதிச் சட்ட அலுவல்கள்

34. பாராளுமன்றம், மாகாண சபை மற்றும் உள்ளூர் அதிகார சபைகளின் தேர்தல்கள் தொடர்பில் வேட்புமனுப் பத்திரங்கள் கையேற்கப்படுவது மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் அல்லது அவரின் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களினாலாகும். இருப்பினும், சனாதிபதித் தேர்தல் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவின்கீழ் வேட்புமனுக் கையேற்கும் பொறுப்பு தேர்தல்கள் ஆணையாளருக்குரியதாகும்.

35. தனித்தனியானவேட்புமனுக்கள் 3 ற்கு மேற்படாத எண்ணிக்கைகளில் வேட்பாளரின் பெயரை பெயர் குறிக்க முடியுமென்பதோடு, அவ்வனைத்து வேட்புமனுப் பத்திரப் படிவங்களும் சட்டத்தின் முதலாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள (அ) படிவத்திற்கு அமைவாகவிருத்தல் வேண்டுமென்பதோடு,சட்டத்தின் 12 ஆம் பிரிவின் தேவைப்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தலும் வேண்டும்.

36. வேட்புமனுக்கையேற்பு 2014 திசெம்பர் மாதம் 08 ஆம் திகதி மு.ப 9.00 மணி தொடக்கம் மு.ப 11.00 மணி வரை இராஜகிரியவில் அமையப் பெற்றுள்ள தேர்தல்கள் செயலக அலுவலகத்தில் தேர்தல்கள் ஆணையாளரால் மேற்கொள்ளப்பட்டதோடு,வேட்புமனுப் பத்திரங்களைப் பரிசீலித்தல் போன்றவற்றிக்கு உதவியாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர்களான திரு. யூ. அமரதாச, திரு. ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க,திரு. எம்.எம். மொஹமட் ஆகியோர் ஒத்துழைப்பு வழங்கினர். திரு. எம்.எம். மொஹமட் அவர்கள் வேட்புமனுப் பத்திரங்களைக் கையேற்றல் மற்றும் அதன் பின்னரான அலுவல்களின் போது தமிழ் மொழிபெயர்ப்பாளராகவும் செயற்பட்டார்.

37. முதலாவது பெயர் குறித்த நியமனப் பத்திரம் மு.ப 9.13 மணிக்கும்இறுதிப் பெயர் குறித்த நியமனப் பத்திரம் மு.ப 10.48 மணிக்கும்கையளிக்கப்பட்டதோடு,அக்காலப்பகுதியினுள் வைப்புப் பணம் செலுத்திய அங்கீகரிக்கப்பட்ட 17அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களும் வேறு இரண்டு வேட்பாளர்களும் அடங்கலாக வைப்புப் பணம் செலுத்திய19 வேட்பாளர்களாலும் பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் கையளிக்கப்பட்டன. சில பெயர் குறித்த நியமனப் பத்திரங்கள் வேட்பாளர்களினால் கையளிக்கப்பட்டதோடு,ஏனையவை அவற்றைக்கையெழுத்திட்ட நபர்களினால் கையளிக்கப்பட்டது. வேட்பாளர்களின் வரவு வேட்புமனுப் பத்திரம் கையளித்தல் தொடர்பான விபரங்களுக்காக **III ஆம் இலக்கக்**குறிப்பைப் பார்க்கவும்.

38. சனாதிபதி வேட்பாளர் திரு. மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சனாதிபதி வேட்பாளர் திரு. மைத்திரிபால சிறிசேன அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுப் பத்திரங்கள் இரண்டுக்காகவும் மு.ப 9.00 மணிக்கும் முப 11.30 மணிக்கும் இடைப்பட்ட காலத்தினுள் 2 ஆட்சேபனைகள் சமர்ப்பிக்கப்பட்டதோடு, அவை சனாதிபதி தேர்தல் சட்டத்தின் விதிகளுக்கிணங்க அமையாமையால், தேர்தல்கள் ஆணையாளரினால் அவ்வாட்சேபனைகளுக்கு இடமளிக்கப்படவில்லை.

39. கட்டுப்பணம் செலுத்திய அனைத்து வேட்பாளர்களாலும் கையளிக்கப்பட்ட வேட்புமனுப் பத்திரங்கள், கையேற்புக் காலப்பகுதி நிறைவடைந்ததன் பின்னர்,பரிசீலிக்கப்பட்டு அவை சட்டத்தின் 15 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள தகைமையீனங்களுக்கு உட்படாதவை என்பது உறுதிசெய்யப்பட்டதன் பின்னர், அனைத்து வேட்பு மனுக்களையும் அங்கீகரிப்பதற்குத் தேர்தல்கள் ஆணையாளர் தீர்மானித்தார்.

40. அனைத்து வேட்பாளர்களாலும் கையளிக்கப்பட்ட வேட்புமனுப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதென தேர்தல்கள் ஆணையாளரால் பிரகடனப்படுத்தப்பட்டதோடு,அதன் பின்னர், சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சின்னங்களைக் குறித்தொதுக்க வேண்டியிருந்தது. வேட்பு மனுக்களைக் கையளித்திருந்த வேட்பாளர்களில் 17 பேர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளை சார்ந்தவர்கள் காரணமாக அவ்வேட்பாளர்களுக்கு 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் கீழ் அக்கட்சிகளுக்குக் குறித்தொதுக்கப்பட்டிருந்த அங்கீகரிக்கப்பட்ட சின்னங்கள்

அவர்களுக்குக் குறித்தொதுக்கப்பட்டதோடு,வேறு இரண்டு வேட்பாளர்களாலும் அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் சின்னங்கள் கோரப்பட்டதோடு, ஒரே சின்னத்துக்கான கோரிக்கைகள் காணப்படாமையால் அவர்கள் கோரிய சின்னங்கள்அவர்களுக்குக் குறித்தொதுக்கிக்கொடுக்கப்பட்டன.

வாக்குச் சீட்டில் பெயர் ஒழுங்குவரிசை

41. வேட்பாளர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட சின்னங்கள் குறித்தொதுக்கப்பட்டதன் பின்னர்,**20(3)** ஆம் பிரிவின் கீழ் வாக்குச் சீட்டில் குறிப்பிடப்பட வேண்டிய அவர்களின் பெயர்களை தேர்ந்தெடுத்தல் தொடர்பாக அவர்களின் விருப்பங்கள் பெறப்பட்டு வேட்புமனுப் பத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அவர்களின் பெயர்களில் கைவிடப்பட வேண்டிய பெயர்கள் மற்றும் முதலெழுத்துக்கள் மாத்திரம் குறிப்பிடப்படுவதற்கு அவர்கள் விருப்பமா என்பது தொடர்பாக எழுத்து மூலம் தெரிவிக்குமாறு அவர்களிடம் கோரப்பட்டது. அதற்கமைய அனைத்து வேட்பாளர்களும் தமது பெயர் வாக்குச் சீட்டில் உட்சேர்க்கப்பட வேண்டிய விதம் தொடர்பில் எழுத்து மூலம் தமது விருப்பத்தைத் தெரிவித்ததோடு,அவர்கள் குறிப்பிட்டிருந்த பெயர்களில் குடும்பப் பெயர், குடும்பப் பெயர் இல்லாத போது "கே" பெயர் அல்லது அவ்வாறு குறிப்பிடப்படாத சந்தர்ப்பங்களில் பெயரைக் கருத்தில் கொண்டு பெயர்கள் சிங்கள அகர வரிசையொழுங்கில் தயாரிக்கப்பட்டு வாக்குச் சீட்டில் உட்சேர்க்கப்படல் வேண்டும்.

42. 2014 திசெம்பர் மாதம் 08 ஆம் திகதி வேட்புமனுக் கையேற்பு நிறைவடைதல் மற்றும் ஆட்சேபனைக் காலப்பகுதி மு.ப 11.30 மணிக்கு நிறைவடைந்ததன் பின்னர், வேட்பாளர்கள் அனைவரையும் கீழே காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் அறிவுறுத்துவதற்கும்எழுத்து மூலம் தகவல்களைப் பெற்றுக் கொடுப்பதற்கும் தேர்தல்கள் ஆணையாளரினால் நடவடிக்கையெடுக்கப்பட்டது.

42.1. தேர்தல் முகவர் மற்றும் அதிகாரம் கையளிக்கப்பட்ட முகவர்களை நியமனம் செய்தல்.

42.2. 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகை சட்டத்திற்கமைய வேட்பாளர்களினால் செய்யப்பட வேண்டிய வெளிப்படுத்துகை

42.3. தேர்தல்கள் அலுவலகங்களை அமைத்தல்

42.4. அஞ்சல் கட்டணமின்றி பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களுக்கு அஞ்சல் மூலம் அறிவித்தல்களை அனுப்புவதற்குள்ள வசதிகள் மற்றும் சனாதிபதித் தேர்தல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வேட்பாளர்களுக்கு வானொலி மற்றும் தொலைகாட்சி மூலம் பிரச்சார வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

42.5. தேர்தல் பிரச்சார அலுவல்களுக்குரிய ஏற்பாடுகள்

42.6. வாக்கெடுப்பு நிலையங்களில்வாக்கெடுப்பு அலுவல்களை வறிதாக்கலுடன் தொடர்புடைய சட்ட ஏற்பாடுகள்

42.7. இலங்கை அரசியலமைப்பைப்பாதுகாத்து பின்பற்றியொழுகுவதற்கு கட்டுப்பட்டுள்ள மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரச ஊழியர்கள் தேர்தல் பிரச்சார அலுவல்கள் தொடர்பில் அரச வளங்களைப்பயன்படுத்துவதற்கு இடமளிக்கக் கூடாதென்றஆவணம்

தேர்தல் தொடர்பான அறிவித்தல்

43. 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் வேட்புமனுத் திகதியிலிருந்து 14 நாட்கள் நிறைவடைவதற்கு முன்னர் தேர்தல்கள் ஆணையாளரினால் வெளிப்படுத்தப்பட வேண்டிய தேர்தல் தொடர்பான அறிவித்தல் 2014 திசெம்பர் மாதம் 08 ஆம் திகதி 1892/08 ஆம் இலக்க அரச அதி விஷேட வர்த்தமானியிலும் மும்மொழிகளில் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டது. அவ்வர்த்தமானி அறிவித்தல் அட்டவணை இல 04 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. தேர்தல் தொடர்பான அறிவித்தல் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் பெயர்கள் அவர்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட தேர்தல் சின்னங்கள் வாக்குச் சீட்டு அச்சிடப்படுகின்ற தொடரொழுங்கில் வேட்பாளர்களின் பெயர்கள்உட்சேர்க்கப்பட்டுள்ள விதம் என்பன குறிப்பிடப்பட்டிருந்தன. அதற்கு மேலதிகமாக வாக்கெடுப்புத் தினமாக 2015 சனவரி 08 ஆம் திகதி தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

IV ஆம் பகுதி

தேர்தலுடன் தொடர்புடையபூர்வாங்க அலுவல்கள்

44. 2014 நவம்பர் 20 ஆம் திகதி சனாதிபதி அவர்கள் தனது 3 ஆவது பதவிக்காலமொன்றுக்காக தேர்ந்தெடுக்கப்படுவதற்கான கட்டளையை வெளியிட்டதன் காரணமாக தேர்தல்கள் திணைக்களம் எதிர்பார்த்திராத சந்தர்ப்பமொன்றில் இத்தேசிய தேர்தலுக்கு தயாராக வேண்டி நேரிட்டது. இருப்பினும், 2012 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் தீவின் அனைத்து மாகாணங்களும் உள்ளடக்கப்படும் விதத்தில் மாகாண சபைத் தேர்தல்கள் நடாத்தப்பட்டிருந்தமை இத்தேர்தலுக்குரிய பணிகளை ஒழுங்கமைப்புச் செய்யும் போது உதவியாக அமைந்தது. சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தில், தேர்தலை நடாத்துவதற்கு மிகக் குறுகிய காலப்பகுதியொன்று விதிக்கப்பட்டிருந்தமை காரணமாக,பூர்வாங்க அலுவல்களை அவசரமாக மேற்கொள்ள வேண்டியேற்பட்டது. அதன் காரணமாக மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களும் உடனடியாக கொழும்புக்கு அழைக்கப்பட்டு பூர்வாங்க அலுவல்கள் தொடர்பிலும் மற்றும் தேர்தல் சட்டங்களை செயல்வலுப் பெறச் செய்தல் தொடர்பிலும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

45. அஞ்சல் திணைக்களம் மற்றும் அரசாங்க அச்சகத் திணைக்களம் ஆகியன தேர்தலொன்றின் ஆரம்பத்திலிருந்தே தேர்தல்கள் திணைக்களத்துடன் இணைந்து அலுவல்களை மேற்கொள்கின்ற இரண்டு நிறுவனங்களாகும். தேர்தல் ஆரம்பத்திலேயே தேர்தல்கள் செயலகத்திற்கும் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் அரச நிறுவனங்களுடன் இலகுவாக கடிதங்களைப் பரிமாறிக் கொள்ள முன்னுரிமைச் சேவை அடிப்படையில் தேர்தல் எழுத்தாவணங்களை இலவச அஞ்சல் வசதிகளின் கீழ் மெற்கொள்வதற்கு செய்துகொடுத்தல், அஞ்சல் வாக்குகள் மற்றும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளைப் பகிர்ந்தளித்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் விஷேடமாக அஞ்சல் மா அதிபருடன் இணைந்து அலுவல்களை மேற்கொள்ள நேரிட்டது. அஞ்சல் திணைக்களத்திற்குத் தேர்தல் அலுவல்கள் தொடர்பாக செய்ய வேண்டியேற்படும் செலவுகளுக்குத்தேவையான நிதியொதுக்கீடுகளை தேர்தல்கள் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய விதம், அதற்கான செலவு மதிப்பீட்டை அஞ்சல் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளல்,தேர்தலின் முடிவில் அஞ்சல் திணைக்களம் மேற்கொண்ட செலவுகள் தொடர்பில் அறிக்கைப் பெற்றுக் கொள்ளல்ஆகிய விடயங்கள் தேர்தல்கள் ஆணையாளரினால் அஞ்சல் மா அதிபர் உள்ளிட்ட அத்திணைக்களத்தின் சிரேட்ட பதவிநிலை அலுவலர்கள் வரவழைக்கப்பட்டு அறிவுறுத்தப்பட்டனர். குறித்த அனைத்து அலுவல்களுக்காகவும் அஞ்சல்மா அதிபர் உள்ளிட்ட அனைத்து பணிக் குழுவினரதும் ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றதென்பதை ஈண்டு குறிப்பிட்டாதல் வேண்டும்.

46. இத்தேர்தலுக்குத் தயாராவதற்குக் காணப்பட்ட காலப்பகுதி மிகவும் குறுகியதாக விளங்கியமை காரணமாக, அதற்குத் தேவையான அனைத்து அச்சிடல் அலுவல்களையும் ஆற்றிக் கொள்வதற்கு அரசாங்க அச்சகத் திணைக்களத்திற்குக் கையளிக்கப்பட்ட பொறுப்பு பாரியதொன்றாகும். இது தொடர்பில் பெயர் குறித்த நியமனம் பற்றிய அறிவித்தல் விடுக்கப்பட்டவுடனேயே அரசாங்க அச்சத்தின் பிரதானி மற்றும் ஏனைய சிரேட்ட பணிக்குழுவுடன் கலந்துரையாடப்பட்டது. வேட்புமனு எழுத்தாவணங்களின் அச்சிடல் தொடக்கம் தேர்தல் முடிவுகளை வர்த்தமானியில் பிரசுரித்தல் வரையான அச்சிடல் அலுவல்களில் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை அச்சிடல் தவிர்ந்த ஏனைய அனைத்து அச்சிடல் அலுவல்களும் அரசாங்க அச்சகத் திணைக்களத்தினூடாக ஆற்றிக் கொள்ளப்பட்டது.

47. தேர்தல் காலப்பகுதியினுள் தேர்தல்கள் செயலகம் மற்றும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்கு தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்குவதற்காக மின்சார சபையும், தேர்தல்கள் செயலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களின் பொதுத் தொலைபேசி வசதிகள் மற்றும் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளும் பணிகளுக்குத் தேவையான மேலதிக தொலைபேசிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக இலங்கை ரெலிகொம் நிறுவனமும் நிறைவேற்ற வேண்டிய அலுவல்கள் சம்பந்தமாக மேற்குறிப்பிடப்பட்ட நிறுவனங்களின் அலுவலர்கள் மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் தேர்தல்கள் திணைக்களத்தின் விடயத்திற்குப் பொறுப்பான அலுவலர்கள் கலந்துரையாடல்களை மேற்கொண்டு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

வாக்குச் சீட்டுக்களை அச்சிடல்

48. வேட்புமனுக் கையேற்பு நிறைவடைந்ததைத் தொடர்ந்து வாக்குச் சீட்டுக்களை அச்சிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்காக வேட்பாளர்களின் பெயர்களின் தொடரொழுங்குமற்றும் ஒவ்வொரு வேட்பாளருக்குமான தேர்தல் சின்னங்களை உள்ளடக்கிய ஒரு மாதிரி வாக்குசீட்டு என்பன அழுத்தகருக்கு வழங்கப்பட்டது.வாக்குச் சீட்டுக்களின் ஒப்புநோக்கல்மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், தேர்தல்கள் ஆணையாளரினால் அங்கீகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து வாக்குச் சீட்டு அச்சிடல் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. வேறு தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் முழு தீவிலுமுள்ள அனைத்து தேர்தல் மாவட்டங்களுக்காகவும் ஒரே விதமான வாக்குச் சீட்டொன்றை அச்சிடல் இலகுவாக அமைந்த போதும் மிகக் குறுகிய காலப்பகுதியினுள் பணிகளை நிறைவுசெய்து கொள்வதற்கு நேரிட்டமை தடையொன்றாக அமைந்தது. அதன் காரணமாக வாக்குச் சீட்டு அச்சிடலின் போது அஞ்சல் வாக்களிப்புக்கான வாக்குச் சீட்டுக்களை ஆரம்பத்தில் அச்சிட்டுக் கொள்ள நேரிட்டது. இருப்பினும், அழுத்தகர் மற்றும் அவரின் பணியாட் குழுவினர் அச்சிடல் அலுவல்களை குறித்த காலப்பகுதிக்குள் செய்து முடிப்பதற்காக மேற்கொண்ட முயற்சிகள் பாராட்டத்தக்கவை.

49. தேர்தல் காலப்பகுதி மிகக் குறுகியதாகக் காணப்பட்டதால் அஞ்சல் வாக்கு விநியோகத்தைத் துரிதப்படுத்த வேண்டியிருந்தது. அதற்கமைய அஞ்சல் வாக்காளர்களுக்குத் தேவையான வாக்கு சீட்டுக்கள் முதலில் அச்சிடப்பட்டன. எவ்வாறாயினும் இப்பணிகளை நிறைவு செய்வதற்கு நான்கு தினங்கள் போதுமானதாகக் காணப்பட்டது. அஞ்சல் வாக்காளர்களுக்குத் தேவையான வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் 2014.12.09 ஆம் திகதியாகும் போது தேர்தல்கள் ஆணையாளரால் அரசாங்க அழுத்தகருக்கு வழங்கப்பட்டிருந்ததோடு, அனைத்து தேர்தல்கள் மாவட்டங்களுக்கும் தேவையான வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கை அச்சகத்திலிருந்து 2014.12.12 ஆம் திகதியளவில் விநியோகிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டன. 15,044,490 வாக்காளர்களுக்கான மொத்த வாக்குச் சீட்டுக்கள் 2014.12.24 ஆம் திகதியாகும்போது அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் கையளிக்கப்பட்டு நிறைவுசெய்யப்படுவதற்கு அச்சகத் திணைக்களத்தினால் நடவடிக்கையெடுக்கப்பட்டிருந்தது.

50. வாக்குச் சீட்டுக்கள் அச்சிடப்பட்டு நிறைவடைந்ததன் பின்னர், தெரிவத்தாட்சி அலுவலர்களினால் அவை பொலிஸ் பாதுகாப்பின் கீழ் எடுத்துச் செல்லப்பட்டு பாதுகாப்பறைகளில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு, வாக்கெடுப்பு நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் தினம் வரை விஷேட பொலிஸ் குழுவொன்றின் பாதுகாப்பின் கீழ் பாதுகாப்பாக வைக்கப்பட்டது. அதன் பின்னர் வாக்கெடுப்பு தினத்திற்கு முன்னர் வாக்கெடுப்பு நிலையங்களுக்குத் தேவையான வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கையை பரீட்சித்து அவற்றை விநியோகிக்க முடியுமான விதத்தில் முத்திரையிடப்பட்டு தயார்செய்து தொடர்ந்தும் பாதுகாப்பறைகளில் வைக்க வேண்டியேற்பட்டது.

அஞ்சல் வாக்களிப்பு

51. அஞ்சல் வாக்களிப்பு நடைமுறை தேர்தல் அலுவல்களை ஒழுங்கமைக்கும் போதுள்ள மிகப் பாரதூரமான பணிகளில் ஒன்றாகும். அதற்குக் காரணம் அஞ்சல் வாக்குகளுக்கான விண்ணப்பங்களைக் கையேற்கும் காலப்பகுதி 2 ஆம் பிரிவின் கீழான கட்டளை வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 10 நாட்களுக்குள் வரையறுக்கப்பட்டுள்ளமை இதற்கான காரணமாகும். அஞ்சல் வாக்காளர்களின் பயன்பாட்டிற்காக தேருநர் இடாப்பு அல்லது தேருநர் இடாப்பின் இறுவட்டுக்களை தீவின் அதிக எண்ணிக்கையான இடங்களில் உடனடியாக காட்சிப்படுத்துவதற்குத் தேவையானநடவடிக்கைகளை விரைவில் தீர்மானிக்க வேண்டியிருந்தமையால்.

52. சனாதிபதித் தேர்தல் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் கீழ் அஞ்சல் வாக்காளர்களுக்கு 10 நாட்கள் போன்ற ஒரு குறுகிய காலப்பகுதிக்குள் தமது விண்ணப்பங்களை மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு சமர்ப்பிப்பதற்கு வசதிகளை செய்து கொடுத்தல் வேண்டும். இவ்விடயங்களைக் கருத்தில் கொண்டு கொழும்பு மாவட்டத்தின் விஷேடமாக கொழும்பு நகர பிரதேசத்தைஉள்ளடக்கிய விதத்தில் இராணுவத் தலைமையகம் மற்றும் அரச அலுவலகங்கள் மட்டத்திலான 17 இடங்கள் வரைதேருநர் இடாப்பின் இறுவட்டுக்களைக் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக அனைத்து மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்கள்,பிரதேச செயலகங்கள் ஆகியவற்றின் தேருநர் இடாப்பு புத்தகங்களாகவும் மற்றும் தேருநர் இடாப்பின் இறுவட்டுக்களாகவும், இலங்கை போக்குவரத்துச் சபையின் அனைத்து மாவட்ட அலுவலகங்களிலும் புத்தகங்களாகவும் வைக்கப்பட்டுஅஞ்சல் வாக்கு விண்ணப்பதாரிகளுக்கு தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

53. மேலும், இலங்கை தகவல் மையத்தின் 1919 என்ற விஷேட தொலைபேசி இலக்கத்தைப் பயன்படுத்தி விண்ணப்பதாரிகளின் கோரிக்கைக்கமைய தேசிய அடையாள அட்டை மற்றும் வாக்குப்பதிவு

செய்யப்பட்டுள்ள மாவட்டத்திற்குரிய தகவல்களைப் பெற்றுக் கொண்டு அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை பூரணப்படுத்துவதற்குரிய தகவல்கள் அஞ்சல் வாக்கு விண்ணப்பதாரிகளுக்கு பெற்றுக் கொடுக்கும் வழிமுறையொன்றும் மற்றும் தேர்தல்கள் செயலகம்,அனைத்து மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் கணனிப் பிரிவினால் மின்னஞ்சல், தொலைநகல் அல்லது தொலைபேசி மூலம் செய்யப்பட்ட விசாரணைகளுக்கமைய தகவல்களைப் பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டன. மேற்குறித்த முறைகளில் அஞ்சல் வாக்காளர்களுக்கு தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் வசதிகள் சம்பந்தமாக அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்களின் தலைவர்களூடாகவும் அச்சு மற்றும் இலத்திரணியல் ஊடகங்கள் ஊடாகவும் அஞ்சல் வாக்காளர்களை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

54. அஞ்சல் வாக்களிப்புத் தொடர்பான சட்ட விதிகளுக்கமைய 2014.11.30 ஆம் திகதி இறுதி தினமாகவிருப்பினும்,அச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய போட்டியிடுகின்ற வேட்பாளரொருவருக்குஅஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தைக் கருத்தில் கொண்டு தேர்தல்கள் ஆணையாளரால், அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைக் கையேற்கும் இறுதித் தினம் பெயர் குறித்த நியமனங்களைக் கையேற்கும் இறுதித் தினமாகிய 2014.12.08 ஆம் திகதி வரை காலநீடிப்புச் செய்யப்பட்டதோடு, அது தொடர்பாக அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டதோடு, அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாகவும் பிரச்சாரம் செய்யப்படுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

55. அஞ்சல் வாக்களிப்பு வசதிகளை மேற்கொள்ளும் போது சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் அஞ்சல் வாக்களிப்பு வசதிகளைக் கோருவதற்கு அனுமதியளிக்கப்படாத அரச மற்றும் பகுதியளவு அரச நிறுவனங்களின் அலுவலர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு,சட்ட விதிகளுக்கமைய அது தொடர்பில் செயற்படுவதற்கு திணைக்களத்திற்கு இயலவில்லை. குறிப்பாக சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகளிலீடுபட்டுள்ள பணியாட் குழுவினர் தொடர்பிலும் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. தேர்தல் தினத்தன்று பல்வேறு அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடவுள்ள ஊழியர்களுக்கு இத்தகைய வசதிகள்காணப்படாமை ஒரு பிரச்சினையென தெரியவந்த போதும் அது தொடர்பில் செயற்படுவதற்கு சட்டத்தில் ஏற்பாடுகள் காணப்படவில்லை. அதேபோன்று விமான நிலையங்கள், துறைமுகங்கள், மின்சார சபை, அரச வங்கிகள்,அதிவேக நெடுஞ்சாலை சார்ந்தஊழியர்கள் தொடர்பிலும் அவ்வாறான கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட போதும் அந்நிறுவனங்களுக்காக அஞ்சல் வாக்கு வசதிகளை செய்ய வேண்டுமாயின், குறித்த தேர்தல் சட்டம் திருத்தப்பட வேண்டியது கட்டாயமாகும்.

56. அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த சில வாக்காளர்கள் தமது பெயருக்குச் சமமான நபர்களின் பெயர்களுக்குரியதாக அஞ்சல் வாக்குக்கு விண்ணப்பித்து அஞ்சல் வாக்கு வசதிகளைப் பெற்றுக் கொள்வதாக தெரியவந்ததோடு,அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு செல்வதற்குள்ள சாத்தியப்பாடுகள் தொடர்பிலும் விண்ணப்பதாரிகள் அறிவுறுத்தப்பட்டதோடு,அஞ்சல் வாக்கு விநியோகிப்பதற்கு முன்னர் கிடைக்கப்பெற்ற அவ்வாறான முறைப்பாடுகள் தொடர்பில் அஞ்சல் வாக்குகளை விநியோகிக்காமல்குறித்த உரிய நபருக்கு அஞ்சல் வாக்கு வசதியைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. குறிப்பாக பாதுகாப்புப் பிரிவுகளின் சேவை வகுதிகள் மாற்றமடைந்தமை காரணமாக அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களினால் ஒரு விண்ணப்பதாரி ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த சந்தர்ப்பங்கள் மற்றும் ஒரு விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படின்,அடுத்த விண்ணப்பப் படிவமேனும், ஆராய்ந்து பார்க்கப்படுமென்ற என்ற எதிர்பார்ப்பில் ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பித்திருந்த சந்தர்ப்பங்கள் காரணமாகவும் மேலதிக விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை அஞ்சல் வாக்கு அலுவல்களை ஒழுங்கமைத்தலின் சிக்கலொன்றாக விளங்கியது.

57. அஞ்சல் வாக்குகளுக்கான விண்ணப்பங்கள்அதனுடன் தொடர்புடைய அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களூடாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் என்பவர் திணைக்களத்தின், நிறுவனத்தின் தலைவரோ அல்லது அவரினால் ஏதெனுமாரு பிரிவில் சேவையாற்றுகின்ற அலுவலர்களுக்காக நியமனம் செய்யப்பட்ட பிரிவுத் தலைவரோ ஆவார். தமது அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் பெயர்களை அனைத்து மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் சமர்ப்பிக்குமாறு அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கு தகைமைபெற்றுள்ள அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள்,நியதிச் சட்ட சபைகள் மற்றும் கட்சிகளின் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

58. அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினமான 2014.12.08 ஆம் திகதியன்று ஒவ்வொரு தேர்தல் மாவட்டம் சார்பாகவும் கிடைக்கப்பெற்றிருந்தஅஞ்சல் வாக்கு விண்ணப்பங்களின் எண்ணிக்கை அவற்றில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மற்றும் நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை **IV ஆம் இலக்கக்குறிப்பில்** காட்டப்பட்டுள்ளதோடு, அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 541,452 ஆகும்.

59. அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களினால் விண்ணப்பங்களை தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனுப்பி வைத்தல் மாத்திரமின்றி அஞ்சல் வாக்குச் சீட்டுக்களடங்கிய பாதுகாப்பு பக்கெற்றுக்களைக் கையேற்றுப்பாதுகாப்பாக வைத்திருந்து, அஞ்சல் வாக்கு அடையாளமிடப்பட்டதன் பின்னர் அவற்றை தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனுப்பி வைத்தலும் வேண்டும். இதன் காரணமாக கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புமிக்க பணிப்பொறுப்பைக் கருத்தில் கொண்டு அஞ்சல் வாக்கு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களைப் பயிற்றுவித்தல் அந்தந்த தேர்தல் மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

அஞ்சல் வாக்காளர்களின் தேருநர் இடாப்பு

60. அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் கையேற்கப்பட்டு நிறைவடைந்ததன் பின்னர், அஞ்சல் வாக்காளர் இடாப்பு தயாரிக்கப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்டதன் பின்னர், இறுவட்டுக்களில் பதியப்பட்டு போட்டியிடுகின்ற அனைத்து வேட்பாளர்களுக்கும் இலவசமாக அனுப்பி வைக்கப்பட்டது. அஞ்சல் வாக்குச் சீட்டுக்களை விநியோகிக்கும் அறிவித்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் போட்டியிடுகின்ற அனைத்து வேட்பாளர்களதும் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களுக்கு அறிவிக்க வேண்டியுள்ளதோடு,அதற்கமைய அஞ்சல் வாக்குச் சீட்டுக்களை விநியோகித்தல் 2014.12.15 ஆம் திகதி மேற்கொள்ளப்படுமெனவும், அதற்காக ஒரு குழுவிலிருந்து ஒரு முகவர் வீதம் நியமனம் செய்து அனுப்பி வைக்குமாறு அறிவிப்பதற்கு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அதற்கமைய அஞ்சல் வாக்குச் சீட்டு விநியோகம் அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களிலும் 2014.12.15 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டதோடு, அவை காலதாமதமின்றி அனைத்து அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கும் அனுப்பி வைப்பதற்கு அஞ்சல் திணைக்களத்தினால் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அஞ்சல் வாக்குச் சீட்டு விநியோகம்/ அடையாளமிடலின்போது ஊழல்கள் இடம்பெற முடியுமென மற்றும் அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் பாதுகாப்பற்றவையென அரசியல் செயற்பாட்டாளர்கள் மற்றும் சுயாதீன விமர்சகர்கள் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பான அச்சத்தைப் போக்குவதற்காக 2013, 2014 ஆம் ஆண்டுகளில் மாகாண சபைத் தேர்தலின் போது அறிமுகம் செய்யப்பட்ட விஷேட பாதுகாப்பு வழிமுறை மேலும் மேம்படுத்தப்பட்டு அஞ்சல் வாக்கெடுப்பின்போது பயன்படுத்தப்பட்டது.

61. அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் அலுவலகங்களில் அஞ்சல் வாக்கை அடையாளமிடுவதற்காக தேர்தல்கள் ஆணையாளரினால் 2014.12.23 மற்றும் 24 ஆகிய இரு தினங்கள் பெயர் குறிக்கப்பட்டதோடு, அவ்விரு தினங்களிலும் அடையாளமிட முடியாமற் போன பக்கெற்றுக்களை இறுதித் தினத்திற்கு அடுத்த தினம் (2014.12.25) மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில்கையளிக்குமாறு அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அஞ்சல் வாக்கு அடையாளமிடப்படுகின்ற அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள் தமது அலுவலகங்களின் அடையாளமிடப்படுகின்ற சந்தர்ப்பத்தைக் கண்காணிப்பதற்காக முகவரொருவர் வீதம் நியமனம் செய்து அனுப்பி வைக்குமாறு அறிவித்து மாவட்ட அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களுக்கு அறிவிக்க வேண்டுமென போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டதுடன் அஞ்சல் வாக்கு அடையாளமிடப்படுகின்ற சந்தர்ப்பத்தைக் கண்காணிப்பதற்காக தெரிவத்தாட்சி அலுவலரின் பணியாட் குழுவினரும் ஈடுபடுத்தப்பட்டனர். அதற்கு மேலதிகமாக அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் அலுவலகங்களைஅளாவிய வகையில் **பொலிஸ் பாதுகாப்பு** வழங்கவும் பொலிஸ்மா அதிபரினால் அனைத்து மாவட்ட சிரேட்ட பொலிஸ் அலுவலர்களும் அறிவுறுத்தப்பட்டனர். எவ்வாறிருப்பினும், அஞ்சல் வாக்கு அடையாளமிடப்பட்ட இரண்டு தினங்களுக்குள் எவ்வித குறிப்பிடத்தக்க சம்பவங்களும் அறிக்கையிடப்படவில்லை.

62. குறித்த இரு தினங்கள் அதாவது, 2014.12.23 மற்றும் 24 ஆகிய இரு தினங்களில் அடையாளமிடப்படாத அஞ்சல் வாக்குப் பக்கெற்றுக்கள், தெரிவத்தாட்சி அலுவலரினால் கண்காணிப்பு அலுவல்களுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மூலம் 2014.12.24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் அலுவலகங்களில் கையேற்கப்பட்டு மீள எடுத்துவரப்பட்டு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு கையளிக்கப்பட்டதோடு. அவ்வாறு கையேற்பதற்கு முடியாமற் போன அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் பக்கெற்றுக்களை அவர்களே அதற்கடுத்த தினம் தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் எடுத்து வந்து கையளித்தனர். அதற்கமைய அவ்வாறு மீள கையேற்கப்பட்ட அஞ்சல் வாக்குப் பக்கெற்றுக்களுக்குரிய அஞ்சல் வாக்காளர்களுக்கு தமது அஞ்சல் வாக்குகளை அடையாளமிடுவதற்கு மற்றுமொரு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியிருந்தமையால்,மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களின் மேற்பார்வையின் கீழ் மீண்டும் அடையாளமிடும் தினமாக 2014.12.30 ஆம் திகதி பயன்படுத்தப்பட்டிருந்தது. அன்றைய தினம் அஞ்சல் வாக்காளர்கள் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களுக்கு வருகைதந்து வாக்கை அடையாளமிட வேண்டியிருந்தது. எவ்வாறெனினும், இங்கு எழுந்த நடைமுறை சார்ந்தபிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு அஞ்சல் வாக்கை

அடையாளமிடுவதற்காக 2015.01.03 மற்றும் 2015.01.06 ஆகிய இரு தினங்களையும் குறித்தொதுக்குவதற்கு தேர்தல்கள் ஆணையாளரினால் நடவடிக்கையெடுக்கப்பட்டது.

வேறொரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கான வசதிகளைச் செய்து கொடுத்தல்

63. 1988 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட 1981 இன் 15 ஆம் இலக்க சனாதிபதி தேர்தல் சட்டத்தின் 119(ஆ) பிரிவிற்கமைய தன்னுடைய வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கு முடியாமற்போகக் கூடுமென்ற நியாயமான அச்சமுள்ள வாக்காளரொருவருக்குத் தனது வாக்கை வேறொரு வாக்களிப்பு நிலையத்தில் அளிப்பதற்கு அனுமதி கோர முடியும். அத்தகைய கோரிக்கைகளைவேட்புமனுக் கோரும் அறிவித்தல் வெளியிடப்பட்டு ஒருவார காலத்திற்குள் சமர்ப்பித்தல் வேண்டும்.

64. கடந்த தேர்தல்களைப் போன்றே இத்தேர்தலிலும் பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமது வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் செல்வதற்கு நியாயமான அச்சமொன்றைக் கொண்டுள்ள வாக்காளர்களுக்கு இவ்வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. இத்தகைய கோரிக்கைகள் இத்தேர்தல் சார்பாக சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த காலக்கெடு பெயர் குறித்த நியமன அறிவித்தல் வெளியான திகதியான 2014.11.21 ஆம் திகதியிலிருந்து ஒருவாரம் வரையிலான காலத்திற்கு மாத்திரம் அதாவது, 2014.11.27 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு குறித்த தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது. இது தொடர்பில் வாக்காளர்களை அறிவுறுத்த வேண்டியதன் தேவைப்பாட்டை கருத்தில் கொண்டு தேர்தல்கள் ஆணையாளரினால் அத்தினம் 2014.11.30 ஆம் திகதி வரை கால நீடிப்புச் செய்யப்பட்டது. இருப்பினும், குறித்த காலப்பகுதியினுள் எந்தவொரு விண்ணப்பமும் தேர்தல்கள் செயலகத்திற்கு அல்லது மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்கு கிடைக்கப்பெறவில்லை.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள்

65. சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 24 ஆம் பிரிவிற்கமைய அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கோ அல்லது வேறொரு வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்களிப்பதற்கோ அனுமதிபெற்றுள்ள வாக்காளர்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து வாக்காளர்களுக்கும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையொன்றில் வாக்கெடுப்புத் திகதி, நேரம் மற்றும் வாக்காளர்களுக்கெனக் குறித்தொதுக்கப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையம் என்பன உள்ளடக்கப்பட்டிருக்கும்இவ்வுத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள்தேர்தல் நடைபெறுகின்ற தினத்திற்கு ஆகக் குறைந்தது 07 நாட்களுக்கு முன்னரேனும் கிடைக்கத்தக்கவாறு அஞ்சல் மூலம் அனுப்பப்படல் வேண்டுமென்பதோடு, அக்காலப்பகுதியினுள் ஏதெனுமொரு காரணத்தால் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை கிடைக்கப்பெறாத வாக்காளர்கள் தமக்குரிய அஞ்சல் அலுவலகத்திற்குச் சென்று தமது ஆளடையாளத்தை உறுதிசெய்து அவற்றை கையேற்றுக் கொள்வதற்குரிய அலுவல்களை மேற்கொள்ளல் வேண்டும்.

66. தேருநர் இடாப்பு கணினிமயப்படுத்தப்பட்டுள்ளமையால் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளையும் கணனிமயப்படுத்தப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி அச்சிடுவதற்கான முறைமைகள் தற்போது நடைமுறையிலுள்ளன. அதேபோன்று சிங்களம் அல்லது தமிழ் ஆகிய மொழிகளில் வாக்காளருக்குப் பொருத்தமான மொழிக்கமைய இவைகளை அச்சிடுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை அச்சிடல் தனியார் துறையினரால் மேற்கொள்ளப்படுவதோடு, அதற்கமைய,விலைமனுக்கள் கோரப்பட்டு பொருத்தமான நிறுவனங்களுக்குக் கையளிக்கப்பட்டன. அந்தந்த தேர்தல் மாவட்டத்திற்கமைய வாக்காளரின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம்,அஞ்சல் முகவரிகள் மற்றும் அவர்களுக்குரிய வாக்கெடுப்பு நிலையங்கள் தொடர்பான விபரங்கள் என்பன உள்ளடக்கப்பட்ட உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளின் மாதிரிகள் தெரிவத்தாட்சி அலுவலர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றதன் பின்னர், தேர்தல்கள் செயலகத்தினால், அச்சிடப்பட்டு வாக்காளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதற்காக மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குக் கையளிக்கப்பட்டன. இவை மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குக் கிடைக்கப்பெற்றதன் பின்னர், மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் அவற்றின் பிழையற்ற தன்மை பரிசீலிக்கப்பட்டு இறப்பெய்தியுள்ள அல்லது வெளிநாடு சென்றுள்ள மற்றும் அஞ்சல் வாக்காளர்களான வாக்காளர்களுக்குரிய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளில் உரிய இறப்பர் முத்திரைகள் பொறிக்கப்பட்டு வாக்காளர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுவதற்காக பிரதேச அஞ்சல் அதிகாரிகளுக்கு கையளிக்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. அதற்கமைய சனாதிபதித் தேர்தலுக்குரிய உத்தியோகபூர்வ வாக்காளர்

அட்டைகள்அஞ்சல் திணைக்களத்திற்கு 2014.12.20 ஆம் திகதி கையளிக்குமாறும்அவற்றின் விஷேட பகிர்ந்தளிப்பை2014.12.28 ஆம் திகதி மேற்கொள்ளுமாறும்பணிப்புரை வழங்கப்பட்டது.

2013 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க வாக்காளர்களைப் பதிவு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

67. 2013 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க வாக்காளர்களைப் பதிவு செய்தல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரகாரம் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் அவ்வாறு இடம்பெயர்வதற்கு முன்னர், அவர்களின் நிரந்தர வதிவிடம் அமையப்பெற்றுள்ள தேர்தல் மாவட்டங்களில் தமது வாக்கினை பாவிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அதற்கமைய 2014 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டதன் பின்னர், அதற்காக சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளவாறு குறைநிரப்பு தேருநர் இடாப்பில் பதிவு செய்வதற்காக விண்ணப்பிப்பதற்கு ஒரு வார காலம் வழங்கப்பட்டது. அதற்கமைய கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் ஆராய்ந்து பார்க்கப்பட்டதோடு,2014 ஆம் ஆண்டுக்காக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் வதிந்திருந்த 316 நபர்களுக்கு குறைநிரப்புப் பட்டியலின் கீழ் வாக்குரிமை கிடைக்கப்பெற்றது. அவ்வாக்காளர்களுக்காக வேறு நிறமொன்றிலான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை தேர்தல்கள் செயலகத்தினால் அச்சிடப்பட்டு, அவை மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு பரிசீலிக்கப்பட்டதன் பின்னர், வாக்காளர்களுக்கு விநியோகிப்பதற்கான நடவடிக்கையெடுக்கப்பட்டது.

துடைத்தழிக்க முடியாத மை

68. சனாதிபதித் தேர்தல் சட்டத்தின் 36 ஆம் பிரிவிற்கிணங்க வாக்குச் சீட்டொன்றைக் கோருகின்ற வாக்காளரொருவர் துடைத்தழிக்க முடியாத மையினால் அடையாளமிடப்படுதல் வேண்டுமெனகுறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாக்காளர் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் வாக்களித்தலை தடுக்கும் நடவடிக்கையொன்றாக 1965 ஆம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தலிலிருந்து துடைத்தழிக்க முடியாத மையினால் வாக்காளர்களை அடையாளமிடுதல் ஆரம்பிக்கப்பட்ட போதும் தற்போது வாக்களிப்பதற்காக ஆளடையாள ஆவணமொன்று கட்டாயப்படுத்தப்பட்டிருப்பதனால், துடைத்தழிக்க முடியாத மையினால் இடதுகை சிறுவிரலில் அடையாளமிடுவது அவசியமாவென வினவுகின்ற சிலரும் உள்ளனர்.

69. வாக்கெடுப்பு நிலையத்திற்குரிய வாக்குகளின் எண்ணிக்கையில் 350 க்கு ஒரு மைப் பேனா என்ற அடிப்படையில் ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையங்களுக்கும் விநியோகிக்கப்படுகின்ற இத்துடைதழிக்க முடியாத மை பாவனையின் போது குறித்த மை பேனா முறையாக செயற்படவில்லையென முறைப்பாடுகளும் கிடைக்கப்பெறுவதுண்டு. வாக்கெடுப்பு நிலையங்களுக்கு விநியோகிக்கப்படுகின்ற துடைத்தழிக்க முடியாத மை பேனாக்கள் இறக்குமதி செய்யப்பட்டவையென்பதோடு, சில சந்தர்ப்பங்களில் அவற்றால் இடப்படுகின்ற அடையாளம் உரிய நிறத்தில் வெளித்தெரியாவிட்டால் சிறிது நேரத்தின் பின்னர் அதன் தோற்றம் கிடைக்கப்பெறுகின்றமை தெரியவந்துள்ளது. அவ்வாறு இடப்படுகின்ற அடையாளமிடல் உடனடியாக உரிய கடும் நிறத்தைக் கொண்டதாக வெளித்தெரியாமையினால் இம்மைப் பேனா தொடர்பாக வாக்காளர்களதும் மற்றும் அரசியல் கட்சிகளதும் கண்டனங்கள் முன்வைக்கப்பட்டன.அவ்வாறு நிறம் வெளித்தெரியாமைகாலநிலை நிலைமைகளுக்கமைய மாற்றமடைகின்றமை. அது தொடர்பாக ஆராய்ந்து பார்க்கப்பட்டபோது தெரியவந்தது.

வாக்காளரை வாக்கெடுப்பு நிலையத்தில்இனங்கண்டு கொள்வதற்காக ஆளடையாள ஆவணங்களைப் பயன்படுத்துதல்.

70. 2004 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தேர்தல்கள் (சிறப்பேற்பாடு) சட்டத்திற்கமைய தேர்தலொன்றின் போது வாக்குச்சீட்டொன்றைப் எவரேனும் வாக்காளரொருவருக்குக் கையளிப்பிப்பதற்கு முன்னர் வாக்காளரின் தேசிய அடையாள அட்டைக்கமைய இனங்கண்டு கொள்வது அவசியமாகும். எனினும் தேசிய அடையாள அட்டைகளை எவ்விதத் தடங்கல்களுமின்றி பொதுமக்களுக்குப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படும் வரை மற்றும் அனைத்து வாக்காளர்களுக்கும் தேசிய அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டு முடியும் வரை, வாக்காளரை இனங்கண்டு கொள்வதற்கான வேறு ஆளடையாள ஆவணங்களையும் ஆராய்ந்துப் பார்ப்பதற்கு இது தொடர்பான நீதிமன்றச் செயற்பாடுகளின்போது தேர்தல்கள் ஆணையாளர் இணக்கம் தெரிவித்திருந்தார். ஆதலால் தேசிய அடையாள அட்டைக்கு மேலதிகமாக செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச்சீட்டு, செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம், அரசாங்க சேவை ஓய்வூதிய அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை, ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட மதகுருமார் அடையாள அட்டை

என்பன அங்கீகரிக்கப்பட்ட ஆளடையாள அட்டைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு அவ்வடையாளஅட்டைகளில் ஒன்றேனும் இல்லாதொருவருக்கு தேர்தல்கள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படுகின்ற தற்காலிக அடையாள அட்டையொன்றை பெற்றுக் கொள்வதற்கும் இத்தேர்தலின் போதும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்குச் சீட்டொன்றை மேலே குறிப்பிடப்பட்ட ஏதேனும் ஆளடையாள ஆவணமொன்று வாக்காளரிடம் இருத்தல் வேண்டுமென வாக்காளர்களை அறிவுறுத்துவதற்காக தேர்தல்கள் ஆணையாளர் இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாக நேர்முகக் கலந்துரையாடல்களின் ஊடாகவும் செய்திப் பத்திரிகை அறிவித்தல் ஊடாகவும் மற்றும் ஊடக அறிவித்தல்கள் ஊடாகவும் விரிவான பிரசார வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது.

71. 2014 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பிற்கமைய 90% ஐ அண்மித்த பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் தேருநர் இடாப்பில் உட்சேர்க்கப்பட்டிருந்தன. தேருநர் இடாப்பில் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் உட்சேர்க்கப்படாதவர்களை கிராம அலுவலர்களூடாக அறிவுறுத்திஅவர்களுக்குதேர்தல்கள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படுகின்ற தற்காலிக அடையாள அட்டை விநியோகம் தொடர்பான புரிந்துணர்வொன்றை பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கையெடுக்கப்பட்டது. ஆட்பதிவுத் திணைக்களத்தினூடாக நடமாடும் சேவைகளை நடாத்தி, துரிதமாக அடையாள அட்டைகளை விநியோகிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு, அதற்கு தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்களின் ஒத்துழைப்பும் பெருமளவில் கிடைக்கப்பெற்றது. தற்காலிக அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வாக்காளர்களுக்குத் தேவையான (1¼"X 1")அளவிலான இரண்டு புகைப்படங்களை பெற்றுக் கொள்வதற்கும் கண்காணிப்பு நிறுவனங்களின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றது. குறிப்பாக அடையாள அட்டைகளைக் கொண்டிராத வாக்காளர்களில் கணிசமான எண்ணிக்கையானோர் தோட்டப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதால், இதற்கு தோட்ட அத்தியட்சகர்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களின் அலுவலர்கள், பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து ஏனைய தரப்பினரின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொண்டு பெரும் எண்ணிக்கையான வாக்காளர்களுக்கு தற்காலிக அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டதோடு,2013 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தலின் போது விநியோகிக்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகள் 2014 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பின் தகவல்களுக்கமைய நிகழ்நிலைப்படுத்தப்பட்டு வாக்காளர்களுக்கு பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

72. தற்காலிக அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வாக்காளர் இரண்டு புகைப்படங்கள் சகிதம் இரண்டு விண்ணப்பப்படிவங்களை நிரப்பி கிராம அலுவலர்களுக்குக் கையளித்தல் வேண்டும். கிராம அலுவலர்கள் அத்தாட்சிப்படுத்தி அவைகளை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்குச் சமர்ப்பித்ததன் பின்னர்,மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் பதவிநிலை அலுவலர் ஒருவர் அத்தாட்சிப்படுத்தி பாதுகாப்பு ஒட்டியையொட்டி (ஸ்ரிக்கர்) தற்காலிக அடையாள அட்டையை கிராம அலுவலரூடாக வாக்காளர்களுக்கு அனுப்பி வைப்பதும் வாக்கெடுப்புத் தினத்தன்று ஒரு விண்ணப்பப் படிவத்தை நேரடியாக சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருக்குக் கையளிப்பதும் அதற்குரிய பாதுகாப்பு நடவடிக்கைகளாக நடைமுறைப்படுத்தப்பட்டன. இவ்வாறு இத்தேர்தலுக்காக மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களினால் விநியோகிக்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகளின் எண்ணிக்கை 206,609 என்பதோடு, கடந்த மாகாண சபைத் தேர்தலுக்காக விநியோகிக்கப்பட்டிருந்த சனாதிபதித் தேர்தலுக்காக நிகழ்நிலைப்படுத்தப்பட்ட ஆளடையாள ஆவணங்களின் எண்ணிக்கை 18,134 ஆகும். அது தொடர்பான விபரங்கள் **V ஆம் இலக்க குறிப்பில்** காட்டப்பட்டுள்ளது.

வெளிநாடு சென்றுள்ள அல்லது இறப்பெய்திய தேருநர்கள்

73. இதற்கு முந்திய தேர்தல்களின் போது மேற்கொள்ளப்பட்டவாறே வாக்கெடுப்பு நிலையங்களுக்கு வழங்கப்படுகின்ற தேருநர் இடாப்பில் பெயர் காணப்படுகின்றவர்களில் இறப்பெய்தியுள்ள மற்றும் வெளிநாடு சென்றுள்ள தேருநர்களின் விபரங்களை அடையாளமிட்டு அனுப்பி வைப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று இத்தேர்தலின் போதும் மேற்கொள்ளப்பட்டது. இத் தேர்தலின் போது 2014 ஆம் ஆண்டு யூன் 01 ஆம் திகதி வரையான தகவல்கள் நிகழ்நிலைப்படுத்தப்பட்டிருந்தமையால் தேருநர் இடாப்பில் பெயர் காணப்பட்டிருப்பினும் 2014 ஆம் ஆண்டு யூன் 01 ஆம் திகதியின் பின்னர் மற்றும் 2014.12.31 ஆம் திகதி வரை இறப்பெய்தியவர்களின் விபரங்கள் மற்றும் 2014.12.31 திகதிக்குவெளிநாடு சென்றுள்ள தேருநர்களின் விபரங்கள் கிராம அலுவலர்களிடமிருந்து பெறப்பட்டு அது தொடர்பான தகவல்களும் வாக்காளர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்ற உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையில் இறப்பர் முத்திரை மூலம் பொறிக்கப்பட்டு வாக்கெடுப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்ற

தேருநர் இடாப்பில் குறித்த வாக்காளரின் பெயருக்கெதிரில் இறப்பெய்தியிருப்பின்"D" எழுத்தையும் வெளிநாடு சென்றிருப்பின் "A" எழுத்தையும் இட நடவடிக்கையெடுக்கப்பட்டது. வாக்காளரின் பெயருக்கெதிரில் இவ்வாறான எழுத்துக்கள் இடப்பட்டுள்ள ஒருவர் வாக்கெடுப்பு நிலையத்திற்கு வருகைதரின் வாக்கெடுப்பு நிலைய சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் பரிசீலனைக்குட்படுத்தப்படுவதும் வாக்குச் சீட்டொன்றை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்படுமாயின், சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 41 மற்றும் 43 ஆம் பிரிவுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள வெளிப்படுத்துகையை கையெழுத்திட்டுப் பெற்றுக் கொண்டதன் பின்னர் மாத்திரம் வாக்குச் சீட்டொன்றை விநியோகிக்க வேண்டுமெனவும் வாக்கெடுப்பு நிலைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.ஒவ்வொரு மாவட்டத்தின் கீழும் இறப்பெய்தியதாகவோ வெளிநாடு சென்றுள்ளதாகவோ அறிவிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள தேருநர்களின் எண்ணிக்கை தொடர்பாக **VI ஆம் இலக்க குறிப்பில்** காட்டப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வ முத்திரையை வாக்குச் சீட்டில் பொறித்தல்.

74. சனாதிபதித் தேர்தல் சட்டத்தின் 35ஆம் பிரிவின் கீழ் வாக்குச் சீட்டுக்களை வாக்காளர்களிடம் வழங்கும் முறை சம்பந்தமாக குறிப்பிடப்பட்டுள்ளது. அப்பிரிவின்35(இ) உப பிரிவிற்கமைய வாக்காளரிடம் வாக்குச் சீட்டை வழங்குவதற்கு முன்னர் அதில் அலுவலகமுறையானஅடையாளத்தைப் பொறித்தல் வேண்டும். அவ்வாறின்றேல்,அலுவலகமுறையான அடையாளத்தை அதில் அழுத்துவதற்கு அல்லது துளைப்பதற்கும் சட்டத்தின் பிரகாரம் முடியும். பொதுவாக தேர்தலொன்றின் போது வாக்குச் சீட்டுகளில் அடையாளத்தைப் பொறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் இந்த முத்திரைப் பொறிகள் தேர்தல் நடைபெறும் தினத்திற்கு அண்மித்த தினமொன்றில் பாதுகாப்பாக தேர்தல்கள் ஆணையாளரால் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். குறிப்பிட்ட வாக்கெடுப்பு நிலையங்களில் பயன்படுத்துவதற்குரிய உத்தியோகபூர்வ அடையாளம் சம்பந்தமான தகவல்களை வாக்கெடுப்பு நிலையத்தின் பணியாட்டொகுதியினர் கூட தேர்தல் தினம் வரை அறிந்துகொள்ள முடியாத வகையில் அவற்றின் இரகசியத் தன்மையை பாதுகாக்குமுகமாக முத்திரையிடப்பட்ட உறையொன்றிலிட்டு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரிடம் ஒப்படைக்கப்படுவதுடன் அம்முத்திரைகளில் ஒன்று வீதம் வாக்காளர் வரிசைகளுக்கு வாக்கெடுப்பு அலுவல்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் வாக்கெடுப்பு நிலைய முகவர்கள், கண்காணிப்பாளர்கள் மற்றும் பணியாட்டொகுதியினரின் முன்னிலையில் வழங்கப்பட்டு பயன்படுத்தப்படல் வேண்டும். வாக்கெடுப்பு நிலையத்தில் பயன்படுத்தப்படும் உத்தியோகபூர்வ முத்திரையைத் தெரிவுசெய்வதில் வெளிப்படைத் தன்மை மற்றும் நம்பகத் தன்மையை அதிகரிக்க செய்வதற்காகவே இவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

உடற்றகுதியீனத்துக்குள்ளான நபர்களுக்காக விசேட பிரயாண வசதிகள்

75. சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 82(4)(ஈ) பிரிவிற்கமைய தமக்குரிய வாக்கெடுப்பு நிலையத்திற்கு செல்வதற்காக உடற்றகுதியீனத்துக்குள்ளான வாக்காளர்கள் தொடர்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக செய்திப்பத்திரிகை அறிவித்தல் மற்றும் ஊடக அறிவித்தல்களின் ஊடாக பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. அதற்கமைய வாக்கெடுப்பு நடைபெறும் நாளுக்கு ஏழு நாட்களுக்கு முன்னர், தெரிவத்தாட்சி அலுவலருக்கு கிடைக்கப்பெறக்கூடியவாறு வைத்தியரின் பரிந்துரை சகிதம் கோரிக்கையொன்றை செய்வதன் மூலம் வாகனமொன்றில் வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்வதற்கு அனுமதியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

76. உடற்றகுதியீனத்துக்குள்ளான வாக்காளர்கள் போன்றே வயது முதிர்ந்த வாக்காளர்கள் தொடர்பாகவும் ஆராய்ந்துப் பார்த்து அவ்வாறான வாக்காளர்களுக்கு எளிதில் சென்றடையக் கூடியவாறு வாக்கெடுப்பு நிலையங்களை தேர்ந்தெடுத்துக் கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணையாளரினால் அனைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக சில வாக்கெடுப்பு நிலையங்களை மாற்றுவதற்கும் தெரிவத்தாட்சி அலுவலர்கள் தீர்மானித்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. எவ்வாறாயினும், காணியின் அமைவிடத்திற்கமைய மற்றும் காணப்படும் கட்டிடங்களின் மட்டுப்பாடு காரணமாக அறிக்கையிடப்பட்ட அவ்வாறான அனைத்து மாற்றங்களையும் நிகழ்நிலைப்படுத்துவதற்கு நடைமுறைச் சாத்தியப்படவில்லையென்பதையும் குறிப்பிட்டாதல் வேண்டும்.

V ஆம் பகுதி

ஊழியர்களுக்கு தமது வாக்கை அளிப்பதற்காக விடுமுறை வழங்குதல்.

77. தேர்தலொன்றின் போது முப்படை, பொலிஸ் திணைக்களம், சிவில் பாதுகாப்புத் திணைக்களம், ஆகியவற்றில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் தேர்தல் கடமைகளின் போது அத்தியாவசிய சேவைகளை வழங்கும் அரச அல்லது அரச சார்பான நிறுவனங்கள் சிலவற்றின் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே அஞ்சல் வாக்குகளை அளிப்பதற்கான உரிமை வழங்கப்பட்டுள்ளது. இவ்வசதி தமக்கும் தேவையெனக் கோரி பல்வேறு நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் அல்லது ஊழியர்கள் கோரிக்கைகளை முன்வைத்த போதிலும் இதுவரை அத்தகையதுறைகளில் பணியாற்றுபவர்களுக்கு அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான வசதிகளை வழங்க முடியுமான சட்டங்கள் உருவாக்கப்படவில்லை.

சனாதிபதித் தேர்தல் சட்டத்தின் 110 ஆம் பிரிவுக்கமைய நிறுவனமொன்றில் ஊழியரொருவருக்கு தமக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கு முடியுமான வகையில் போதுமெனக் கருதுகின்ற வேதனத்துடன் கூடிய விடுமுறையை தொழில்தருநர் பெற்றுக்கொடுத்தல் வேண்டும். மிகக் குறைந்த காலம் 4 மணித்தியாலங்கள் ஆகும். இவ்வேற்பாடுகளை மீறும் அல்லது அதற்கமைய நடவடிக்கையை மேற்கொள்ளாத தொழில்தருநர் ஒருவருக்கெதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டு குற்றவாளியாக்கப்படும் போது ஏற்புடைத்தாகும் சட்டத்திற்கமைய தண்டனை வழங்கப்படல் வேண்டும். இவ்விடயம் தொடர்பாக சனாதிபதித்தேர்தல் சட்டத்திற்கமைய தேர்தல்கள் ஆணையாளரால் சிங்களம், தமிழ்,ஆங்கிலம்ஆகிய மொழிகளில் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் வெளியிடப்பட்ட விளம்பரங்கள் **ஐந்தாம் இலக்க அட்டவணையில்** குறிப்பிடப்பட்டுள்ளது.

பணியாட்டொகுதியினர் தேவைப்பாடுகள்

78. இத்தேர்தலின் போது தேர்தல் கடமை அலுவல்களில்ஈடுபடுத்திக் கொள்வதற்குத் தகைமையுடைய அனைத்து அலுவலர்களதும் விபரங்கள் மற்றும் தேர்தல் பணிகளுக்குப்பயன்படுத்திக் கொள்ள முடியுமான வாகனங்கள் தொடர்பான விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் தேர்தல்கள் ஆணையாளரால் 2014.10.21 ஆம் திகதி அனைத்து மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. அதற்கமைய மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் தமது மாவட்டத்தினுள் அமையப் பெற்றுள்ள அரச அலுவலகங்கள் மற்றும் அரச பாடசாலைகளின் பணியாட்டொகுதியினரின் விபரங்கள் மற்றும் வாகனங்கள் தொடர்பான விபரங்களை அனுப்பி வைக்குமாறு திணைக்களங்கள், நிறுவனத் தலைவர்கள், அரச பாடசாலைகளின் அதிபர்கள் ஆகியோருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. ***கொழும்பு மாநகர சபை பிரதேசத்தினுள் அமையப் பெற்றுள்ள அரச நிறுவனங்களின் குறித்த பணியாட்டொகுதிமற்றும் வாகனங்கள் தொடர்பான விபரங்கள் தேர்தல்கள் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டுமென தேர்தல்கள் ஆணையாளரினால் குறித்த அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.***

79. இத்தேர்தல் நாடளாவிய தேர்தலொன்றென்பதால், பெறும் எண்ணிக்கையான பணியாட் குழுவினரும் வாகனங்களும்அவசியமென்பதால்,தமது நிறுவனத்திலுள்ள அனைத்து தகைமையுடைய அலுவலர்களின் விபரங்களையும் வாகனங்கள் தொடர்பான விபரங்களையும் தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களின் அறிவுறுத்தலுக்கமைய பெற்றுக் கொடுக்குமாறும் மற்றும் தேர்தல் காலப்பகுதியினுள் அரச அலுவலர்களின் வெளிநாட்டுப் பயணங்கள் மட்டுப்படுத்தப்பட வேண்டுமெனவும்,உரிய அறிவுறுத்தல்கள் தேர்தல்கள் ஆணையாளரின் கோரிக்கைக்கமைய சனாதிபதியின் செயலாளரினால் அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் மற்றும் மாகாண ஆளுநர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

80. தேர்தலுக்கான பூர்வாங்க அலுவல்களை ஒழுங்கமைப்பதற்காக தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்குத் தேவையான அனுபவம் கொண்ட அலுவலர்களை மாவட்டத்தின் வேறு அரச நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொள்வதற்குரிய அறிவுறுத்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டதோடு, அதற்கு மேலதிகமாக தேர்தல்கள் திணைக்களத்தில் பணியாற்றி இளைப்பாறிய பதவிநிலை அலுவலர்கள் போன்றே ஏனைய தரங்களைச் சேர்ந்த அலுவலர்களையும் பூர்வாங்க ஒழுங்கமைப்பு அலுவல்களில் ஈடுபடுத்திக் கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

81. அரச நிறுவனங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களை அலுவலர் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கமைய உரிய சம்பளத் தொகுதியின் கீழ் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள், சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் கனிட்ட தலைமைத் தாங்கும் அலுவலர்கள், எழுதுநர்கள் என்றவாறு வகைப்படுத்தும் பணி தொடர்புடையதும் குறிப்பாக வாக்கெடுப்பு நிலைய மேற்பார்வை, பூர்வாங்க அலுவல்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் வாக்கெடுப்பு நிலையங்களுக்குப் பொறுப்பாகச் செல்லும் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கானபயிற்சி வகுப்புக்களை ஒழுங்கமைப்பதோடு தொடர்புடையதுமான அறிவுறுத்தல்களும் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. வாக்கெடுப்பு நிலைய மேற்பார்வைக்குப் பொறுப்பாகச் செல்கின்ற உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் வாக்கெடுப்புத் தினம் வாக்கெடுப்பு நிலையங்களுக்குப் பொறுப்பாகவுள்ள சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் ஆகியோரை பயிற்றுவித்தல் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களால் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும், ஏனைய அலுவலர்களை பயிற்றுவித்தல் அனுபவமிக்க வேறு பதவிநிலை அலுவலர்கள் மூலம் மேற்கொள்ளப்படல் வேண்டுமெனவும், தெரிவத்தாட்சி அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

82. அனைத்து மாவட்டங்களுக்காகவும் தேர்தல் கடமைகளுக்குத் தேவையான மொத்த அலுவலர்களின் எண்ணிக்கை 161,256 ஆகும். அதில், 155,461 வரையான அலுவலர்களை மாவட்டங்களுக்குள்ளேயே பெற்றுக் கொள்ள முடிந்தது. குறிப்பாக குருநாகல், கண்டி போன்ற மாவட்டங்களில் அலுவலர்கள் மேலதிகமாகக் காணப்பட்டமை காரணமாக அண்மித்த ஏனைய மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். பொதுவாக நோக்குமிடத்து, தேர்தல் பணியாட் குழுவினர்களில் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் தவிர ஏனைய அலுவலர்களை மாவட்டங்களிலேயே தேவையானளவில் பெற்றுக் கொள்ள முடிந்தது. கொழும்பு, கண்டி, குருநாகல் போன்ற மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து மாவட்டங்களுக்கும் வாக்கெடுப்பு நிலையம் மற்றும் வாக்கெண்ணல் கடமைகளுக்கான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களை கொழும்பு அலுவலர் குழாத்திலிருந்து அனுப்பி வைக்க நேரிட்டது. ஒரு சில மாவட்டங்களுக்கு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களையும் அனுப்பி வைக்கவேண்டி வந்தது. வாக்களிப்பு நிலையக் கடமைகளுக்காக வேறு மாவட்டங்களின் அலுவலர்களையும்ஈடுபடுத்த தேர்தல்கள் ஆணையாளர் எடுத்த தீர்மானத்துக்கமையஅனைத்து வகுதிகளையும் சேர்ந்த அலுவலர்கள் பல மாவட்டங்களுக்கிடையே மாற்றி மாற்றி பணியிலீடுபடுத்தப்பட்டனர். ஒவ்வொரு தேர்தல் மாவட்டம் சார்பாகவும் தேர்தல் கடமைகளுக்குத் தேவைப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை தொடர்பான விபரம் **VII ஆம் இலக்கக் குறிப்பில்** காட்டப்பட்டுள்ளது.

83. சனாதிபதித் தேர்தலின்போது ஏனைய தேர்தல்களைப் போன்று சிக்கலான விருப்பு வாக்கெண்ணல் முறைமை காணப்படாத காரணத்தினால் வாக்கெண்ணலுக்காக தேர்தல் பணியாட் குழுவிலிருந்து பெரும்பாலானவர்களை ஈடுபடுத்திக் கொள்வதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு வழங்கப்பட்டன. ஆனாலும் ஒருவேளை இரண்டாவது / மூன்றாவது விருப்பு வாக்குகளை எண்ணுவதற்கு வேண்டியேற்பட்டால் அதற்கான பணியாட்குழுத் தேவை சம்பந்தமாக கவனத்திற்கொள்வதற்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. வாக்கெண்ணலுக்குப் பொறுப்பாகச் செயற்படுகின்ற தலைமை வாக்கெண்ணல் அலுவலர் மற்றும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு மாத்திரம் வாக்கெண்ணல் தொடர்பான பயிற்சி வகுப்பு நடாத்தப்பட்டதோடு, ஏனைய மாவட்டங்களின் வாக்கெண்ணல் கடமைகளுக்காக கொழும்பு குழாமிலிருந்து ஈடுபடுத்தப்பட்ட அலுவலர்களின் பயிற்சி வகுப்புக்கள் தேர்தல்கள் ஆணையாளரால் நடாத்தப்பட்டன.

போக்குவரத்து வசதிகள்

84. வாக்கெடுப்பு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் அனைத்து வாக்கெடுப்பு நிலையங்களுக்குமான அலுவலர்களும் தேவையான பொருட்களாதியவையும்வழங்கப்பட்டிருப்பதும், வாக்கெடுப்பு நிறைவடைந்ததன் பின்னர், வாக்குப் பெட்டிகள் மற்றும் ஏனைய பாதுகாப்பான பொருட்கள சகிதம் அலுவலர்களை வாக்கெண்ணல் நிலையங்களுக்கு உடனடியாக அழைத்து வருவதும் தேர்தல் ஒழுங்கமைப்புக் கடமைகளின் போது மிக முக்கியமானவையாகும். இதற்கு மேலதிகமாக தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு தேர்தல் பணிகளின் மேற்பார்வை மற்றும் பொலிஸ் திணைக்களத்திற்கு வாக்கெடுப்பு அலுவல்களை இடையூறுகளின்றி நடாத்தி செல்வதற்குத் தேவையான பாதுகாப்பை வழங்குவதற்குத் தேவையான போக்குவரத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படல் வேண்டும். மறுபுறம் சனாதிபதித் தேர்தல் நாடெங்கிலும் ஒரே தினத்தில் நடாத்தப்படுவதால், மேலே குறிப்பிடப்பட்ட தேவைபாடுகளுக்காக பெரும் எண்ணிக்கையான வாகனங்களை கட்டாயமாக ஈடுபடுத்தல் வேண்டும்.

85. மேற்குறித்த தேவைப்பாடுகளைக் கருத்தில் கொண்டு தேர்தல்கள் ஆணையாளரால் அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள்,கூட்டுத்தாபனத் தலைவர்களுக்கு 2014.10.21 ஆம் திகதி கடிதமொன்று அனுப்பப்பட்டு, தத்தமது நிறுவனங்களுக்குச் சொந்தமான அனைத்து வாகனங்கள் தொடர்பானதகவல்களை தெரிவத்தாட்சி அலுவலர்களின் கோரிக்கைக்கமைய வழங்குமாறு அறிவிக்கப்பட்டது. கொழும்பு நகர எல்லைப்பகுதிக்குள் அமையப் பெற்றுள்ள அரச அலுவலகங்களின் வாகனங்கள் தொடர்பான விபரங்கள் தேர்தல்கள் செயலகத்திற்கும் அனைத்து மாவட்ட அலுவலக மட்டத்தில் உள்ள வாகனங்கள் தொடர்பான தகவல்கள் குறித்த நிறுவனத் தலைவர்களால் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் வழங்கப்பட வேண்டியிருந்தது. தமது போக்குவரத்து அலுவல்களுக்காக தமக்குரிய உத்தியோகபூர்வ மோட்டார் வாகனத்தை குறித்தொதுக்கி வைத்துக் கொள்வதற்கான சிறப்புரிமை சிரேட்ட அலுவலர்களுக்கும் மற்றும் குறிப்பாக மேலதிகச் செயலாளர்களுக்கும், திணைக்களத் தலைவர்களுக்கும் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

86. மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் தேர்தல் கடமைகளுக்குத் தேவையான வாகனங்களின் தேவைப்பாடு கணக்கிடப்பட்டதன் பின்னர், அரச வாகனங்கள் போதியளவில்காணப்படாமை காரணமாக இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் வண்டிகளையும் வாடகை வாகனங்களையும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. இதற்கு முன்னர் நடாத்தப்பட்ட தேர்தல்களைப் போன்றே சனாதிபதித் தேர்தலின் போதும் வாடகை வாகனங்களுக்காக புதிய கட்டண முறையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. அவ்விதத்தில் மாவட்டத்தினுள் பெற்றுக் கொள்ள முடிந்த வாகனங்களின் எண்ணிக்கை மொத்த வாகனத் தேவைப்பாட்டைநிறைவுசெய்யத்தக்கவாறுகாணப்படாத மாவட்டங்களுக்குத் தேவையான வாகனங்களை கொழும்பு வாகன குழாத்திலிருந்து பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

87. கடந்த தேர்தல்களைப் போன்றே பொலிஸ் திணைக்களம் மற்றும் அஞ்சல் திணைக்களம் என்பவற்றிற்கு கடமைகளை ஆற்றிக் கொள்வதற்கு போதுமானளவு அரச வாகனங்கள் காணப்படாத காரணத்தினால்அங்கீகரிக்கப்பட்ட வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக் கொள்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

88. வாக்கெடுப்பு நிலையங்களுக்குப் பொறுப்பாக செல்கின்ற சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கும் வாக்கெடுப்பு நிலையங்கள் பலவற்றின் மேற்பார்வை அலுவல்களுக்காகச் செல்கின்ற வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் அவர்களது சொந்த மோட்டார் வாகனங்களை பயன்படுத்திக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. எவ்வாறிருப்பினும், வாக்கெடுப்பு நிலையங்களுக்குப் பொறுப்பாக செல்கின்ற சிரேட்ட தலைமை அலுவலருக்கு வாக்குப் பெட்டி மற்றும் பாதுகாப்பான பொருட்களையும் பொலிஸ் அலுவலர்கள் மற்றும் அவரது உதவியாளரையும் அழைத்து செல்ல வேண்டியேற்பட்டமையினால் அதற்காக சிறிய மோட்டார் வாகனங்கள் பொருத்தமற்றவையாக இருப்பதனால் பெரிய கார் வண்டி / வேன் வண்டி / ஜீப் வண்டி போன்ற வாகனங்கள் இருப்பின் அவற்றை மாத்திரம் பயன்படுத்திக் கொள்வதற்கு அனுமதி வழங்க வேண்டுமென தெரிவத்தாட்சி அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

89. வாக்கெடுப்புத் தினத்திற்கு முந்திய தினம் வாக்குப் பெட்டிகள் உள்ளிட்ட ஏனைய பொருட்களை எடுத்துச் செல்வதனையும் பொலிஸ் பாதுகாப்பின் கீழ் மேற்கொள்வதற்கு தெரிவத்தாட்சி அலுவலர்களினால் நடவடிக்கையெடுக்கப்பட்டது. வாக்கெடுப்பு நிலைய ஏனைய பணியாட்டொகுதியினர் பொதுப் போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்தி வாக்கெடுப்புத் தினத்திற்கு முந்திய தினம் பி.ப 2.00 மணிக்கு முன்னர்,அந்தந்த வாக்கெடுப்பு நிலையங்களுக்கு அறிக்கையிட வேண்டியிருந்தது.அங்கு புகையிரதத்தில் பயணிக்கின்ற அலுவலர்களுக்கு தமது கடமை நிலையத்திலிருந்து அதற்காக கடமை புகையிரத ஆணைச் சீட்டொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. வீதிகளின் வசதியீனங்கள் காரணமாக பொதுப் போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்தி வாக்கெடுப்பு நிலையங்களுக்கு அறிக்கையிடுவதற்கு சிரமமாகவிருந்தவாக்கெடுப்பு நிலையங்கள் அமையப் பெற்றுள்ள கண்டி, நுவரெலியா, மட்டக்களப்பு, கேகாலை மாவட்டங்களுக்குரிய வாக்கெடுப்பு நிலையங்களின் ஏனைய பணியாட்டொகுதியினருக்கும் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

90. 2015 சனாதிபதித் தேர்தலின் போது இடம்பெயர்ந்துள்ள வாக்காளர்களுக்கு தமது வாக்குகளைப் பயன்படுத்துவதற்காக வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் செல்வதற்குத் தேவையான போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டிய நிலை புத்தளம் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கு ஏற்பட்டது. மன்னார் மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த வாக்காளர்கள் பெரும் எண்ணிக்கையானோர்

புத்தளம் மாவட்டத்தில் தற்காலிகமாக வதிகின்றமையாலும்,அவர்களுக்குப் பொதுப் போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்தி தமது வாக்குகளை அடையாளமிடச்செல்வதற்கானவலுவான போக்குவரத்து வசதிகள் காணப்படாமை தொடர்பில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் பலவற்றினால் முன்வைக்கப்பட்டகோரிக்கைகளை ஆராய்ந்து பார்த்து மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை தயாரிக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அதற்கமைய புத்தளம் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரின் ஒருங்கிணைப்பில் இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் வண்டிகள் சிலவற்றை வாக்கெடுப்புத் தினத்திற்கு முந்திய தினம் புத்தளம் கச்சேரிக்கு வரவழைத்து அடுத்த நாள் மன்னார் வாக்கெடுப்பு நிலையங்களுக்கு இடம்பெயர் வாக்காளர்களை அழைத்துச் செல்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்ட போது எதிர்பாராத விதமாக உருவான ஒரு நிலைமை காரணமாக அந்நிகழ்ச்சித் திட்டத்தை மேற்கொள்ள முடியாமற் போனமையால், புத்தளம் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரின் தலையீட்டினால் தனியார் பஸ் வண்டிகள் சிலவற்றை ஈடுபடுத்தி வாக்கெடுப்புத் தினத்தன்றுஇடம்பெயர்ந்த வாக்காளர்களை புத்தளத்திலிருந்து மன்னார் வரை (2013 இன் 27 ஆம் இலக்க வாக்களர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் விசேட ஏற்பாடுகளின் கீழ் மன்னார் மாவட்ட தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்ட, புத்தளம் மாவட்டத்தில் வசிக்கும் நபர்கள்) அழைத்துச் சென்று மீண்டும் அழைத்து வருவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

91. தேர்தலுடன் தொடர்பான போக்குவரத்து வசதிகளை தடங்கலின்றி நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு இலங்கை பெற்றோலியகூட்டுத்தாபனத்திற்கு தேவையான எரிபொருள்இருப்பை சேகரித்து வைத்துக் கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் தேர்தல்கள் ஆணையாளரால் வழங்கப்பட்டன. அது தொடர்பில் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களையும் அறிவுறுத்தி மாவட்டத்தின் எரிபொருள் தேவைப்பாடு தொடர்பாகபெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பிராந்திய முகாமையாளர்களுக்கு அறிவிப்பதற்கும் முழுமையான இருப்பை களஞ்சியப்படுத்தி வைத்துக் கொள்வதன் தேவைப்பாடு தொடர்பிலும் அவர்களுடன் கலந்துரையாடுமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. தெரிவத்தாட்சி அலுவலர்கள் மூலம் தேர்தலுக்குரிய பணிகளுக்காக எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்குரிய எரிபொருள் நிரப்பு நிலையங்களின் முகாமையாளர்களையும் அறிவுறுத்தி இருப்பை சேகரித்து வைத்துக் கொள்வதன் முக்கியத்துவம் பற்றிஅறிவூட்டப்பட்டனர்.

92. போக்குவரத்து வசதிகளை செய்து கொடுப்பதில் ஏனைய முக்கிய துறை வாக்காளர்களுக்கான பொதுப் போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுப்பதாகும். சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 82 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய வாக்காளரொருவர் தனது சொந்த வாகனத்தில் வாக்கெடுப்பு நிலையத்திற்கு செல்வதற்கானதடங்கலொன்று காணப்படுவதால், பொதுப் போக்குவரத்து வசதிகளை வலுப்படுத்தல் வேண்டும். அதற்காக இலங்கை மத்திய போக்குவரத்து சபை மற்றும் மாகாணமட்ட பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை அலுவலர்கள் தேர்தல்கள் செயலகத்திற்கு அழைக்கப்பட்டு தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவதற்குத் தேவையான வாகனங்களைப் பெற்றுக் கொடுத்தல் வாக்கெடுப்புத் தினத்தன்று வாக்காளருக்குசிரமமின்றி வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகளைச் செய்வதன் முக்கியத்துவம் சுட்டிக்காட்டப்பட்டது. மாவட்ட மட்டத்தில் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களூடாகவும் இந்நிறுவனங்களின் பிராந்திய அலுவலர்களை அறிவுறுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

தேர்தல் கண்காணிப்பு அலுவல்கள் - உள்நாட்டு கண்காணிப்பு அமைப்புக்கள்

93. தேர்தல் கண்காணிப்பு அலுவல்களுக்காக அனுமதியளிப்பதற்கு எந்தவொரு தேர்தல் சட்டத்திலும் சட்ட ஏற்பாடுகள் செய்யப்படவில்லையெனினும், 2015 சனாதிபதித் தேர்தலின் போதும் முன்னைய தேர்தல்களைப் போன்றே போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் கோரிக்கை மற்றும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தேர்தல் கண்காணிப்பு தொடர்பான அனுபவம் கொண்ட கண்காணிப்பு அமைப்புக்களுக்குத் தேர்தல் கண்காணிப்புக்காகச் சந்தர்ப்பங்கள் செய்து கொடுக்கப்பட்டன.

94. கடந்த தேர்தல்களின் போது குறித்த ஒவ்வொரு கண்காணிப்பு அமைப்பினதும் செயற்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தி கீழே காட்டப்பட்டுள்ள கண்காணிப்பு அமைப்புக்களுக்கு வாக்கெடுப்பு நிலையங்களுக்குள் சென்று கண்காணிக்கவோ அல்லது வாக்கெடுப்பு நிலையங்களுக்கு வெளியிலிருந்து கண்காணிப்பை மேற்கொள்ளவோ அனுமதி வழங்கப்பட்டது.

I. சுதந்திரமானதுமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL) 12/3, ரொபட் டெரஸ், ரொபட் குணவர்தன மாவத்தை, கொழும்பு 06.

II. தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு நிலையம் (CMEV) இல 24/2, 28 ஆம் ஒழுங்கை, கொழும்பு 07.

III. சுதந்திரமானதுமானதும் நீதியானதுமான தேர்தலொன்றுக்கான மக்கள் இயக்கம் (CaFFE) இல, 100/19, வெலிகடவத்த, இராஜகிரிய.

IV. இலங்கைத் திருநாட்டின் அன்னையரும் புதல்வியரும் அமைப்பு (MDL) இல 117, தலாஹேன, மாலபே.

V. சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான இயக்கம் (MFFE) 24/13, விஜயபா மாவத்தை, நாவல வீதி, நுகேகொடை.

VI. டிரான்ஸ்பேரன்சி இன்டர்நெசனல் ஸ்ரீ லங்கா (TISL), இலக்கம் 1/5 எலிபேன்க் வீதி, கொழும்பு 05

VII. தேசிய தேர்தல்கள் கண்காணிப்பு நிலையம் (NPOC)2 ஆம் மாடி, கார்ல்ஸ்க்ரு கோர்ட், 195, பேஸ்லைன் வீதி, கொழும்பு 09.

95. அனைத்து அமைப்புக்களின் தேசிய மட்ட அலுவலர்களான, நிறைவேற்றுப் பணிப்பாளர்கள், இணை அழைப்பாளர்கள் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர்கள, செயலாளர்கள், தேசிய அமைப்பாளர்கள், சிரேட்ட முகாமையாளர்கள் ஆகிய அலுவலர்களுக்கு நாட்டின் எந்தவொரு வாக்கெடுப்பு நிலையத்திற்குள் உட்பிரவேசித்து கண்காணிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டதோடு, குறித்த அமைப்புக்களின் மாவட்ட அமைப்பாளர்களுக்கு மாவட்டத்தின் எந்தவொரு வாக்கெடுப்பு நிலையத்திற்குள்ளேயும் உட்பிரவேசித்து கண்காணிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டது.இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், தேர்தல்கள் கண்காணிப்பு வலையமைப்பு (NEM), இலங்கை தேர்தல்கள் அவதானம். (Lanka Polls Watch) இலங்கை மூத்த பிரசைகள் சம்மேளனம், இலங்கை அறிவியலாளர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களின் சங்கம் (SLAPA) ஆகிய அமைப்புக்கள் இதற்கு முன்னர் நடாத்தப்பட்ட தேர்தல்களின் போதும் தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதிக்குரிய கண்காணிப்பு அறிக்கைகளைச் சமர்ப்பித்தமை அல்லது அரசியல் கட்சிகளின் நிரந்தர முகவர்களின் கூட்டங்களின் போது கருத்துக்களைத் தெரிவித்து பங்களிப்பு வழங்கியமையால் அவ்வமைப்புக்களின் கண்காணிப்பாளர்களுக்கும் வாக்கெடுப்பு நிலையங்களுக்கு வெளியிலிருந்து கண்காணிப்புப்பணிகளிலீடுபடுவதற்கு தடையொன்றில்லையென அவ்வமைப்புக்கள் அறிவுறுத்தப்பட்டன. இருப்பினும், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் முன்னர் குறிப்பிடப்பட்ட கண்காணிப்பு அமைப்புக்களுடன் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு இணக்கம் தெரிவித்ததோடு, இலங்கை அறிவியலாளர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களின் சங்கம் (SLAPA) மற்றும் இலங்கை மூத்த பிரசைகளின் சம்மேளனம் ஆகிய அமைப்புக்களின் பெயர் குறிக்கப்பட்ட நபர்களுக்கு மாத்திரம் அந்தந்த வாக்கெடுப்புப் பிரிவுகளில் வாக்கெடுப்பு நிலையத்திற்குள் சென்று கண்காணிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

96. ***தேசிய கண்காணிப்பு அமைப்புக்களில் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL) மற்றும் தேர்தல்கள் வன்முறை செயற்பாடுகள் கண்காணிப்பு நிலையத்திற்கு (CMEV) மாத்திரம் வாக்கெடுப்பு நிலையங்களில் தரித்திருக்கும் கண்காணிப்பாளர்களை நிறுத்தி கண்காணிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதோடு,*** ஏனைய கண்காணிப்பு அமைப்புக்களின் அனுமதி வழங்கப்பட்டுள்ள நபர்கள் தவிர்ந்த ஏனைய கண்காணிப்பாளர்களுக்கு வாக்கெடுப்பு நிலைய தொகுதியின் நுழைவாயில் வரை மாத்திரம் வருகை தந்து கண்காணிக்க முடியுமாயிருந்தது. அரசியல் அலுவல்களில் ஈடுபடுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெறாத நபர்களை கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக நியமனம் செய்யுமாறும், சுயாதீனமாக கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுமாறு அறிவுறுத்தல் வழங்குமாறும் அவற்றின் பிரதானிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டதுடன், அவ்வாறில்லையெனில், அவ்வாறான அமைப்புக்களை கண்காணிப்புப் பணிகளிலிருந்து நீக்குவதற்கு நேரிடுமெனவும் மேலும் வலியுறுத்தப்பட்டது. கண்காணிப்பு அலுவல்களுக்காக மாவட்ட மட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற கண்காணிப்பாளர்களின் பெயர்ப்பட்டியலை வாக்கெடுப்புத் தினத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னர், மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குப் பெற்றுக் கொடுக்குமாறும் அவ்வாறில்லையெனில், குறித்த கண்காணிப்பாளர்களின் விபரங்களை வாக்கெடுப்பு நிலையங்களுக்குப் பொறுப்பான சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு முன்கூட்டியே பெற்றுக் கொடுக்க முடியாமற் போகின்றமையால், சிக்கல்கள் தோன்றக்கூடுமெனவும் அறிவிக்கப்பட்டது. கண்காணிப்பு அமைப்புக்கள் வாக்கெடுப்புத் தினமன்று வாக்கெடுப்பு நிலையக்

கண்காணிப்பு கடமைகளின் பின்னர், வாக்கெடுப்பு தொடர்பாக பேணி வரப்பட்ட அறிக்கையை வாக்கெடுப்பு முடிவடைந்தவுடனேயே கண்காணிப்பாளர் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருக்குப் கையளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

97. நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL) தேர்தல்கள் வன்முறை செயல்கள் கண்காணிப்பு நிலையம்(CMEV) மற்றும் சுதந்திரமானதும்நீதியானதுமான தேர்தலொன்றுக்கான மக்கள் இயக்கம்(Caffe)ஆகிய கண்காணிப்பு அமைப்புக்கள் தமது தேசிய கண்காணிப்பாளர்களுக்கு மேலதிகமாக பல நாடுகளின் வெளிநாட்டு கண்காணிப்பாளர்களையும் ஈடுபடுத்தி கண்காணிப்புக்களை மேற்கொண்டதோடு, அதற்கு தேர்தல்கள் ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.

98. தேர்தல் வரலாற்றில் முதன்முறையாக உள்நாட்டு கண்காணிப்பு அமைப்புகளுக்கு வாக்கெண்ணும் நடவடிக்கைகளின் கண்காணிப்புக்கும் வாய்ப்பளிக்கப்பட்டமை 2015 சனாதிபதி தேர்தலில் இடம்பெற்ற விசேட நிகழ்வொன்றாகும். வாக்குகளை எண்ணுகின்ற போது பல்வேறுபட்ட ஊழல் முறைகேடுகள் இடம்பெறுவதாக அரசியல் கட்சிகள் மற்றும் ஏனைய அமைப்புக்கள் கொண்டிருக்கும் பிழையான கருத்தை இல்லாதொழிக்கும் நோக்குடன் தேர்தல் கண்காணிப்பை போன்றே வாக்குகளை எண்ணும் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கண்காணிப்பு அமைப்புகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

I. சுதந்திரமானதுமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL)

II. தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு நிலையம் (CMEV)

III. சுதந்திரமானதுமானதும் நீதியானதுமான தேர்தலொன்றுக்கான மக்கள் இயக்கம் (CaFFE)

IV. இலங்கைத் திருநாட்டின் அன்னையரும் புதல்வியரும் அமைப்பு (MDL) இல 117, தலாஹேன, மாலபே.

V. சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான இயக்கம் (MFFE)

VI. ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெசனல் ஸ்ரீ லங்கா (TISL)

வெளிநாட்டுக் கண்காணிப்பு அமைப்புக்கள்

99. சனாதிபதித் தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்டதன் பின்னர், சனாதிபதித் தேர்தலில் போட்டியிட எதிர்பார்க்கின்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் முகவர்களின் பங்குபற்றலுடன் 2014.11.21 ஆந் தேதி நடாத்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடனான கூட்டத்தின்போது அரசியல் கட்சிகளின் முகவர்கள் முன்வைத்த கோரிக்கைக்கமைய சனாதிபதித் தேர்தல் கண்காணிப்புக்காக வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்கு தேர்தல்கள் ஆணையாளரால் நடவடிக்கையெடுக்கப்பட்டது. அதற்கமைய 2014.11.26 ஆம் திகதிய கடிதத்தின் ஊடாக ஆசிய தேர்தல் அதிகாரிகளின் ஒன்றியத்தின் (AAEA) தலைவருக்கும் 2014.11.29 ஆம் திகதிய கடிதத்தின் ஊடாக தெற்காசிய தேர்தல் முகாமைத்துவ அமைப்புக்களின் ஒன்றியத்தின் (FEMBosa) தலைவர்களுக்கும் 2015.01.08 ஆம் திகதி நடாத்தப்படவுள்ள சனாதிபதித் தேர்தலில் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கான அழைப்பு விடுக்கப்பட்டது. அத்துடன் பொதுநலவாய அமைப்பின் (The Commonwealth) தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுக்களுக்கு அழைப்பு விடுத்தல் சம்பந்தமாகக் கலந்துரையாடும்போது, அதற்கமைய பொதுநலவாய அமைப்பின் (The Commonwealth) தேர்தல் கண்காணிப்புக் குழுவுக்கும் இந்த சனாதிபதித் தேர்தல் கண்காணிப்புக்காக அழைப்பு விடுக்கப்பட்டது. சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான எதிர்பார்ப்புடனிருந்த எக்ஸத் லங்கா மஹா சபா கட்சியின் திரு. ஜயந்த குலதுங்க அவர்கள் ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்பாளர்கள் தேர்தலைக் கண்காணிப்பார்களாயின் அது சம்பந்தமாக தனது ஆட்சேபனையைத் தெரிவிப்பதாகத் தெரிவித்தார்.

100. தேர்தல்கள் திணைக்களத்தினால் ஆசிய தேர்தல்கள் அதிகாரிகளின் ஒன்றியம் (AAEA) மற்றும் தெற்காசிய தேர்தல் முகாமைத்துவ அமைப்புக்களின் ஒன்றியம்(FEMBosa)ஆகிய அமைப்புக்களின் கண்காணிப்பாளர்கள் நேரடியாக இணைப்புச் செய்யப்பட்டதை, பொது நலவாய நாடுகளின் (Commenwealth) கண்காணிப்புக் குழுவிற்குத் தேவையான தகவல்களை வழங்குதல் மற்றும் மாவட்ட

தெரிவத்தாட்சி அலுவலர்களின் ஒத்துழைப்பை கண்காணிப்பாளர்களுக்கு வழங்குதல் என்பவற்றில் தேர்தல்கள் திணைக்களம் தலையீடு செய்தது. மேலும் வாக்களிப்பு, வாக்கெண்ணல் பணிகளைக் கண்காணிப்பதற்காக தேவையான எந்தவோர் இடத்திற்கும் செல்வதற்கான அனுமதி அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்தது.வேட்புமனுக் கையேற்பு நடவடிக்கைகளின் பின்னர், 2015.01.05 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் மேற்குறித்த ஆசிய கண்காணிப்பு அமைப்புக்களின் கண்காணிப்பாளர்கள் 60 பேர் வரையில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வருகைதந்ததோடு, இவற்றில் ஆசிய தேர்தல்கள் அதிகாரிகளின் ஒன்றியத்தின் 25 பேரும், தெற்காசிய தேர்தல்கள் முகாமைத்துவ அமைப்புக்கள் ஒன்றியத்தின் 35 பேரும், பொதுநலவாய நாடுகளின் கண்காணிப்பு குழுவிலிருந்து 06 பிரதிநிதிகளும் இதில் உள்ளடங்கியிருந்தனர்.

101. 2014.12.14 ஆம் திகதி வரை வருகைதந்த கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்தமையைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு கொழும்பில் தங்குமிட வசதிகளைச் செய்து கொடுத்து கொழும்பு மற்றும் அண்மித்த மாவட்டங்களான கம்பஹா,களுத்துறை ஆகிய மாவட்டங்களின் கண்காணிப்பு அலுவல்களிலீடுபடுத்தப்பட்டனர். 2014.12.14 ஆம் திகதியின் பின்னர், 2015.01.05 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் அவ்வப்போது ஏனைய மாவட்டங்களுக்கும் சென்று தேர்தலோடு தொடர்புடைய பணிகளைக் கண்காணிப்பதற்கும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. 2015.01.05 ஆம் திகதி முதல் வாக்கெடுப்பு மற்றும் வாக்கெண்ணல் நிறைவடையும் வரை 2-4 வரையான வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் நிரந்தரமாக ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் கண்காணிப்பு அலுவல்களில்ஈடுபடுத்தப்பட்டனர்.

102. மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட வெளிநாட்டு கண்காணிப்பாளர்களுக்கு கொழும்பிலிருந்தும் ஏனைய மாவட்டங்களிலிருந்தும் ஒருங்கிணைப்பு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டதோடு, மாவட்டத்தினுள் தரித்திருக்க வேண்டியதன் தேவைப்பாட்டைக் கருத்தில் கொண்டு தங்குமிட வசதிகளையும் செய்து கொடுக்குமாறு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டனர். வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் மாவட்டங்களுக்கு அறிக்கையிட்ட பின்னர், மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் மற்றும் பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களை சந்தித்து தேர்தல் ஒழுங்கமைப்பு அலுவல்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கும் அரசியல் கட்சிகளின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், உள்நாட்டு கண்காணிப்பு அமைப்புக்களின் முகவர்கள், பொலிஸாருடனும் கலந்துரையாடுவதற்கும் வசதிகளைச் செய்து கொடுக்குமாறு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

103. 2014.12.23 ஆம் திகதி மற்றும் 2014.12.24 ஆம் திகதி ஆகிய இரு தினங்களில் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் அலுவலகங்களில் மேற்கொள்ளப்பட்ட அஞ்சல் வாக்கு அடையாளமிடல் பணிகளைக் கண்காணிப்பதில் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் ஈடுப்பட்டதோடு, 2015.01.08 ஆம் திகதி வாக்கெடுப்பு நிலையங்களின் வாக்களிப்பு முறை தொடர்பான கண்காணிப்பு போன்ற வாக்கெண்ணல், பெறுபேறுகளை வெளியிடல் அலுவல்களை கண்காணிப்பிற்கும்உரியவசதிகள் செய்துகொடுக்கப்பட்டன.

VI ஆம் பகுதி

தேர்தல் சட்டங்களை செயல்வலுப்பெறச் செய்தல்.

104. பதினேழாம் அரசியலமைப்புத் திருத்தத்திற்கமைய தேர்தலொன்று நடாத்தப்படுகின்ற சந்தர்ப்பமொன்றில் தேர்தல்கள் ஆணையாளர் கோருகின்ற பொலீஸ் அலுவலர்களை குறித்த அலுவல்களுக்காக பெற்றுக் கொடுப்பதற்கும் அவ்வாறான அலுவலர்கள் தேர்தல் காலப்பகுதியினுள் தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படுவதற்கும் அவ்வாறு செயற்படுவதாக உறுதிப்படுத்துவதற்கும் பொலிஸ் திணைக்களம் கடப்பாட்டைக் கொண்டிருக்கின்றது. அதற்கமைய தேர்தலொன்று பிரகடனப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து தேர்தல் நிறைவடைந்து பெறுபேறுகள் வெளியிடப்பட்டு ஒரு வாரம் கழியும் வரை தேர்தல் சட்டங்களை செயல்வலுப் பெறச் செய்வது தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுறுத்தலுக்கமைய பொலீஸ்மா அதிபருக்குக் கையளிக்கப்படுகின்ற ஒரு பொறுப்பாகும். தேர்தல்கள் ஆணையாளர், தெரிவத்தாட்சி அலுவலர்கள் போன்றே போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் தேர்தல் சட்டங்களை செயல்வலுப் பெறச் செய்வதற்குரிய கடமைகளை பொலீஸார் ஆற்றுவார்களென எதிர்பார்க்கின்றனர்.

105. சனாதிபதித் தேர்தலுடன் தொடர்பான சட்டங்களை செயவலுப்பெறச் செய்வதற்காக தேர்தலுடன் தொடர்புடைய அனைத்து தரப்பினரிடமிருந்தும் கிடைக்கப்பெற்ற ஒத்துழைப்பு மிகப் பாரியதாகும். இங்கு பொலீசாரைப் போன்றே தேர்தல் சட்டங்களை செயல்வலுப்பெறச் செய்வதற்காக நியமிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் நிரந்தர பிரதிகள் குழு, அதில் பங்கேற்ற அனைத்து வேட்பாளர்கள் சார்பாக நியமிக்கப்பட்ட முகவர்கள்,சட்டத்தரணிகள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் தொடர்ந்து செயற்பட்டமை காரணமாக இச்சனாதிபதித் தேர்தல் அறிக்கையூடாக இதன் பின்னர் விபரிக்கப்படவுள்ள வேட்பாளர் ஒழுக்கநெறிக் கோவை, ஊடக வழிகாட்டு நெறிகள், தேர்தல் பிணக்குகளைத் தீர்த்தல் தொடர்பான சட்டங்கள் ஆகியவற்றை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு வாய்ப்புக் கிடைத்தது.

106. தேர்தலொன்று பிரகடனப்படுத்தப்பட்டவுடன் தேர்தல்கள் ஆணையாளர் வேட்பு மனுக்களைக் கையேற்றல், தேர்தல் சட்டங்களைச் செயல்வலுப் பெறச் செய்தல் மற்றும் வாக்கெடுப்பு மற்றும் வாக்கெண்ணலுக்குரிய கடமைகளுக்குத் தேவையான பாதுகாப்பை எவ்வாறு வழங்க வேண்டுமென்பது தொடர்பில் எழுத்து மூலமாகவும் மற்றும் பொலிஸ் மா அதிபர், ஏனைய சிரேட்ட பொலிஸ் அலுவலர்களை நேரடியாக அழைத்தும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அதனோடு இணைந்ததாக மாவட்ட மட்டத்திலும் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களாலும் மாவட்ட/ மாகாண மட்ட சிரேட்ட பொலீஸ் அலுவலர்கள் அழைக்கப்பட்டு தேர்தல் பாதுகாப்பு அலுவல்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

107. தேர்தல் சட்டங்களை செயல்வலுப்பெறச் செய்தல் தொடர்பாக அல்லது அரசியல் கட்சிகள்/ வேட்பாளர்கள் தேர்தல் செயற்பாடுகளின் போது எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தேர்தல்கள் ஆணையாளருக்கு குறித்த தரப்பினரால் சமர்ப்பிக்கப்படுகின்ற போது அது தொடர்பில் உடனடியாக நடவடிக்கையெடுப்பதற்காக பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. சிற்சில அரசியல் அழுத்தங்கள் காரணமாக பொலீஸ் அலுவலர்கள் இடமாற்றம் செய்யப்படுவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளும் அதில் அடங்கும். அவ்வாறான சந்தர்ப்பமொன்றில் அது தொடர்பான அறிக்கை வரவழைக்கப்பட்டு தேவையான அறிவுறுத்தல்கள் பொலீஸ்மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்படுவதற்கு தேர்தல்கள் ஆணையாளரால் நடவடிக்கையெடுக்கப்பட்டது.

பாதுகாப்பு அலுவல்கள்

108. தேர்தல் நடவடிக்கைகளுக்குரியசட்டங்களை துரிதமாகச் செயற்படுத்துவதற்காகவும் மற்றும் கிடைக்கப்பெறுகின்ற பல்வேறு முறைப்பாடுகள் தொடர்பில் உடனடியாக செயற்படுவதற்காகவும் சனாதிபதித் தேர்தலின் ஆரம்பத்திலிருந்து தேர்தல்கள் செயலகத்தில் பிரதி பொலீஸ்மா அதிபரொருவரின் மேற்பார்வையின் கீழ் தனியான பிரிவொன்று தாபிக்கப்பட்டதோடு,மாவட்ட மட்டத்தில் பொலிஸ் அத்தியட்சகர் அல்லது உதவி பொலிஸ் அத்தியட்சகர் மட்டத்தின் அலுவலரொருவரின் தலைமையின் பொலிஸ் பிரிவொன்று ஒவ்வொரு மாவட்ட செயலக அலுவலகங்களிலும் அமைக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக மாவட்டத்தின் பரப்பளவுமற்றும் விசேட பாதுகாப்பொன்று வழங்கப்பட வேண்டுமென இனங்காணப்பட்ட இடங்களை மையமாகக் கொண்டு பிரதேச செயலகங்கள் அல்லது வேறு பொது இடமொன்றில் பொலீஸ் பரீட்சகர் அல்லது உதவிப் பொலீஸ் பரீட்சகரொருவரின் கீழ் பொலீஸ் பிரிவுகளும் அமைக்கப்பட்டன. அவ்வாறு தேர்தல்கள் செயலகத்தில் தாபிக்கப்பட்ட தேசிய முறைப்பாட்டு நிலையம் தேர்தல்கள் ஆணையாளரின் தலைமையில் பணியாற்றியதோடு, அது மாவட்ட மட்டத்தில் மாவட்டத்

தெரிவத்தாட்சி அலுவலரின் தலைமையில் அமைக்கப்பட்ட மாவட்ட முறைப்பாட்டு நிலையங்களின் ஒத்துழைப்போடு செயல்பட்டது. தேசிய அல்லது மாவட்ட மட்டத்தில் காணப்பட்ட முறைப்பாட்டு நிலையங்களுக்காக போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளின் முகவர்களுக்கும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் முகவர்களுக்கும் பங்குபற்ற சந்தர்ப்பங்கள் செய்து கொடுக்கப்பட்டன.மாவட்ட அல்லது தேசிய மட்டத்தில் கிடைக்கப்பெற்ற எம்முறைப்பாடு தொடர்பிலும் உடனடி நடவடிக்கையெடுப்பதற்கான சாத்தியம் இந்நிலையங்களுக்குக் கிடைத்தன.

109. தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்ட தினத்திற்கு அடுத்த தினத்திலிருந்து தேர்தல் செயலகம் மற்றும் அனைத்து மாவட்ட செயலகங்கள், மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு மற்றும் மேலே குறிப்பிடப்பட்டவாறு தேர்தல் சட்டங்களைச் செயல்வலுப்பெறச் செய்வதற்கு பொலீஸாரின் பாரிய பங்களிப்பு கிடைக்கப்பெற்றது. வாக்கெடுப்புத் தினம் மற்றும் அதற்கு முந்திய தினம் வாக்கெடுப்பு நிலையங்களின் பாதுகாப்பிற்காக ஆகக் குறைந்தது இரண்டு பொலீஸ் அலுவலர்களையேனும் வாக்கெடுப்பு நிலையங்களில் நிறுத்தியும் மற்றும் வாக்கெடுப்பு நிலைய பிரதேசத்தை சூழவுள்ள பகுதிகளில் நடமாடும் பாதுகாப்பு குழுக்கள் மூலமாகவும் சட்டத்தை வலுவாக்கம் செய்வதற்கு பொலீஸாரினால் நடவடிக்கையெடுக்கப்பட்டது. வாக்கெடுப்பு நிறைவடைந்ததன் பின்னர், வாக்குப் பெட்டிகள் உள்ளிட்ட பாதுகாப்பான பொருட்களாதியவற்றை பாதுகாப்பாக தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களுக்கு எடுத்து வருவதற்கும் வாக்கெண்ணல், பெறுபேறுகளை வெளியிட்டு நிறைவடையும் வரை தேர்தல்கள் செயலகம் மற்றும் அனைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களின் அலுவலகங்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பொறுப்பையும் மிக உயர்ந்த மட்டத்தில் பொலீஸார் மேற்கொண்டனர்.

அச்சுமற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கு வெளியிடப்பட்ட வழிகாட்டுநெறிகள்

110. பதினேழாம் அரசியலமைப்புத் திருத்தித்திற்கமைய சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்று நடாத்தப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக தேர்தல்கள் ஆணையாளரினால் சனாதிபதித் தேர்தலுக்குரியதாக அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய வழிகாட்டுநெறிகள் தொடர்பில் 2014.12.05 ஆம் திகதி அனைத்து ஊடக நிறுவனங்கள், அரசியல் கட்சிகளுக்குஎழுத்து மூலம் அறிவிக்கப்பட்டதோடு,அவ்வூடக வழிகாட்டு நெறிகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியிலும் வெளியிடப்படுவதற்கும் நடவடிக்கையெடுக்கப்பட்டது. அதற்கமைய 2014.11.24 ஆம் திகதிய 1892/02 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டதோடு, அவ்வர்த்தமானி அறிவித்தல் இவ்வறிக்கையின் **ஆறாவது அட்டவணையில்** காட்டப்பட்டுள்ளது.

111. ஊடக நிறுவனங்களுக்கான வழிகாட்டுநெறிகளை வெளியிடுவதோடு மாத்திரம் நின்றுவிடாது அனைத்து அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடக நிறுவனங்களின் தலைவர்கள், முகவர்கள் ஆகியோரை தேர்தல்கள் செயலகத்திற்கு அழைத்து நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்தும்போது ஊடக நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படும் பொறுப்பு தொடர்பில் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதோடு, தேர்தல் திணைக்களத்தினால் விதித்துரைக்கப்பட்டுள்ள "ஊடக வழிகாட்டு நெறி" களுக்கு இணங்க செயற்படுவதன் மூலம் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு ஒத்துழைக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

112. ஊடக நெறிமுறைகளுக்கு முரணான விதத்தில் செயற்படுகின்ற நிறுவனங்கள் தொடர்பில் அரசியல் கட்சிகள்/ வேட்பாளர்கள், பல்வேறுபட்ட பொது அமைப்புக்களைப் போன்றே பொது மக்கள் ஆகியோரிடமிருந்து பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதோடு, அது தொடர்பில் குறித்த நிறுவனங்களை அறிவுறுத்தி அப்பிரசாரங்களை சீர்படுத்துவதற்கும் மற்றும் சில பிரசாரங்களை மட்டுப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதன் கீழ் போட்டியிடுகின்ற வேட்பாளரொருவரை ஊக்குவிப்பதற்காக போட்டியிடுகின்ற மற்றொரு வேட்பாளரின் உரைகளை அல்லது வெளியிடப்படுகின்ற அறிவித்தல்களை பிரசாரம் செய்ய வேண்டாமெனவும் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்விடயங்களை உள்ளடக்கிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தலொன்று 2014.12.24 ஆம் திகதிய 1894/18 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்படுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. இவ்வர்த்தமானி அறிவித்தல் **ஏழாம் அட்டவணையாக** இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

113. இதற்கு முன்னர் நடாத்தப்பட்ட தேர்தல்களோடு ஒப்பிடுகின்றபோது இத்தேர்தலுக்காக தேர்தல்கள் ஆணையாளரினால் வெளியிடப்பட்ட ஊடக வழிகாட்டுநெறிகள் தொடர்பில் அதிக எண்ணிக்கையான ஊடக நிறுவனங்கள் அதற்கிணங்க செயற்பட்டமையைக் காண முடிந்ததுடன், துரிதமாக செயற்பட்டு குறித்த அலுவல்களை வரையறை செய்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை காரணமாக கணிசமானளவு ஊடகங்களை வழிநடாத்திக் கொள்ளமுடியுமென்பதை விசேடமாக குறிப்பிடுதல் வேண்டும்.

அரச வளங்களின் முறையற்ற பயன்பாட்டைத் தடுத்தல்.

114. சனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நடாத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தல்களின்போது அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்ததன் காரணமாக முகங்கொடுக்க வேண்டியேற்பட்ட சிக்கலான நிலைமைகளைக் கருத்தில் கொண்டு சனாதிபதித் தேர்தலின் ஆரம்பத்திலேயே இது தொடர்பில் குறித்த தரப்பினரை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது.

115. அரசியலமைப்பின் 104ஆ (4)(அ) உறுப்புரைக்கமைய போட்டியிடுகின்ற எவரேனும் வேட்பாளரொருவர்தேர்ந்தெடுக்கப்படுவதை ஊக்குவிக்கும் நோக்கில் அல்லது தடுக்கும் பணிகளுக்காக அரசுக்குச் சொந்தமான அசையும் அல்லது அசையாத சொத்துக்களைப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளையெடுப்பதற்குதேர்தல்கள் ஆணையாளருக்கு அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய சனாதிபதித் தேர்தலுக்குரியதாக அரச ஆதனங்களின் முறையற்ற பாவனையைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளையெடுக்குமாறு அறிவித்து சனாதிபதியின் செயலாளர்,பிரதமரின் செயலாளர்/அமைச்சரவைச் செயலாளர்,கணக்காய்வாளர் நாயகம், இலஞ்ச ஊழல் விசாரணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம்,முப்படைத் தளபதிகள், பொலிஸ்மா அதிபர், அனைத்து மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் அனைத்து மாவட்ட பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கான **பிரதிகள் சகிதம்** அரச சொத்துக்களுக்குப் பொறுப்பாகவுள்ள அரச மற்றும் அரச சார்பான நிறுவனங்களின் தவிசாளர்களுக்கு 2014.11.22 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.குறித்த கடிதம் இவ்வறிக்கையின் **எட்டாம் அட்டவணையாக** இணைக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் தேர்தல்கள் திணைக்களத்தினால் செய்யப்படுகின்ற அனைத்து விசாரணைகளுக்கும் பதிலளிப்பதற்காக தனியான அலுவலரொருவரை நியமனம் செய்யுமாறும் அவ்வலுவலர் தொடர்பான தகவல்களை தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்குமாறும் அரச நிறுவனங்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது.

116. அரச வளங்களின் முறையற்ற பாவனை குற்றமெனக்குறிப்பிடப்பட்டுள்ள மேலேயுள்ள 115 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கடிதத்தில் பிரதிகள் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், அரசியல் கட்சிகளின் நிரந்தர முகவர்கள் மற்றும் அனைத்து அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. அதன் காரணமாக பல்வேறு அரச நிறுவனங்களினால் தடைசெய்யப்பட்டுள்ள செயல்கள் மேற்கொள்ளப்படுவதாக அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள் மற்றும் பொது மக்களிடமிருந்தும் தேர்தல்கள் செயலகம், மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களின் அலுவலகங்களில் தாபிக்கப்பட்டிருந்த முறைப்பாட்டு கையேற்பு நிலையங்களுக்கு அதிகளவிலான முறைப்பாடுகள் வந்தவண்ணமிருந்தன. அவ்வாறு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் குறித்த நிறுவனங்களை மேலும் உசாவி தகவல்கள் உறுதிசெய்து கொள்ளப்பட்டதன் பின்னர், வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மீறப்பட்டுள்ளதாக தெரியவந்த சந்தர்ப்பங்களின் போது அவற்றை உடனடியாக நிறுத்துவதற்கு உரிய பொறுப்புடையவர்களுக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

117. அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான அசையும் மற்றும் அசையாத ஆதனங்களை அரசியல் பணிகளுக்காக பயன்படுத்தல், அரச செலவில் வைபவங்களை நடாத்தி மக்களிடையே பல்வேறு பண்டங்களைப் பகிர்ந்தளித்தல்,அவர்களுக்கு விசேட உதவிகளை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளல், அரச அலுவலர்களை அரசியல் பணிகளிலீடுபடுத்தல், அரச சேவைக்கு புதிதாக ஆட்சேர்ப்புசெய்தல் மற்றும் அலுவலர்களின் பதவியுயர்வு, இடமாற்றம் போன்ற வேட்பாளரொருவருக்கு ஊக்குவிப்பை அல்லது பாதிப்பைஏற்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்வதைத் தடைசெய்கின்ற கட்டளைகளும் பிறப்பிக்கப்பட்டன.

118. அரசியல் உரிமையுள்ள அரச அலுவலர்களாயினும்,தமது அலுவலக நேரத்தினுள் அல்லது விடுமுறை பெற்றுக் கொண்டு தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களை அல்லது அரசியல் கட்சிகளை ஊக்குவிக்கும் வகையில்செயற்படலாகாது. சமாதான அலுவலர் வகுதிக்குட்பட்ட எந்தவோர் அரசியல் அலுவலருக்கும் அரசியல் உரிமைகள் கிடையாது. இந்நிலைமை தொடர்பில் தமது கடமை நிலையங்களின் அலுவலர்களை அறிவுறுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் நிறுவனத் தலைவர்களுக்கு தேர்தல்கள் ஆணையாளரால் விநியோகிக்கப்பட்டன.

119. தேர்தல் காலப்பகுதியினுள் அமைச்சுக்கள், திணைக்களங்களூடாக வைபவங்கள் ஒழுங்கமைக்கப்படும்போது தெரிவத்தாட்சி அலுவலரான மாவட்ட செயலாளரையும் பூர்வாங்க ஒழுங்கமைப்பு அலுவல்களிலீடுபடுகின்ற உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களாக செயற்படுகின்ற ஏனைய பதவிநிலை

அலுவலர்களையும் கலந்து கொள்ளச் செய்வதை நிறுத்துவதற்கு அறிவுறுத்தல் வழங்குவதற்கும் தேர்தல்கள் ஆணையாளருக்கு நேரிட்டது.

தேர்தல் முறைப்பாடுகள் விசாரணை பணியகம்

120. தேர்தல் சட்டங்களை செயல்வலுப்பெறச் செய்வதெனில், தேர்தல் சட்டங்களை குறைமதிப்பீட்டுக்குள்ளாக்கி மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளை உடனடியாக அறிந்து கொள்ளல், அதற்கான தீர்வுப் பொறிமுறையொன்றை நடைமுறைப்படுத்துவதுபோலவே சட்டம் அவ்வாறே நடைமுறைப்படுத்தப்படுவதாக முறைப்பாட்டுத் தரப்பினரை அறிவுறுத்துதலும் கட்டாயமான விடயமொன்றாகும். அதற்கமைய முன்னைய தேர்தல்களைப் போன்றே இம்முறையும் தேர்தல்கள் செயலகத்தில் தேசிய முறைப்பாட்டு நிலையமொன்று தேர்தல்கள் ஆணையாளரின் மேற்பார்வையின் கீழ் தாபிக்கப்பட்டது. கடந்த பல தேர்தல்களின் போது முறைப்பாட்டு நிலையத்திற்குப் பொறுப்பாக அலுவல்களை மேற்கொண்ட மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் இளைப்பாறிய மூன்று உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களின் கீழ் அவர்களுக்குதவியாக பணியாட்டொகுதியினரையும்ஈடுபடுத்தி வேட்புமனு அறிவித்தல் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து முறைப்பாடுகளை கையேற்பதற்கான நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. தேசிய முறைப்பாட்டு நிலையத்திற்கு பொலிஸ் மா அதிபருடன் கலந்துரையாடி பிரதி பொலிஸ் மா அதிபரொருவர் மற்றும் பொலிஸ் அத்தியட்சகரொருவரின் கீழான பொலீஸ் அலுவலர் குழுவினர் பணியிலீடுபடுத்தப்பட்டனர், வேட்புமனு கையேற்கப்பட்டதன் பின்னர் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளின் முகவர்களுக்கும் அப்பணிகளைக் கண்காணிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டதோடு, தேசிய கண்காணிப்பு அமைப்புக்களுக்கும் அதற்கு பங்களிப்பை வழங்க முடியுமென அறிவிக்கப்பட்டது.மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களின் தலைமையில் மற்றும் பொலிஸ் அத்தியட்சகர் அல்லது உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மட்ட அலுவலரொருவரின் கீழ் செயற்படுகின்ற பொலிஸ் பிரிவொன்று சகிதம் மாவட்ட முறைப்பாட்டு நிலையமொன்று வீதம் அனைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களிலும் தாபிக்கப்பட்டன. அதிலும் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளின் முகவர்கள் போன்றே தேசிய கண்காணிப்பு அமைப்புக்களின் முகவர்களுக்கும் கலந்து கொள்வதற்கு சந்தர்ப்பமளிக்கப்பட்டது.

121. தேசிய மற்றும் மாவட்ட மட்ட முறைப்பாட்டு நிலையங்களை அமைப்பதன் பிரதான நோக்கம் தேர்தலொன்றின் போது இடம்பெறுகின்ற வன்செயல்களும் சட்ட மீறல்களும் தொடர்பான முறைப்பாடுகளைக் கையேற்பதும் அவற்றிற்கு நியாயமான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதுமாகும். அதனூடாக விசேடமாக வாக்காளர்களுக்கு சுதந்திரமான தமது வாக்கை அளிப்பதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுப்பதும் அரசியல் கட்சி/வேட்பாளர் ஊக்குவிப்புக்கு அல்லது பாதிப்புக்குட்படுவதை மிகக் குறைத்து நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதும் இத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்டது. நீண்ட தூரம் சென்று, செலவுகளை மேற்கொண்டு பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளை சமர்ப்பிப்பதை வாக்காளர்களால் எளிதாகச் செய்ய முடியாது. இக்குறைப்பாட்டை நீக்கி அனைவருக்கும் வசதியாக தமது முறைப்பாடுகளைச் சமர்ப்பிப்பதற்கு மற்றும் அதற்குரிய தீர்வை விரைவாக பெற்றுக் கொள்வதற்கு எல்லா வசதிவாய்ப்புகளையும் ஏற்படுத்துவது இம்முறைப்பாட்டு நிலையங்களூடாக எதிர்பார்க்கப்பட்டது. நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கான சிறந்த பின்புலத்தைக் கட்டியெழுப்புவது இதன் முக்கிய நோக்கமாக அமைந்தது.

122. மாவட்ட முறைப்பாட்டு நிலையங்களுக்கு மேலதிகமாக மாவட்டத்தின் பரப்பளவையும் சிரமங்களையும் இனங்கண்டு கடந்த தேர்தல்களின் அனுபவங்களின் அடிப்படையில் விசேட பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென இனங்காணப்பட்ட பிரதேசங்களில் உதவித் தெரிவத்தாட்சி அலுவலரொருவரின் தலைமையில் வேட்புமனுக் கையேற்றல் நிறைவடைந்தவுடன் பிரதேச மட்ட முறைப்பாட்டு விசாரணை நிலையங்கள் தாபிக்கப்பட்டன. இவ்விசேட நிலையங்களுக்கு மேலதிகமாக தேர்தலுக்கு முந்திய தினம் மற்றும் வாக்கெடுப்புத் தின அலுவல்களை மேற்கொள்வதற்காக அனைத்து பிரதேச செயலக மட்டத்திலும் பிரதேச ஒருங்கிணைப்பு அலுவலகங்கள் அமைக்கப்பட்டன. இவ்வலுவலகங்களிலும் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்கும் வாய்ப்பு காணப்பட்டது. இவை பெரும்பாலும் பிரதேச செயலகத்தை மையமாகக் கொண்டு நிறுவப்பட்டன. பிரதேச முறைப்பாட்டு நிலையங்களுக்கும் பொலிஸ் பரீட்சகர் அல்லது உதவிப் பொலிஸ் பரீட்சகரொருவரின் கீழ் பல பொலிஸ் அலுவலர்களின்பங்கேற்புடன் கூடிய பாதுகாப்புப் பிரிவுகளும் நிறுவப்பட்டன.

123. இவ்வனைத்து முறைப்பாட்டு நிலையங்களுக்குமான முறைப்பாடுகளை இலகுவாக அனுப்பக்கூடிய விதத்தில் தொலைபேசி, தொலைநகல் வசதிகள் செய்யப்பட்டிருந்ததோடு, இவ்வாறு முறைப்பாட்டு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ள இடங்கள் மற்றும் அவற்றின் தொலைபேசி, தொலைநகல் இலக்கங்கள் என்பன ஊடக அறிவித்தலூடாக பகிரங்கப்படுத்தப்பட்டன. முறைப்பாடுகளை எழுத்து மூலமும்,

தொலைநகலினூடாகவோ அல்லது உரிய முறைப்பாட்டு நிலையங்களுக்கு நேரில்வந்தோ முறைப்பாடுகளைச் சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

124. இவ்வாறான நிறுவனக் கட்டமைப்பு காரணமாக கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகள் தொடர்பில் தாமதமின்றி விசாரணைப்பணிகளில் அலுவலர்களை ஈடுபடுத்தும் வாய்ப்பு உருவானது. தேசிய முறைப்பாட்டு நிலையத்திற்கு ஏதேனும் மாவட்டமொன்றிற்குரிய முறைப்பாடொன்று கிடைக்கப்பெற்றவுடன் மாவட்ட முறைப்பாட்டு நிலையத்தினூடாக மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரை அறிவுறுத்தி அது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கும் நேரடியாக குறித்த பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்து அதன் மூலம் துரிதமாக குறித்த முறைப்பாடு தொடர்பாக விசாரணை செய்வதற்கும் நடவடிக்கையெடுக்க முடிந்தது. இந்நடவடிக்கையூடாக நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றுக்கு இடையூறு ஏற்படக்கூடியதாக இருந்த பிரச்சினைகள் பலவற்றை தாமதமின்றி தீர்த்துக் கொள்ள முடிந்தது.

125. வாக்கெடுப்புத் தினத்திற்கு முந்திய தினத்திலும் வாக்கெடுப்புத் தினத்திலும் அனைத்து முறைப்பாட்டு நிலையங்களிலும் அதிகமான அலுவலர்களும் பொலிஸ் அலுவலர்களும் ஈடுபடுத்தப்பட்டு குறித்த அலுவல்களை மிகவும் வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. குறிப்பாக வாக்கெடுப்புத் தினத்தன்று தேர்தல்கள் செயலகத்தின் தேசிய முறைப்பாட்டு நிலையத்திற்கும் அலுவலர்களும் தேவையான ஏனைய வசதிகளும் அதிகரிக்கப்பட்டன. அதன் காரணமாக முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்வதையும் அது தொடர்பாக தேடிப் பார்ப்பதையும் இலகுவாக மேற்கொள்ள முடிந்தது. கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை ஆவணப்படுத்துவதுடன் அவற்றின் பிரதிகள் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் கண்காணிப்பாளர்களுக்கும் அச்சந்தர்ப்பத்திலேயே வழங்கப்பட்டன. இவ்வாறு குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் தெரிவத்தாட்சி அலுவலர் அல்லது பொலீஸார் செயற்பட்ட விதமும் மேற்கொண்ட நடவடிக்கைகளும் தொடர்பில் இயன்ற விரைவில் தேசிய முறைப்பாட்டு நிலையத்திற்கு அறிக்கையிட வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்ததோடு, அவற்றுக்கான பதில்கள் கிடைக்கப்பெற்றவுடன் அவற்றின் பிரதிகளை அரசியல் கட்சிகளுக்கும் கண்காணிப்பு அமைப்புகளுக்கும் பெற்றுக்கொடுக்கப்பட்டு அத்தகவல்களை உறுதிசெய்துகொள்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

126. தேசிய முறைப்பாட்டு நிலையம் தேர்தல்கள் செயலகத்தில் நிறுவப்பட்ட 2014.11.22 ஆம் திகதி தொடக்கம் வாக்கெடுப்பு தினம் வரையான காலத்திற்குள் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கையும் உரிய வகைப்படுத்தலும் **VIII ஆம் இலக்கக் குறிப்பில் காட்டப்பட்டுள்ளன.**

சனாதிபதித் தேர்தல் காலப்பகுதிக்குள் ஏற்பட்ட தேர்தல் சட்ட வலுவாக்கம் தொடர்பான விஷேட சந்தர்ப்பங்கள்

127.1. சனாதிபதித் தேர்தல் நடாத்தப்பட்ட 2015.01.08 ஆம் திகதிக்கு முந்திய (2015.01.02 ஆம் திகதி முதல் 2015.01.07 ஆம் திகதி வரையான) காலப்பகுதிக்குள் நாடெங்கிலும் வன்முறை நிலைமையொன்றை ஏற்படுத்தி அரசியல்வாதிகளைப்படுகொலைசெய்வதற்கான திட்டமொன்று இருப்பதாகவும் புதிய ஜனநாயக முன்னணியின் செயலாளர் எழுத்துமூலமாக அறிவித்திருந்ததுடன், அது தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளர் பொலீஸ்மா அதிபரை அறிவுறுத்தியதுடன் அதற்கிணங்க பொலீஸ்மா அதிபரால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அக்காலப்பகுதியில் நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கை பாதுகாப்பதற்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையின் உதவியுடன் பொலீஸாரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் பொலீஸ்மா அதிபரால் சனாதிபதித் தேர்தலுடன் தொடர்பான நடவடிக்கைகள் மீது கவனம் செலுத்தியமையும் கலகத் தடுப்புக்காக32,000 பொலீஸ் படையணியொன்றைஈடுபடுத்தியமையும் பாராட்டுக்குரிய விடயமாகும்.

127.2. காலி வந்துரம்ப பிரதேசத்தில் சனாதிபதி வேட்பாளர் ஒருவர் பொதுமக்களுக்கு உரையாற்றுவதற்காக தயார்செய்யப்பட்ட மேடை, கூட்டம் நடாத்தப்படவிருந்த தினத்திற்கு முந்திய தினம் எதிர்த் தரப்பினரால் தீயிட்டு கொழுத்தப்பட்டதுடன், அதே இடத்திலிருந்தவாறே பொதுமக்களுக்கு உரையாற்றுவதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு தேர்தல்கள் ஆணையாளரின் ஆலோசனையின் பிரகாரம் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் மற்றும் பிரதித் தேர்தல்கள் ஆணையாளரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

127.3. திடீர் வெள்ளம் காரணமாக ஏற்பட்ட அனர்த்தத்தை முகாமைத்துவப்படுத்துவதற்காக பாதுகாப்புப் பிரிவினர் நடவடிக்கை மேற்கொண்டதுடன், அவ்வாறான நடவடிக்கைகளின் போது வேட்பாளரை ஊக்குவிப்பதற்காக அந்நிதியைப் பயன்படுத்துவதற்கு முயற்சி மேற்கொண்ட சந்தர்ப்பங்கள் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் அவற்றைத் தடுப்பதற்கு தேர்தல்கள் ஆணையாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

127.4. சனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட ஒரு வேட்பாளருக்கு ஒரு மக்கட்குழுமத்தின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதற்கு கைச்சாத்திடப்பட்டதாகத் தெரிவிக்கப்படும்(பின்னர் போலி ஆவணமொன்றாக அறியக்கிடைத்த) ஆவணமொன்றை பாராளுமன்ற உறுப்பினர்களின் அஞ்சல் வசதி ஊடாக குறிப்பிட்ட ஆவணங்களை அஞ்சலிடுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியை முறியடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

127.5. முத்திரை ஒட்டப்பட்ட கடித உறைகளில் வேட்பாளரை ஊக்குவிப்பதற்கான பிரசாரப் பத்திரங்களையும் இட்டு (பாதுகாப்பான நாளைய தினம் மற்றும் சிறந்த எதிர்காலத்திற்காக எனக் குறிப்பிடப்பட்ட) தபாலில் விநியோகிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சியை தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுறுத்தல்களுக்கிணங்க அஞ்சல் மாஅதிபரின் தலையீட்டின் மூலம் தடுக்க முடிந்தது.

127.6. கொழும்பு வடக்கு மாளிகாவத்தை, சோமாலோக்க விகாரையில் சீலங் காக்கும் உபாசகர்களுக்கு அதற்கான ஆடையைப் பகிர்ந்தளித்தல் சம்பந்தமாக முதன்முறையாக முறைப்பாடு கிடைக்கப்பெற்றதுடன் நாட்டின் அநேகமான பகுதிகளில் அவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாமென்பதனால், அவ்வாறான நடவடிக்கைகளைத் தடுத்தல் சம்பந்தமாக பொலிசார் மற்றும் ஏனைய தேர்தலில் ஈடுபடும் தரப்பினரை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 600 மில்லியன் ரூபா தொகையை தொலைத் தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிடமிருந்து பெற்று, அத்தொகையினூடாக சீலங்காக்கும்போது அணியும் ஆடைகளைப் பகிர்ந்தளிக்கும் செயற்பாட்டிற்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நிதிக் குற்றங்கள் விசாரணைப் பிரிவினால் (FCID) தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் பிரதிவாதிகளை குற்றவாளிகளெனத் தீர்ப்பு வழங்கப்பட்டதன் பின்னர் அந்தத் தீர்ப்புக்கெதிரான மேன்முறையீடு உயர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகின்றது.

127.7. சனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் 48 மணித்தியாலங்களுக்குள் பிரசார நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்ட அமைதிக் காலப்பகுதியில் தொலைக்காட்சி, வானொலி அலைவரிசைகள் ஊடாக தேர்தல் சின்னங்கள்/வேட்பாளரின் புகைப்படங்கள் முதலியவற்றைக் காட்சிப்படுத்தி வேட்பாளரை ஊக்குவிப்பதற்காக முன்னரே பிரசாரம் செய்யப்பட்ட ஆவண நிகழ்ச்சிகள், திரைப்படங்கள், இசை நிகழ்ச்சிகள் முதலியவற்றை மட்டுமன்றி மத நிகழ்ச்சிகள், ராசி பலன் எதிர்வுகூறல்கள், கருத்துக் கணிப்புக்களின் பெறுபேறுகள் முதலான நிகழ்ச்சிகளைப் பிரசாரம்செய்யும் முயற்சிகளைத் தடுக்க நேரிட்டது. அதற்கு தேர்தல் முறைப்பாட்டு விசாரணைப் பணியகத்தின் அலுவலர்களுக்கு மட்டுமன்றி, தேர்தல்கள் ஆணையாளருக்கும் தலையீடு செய்ய நேரிட்டது.

127.8 சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவு வழங்குவதற்காக நடாத்தப்படும் அனுமதிபெற்ற பிரசாரக் கூட்டங்களின்போது தவிர வேறு இடங்களில் குறிப்பாக வேட்பாளர்களின் தேர்தல் அலுவலகங்களில் பிரசார வீடியோக்களையும் திரைப்படங்களையும் காட்சிப்படுத்துவதைத் தவிர்க்கவேண்டும் என்ற விதித்துரைப்பு திருகோணமலை மாவட்டத்தின் ஒரு தேர்தல் அலுவலகத்தினால் தொடர்ச்சியாக மீறப்பட்டு மாலை நேரங்களிலும் இராக் காலங்களிலும் வீடியோ கட்சிகள் காட்சிப்படுத்தப்படுவதாக கிடைத்த முறைப்பாடுகள் சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என மீண்டும் மீண்டும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இது குறித்து ஆராய்வதற்கு மாவட்ட முறைப்பாட்டு விசாரணைப் பணியகத்தின் அலுவலர்கள், பொலீஸ் அலுவலர்களுடன் அவ்விடயப்பொறுப்பு உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் திருகோணமலை உதவி தேர்தல் ஆணையாளருக்கும் அஞ்சல்மூல வாக்குச்சீட்டுக்களை வெளியிடுவதற்கு முன்னைய தின இரவு செல்ல வேண்டியேற்பட்டது. அங்கு இடம்பெற்றுவந்த சட்டமுரணான செயற்பாடுகளை இடைநிறுத்துமாறு அறிவிக்கப்பட்டபோது மோதல் நிலைமையொன்று ஏற்பட்டுள்ளதுடன்,உதவித் தேர்தல் ஆணையாளரால் இந்த நிகழ்வு தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டை குறித்துக்கொள்வதற்கு அடுத்த தினம் அதிகாலை ஐந்து

மணி வரை திருகோணமலை பொலீஸ் நிலையத்தில் தரித்திருப்பதற்கும்,அடுத்ததினம் மேற்கொள்ளப்படவுள்ள அஞ்சல்மூல வாக்குகள் விநியோகிக்கும் பணியில் ஈடுபடுவதற்குப் பதிலாக தேர்தல் அலுவலர்களுக்கு நீதிமன்றத்தின் முன்னிலையில் தோற்ற நேரிட்டது. இந்த நிகழ்வுடன் தொடர்புடைய அரசியல்வாதியொருவரால் அலுவலர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டை முன்னெடுத்துச்செல்லும் அளவுக்கு விடயங்கள் இல்லையென பின்பு நடைபெற்ற வழக்கு விசாரணை தினமொன்றில் நீதிமன்றம் தீர்மானித்தது. சட்டமுரணான பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவது தொடர்பில் தேர்தல் அலுவலர்கள் செய்த முறைப்பாட்டின் விசாரணை இன்னும் முடிவடையவில்லை.

127.9 சனாதிபதி தேர்தல் தினமன்று ஒரு சனாதிபதி வேட்பாளர் சம்பந்தமாக முன்னணி அரசியல்வாதி ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட பிரசார நடவடிக்கையை நிறுத்துவதற்காக தேர்தல்கள் ஆணையாளருக்கு தனது சக அலுவலர்கள் சகிதம் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்குச் சென்று அந்த பிரசாரத்தை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

127.10 சமூர்தி நிதியத்தைப் பயன்படுத்தி சனாதிபதித் தேர்தல் வேட்பாளர் ஒருவரின் உருவப்படத்தைக் கொண்ட கலண்டர்களை அச்சிட்டு விநியோகிப்பதற்கு மேற்கொண்ட முயற்சியை தேர்தல் ஆணையாள் தலையிட்டு அந்த நடவடிக்கையை நிறுத்துவதற்கு முடியுமாகியது.

127.11 வாக்குச்சீட்டுக்கள் மற்றும் வாக்குப்பெட்டிகளை வழங்குவதற்கு முன்னைய தினம் அதாவது, 2015 சனவரி மாதம் 06 ஆம் திகதி கேகாலை மாவட்டத்தின் ரம்புக்கனை பிரதேசத்தில் வாக்காளர்களுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் பிரதேசம்பூராவும் மேற்கொள்ளப்பட்ட சட்ட ரீதியற்ற செயற்பாடுகளைத் தடுப்பதற்கு கேகாலை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்கு தலையிட்டு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியேற்பட்டது.

127.12 2015.01.08 ஆம் திகதி நடைபெற்ற சனாதிபதித் தேர்தலின்போது வாக்கெடுப்புத் தினத்திற்கு 3 தினங்களுக்கு முன்னர் இரத்தினபுரி மாவட்டத்தின் பெல்மடுள்ள பிரதேசத்தில் நிகழ்ந்த மோதல் நிலமை காரணமாக சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஒரு வேட்பாளரின் ஆதரவாளர் ஒருவர் மரணித்ததுடன் சனாதிபதித் தேர்தல் காலப்பகுதிக்குள் நிகழ்ந்த அந்த கொலை நம்பந்தமாக நீதிமன்றநடவடிக்கைகள் இதுவரைநிறைவடையவில்லை.

VIIஆம் பகுதி

வேட்பாளர் உரிமைகள்

வேட்பாளர்களுக்கு வானொலி மற்றும் தொலைக்காட்சி பிரசார வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.

128. 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 117 ஆம் பிரிவிற்கமைய வேட்புமனு கையளிக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு வாரத்திற்குள் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் என்பவற்றிடமிருந்து எவ்வித கொடுப்பனவுமின்றி வானொலி மற்றும் தொலைக்காட்சி பிரசார வசதிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு வேட்பாளர்களுக்கு வசதி செய்யப்பட்டுள்ளது. இதற்கமைய ஒரு வேட்பாளருக்கு அவ்விரு கூட்டுத்தாபனங்களிலிருந்தும் 90 நிமிடங்கள் வீதம் வானலைக் காலங்கள் இரண்டைப் பயன்படுத்த வாய்ப்புக் கிடைத்தது. குறித்த 90 நிமிட வானலைக் காலத்தை 15 நிமிடங்களுக்குக் குறையாததும் 30 நிமிடங்களுக்கு மேற்படாததுமான வானலைக் காலத்தை விஞ்சாதவாறு 3 சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றது. மேலும், குறித்த இலவச வானொலி மற்றும் தொலைக்காட்சி பிரசாரக் கால எல்லை வாக்கெடுப்பு தினத்திற்கு 72 மணித்தியாலங்களுக்கு முன்னர் நிறைவு செய்யப்படல் வேண்டுமெனவும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொலைக்காட்சியில் பிரசாரம் செய்யப்படுகின்ற சந்தர்ப்பங்களில் வேட்பாளர்களின் புகைப்படம் மற்றும் தேர்தல் சின்னத்தை பிரசாரம் செய்ய முடியுமெனவும், தமக்குரிய 90 நிமிடங்களை 3 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொள்வதாயின் அத்துடன் மற்றைய தேசிய மொழியிலும் உரையாடக் கருதுவதாயின், அதற்காக வேறு பேச்சாளரொருவரின் உதவியைப் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் தமது வானொலி, தொலைக்காட்சி பிரசாரங்களின் போது கட்சிக் கொள்கைகளுடன் தொடர்புடைய விடயங்கள் தவிர்ந்த வேட்பாளரின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படும் விதத்தில் கருத்துக்கள் தெரிவிக்கப்படலாகாது எனவும் ஏதேனுமொரு விதத்தில் அவ்வாறான கருத்துக்கள் தெரிவிக்கப்படும் பட்சத்தில் ஊடகங்கள் வாயிலாக அவை ஒளிபரப்பப்பட மாட்டாதெனவும் வேட்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

அதற்கமைய 2014.12.11 ஆம் திகதி தேர்தல்கள் செயலகத்தில் ஒவ்வொரு வேட்பாளருக்காகவும் சமுகமளித்திருந்த முகவர்களின் முன்னிலையில் திருவுளச் சீட்டிழுப்பின் மூலம் ஒவ்வொரு வேட்பாளருக்குமுரிய இலவச வானொலி மற்றும் தொலைக்காட்சி காலப்பகுதி தீர்மானிக்கப்பட்டதோடு, தேர்தல்கள் திணைக்களத்தின் அலுவலர்களுடன் ரூபவாஹினி மற்றும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனங்களின் தலைவர்களும் அதில் கலந்துகொண்டனர். அதற்கமைய போட்டியிட்ட 19 வேட்பாளர்களுக்காகவும் குறித்தொதுக்கப்பட்ட மொத்த வானலை பிரசார காலம் 28 மணித்தியாலங்களும் 30 நிமிடங்களுமாகும்.

கட்டணமின்றி வாக்காளர்களுக்கு அஞ்சலில் நிருபமொன்றை அனுப்பிவைப்பதற்கு வேட்பாளருக்குள்ள வசதி

129. 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 114 ஆம் பிரிவிற்கமைய வேட்புமனுக் கையேற்கப்படும் தினத்திலிருந்து வாக்கெடுப்புத் தினத்திற்கு 10 நாட்களுக்கு முன்னரான காலத்தினுள் தேர்தலுடன் தொடர்புடைய நிருபமொன்றை அஞ்சல் கட்டணமின்றி வாக்காளர்களுக்கு அனுப்பிவைப்பதற்கு வேட்பாளர்களுக்கு உரித்துண்டு.

130. இதற்கமைய குறித்த நிருபங்களை அனுப்பும்போது அஞ்சல்செய்வதற்கு எவ்வாறு கையளித்தல் வேண்டுமென்பதும் நிருபத்தின் தன்மைக்குரிய நிபந்தனைகளைத் தீர்மானித்தலும் அஞ்சல்மா அதிபரினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். இது தொடர்பில் வேட்பாளர்களை அறிவுறுத்தி அஞ்சல்மா அதிபரினால் 2014.11.28 ஆம் திகதி அனுப்பப்பட்ட கடிதத்திற்கமைய நிருபமொன்றின் நிறை 30 கிராம் அல்லது அதற்குக் குறைவாகவிருத்தல் வேண்டுமெனவும், 300x100 மில்லிமீற்றர் நீளம், அகலம் கொண்டதாக இருத்தல் வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டது. மேலும், குறித்த நிருபங்களை அந்தந்த மாவட்டங்களில் கையளிக்கவேண்டிய அஞ்சல் அலுவலகங்கள் யாவையெனவும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. வாக்காளர்களுக்கு இந்நிருபங்களை அனுப்பிவைப்பதற்காக வாக்காளர்களின் முகவரிகளை இலகுவாக அச்சிட்டுக் கொள்ளக்கூடிய தகவல்களை உள்ளடக்கிய இறுவட்டுக்கள் வேட்பாளர்களால் தேர்தல்கள் திணைக்களத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டன. வாக்கெடுப்புத் தினத்திற்கு முன்னரான 10 நாட்களுக்குப் பின்னர்இந்நிருபங்களை அஞ்சல் அலுவலகங்கள் ஏற்றுக்கொள்ளாதிருக்க வேண்டியிருந்ததுடன் வாக்கெடுப்புத் தினத்திற்கு 5 தினங்களுக்கு முன்னரான காலப்பகுதிக்குள் இந்நிருபங்களின்பகிர்ந்தளிப்பு நிறுத்தப்படல் வேண்டுமென சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

131. வேட்பாளர்களுக்கு பிரச்சாரக் கூட்டங்களை நடாத்துவதற்காக மண்டப வசதிகள், விளையாட்டுத்திடல்களை குறித்தொதுக்கும் விடயங்களில் மஹரகம, மொறட்டுவை, பெல்மடுல்ல

உள்ளிட்ட உள்ளூர் அதிகாரசபை நிறுவனங்களுக்குரிய விளையாட்டுத்திடல்கள் மற்றும் மண்டபங்கள் அனைத்து வேட்பாளர்களுக்கும் நியாயமான முறையில் ஒதுக்கப்படுகின்றதா எனக் கண்டறிவதற்கு தேர்தல்கள் ஆணையாளருக்கும் தலையிட வேண்டியேற்பட்டது. இந்த அலுவலை மேற்கொள்ளும்போது அரசியல் கட்சிகளின் நிரந்தர முகவர்களின் மற்றும் செயலாளர்களின் ஒத்துழைப்பு கிடைத்தமையானது அந்த சிக்கல்களை தீர்த்துக்கொள்வதற்கு மிகவும் உதவியாக இருந்தது.

VIIIஆம் பகுதி

வாக்கெடுப்பு

132. வாக்கெடுப்பை நடாத்துவதற்குரிய முதன்மைப் பணியொன்றாகக் கருதப்படுகின்ற வாக்கெடுப்பு நிலையங்களுக்குப் பொறுப்பான சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் மற்றும் இதர பணியாட்டொகுதியினர் போன்றே வாக்குச்சீட்டுக்கள் உள்ளடங்கிய பொருட்களாதியவற்றை வாக்கெடுப்பு நிலையங்களுக்கு அனுப்பிவைத்தல், வாக்கெடுப்பு தினத்திற்கு முந்திய தினம் அதாவது, 2015.01.07 ஆம் திகதி அனைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களினதும் அலுவலக மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன.

133. வாக்கெடுப்பு தினத்திற்கு முந்திய தினம் வாக்கெடுப்பு நிலையங்களை நோக்கிச் செல்கின்ற சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களும் வாக்கெடுப்பு நிலையங்களின் அலுவல்களை மேற்பார்வை செய்வதற்குப் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ள வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களும் உரிய மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகத்திற்கு அறிக்கையிடல் வேண்டும். அவ்வாறு அறிக்கையிடுகின்ற அனைத்து அலுவலர்களும், வாக்கெடுப்புத் தினத்தன்று வாக்கெடுப்பு நிலையத்தில் அலுவல்களை மேற்கொள்ளவேண்டிய முறை தொடர்பில் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் மேலும் அறிவுறுத்துகின்ற கலந்துரையாடலின் பின்னர், அவ்வலுவலர்களுக்கு முறையான நியமனக் கடிதங்களை பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. முன்னைய தேர்தல்களைப் போன்று குறித்த அலுவலர்கள் பணியாற்றுகின்ற வாக்கெடுப்பு நிலையங்கள் தொடர்பான விபரங்களை வாக்கெடுப்புத் தினத்திற்கு முன்னர் எவரொருவரும் அறிந்துகொள்வதற்கான வாய்ப்பைத் தவிர்ப்பதே இதன் நோக்கமாகும்.

134. சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களை தாம் நியமனம் செய்யப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையங்களுக்கமைய குறித்த பண்டங்களைக் கையேற்கும் நிலையங்களிலிருந்து உரிய பொருட்களாதியவற்றை கையேற்று அவர்களுக்கென இணைப்புச்செய்யப்பட்ட வாகனங்களில்,தமது உதவியாளர்மற்றும் பொலீஸ் அலுவலர்கள் சகிதம் உரிய வாக்கெடுப்பு நிலையத்திற்கு அனுப்பிவைப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. வட மாகாணத்தின் ஒருசில வாக்கெடுப்பு நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் உள்ளிட்ட அலுவலர்களை போக்குவரத்து செய்வதற்காகவும் வாக்கெடுப்பின் பின் வாக்குப் பெட்டி, பொருட்கள் மற்றும் பணியாட்டொகுதியினரை மீள அழைத்துக் கொள்வதற்காகவும் கடற்படையின் உதவியைப் பெற்றுக்கொள்ள நேரிட்டது.

135. சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் தவிர்ந்த ஏனைய வாக்கெடுப்பு நிலைய பணியாட்டொகுதியினர் பொதுப் போக்குவரத்து வசதிகளைப் பயன்படுத்தி வாக்கெடுப்பு நிலையங்களுக்கு அறிக்கையிட வேண்டியிருந்தது. அவ்வாறான பொதுப் போக்குவரத்து வசதிகள் குறைந்த மட்டத்தில் காணப்பட்ட பிரதேசங்களின் வாக்கெடுப்பு நிலையங்களுக்கு குறித்த அலுவலர்களை போக்குவரத்துச் செய்வதற்கு தெரிவத்தாட்சி அலுவலர்களால் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. அனைத்து அலுவலர்களும் வாக்கெடுப்புத் தினத்திற்கு முந்திய தினம் பி.ப 2.00 மணிக்கு முன்னர் வாக்கெடுப்பு நிலையங்களுக்கு அறிக்கையிட்டு, சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரால் நடாத்தப்படுகின்ற வாக்கெடுப்பு தொடர்பான ஒத்திகையில் கலந்துகொள்ள வேண்டுமெனவும் பணியாட்டொகுதியினருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. வாக்கெடுப்புக்குப் போதுமான பணியாட்டொகுதியினர் நிலையங்களுக்கு உரிய நேரத்தில் வருகைக்கு அறிக்கையிட்டு அவர்கள் ஒத்திகையிலும் கலந்துகொண்டமை பற்றி அனைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களினாலும் உறுதிப்படுத்தப்பட்டது.

136. அனைத்து மாவட்டங்களிலும் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் பிற்பகல் 2.00 மணியாகும் போது வாக்கெடுப்பு நிலையங்களுக்கு அறிக்கையிட்டதாக உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களின் அறிக்கைகள் ஊடாக உறுதிசெய்யப்பட்டது. வாக்கெடுப்பு நிலையங்களை மேற்பார்வை செய்வதற்குப் பொறுப்பான அலுவலர்களும் குறித்த வாக்கெடுப்பு நிலையங்களை மேற்பார்வை செய்து குறைபாடுகள் காணப்படின், அவற்றை பூரணப்படுத்திய பின்னர்,தமது முதலாவது செய்தியை தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். அனைத்து சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் உள்ளிட்ட பணியாட்டொகுதியினர் வாக்கெடுப்பு நிலையங்களுக்கு அறிக்கையிட்டுள்ளதாகவும் அதற்கு அடுத்த நாள், வாக்கெடுப்பை ஆரம்பிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும், உரிய செய்தியை தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். கொழும்பு மாவட்டத்தில் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் பி.ப. 04.00 மணியாகும் போது உரிய வாக்கெடுப்பு நிலையங்களுக்கு அறிக்கையிட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது.

137. வாக்கெடுப்பு நிலையங்களுக்காகப் பயன்படுத்தப்படும் அனைத்து கட்டிடங்களையும் தேர்தலுக்கு முன்னரான திகதியில் தேர்தலுக்குத் தயாராக வைத்திருக்குமாறு தெரிவத்தாட்சி அலுவலர்களால் பிரதேச செயலாளர்கள் ஊடாக அனைத்து கிராம அலுவலர்களும் அறிவுறுத்தப்பட்டிருந்ததோடு, அதற்கமைய

அவர்கள் வாக்கெடுப்பு நிலையங்களைத் தயார்செய்திருந்தனர். இருப்பினும், வாக்கெடுப்பு நிலையங்கள் தயார்செய்யப்பட்டுள்ள முறை வாக்காளர்களுக்கு இடையூறானதென சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் கருதுவாராயின் அதனை பொருத்தமானவாறு மீண்டும் தயார் செய்து கொள்ளுமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

138. சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரொருவர் வாக்கெடுப்பு நிலையமொன்றுக்கு வருகை தந்ததன் பின்னர், வாக்கெடுப்பு நிலையம் உரியவாறு தயார் செய்யப்பட்டுள்ளதாவென்பதை பரீட்சித்துப் பார்த்து ஏனைய பணியாட்டொகுதியினரின் வருகையை குறித்துக்கொண்டு தெரிவத்தாட்சி அலுவலர்களிடமிருந்து கையேற்றுக் கொண்ட பொருட்களாதியன உரியளவு உள்ளனவா என்பதையும் வாக்குப் பெட்டிகள் உரியவாறு தொழிற்பாட்டு நிலையில் உள்ளனவா என்பதையும் பரீட்சித்துப் பார்த்து திருப்தியடைதல் வேண்டும். மேலும், அவற்றில் குறைபாடு காணப்படுமாயின், தமது வாக்கெடுப்பு நிலையத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள வலய உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் வருகைதந்த பின்னர், அவருக்கு தெரிவித்து அவசியமானவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும். முத்திரையிட்டு வழங்கப்பட்ட வாக்குச் சீட்டுக்கள், உத்தியோகபூர்வ இலச்சினைகளையும் துடைத்தழிக்க முடியாத மை இடப்பட்ட பக்கெற்றுக்களையும் திறந்து பார்க்காமல் பரீட்சிப்பதற்கு விதித்துரைக்கப்பட்டிருந்தது. மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் அனைத்து அலுவலர்களுக்கும் எழுத்து மூல அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்த போதிலும், கனிட்ட மற்றும் எழுதுநர் மட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வகுப்புக்கள் நடாத்தப்பட்டு அறிவுறுத்தல் வழங்கப்படவில்லையென்பதால், ஒவ்வோர் அலுவலருக்கும் ஒப்படைக்கப்படுகின்ற பணிப்பொறுப்புக்களை விசாரித்து தெளிவுபடுத்தும்ஒத்திகை வகுப்பை நடாத்துதல் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரின் முதன்மைப் பணியாகக் கருதப்படுகிறது. அதன்மூலம் வாக்கெடுப்பை நடாத்தும் அலுவலர்களின் அறிவைப் பரீட்சிப்பதற்கும் குறைபாடுகளை நீக்குவதற்கும் நடவடிக்கையெடுத்தல் மறுநாள் தேர்தலை மிகச் சிறப்பாக நடாத்துவதற்கு உதவியாக அமையும்.

139. ஒத்திகை நடாத்தப்பட்டதன் பின்னர், பணியாட்டொகுதியின் பெண் அலுவலர்களுக்கு அவர்களாகத் தேடிக் கொண்ட தங்குமிடங்களுக்கோ அல்லது தமது வீடுகளுக்கோ செல்ல முடியும். ஆண் அலுவலர்கள் அனைவரும் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரோடு, வாக்கெடுப்பு நிலையத்தில் இரவைக்கழிப்பதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. உரிய அனைத்து அலுவலர்களுக்கும் தேவையான தங்குமிட வசதிகளை வாக்கெடுப்பு நிலையத்தில் தயார் செய்வதும் தேவையான உணவு பானங்களை வழங்குவது வாக்கெடுப்பு நிலைய பொறுப்பு கிராம அலுவலரின் பொறுப்பொன்றாகும்.

140. வாக்கெடுப்பு நடைபெறும் தினத்திற்கு முந்திய தினம் வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் குறித்த வாக்கெடுப்பு நிலையங்களுக்கு அறிக்கையிட்டு, மறு நாள் வாக்கெடுப்பை உரிய நேரத்தில் ஆரம்பிப்பதற்குத் தேவையான பணியாட்டொகுதியினர் நிலையங்களுக்கு அறிக்கையிட்டுள்ளனராவெனவும் ஏனைய எல்லா விடயங்களையும் ஆராய்ந்து பார்த்து தெரிவத்தாட்சி அலுவலருக்கு அனுப்பப்படுகின்ற செய்தி அவ்வலுவலருக்கு மிக முக்கியமாகும். அதற்குக் காரணம், வாக்கெடுப்பு நடைபெறும் தினத்திற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட அனைத்து ஒழுங்கமைப்புப் பணிகளும் முழுமை பெற்றுள்ளதென்பது அச்செய்தியின் மூலமே உறுதிப்படுத்தப்படுகின்றது.

வாக்கெடுப்புத் தினம்

141. வாக்கெடுப்பு நடைபெறும் தினத்தன்று முற்பகல் 7.00 மணிக்கு அந்நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்பதால், அனைத்து பணியாட்டொகுதியினரும் அதற்குத் தயாராக முற்பகல் 06.00 மணியாகும்போது வாக்கெடுப்பு நிலையங்களுக்கு அறிக்கையிட்டு அதற்குரிய பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென தெரிவத்தாட்சி அலுவலரினால் பணியாட்டொகுதியினருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன. அதற்கமையவாக்காளர்களுக்கான அறிவுறுத்தல்களை அந்தந்த இடங்களில் காட்சிப்படுத்துவதற்கும், வாக்களிப்புச் சிற்றறைகள் முதலியவற்றை உரிய முறையில் வைப்பதற்கும் வாக்குப் பெட்டிகளை பொறியிடுவதற்குத் தேவையான அலுவல்களையும் மேற்கொள்ள வேண்டியிருந்தது. ஒவ்வொரு வேட்பாளர் சார்பாகவும் 02 முகவர்களுக்குவாக்கெடுப்பு நிலையத்துக்கு வருகைதர முடியுமெனவும் அவர்களுக்கு கண்காணிப்புப் பணிகளை வசதியான விதத்தில் மேற்கொள்வதற்கும் மு.ப 6.30 மணியாகும்போது வாக்கெடுப்பு நிலையங்களுக்கு அறிக்கையிட வேண்டுமெனவும் தேர்தல்கள் ஆணையாளரினால் வேட்பாளர்கள் ஊடாக முகவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. வாக்கெடுப்பு ஆரம்பிப்பதற்கு முன்னர் வாக்குப் பெட்டிகளைப் பொறியிடுவதும் வாக்கெடுப்பு நிலையங்களுக்கு வாக்கெடுப்புடன் தொடர்புடையதாக கிடைக்கப்பெற்றுள்ள வாக்குச் சீட்டுக்கள், உத்தியோகபூர்வ இலச்சினைகள், மை மற்றும் தேருநர் இடாப்பு என்பவற்றைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கும் முகவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. வாக்குப் பெட்டிகளைப் பொறியிடுவதற்கு முன்னர், வாக்குப் பெட்டியினுள் வேறு எதுவும் இல்லையென்பதை உறுதிசெய்துகொள்வதும் முகவர்களுக்குத் தேவையெனில், வாக்குப் பெட்டியினுள் கூட இலச்சினை பொறிப்பதற்கும் (ஸ்ரிக்கர்) சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் வாக்குப் பெட்டி பொறியிடப்பட்டதன் பின்னர், முகவர்களுக்கு வாக்குப் பெட்டியின்

வெளியில் மீண்டும் இலச்சினை பொறிப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. முகவர்களினால் அவ்வாறு இடப்பட்ட அனைத்து இலச்சினைகளதும் மாதிரிகளை அச்சந்தர்ப்பத்திலேயே சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு வழங்க வேண்டியிருந்தது. அதற்கு மேலதிகமாக வாக்குச்சீட்டின் பிற்புறத்தில் இடப்படுகின்ற உத்தியோகபூர்வ இலச்சினை எதுவென்பது, தீர்மானிக்கப்படுவதும் வாக்கெடுப்பு ஆரம்பிக்கப்படுவதற்கு சற்று நேரத்திற்கு முன்னர், வாக்கெடுப்பு நிலையத்தில் வைத்தேயாகும். அதற்கமைய, வாக்கெடுப்பு நிலையத்தின் வாக்களிப்பு வரிசைகளின் எண்ணிக்கைக்கமைய வழங்கப்பட்டுள்ள பல உத்தியோகபூர்வ இலச்சினைகளிலிருந்து தேவையானளவுஇலச்சினைகளை முகவர்களின் முன்னிலையில் தேர்ந்தெடுத்துக்கொள்ளுமாறு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. வாக்கெடுப்பு தொடர்பான நம்பிக்கையை அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களிடத்தில் உறுதிசெய்தல் இவற்றின் மூலம் எதிர்பார்க்கப்பட்டது.

142. 2015 சனவரி 08 ஆம் திகதி மு.ப 07.00 மணிக்கு நாட்டின் அனைத்து வாக்கெடுப்பு நிலையங்களிலும் வாக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டது. அதற்கமைய 15,044,490 வாக்காளர்கள் 12,314 வாக்கெடுப்பு நிலையங்களில் வாக்களிப்பதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. பெரும் எண்ணிக்கையான வாக்கெடுப்பு நிலையங்களில் வாக்கெடுப்பு ஆரம்பிக்கப்படுவதற்கும் முன்னரே வாக்காளர்கள் திரண்டிருந்ததாக அறிக்கையிடப்பட்டிருந்தது. வாக்காளர்கள் வாக்கெடுப்பு நிலையங்களுக்கு முன்கூட்டியே செல்வது வாக்காளர்களுக்கும் அதேபோன்று வாக்கெடுப்பு நிலைய பணியாட்டொகுதியினருக்கும் வசதியாயிருக்குமெனத் தெரிவித்து தேர்தல்கள் ஆணையாளரினால் விடுக்கப்பட்ட அறிவித்தலின் பெறுபேறாக அவ்வாறு இடம்பெற்றிருக்க முடியும்.

143. வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் தங்களுக்குரிய வாக்கெடுப்பு நிலையங்கள் மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் பயணம் செய்து தமது கண்காணிப்பு அலுவல்களிலீடுபட்டதோடு, பொலீஸாரும் வாக்கெடுப்பு நிலையங்களினுள் நிறுத்தப்பட்டுள்ள பொலிஸ் அலுவலர்கள் மூலமும், தமது நடமாடும் பொலீஸ் வாகனங்கள் மூலமும் வாக்களிப்புநிலையத்திற்கு வெளியே வாக்கெடுப்பு தொடர்பான தவறுகள் இடம்பெறுகின்றனவா என்பது குறித்து கண்காணிப்பு அலுவல்களை மேற்கொண்டனர். அதற்கமைய, வாக்கெடுப்பு அலுவல்கள் இடையூறின்றி மேற்கொள்ளப்படுவதாக அனைத்து மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் அறிக்கையிடப்பட்டிருந்தது.

144. பிரதேச செயலகங்களில் பிரதேச இணைப்பு அலுவலகங்களைத் தாபித்து அவற்றின் மூலம் வாக்கெடுப்புத் தினத்திற்கு முந்திய தினம் போன்றே வாக்கெடுப்புத் தினத்தன்றும் வாக்கெடுப்பு நிலையங்களினுள் அல்லது வெளியில் இடம்பெறுகின்ற சம்பவங்கள் தொடர்பாக தெரிவத்தாட்சி அலுவலரிடமிருந்து அறிக்கைகள் பெறப்பட்டு அது தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அரசியல் கட்சிகளின் முகவர்களுக்கு, கண்காணிப்பு அமைப்புக்களின் முகவர்களுக்கு, பிரதேச இணைப்பு அலுவலகங்களில் முறைப்பாடுகளை சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதோடு, பொதுமக்களுக்கும் அவசியமெனில், அவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடு செய்ய வாய்ப்புக் கிடைத்தது. இந்நிலையத்திற்கு பொலீஸாரும் இணைப்புச் செய்யப்பட்டுள்ளமையால் கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகள் தொடர்பில் துரிதமாக உரிய இடங்களுக்குச் சென்று விசாரணைகளை மேற்கொள்வதற்கு பிரதேச இணைப்பு நிலையங்களுக்குப் பொறுப்பாகவிருந்த உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

145. ஒவ்வொரு வாக்கெடுப்பு நிலையத்திற்கும் ஒவ்வொரு வேட்பாளரையும் பிரதிநிதித்துவப்படுத்தி இரண்டு முகவர்களுக்கு வாக்கெடுப்பு நிலையத்தினுள் தரித்திருப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டதோடு, அதற்கு மேலதிகமாக வேட்பாளர்களுக்கும் தேர்தல் முகவர்களுக்கும் நாட்டின் எந்தவொரு வாக்கெடுப்பு நிலையத்திற்கும் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களுக்கும் பிரதேச முகவர்களுக்கும் முறையே மாவட்டத்திற்குள்ளேயும்குறித்த வாக்கெடுப்புப் பிரிவிற்குள்ளேயும் அமையப்பெற்றுள்ள எந்தவொரு வாக்கெடுப்பு நிலையத்திற்கும் சென்று வாக்கெடுப்பை அவதானிப்பதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

146. 2014 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வாக்களிப்பதற்கு உரித்துடைய அனைவரும் வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்குச் சீட்டொன்றைக் கோருவதற்கு முன்னர், ஆளடையாள ஆவணமொன்றின் மூலம் தனது ஆளடையாளத்தை உறுதிசெய்வது கட்டாயமாக்கப்பட்டது. இதன் காரணமாக ஆள்மாறாட்ட வாக்களிப்பு முழுமையாக இல்லாது போவதற்கு காரணமாகியதனூடாக வாக்கெடுப்பு நிலைய அலுவல்களை சுமுகமாக பேணிச் செல்ல முடிந்தது. சனாதிபதித் தேர்தல் தொடர்பான வாக்கெடுப்பு நடைபெறும் சந்தர்ப்பத்தில், நிழற்படமொன்றுடன் கூடிய கீழ்வரும் ஆளடையாள ஆவணங்களில் ஒன்றின் மூலம், வாக்குச் சீட்டுக்கள் விநியோகத்ததிற்கு முன்னர், வாக்காளரின் ஆளடையாளத்தை உறுதிசெய்துகொள்வதைத் தொடர்ந்து வாக்குச் சீட்டுக்களை விநியோக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

1. தேசிய அடையாள அட்டை
2. செல்லுபடியான கடவுச்சீட்டு
3. செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்
4. அரசாங்க சேவை ஓய்வூதியர் அடையாள அட்டை
5. முதியோர் அடையாள அட்டை
6. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற பிக்கு/ மதகுரு அடையாள அட்டை
7. தேர்தல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படும் தற்காலிக அடையாள அட்டை

மேலும், 1988 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தில் புதிதாக சேர்க்கப்பட்ட 46ஆ பிரிவிற்கமைய, வாக்கெடுப்பு நிலையங்களில் குழப்பங்கள் ஏற்படின் அவ்வாறான வாக்கெடுப்பு நிலையங்களின் வாக்கெடுப்பை வறிதாக்கி மீண்டும் ஒரு வாக்கெடுப்பை நடாத்துவதற்கு தேர்தல்கள் ஆணையாளருக்கு அதிகாரம் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து வாக்கெடுப்பு நிலையங்களின் பணிகளை இடையூறுகளின்றி பேணிச் செல்வதற்கான சூழலொன்று ஏற்பட்டது.

147. 2015.01.08 ஆம் திகதி மு.ப. 07.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட வாக்கெடுப்பு அன்றைய தினம் பி.ப. 04.00 மணிக்கு நிறைவுசெய்யப்பட்டு வாக்குப் பெட்டிகள் பொறியிடப்பட்டு ஏனைய பாதுகாப்பான பொருட்களாதியவை சகிதம் எடுத்துவரப்பட்டு தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் கையளிப்பதற்கான விசேட நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்ளுமாறு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் தேவைப்படுத்தப்பட்டனர். அரச இலச்சினையுடன் கூடிய பாதுகாப்பு நாடாக்களினால் பொறியிடப்பட்ட வாக்குப் பெட்டிகளில் மீண்டும் பொறியிடுவதற்கு வாக்கெடுப்பு நிலைய முகவர்களுக்கும் இடமளிக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரின் தலைமையில் தயாரிக்கப்படும் விசேட அறிக்கையின் மூலப்பிரதியை வாக்குப் பெட்டியின் மூடி மற்றும் நடுப்பகுதி மறையும் விதத்தில் ஒட்டி பொறியிடுவதற்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. 06 பிரதிகளைக் கொண்ட காபனைஸ் கடதாசியில் தயாரிக்கப்பட்ட அவ்வறிக்கையில் வாக்கெடுப்பு நிலைய முகவர்கள், வாக்கெடுப்பு நிலைய கண்காணிப்பாளர்கள், வாக்கெடுப்பு நிலைய பணியாட்டொகுதியின் ஏனைய அலுவலர்கள், வாக்கெடுப்பு நிலைய சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் ஆகியோர் தத்தம் பெயர், பதவி, தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் ஆகியவற்றைக் குறிப்பிட்டு கையொப்பமிட்டு தயாரிக்க வேண்டியிருந்தது. இவ்வறிக்கையின் இரண்டாம் பிரதியை வாக்குச் சீட்டு கணக்கு இடும் கடித உறையிலிட்டு வைப்பதற்கும், மூன்றாம் பிரதியை சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரின் குறிப்பேட்டில் உட்பக்க அட்டையில் இணைப்பதற்கும் எஞ்சிய மூன்று பிரதிகளை குறித்த ஆவணத்தில் கையெழுத்திட்ட 03 கட்சிகளின் பிரதிநிதிகளுக்குக் கையளிப்பதற்கும் தேவையான ஒழுங்குகள் செய்யப்பட்டன. இச்செயற்பாடு காரணமாக அரசியல் கட்சிகளின் முகவர்களுக்கு தமது கையெழுத்துடன் கூடியதாக ஒட்டப்பட்ட ஆவணத்துடன் கூடிய வாக்குப் பெட்டி பாதுகாப்பாக வாக்கெண்ணல் நிலையங்களுக்கு எடுத்து வரப்பட்டுள்ளதாவென்பதை உறுதிப்படுத்திக்கொள்ள முடிந்தது. வாக்கெடுப்பு நிறைவடைந்த பின்னர் வாக்கெடுப்பு நிலைய சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரால் 05 பிரதிகள் கொண்டதாக காபனைஸ் கடதாசியில் தயாரிக்கப்படுகின்ற வாக்குப் பெட்டியிலுள்ள வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கை உள்ளிட்ட ஏனைய விபரங்களடங்கிய வாக்குச்சீட்டுக் கணக்கின் பிரதியொன்றும் குறித்த முகவர்களுக்கு கையளிக்கப்படும். வாக்கெடுப்பின் நிறைவில் முத்திரை பொறிக்கப்பட்ட வாக்குப்பெட்டி பொலித்தீன் உறையொன்றிலிடப்பட்டுபாதுகாப்புப் பூட்டு ஒன்றைப் பயன்படுத்தி அதன் வேறு பிரித்துக் காட்டும் இலக்கத்தை முகவர்களுக்கு குறித்துக் கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். மேலும் வாக்குப் பெட்டிகள் வாக்கெண்ணல் நிலையங்களுக்கு எடுத்து செல்லப்படுகின்ற சந்தர்ப்பத்தில் விருப்பமுள்ள எந்தவொரு வாக்கெடுப்பு நிலைய முகவருக்கும் வாகனமொன்றில் அந்த வாக்குப் பெட்டிகள் எடுத்து செல்கின்ற வாகனத்திற்குப் பின்னால் வாக்கெண்ணல்

நிலைய வளவு வரை பயணம் செய்வதற்கான அனுமதிப் பத்திரமொன்று விநியோகிக்கப்பட்டது. இவ்வனைத்து நடவடிக்கைகளும் வாக்கெடுப்பு நிலையத்தில் பயன்படுத்தப்பட்ட வாக்குப்பெட்டிகள் பாதுகாப்பாக வாக்கெண்ணல் நிலையங்களுக்கு கையளிக்கப்படுகின்றமைபற்றி தேர்தலில் போட்டியிடுகின்ற தரப்புக்களை திருப்தியடையச் செய்வதற்காக எடுக்கப்பட்ட விசேட நடவடிக்கைகளெனக் குறிப்பிட முடியும்.

148. தெரிவத்தாட்சி அலுவலர்களின் அறிவுறுத்தல்களுக்கமைய சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் மேற்குறிப்பிடப்பட்டவாறு வாக்குப் பெட்டி பொறியிடலையும் அனைத்து வெளிப்படுத்துகைகள் மற்றும் பொறியிடப்பட்ட பக்கெற்றுக்களையும் தயாரித்ததன் பின்னர், வாக்கெடுப்பு நிலையத்திற்கு இணைப்புச்செய்யப்பட்ட வாகனத்தில் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் விதிக்கப்பட்டுள்ள பயணப் பாதையில் வாக்கெண்ணல் நிலையங்களுக்கு அறிக்கையிட்டனர். நாட்டின் அனைத்து வாக்கெடுப்பு நிலையங்களிலிருந்தும் அனைத்து வாக்குப் பெட்டிகள் மற்றும் பொறியிடப்பட்ட பக்கெற்றுக்கள் வாக்கெடுப்புத் தினம் பி.ப 9.30 மணியளவில் தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களுக்குக் கொண்டு வரப்பட்டதாக அறிக்கையிடப்பட்டது. வாக்கெடுப்புத் தினம் பிற்பகலில் வாக்கெண்ணலுக்காக அரசியல் கட்சிகள்/ குழுக்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்த நேரம் கடந்ததைத் தொடர்ந்து வாக்கெண்ணலுக்குத் தயாராக வாக்கெண்ணல் பணியாட்டொகுதியினரும் வாக்கெண்ணல் நிலையங்களுக்குஅறிக்கையிட்டனர்.

IX ஆம் பகுதி

வாக்கெண்ணல்

149. 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 47 ஆம் பிரிவிலிருந்து 59 ஆம் பிரிவு வரை வாக்கெண்ணல் தொடர்பான விடயங்களும் அச்சட்டத்தின் 02 ஆம் அட்டவணையின் 18 தொடக்கம் 28 வரையான ஒழுங்கு விதிகளில் அஞ்சல் வாக்கெண்ணல் தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அச்சட்டத்தின் 47 ஆம் பிரிவிற்கமைய தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுறுத்தல்களில் பிரகாரம், தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலரினால் வாக்கெண்ணலின் பின்னரான அம்முடிவுகள்,தேர்தலுடன் தொடர்புடைய மொத்த முடிவுகளைத் தயாரிப்பதற்காக தேர்தல் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

150. அதற்கமைய மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் வாக்கெண்னும் நிலையங்களை இனங்காணல், வாக்கெண்ணல் பணியாட்டொகுதியினரை நியமனம் செய்தல் அலுவல்கள் போன்றே வாக்கெண்ணலின் போது சமுகமளிக்க முடியுமான முகவர்கள் தொடர்பில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களை அறிவுறுத்த வேண்டியிருந்தது. ஒரு வாக்கெடுப்புப் பிரதேசத்தில் அமையப் பெற்றுள்ள பல வாக்கெடுப்பு நிலையங்களின் வாக்குச்சீட்டுக்களை ஒரு நிலையத்தில் எண்ணக்கூடியவாறு அந்நிலையம் ஒழுங்கமைக்கப்படும். சராசரியாக ஒரு வாக்கெண்ணல் நிலையத்திற்காக பதிவு செய்யப்பட்ட சுமார் 12,500 முதல் 15,000 வரையிலான வாக்கெண்ணல் நிலையங்கள் திட்டமிடப்பட்டுள்ளன. அஞ்சல் வாக்காளர்களுக்கு 1,500-2,500 வரையிலான அஞ்சல் வாக்குச்சீட்டுப் பக்கெற்றுகளுக்கு ஒரு வாக்கெண்ணல் மண்டபம் என்ற விதத்தில் அமைப்பதற்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அதற்கமைய அனைத்து தேர்தல்கள் மாவட்டங்களினது வாக்கெடுப்பு மாவட்டங்களில் அமைந்துள்ள வாக்கெடுப்பு நிலையங்களில் பயன்படுத்தப்பட்ட வாக்குப் பெட்டிகள் மற்றும் ஏனைய பொறியிடப்பட்ட உறைகள் ஆகியவற்றை முறையாகக் கையேற்ற பின்னர், குறித்த வாக்குச் சீட்டுக்களையும் அஞ்சல் வாக்குச் சீட்டுக்களையும் வேட்பாளர்களின் முகவர்களின் எதிரில் எண்ணி ஒவ்வொரு வேட்பாளரும் தேர்தல் மாவட்டத்தில் பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையை தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிக்கையிடுவது மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களின் பிரதான பணியாகும்.

151. வாக்கெண்ணும் நிலையங்களின் அமைவிடம் மற்றும் அவற்றில் காணப்படும் வசதிகளுக்கமைய தேர்தல்கள் ஆணையாளரினால் அறிவிக்கப்பட்ட பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கையைக் கவனத்தில் கொண்டு வாக்கெண்ணல் நிலையங்களை அமைப்பதற்கு முடியாமற் போன சந்தர்ப்பங்கள் பற்றியும் அறியக் கிடைத்தது. ஒரு வாக்கெண்ணல் நிலையத்திற்காக 10-15 இடைப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்களை ஒன்றிணைக்கவும், 30–40 வரையான பணியாட்டொகுதியினர் மற்றும் 95 பேர் வரையிலான வேட்பாளர்களின் முகவர்கள் ஆகியோருக்கான வசதிகளை ஒரு நிலையத்தினுள் செய்ய வேண்டியேற்பட்டமையைக் கருத்தில் கொண்டும் வாக்கெண்ணல் நிலையங்களை அமைப்பதற்கு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு நேரிட்டது. அஞ்சல் வாக்கெண்ணல் மண்டபங்களுக்காக தலைமை வாக்கெண்ணல் அலுவலர் உள்ளிட்ட 15 அலுவலர்கள் வரை ஈடுபடுத்தப்பட அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அதற்கமைய அனைத்து மாவட்டங்களதும் வாக்கெண்ணல் மண்டபங்களின் மொத்த எண்ணிக்கை 1,419 ஆகவிருந்ததோடு, அவற்றில் 1,115 சாதாரண வாக்குச்சீட்டு எண்ணல் மண்டபங்களும் 304 அஞ்சல் வாக்குச்சீட்டு எண்ணல் மண்டபங்களும் உள்ளடங்கியிருந்தன. ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்ட வாக்கெண்ணல் மண்டபங்கள் தொடர்பான விபரம் **IX ஆம் இலக்கக் குறிப்பில்** காட்டப்பட்டுள்ளது. சில சந்தர்ப்பங்களில் தேர்தல் மாவட்டமொன்றில் அனைத்து வாக்கெண்ணல் மண்டபங்களையும் ஒரே வளவிற்குள் அமைக்க முடியாமையின் காரணமாக அவற்றை பல வளவுகளில் அமைக்க வேண்டியேற்பட்டது. அதனால், சில மாவட்டங்களில் பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தும் நிலையத்தையும் தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகத்திற்கு வெளியே வாக்கெண்ணல் மண்டபங்கள் அமைக்கப்பட்ட வளவுகளிலேயே அமைக்க வேண்டியேற்பட்டது.

152. சனாதிபதித் தேர்தல் சட்டத்தின் விதிகளுக்கமைய ஒவ்வொரு வேட்பாளர் சார்பாகவும் அஞ்சல் வாக்கெண்ணல் நிலையங்களுக்கு இரண்டு முகவர்கள் வீதமும் சாதாரண வாக்குச்சீட்டு எண்ணல் நிலையங்களுக்கு ஐந்து முகவர்கள் வீதமும் நியமனம் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படல் வேண்டும். அதற்கமைய தேர்தலுக்கு முன்னர் தமது முகவர்களை நியமனம் செய்யத்தக்கவாறு தெரிவத்தாட்சி அலுவலர்களினால் தமது மாவட்டங்களுக்குரிய வாக்கெண்ணல் மண்டபங்களின் அமைவு அவற்றுக்குஇணைப்புச் செய்யப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையங்கள் (பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர் எண்ணிக்கை சகிதம்) அவற்றுக்கு நியமிக்கப்படக்கூடிய முகவர்களின் எண்ணிக்கை என்பன அனைத்து வேட்பாளர்களுக்கும் தேர்தல் முகவர்களுக்கும் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டன. அதற்கமைய வாக்கெண்ணல் முகவர்களின் நியமனக் கடிதங்களை தெரிவத்தாட்சி

அலுவலரிடம் கையளிக்கவேண்டிய திகதி மற்றும் முறையான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக தேர்தல் தினத்திற்கு முன்னர் அறிக்கையிட வேண்டிய திகதி என்பன வாக்கெண்ணல் தொடர்பாக அறிவிக்கும் கடிதத்தில் குறிப்பிட்டு அனுப்பிவைக்கப்பட்டன. அவ்வாறு முறையான அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட முகவர்களுக்கு வாக்கெடுப்புத் தினத்தன்று பிற்பகலில் வாக்கெண்ணல் நிலையங்களுக்கு நேரடியாக அறிக்கையிடுவதற்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. வாக்கெண்ணலின் போது சிற்சில முறைகேடுகள் இடம்பெறுகின்றன என்ற கருதுகோளின் அடிப்படையில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வாக்கெண்ணல் மண்டபமொன்றுக்கு நியமிக்கப்படக்கூடிய முகவர்களின் எண்ணிக்கையை விட மேலும் முகவர்களை நியமனம் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டுமென அரசியல் கட்சிச் செயலாளர்களின் கூட்டத்திலும் கட்சிகளின் நிரந்தர முகவர்களின் கூட்டத்திலும் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. அவ்வாறான கோரிக்கைகளை ஆராய்ந்துப் பார்த்து வேட்பாளரொருவர் சார்பாக மற்றுமொரு முகவருக்கு வாக்கெண்ணல் மண்டபங்கள் அமைந்துள்ள வளவிற்குள் பிரவேசித்து வளவின் அனைத்து வாக்கெண்ணல் நிலையங்களையும் கண்காணிப்பதற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. கடந்த தேர்தல்களைப் போன்று இத்தேர்தலின் போதும் வாக்கெண்ணல் நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் எடுத்துவரப்பட்டதன் பின்னர், அவை மாற்றப்படுகின்றதென்ற கற்பனைக் கருத்தை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கையொன்றான ஒவ்வொரு வேட்பாளரையும் பிரதிநிதித்துவப்படுத்தி ஒரு முகவர் வீதம் வாக்கெடுப்புத் தினம் பி.ப 3.00 மணிக்கு வாக்கெண்ணல் மண்டபத்திற்கு வருகைதந்து அந்நடவடிக்கைகளை அவதானிப்பதற்காக அங்கு தரித்திருப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. விரும்பிய எந்தவொரு வாக்கெண்ணும் முகவருக்கும் வாக்கெடுப்பு நிலையங்களிலிருந்து வாக்குப் பெட்டிகள் எடுத்து வரப்படுகின்ற சந்தர்ப்பத்தில் வளவின் குறிப்பிட்ட இடமொன்றிலிருந்து வாக்கெண்ணல் நிலையம் வரை தமது முகவர்களை நிறுத்தி அவ்வலுவல்களைக் கண்காணித்தவண்ணம் முகவர்களுக்கு தரித்திருப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. வாக்கெண்ணல் முகவர்களின் பணிப்பொறுப்புக்கள் தொடர்பில் அவர்களை அறிவுறுத்துவதற்காக தேர்தல்கள் திணைக்களத்தினால் அறிவுறுத்தல்களை வெளியிடுவதற்கும் நடவடிக்கையெடுக்கப்பட்டது.

153. தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர், சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்கள் எடுத்து வருகின்ற வாக்குப் பெட்டிகள் உள்ளிட்ட ஏனைய பாதுகாப்பான பொருட்களை வாக்கெண்ணல் நிலையங்களுக்கு கையேற்பதற்கான முறையான நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு கையேற்கப்படும் பொருட்களில், வாக்கெண்ணலுக்குத் தேவையான பொருட்களை ஏற்கனவே வாக்கெண்ணல் நிலையங்களுக்கு வருகைதந்திருக்கின்ற தலைமை வாக்கெண்ணல் அலுவலருக்குக் கையளிப்பதற்கும் ஏனையவற்றை உறைகளிலிட்டு நிலையத்தினுள் பாதுகாப்பாக வைத்து வாக்கெண்ணல் நிறைவடைந்த பின்னர், வாக்கெண்ணப்பட்ட வாக்குச் சீட்டுக்களுடன் பாதுகாப்பறையில் வைப்பதற்காக தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு கையளிக்கப்பட வேண்டுமெனவும், பொருட்களைக் கையேற்பதற்குப் பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. வாக்குப் பெட்டிகள் மற்றும் ஏனைய பொருட்களின் கையேற்பு மண்டபங்களுக்கும் வாக்கெண்ணல் கட்டிடத் தொகுதிகளுக்கும் மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களுக்குமான பாதுகாப்பு பிரதேச சிரேட்ட பொலிஸ் அலுவலர்களின் மேற்பார்வையின் கீழ் வழங்கப்பட்டன.

154. வாக்கெண்ணலுக்குத் தேவையான உதவிப் பணியாட்டொகுதியினர் பெரும்பாலும் மாவட்டத்தினுள்ளிருந்தே பெற்றுக்கொள்ளப்பட்டதோடு, பல மாவட்டங்களுக்கு தலைமை வாக்கெண்ணல் அலுவலர்களும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களும் கொழும்பிலிருந்து அனுப்பிவைக்கப்பட்டனர். கொழும்பிலிருந்து வெளி மாவட்டங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட தலைமை வாக்கெண்ணல் அலுவலர்கள் உள்ளிட்ட ஏனைய உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் குறித்த கடமைகள் தொடர்பாக கொழும்பில் பயிற்சியளிக்கப்பட்டனர். வாக்கெண்ணலில் ஈடுபடுத்தப்பட்ட ஏனைய பணியாட்டொகுதியினர் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு நடாத்தப்பட்ட பயிற்சி வகுப்புக்களின் போது வாக்கெண்ணல் தொடர்பாகவும் அறிவுறுத்தப்பட்டதோடு, ஏனைய பணியாட்டொகுதியினர் வாக்கெண்ணல் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் தலைமை வாக்கெண்ணல் அலுவலரினால் அறிவுறுத்தப்பட வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

155. ஏனைய தேர்தல்களைப் போன்றே சனாதிபதித் தேர்தலின் போதும் தேர்தல் மாவட்டமொன்றுக்குரிய வாக்கெண்ணலுக்காகநீண்ட நேரம் எடுக்காத போதிலும் அப்பணியில் பெரும் எண்ணிக்கையான பணியாட்டொகுதியினர் ஈடுபடுத்தப்படுவதால், அவர்களுக்கு வாக்கெடுப்பு தினத்தன்று பிற்பகலிலிருந்து மறுநாள் வரை உணவு, பொது வசதிகள் என்பவற்றை வழங்கும் பொறுப்பு தெரிவத்தாட்சி அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. கடந்த தேர்தல்களைப் போன்றே வாக்கெண்ணல் பணியாட்டொகுதியினருக்கு அன்றைய இரவுக்கான பிரதான உணவு தெரிவத்தாட்சி அலுவலர்களினால் வழங்கப்படவில்லை அதனை வீட்டிலிருந்து எடுத்து வருவதற்கோ அல்லது அவ்வுணவை தேவையானோர்

நியாயமான விலையில் பெற்றுக் கொள்வதற்காக தற்காலிக வியாபார நிலையங்களை வாக்கெண்ணல் வளவுகளில் அமைப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. அலுவலர்கள் இரவு உணவுக்காக செலவிட்ட தொகையை அவர்களுக்கு வழங்குவதற்காக மேலதிக கொடுப்பனவொன்றைச் செலுத்தத் தீர்மானிக்கப்பட்டது.

156. வாக்கெண்ணலை ஆரம்பிப்பதற்காக சில அடிப்படை நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்படல் வேண்டும்.

- வாக்கெண்ணல் நிலையத்திற்குரிய அனைத்து வாக்கெடுப்பு நிலையங்களிலிருந்தும் வாக்குப் பெட்டிகள் கையேற்கப்பட்டிருத்தல்.
- வேட்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட வாக்கெண்ணல் ஆரம்பிக்கப்படவுள்ள நேரம் தாண்டியிருத்தல்.
- வாக்கெண்ணலை ஆரம்பிப்பதற்கான தெரிவத்தாட்சி அலுவலரின் உத்தரவு கிடைக்கப் பெற்றிருத்தல்.

இருப்பினும், வாக்கெண்ணலை ஆரம்பிப்பதற்கு முன்னர் வாக்கெண்ணல் நிலையங்களுக்கு வேட்பாளர்களின் முகவர்கள் வருகைதந்திராத பட்சத்தில், வாக்கெண்ணல் மண்டபத்தைச் சூழ அவர்கள் தரித்திருக்கின்றார்களாவென ஆராய்ந்து பார்க்குமாறும் குறித்த வாக்கெண்ணல் மண்டபத்தின் வாக்கெண்ணல் ஆரம்பிக்கப்படவுள்ளதால், முகவர்கள் வருகைதந்திருப்பின் உடனடியாக மண்டபத்திற்கு அறிக்கையிடுமாறும் ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. வாக்கெண்ணல் நிலையத்திற்குரிய அனைத்து வாக்குப் பெட்டிகளும் கிடைக்கப்பெற்றிருப்பின் வாக்கெடுப்பு நிலையத்திற்குப் பொறுப்பாகச் சென்ற சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் கையளிக்கப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையத்தின் குழப்பங்கள் தொடர்பான அறிக்கையை (Z அறிக்கை) திறந்து அத்தகவலை வாக்கெடுப்பு நிலைய குழப்பங்கள் தொடர்பான தலைமை வாக்கெண்ணல் அலுவலரின் (ZCCO)அறிக்கையில் குறிப்பிட்டு, தெரிவத்தாட்சி அலுவலருக்கு அனுப்பி, வாக்கெண்ணலை ஆரம்பிப்பதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் Z அறிக்கையில் நீதியாகவும் சுதந்திரமாகவும் வாக்கெடுப்பை நடாத்துவதற்குத் தேவையான சூழ்நிலையொன்று வாக்கெடுப்பு நிலையத்தினுள் காணப்படவில்லையென குறிப்பிடப்பட்டிருப்பின், அந்நிலையத்திற்காக வாக்கெடுப்பு நிலையத்தில் தரித்திருந்த பொலிஸ் அலுவலர்கள், வாக்கெடுப்பு நிலைய முகவர்கள், வாக்கெடுப்பு நிலைய கண்காணிப்பு அமைப்புக்களின்முகவர்கள் ஆகியோரின் அறிக்கைகளையும் வாக்கெடுப்பு நிலையத்திற்குரிய வலயப் பொறுப்பு உதவித் தெரிவத்தாட்சி அலுவலரின் அறிக்கையையும் பரீட்சித்துப் பார்த்து வாக்கெடுப்பு நிலையத்திற்குப் பொறுப்பான சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை மேலும் உறுதிசெய்துகொள்ள நடவடிக்கையெடுக்கப்பட்டது. ஏதெனுமொரு விதத்திலான முறைகேடொன்று இடம்பெற்றுள்ளதென குறித்த அறிக்கைகளை ஆராயும்போது தெரியவரின், அது பற்றி தெரிவத்தாட்சி அலுவலரினால் தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்கப்படல் வேண்டும். குறித்த அறிக்கைகள் மற்றும் தேர்தல்கள் ஆணையாளருக்குக் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் இருப்பின் அவற்றையும் வாக்கெடுப்பு நிலைய சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர், பொலீஸ் அலுவலர்கள், வலயப் பொறுப்பு உதவித்தெரிவத்தாட்சி அலுவலர் ஆகியோரின் வெளிப்படுத்துகைகளையும் பெற்றுஅவ்வாக்கெடுப்பு நிலையத்தின் வாக்கெண்ணலை மேற்கொள்வதா இல்லையாவென தேர்தல்கள் ஆணையாளர் தீர்மானிப்பார். வாக்குச் சீட்டுக்களை அபகரித்தல், பலாத்காரமாக அடையாளமிட்டு பெட்டியில் திணித்தல், முகவர்கள் மற்றும் பணியாட்டொகுதியினருக்கெதிரானஅழுத்தங்களைப் பிரயோகித்தல் போன்ற இடையூறுகள் இடம்பெற்றுள்ளதென தேர்தல்கள் ஆணையாளருக்குத் தெரியவரின் அவ்வாக்கெடுப்பு நிலையத்தின் வாக்கெடுப்பை வறிதாக்கி மீண்டும் தேர்தலொன்றை நடாத்துவதற்கான தீர்மானம் தேர்தல்கள் ஆணையாளரால் மேற்கொள்ளப்படும். இச்சனாதிபதித் தேர்தலில் நாட்டின் எந்தவொரு வாக்கெடுப்பு நிலையத்திலும் அவ்வாறான நிலைமை அறிக்கையிடப்படவில்லை.

157. மூன்று கட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படும் வாக்கெண்ணல் சுருக்கமாக கீழே காட்டப்பட்டுள்ளது.

- **முதலாவது கட்டத்தின் கீழ்** ஒவ்வொரு வாக்குப் பெட்டியிலுமுள்ள வாக்குச்சீட்டுக்களின் எண்ணிக்கை கணக்கிடப்பட்டு பிழையற்ற தன்மை உறுதிசெய்யப்பட்டதன் பின்னர், வாக்குச் சீட்டுக்களை பெரிய பெட்டியில் இடல்.

- **இரண்டாம் கட்டம்** இரண்டு உப கட்டங்களைக் கொண்டதோடு, முதலாம் உப கட்டத்தின் கீழ் பெரிய பெட்டியிலுள்ள வாக்குச்சீட்டுக்களை வாக்கெண்ணல் மேசைக்கு கொண்டு சென்று அனைத்து பணியாட்டொகுதியினரையும் ஈடுபடுத்தி வாக்குச்சீட்டுக்கள் அடையாளமிடப்பட்டுள்ள விதத்திற்கமைய ஒவ்வொரு வேட்பாளருக்கும் அடையாளமிடப்பட்டுள்ள வாக்குச்சீட்டுக்களை அந்தந்த வேட்பாளருக்குரிய சிறியபெட்டிகளில் இடுவர். சந்தேகத்திற்குரிய வாக்குச்சீட்டுக்கள் தலைமை வாக்கெண்ணல் அலுவலருக்கு ஆற்றுப்படுத்தப்படும்.

- இரண்டாம் கட்டத்தின் இரண்டாம் உப கட்டத்தின் கீழ் வாக்கெண்ணல் மேசையின் அலுவலர்கள் 5 பகுதிகளாக அதாவது, தெரிதல் குழு, கணக்கிடல் குழு, பரீட்சித்தல் குழு, மீளப் பரீட்சித்தல் குழு, எழுமாற்றுப் பரீட்சித்தல் குழு என ஐந்து குழுக்களாகப் பிரிக்கப்பட்டு குறித்த

நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் அலுவலர்களின் சேவை முதுநிலையின் அடிப்படையில் ஆசனங்களில் அமரச் செய்து கணக்கிடல் மற்றும் பரீட்சித்தல் மேற்கொள்ளப்படும். இங்கு ஒவ்வொரு வேட்பாளருக்காகவும் ஏற்கனவே முதலாம் உப கட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்டுள்ள வாக்குச்சீட்டுக்கள் அடங்கிய பெட்டியை எடுத்துவந்து மேற்கூறப்பட்டவாறு ஐந்து வகுதிகளின் கீழ் மீண்டும் கணக்கிடல் மற்றும் பரீட்சித்தல் மேற்கொள்ளப்படும்.

- வாக்கெண்ணலின் இரண்டாம் கட்டத்தின் இறுதியில் வாக்கெண்ணல் மண்டபத்திலிருந்து ஒவ்வொரு வேட்பாளரும் பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையைக் காட்டுகின்ற பெறுபேறு வாக்கெண்ணல் அலுவலரினால் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். இப்பெறுபேற்று ஆவணத்தின் ஒரு பிரதி ஒவ்வொரு கட்சியையும் பிரதிநிதித்துவப்படுத்தி பெறுபேற்று ஆவணத்தில் கையெழுத்திட்ட முகவர்களுக்கு கையளிக்கப்படும். இதன் காரணமாக தமது முகவர்கள் மூலம் வேட்பாளர்களுக்கும் பெறுபேற்றைத் தயாரித்துக் கொள்வதற்கு சந்தர்ப்பம் கிட்டியதோடு,தெரிவத்தாட்சி அலுவலரின் பெறுபேற்றுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு முடிந்தமை முகவர்களின் மற்றும் வேட்பாளர்களின் நம்பிக்கையை உறுதிசெய்து கொள்வதற்குக் காரணமாக அமைந்தது. ஒவ்வொரு வாக்கெண்ணல் வளவினுள்ளேயும் வாக்கெண்ணல் மண்டபங்களிலிருந்து தமது முகவர்களூடாக கிடைக்கப்பெறுகின்ற பெறுபேற்று ஆவணத்திற்கமைய பெறுபேற்றைத் தயாரித்துக் கொள்வதற்காக ஒவ்வொரு வேட்பாளருக்கும் மடிமேற்கணினி ஒன்றுடன் இரண்டு முகவர்களைநிறுத்திவைப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. தெரிவத்தாட்சி அலுவலர்களினால் வாக்கெண்ணல் வளவுகளில் குறித்த இடங்கள் அதற்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

- வாக்கெண்ணலின் **மூன்றாம் கட்டத்தின்** கீழ் தேவைப்பாட்டிற்கமைய விருப்புக்கள் எண்ணப்படும். நாட்டில் அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கையில் அரைவாசிக்கு மேற்பட்ட எண்ணிக்கையொன்றை எந்தவொரு வேட்பாளரும் பெற்றிராதபோது, அதிகூடிய மற்றும் அதற்கடுத்த அதிக வாக்குகளைப் பெற்றுக்கொண்ட இரண்டு வேட்பாளர்கள் தவிர்ந்த ஏனையோர் அனைவரும் போட்டியிலிருந்து நீக்கப்பட்டு,அவ்வாறுபோட்டியிலிருந்து நீக்கப்பட்டவேட்பாளர்கள் வாக்குச்சீட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ள இரண்டாம் மற்றும் மூன்றாம் விருப்புகள் போட்டியில் தொடர்ந்தும் இருக்கின்ற வேட்பாளர்கள் இருவரில் ஒருவருக்கு சாதகமாக அடையாளமிடப்பட்டுள்ளதாவென இங்கு கணக்கிடப்படும். வேறு தேர்தல்களின் விருப்பெண்ணுவதைப் போல சனாதிபதித் தேர்தலுக்குரிய விருப்பெண்ணல் சிக்கலற்றதென்பதோடு, அதனை வேறு படிவங்களில் அடையாளமிடாமல் வாக்குச்சீட்டுக்களுக்கேற்பவே மேற்கொள்ளப்படும். இருப்பினும், இதுவரை நடாத்தப்பட்ட எந்தவொரு சனாதிபதித் தேர்தலின்போதும் சனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்காக விருப்பெண்ணவேண்டிய தேவைப்பாடு ஏற்படவில்லை. இருப்பினும், தேர்தலொன்றில் அளிக்கப்பட்ட செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கையில் அரைவாசிக்கு மேல் ஒரு வேட்பாளர் பெற்றுள்ளரா இல்லையாவென்பது தீர்மானிக்கப்படுவது, நாட்டின் அனைத்து வாக்கெண்ணல் நிலையங்களிலிருந்தும் பெறுபேறுகள் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்குக் கிடைக்கப்பெற்று அவை தேர்தல்கள் ஆணையாளருக்குக் கிடைக்கப்பெற்ற பின்னர் மாத்திரமமேயாகும். இதன் காரணமாக வாக்கெண்ணலுடன் தொடர்புடைய ஆரம்பகட்ட அலுவல்களை முன்கூட்டியே நிறைவுசெய்த வாக்கெண்ணல் நிலையங்கள் ஆயினும் தலைமை அலுவலகத்தின் அறிவுறுத்தலைப் பெற்று அலுவலர்களை விடுவித்தலை தெரிவத்தாட்சி அலுவலர்களால் மேற்கொள்ளப்படும்.

X ஆம் பகுதி

பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தலும் வெளியிடுதலும்

158. 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 55 ஆம் பிரிவின் கீழ் அஞ்சல் வாக்கெண்ணல் நிலையங்கள் உள்ளடங்களாக ஒவ்வொரு வாக்கெண்ணல் நிலையத்திலிருந்து வாக்கெண்ணல் அலுவலர்களினால் வழங்கப்பட்ட கூற்றுக்களூடாக அத்தேர்தல் மாவட்டத்திலிருந்து ஒவ்வொரு வேட்பாளர் சார்பாகவும் அளிக்கப்பட்டுள்ள வாக்குகளின் எண்ணிக்கையை தெரிவத்தாட்சி அலுவலர் கணிப்பிட்டு அது தொடர்பான கூற்றொன்றைத் தயாரித்து உடனடியாக தேர்தல்கள் ஆணையாளருக்கு அனுப்பிவைக்க வேண்டியிருந்தது. சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய சனாதிபதித் தேர்தலின் போது ஒரு தேர்தல் முடிவு மாத்திரமே வெளியிடப்படும். சட்டத்தின் 64 ஆம் பிரிவிற்கமைய பெறுபேறுகள் தேர்தல்கள் ஆணையாளரினால் வெளியிடப்படல் வேண்டும். சட்டத்தில் அவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும், இறுதிப் பெறுபேறு மாவட்டப் பெறுபேற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றமையால், மாவட்ட மட்டத்திலும் பெறுபேறுகள் வெளியிடப்படும். அதற்கமைய மாவட்ட மட்டம், தேசிய மட்டம் ஆகிய இரண்டிலும் அனைத்து வாக்கெடுப்புப் பிரிவுகளுக்குமுரிய ஒவ்வொரு வேட்பாளரும் பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையைக் காட்டுகின்ற முடிவும் அனைத்து தேர்தல் மாவட்டங்களுக்கும் ஏற்புடையவாறான அஞ்சல் வாக்குகளின் முடிவும் அனைத்து தேர்தல் மாவட்டங்களுக்குமுரிய இறுதி முடிவும் வெளியிடப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

159. மாவட்ட மட்டத்தில் முடிவுகளை அட்டவணைப்படுத்தல் மற்றும் வெளியிடுதலுக்கான இடத்தைத் தேர்ந்தெடுக்கும்போது வாக்கெண்ணல் மண்டபங்கள் அனைத்திற்கும் இலகுவாகச் செல்லக்கூடிய இடமொன்றாகவிருத்தல், பிரயாண வசதிகள், மின்ஒளி வழங்கல், பாதுகாப்பு ஏற்பாடுகள், தொலைபேசி, தொலைநகல் வசதிகள் மற்றும் தெரிவத்தாட்சி அலுவலர்கள் அனைத்து அலுவல்களையும் தொடர்ந்து மேற்பார்வை செய்யக்கூடிய விதத்திலான இடமொன்றைத் தேர்ந்தெடுப்பது தொடர்பாக தெரிவத்தாட்சி அலுவலர்கள் தமது கவனத்தைச் செலுத்தினர். வாக்கெண்ணலுக்காக மாவட்ட செயலகத்திலிருந்து தூர இடமொன்றைத் தேர்ந்தெடுக்க நேரிட்ட சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் இதற்காக மாவட்டச் செயலகத்தின் கூட்ட மண்டபம் பயன்படுத்தப்பட்டது. தேசிய மட்ட இறுதி முடிவுகளை அட்டவணைப்படுத்தல் மற்றும் வெளியிடல் நிலையமாக கடந்த சனாதிபதித் தேர்தல்களைப் போன்றே இம்முறையும் தேர்தல்கள் செயலகமே தேர்ந்தெடுக்கப்பட்டது.

160. தேர்தல் மாவட்ட மட்டத்திலான பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக சட்டத்தில் குறிப்பிடப்படவில்லையென்பதால்,பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தல் மற்றும் வெளியிடுதல் தொடர்பில் தெரிவத்தாட்சி அலுவலர்களால் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு அறிவிக்கவேண்டிய தேவைப்பாடொன்று இல்லாத போதிலும்,இதில் வேட்பாளர்களின் முகவர்களுக்கு கலந்துகொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்காதிருப்பது தவறான செய்திகள் பரவுவதற்கும் மற்றும் போலியான ஊகங்களுக்கும் காரணமாக அமையலாமென்பதால் பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தல் மற்றும் வெளியிடுதல் நிலையத்துக்கு மாவட்ட அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களுக்கும் அவரினால் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றுமொருவருக்கும் வருகைதந்திருக்க முடியுமென அறிவிக்குமாறு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. முன்னர் குறிப்பிடப்பட்டவாறு சட்டத்தின் 64 ஆம் பிரிவிற்கமைய பெறுபேறுகளை வெளியிடும் பொறுப்பு தேர்தல்கள் ஆணையாளருக்கு உரித்தாக்கப்பட்டுள்ளமையால், இறுதிப் பெறுபேறு வெளியிடப்படும் தினம், நேரம் மற்றும் அவ்விடத்திற்கு போட்டியிடும் வேட்பாளர்களுக்கும் தேர்தல் முகவர்களுக்கும் மற்றும் ஒவ்வொரு வேட்பாளரினாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றுமொருவருக்கும் வருகைதர முடியுமென அறிவித்து அறிவித்தலொன்று போட்டியிடுகின்ற அனைத்து வேட்பாளர்களுக்கும் தேர்தல் முகவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது. இது தவிர கட்சிச் செயலாளர்களுடனும் கட்சிகளின் நிரந்தர முகவர்களுடனும் நடாத்தப்பட்ட கூட்டங்களின்போது எட்டப்பட்ட இணக்கப்பாட்டிற்கமைய இறுதிப் பெறுபேறுகள் வெளியிடப்படும் நிலையம் அமையப்பெற்றுள்ள தேர்தல்கள் செயலகத்திற்கு போட்டியிடுகின்ற கட்சிகளின் செயலாளர்களுக்கும் மற்றும் வேட்பாளர்களால் முன்வைக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் நிரந்தர முகவர்களிலிருந்து ஒருவருக்கும் மற்றும் வாக்கெடுப்பு நிலைய கண்காணிப்புக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட கண்காணிப்பு அமைப்புக்களின் ஒருவருக்கும் வருகைதந்திருக்க அனுமதியளிக்கப்பட்டது.

161.

(அ) இறுதிப் பெறுபேறு தேர்தல்கள் செயலகத்தில் தயாரிக்கப்படுகின்றமையாலும் கடந்த சனாதிபதித் தேர்தலுக்குரியதாக பரப்பப்பட்டிருந்த மூடக்கருத்துக்களைக் கவனத்தில் கொண்டு தேர்தல்கள் செயலகத்தில் பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தும் பணிகளை முகவர்களுக்கு மிக வசதியாக அவதானிக்கத்தக்கவாறு செயல்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. மாவட்டமட்டத்தில் அந்தந்த

வாக்கெண்ணல் மண்டபங்களிலிருந்து கிடைக்கப்பெறும் பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தும் பணி முதல் தேர்தல் செயலகம் பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தும் செயற்பாடு சம்பந்தமாக எதிர்க்கட்சி முகவர்களிடத்தில் நிலவிய சந்தேகங்கள் மற்றும் தவறான எண்ணங்களை நீக்குவதற்காக ஊடகவியலாளர்கள், அரசியல் கட்சி முகவர்கள் மற்றும் முன்னணி அரசியல்வாதிகளை அறிவுறுத்தும் நோக்கிலான கலந்துரையாடலொன்றை தேர்தல் ஆணையாளர் நடாத்தவேண்டியேற்பட்டதுடன் அதனுடாக வாக்கெண்ணல் அலுவல் முதல் பெறுபேறுகளை வெளியிடுதல் வரையிலான நடவடிக்கைகளை உள்நோக்கத்துடன் எந்தவித மாற்றத்துடனும் மேற்கொள்ள முடியாதென்பது மட்டுமன்றி தவறு ஏற்படுவதற்கும் வாய்ப்பில்லையென்பதனை உணர்த்துவதற்கு முடியுமாகியது.

(ஆ) பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தும் அலுவலுக்கு தொழில்நுட்ப ரீதியிலான ஒத்துழைப்பைவழங்குகின்ற கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணினிப் பிரிவு மற்றும் ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் பிரதிநிதிகளுடன் பல பூர்வாங்க கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்ட பின்னர் அதனை மேற்கொள்ளவேண்டிய முறை தொடர்பாக இறுதித் தீர்மானம்எடுக்கப்பட்டது. குறித்த தகவல் முறைமையின் பாதுகாப்பு,துல்லியத் தன்மை, இரகசியத் தன்மை மற்றும் நம்பகத்தன்மையை கருத்திற்கொண்டு தேர்தல்கள் திணைக்களம் இப்பணிகளை நிறைவேற்றுவதற்காக இவ்விரு நிறுவனங்களுடன் இணைந்து தேர்தல்கள் திணைக்களம் முன்பிருந்தே செயலாற்றி வருகின்றது.

162. தேர்தல்கள் செயலகத்தில்இறுதிப் பெறுபேறுகளைத் தயாரிக்கும் போது தேர்தல்கள் செயலகத்தில் அட்டவணைப்படுத்தி, தயாரிக்கப்படுகின்ற மாவட்ட இறுதிப் பெறுபேற்றை மாவட்டத்தில் தயாரிக்கப்பட்ட பெறுபேற்றுடன் ஒப்பிட்டுப் பார்த்து பிழையற்ற தன்மையை உறுதிசெய்துகொண்டு மாவட்டப் பெறுபேறு அங்கீகரிக்கப்படுகின்றது. அதற்கமைய மாவட்டங்களின் வாக்கெண்ணல் மண்டப மட்டத்தில் ஒவ்வொரு வேட்பாளரும் பெற்றுக்கொண்ட பெறுபேறுகளைக் காட்டுகின்ற ஆவணத்தை தொலைநகல் மூலம் பெற்றுக்கொண்டு அதனை தொலைபேசியூடாக மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு மேலதிகமாக, அப்பெறுபேறுகளை வருடல் (Scan) செய்து பெற்றுக்கொள்ளும் வேலைத்திட்டமொன்றும் புதிதாக இம்முறை நடைமுறைப்படுத்தப்பட்டது. அதற்கமைய மாவட்டங்களிலிருந்து தொலைநகல் மூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு வாக்கெண்ணல் மண்டப மட்டத்திற்கான பெறுபேற்று அட்டவணைகளின் இரண்டு நிழற்பிரதிகளைப் பெற்றுக்கொண்டு அதில் ஒரு பிரதியை அலுவலர்களால் அட்டவணைப்படுத்தப்பட்டு பெறுபேறுகள் தயாரிக்கப்படும் பிரிவுக்கு மற்றைய பிரதியை தேர்தல்கள் செயலகத்தில் தாபிக்கப்பட்டிருந்த கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணினிச் சேவைப் பிரிவுக்கு கணினிச் செய்நிரலின் படி பெறுபேறுகளைத் தயாரிப்பதற்கு அனுப்பிவைக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக, மாவட்டங்களிலிருந்து வருடல் (Scan) செய்யப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேற்றை தேர்தல்கள் செயலகத்தின் கணினிப் பிரிவுக்குப் பெற்றுக்கொண்டு அப்பிரிவிலும் கணினியூடாக பெறுபேறுகளை அட்டவணைப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. இவ்வாறே அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களிலும் பெறுபேறுகளை அட்டவணைப்படுத்தும் நிலையங்களை அமைக்குமாறும் அனுபவம்வாய்ந்த சிரேட்ட அலுவலர்களை அப்பணியில் ஈடுபடுத்துமாறும் தெரிவத்தாட்சி அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

163. மாவட்ட மட்டத்தில் கிடைக்கப் பெறுகின்ற பெறுபேறுகளும் தேர்தல்கள் செயலகத்தில் மேற்குறித்த மூன்று பிரிவுகளிலிருந்தும் கிடைக்கப்பெற்ற பெறுபேறுகளும் அப்பிரிவுக்குப் பொறுப்பான பதவிநிலை அலுவலர்களினால் தேர்தல்கள் செயலகத்தில் தாபிக்கப்பட்ட மேலதிக தேர்தல்கள் ஆணையாளர்கள் மற்றும் அனுபவமுள்ள வேறு சிரேட்ட பதவிநிலை அலுவலர்களை உள்ளடக்கிய பெறுபேறுகளை மீள் பரிசீலனைசெய்யும் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. பிழையற்ற பெறுபேறுகள் அத்தாட்சிப்படுத்தப்பட்டு பெறுபேறுகளை வெளியிடுவதற்காக தேர்தல்கள் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. எவ்வாறாயினும், தேர்தல்கள் ஆணையாளருக்குக் கிடைக்கப்பெற்ற பெறுபேறுகள் மீள ஒப்பிட்டுப் பார்த்து பரீட்சித்துப் பார்ப்பதற்காக தேர்தல்கள் முடிவுகளை வெளியிடும் நிலையத்தில் தேர்தல்கள் ஆணையாளரின் உதவிக்காக மேலும் சிரேட்ட பதவிநிலை அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டதோடு, அவர்களால் இறுதிப் பரிசீலனை மேற்கொள்ளப்பட்ட பின்னர், தேர்தல்கள் ஆணையாளரால் தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டன.

164. ஒவ்வொரு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கும் வாக்கெண்ணல் மண்டப மட்டத்தில் கிடைக்கப்பெறுகின்ற ஒவ்வொரு வேட்பாளர் சார்பாகவும் அளிக்கப்பட்டுள்ள வாக்குகளின் எண்ணிக்கையைக் காட்டுகின்ற பெறுபேற்று ஆவணம் தலைமை அலுவலகத்திற்கு தொலைநகல்மூலம் மற்றும் வருடல் (Scan) செய்யப்பட்டு மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்பட்டதைத் தொடர்ந்து தெரிவத்தாட்சி அலுவலர்கள் அப்பெறுபேறுகளைப்பயன்படுத்தி வாக்கெடுப்புப் பிரிவு மட்டத்திலான பெறுபேற்றைத் தயாரித்து தேர்தல்கள் ஆணையாளருக்கு அனுப்பிவைத்தனர். தேர்தல் மாவட்டத்திற்குரிய அனைத்து வாக்கெடுப்புப் பிரிவுகள் மற்றும் தேர்தல் மாவட்டத்தின் அஞ்சல் வாக்குப் பெறுபேறுகள் என்பன முழுமையடைந்த பின்னர், ஒவ்வொரு வேட்பாளரும் தேர்தல் மாவட்டத்தில் பெற்றுக்கொண்ட வாக்குகளின்

எண்ணிக்கையைக் காட்டுகின்ற பெறுபேறு தேர்தல்கள் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. நாட்டின் இறுதிப் பெறுபேற்றை வெளியிடுவதற்கு முன்னர் ஒவ்வொரு தேர்தல் மாவட்ட மற்றும் நிருவாக மாவட்ட முடிவுகளைத் தயாரித்து பரீட்சித்த பின்னர் தேர்தல்கள் ஆணையாளரால் இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாக பெறுபேறுகள் வெளியிடப்பட்டன.

165. தேர்தல்கள் ஆணையாளரினால் இறுதிப் பெறுபேறு சரியானதென உறுதிசெய்து கொண்டதன் பின்னர், தனது கையொப்பத்தையிட்டு அத்தாட்சிப்படுத்தி மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் ஊடக நிறுவனங்களுக்கும் வெளியிடுவதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டது. பெறுபேறுகளை வெளியிடும் போது பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்காக இலத்திரனியல் ஊடக நிறுவனங்கள் தேர்தல்கள் திணைக்களத்தில் பதிவுசெய்திருக்க வேண்டுமென்பதோடு, அச்சு ஊடகங்களுக்கு அரசாங்க தகவல் திணைக்களத்தினூடாக பெறுபேறுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டன. இலத்திரனியல் ஊடக நிறுவன உத்தியோகபூர்வ பெறுபேற்று ஒளி/ஒலிபரப்பு உரிமையைப் பெற்றுக்கொள்வதற்காக தேர்தல்கள் திணைக்களத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்டதோடு, அதற்காக ஒரு நிறுவனம் 70,000 ரூபா தொகையையும் அந்நிறுவனத்தின் ஏனைய அலைவரிசைகளுக்காக 20,000 ரூபா வீதமும் கொடுப்பனவு செய்தல் வேண்டும். குறித்த கொடுப்பனவு செய்யப்பட்டதன் பின்னர், பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான 9 தொலைக்காட்சி ஊடக நிறுவனங்கள், 8 வானொலி அலைவரிசைகள், 6 இணையத்தளங்கள், 3 இயங்கலை (online) பத்திரிகைகள், 5 செல்லிடத் தொலைபேசி குறுந்தகவல் நிறுவனங்கள் பதிவு செய்து கொண்டன. பதிவுசெய்யப்பட்ட ஊடக நிறுவனங்களுக்கு பாதுகாப்பு கணினி வலையமைப்பு மூலம் இலத்திரனியல் முறையில் உடனுக்குடன் பெறுபேறுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டதோடு, தேவையான கணினி வலையமைப்பு மற்றும் தொடர்பாடல் வசதிகள் ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்டது. மேற்குறித்தவாறு பாதுகாப்பு கணினி வலையமைப்பின் மூலம் அனைத்து தேர்தல் முடிவுகளும் ஒன்றொன்றாக வாக்கெடுப்புப் பிரிவு அடிப்படையில் தேர்தல் மாவட்ட மட்டத்தில் பெற்றுக் கொடுக்கப்பட்டதோடு,சனாதிபதித் தேர்தலின் இறுதி முடிவு வெளியிடப்படும் வரை இக்கணினி வலையமைப்பை பாதுகாப்பாக பேணிச் செல்லல் கொழும்புப் பல்கலைக்கழக கணினிச் சேவை நிலையத்தினாலும் ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தினாலும் மேற்கொள்ளப்பட்டன. தேர்தல்கள் ஆணையாளரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பெறுபேறு முதலாவதாக மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கும் இரண்டாவதாக அரசாங்க தகவல் பணிப்பாளருக்கும் தொலைநகல் மூலம் அனுப்பிவைக்கப்பட்டது. அரசாங்க தகவல் பணிப்பாளரினால் அனைத்து உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகை நிறுவனங்களுக்கும் பெறுபேறுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

166. முடிவுகளை ஊடக நிறுவனங்களுக்கு வழங்குகின்ற கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணினிச் சேவை நிலையத்தின் வலைத்தொகுதியிலிருந்து ஊடக நிறுவனங்கள் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் கணினிக் கோப்புச் சேவை வழங்குனரின்துண்டிப்பொன்று தேர்தல் தினத்தன்று நள்ளிரவின் பின்னர் ஏற்பட்டதோடு, அதன் காரணமாக இலத்திரனியல் முறையில் முடிவுகளை தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு சுமார் அரை மணித்தியாலமாகவழங்க முடியாமற் போயிற்று. இருப்பினும், அக்காலப்பகுதியினுள் தேர்தல்கள் ஆணையாளரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பெறுபேறுகள் தொலைநகல் மூலம் குறித்த மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு வழங்கப்பட்டன. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையின் போது ஊடக நிறுவனங்கள் முடிவுகளை விரைவாகப் பெற்றுக்கொடுப்பதற்கு காட்டிய ஆர்வம் காரணமாக அவர்கள் குறித்த சேவைக் கோப்பினுள் மீண்டும் மீண்டும் ஒரு செக்கனை விடக் குறைந்த காலத்திற்குள் பரீட்சித்தமை காரணமாக இது ஏற்பட்டதெனத் தெரியவந்தது.

167. கடந்த 2010 சனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்டதன் பின்னர், பரவிய வெவ்வேறு மூடக் கருத்துக்கள் காரணமாகவும் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளின் முகவர்களின் சுட்டிக்காட்டல்களையும் கருத்திற்கொண்டு, இதுவரை எந்தவொரு சனாதிபதித் தேர்தலிலும் மேற்கொள்ளப்படாதவாறு தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களுக்கும் ஒரு வேட்பாளர் சார்பாக இரண்டு முகவர்களுக்கும் கண்காணிப்பு அமைப்புக்களின் ஒரு கண்காணிப்பாளருக்கும் தேர்தல்கள் செயலகத்தில் முடிவுகளை அட்டவணைப்படுத்தி வெளியிடும் நிலையத்தின் அலுவல்களைக் கண்காணிப்பதற்காக வருகைதர அனுமதிக்கப்பட்டது. வழமையாக இதுவரை காலமும்இறுதிப் பெறுபேறு வெளியிடப்படும் நேரத்தை அனைத்து வேட்பாளர்களுக்கும் அறிவித்து அந்நேரத்திற்கு சமுகமளிக்குமாறு அறிவிப்பதே மேற்கொள்ளப்பட்டிருந்தது. வெளியிடும் நிலையத்தில் பெறுபேறுகளைப் பதிவு செய்துகொள்வதற்கும் வருகைதந்திருந்த முகவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இதன் காரணமாக எந்தவோர் அரசியல் கட்சிக்கும் அல்லது வேட்பாளருக்கும் இறுதிப் பெறுபேறு தொடர்பில் சந்தேகம் கொள்வதற்கு சந்தர்ப்பம் இருக்கவில்லை.

168. நாட்டின் 22 தேர்தல் மாவட்டங்களுக்குரிய தெரிவத்தாட்சி அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்ட ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் ஒவ்வொரு வேட்பாளருக்கும் ஆதரவாக அளிக்கப்பட்டுள்ள மொத்த வாக்குகளின் எண்ணிக்கை பற்றிய பெறுபேற்றை தேர்தல்கள் செயலகத்தில் தயாரிக்கப்பட்ட தேர்தல் பெறுபேற்று ஆவணத்தோடு ஒப்பிட்டு பிழையற்ற தன்மை உறுதிசெய்து

கொள்ளப்பட்டதன் பின்னர், முழு நாட்டில் ஒவ்வொரு வேட்பாளருக்கும் ஆதரவாக அளிக்கப்பட்டுள்ள வாக்குகளின் எண்ணிக்கையையும், சனாதிபதியாகத்தேர்ந்தெடுக்கப்படுபவர் யாரெனவும் தேர்தல்கள் ஆணையாளர் வெளியிடுதல் வேண்டும். அதற்கமைய வேட்பாளர் திரு. மைத்திரிபால சிறிசேன அவர்கள் சனாதிபதித் தேர்தலில் அளிக்கப்பட்ட 12,123,452 மொத்த வாக்குகளில் சரிபாதியான 6,061,726 எண்ணிக்கையை விட மேலதிகமான 155,436 வாக்குகள் சகிதம் 6,217,162 மொத்த வாக்குகளைப் பெற்றிருந்தமையால், 2015 சனாதிபதித் தேர்தலுக்குரிய விருப்பு வாக்கெண்ணல் தேவைப்பாடு ஏற்படவில்லையென்பதோடு, சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 56(2) ஆம் பிரிவின் கீழ் அப்பெறுபேறு இறுதிப் பெறுபேறாக அமைந்தது. அதற்கமைய 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 64(2) ஆம் பிரிவிற்கமைய புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் திரு. மைத்திரிபால சிறிசேன அவர்கள் சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக 2015.01.09 ஆம் திகதி மு.ப 09.38 மணியளவில் தேர்தல்கள் ஆணையாளரினால் தேர்தல்கள் செயலகத்தில் பிரகடனப்படுத்தப்பட்டதோடு, அந்நிகழ்வில் வேட்பாளர் திரு. மைத்திரிபால சிறிசேன அவர்களும் மேலும் சில வேட்பாளர்களும் கலந்துகொண்டனர். புதிய ஜனநாயக முன்னணியின் வேட்பாளர் திரு. மைத்திரிபால சிறிசேன அவர்கள் சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்ற அறிவித்தல் 2015.01.09 ஆம் திகதிய 1896/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் அன்றைய தினமே வெளியிடப்பட்டது. சனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய ஒவ்வொரு வேட்பாளரும் பெற்றுக் கொண்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை **VI ஆம் இலக்க குறிப்பில்** காட்டப்பட்டுள்ளதோடு, ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தின் கீழ் வாக்கெடுப்புப் பிரிவு அடிப்படையில் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை **XI ஆம் இலக்க குறிப்பில்** காட்டப்பட்டுள்ளது.

XI ஆம் பகுதி

தேர்தலுக்காக மேற்கொள்ளப்பட்டசெலவினங்கள்

169. நாடெங்கிலும் அமையப் பெற்றுள்ள 25 நிருவாக மாவட்டங்களில் நடாத்தப்பட்ட இச்சனாதிபதித் தேர்தலின்போது 15,044,490 வாக்காளர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்து வாக்குகளை எண்ணி பெறுபேறுகள் வெளியிடப்பட்டன. அதற்காக செலவுசெய்யப்பட்ட மொத்தத் தொகை 2,706 மில்லியன் ரூபாவாகும். அதற்கமைய இச்சனாதிபதித் தேர்தலின்போது பதிவுசெய்யப்பட்ட வாக்காளர் ஒருவருக்காக செய்யப்பட்ட சராசரி செலவு ரூ.179.87 ஆகும்.

170. இச்சனாதிபதித் தேர்தலின்போது பொலீஸ் திணைக்களம், அஞ்சல் திணைக்களம், அரசாங்க அச்சகத் திணைக்களம், ஆட்பதிவுத் திணைக்களம் ஆகியவற்றினால் மேற்கொள்ளப்பட்ட செலவு 881 மில்லியன் ரூபாவாகும். சனாதிபதித் தேர்தலுக்காக செலவுசெய்யப்பட்ட மொத்த தொகையான 2,706 மில்லியன் ரூபாவில் எஞ்சிய 1,825 மில்லியன் ரூபா (67.4%) நேரடியாக தேர்தல்கள் திணைக்களத்தினால் செலவுசெய்யப்பட்டது.

171. சனாதிபதித் தேர்தலின் வாக்கெடுப்புப் பணிகளுக்காக தேர்தல்கள் ஆணையாளரினால் 4 அரச திணைக்களங்களுக்கு நிதி ஏற்பாடு வழங்கப்பட்டது. அதற்கமைய அஞ்சல், பொலிஸ், அச்சகம் மற்றும் ஆட்பதிவு ஆகிய திணைக்களங்கள் சனாதிபதித் தேர்தலுக்காக செலவிடப்பட்ட தொகையும் சதவீதமும் முறையே கீழே காட்டப்பட்டுள்ளன.

திணைக்களம்	செலவுசெய்த தொகை (ரூ.)	சதவீதம்
அஞ்சல் திணைக்களம்	384,999,999.90	14.22%
பொலிஸ் திணைக்களம்	373,863,605.57	13.81%
அச்சகத் திணைக்களம்	120,623,570.69	4.45%
ஆட்பதிவுத் திணைக்களம்	1,719,741.95	0.06%
மொத்தம்	**881,206,918.11**	**32.54%**

172. இச்சனாதிபதித் தேர்தலுக்காக அரசாங்க அச்சகத் திணைக்களம் 120,623,570.69 ரூபாவைச் செலவிட்டுள்ளது. அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் அம்மொத்தச் செலவில் 63.5% வாக்குச்சீட்டுக்களை அச்சிடுவதற்காக செலவிடப்பட்டுள்ளது. அச்சிடல் அலவல்களின் கீழான மற்றுமொரு பாரிய செலவான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை அச்சிடுவதற்காக ரூ. 21,604,936.33 செலவிடப்பட்டதுடன் அந்த அலுவலை தேர்தல் திணைக்களம் தனியார் பிரிவினூடாக நிறைவேற்றிக் கொள்ளப்பட்டது.

173. இச்சனாதிபதித் தேர்தலின்போது பொலீஸ் திணைக்களம் மேற்கொண்ட செலவு ரூ.373,863,605.57 ஆகும். இதில் ரூ.23,203,200 விசேட அதிரடிப்படை, பாதுகாப்பு அமைச்சு, சிவில் பாதுகாப்புத் திணைக்களம் ஆகியவற்றுக்காக செலவிடப்பட்டதாகும். பொலீஸ் திணைக்களத்திற்குக் குறித்தொதுக்கப்பட்ட ஒதுக்கீட்டிலிருந்து செலவிடப்பட்ட தொகையில் 218 மில்லியன் ரூபா பொலீஸ் அலுவலர்களின் இணைந்த படிக்காகவும் 90 மில்லியன் ரூபா பொலீஸ் வாகனங்களுக்கான எரிபொருள்களுக்காகவும் செலவிடப்பட்டிருந்தது. தேர்தல்கள் ஆணையாளரின் அனுமதியோடு பொலிஸ் திணைக்களத்திற்கு தேர்தல் கடமைகளுக்குத் தேவையான மேலதிக வாகனங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக 99.4 மில்லியன் ரூபா செலவிடப்பட்டதோடு, சட்டவிரோத அறிவித்தல்களை அகற்றுவதற்காக 24 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

174. வாக்கெடுப்பு நடாத்தப்படும் சந்தர்ப்பங்களின்போது அஞ்சல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படவேண்டிய விசேட சில கடமைகள் உள்ளன. அவற்றுக்காக அத்திணைக்களத்திற்கு தேர்தல்கள் ஆணையாளரால் நிதிஒதுக்கீடு வழங்கப்படும். அவ்விதத்தில் இத்தேர்தலுக்காகவும் 384,000,000.00 ரூபா அஞ்சல் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. அவற்றில் ஊழியர்களின் மேலதிக வேலை நேரத்திற்காக செலவிடப்பட்ட 216 மில்லியன் ரூபாவும் முத்திரை மற்றும் அஞ்சல் கட்டணங்களுக்கான 138 மில்லியன் ரூபாவும் எழுதுபொருள்களுக்கான13 மில்லியன் ரூபாவும் எரிபொருட்களுக்காக 7 மில்லியன் ரூபாவும் பிரதானசெலவினங்களாகும்.

175. இத்தேர்தலின் மொத்த செலவினத்தை செலவுகளின் தன்மைக்கமைய பின்வருமாறு வகைப்படுத்த முடியும்:

செலவின் தன்மை	செலவிடப்பட்ட தொகை (ரூ.)	சதவீதம்
1. சட்டவிரோத காட்சிப்படுத்தல்களை அகற்றுதல்	24,026,298.78	0.89%
2. வெளிநாட்டுக் கண்காணிப்புக்கான செலவுகள்	35,620,676.67	1.32%
3. நிர்மாணமும் பழுதுபார்ப்பும்	56,427,210.09	2.09%
4. மின்சாரம்	108,821,690.60	4.02%
5. முத்திரை மற்றும் அஞ்சல் கட்டணம்	137,642,661.45	5.09%
6. அச்சிடல் செலவு	144,009,403.32	5.32%
7. நலனோன்புகைச் செலவு	148,084,094.76	5.47%
8. நீர், தொலைபேசி உள்ளிட்ட சேவைகளும் வேறு செலவுகளும்	173,008,674.65	6.39%
9. வாகனங்களுக்கான வாடகை	182,989,324.18	6.76%
10. எரிபொருள்	185,847,238.96	6.87%
11. எழுதுபொருள்கள்/அலுவலகப் பொருள்கள்	207,340,925.93	7.66%
12. பணியாட்டொகுதியினருக்கான சம்பளங்கள், மேலதிக பிரயாணச் செலவுகள், படிகள்	1,302,488,631.15	48.12%
மொத்தம்	**2,706,306,830.54**	**100.00%**

176. இதற்கமைய சனாதிபதித் தேர்தலுக்காக செலவிடப்பட்ட தொகையில் 48.12% அதிகூடிய அளவு பணியாட்டொகுதியினரின் கொடுப்பனவிற்காக செலவிட வேண்டி ஏற்பட்டதென்பதைச் சுட்டிக்காட்ட முடியும். அதற்கடுத்த சதவீதம் முறையே எழுதுபொருள்களுக்கும் அலுவலகப் பொருள்களுக்கும் 7.66%உம், எரிபொருளுக்காக 6.87% உம், வாகன வாடகைகளுக்காக 6.76% உம், நலனோம்பலுக்காக 5.47%உம், அச்சிடல் செலவுகளுக்காக 5.32%உம், முத்திரை மற்றும் அஞ்சல் கட்டணங்களுக்காக 5.09% உம், மின்சாரத்திற்காக 4.02%உம் செலவிடப்பட்டது.

177. சேவைகள் மற்றும் ஏனைய செலவுகளின் கீழ் செய்யப்பட்டுள்ள மொத்தச் செலவு 173 மில்லியன் ரூபாவாகும். வாக்கெடுப்பு நிலைய அலுவல்களுக்கு சேவைகளை வழங்குவதற்காக கிராம அலுவலர்களுக்குச் செலுத்தப்பட்ட 97 மில்லியன் ரூபா, நீர் வழங்கலுக்காக 11 மில்லியன் ரூபா, தொடர்பாடல் அலுவல்களுக்காக 8 மில்லியன் ரூபா என்பன இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

XII ஆம் பகுதி

அவதானிப்புக்களும் பரிந்துரைகளும்

அரச சேவை

178. வாக்கெடுப்பை நடாத்துவதற்கு தேர்தல்கள் திணைக்களத்திற்கும் தெரிவத்தாட்சி அலுவலருக்கும் ஒத்துழைப்பு வழங்கும் பொறுப்பு அரச பணியாளர்கள் மீது உரித்தாக்கப்பட்டுள்ளது. இப்பணிகளுக்காக அரச சேவையின் அலுவலர்களைப் போன்றே இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்களும் ஈடுபடுத்தப்படுகின்ற போதிலும், நியதிச்சட்ட சபைகள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் ஊழியர்கள் உள்ளடக்கப்படுவதில்லை. நாடளாவிய தேர்தலொன்றின்போது பூர்வாங்க ஒழுங்கமைப்பு அலுவல்களுக்காகவும் வாக்கெடுப்பு, வாக்கெண்ணல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவதற்காகவும் அதிக எண்ணிக்கையான அரச ஊழியர்கள் தேவைப்படுகின்றனர். இதன் காரணமாக தேர்தலொன்று பிரகடனப்படுத்தப்பட்டவுடன் தேர்தல்கள் திணைக்களத்தினதும் தெரிவத்தாட்சி அலுவலர்களினதும் அடிப்படைப் பணியாக அமைவது அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் இதர நிறுவனங்களில் பணியிலீடுபட்டுள்ள அரச ஊழியர்கள் தொடர்பாகவும் வாகனங்கள் தொடர்பாகவும் கணக்கெடுப்பை நடாத்துவதற்கான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் படிவங்களைக் குறித்த நிறுவனங்களுக்கு அனுப்பிவைத்தலாகும். இங்கு தமது நிறுவனத்தினுள் பணியிலீடுபடுகின்ற அலுவலர்கள் மற்றும் வாகனங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு குறித்த நிறுவனங்களின் தலைவர்கள் கடமைப்பட்டுள்ளபோதிலும் இந்நிலைமைகள் தொடர்பாக அவ்வலுவலர்கள் கூடிய அக்கறை காட்டாதுள்ள ஒரு போக்கை அண்மைக்காலமாக காணக்கிடைப்பது விசேட அம்சமாகும். பெரும்பாலான நிறுவனங்கள் தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுறுத்தல்களுக்கமைய தமது நிறுவனத்தில் சேவையிலீடுபட்டுள்ள அனைத்து ஊழியர்கள் வாகனங்கள் தொடர்பான தகவல்களை வழங்கியபோதும், சில நிறுவனங்கள் அது தொடர்பில் உரிய கவனம் செலுத்துவதில்லை. மேலும் சில சந்தர்ப்பங்களில் தேர்தல்கள் ஆணையாளர் வழங்கியுள்ள அறிவுறுத்தல்களை உதாசீனப்படுத்தி தேர்தல் கடமைகளுக்குச் செல்ல விருப்பமான அலுவலர்களுக்கு மாத்திரம் தகவல் பத்திரங்களை வழங்கி தகவல்களை வழங்குவதும் தமது நிறுவனத்திற்குச் சொந்தமான வாகனங்களில் வைத்திருக்க முடியுமான அதிகூடிய எண்ணிக்கையான வாகனங்களை தம்வசம் வைத்துக்கொண்டு எஞ்சியவற்றை மாத்திரம் தேர்தல் கடமைகளுக்காக அனுப்பிவைப்பதையும் காண முடிகிறது. இதன் காரணமாக தேர்தலுக்குத் தேவையான வளங்களைத் தேடிக் கொள்வதற்காக தேர்தல்கள் ஆணையாளர் கூடுதலான பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. சில சந்தர்ப்பங்களில் சனாதிபதியின் செயலாளருடாக அனைத்து நிறுவனங்கள் வசமுள்ள பணியாட்டொகுதியினர், வாகனங்கள்தொடர்பான தகவல்களை தேர்தல்கள் ஆணையாளருக்கு வழங்க வேண்டுமென சுற்றறிக்கை ஒன்றினூடாக அறிவுறுத்தல் வழங்குவதற்கும் நேரிட்டது. பெரும்பாலான அரச ஊழியர்கள் தேர்தல் கடமைகளை விருப்பத்தோடு மேற்கொள்ளும் ஒரு நிலைமை காணப்பட்டபோதும் மற்றுமொரு பகுதியினர் வாக்கெடுப்பு மற்றும் வாக்கெண்ணல் அலுவல்களுக்காக வீட்டிற்கு வெளியில் 01/02 தினங்கள் கழிக்க நேரிடுகின்றமை தேர்தல் முறையின் விருப்பெண்ணலின் சிக்கலான தன்மை தொடர்பாக மாத்திரம் கவனம் செலுத்தி தேர்தல் கடமைகளிலிருந்து விடுவித்துக்கொள்வதற்கு முயற்சி மேற்கொள்வதைக் காணக் கிடைக்கின்றது. இந்நிலைமையில் மீதமுள்ள தேர்தல் அலுவல்களை சிறப்பாக மேற்கொள்வதாயின், அனைத்து நிறுவனங்களிலும் தகைமைபெற்ற அலுவலர்கள் அனைவரையும், நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்ளத்தக்கவாறு நிருவாகிகளை அறிவுறுத்தல் மற்றும் நிறுவனத்திற்குச் சொந்தமான வளங்களைத் தேர்தல்கள் ஆணையாளரின் கோரிக்கைக்கமைய பெற்றுக்கொடுப்பதை கட்டாயத் தேவைப்பாடொன்றெனச் சட்டமியற்றுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

179. அரச சேவையின் பதவிநிலைத் தரங்களுக்கு அரசியல் உரிமைகள் உரித்தற்றதாயினும், பதவிநிலை வகுதிக்கு உட்படாத ஊழியர்களுக்கு அரசியல் உரிமைகள் உரித்தாகும். இருப்பினும், நீதிமன்ற அலுவலர்களுக்கும் பாதுகாப்புச் சேவைகளின் அலுவலர்களுக்கும் பொலிஸ் அலுவலர்களுக்கும் சமாதான அலுவலர்களுக்கும் அரசியல் உரிமைகளை அனுபவிப்பதற்கு உரித்துக் கிடையாது. அரசியல் உரிமைகள் உரித்துடைய அலுவலர்களைப் போன்றே அரசியல் உரிமைகளற்ற அரச அலுவலர்களையும் ஈடுபடுத்தி தேர்தல் அலுவல்களை ஒழுங்கமைக்க வேண்டியநிலை தேர்தல்கள் திணைக்களத்திற்கு ஏற்பட்டுள்ளது. அரசியல் உரிமையுள்ள அலுவலர்களாயினும், தேர்தல் காலப்பகுதியினுள் அரசியல் கட்சிகளின் வேட்பாளர் ஊக்குவிப்பு அலுவல்களில் ஈடுபடுவார்களாயின் அவர்களை அதன் பின்னர் தேர்தல்கள் கடமைகளில்ஈடுபடுத்த முடியுமா என்ற பிரச்சினை நிச்சயமாக ஏற்படும். அவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறின், அது தொடர்பில் அவதானத்தோடு இருக்கின்ற அரசியல் கட்சிகள்/ வேட்பாளர்கள் மற்றும் பொது மக்களின் முறைப்பாடுகள் தேர்தல்கள் ஆணையாளருக்குக் கிடைக்கப்பெறும். அதற்கமைய அரசியல் உரிமை உரித்துடைய அலுவலர்களாயினும், தேர்தல்

காலப்பகுதியினுள் கடமை நேரத்திற்கு அப்பால், அல்லது கடமையிலிருந்து விடுமுறை பெற்றுக்கொண்டு அல்லது கடமை என்ற அடிப்படையில் செய்கின்ற அரசியல் கட்சிகள்/ வேட்பாளர் ஊக்குவிப்புக்களுக்குரிய அலுவல்களில் ஈடுபடக் கூடாதென நிறுவனத் தலைவர்கள் ஊடாக அறிவுறுத்துவதற்கும் தேர்தல் கடமைகளுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அலுவலர்கள் அவ்வாறான அலுவல்களின் ஈடுபடுவார்களாயின், அது தொடர்பில் தேவையான உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் தயார்செய்ய வேண்டியுள்ளது.

180. அரச சேவையின் உயர் படிநிலையிலுள்ள அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், நிறுவனங்களின் தலைவர்கள் தேர்தலொன்று நடாத்தப்படுகின்ற காலப்பகுதியிலேனும், அரசியல் செல்வாக்குகளின் பேரில் அவர்கள் விரும்பாதபோதும் சில நடவடிக்கைகளை எடுக்க நேரிடலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அது தொடர்பான சட்ட நிலைமை, தேர்தல்கள் ஆணையாளரினால் வெளியிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் என்பன தொடர்பாக குறித்த தரப்புக்களை அறிவுறுத்தி அவ்வாறான செயற்பாடுகள் காரணமாக ஏற்படக்கூடிய விளைவுகளைச் சுட்டிக்காட்டி சட்டத்திற்கமைய அலுவல்களை மேற்கொள்ளவேண்டியதன் தேவைப்பாட்டினை அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் ஏனைய நிறுவனத் தலைவர்கள் சுட்டிக்காட்ட வேண்டுமெனினும், அதிகமான அலுவலர்கள் அவ்வாறு அலுவல்களை மேற்கொள்ளாமை மற்றும் சட்டத்தின் ஓட்டைகளினூடாக புகுந்து செல்லக்கூடிய முறைகளைச் சுட்டிக்காட்டி தேர்தல் செயற்பாடுகளுக்கு இடையூறுகளை விளைவிக்கின்ற சந்தர்ப்பங்களும் இல்லாமலில்லை. அதன் காரணமாக உயர் அரசியல் அழுத்தங்கள் விடுக்கப்பட்டபோதும் செயற்படுத்த முடியாத கோரிக்கைகள் தொடர்பில் அவற்றைச் சுட்டிக் காட்டுவதற்கும் அவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ள போதும் முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகள் எழுத்து மூலக் கோரிக்கைகள் அல்லாத சந்தர்ப்பங்களில் அதனை எவ்விதத்திலும் ஆற்ற முடியாதெனச் சுட்டிக்காட்டுவதற்கும் அவர்கள் தயங்கக் கூடாதென்பதோடு, அவ்வாறு இடம்பெறவில்லையெனில், தேர்தல் செயன்முறைகளை இடையூறுகளின்றி மேற்கொள்ள முடியாமற் போகும். அவ்வாறு செய்யாமல் தேர்தல் சட்டங்களை உதாசீனம்செய்யும் விதத்தில் எவரேனும் ஓர் அரச அலுவலர் செயற்படுவாராயின், அது தொடர்பில் அவருக்கு எதிராக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பாக சட்டமியற்றத் தேவையான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் எடுக்க வேண்டியுள்ளது.

அஞ்சல் வாக்களிப்பு மற்றும் அவ்வாறான ஏனைய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

181. தேர்தல் கடமைகளிலீடுபடுகின்ற அரச ஊழியர்களுக்கும் அவ்வலுவல்களுடன் தொடர்புபட்ட சில அத்தியாவசிய சேவைகளிலீடுபடுகின்ற ஊழியர்களுக்கும் தேர்தல்களின்போது அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு உரிமையுண்டு. சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 02 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து 10 நாட்களுக்குள் அஞ்சல் வாக்கு வசதிகளுக்கு விண்ணப்பிக்க வேண்டுமென சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தினம் மேலும் ஒரு வார காலத்திற்கு நீடிப்புச் செய்யப்படின், அஞ்சல் வாக்குக்காக விண்ணப்பிக்கின்றவர்களின் தொகை மிக அதிகமானதென்பதால், குறுகிய காலமொன்றிற்குள் அதனோடு தொடர்புடைய அதிகளவான கடமைகளை ஆற்றுவதற்கு நேரிடும். கடந்த சனாதிபதித் தேர்தலுக்குரியதாக 626,953 அஞ்சல் வாக்கு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதோடு, அவ்விண்ணப்பங்கள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் 541,452 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களை கையேற்றல், பரீட்சித்தல், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படல் அல்லது நிராகரிக்கப்படல் பற்றி விண்ணப்பதாரிகளுக்கு அறிவித்தல், அஞ்சல் வாக்காளர் இடாப்பைத் தயாரித்தல், அஞ்சல் வாக்காளர்களுக்கு வாக்குச்சீட்டுக்களை விநியோகித்தல், அஞ்சல் வாக்கு அடையாளமிடலுடன் தொடர்புடைய அலுவல்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படாத அஞ்சல் வாக்காளர்களின் பக்கெற்றுக்களை தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு மீளக் கையளித்தல் ஆகிய ஏராளமான பணிகளை மிகக் குறுகிய ஒரு காலத்திற்குள் மேற்கொள்ள நேரிடும். இருப்பினும், இச்செயற்பாடுகளின் போது ஏற்படுகின்ற மிகச் சிறிய குறைபாடொன்றின் காரணமாகக் கூட தெரிவத்தாட்சி அலுவலருக்கெதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. தேர்தல் சட்டங்களின் மூலம் தேர்தல் காலப்பகுதிகள் தீர்மானிக்கப்பட்டுள்ளமையால், அஞ்சல் வாக்கு அலுவல்களுக்கான காலப்பகுதியை நீடிப்புச் செய்வதன் மூலம் இதற்கான தீர்வைக் காணமுடியாது. அதற்குக் காரணம், அவ்வாறு செய்தால் தேர்தலை உரிய காலப்பகுதியினுள் நடாத்த முடியாத நிலை ஏற்படுமென்பதாகும். அதன் காரணமாக அஞ்சல் வாக்களிப்புச் செயன்முறை தொடர்பில் அறிவுறுத்தி, அஞ்சல் வாக்களிப்பு உரிமையுள்ள அலுவலர்களுக்கும் அத்தியவசிய கடமைகளில் ஈடுபடும் அலுவலர்களுக்கும் அதற்கான விரிவான ஒரு வேலைத்திட்டத்தை வகுத்தலே மேற்கொள்ளப்படல் வேண்டும், அதற்காக அலுவலர்களைப் பயிற்றுவித்தல், அறிவுறுத்துதல், சட்டங்களை இயற்றுதல் என்பவற்றை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அத்துடன் வாக்கெடுப்புத் தினமன்று அத்தியவசிய கடமைகளை நிறைவேற்ற வேண்டியுள்ள அரசாங்க போதனா வைத்தியசாலைப்பணியாட்தொகுதியினர், துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களில் பணியாற்றும் அரசாங்க அலுவலர்களுக்கு மற்றும் ஊழியர்களுக்கு வாக்கெடுப்புத் தினமன்று தமது சேவை

நிலையத்திற்கு அண்மையில் அமைக்கப்பட்டிருக்கும் வாக்கெடுப்பு நிலையமொன்றில் நாடளாவிய தேர்தலொன்றை நடாத்தும் சந்தர்ப்பத்தின் போது அவர்களுடைய வாக்கினை அளிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல் சம்பந்தமாக தொடர்ந்தும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

182. தற்போது காணப்படுகின்ற அஞ்சல் வாக்கு முறைமையினுள் அரச ஊழியர்கள் அஞ்சல் வாக்குக்குவிண்ணப்பிக்காமை அல்லது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டமை காரணமாக தேர்தல் கடமைகளிலிருந்து விடுவிக்குமாறு செய்யப்படுகின்ற கோரிக்கைகளும் அத்தியவசிய கடமைகளிலிருந்து விடுவிக்கப்பட்டு வழமையான முறையில் நேரடியாக வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறு முன்வைக்கப்படுகின்ற கோரிக்கைகளும் காரணமாக வாக்கெடுப்பை உரிய விதத்தில் நடாத்துதல் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு சிக்கலானதாக உள்ளது. இவ்வாறான நிலைமையில் குறித்த அலுவலர்கள் விடுவிக்கப்படின், வாக்கெடுப்பை உரியவாறுநடாத்துவதற்கும் அத்தியவசிய சேவைகளை உரிய முறையிலும் பேணிச் செல்வதற்கும் ஏற்படுத்தக்கூடிய அழுத்தங்கள் எவ்வாறாகவிருக்கும் என்பது கவனத்திலெடுக்கப்படல் வேண்டும். நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றுக்காக தகுதிபெற்றுள்ள அனைத்து வாக்காளர்களுக்கும் தமது வாக்கைப் பிரயோகிப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியிருப்பினும், அஞ்சல் வாக்கு விண்ணப்பிக்க முடியாது போனமை அல்லது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டமை காரணமாக வாக்களிப்பதற்கு நேரடியாக வாக்கெடுப்பு நிலையத்திற்கு செல்வதற்கு வாய்ப்பேற்படுத்தித் தருமாறு கோருகின்றவர்களுக்கு அச்சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க முடியவில்லையெனில், நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றிற்கு ஏற்படக்கூடிய தாக்கம் தொடர்பாகவும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

183. அஞ்சல் வாக்குகளைக் கோரும்போது குறிப்பாக பாதுகாப்புப் பிரிவுகளின் அங்கத்தவர்கள் தமது விண்ணப்பப்படிவங்களைப் பூரணப்படுத்துவதற்குத் தேவையான தகவல்களை வேறு நபர்கள் ஊடாகவும் பெற்றுக்கொள்கின்றனர். அவ்வாறு விண்ணப்பங்கள் பூரணப்படுத்தப்படும்போது குறித்த வாக்கெடுப்பு மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரியின் பெயருக்குச் சமமான பெயரையுடைய வேறொருவரின் விபரங்களைப் பெற்றுக்கொடுத்தமை காரணமாக மற்றும்எவரேனும் ஒருவருக்கு தேவைப்படின் வேறொருவருக்குரிய விபரங்களைப் பூரணப்படுத்தி அனுப்பி அஞ்சல் வாக்கு கோருவதற்கு இம்முறையினுள் அவகாசம் காணப்படுகின்றமை காரணமாக அஞ்சல் வாக்களிப்பு முறையில் வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களிப்பதற்குத் தகுதியுள்ள ஒருவருக்கு தனது வாக்குரிமை இல்லாமற் போகும் ஆபத்தொன்று தோன்றலாம். இதற்காக தேர்தல்கள் திணைக்களத்திற்கு ஏதேனும் செயன்முறையொன்றை எடுப்பதற்கான சாத்தியப்பாடு இல்லையென்பதோடு, வாக்குரிமையை இழந்த நபருக்கு தேவையெனில், தனது வாக்கை அஞ்சல் மூலம் அளிப்பதற்காக கோரிக்கை முன்வைத்த நபருக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகளை எடுக்க முடியும். இருப்பினும், அவ்வாறான சந்தர்ப்பங்கள் தொடர்பில் இதுவரை எவரொருவரும் அது போன்ற நடவடிக்கைகளை எடுக்கவில்லையென்தோடு, அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான பல்வேறு நடவடிக்கைகள் தேர்தல்கள் திணைக்களம் எடுத்துள்ளபோதும் அவை முழுமையானவையல்ல. இதற்கமைய தற்போதுள்ள அஞ்சல் வாக்கு முறைமை தொடர்பாக மீள் நோக்கிப் பார்க்கவேண்டிய காலம் தோன்றியுள்ளது எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

வெளிநாடு சென்றுள்ள பிரசைகள் தமது வாக்கினை அளிப்பதற்கான முறையொன்றை தயாரித்தலைப் போன்றே, இலத்திரனியல் இயந்திரங்களின் மூலம் வாக்களிக்கும், Election Voting Machine பயன்பாடு சம்பந்தமாகவும் பொதுமக்களிடையே நிலவும் ஆர்வம் மற்றும் ஊக்கம் காரணமாக அவ்வாறான புதிய தொழிநுட்பக் கருவிகளைப் பயன்படுத்துதல் சம்பந்தமாக தொடர்ந்தும் கலந்துரையாட வேண்டியுள்ளது.

துடைத்தழிக்க முடியாத மையின் பயன்பாடு மற்றும் பிரச்சினைகள்

184. சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 36 ஆம் பிரிவிற்கமைய வாக்காளர்களுக்கு வாக்குச் சீட்டொன்றை விநியோகிப்பதற்கு முன்னர் அவரின் இடது கை சிறுவிரலை தோதான குறியீட்டினால் அடையாளமிடல் வேண்டும். இதற்காக தேர்தல்கள் திணைக்களத்தினால் இறக்குமதிசெய்யப்பட்ட மை பேனாக்கள் பயன்படுத்தப்படுவதோடு, இவற்றைப் பயன்படுத்துகின்றபோது தோன்றியுள்ள சிக்கல்கள் காரணமாக தேர்தல் மீதான பொதுமக்களின் நம்பிக்கைக்கு ஊறுவிளைவிக்கப்படுகின்றது. சிலகாலநிலை நிலைமைகளில் இந்த மை சரியாகத் தொழிற்படாமையே இதற்குரிய காரணமாகும். சனாதிபதித் தேர்தலுக்கு உரியதாக பயன்படுத்தப்பட்ட மை சிறு விரலில் பூசப்பட்ட போதும் அவை வெளித் தெரியவில்லையெனவும், அதன் காரணமாக மீண்டும் வாக்களிப்பதற்கு வாக்காளர்களுக்கு சந்தர்ப்பமொன்று உள்ளதாகவும் பல அரசியல் கட்சிகளும் மற்றும் பலரும் முறைப்பாடுகளைமுன்வைத்தனர். சில வாக்கெடுப்பு நிலையங்களில் மைப் பேனாக்களில் ஒன்றுகூட செயற்படாமை காரணமாக தெரிவத்தாட்சி அலுவலர்களூடாக புதிய மை பேனாக்களை வழங்கவும் நேரிட்டது. எவ்வாறிருப்பினும், வாக்காளருக்கு வாக்குச்சீட்டொன்றை வழங்குவதாயின், அவரது ஆளடையாளத்தைஉறுதிப்படுத்திக் கொள்வதற்கான

அடையாள அட்டையொன்றைச் சமர்ப்பிப்பது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளபோதும் அவ்வாறான வாக்காளரொருவரை தொடர்ந்தும் மையினால் அடையாளமிடுவது தேவையானதா என்ற வினாவும் எழலாம். ஏனைய நாடுகள் தொடர்பாக ஆராய்ந்து பார்க்கும்போது அந்நாடுகளின் வாக்காளர்கள் ஆளடையாளம் உறுதிப்படுத்தப்பட்டபோதும் வாக்காளர்கள் வாக்களித்தமைக்காக குறியீட்டினால் அடையாளமிடுதல் பெருமளவான நாடுகளில் தொடர்ந்தும் காணப்படுகின்றது. இருப்பினும், இதற்காக பெருந்தொகைப் பணத்தை செலவிட நேர்ந்துள்ளமை, வாக்காளரின் ஆளடையாளம் வெளிப்படுத்தப்பட்ட பின்னர், வாக்குச்சீட்டொன்றை வழங்குதல் ஆகிய விடயங்களை ஆராய்ந்து பார்த்து அரசியல் கட்சிகளின் இணக்கப்பாட்டைப் பெற்ற பின்னர், தேர்தல் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொண்டு இம்முறையை இடைநிறுத்துவது பொருத்தமென ஒருவர் வாதிட முடியும். அவ்வாறன்றேல், மையைப் பேனா முறையை மாற்றி வேறு நாடுகளைப் போன்று மை போத்தல் மற்றும் தூரிகையைப் பயன்படுத்தி வாக்காளரின் சிறு விரல் நகத்தின் மீது மாத்திரம் சிறிய கோடொன்றை வரைதல் போன்ற முறை தொடர்பில் கவனம் செலுத்துவது முக்கியமாகும். அதன் மூலம் ஏற்படுகின்ற செலவைக் குறைத்துக்கொள்வது போன்றே குறித்த செயன்முறை தொடர்பில் வாக்காளர்களின் நம்பிக்கையையும் உறுதிசெய்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

அரசியல் கட்சிகளும் சுயேச்சை வேட்பாளர்களும்

185. தேர்தல் செயன்முறையின்போது தேர்தல்கள் திணைக்களம் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளின் செயலாளர்கள், அவர்களின் முகவர்கள் மற்றும் சுயேச்சை வேட்பாளர்கள் அல்லது சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடுகின்ற சந்தர்ப்பமொன்றில் அவர்கள் அல்லது அவர்களின் முகவர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுடன் கலந்துரையாடல்களை நடாத்துகின்றது.இச்சனாதிபதித் தேர்தலின்போது போட்டியிட்ட 19 வேட்பாளர்களில் 17 வேட்பாளர்கள் அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவம் செய்தனர். தேர்தல்கள் திணைக்களமானது வேட்பாளர்கள், தேர்தல் முகவர்கள், மாவட்ட மட்ட அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் ஆகிய அனைவருக்காகவும் நேரடியாக குறித்த அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் தேர்தல் முகவர்களுடன் திணைக்களத் தொடர்புகளைப் பேணியது. சுயேச்சை வேட்பாளர்கள் இருவரும் குறித்த கூட்டங்களுக்கு நேரில் வருகை தந்தமை அல்லது அவர்களின் தேர்தல் முகவர்களை கூட்டங்களில் கலந்துகொள்ளச்செய்தமை ஒருங்கிணைப்பு அலுவல்களை இலகுபடுத்தியது. கட்சிச் செயலாளர்கள் மற்றும் தேர்தல் முகவர்களுடன் தேர்தல்கள் ஆணையாளர் இரண்டு வாரங்களுக்கொரு தடவை கூட்டங்களை நடாத்தி தேர்தல் ஒழுங்கமைப்புத் தொடர்பாக அவர்கள் அறிவுறுத்தியதோடு, குறித்த கட்சிகளின் நிரந்தர முகவர்களுடனும் வாராந்தம் கூட்டங்கள் நடாத்தப்பட்டு தேர்தல் ஒழுங்கமைப்பு அலுவல்களின்போது வேட்பாளர்களுக்கும் அவர்களின் முகவர்களுக்கும் ஒப்படைக்கப்படும் பணிப்பொறுப்புக்கள் தெளிவுபடுத்தப்பட்டன. வாக்கெடுப்பு மற்றும் வாக்கெண்ணல் சந்தர்ப்பங்களுக்கான முகவர்களை நியமனம் செய்தல், சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வேட்பாளர்கள் செயலாற்ற வேண்டிய முறை முதலியன தொடர்பாக குறித்த கூட்டங்களின்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

186. மேற்கூறப்பட்டவாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டபோதும், கடந்த தேர்தல்களைப் போன்றே இம்முறையும் வாக்கெடுப்பு நிலைய முகவர்களையும் வாக்கெண்ணல் முகவர்களையும் நியமனம் செய்வதில் ஏற்பட்ட சிக்கல்கள் வாக்கெடுப்புச் செயன்முறைக்கு தடையாக அமைந்தது. வாக்கெடுப்புப் பிரிவொன்றில் வாக்கெடுப்பு நிலைய முகவர்களை நியமனம் செய்தல் அந்தந்த வாக்கெடுப்புப் பிரிவுக்கு நியமனம் செய்யப்படுகின்ற முகவருடாக மாத்திரம் செய்யப்பட வேண்டுமெனவும் வாக்கெண்ணல் முகவர்களை நியமனம் செய்தல் மாவட்ட அதிகாரமளிக்கப்பட்ட முகவருக்கு மாத்திரம் கையளிக்கப்பட வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டது. விசேட சந்தர்ப்பங்களில் மாத்திரம் தேர்தல் முகவர் அல்லது வேட்பாளர் ஆகிய இருவரில் ஒருவர் குறித்த நியமனத்தைச் செய்ய வேண்டுமென அம்முகவர்கள் அறிவுறுத்தப்பட்டனர். இருப்பினும், ஒரு வாக்கெடுப்புப் பிரிவுக்கு வாக்கெடுப்பு நிலைய முகவர்களை நியமனம்செய்யும் அதிகாரம் கையளிக்கப்பட்ட வேட்பாளரை போன்றேஅதிகாரமளிக்கப்பட்ட முகவரினால் நியமனம் செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் அறியக் கிடைத்ததோடு, அதன் காரணமாக குறித்த தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு வாக்கெடுப்பின் ஆரம்பத்திலேயே சிக்கலான நிலைமையொன்று தோன்றியது. இந்நிலைமை வாக்கெண்ணல் முகவர்களை நியமனம் செய்வதிலும் அறிக்கையிடப்பட்டன. அங்கு வாக்கெண்ணல் முகவர்களை நியமனம் செய்வதற்கு அதிகாரமற்றவர்களால் செய்யப்பட்ட முகவர் நியமனங்கள் மற்றும் ஒரு வாக்கெண்ணல் மண்டபத்திற்காக அதிகாரமளிக்கப்பட்ட முகவர் மற்றும் வேட்பாளர் ஆகிய இருவரும் வாக்கெண்ணல் முகவர்களை நியமனம் செய்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. இவ்வாறான சம்பவங்களை சரிசெய்வதற்காக மேலதிக காலமொன்றைச் செலவிடுவதற்கு தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு நேரிட்டமை முழு ஒழுங்கமைப்பின் கட்டமைப்பிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. ஆதலால், இந்நிலைமை இனிவரும் தேர்தல்களில் இடம்பெறாதிருப்பதற்காக கட்சிச் செயலாளர்களுக்கு சட்டத்தால் விதிக்கப்பட்டுள்ள மற்றும் தேர்தல்கள் ஆணையாளரினால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய குறித்த காலப்பகுதிக்குள் முகவர்களின் பட்டியலை தெரிவத்தாட்சி

அலுவலர்களுக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கையெடுப்பதன் முக்கியத்துவம் சுட்டிக்காட்டப்படல் வேண்டும். வாக்கெடுப்பு நிலைய முகவர்கள், வாக்கெண்ணல் முகவர்கள் ஆகியோரை நியமனம் செய்வதற்கு அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளவர்களின் பட்டியல் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் அனைத்து போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களுக்கு முன்கூட்டியே அனுப்பப்பட்டு அவர்கள் தவிர்ந்த வேறு நபர்களினால் முகவர்கள் நியமனம் செய்யப்படாதிருப்பதை உறுதி செய்துகொள்வது மற்றும் அவ்வாறு நியமனம் வழங்கியிருப்பின், அவர்கள் எவ்விதத்திலும் வாக்கெடுப்பு நிலையம் அல்லது வாக்கெண்ணல் நிலைய முகவர்களாக அங்கீகரிக்கப்பட மாட்டார்கள் என அறிவுறுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றைவகுப்பதுமிகவும் பொருத்தமானதாகும்.

தேர்தல் பிரசார நடவடிக்கைகள்

187. சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 68 தொடக்கம் 74 வரையான பிரிவுகளினால் வேட்பாளர் ஊக்குவிப்புக்காக பொதுக் கூட்டங்களை நடாத்தல், ஊர்வலங்களை நடாத்தல் தேர்தலுடன் தொடர்புடைய பிரசாரப் பிரசுரங்களை அச்சிடல், பகிர்ந்தளித்தல், சுவரொட்டிகளைக் காட்சிப்படுத்தல் மற்றும் தேர்தல் அலுவலகங்களைப் பேணிவரல் தொடர்பில் தேர்தல் காலத்தினுள் சில கட்டுப்பாடுகளின் கீழ் அலுவல்களை மேற்கொள்ள வேண்டிய முறையும் வாக்கெடுப்புத் தினத்தன்று அலுவல்களை மேற்கொள்ள வேண்டிய முறையும் குறிப்பிடப்பட்டுள்ளது. தேர்தலொன்று பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர், அனைத்து கட்சிச் செயலாளர்களுடனும் தேர்தல்கள் ஆணையாளர் கலந்துரையாடி ஏற்புடைய நியதிச் சட்டங்களின் பிரதிகளை கட்சிச் செயலாளர்களுக்கு பெற்றுக்கொடுத்தல்,வேட்பு மனுக்கள் கையேற்கப்பட்ட பின்னர் வேட்பாளர்கள், கட்சிச் செயலாளர்கள், தேர்தல் முகவர்கள், அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள், பிரதேச முகவர்கள் ஆகியோரை அறிவுறுத்தல் மற்றும் குறித்த நியதிச் சட்டங்களுக்கமைய செயற்பட வேண்டியதன் முக்கியத்துவம் அவர்களுக்கு தெளிவுபடுத்தப்படும். அத்தோடு, சட்டங்களைச் செயற்படுத்துவதற்குப் பொறுப்பான பொலீஸாருக்கும், பொலீஸ்மா அதிபரினால் வெளியிடப்படுகின்ற அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக தேர்தல்கள் ஆணையாளரினாலும் உரிய சட்டங்கள் மற்றும் தேவையான அறிவுறுத்தல்கள் பொலீஸ் மா அதிபரினூடாக பெற்றுக்கொடுக்கப்படும். ஏதேனுமொரு தரப்பிடமிருந்து தேர்தல் பிரசார அலுவல்கள் தொடர்பான முறைப்பாடொன்று பொலிஸாருக்கு அனுப்பிவைக்கப்படின், அது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து உடனடியாக நடவடிக்கையெடுக்க வேண்டுமென பொலீஸாரிடமிருந்தும் எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், அரசியல் கட்சிகள்/ வேட்பாளர்கள் போன்றே சட்டத்தை செயல்வலுப்பெறச்செய்கின்ற பிரிவுகளும் பிரச்சாரப் பணிகள் தொடர்பில் விதிக்கப்பட்டுள்ள மட்டுப்பாடுகள் நடைமுறைச் சாத்தியமற்றவையெனக் கருதிச் செயற்படுகின்றமை காரணமாக போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்படுகின்றமை ஒரு வழமையாக மாறியுள்ளது. பொதுமக்கள் நடமாடுகின்ற இடங்களில் உருவப்படங்களையும், பதாகைகளையும் காட்சிப்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ள போதிலும், அதனை அலட்சியப்படுத்தி செயற்பட்ட சந்தர்ப்பங்களும் இத்தேர்தலின்போது அறிக்கையிடப்பட்டன.

188. எவ்வாறிருப்பினும், சட்டங்களை செயல்வலுப்படுத்துகின்ற பணிகளுக்குப் பொறுப்பாக செயற்படுகின்ற பொலீஸாருக்கும் அன்றாட வழமையான கடமைகளுக்கு மேலதிகமாக இரண்டு மாதங்கள் வரையான தேர்தல் காலப்பகுதியினுள், பொதுமக்களின் பிரதிநிதிகளுக்கும் மற்றும் வேட்பாளர்களுக்கும் பாதுகாப்பு வழங்குதல் போன்ற கடமைகளையும் தேர்தல் ஒழுங்கமைப்புக்குரிய பாதுகாப்பு அலுவல்களையும் மேற்கொள்ள வேண்டியுள்ளமையால், தேர்தல் சட்டங்கள் மீறப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அதற்கு முன்னுரிமை வழங்கி நடவடிக்கை எடுக்கஇடையூறுகள் நிலவுகின்றமைஅவதானிக்கப்பட்டுள்ளது.

189. தேர்தல்கள் ஆணையாளர் கட்சிச் செயலாளர்கள், கட்சி முகவர்கள் ஆகியோருடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களின்போது பொது இணக்கப்பாடு காணப்பட்ட தேர்தல் பிரச்சாரப்பணிகள் தொடர்பான சில கட்டுப்பாடுகளைத் தளர்த்தி வசதிகள் செய்து கொடுக்கப்பட்டபோதும் அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் வழமை போன்று எவ்வித கட்டுப்பாடுகளுமின்றி அலுவல்களை மேற்கொள்வதற்கு கட்சி ஆதரவாளர்கள் முயற்சிக்கின்றமை பிரச்சினையாக மாறியுள்ளது. இச்செயற்பாடுகள் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதில் பாதகமான தாக்கங்களை ஏற்படுத்தும். பெருந்தொகைப் பணத்தைச் செலவுசெய்யக்கூடிய வேட்பாளர்கள் தமது பிரபல்யம் மற்றும் அதிகாரத்தைக் காட்டுவதற்காக இவ்வாறு பாரியளவில் பிரச்சாரப்பணிகளை மேற்கொள்வதன் காரணமாக ஏனைய வேட்பாளர்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக பொலித்தீன் போன்ற பொருள்கள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு செய்யப்படுகின்ற பிரச்சாரப் பணிகள் காரணமாக சூழலுக்கு ஏற்படக்கூடிய தாக்கம் கொஞ்சம்நஞ்சமல்ல. இந் நிலைமையைக் கருத்தில் கொண்டு இவ்வாறான அலுவல்களைக் கட்டுப்படுத்துவதற்கு துரித நடவடிக்கையொன்றை எடுக்க வேண்டியுள்ளது. வேட்பாளரொருவருக்கு தேர்தல் சார்பாக செலவு செய்யக்கூடிய உச்சமட்ட நிதி வரம்பை விதித்தல் அனைத்து வேட்பாளர்களுக்கும் தேர்தல் பிரச்சாரப்பணிகளுக்காக சமமான சந்தர்ப்பங்களை வழங்கி சுவரொட்டிகள், உருவப்படங்கள்

போன்றவற்றை ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் காட்சிப்படுத்துவதற்கும் பொது மக்களுக்கு இடையூறுகள் ஏற்படாதவாறு பொது இடமொன்றில் அவற்றைக் காட்சிப்படுத்துவதற்காக அரசினால் இடமொன்றைக் குறித்தொதுக்க முடியுமெனில், இச்சிக்கலுக்கு ஓரளவேனும் தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறின்றேல், குறித்த சட்டத்தை மிகக் கடுமையாக நடைமுறைப்படுத்தக்கூடிய பொறிமுறையொன்றை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

190. தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களை நடாத்துவதற்கு இடங்களைக் குறித்தொதுக்கும்போது வேட்பாளர்களும், அரசியல் கட்சிகளும் முகங்கொடுக்கின்ற பிரச்சினைகள் எண்ணற்றவை. அரச அதிகாரத்துடன் கூடிய அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் ஏனைய தரப்புக்களுக்கு அழுத்தம் கொடுத்து பிரச்சாரப்பணிகளுக்கான அழுத்தம் அனைத்து இடங்களையும் தமது கூட்டங்களுக்காக குறித்தொதுக்கி வைப்பதை வழக்கமாகச் செய்து வருகின்றனர். இதன் காரணமாக அனைத்து வேட்பாளர்களுக்கும் சமமாகப் போட்டியிடும் சந்தர்ப்பங்கள் இழக்கப்படுகின்றன. இதனால் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களுக்காக இடங்களைக் குறித்தொதுக்கி வழங்கும்போது அவற்றின் நிருவாகத்திற்குப் பொறுப்பான அலுவலர்களை அறிவுறுத்தி அனைத்து தரப்புக்களுக்கும் சமமான போட்டிச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்காக அரச சொத்துக்களைப்பயன்படுத்துதல்

191. தேர்தல் காலப்பகுதியினுள் அரசுக்குச் சொந்தமான அசையும் மற்றும் அசையா ஆதனங்கள் தேர்தலில் போட்டியிடுகின்ற ஒரு கட்சியில், சுயேச்சைக் குழுவின் வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பதற்காக ஊக்குவிக்க அல்லது பாதிப்பை ஏற்படுத்த பயன்படுத்துவதைத் தடைசெய்வதற்கான அதிகாரம் அரசியலமைப்பின் 104ஆ(4)(அ) உறுப்புரையின் கீழ் தேர்தல்கள்ஆணைக்குழுக்கு/ தேர்தல்கள் ஆணையாளருக்குள்ளது. அதற்காக தேர்தலில் ஆரம்பத்தின்போதே தேர்தல்கள் ஆணையாளர் மூலம் சனாதிபதியின் செயலாளர், பிரதம அமைச்சரின் செயலாளர்/ அமைச்சரவையின் செயலாளர், கணக்காய்வாளர் தலைமை அதிபதி, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம், அமைச்சுக்களின் மேலதிக செயலாளர்கள், முப்படைத் தளபதிகள், பொலீஸ் மாஅதிபர், அனைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் மாவட்ட பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கும் **பிரதிகள் சகிதம்** அரச ஆதனங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அலுவலர்கள் மற்றும் நிறுவனங்களுக்குத் தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன. அது தொடர்பாக அனுப்பிவைக்கப்பட்டுள்ள **"அரச மற்றும் அரச கூட்டுத்தாபன, நியதிச்சட்ட சபைகளுக்குரிய ஆதனங்களை சனாதிபதித் தேர்தல் காலப்பகுதியினுள் முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதைத் தடுத்தல் மற்றும் சனாதிபதித் தேர்தல் காலப்பகுதியினுள் அலுவலர்கள், ஊழியர்களை ஆட்சேர்த்தல் / பதவியுயர்த்தல் / இடமாற்றம்செய்தலை மட்டுப்படுத்தல்"**என்ற தலைப்பிலான இலக்கம் PRE/2015/43மற்றும் 2014.11.22 ஆம் திகதிய சுற்றறிக்கை அஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அது **எட்டாம் இலக்க அட்டவணையில்** உள்ளடக்கப்பட்டுள்ளது.

192. தேர்தல் காலக்கெடுவினுள் இச்சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை மீறிச் செயற்படுவதாக பல்வேறு அமைப்புக்களிலிருந்தும் வேட்பாளர்களிடமிருந்தும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை கையேற்பதற்காக தேர்தல்கள் செயலகத்திலும் மாவட்ட செயலகங்களிலும் முறைப்பாடுகளைக் கையேற்கும் நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்ததோடு,மேற்குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரச சொத்துக்கள் கட்சி/ வேட்பாளர்களின் பிரசாரத்திற்காக பயன்படுத்தப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகளுக்குரிய அரச நிறுவனங்கள் விசாரிக்கப்பட்டு தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர், அவ்வாறான அலுவல்களை நிறுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் அரச வாகனங்களையும் கட்டிடங்களையும் முறைகேடாகப் பயன்படுத்தல், அரச அலுவலர்களை வேட்பாளர் ஊக்குவிப்புக்காக ஈடுபடுத்தல், அரச நிதியைப் பயன்படுத்தி கொள்வனவுசெய்யப்பட்ட பொருள்களாதியவற்றை வாக்காளர்கள் மத்தியில் பகிர்ந்தளித்தல், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்ற முத்திரைகளை வேட்பாளர்களின் பிரச்சாரப்பணிகளுக்குப் பயன்படுத்தல், அரச வைபங்களை வேட்பாளர்களின் வெற்றிக்காகப் பயன்படுத்தல், அரச அலுவலர்கள் மூலம் வாக்காளர்களுக்கு அழுத்தம் கொடுத்தல் போன்றவை தொடர்பான முறைப்பாடுகள் கோடிட்டுக் காட்டத்தக்கவையாகும். இவ்வாறான பணிகளை இடைநிறுத்துவதற்காக பொலிஸார் மற்றும் தேர்தல்கள் ஆணையாளரால் ஈடுபடுத்தப்பட்ட விசேட அலுவலர்கள் மூலம் நடவடிக்கையெடுக்கப்பட்டபோதும் சில அரச அலுவலர்கள் மற்றும் பொலீஸ் அலுவலர்களிடமிருந்து இச்சட்டவிரோதச் செயற்பாடுகளுக்கு கிடைக்கப்பெற்ற அனுசரணை காரணமாக அதனை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியுமான நிலைமை காணப்படவில்லை. எனவே இவ்வாறான முறைப்பாடுகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் சம்பந்தமான ஆவணைமொன்றை தேர்தல்கள் செயலகத்தில் பேணிவருவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

193. இவ்வாறான நிலைமை உருவாவதற்கு இலங்கையில் தேர்தல்கள் நடைபெறுகின்ற முறையும் ஒரு காரணமாகும். சனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல், உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல் ஆகிய தேர்தல்கள் அடிக்கடி நடாத்தப்படுவதன் காரணமாக ஏதோவொரு மட்டத்திலான மக்கள் பிரதிநிதி பதவியொன்றை வகித்த வண்ணம் அதிகாரத்திலுள்ளவர்கள் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களை இலக்காகக்கொண்டு அவ்வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்காக தமது பொறுப்பிலுள்ள அரச வளங்களைப் பயன்படுத்துவது பெரும்பாலும் இடம்பெற்று வருகின்றது. இலங்கையில் தொடர்ந்தும் காணக்கூடிய ஒரு போக்கான தேர்தலில் போட்டியிடுகின்ற தமது உறவினர்களை எவ்வாறேனும், வெற்றிபெறச் செய்வதற்காக எடுக்க முடியுமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு அதிகாரத்திலிருப்போர் நடவடிக்கையெடுத்தல் நிலைமையை மேலும் பாரதூரமான நிலைக்கு இட்டுச் செல்வதற்கு காரணமாயுள்ளது. அழுத்தம் செலுத்துகின்றது.

194. இவ்வாறான நிலைமை உருவாவதற்கு அரச வளங்கள் முகாமைத்துவத்திற்குப் பொறுப்பாகவுள்ள உயர் அலுவலர்கள் தமது பொறுப்புக்களை முறையான மேற்கொள்ளாமை, தேர்தல் நிருவாகிகளால் சுட்டிக்காட்டப்படுகின்ற அறிவுறுத்தல்களைப் பின்பற்றாமை என்பன நேரடியாக தாக்கம் செலுத்தியுள்ளது. பெருமளவான அலுவலர்கள் பக்கச்சார்பற்ற, சுதந்திரமானதும்நீதியானதுமான தேர்தலொன்றுக்காக தேர்தல்கள் ஆணையாளருடன் ஒத்துழைத்தபோதும் சில அலுவலர்கள் தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுறுத்தல்களை ஏற்றுக்கொள்வதற்கு தயக்கம் காட்டுவதுடன் மாத்திரமின்றி அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் அவ்வறிவுறுத்தல்களை பின்பற்றாமல்நடவடிக்கை எடுக்கத்தக்க விதம் தொடர்பில் அவர்களால் அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்ற சந்தர்ப்பங்களும் இல்லாமலில்லை. இந்நிலைமைகளைத் தவிர்த்துக் கொள்வதற்காக தேர்தல்கள் ஆணையாளரினால் வெளியிடப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு மாற்றமாக செயற்படுகின்ற அரச அலுவலர்களுக்கு கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்கத்தக்கவாறானஉரிய சட்டஏற்பாடுகளைசட்டமாக்குதல், வேட்பாளர் ஊக்குவிப்புக்காக அரச வளங்கள் ஈடுபடுத்தப்படுகின்றமை உறுதியாகின்ற வேட்பாளரொருவர் தேர்தலில் வெற்றி பெற்ற போதும் அவரின் உறுப்புரிமையை இடைநிறுத்துதல் போன்றே அவ்வாறானவர்களுக்கு தண்டனை விதித்தலும், இலங்கையில் நடாத்தப்படுகின்ற அனைத்துத் தேர்தல்கள்களையும் விசேடமாக சனாபதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் என்பவற்றை ஒரே தினத்தில் நடாத்துவதற்கானநடவடிக்கைகளை மேற்கொள்ளலும் இந்நிலைமையைக் கட்டுப்படுத்த உதவியாக அமையலாம்.

அச்சுமற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் பயன்பாடு

195. வாக்கெடுப்பொன்று நடாத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் வாக்காளருக்கு பெரும்பாலான தகவல்களை வழங்கல், அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் அல்லது குழுக்கள் மற்றும் வேட்பாளர்கள் தமது வெற்றியின் பின்னர் நாட்டின் அபிவிருத்திக்காக நடைமுறைப்படுத்துகின்ற திட்டங்களை வாக்காளர்களிடத்தில் எடுத்துச்செல்லல் ஊடகங்கள் ஊடாகவே பெரும்பாலும் இடம்பெறுகின்றது. போட்டியிடுகின்ற கட்சிகள்/ குழுக்களின் வேட்பாளர்களுடன் தொடர்புடைய தகவல்களை நடுநிலையாக அறிக்கையிடல் ஊடகங்கள் ஊடாக எதிர்பார்க்கப்படுவதோடு, அவ்வாறின்றி பக்கச்சார்பாக செயற்படுகின்றபோது அது மற்றொரு தரப்பினருக்கு செய்யப்படுகின்ற பாரிய அநீதியாகும். ஊடக நிறுவனங்கள் அரச அல்லது தனியாருக்கு சொந்தமானதாயினும், உண்மையான விடயங்களை உடனுக்குடன் வாக்காளர்களிடம் கொண்டுசெல்வதே அவற்றின் பணியாக அமைதல் வேண்டும். எவ்வாறிருப்பினும், இலங்கையின் அரசியலமைப்பிற்கும் கொண்டுவரப்பட்ட பதினேழாம் திருத்தத்தினூடாக அரசுக்குச் சொந்தமான ஊடகங்கள் ஊடாக தேர்தல் காலத்தின்போது கட்சியொன்றை அல்லது வேட்பாளரொருவரைஊக்குவிக்கத்தக்கதாக அல்லது பாதிப்பை ஏற்படுத்திக்கூடியவாறு நிகழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுமாயின் அல்லது பிரச்சாரம் செய்யப்படுமாயின், அதனைத் தடுப்பதற்காக ஊடக வழிகாட்டுநெறிகளை விதிப்பதற்கும் அவை மீறப்படுகின்றபோது தகுதிவாய்ந்த அதிகாரியொருவரை நியமனம் செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பதினெட்டாம் அரசியலமைப்புத் திருத்தத்தினால் அனைத்து ஊடக நிறுவனங்களுக்கும் ஊடக வழிகாட்டுநெறிகளை விதிப்பதற்கு மாத்திரம் வசதி செய்யப்பட்டுள்ளதோடு, அவை மீறப்படுகின்றபோது மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறிப்பிடப்படவில்லை.

196. சனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில் ஊடகங்களை வழிநடாத்துவதற்காக மேற்கூறப்பட்டவாறு ஊடக வழிகாட்டு நெறிகளை வெளியிடப்பட்டமைக்கு மேலதிகமாக அரச மற்றும் தனியார் ஊடக நிறுவனங்களின் தலைவர்கள்தேர்தல்கள் செயலகத்திற்கு அழைக்கப்பட்டு தேர்தல்கள் ஆணையாளரினால் வாய்மொழி மூலம் அறிவுறுத்தல்களும் பெற்றுக்கொடுக்கப்பட்டன. அதனூடாக சுய கட்டுப்பாடொன்றை ஏற்படுத்திக்கொள்வதற்கான சந்தர்ப்பங்களை வழங்க எதிர்பார்க்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக ஊடக வழிகாட்டுநெறிகள் மீறப்படுகின்ற சந்தர்ப்பங்கள் தொடர்பில் கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகள் குறித்த நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு அவை தொடர்பாகவும் அறிவுறுத்தப்பட்டன. எவ்வாறிருப்பினும்,

அரச ஊடக நிறுவனமொன்று ஊடக வழிகாட்டுநெறிகளை மீறி தேர்தல்தினத்தன்று செயற்பட்ட சந்தர்ப்பமொன்றின்போது தேர்தல்கள் ஆணையாளர் நேரடியாக அந்நிறுவனத்திற்குச் சென்று அப்பிரச்சாரத்தை நிறுத்துவதற்கானபணிகளை மேற்கொள்ள நேரிட்டமையும்2015 சனாதிபதித் தேர்தல் காலத்தில் நிகழ்ந்தது.

197. நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றுக்கான ஒத்துழைப்பு வழங்க ஊடக நிறுவனங்கள் அரசாங்கத்திற்குச் சொந்தமானவையா அல்லது தனியாருக்குச் செந்தமானவையா என்பது முக்கியமானதல்ல என்பதோடு, தேர்தல்கள் ஆணையாளரினால் வெளியிடப்படுகின்ற ஊடக வழிகாட்டுநெறிகள் மீறப்படும் விதத்தில் அவ்வாறான நிறுவனமொன்று செயற்படுமாயின், முதலாவது சந்தர்ப்பத்தின்போது அவ்வாறு செயற்படாதிருக்குமாறும், ஊடக வழிகாட்டுநெறிகளுக்கு அமைவாக செயற்படுமாறும் அறிவிக்க முடியும். அவ்வாறு செயற்படாவிடினின், தேர்தல் நிறைவடையும் வரை தேர்தலுடன் தொடர்புடைய செய்திகளை அறிக்கையிடுவதை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்படுமென அறிவித்தல் கொடுப்பதற்கும் அதன் பின்னரும் ஊடக வழிகாட்டுநெறிகளை அலட்சியப்படுத்தும் வகையில் செயற்படுகின்றபோது தேர்தல் நிறைவடையும் வரை தேர்தலுடன் தொடர்பான செய்திகளை அறிக்கையிடுவதை இடைநிறுத்த முடியுமான விதத்தில் சட்டங்களை இயற்றுவதும் இது தொடர்பில் முக்கியமாகும். அவ்வாறின்றேல் ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகளினால் பாதிப்புக்குள்ளாகின்ற அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளர்கள் சார்பாக தேர்தல்கள் திணைக்களத்தினால் மேற்கொள்ளக்கூடிய தலையீடு மிகக் குறைந்த மட்டத்திலேயே காணப்படும்.

தேர்தல் காலப்பகுதியில் அரச வைபவங்களை நடாத்துதல்

198. தேர்தல் காலப்பகுதியில் மாவட்ட மட்டத்தில் நடாத்தப்படுகின்ற பல்வேறு அரச வைபவங்களை ஒழுங்குசெய்யும் பணி அரச அலுவலர்களினால் மேற்கொள்ளப்படல் வேண்டும். குறிப்பாக தேர்தலொன்றின் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரான அரசாங்க அதிபர்/மாவட்ட செயலாளர் பெரும்பாலும் இவ்வைபவங்களை ஒழுங்குசெய்வதில் முன்னணி வகிப்பார். இவ்வாறான வைபவங்களில் கலந்துகொள்கின்ற மக்கள் பிரதிநிதிகள் அரச தரப்பைப் பிரதிநிதித்துவப்படுத்தி தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களை ஊக்குவிக்கின்ற விதத்தில் உரையாற்றுதல் பொதுவாக இடம்பெறுவதோடு, பெரும்பாலும் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் பங்கேற்பையும் காண முடியும். இவ்வாறான ஒரு நிலைமையில் தேர்தல்களை ஒழுங்கமைக்கின்ற அலுவலர்கள் அவ்வாறான வைபவங்களை ஒழுங்குசெய்வதை எவ்விதத்தில் நியாயப்படுத்த முடியும் என்பது ஒரு பிரச்சினையாகும். இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் அரச அலுவலர்களுக்கு தேர்தல்கள் திணைக்களமும் மறைமுகமான விதத்தில் அரச தரப்பை ஊக்குவிப்பதற்கு இடமளித்துள்ளதென வாக்காளரிடத்திலே தவறான ஒரு கருத்து தலையெடுக்க முடியும். இவ்வாறான நிலைமைகள் இத்தேர்தலின் போதும் பல்வேறு மாவட்டங்களில் ஏற்பட்டதன் காரணமாக தேர்தல்கள் ஆணையாளருக்கு அது தொடர்பில் தலையிட்டு அவற்றை இடைநிறுத்துவதற்கோ அல்லது பிற்போடுவதற்கோ அல்லது, அவ்வாறான பணிகளுக்குதெரிவத்தாட்சி அலுவலர்களாகப்பணியாற்றுகின்ற அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்களை எவ்விதத்திலும் கலந்துகொள்ளக் கூடாதென்றோ, உரிய பிரிவினரை அறிவுறுத்த நடவடிக்கையெடுக்கப்பட்டது. தேர்தல் காலப்பகுதியில் வைபவங்களை நடாத்துவதன் மூலம் வேட்பாளர் ஊக்குவிப்பை மேற்கொள்வது தேர்தல் சட்டங்களுக்கு அமையவும் தவறான செயலொன்றென்பதால், அத்தியவசியமான, முன்னரே திட்டமிடப்பட்ட வைபவங்களைக்கூட அரசியல் கட்சி முகவர்கள் அல்லது வேட்பாளர்களின் பங்கேற்பின்றி மேற்கொள்ள வேண்டுமென சட்டங்கள் விதிக்கப்படல் வேண்டும். தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் தேசிய மட்டத்தில் நடாத்தப்படுகின்ற பொது வைபவங்கள் தவிர வேறு எவ்வைபவத்தையும் தேர்தல்கள் ஆணையாளரின் அனுமதியின்றி ஒழுங்கமைக்க கூடாதென்பதோடு, அதற்கமைய செயற்படாத அரச அலுவலர்கள் தொடர்பில் உரிய ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்கத் தக்க விதத்தில் சட்டத் திருத்தங்களை மேற்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கையெடுத்தலும் வேண்டும்.

அனைத்து தகைமைகளையும் கொண்ட பிரசைகள் உள்ளடங்கிய தேர்தல் செயற்பாடு

199. சனாதிபதி தேர்தலுக்குரிய சட்ட ஏற்பாடுகள் அரசியலமைப்பிலும், 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளன. சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 107 ஆம் பிரிவிற்கமைய தேர்தல் நடாத்தலை நிருவகிப்பதற்காக தேர்தல்கள் ஆணையாளர் வசமுள்ள அதிகாரங்கள் விளக்கப்பட்டுள்ளன. தேர்தலொன்றின் பூர்வாங்க அலுவல்களை ஒழுங்கமைத்தல் தொடர்பாகவும் குறிப்பாக தேர்தல் செயன்முறைகளிலுள்ள தவறுகள், ஊழல் பழக்கங்கள் மற்றும் சட்டமுரணான பழக்கங்கள் மற்றும் அவை மீறப்படுகின்ற போது விதிக்கப்படக்கூடிய தண்டனைகள் தொடர்பிலும் சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 66 ஆம் பிரிவிலிருந்து 87 ஆம் பிரிவு வரையுள்ள பிரிவுகளில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

200. பதினேழாவது மற்றும் பதினெட்டாவது அரசிலயமைப்புத் திருத்தங்களுக்கமைய தேர்தல் ஆணைக்குழு தாபிக்கப்படும் வரை அதனோடு தொடர்புடைய அதிகாரங்களைப் பிரயோகிக்கும் பொறுப்பு, தேர்தல்கள் ஆணையாளருக்கு உரித்தாக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 103(2) ஆம் உறுப்புரைக்கமைய நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துதல் ஆணைக்குழுவின் குறிக்கோளாதல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 104ஆ உறுப்புரையில் தேர்தல் ஆணைக்குழுவின் தத்துவங்களும், கடமைகளும் பொறுப்புக்களும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதோடு, ஏதேனுமொரு தேர்தலை அல்லது மக்கள் தீர்ப்பை நடாத்துவதற்குரிய அனைத்துச் சட்டங்களையும் செயல்வலுப்பெறச்செய்தலும் பாதுகாத்தலும் தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பொறுப்பொன்றாக இருக்க வேண்டுமெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதற்கமைய சட்டங்களை செயல்வலுப்பெறச் செய்வதற்காக ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்குவது சட்டங்களை செயல்வலுப்பெறச் செய்வதற்கு பொறுப்பாகவுள்ள அரச அலுவலர்களின் பணியொன்றென அரசியலமைப்பின் 104ஆ(2) ஆம் உறுப்புரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

201. அரசியலமைப்பின் 104இ உறுப்புரைக்கமைய தேர்தல் ஆணைக்குழுவுக்கு தேர்தல் சந்தர்ப்பமொன்றின்போது பொலீஸாரை ஈடுபடுத்திக் கொள்வதற்குள்ள அதிகாரங்கள் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்பட்டு நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு அனைத்து பொலீஸ் அலுவலர்களும் ஆணைக்குழுவுக்கு வகைகூறக் கடமைப்பட்டுள்ளதோடு, ஆணைக்குழுவின் கட்டளைகளுக்கும் நிருவாகத்திற்கும் உட்படுவர். சனாதிபதித் தேர்தல் சட்டத்தின் 119அ உறுப்புரைக்கமையவும் தேர்தல்கள் ஆணையாளரின் கட்டளைக்கமைய செயற்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலே காட்டப்பட்டுள்ள சட்ட ஏற்பாடுகளுக்கமைய சனாதிபதித் தேர்தல் சட்டத்தினால் உரித்தாக்கப்பட்டுள்ள சட்டத்தை செயல்வலுப் பெறச்செய்யும் பொறுப்பு உரித்தாக்கப்பட்டுள்ள தேர்தல்கள் ஆணையாளர், பொலீஸ் மாஅதிபர் மற்றும் அரச அதிகாரிகள் ஆகிய அனைவரும் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றுக்காக அலுவல்களை மேற்கொள்ளல் வேண்டும். இருப்பினும், சனாதிபதித் தேர்தலின் போது இராணுவ பாதுகாப்புப் படைகள் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படை தொடர்பில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுவது விசேடமானதாகும். குறிப்பாக குறிப்பிடப்படவேண்டிய விடயம், பாதுகாப்புப் படைகள் தேர்தல் ஒழுங்கமைப்புப் பணிகளில் பங்கு கொள்ளச்செய்வது அவசியமெனத் தேர்தல்கள் ஆணையாளர் தீர்மானித்தால் மாத்திரமே அது தொடர்பில் சனாதிபதி அவர்களை அறிவுறுத்தி அவரின் அனுமதியின் பிரகாரம் பாதுகாப்புப் படைகளின் சேவையைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். மேலும் பொலீஸ் விசேட அதிரடிப்படை பொலிஸ்மா அதிபரின் கீழ் காணப்பட்டபோதும் தேர்தலொன்றுக்குரிய வழமையான கடமைகளில் அவர்கள் ஈடுபடுத்தப்படுவதில்லையென்பதோடு, அங்கு தேர்தல்கள் ஆணையாளரின் கோரிக்கையின் அடிப்படையில் விசேட பாதுகாப்பு வழங்கப்படவேண்டிய இடங்கள் காணப்படின், அவற்றை இனங்கண்டு, அவற்றிற்குப் பாதுகாப்பு வழங்குவதற்கு மாத்திரம் ஈடுபடுத்துவது இதுவரையும் காணப்பட்ட வழமையாகும். இருப்பினும் கண்டி, குருநாகல், கொழும்பு ஆகிய மாவட்டங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கமைய அரசாங்க பிரதானிகளின் சட்டரீதியற்ற செயற்பாடுகளை மறைத்து செயற்படுதல், பல்வேறு காரணங்களை முன்வைத்து வாக்காளர்களுக்கு பொருள்களாதியவற்றைப் பகிர்ந்தளித்தல், சட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்துகின்ற அலுவலர்களுக்கு அழுத்தம் கொடுத்து அவ்வலுவல்களைக் குழப்புவதற்கு முயற்சித்தல் போன்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இந்நிலைமையைக் கருத்தில் கொண்டு அவ்வாறான விடயங்கள் இடம்பெறுமாயின், உடனடியாக அவற்றைத் தடுப்பதற்கு நடவடிக்கையெடுக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் பொலீஸ் மாஅதிபருக்கும் அறிவிக்க நடவடிக்கையெடுக்கப்பட்டது. இருப்பினும், பாதுகாப்புப் படை மற்றும் பொலீஸ் விசேட அதிரடிப் படை தொடர்பில் பொதுமக்களிடையே உள்ள நன்மதிப்பு மற்றும் தன்னம்பிக்கையை அதே விதத்தில் பாதுகாக்கதக்க விதத்தில் அந்நிறுவனங்கள் செயற்படுதல் மிக முக்கியமானதென்பது எனது நம்பிக்கையாகும்.

202. சனாதிபதித் தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்டு 7-8 வாரங்களினுள் தேர்தல் நடாத்தப்பட்டு நிறைவுசெய்யப்படவுள்ளதோடு, சனாதிபதித் தேர்தலின்போது வேட்புமனுக் கையேற்கப்பட்ட தினத்திலிருந்து 4 வார காலத்தினுள் வாக்கெடுப்புத் திகதி குறிக்கப்பட்டது. தேர்தலொன்றின் சட்டத்தை செயல்வலுப்பெறச்செய்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள மேலே குறிப்பிடப்பட்ட அலுவலர்கள் இக்காலப்பகுதியினுள் தமது கடமைகளை சரியாக நிறைவேற்றுதல் பிரதானமாக வாக்காளர்கள் மற்றும் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் எதிர்பார்க்கின்ற விதத்தில் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றின்மீது தாக்கம் செலுத்தும். குறித்த பொறுப்புடைய அலுவலர்கள் நிலவுகின்ற சாதாரண நிருவாக முறையைப் பின்பற்றி செயற்பட்டு பாராமுகமாக இருப்பின், அதனூடாக வாக்காளர்களுக்கும் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கும் அநீதி ஏற்படும். பொறுப்புக்கள் அளிக்கப்படுகின்ற அனைத்து அலுவலர்களும் சிறந்த ஒருங்கிணைப்புடன் தமது பொறுப்புக்களை மிகுந்த அர்ப்பணிப்போடு ஆற்றுவதோடு, ஏனைய அலுவலர்களையும் அது தொடர்பில் ஊக்கப்படுத்துவதன் மூலம் இந்நிலைமையைத்

தவிர்த்துக்கொள்ளலாம். அவ்வாறல்லாத சந்தர்ப்பங்களில் வாக்காளர்கள், அரசியல் கட்சிகள்/ வேட்பாளர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களும் ஏற்படுகின்ற அநீதிக்கு எதிராக தேர்தல்கள் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்வதோடு, இத்தேர்தலின் போதும் அவ்வாறான நிலைமையொன்றைக் காணக்கூடியதாக இருந்தது.

203.1 ஆசிய வலயத்தில் சர்வசன வாக்குரிமையைநடைமுறைப்படுத்தும் முன்னணி நாடொன்றாக இலங்கை சாதனை படைத்துள்ளபோதும் தேர்தல் சட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்படும் தடைகள் காரணமாக நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்குத் தேவையான சூழலொன்று உருவாகாமை காரணமாகவும், இலங்கையில் நடைமுறையிலுள்ள தேர்தல் சட்டங்களில் குறிப்பாக வாக்குகளை அடையாளமிடும்போது பின்பற்றப்படவேண்டிய பல்வேறு வகையான அறிவுறுத்தல்கள் காரணமாகவும் வாக்கினை அடையாளமிடும்போது நிராகரிக்கப்படுகின்ற வாக்குகளின் எண்ணிக்கை உயர் பெறுமானமொன்றைக் கொள்கிறது. புதிய சட்டத் திருத்தத்தின்படி வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிப்பதற்கு ஆளடையாள ஆவணமொன்றைச் சமர்ப்பிக்க வேண்டுமென்ற தேவைப்பாடு காரணமாக, தேர்தல் செயற்பாடு மிகவும் ஒழுங்குபடுத்தப்பட்டபோதும் அது தொடர்பில் வாக்காளர்கள் அறிந்திராமை காரணமாக வாக்கெடுப்புத் தினத்தில் வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களிக்க முடியாதவர்கள் தொடர்பாகவும் கடந்த தேர்தல்களின்போது அறியக் கிடைத்தமையால், 2012, 2013, 2014 ஆகிய ஆண்டுகளில் நடாத்தப்பட்ட மாகாண சபைத் தேர்தல்களின்போது நடைமுறைப்படுத்தப்பட்ட முறையிலும் அதன் மேலுமொரு படியாக வாக்காளர்களை அறிவுறுத்துவதற்காக "வாக்கு உங்கள் உரிமை" என்ற விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டமொன்றைசனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில் நடைமுறைப்படுத்த தேர்தல்கள் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

203.2. நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றுக்குத் தேவையான சூழலை உருவாக்குதல், வாக்களிப்பதற்காக வாக்காளர்கள் வாக்கெடுப்பு நிலையத்திற்குச் செல்லும்போது எடுத்துச்செல்ல வேண்டியவை மற்றும் வாக்களிக்கவேண்டிய விதம் தொடர்பில் வாக்காளர்களை அறிவுறுத்துதல் இதன் நோக்கமாக அமைந்தது. வாக்காளர்களுக்கு தமது வீட்டிலிருந்து வாக்கெடுப்பு நிலையம் வரை எவ்வித தடங்கல்களுமின்றிச் செல்வதற்கும் வாக்கெடுப்பு நிலையத்தில் தமக்கு விருப்பமான விதத்தில் நீதியாகவும் சுதந்திரமாகவும் வாக்களிப்பதற்குத் தேவையான சூழல் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் பொலீஸார் கூட்டாக ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்களென்ற உணர்வை வாக்காளர்களிடத்தில் ஏற்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்பட்டது. வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று தமது வாக்கைப் பிரயோகிக்கின்ற வாக்காளர்களையும் அஞ்சல் மூலம் வாக்களிக்கின்ற வாக்காளர்களையும் அறிவுறுத்துவதற்கும், அஞ்சல் வாக்கு நடைமுறை தொடர்பில் அரசியல் கட்சிகள்/ வேட்பாளர்கள் போன்றே, அஞ்சல் வாக்காளர்களிடத்திலுள்ள ஐயத்தை/ நம்பிக்கையீனத்தை இல்லாதொழிப்பதற்கும் அவ்வலுவல்கள் வெளிப்படையாக மேற்கொள்ளப்படுவதாக குறித்த தரப்புக்களை அறிவுறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

203.3. வாக்களிப்புச் செயன்முறை தொடர்பில் குறைந்த புரிந்துணர்வொன்றைக் கொண்டுள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களின் வாக்காளர்கள் போன்றே, தோட்டப்பகுதிவாழ் தமிழ் மக்களையும் நகர்ப்புறங்களில் அரச மற்றும் தனியார் துறையில் பணியாற்றுகின்றவர்களையும் கொழும்பு, கண்டி போன்ற பிரதான நகரங்களைச் சூழ தனியார் துறையில் பணியாற்றுகின்றவர்களையும் சனாதிபதித் தேர்தலோடு தொடர்புடையதாக ஏற்கனவே வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்ற அனைத்து நகரங்களிலும் குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்கள், சிலாபம், ஆரச்சிகட்டுவ, வென்னப்புவ, மாதம்பை, வத்தேகம, கம்பளை, நாவலப்பிட்டி, கல்னேவ, எப்பாவல, வந்துரம்ப, அம்பாந்தோட்டை, அம்பலாந்தோட்டை, பொலனறுவை, மொணராகலை, பிபிலை ஆகிய பகுதிகளின் மக்களையும் அறிவூட்டுவதற்கும் பொதுவாக மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள், மாவட்ட பிரதி/உதவி தேர்தல்கள் ஆணையாளர்களின் ஒருங்கிணைப்பில் வாக்காளர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இந்நிகழ்ச்சித்திட்டங்களை 2014.12.27 ஆம் திகதி தொடக்கம் 2015.01.05 ஆம் திகதி வரை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டபோதும் பொதுமக்களை அறிவுறுத்தும் பணிகளை குறித்த காலப்பகுதியினுள் நிறைவுசெய்ய முடியாத நிலையைக் கருத்திற்கொண்டு வாக்காளர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் வாக்கெடுப்பு தினம் பி.ப 2.00 மணி வரையும் நடைமுறைப்படுத்தப்பட்டது. தேர்தலுக்கு அண்மித்த தினங்களிலும் தேர்தல் தினத்திலும் வாக்காளர்களை அறிவுறுத்தல் தொடர்பில் போட்டியிட்ட சில வேட்பாளர்களின் தரப்புக்களிலிருந்து விமர்சனங்கள் தெரிவிக்கப்பட்டன. குறிப்பிட்ட நடவடிக்கைகள் தொடர்பில் எதிர்ப்பை வெளியிட்டு முன்வைக்கப்பட்ட சில கோரிக்கைகளை அழுத்தங்களாகவும் வகைப்படுத்த முடிந்தது. இருப்பினும், அனைத்து வாக்காளர்களையும் அறிவுறுத்தி அதிகூடிய எண்ணிக்கையான வாக்காளர்களை வாக்களிப்பதற்கு ஆர்வமூட்டல் நீதியானதும்

சுதந்திரமானதுமான தேர்தலொன்றுக்கு அத்தியாவசியமானது என்பது தேர்தல்கள் திணைக்களத்தின் நிலைப்பாடாக இருந்தது.

203.4. "வாக்கு உங்கள் உரிமை" என்ற நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது அவ்வாறானதொன்றை ஒழுங்குபடுத்துவது தொடர்பில் பொதுமக்களிடமிருந்து தேர்தல்கள் திணைக்களத்திற்குக் கிடைக்கப்பெற்ற ஒத்துழைப்பு மிக உயர் மட்டத்தில் காணப்பட்டது. இதன் காரணமாக எதிர்வரும் அனைத்துத் தேர்தல்களிலும் வாக்காளர்களை அறிவுறுத்துவதை தேர்தல்கள் திணைக்களத்தின் அடிப்படைப் பணியொன்றாக ஆக்குவது போன்றே அதற்கு தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் மற்றும் கிராமிய மட்டத்தில் காணப்படுகின்ற தொண்டர் அமைப்புக்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொண்டு அமைக்கப்படுகின்ற வலையமைப்பொன்றினூடாக இப்பணியை கட்டாயமாக ஆற்ற வேண்டியுமுள்ளது.

204. அரசியலமைப்பின் 104இ உறுப்புரைக்கமைய பொலீஸ் அலுவலர்களுக்குக் உரித்தாக்கப்படுகின்ற கடமைகளை நிறைவேற்றும்போது அவர்கள் தேர்தல் ஆணைக்குழுவிற்கு பொறுப்புக்கூறக் கடமைப்பட்டுள்ளதோடு, தேர்தல்கள் ஆணையாளரினால் அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட அனைத்து அரச மற்றும் நியதிச்சட்ட சபைகளின் அலுவலர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட அரச வளங்களைப் பயன்படுத்துவதைத் தடுத்தலுடன் தொடர்புடையதாக வெளியிடப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய அனைத்து அரச அலுவலர்களும் அப்பொறுப்புக்குக் கட்டுப்பட்டுள்ளனர். தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள் இவ்வாறான தேர்தல் சட்டங்கள் மீறப்படுகின்ற சந்தர்ப்பங்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கும் குறித்த அரச அலுவலர்களுக்கும் அறிவுறுத்தல்களை வழங்கினர். இருப்பினும், மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்களிடமிருந்தும் பொதுமக்களிடமிருந்தும் தேர்தல்கள் ஆணையாளருக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளிலிருந்து பொலீஸாரும் அரச அலுவலர்களும் தேர்தல்கள் ஆணையாளரின் கட்டளைகளை அதேவிதத்தில் செயற்படுத்தத் தவறியுள்ளார்களென்பது உறுதிசெய்யப்பட்டது. பொலீஸ் அலுவலர்களுக்கு தேர்தலின்போது கையளிக்கப்படுகின்ற பணிப்பொறுப்புக்கள் தொடர்பாக பொலிஸ்மா அதிபர் மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் ஆகியோர் தேவையான அறிவுறுத்தல்களை பெற்றுக்கொடுத்திருந்ததோடு நாட்டின் அடிப்படைச் சட்டமான அரசியலமைப்பிலும் குறித்த சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளபோதிலும் தொடர்ந்தும் தேர்தல் சட்டங்கள் மீறப்படுதல் தொடர்பில் மௌனமான போக்கொன்றைப் பின்பற்றுவது சனநாயக தேர்தல் முறைமைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் அதேவிதத்தில் ஏனைய அரச அலுவலர்களும் தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுறுத்தல்களை பின்பற்றியொழுகுதல் தொடர்பில் காட்டும் அசமந்த போக்கு நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை அத்தாட்சிப்படுத்துவதற்கு தடையாக உள்ளது. சில அலுவலர்கள் அறிவுறுத்தல்களை நடைமுறைப்படுத்தாமை அல்லது தாமதப்படுத்தியமையோடு நின்றுவிடாமல், அவ்வறிவுறுத்தல்களின் சிறிய இடைவெளிகளைப் பயன்படுத்தி செயற்படக் கூடிய விதத்தை அரசியல் கட்சிகள்/ வேட்பாளர்களுக்கு சுட்டிக்காட்டியுள்ள சந்தர்ப்பங்களும் இல்லாமலில்லை. இந்நிலை தொடர்பாக அவதானத்தோடிருந்துதேர்தல் காலப்பகுதியினுள் பொலீஸ் அலுவலர்களின் செயற்பொறுப்பு உரிய விதத்தில் மேற்கொள்ளப்படவில்லையென கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகளைக் கையேற்றல் மற்றும் விசாரித்தல், அது தொடர்பான குற்றவாளிகளுக்கெதிராக சட்டரீதியான அலுவல்களை மேற்கொள்வதற்குத் தேவையான அதிகாரத்தை பொலீஸ் ஆணைக்குழுவிடம் கையளிப்பதன் மூலமும் தேர்தல் காலப்பகுதியின்போது தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுறுத்தல்களைக் கவனத்திற்கு கொள்ளாது செயற்படுகின்ற இதர அரச அலுவலர்களுக்கெதிராக நடவடிக்கைகளையெடுப்பதற்கு அரச அலுவலர்களின் ஒழுக்கநெறி அலுவல்களுக்குப் பொறுப்பான பிரிவுக்குக் கையளிப்பதன் மூலமும் நீதியான மற்றும் சுதந்திரமான தேர்தலொன்றுக்கான சூழ்நிலையையுருவாக்கவேண்டியுள்ளது.

XIIIஆம் பகுதி

மதிப்பீடு

205. இதுவரை நடாத்தப்பட்ட சனாதிபதித் தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் மிகக் குறுகிய காலத்தினுள் ஒழுங்கமைப்புச் செய்ய வேண்டியிருந்த சனாதிபதித் தேர்தல் இச்சனாதிபதித் தேர்தலாக இருந்தபோதும், ஒட்டுமொத்த அரச சேவையில் கூட்டாகச் செயற்படும் பண்பு காரணமாக தேர்தலுக்குரிய அலுவல்கள் ஒழுங்கமைப்பின்போது தேர்தல்கள் திணைக்களத்திற்கு பாரிய தடைகளுக்கு முகங்கொடுக்க நேரிடவில்லை. அனைத்து அமைச்சினதும் திணைக்களத்தினதும் பிரதானிகள் மற்றும் அரச கூட்டுத்தாபன நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள் உட்பட்ட அனைத்து பணியாட் குழவினரதும் ஒத்துழைப்பு காரணமாக ஏனைய பணியாட்டொகுதியினரின் தொடர்ச்சியான ஒத்துழைப்பு இவ்வலுவலுக்காக தேர்தல்கள் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்றது. தேர்தலொன்றை நடாத்துவதில் தனித்தனியாகவும் கூட்டான அடிப்படையிலும் பொறுப்புக்களை ஏற்று அலுவல்களை மேற்கொள்வதன் முக்கியத்துவம் மற்றும் விமர்சனங்களுக்கும் குற்றச்சாட்டுக்களுக்கும் இடங்கொடாமல் தேர்தல் கடமைகளில் ஈடுபடுதல் அனைத்து அலுவலர்கள் தொடர்பிலும் சமமான முக்கியத்துவம் கொண்டதாகும். தேர்தல் கடமைகளிலீடுபட்ட எந்தவோர் அலுவலருக்கும் எதிராக முறைப்பாடுகள் கிடைக்கப்பெறாதமையிலிருந்து நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்காக அரச அலுவலர்கள் காட்டிய ஆர்வம் பயனுள்ளதென்பதை வெளிக்காட்டுவதற்கான சாத்தியம் கிடைக்கப்பெற்றது. இத்தேர்தலின்போது அரச ஊழியர்கள் செயற்பட்ட விதத்தைப் போன்றே அவர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற மிகச் சிறப்பான ஒத்துழைப்பு அனைத்துத் தரப்புக்களதும் மதிப்புக்கும் பாராட்டுதல்களுக்கும் உட்பட்டதென்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிட்டாதல் வேண்டும்.

206. குறிப்பாக மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள் ஒத்துழைப்பு வழங்கியதோடு, 22 தேர்தல் மாவட்டங்களுக்குரிய தெரிவத்தாட்சி அலுவலர்களும் தமது பொறுப்புக்களை மிக உயர்ந்த அடிப்படையில் தமது பணிகளை ஆற்றினர். அவர்கள் அனைவரும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட கடமைகளை சிறப்பாகத் திட்டமிட்டு முறகூட்டியே பணிகளை நிறைவு செய்வதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளை மெச்சுதல் வேண்டும். மாவட்ட மட்டத்தில் தெரிவத்தாட்சி அலுவலர்களின் பிரதான உதவியாளர்களான மாவட்ட சிரேட்ட பிரதி/ பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொண்டு மிகவும் அர்ப்பணிப்போடு அலுவல்களை மேற்கொண்டதோடு, அல்லும்பகலும் அலுவல்களை மேற்கொண்டு தேர்தல் பணிகளை சிறப்பாக நிறைவேற்றுவதில் காட்டிய ஆர்வத்தை மெச்சுதல் வேண்டும். தேர்தலுக்குரிய அனைத்து அலுவல்களையும் ஒழுங்கமைப்பது அனைத்து மாவட்டங்களதும் சிரேட்ட அலுவலர்கள், தெரிவத்தாட்சி அலுவலருக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்கினர். மேலே குறிப்பிடப்பட்ட அரச சேவையின் அனைத்து அலுவலர்களும் கூட்டுத்தாபனங்கள்/ சபைகளின் அனைத்து அலுவலர்களும் தேர்தல் அலுவல்களை சிறப்பாக மேற்கொள்வதற்கு வழங்கிய ஒத்துழைப்பையிட்டு விசேடமாக நன்றிகளைத் தெரிவிக்க வேண்டும்.

207. தேர்தல் அலுவல்கள் தொடர்பில் செயலாற்றுவதற்கு பொலீஸ் மாஅதிபரினால் சிரேட்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் ஒருவரின் கீழ் தனியான ஒரு பிரிவு தாபிக்கப்பட்டிருந்ததோடு, தேர்தல் கால இரண்டு மாதங்களினுள் பொலீஸாருக்கு ஒப்படைக்கப்படுகின்ற சாதாரண கடமைகளை ஆற்றுவதற்கு மேலதிகமாக பொலீஸ் திணைக்களத்தின் மொத்த பணியாட்டொகுதியினர், தேர்தலுடன் தொடர்புடைய சட்டமுரணான செயல்களை தடுக்கும் மற்றும் வாக்கெடுப்பு மற்றும் வாக்கெண்ணல் தொடர்பான கடமைகளிலீடுபடுத்தப்பட்டனர். நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை உறுதிசெய்வதற்காக பொலீஸார் செயற்பட்ட விதம் பாராட்டத்தக்கது.

208. தேர்தலுக்குரிய அனைத்து அச்சிடல் பணிகளும் அரசாங்க அச்சகத் திணைக்களத்தினால் ஆற்றப்பட்டன. தேர்தல் அறிவித்தல் பிரகடனப்படுத்தப்படுவதற்கு அண்மித்த காலத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட அப்பணிகள், அனைத்தும் சட்டதிட்டங்கள், அறிவுறுத்தல் பத்திரங்கள், படிவங்கள் அச்சிடல் என்பவற்றின் இரகசியத்தன்மை 100 வீதம் பாதுகாக்கப்பட்டு தேர்தலுக்குரிய வாக்குச்சீட்டு அச்சிடலையும் உரிய காலத்தினுள் அச்சிட்டு வழங்கிய அரசாங்க அழுத்தகர் மற்றும் அவரின் பணியாட்டொகுதியினர் வழங்கிய ஒத்துழைப்புக்கு நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

209. தேர்தல்கள் ஆணையாளரின் வேண்டுகோளின் பிரகாரம் தேர்தல் தொடர்பான அறிவித்தல் வெளியிடப்பட்டதிலிருந்து இலவச அஞ்சல் வசதிகளைப் பெற்றுக்கொடுத்து மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர்கள், தேர்தல்கள் திணைக்களத்தின், அரச நிறுவனங்களின் மற்றும் வேறு நிறுவனங்களின் வாக்காளர்களிடையில் பரிமாறப்படும் மிக முக்கியமான ஆவணங்களை உரிய பிரிவுகளுக்கு பாதுகாப்பாக கையளிக்கப்படும் பணிகள் அஞ்சல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டன. அதன்கீழ் 15,044,490

வாக்காளர்களுக்கு உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை அவர்களின் வீட்டு முகவரியில் ஒப்படைப்பதற்கும் அஞ்சல் வாக்காளர்களுக்கான அஞ்சல் வாக்குச்சீட்டுக்களை உள்ளடக்கிய 541,452 வாக்குச்சீட்டுக்கள் அடங்கிய உறைகளை குறித்த அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் அலுவலகங்களுக்குப் பகிர்ந்தளித்தல் மற்றும் வாக்குச்சீட்டுக்கள் அடையாளமிடப்பட்டதன் பின்னர் மீண்டும் குறித்த மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர் அலுவலகங்களுக்கு அனுப்பிவைத்தல், 200,000 அணிமித்த எண்ணிக்கையான தேர்தல் அலுவலர்களின் நியமனக் கடிதங்களை உரிய காலப்பகுதியினுள் குறித்த அலுவலர்களுக்கு அனுப்பிவைத்து தேர்தல் அலுவல்களை சிறப்பாக ஆற்றிக்கொள்வதற்கு அஞ்சல் மாஅதிபர் உள்ளிட்ட அவரின் பணியாட்டொகுதியினர் வழங்கிய ஒத்துழைப்பை நன்றியோடு நினைவு கூருதல் வேண்டும்.

210. இலங்கை புகையிரத திணைக்களம், இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை, தனியார் பஸ் வண்டி உரிமையாளர்கள் சங்கம் என்பன வாக்காளர்களையும் தேர்தல் அலுவலர்களையும் வாக்கெடுப்பு நிலையத்திற்கும் மீண்டும் அவர்களின் வீடுகளுக்கும் போக்குவரத்து செய்வதற்காக வழங்கிய ஒத்துழைப்பையும், இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையும் தனியார் பஸ் வண்டி உரிமையாளர்கள் சங்கமும் விசேட விலையின் கீழ் வாக்குப் பெட்டிகளையும் வாக்கெடுப்பு நிலைய பொறுப்பு அலுவலர்களையும் போக்குவரத்துச் செய்வதற்காக வழங்கிய ஒத்துழைப்பையும் மெச்சுதல் வேண்டும்.

211. யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தின் தீவகப் பகுதிகளில் அமையப்பெற்றுள்ள வாக்கெடுப்பு நிலையங்களுக்கும் புத்தளம் மாவட்டத்தின் பத்தலன்குண்டுவ வாக்கெடுப்பு நிலையத்திற்கான வாக்குப்பெட்டிகள் உள்ளிட்ட பாதுகாப்பான பொருள்களையும் வாக்கெடுப்பு நிலைய அலுவலர்களையும் போக்குவரத்துச் செய்வதற்காக தேர்தல்கள் ஆணையாளரின் கோரிக்கைக்கமைய கடற்படையினர் வழங்கிய ஒத்துழைப்பையும் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தின் தீவுகளிலிருந்து வாக்குப் பெட்டிகளை மீளக் கொண்டுவருவதற்கு இலங்கை விமானப்படை வழங்கிய ஒத்துழைப்பையும் பெரிதும் மெச்சுதல் வேண்டும்.

2015, சனவரி 08 ஆந் திகதி நடாத்தப்படவிருக்கும் சனாதிபதித் தேர்தல் சார்பான அனைத்து பிரசார நடவடிக்கைகளும், 2015.01.05 ஆந்திகதி நள்ளிரவு 12.00 மணியுடன் முடிவடையவுள்ளன. தேர்தலொன்றின்போது மௌன காலப்பகுதியெனக் குறிப்பிடப்படும் அதிலிருந்து வாக்கெடுப்பு முடிவடையும் வரையிலான காலப்பகுதியினுள் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களினூடாக எந்தவொரு வேட்பாளரையும் ஊக்குவிக்கும் வகையில் அல்லது பின்னடையச் செய்யும் வகையிலான எந்தவொரு பிரசாரத்தையும் மேற்கொள்ளக்கூடாது. ஆயினும், 2015.01.05 ஆந் திகதி சனாதிபதி வேட்பாளர்களது இறுதிப் பிரசார நடவடிக்கைகள் இடம்பெறுமாதலால் அவற்றின் தகவல்களை மாத்திரம் 2015.01.06 ஆந் திகதி வெளியிட/ பிரசாரப்படுத்த இடமளிக்க முடியும். அன்றைய தினம் வேறு கட்சிகளின்/ வேட்பாளர்களின் பிரசார வர்த்தக அறிவித்தல்கள், அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த விவரணங்கள்/கடிதங்கள்/நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவற்றை வெளியிடுவதிலிருந்து அல்லது பிரசாரப்படுத்துவதிலிருந்து தவிர்ந்திருத்தல் வேண்டும்.

இலத்திரனியல் ஊடகங்களினூடாக 2015.01.06 ஆந் திகதி மற்றும் 07 ஆந் திகதி ஆகிய இரண்டு நாட்களினுள் அத்துடன் 2015.01.08 ஆந் திகதி 1800 மணி வரையிலும் கடந்த காலங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்கள், எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் சார்பான நிகழ்ச்சிகள், வரவு செலவுத் திட்ட யோசனைகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பான நிகழ்ச்சிகள், யுத்த வெற்றி தொடர்பான நிகழ்ச்சிகள் போன்றவற்றை புதிதாக ஒலி/ ஒளிபரப்புவதன் மூலமோ அல்லது மீள் ஒலி/ ஒளிபரப்புவதன் மூலமோ கட்சிகளை/வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் பங்குபற்றிய சமய வைபவங்கள் உள்ளிட்ட பல்வேறு வைபவங்களை மீள் ஒலி/ ஒளிபரப்பாகவோ பிரசாரப்படுத்துவதன் மூலம் கட்சிகளை/வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவோ வேறொரு வேட்பாளரை பின்னடையச் செய்யக்கூடியவாறான எந்தவொரு நிகழ்ச்சிகளையும் வெளியிடுவதிலிருந்து/பிரசாரப்படுத்துவதிலிருந்து தவிர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அச்சு ஊடகங்களினூடாகவும் இவ்வாறான வேட்பாளர்கள் ஊக்குவிப்புக்குள்ளாகக் கூடியவாறான அல்லது பின்னடையச் செய்யக்கூடியவாறான விடயங்களை முன்கூறப்பட்ட மௌன காலப்பகுதியினுள் வெளியிடுதலாகாதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2015, சனவரி 02.

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1890/2 - 2014 නොවැම්බර් මස 24 වැනි සඳුදා - 2014.11.24

1890/2 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I)- பொது

அரசாங்க அறிவித்தல்கள்

2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆந் திகதி நடாத்தப்படவுள்ள சனாதிபதித் தேர்தல் தொடர்பாக அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களால் பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டு நெறிகள்

அறிமுகம் :

வானொலி, தொலைக்காட்சி மற்றும் அச்சு ஊடகங்கள் மூலமாகக் கருத்துக்களை வெளியிடுதல் மற்றும் தகவல்களை அறிக்கையிடுதல், பிழையின்றியும் மற்றும் பக்கச் சார்பின்றியும் மேற்கொள்ளப்படுவது சனநாயகத்தின் முக்கியமான அடிப்படை இலட்சணமொன்று போலவே இயல்பொன்றுமாகும். ஊடக நிறுவனங்கள் தமது சுதந்திரத்தைப் பயன்படுத்தும் விதம், ஒட்டுமொத்தமாக சமூகத்திற்கும் பொதுமக்களுக்கும் சேவை செய்வதற்காகவிருத்தல் வேண்டும். ஊடக நிறுவனங்களின் அலுவல்களைத் தொழில் மட்டத்தில் பேணிச் செல்வதற்கு நேயர்கள், வாசகர்கள் மற்றும் இரசிகர்களின் உரிமைகளை உயர்வாக மதித்தல் வேண்டும். பொது மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு மதிப்பளித்து தகவல்கள், கல்வி மற்றும் பொழுது போக்கு நிகழ்ச்சிகளை முன்வைத்தல் வேண்டும். பொது மக்களுக்குத் தேவையான விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடல்கள் மற்றும் விவாதங்கள் நியாயமான விதத்தில் நடாத்தப்படுதல் வேண்டும். அதேபோன்று செய்திகளை அறிக்கையிடல் மற்றும் ஆசிரியர் கருத்துக்களை முன்வைத்தல் என்பன பக்கச் சார்பின்றியிருப்பது முக்கியமானதாகும்.

கருத்து வேறுபாடுகளுக்குரிய விடயங்கள் தொடர்பாகக் கருத்துக்களை வெளியிடும்போது பிரச்சினையின் இரு பக்கங்களும் பிரதிநிதித்துவம் செய்யப்படுதல் வேண்டும். அவ்வாறான விடயங்கள் தொடர்பாக தமது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு ஆட்கள், கட்சிகள் மற்றும் அமைப்புகள் வாய்ப்பொன்றைக் கோருமிடத்து, அத்தகைய கோரிக்கைகளுக்கு போதுமான காலத்தை/சந்தர்ப்பத்தை வழங்குவதைக் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

சனநாயக நடைமுறைகளுக்குள் பொது மக்களின் பங்கேற்பை ஊக்குவிப்பதற்கும் மற்றும் பல்வேறு விடயங்கள் தொடர்பில் சனாதிபதி வேட்பாளர்களுக்கு அறிவூட்டுவதற்குள்ள வாய்ப்பைப் பாதுகாப்பற்கும், தேர்தல்கள் காலக் கெடுவினுள் ஊடகங்களுக்கு விசேடமான பொறுப்பொன்றுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள எதிர்பார்ப்புக்களை மையமாகக் கொண்டு, கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் எதிர்வரும் தேர்தல் காலக் கெடுவினுள் ஊடக நிறுவனங்களால் பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டு நெறிகளைக் கீழே குறிப்பிடுகின்றேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பதினெட்டாம் திருத்தத்தினால் திருத்தியமைக்கப்பட்ட பதினேழாம் அரசியலமைப்புத் திருத்தத்தின் 104 (ஆ)(5)(அ) ஆம் உறுப்புரை மற்றும் தேர்தலோடு தொடர்புடைய வேறு சட்டதிட்டங்கள் என்பவற்றின் கீழ் தேர்தல்கள் ஆணையாளர், மஹிந்த தேசப்பிரிய ஆகிய எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்கள், பொறுப்புக்கள், கடமைகள் என்பவற்றிற்கிணங்க நீதியானதும் சுதந்திரமானதும் மற்றும் இரகசியமானதுமான தேர்தலொன்று நடாத்தப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களால் பின்பற்றப்பட வேண்டிய கீழ்வரும் வழிகாட்டு நெறிகளை இத்தால் வெளியிடுகின்றேன்.

(1) செய்திப் பத்திரிகைகளில் இடங்களைக் குறித்தொதுக்குகையிலோ அல்லது வானலைக் காலத்தை வழங்குகையிலோ எந்தவோர் வேட்பாளரொருவருக்கும் அல்லது கட்சித் தலைவருக்கும் வேறுபாடு காட்டப்படக் கூடாதென்பதோடு, சனாதிபதித் தேர்தல்கள் தொடர்பாக அறிக்கையிடுகையில் அனைத்து அச்சு, தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடக நிறுவனங்கள் சமநிலைத் தன்மையையும் கட்சி சார்பற்ற போக்கையும் கடைப்பிடித்தல் வேண்டும்.

(2) செய்திகளையும் மற்றும் நிகழ்கால விடயங்களை பிரசுரிக்கின்றபோது அனைத்து ஊடக நிறுவனங்களும் சரியானதாகவும் சமநிலை பேணுபவையாகவும் பக்கச் சார்பற்றவையாகவும் நடந்து கொள்ளல் வேண்டும்.

(3) செய்திப் பத்திரிகைகளின் ஆசிரியர் கருத்தொன்று குழப்ப நிலையைக் கொண்டதாகவோ சமநிலைத் தன்மையற்றவொன்றாகவோ காணப்படுகின்ற போது வேறுபாட்டுத் தன்மை நிலவ முடியுமாதலால் ஆசிரியர் கருத்தொன்றை இலத்திரனியல் ஊடகம் ஊடாக ஒளிபரப்பக்கூடாது. ஆயினும் ஏதேனுமொரு காரணத்தினால் ஆசிரியர் கருத்தினை ஒளிபரப்பினால் அதற்கு எதிராக கருத்துக்களையும் தெரிவிக்க அனுமதி கோரினால் அக்கருத்துக்களை ஒலி/ஒளிபரப்பும் கடப்பாடு அந்நிறுவனத் திற்குண்டு.

(4) தேர்தல் காலப்பகுதியில் சமநிலையற்ற நிகழ்ச்சிகள் ஒலி/ஒளிபரப்புச் செய்யாமலிருப்பது அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்களின் செய்திப் பிரிவுகள் மற்றும் நடப்பு செய்திகளுக்குப் பொறுப்பான பிரிவுகளின் பொறுப்பாகும்.

(5) ஏதேனுமொரு சம்பவமோ அல்லது நிகழ்ச்சியோ பற்றிய விடயங்களை ஒலி/ஒளிபரப்புச் செய்கையில் ஏதேனுமொரு வேட்பாளரின் கருத்துக்களை சமர்ப்பிக்கின்ற போது அவ்விடயங்கள் தொடர்பான அக்கறையொன்றையோ அல்லது ஆர்வமொன்றையோ காட்டுகின்ற அல்லது அவ்விடயத்தினால் பாதிப்பொன்று ஏற்படக்கூடிய ஏனைய கட்சிகளுக்கும் அச்செய்தியின் ஒலி/ ஒளிபரப்பப்படுகின்றபோதோ அல்லது நிழச்சியின் போதோ விடயங்களை முன்வைக்க சந்தர்ப்பமொன்று அளிக்கப்படல் வேண்டும். அத்தினத்தன்றே அச்சந்தர்ப்பத்தை வழங்க முடியாதெனில் அதற்கடுத்த தினம் அதற்கான வாய்ப்பை வழங்குதல் வேண்டும்.

(6) எந்தவொரு விவரண நிகழ்ச்சியோ அல்லது விஷேட நிகழ்ச்சியோ தேர்தல் சமயத்தில் ஒலி/ஒளிபரப்புகின்ற போது பிரதியாக்குநர், அறிவிப்பாளர் மற்றும் தயாரிப்பாளரின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

(7) முன்னைய சந்தர்ப்பங்களில் ஒலி/ஒளிபரப்பப்பட்ட கலந்துரையாடல்கள், விவாதங்கள் மற்றும் அத்தகைய நிகழ்ச்சிகள் முதலியவற்றை தேர்தல் தினத்திற்கு முன்னரான 48 மணித்தியாலங்களுக்குள் மீள் ஒலி/ஒளிபரப்புச் செய்வதோ வெளியிடுவதோ கூடாது.

(8) சனாதிபதி தேர்தல் முடிவடையும் வரை சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்கு எதிராக நிரூபிக்க முடியாத குற்றச்சாட்டுக்களை செய்தி ஒலி/ஒளிபரப்புக்களிலோ அல்லது நிகழ்ச்சிகளிலோ வெளியிடப்படக்கூடாது.

(9) கடமை ரீதியான வைபவங்கள் மற்றும் குற்றங்கள் போன்ற வாக்கெடுப்போடு தொடர்பற்ற செய்திகளைப் பரப்புகின்றபோது அதன் மூலம் வேட்பாளரொருவருக்கு இலாபமொன்று அல்லது பாதிப்பொன்று ஏற்படாதவாறு அனைத்து ஊடக நிறுவனங்களும் நுணுக்கமாகவும் சாதுரியமாகவும் நடந்து கொள்ளல் வேண்டும்.

(10) சனாதிபதியவர்களோ அல்லது பிரதம மந்திரி அவர்களோ அல்லது அரசாங்கத்தின் அமைச்சர்களோ தொடர்புபடுகின்ற அரசியல் கருத்துக்களை/கொள்கைகளை வெளிப்படுத்துகின்ற தொலைக்காட்சி/வானொலி நிகழ்ச்சிகள் அவர் சார்ந்த கட்சியின் நிகழ்ச்சியொன்றாகக் கருதப்பட வேண்டுமென்பதோடு, அதன் காரணமாக அதற்கெதிரான கருத்தையுடைய அரசியற் கட்சிகளின் தலைவர்களுக்கும் அதற்குச் சமமான நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்குதல் வேண்டும். அச்சு ஊடகங்களும் அதே விதத்தில் அரசியற் கட்சிகளுக்கு விஷேட கலந்துரையாடல்களையும் வழங்குகின்ற போது கட்சிக் கூட்டங்கள் பற்றி அறிக்கை வெளியிடுகின்ற போது சம அந்தஸ்த்தையும் முக்கியத்துவத்தையும் வழங்குதல் வேண்டும்.

(11) ஏதேனுமொரு வேட்பாளரொருவருக்கு விஷேட கவனம் செலுத்தி ஊக்குவிப்பான விதத்திலோ அல்லது வேறு வேட்பாளர்களுக்கு பாதிப்பொன்று நேரிடும் விதத்திலோ வானலைக் காலத்தை இன்றேல் செய்திப் பத்திரிகையின் இடவசதிகளைக் குறித்தொதுக்குதல் மேற்கொள்ளலாகாது.

(12) போட்டியிடுகின்ற வேட்பாளரொருவரை ஊக்குவிக்கக் கூடியதான அரச அலுவலர்களால் நடாத்தப்படும் உரைகள், நேர்காணல்கள் போன்ற நிகழ்ச்சிகளைப் பிரச்சாரம் செய்வதிலிருந்து அனைத்து ஊடகங்களும் தவிர்ந்திருத்தல் வேண்டும்.

(13) குழுக் கலந்துரையாடல்களில் பங்கேற்பவர்களைத் தேர்ந்தெடுக்கின்ற போது அனைத்து இலத்திரனியல் ஊடக நிறுவனங்களும் நியாயமாக நடந்து கொள்ள வேண்டியதோடு, கலந்துரையாடலின் உள்ளடக்கமும் சமநிலை கொண்டதாக இருத்தல் வேண்டும். ஏதேனும் நிகழ்ச்சியொன்றில் கலந்து கொள்ளும் முகவரொருவருக்கு உரிய மொழியில் பாண்டித்தியம் இல்லாமையால் அவருக்கு பாதிப்பு ஏற்படக் கூடியவாறு நிகழ்ச்சியை நடாத்தக் கூடாது. அச்சு ஊடகங்களில் நேர்கண்டு வெளியிடும் போது மொழிப் புலமை இன்மை காரணமாக கலந்துரையாடலில் கலந்து கொள்ளும் அரசியல்வாதிக்கு பாதிப்பு ஏற்படக்கூடியவாறு செயற்படக் கூடாது. தெளிவற்ற, புரிந்து கொள்ள முடியாத வினாக்களுக்கூடாகப் பெறப்பட்ட தகவல்களை வெளியிடக் கூடாது.

(14) தொலைபேசி மூலம் கேள்விகள் மற்றும் தகவல்களைப் பெற்றுக் கொண்டு நடாத்தப்படுகின்ற நிகழ்ச்சிகளின் போது, அனைத்து தொடர்பாளர்களுக்கும் அவர்களின் வினாக்களிலோ அல்லது முன்மொழிவுகளிலோ உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் எவையாயினும் சமமான சந்தர்ப்பங்கள் வழங்கப்படல் வேண்டும். அந்நிகழ்ச்சிகளின் சமநிலைத் தன்மைக்கு அந்நிகழ்ச்சிகளை நடாத்தும் அனைத்து அலுவலர்களும் வகை கூறுதல் வேண்டும்.

(15) எந்தவோர் இலத்திரனியல் அல்லது அச்சு ஊடக நிறுவனமொன்றின் தவிசாளரொருவர், பணிப்பாளர் சபை அங்கத்தினரொருவர் அல்லது ஊழியரொருவர் அரசியல் நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபாடு கொண்ட ஒருவராக இருப்பின், அத்தகைய ஈடுபாடு சமநிலையான ஒலி/ஒளிபரப்பைப் பாதிக்கச் செய்யவல்ல சிக்கல்களைத் தோற்றுவிக்க ஏதுவாக அமையலாம். ஆதலால் கீழ்வரும் விடயங்கள் முகாமைத்துவத்தின் கவனத்திற்கு உரிய அலுவலர்கள்/ஊழியர்களால் கொண்டு வரப்படல் வேண்டும்.

(அ) அத்தகையவர்களின் ஈடுபாட்டின் அளவு;
(ஆ) அத்தகையவர்களின் தொழிலின் இயல்பும் மட்டமும் ;
(இ) நிகழ்ச்சிகளைத் தயாரிக்கின்ற போது அத்தகையவர்களின் ஈடுபாட்டின் பரப்பெல்லை.

(16) அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் முக்கிய பதவியொன்றை (தலைவர், தவிசாளர், செயலாளர், தேசிய அமைப்பாளர், பொருளாளர், பிரதித் தலைவர், சிரேட்ட பிரதித் தலைவர் அல்லது அதற்கு சமமான அதிகாரம் கொண்ட) வகிக்கின்ற நபரொருவர் ஊடக நிறுவனமொன்றில் பணிப்பாளர் சபைத் தலைவர், பணிப்பாளர் சபை அங்கத்தவர், பிரதம நிறைவேற்று/பிரதம ஆசிரியர் போன்ற முக்கிய பதவியொன்றை வகிக்கும் போது அந்நபர் சனாதிபதித் தேர்தல் வேட்பாளராகப் போட்டியிடுவாராயின் அல்லது அவர் முக்கிய பதவியொன்றை வகிக்கும் கட்சி தேர்தலில் நேரடியாக அல்லது அங்கீகரிக்கப்பட்ட முன்னணியாகப் போட்டியிடுமாயின் அத்தேர்தல் காலக்கெடுவினுள் அவர் ஊடக நிறுவனத்திற்குரிய பதவியில் மும்முரமாக ஈடுபடுவதைத் தவிர்ந்து கொள்ளல் வேண்டும். இன்றேல் அவ்வூடகத்தின் நெறிப்படுத்தல் பணிகளைத் தவிர்ந்து கொள்ளல் வேண்டும். மேலும் ஏதேனும் தேர்தலொன்றில் போட்டியிடும் கட்சியொன்றின் முக்கிய பதவியொன்றை வகிக்கும் நபரொருவர் அல்லது தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடும் நபரொருவர் அத்தேர்தல் காலக்கெடுவினுள் தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடகங்களில் அரசியல் சார்பான நிகழ்ச்சிகளை நெறிப்படுத்துவதிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டுமென்பதோடு, அச்சு ஊடகமொன்றில் நிரந்தர பணியில் ஈடுபட்டிருப்பாராயின் அவ்வூடகத்தினூடாக தனது அரசியல் சார்பான கடிதங்களைப் பிரசுரிப்பதிலிருந்தும் தவிர்த்து கொள்ளல் வேண்டும்.

(17) ஏதேனுமோர் ஊடக நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்படுகின்ற கலந்துரையாடலில் அல்லது செவ்வியில் பங்குபற்ற எவரேனுமொரு நபர் மறுக்கின்ற சந்தர்ப்பமொன்றில் மற்றும் அவ்வாறு மறுப்பதற்கான காரணங்களை முன்வைக்காத சந்தர்ப்பத்தில் ஊடக நிறுவனத்தினால் அத்தகைய நிலைமைகளுக்கு கண்ணியமளிக்கப்படல் வேண்டும். அத்தகைய சந்தர்ப்பங்களில் வெற்றுக் கதிரையொன்றைக் காட்டுவது போன்ற நாடகப் பாணியிலான உத்திகளுக்குப் பதிலாக நேரடியாக மற்றும் எளிய அறிவித்தலொன்றின் மூலம் அதனை வெளிப்படுத்துவது பொருத்தமாகும்.

(20) தேர்தல்கள் ஆணையாளரினால் வழங்கப்படும் எழுத்து மூலமான அனுமதியின்றி வாக்கெடுப்பு நிலையத்தினுள் அல்லது அஞ்சல் வாக்களிப்பு நிலையத்தினுள் புகைப்படம் பிடித்தல், காணொளிக் காட்சிகளை எடுத்தல் (வீடியோ) என்பன தடை செய்யப்பட்டுள்ளதால் அவ்வாறு செய்வதிலிருந்து சகல ஊடகவியலாளர்களும் தவிர்ந்து கொள்ளல் வேண்டுமென்பதோடு சட்டவிரோதமாக எடுக்கப்படும் புகைப்படங்கள்/ காணொளிக் காட்சிகளை (வீடியோ) பத்திரிகைகளில் பிரசுரித்தல் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் காட்சிப்படுத்தல் என்பவற்றிலிருந்து தவிர்ந்து கொள்ளல் வேண்டும்.

(21) தேர்தல்களோடு தொடர்புடைய வேட்பாளரொருவரின் பிரச்சார நடவடிக்கைகளில் அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களினால் வெளிப்படுத்தப்பட்ட கொள்கைகள் மற்றும் வாக்குறுதிகள் தொடர்பாக வாக்காளர் நடுநிலையிலிருந்து கருத்திலெடுக்க முடிந்தவாறு அமைதியான சூழ்நிலையொன்றை வாக்கெடுப்புத் தினத்திற்கு முன்னர் ஏற்படுத்துவது முக்கியமாதலால் சனாதிபதித் தேர்தல் தினத்திற்கு முன்னரான 48 மணித்தியாலத்திற்குள் தேர்தலோடு தொடர்புடைய கலந்துரையாடல், வாதவிவாதங்கள், வர்த்தக அறிவித்தல்கள் என்பவற்றைப் பிரச்சாரம் செய்வதிலிருந்து தவிர்ந்து கொள்ளல் வேண்டும். அச்சு ஊடகங்களுக்கும் இது பொருந்தும்.

2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆந் திகதி நடாத்தப்படவுள்ள சனாதிபதித் தேர்தலின் முடிவுகள் வெளியிடப்படும் வரை இவ்வழிகாட்டு நெறிகளுக்கு இசைவாகச் செயற்பட்டு அதாவது இவ்வழிகாட்டு நெறிகளைப் பின்பற்றி நீதியானதும் மற்றும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அனைத்து அச்சு, இலத்திரனியல் ஊடக நிறுவனங்களின் நிருவாகிகளும் தயவன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
2014.11.24 ஆந் திகதி.

12-650

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1894/18 - 2014 දෙසැම්බර් මස 24 වැනි බදාදා - 2014.12.24

1894/18 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 24 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I)- பொது

அரசாங்க அறிவித்தல்கள்

சனாதிபதித் தேர்தல் - 2015

எவரேனுமொரு வேட்பாளரை ஊக்குவிப்பதற்காக வேறு வேட்பாளரொருவர் வெளியிடுகின்ற கூற்றுக்களையும் இதற்கு முன்னர் வெளியிட்ட கூற்றுக்களையும் பிரசாரப்படுத்துவதை இடைநிறுத்தல்

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 17 ஆம் 18 ஆம் அரசியலமைப்புத் திருத்தங்களின் மூலம் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அல்லது தேர்தல்கள் ஆணையாளருக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கிணங்க சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலொன்றை நடாத்துவது ஆணைக்குழுவின் நோக்கமாகவிருக்க வேண்டுமாகையாலும், அத்தகைய தேர்தலை நடாத்துவதற்காக நடைமுறையிலுள்ள சட்டங்களின் மூலம் வழங்கப்பட்டுள்ள அல்லது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அதிகாரங்களை கடமைகளை மற்றும் பணிகளை நடைமுறைப்படுத்த அல்லது நிறைவேற்ற அத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டுமாதலாலும், தேர்தலொன்றை நடாத்துவது அத்தகைய அதிகாரங்களுக்கு, கடமைகளுக்கு மற்றும் பணிகளுக்கு உட்படுவதாயினும் அவற்றுக்கு மாத்திரம் வரையறையாகாதாகையால் ஏதேனுமொரு தேர்தலை நடாத்தவதற்கான அனைத்து சட்டங்களையும் வலுவாக்கல், பாதுகாத்தல் தேர்தல் ஆணையாளரின் பணியாக வேண்டுமாகையாலும் இந்த சனாதிபதித் தேர்தலை சுதந்திரமானதாகவும் நியாயமானதாகவும் நடாத்துவதன் பொருட்டு கீழ்க் குறிப்பிடப்படும் கட்டளைகள் இத்தால் விதிக்கப்படுகின்றன"

* *போட்டியிடுகின்ற எந்தவொரு வேட்பாளரினாலும் பெயர்குறித்த நியமனத் தினத்தின் பின்னர் எவரேனும் வேறொரு வேட்பாளரை ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள், ஆற்றப்படுகின்ற உரைகள் தொடர்பான செய்திகளையோ விவரணங்களையோ பிரசாரம் செய்வதிலிருந்து அல்லது அறிவித்தலொன்றாக பிரசாரம் செய்வதிலிருந்து அனைத்து ஊடகங்களும் தவிர்ந்திருத்தல் வேண்டும்.*

* *அத்துடன், இந்த சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற எவரேனுமொரு வேட்பாளர், பெயர்குறித்த நியமனப் பத்திரங்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னரான காலப்பகுதியில் வேறொரு வேட்பாளர் சார்பாக மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடொன்றை, செய்தியொன்றை, விவரணமொன்றை அல்லது வர்த்தக விளம்பரமொன்றை அத்தகைய வேட்பாளரின் எழுத்துமூலமான இணக்கமின்றி பிரசாரப்படுத்துவதிலிருந்து தவிர்ந்திருத்தல் வேண்டும்.*

இக்கட்டளைகள், சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்காக விதிக்கப்பட்ட கட்டளைகளெனவும், ஊடக வழிகாட்டல்களெனவும் கருதி இவற்றிற்கு இணங்கியொழுக வேண்டுமென அனைத்து ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கும் ஊடக நிறுவனத் தலைவர்களுக்கும் தயவன்புடன் அறிவித்துக்கொள்கின்றேன். இவ்வாறு நடந்து கொள்வதன் மூலம் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கான தேர்தல்கள் திணைக்களத்தின் முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மிகவும் விநயமாகவும் தயவன்புடனும் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

தேர்தல்கள் செயலகம்,
இராஜகிரிய,
2014, திசெம்பர் 24.

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்,
அரச சேவை ஆணைக் குழுவின் செயலாளர்,
அனைத்து மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர்,
அனைத்து மாகாண ஆளுநர்களின் செயலாளர்கள்/ மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்கள்,
அனைத்து மாகாண அரச சேவை ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்,
அனைத்து திணைக்களத் தலைவர்கள்,
அனைத்து அரச கூட்டுத்தாபன நியதிச் சட்ட சபைகளின் தலைவர்கள்/ பொது முகாமையாளர்கள்,

சனாதிபதித் தேர்தல் - 2015 சனவரி 08
அரச மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச் சட்ட சபைகளுக்கு உரித்தான ஆதனங்களை சனாதிபதித் தேர்தல் காலக்கெடுவுக்குள் துஷ்பிரயோகம் செய்வதைத் தடுத்தல் மற்றும் சனாதிபதித் தேர்தல் காலப்பகுதியினுள் அலுவலர்களின், ஊழியர்களின் ஆட்சேர்ப்பு/ பதவியுயர்வு/ இடமாற்றம் என்பவற்றை மட்டுப்படுத்தல்.

சனாதிபதித் தேர்தல் எதிர்காலத்தில் நடாத்தப்படவிருப்பதோடு, அதற்கான நியமனப் பத்திரங்கள் கோரப்படுகின்ற அறிவித்தல 2014.11.21 ஆம் திகதி பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது. அன்றைய தினம் முதல் தேர்தல் நடாத்தப்பட்டு பெறுபேறுகள் வெளியிடப்பட்டு முடிவடையும் வரையிலான காலக்கெடு "சனாதிபதித் தேர்தல் காலக்கெடு" என இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பதினேழாம் திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்காலக்கெடுவிற்குள் சனாதிபதி வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்கான அல்லது வேறொரு சனாதிபதி வேட்பாளருக்கு பாதிப்பேற்படுத்தத் தக்க விதத்திலான நடவடிக்கைகளுக்காக அரசாங்க ஆதனங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டுமெனவும் அரசாங்க அலுவலர்கள்/ ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் போன்ற விடயங்களை மட்டுப்படுத்துமாறும் அரசாங்க ஆதனங்கள் மற்றும் நிகழ்கால நிருவாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட பிரதான அலுவலர்கள் அனைவரினதும் கவனத்தை ஈர்ப்பதற்காக இச்சுற்றறிக்கை வெளியிடப்படுகின்றது.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பதினேழாம் திருத்தத்தின் 104(ஆ)04(அ) உறுப்புரைக்கமைய "தேர்தலொன்று நடாத்தப்படுகின்ற கால எல்லைக்குள் அரசாங்கத்திற்கோ அல்லது ஏதேனும் ஓர் அரச கூட்டுத்தாபனத்திற்கோ உரித்தான ஏதேனும் அசையும் அல்லது அசையா ஆதனங்களை" ஏதேனும் ஓர் அரசியல் கட்சியையோ அல்லது ஏதேனுமொரு சுயேச்சைக் குழுவையோ ஊக்குவிக்கக்கூடிய அல்லது தடுக்கக்கூடிய பணிகளுக்காக ஏதேனும் ஓர் அரசியல் கட்சியால் அல்லது சுயேச்சைக் குழுவினால் பயன்படுத்தப்படுவதை தடை செய்கின்ற அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அல்லது தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்திற்கு உண்டு. தேர்தல்கள் ஆணைக்குழு இதுவரை நிறுவப்படாமையினால் இவ்வதிகாரம் சமகால தேர்தல்கள் ஆணையாளரினால் செயற்படுத்தப்பட முடியும். அவ்வுறுப்புரையின் (ஆ) உப உறுப்புரையின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற கட்டளைகளைச் செயற்படுத்துவதற்கு அரசாங்கத்திற்குச் சொந்தமான ஆதனங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அலுவலர்களும் கடப்பாடுடையவர்களாக விளங்குகின்றனர்.

03. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக அரசுக்குச் சொந்தமான அனைத்து மோட்டார் வாகனங்கள், ஜீப் வண்டிகள் போன்ற அனைத்து வாகனங்களையும் ஹெலிகொப்டர், வானூர்களையும் பயன்படுத்துவதாக கடந்த தேர்தல் காலங்களிலும் இத்திணைக்களத்திற்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. ஆதலால், அரசாங்க வாகனங்களுக்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அலுவலர்களும் இவ்வாகனங்களை எந்தவோர் சனாதிபதி வேட்பாளர் ஒருவரின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தாத விதத்தில் தேர்தல் காலக்கெடுவினுள் வாகன குழாத்தைப் பேணுவதில் முனைப்பான கவனம் செலுத்த வேண்டுமென வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன். அலுவலர்களுக்கென குறித்தொதுக்கப்பட்டுள்ள (Assigned vehicles)

அரசாங்கத்திற்குச் சொந்தமான வாகனங்கள் என்பனவும் இவற்றில் உள்ளடங்குகின்றனவென்பதைக் கருத்தில் கொள்ளல் வேண்டும். இக்காலக்கெடுவிற்கு அலுவலர்களுக்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள (Assigned vehicles) வாகனங்கள் தவிர்ந்த முக்கியமாக குழாத்துக்கு இணைக்கப்பட்டுள்ள வாகனங்கள், ஏனைய வாகனங்கள் என்பவற்றிற்கான ஓட்டக் குறிப்புக்களை முறையாகப் பேணி வரவேண்டுமென்பதோடு, இவ்வோட்டக் குறிப்புக்கள் பதவிநிலை அலுவலர் ஒருவரினால் அன்றாடம் பரிசீலிக்கப்பட்டு அவ்வாகனங்கள் சனாதிபதித் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவில்லையென திருப்தியடைதல் வேண்டும். கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டதென போலியான குறிப்புக்களையிட்டு அரச வாகனங்கள் அரசியல் ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதால் அவ்வாறான போலியான விடயங்களுக்காக அரச வாகனங்களை ஈடுபடுத்தாதிருப்பதற்கு பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

அதிமேதகு சனாதிபதி அவர்களின் பாதுகாப்புப் பிரிவிற்கென குறித்தொதுக்கப்பட்டுள்ள இரண்டு வாகனங்கள் தவிர்ந்த வேறு எந்தவொரு வாகனத்தையும் மோட்டார் வாகனத் திணைக்களத்தினால் குறித்தொதுக்கப்பட்ட உரிய பதிவிலக்கமின்றி செலுத்த முடியாதலால், எந்தவோர் அமைச்சருக்கோ, பிரதி அமைச்சருக்கோ அல்லது அவர்களின் பணியாட் குழுவின் அங்கத்தினர்களுக்கோ அல்லது வேறு எவருக்குமோ குறித்த பதிவிலக்கமின்றி அரசாங்கத்தின் அல்லது அரச சார்பான நிறுவனங்களின் வாகனங்களைப் பயன்படுத்த முடியாது. ஆதலால், அனைத்து திணைக்களங்கள், அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்கள் வாகனத் திருத்தகங்களுக்குரிய இலக்கங்களில் (போலி இலக்கங்களில்) சேவையிலீடுபடுத்தப்படவில்லையென்பதை அமைச்சுக்களின் செயலாளர்கள்/ திணைக்களத் தலைவர்கள் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

04. அரசாங்க அலுவலகங்கள், கட்டிடங்கள், பாடசாலைகள், அரசாங்கத்திற்குரித்தான ஏனைய கட்டிடங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் என்பனவும் அரசாங்கத்தின் வளங்களாகும். ஆதலால், அத்தகைய இடங்களையும் அரசியல் கூட்டங்கள், கலந்துரையாடல்களுக்குப் பயன்படுத்தக் கூடாது. சனாதிபதித் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அரசாங்கத்திற்குரித்தான சுற்றுலா விடுதிகள், வாடி வீடுகள், விடுமுறை பங்களாக்கள் என்பவற்றைக் கட்டணமின்றி வழங்குவது முழுமையாகத் தடைசெய்யப்பட்டுள்ளதென்பதைக் கருத்தில் கொள்ளல் வேண்டும். அதேபோன்று அத்தகைய இடங்களில் தங்குமிட வசதிகளைப் பெற்றுக் கொள்பவர்களுக்கு சனாதிபதி வேட்பாளர்களை ஊக்குவிக்கும் பணிகளில் ஈடுபட இடமளிக்கக்கூடாது. அரசாங்கத்திற்குரித்தான கட்டிடங்கள் மற்றும் அமையப்பெற்றுள்ள காணிகள் என்பவற்றில் சனாதிபதி வேட்பாளர்களினதும் தேர்தல் பிரச்சார அறிவித்தல்கள், சுவரொட்டிகள், பாரியளவிலான புகைப்படங்கள் என்பவற்றை காட்சிப்படுத்தி வைப்பதற்கும் இடமளித்தலாகாது.

05. (I) சனாதிபதித் தேர்தல் காலக்கெடுவுக்குள் அரச நிதியைச் செலவிட்டு நடாத்தப்படுகின்ற பல்வேறு விதத்திலான நடமாடும் சேவைகள், கண்காட்சிகள், திறப்பு விழாக்கள் போன்ற வைபவங்கள் அரசியலில் ஈடுபட்டுள்ள ஆட்களின் பங்களிப்போடு மேற்கொள்ளப்படுவதோடு, அச்சந்தர்ப்பங்களின் சனாதிபதித் தேர்தலோடு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களும் அவர்களினால் வெளிப்படுத்தப்படும் சாத்தியம் காணப்படுகின்றது. அத்தகைய வெளிப்படுத்துகையொன்று சனாதிபதித் தேர்தலில் போட்டியிட முன்வந்துள்ள வேட்பாளர் ஒருவரின் வேட்பாண்மைக்கு முறையற்ற விதத்தில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். இத்தகைய வைபவங்களை நிகழ்த்துவதன் மூலம் ஏதேனும் வேட்பாளரொருவரை ஊக்குவிப்பதாகவோ அல்லது வேறொரு வேட்பாளருக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகவோ முறைப்பாடுகள் கிடைக்க முடியுமாதலால், இத்தேர்தல் காலப்பகுதிக்குள் அத்தகைய வைபவங்களை நிகழ்த்தவதை தவிர்ந்து கொள்ளல் பொருத்தமென சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். பொதுமக்களின் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக அத்தியாவசிய

நடமாடும் சேவைகள் இத்தேர்தல் காலப்பகுதிக்குள் நடாத்துவதற்கு, தேர்தலோடு தொடர்புடைய வேட்புமனுக் கோரும் அறிவித்தல் வெளியிடப்பட முன்னர் தீர்மானிக்கப்பட்டிருப்பின், அது தொடர்பாக உடனடியாக எனக்கு அறிவித்தல் வேண்டும். அப்போது அது தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகள் பற்றிய அறிவுறுத்தல்கள் வழங்கப்படும். ஆயினும் ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தினாலோ அல்லது பதிவாளர் நாயகத் திணைக்களத்தினாலோ நடாத்தப்படுகின்ற நடமாடும் சேவைகளுக்கு இம்மட்டுப்பாடுகள் செல்லுபடியாகாது. இத்தகைய நடமாடும் சேவைகளை அலுவலர்களின் பங்களிப்போடு மாத்திரம் நடாத்த நடவடிக்கையெடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்படுகின்றது.

(II) இக்கால எல்லைக்குள் எந்தவொரு இடத்திலும் அரசாங்கக் காணிகளைப் பகிர்ந்தளித்தல், அரசாங்கக் காணி உறுதிகளின் அல்லது வீடுகளின் உரிமைக் கைமாற்றல், உறுதிகளின் பகிர்ந்தளிப்புக்கள், பெருந்தோட்ட கைத்தொழில் நடவடிக்கைகள் அல்லது பயிர்ச் செய்கைக்கான மானிய உதவிகள், உரவகைகள், விவசாய உபகரணங்கள், விளையாட்டுப் பொருட்கள், சுயதொழில்களுக்கான கருவிகள், மிதி வண்டிகள், சூரிய ஒளி மின் விளக்குகள், வீடுகளை நிர்மாணிப்பதற்கான கட்டடப் பொருட்கள் போன்றவற்றைப் பகிர்ந்தளிப்பதற்கான கருத்திட்டங்கள் மற்றும் வீட்டுக்கடன் விநியோகம்/ நட்ட ஈட்டுத் தொகையைப் பகிர்ந்தளித்தல் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களும் இடைநிறுத்தப்படல் வேண்டும். அவ்வாறு வழங்கப்படுவதாக அரசாங்க அலுவலர்களினால் அறிவிப்புக்கள் வெளியிடப்பட்டு அவற்றிற்கான பட்டியல்களைத் தயாரித்தலும் இக்காலக்கெடுவிற்குள் மேற்கொள்ளப்படக் கூடாது. ஏனெனில், இத்தகைய பணிகளூடாக வாக்காளர்களுக்கு உபசரணை வழங்கும் குற்றங்கள் நிகழ்த்தப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கின்றமையாலும் இத்தகைய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினூடாக சனாதிபதி வேட்பாளர்களை ஊக்குவித்தல் மேற்கொள்ளப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கின்றமையாலுமேயாகும். மேலும் வீட்டுக் கடன் உதவிகளை வழங்குவதற்கான படிவங்களைப் பகிர்ந்தளித்தல், கட்டிடப் பொருட்களை வழங்குவதற்கான படிவங்களைப் பகிர்ந்தளித்தல் போன்ற நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்படல் வேண்டும். எனினும் ஒத்திவைக்கப்பட முடியாத அவசர கருத்திட்டங்கள்/ நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றிற்கு ஏற்கனவே நாள் குறிக்கப்பட்டிருப்பின் அல்லது அவசர விஷேட தேவைப்பாடொன்று ஏற்பட்டிருப்பின் அது தொடர்பாக எனக்கு அறிவித்தல் வேண்டும். அப்போது அது தொடர்பான பொருத்தமான அறிவுறுத்தல்கள் வெளியிடப்படும். அத்தகைய கருத்திட்டங்கள்/ நிகழ்ச்சித் திட்டங்கள் கூட எந்தவோர் சனாதிபதி வேட்பாளருக்கும் விஷேட அனுகூலத்தையோ (அல்லது பிரதிகூலத்தையோ) ஏற்படுத்தாத விதத்தில் அமுல் செய்யப்பட வேண்டுமெனவும் அதற்காக அலுவலர்கள் மாத்திரம் கலந்துகொள்ள வேண்டுமெனவும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

06. (I) மேலும் இத்தேர்தலோடு தொடர்புடையதாக அரச அல்லது அரச கூட்டுத்தாபன நிறுவனங்களின் அலுவலர் எவரொருவருக்கும் அலுவலக நேரத்தினுள் அல்லது அலுவலக தினங்களில் கடமை விடுமுறை பெற்றுக் கொண்டு ஏதேனுமொரு சனாதிபதி வேட்பாளருக்கு எதிராக செயற்படுவதற்கான அவகாசம் வழங்கப்படக் கூடாதென்பதோடு, அவ்வாறு செயற்படுகின்ற அலுவலர்கள்/ ஊழியர்கள் தொடர்பாக ஒழுக்காற்று ரீதியான நடவடிக்கையும் எடுத்தல் வேண்டும்.

(II) அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட அரசியல் உரிமைகள் அற்ற அரச பதவிநிலை அலுவலர்கள், கூட்டுத்தாபன/ நியதிச் சட்ட சபைகளின் பதவிநிலை அலுவலர்கள், கிராம அலுவலர்கள் போன்ற சமாதான அலுவலர்கள் மற்றும் பாதுகாப்புப் பிரிவுகளின் அங்கத்தினர்கள் எவருக்கும் தனது அலுவலக நேரத்தினுள் மாத்திரமின்றி அலுவலக நேரத்திற்குப் புறம்பாகவோ அல்லது விடுமுறை தினங்களிலோ நேரடியாக அல்லது மறைமுகமாக எந்தவொரு சனாதிபதி வேட்பாளரையும் ஊக்குவிக்கும் விதத்திலான அல்லது பாதிக்கும் விதத்திலான செயற்பாடுகளில் ஈடுபடுதல் மற்றும் அதற்கு ஆதரவு வழங்கல் என்பவற்றிலிருந்து தவிர்ந்திருத்தல் வேண்டும். அதாவது அரசியல் உரிமையற்ற அனைத்து அரச அலுவலர்களும் அரசியல் ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதி கிடையாதென்ற விதியை மிகக் கடுமையாக அமுல்படுத்தல் வேண்டும்.

(III) மேலும் கூட்டுத்தாபன மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள் மற்றும் பணிப்பாளர்கள் இத்தேர்தல் காலக்கெடுவினுள் எந்தவோர் சனாதிபதி வேட்பாளரையும் ஊக்குவித்தல் அல்லது பாதிப்பேற்படுத்தும் விதத்திலான செயற்பாடுகளில் ஈடுபடுவதிலிருந்து தவிரந்திருப்பார்களென தயவன்புடன் எதிர்பார்க்கப்படுகின்றது.

07. (I) பதினெட்டாம் அரசியலமைப்புத் திருத்தத்திற்கமைய அரசாங்க சேவை ஆணைக்குழுவினாலும் நிருவாக அதிகாரத்தின் கீழ் வருகின்ற விடயங்களுக்கு பதினேழாம் திருத்தத்தின் மட்டுப்பாடுகள் பாதிப்பை ஏற்படுத்தமாட்டா. ஆதலால், அவ்வாணைக்குழுக்களின் அதிகாரங்களுக்கிணங்க முறையாக மேற்கொள்ளப்படுகின்ற ஆட்சேர்ப்புக்கள், நியமனங்கள் மற்றும் பதவியுயர்வுகள் வழங்குவதிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

(II) சனாதிபதித் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்த எதிர்பார்க்கப்படுகின்ற அரசாங்கப் பாடசாலைகளின் ஆசிரியர்கள், அதிபர்கள் உள்ளிட்ட அனைத்து அரசாங்க அலுவலர்களினதும் சாதாரண இடமாற்றங்களை 2014.11.21 ஆம் திகதியிலிருந்து சனாதிபதித் தேர்தல் முடிவடைந்து இரண்டு வாரங்கள் கழியும் வரை இடை நிறுத்தி வைக்க வேண்டுமென்பதோடு, சனாதிபதித் தேர்த்ல கடமைகளில் ஈடுபடுத்தப்படாத அரசாங்கத்தின் அல்லது அரச கூட்டுத்தாபனங்களின் அலுவலர்களை சனாதிபதித் தேர்தல் கால எல்லைக்குள் இடமாற்றம் செய்கின்ற போது அரசியல் காரணங்களுக்காக இத்தகைய இடமாற்றங்களை மேற்கொள்ளப்பட்டனவென்ற முறைப்பாடுகள் கிடைக்கப்பெறாதவாறு உரிய இடமாற்றங்களை மேற்கொள்ள அனைத்து அதிகாரிகளும் நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

(III) சனாதிபதித் தேர்தல் காலக்கெடுவினுள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அலுவலர்கள் அத்தியாவசிய காரணங்களுக்காக உதாரணமாக புலமைப் பரிசில், உயர்கல்வி, மருத்துவச் சிகிச்சை, வணக்க வழிபாடுகளில் ஈடுபடுதல் போன்ற வெளிநாட்டுப் பிரயாணங்களை மட்டுப்படுத்த எதிர்பார்க்கவில்லையாகையால், அத்தகைய தேவைகளுக்காக வெளிநாடு செல்வதற்காகத் தேர்தல்கள் ஆணையாளரின் முன் அனுமதியைப் பெறத் தேவையில்லை. இருப்பினும், அலுவலர்கள் கூட்டாக இக்காலத்தினுள் வெளிநாடு செல்வதாயின், அதற்கான முன் அனுமதியைப் பெற்றுக் கொள்வது கட்டாயமாகும். இருப்பினும், மிகவும் அவசரமான மற்றும் காலந்தாழ்த்த முடியாத காரணங்களுக்காக வெளிநாடு செல்ல தேவையாயின், அது

தொடர்பாக அங்கீகாரமளித்தல் தொடர்பாகக் கவனித்துப் பார்ப்பதற்காக முன்கூட்டியே கோரிக்கை விடுப்பது பொருத்தமாகும்.

(IV) இந்த சனாதிபதித் தேர்தல் தொடர்பான பிரகடனம் வெளிப்படுத்த முன்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்த அலுவலர்கள் நியமனம்/ பதவி உயர்வு வழங்கல் போன்ற நாடளாவிய ரீதியிலான நிகழ்ச்சித் திட்டமொன்றை காலம் தாழ்த்தாது மேற்கொள்ள வேண்டுமென அமைச்சின் செயலாளர் எதிர்பார்க்கும் போது அல்லது முழுத் தீவுக்குமாக அரச சேவைக்கு அல்லது அரச நிறுவனங்களுக்கு ஏற்புடையதாக முறையான, அரசியல் தலையீடுகளற்ற விதத்தில் மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்பு/ பதவியுயர்வுகள் தொடர்பாக இச்சுற்றறிக்கை ஏற்புடையதாக மாட்டாது.

(V) மேலும் ஏதேனுமொரு விஷேட அத்தியவசிய காரணமொன்றுக்காக (அதாவது ஒழுக்காற்று நடவடிக்கைகள், அலுவலரின் கோரிக்கைக்கிணங்க கருணைமனப்பான்மையோடு செயலாற்ற வேண்டியமை, ஏதேனுமொரு பாடசாலைக்கு ஆசிரியர்களைப் பெற்றுக் கொடுத்தல் இன்றியமையாததாகவுள்ளவிடத்து போன்ற காரணங்கள்) சனாதிபதித் தேர்தலுக்கான காலப்பகுதியின் போது அலுவலர்களை/ ஆசிரியர்களை/ அதிபர்களை இடமாற்றம் செய்ய வேண்டியுள்ள சந்தர்ப்பங்களில் இவ்விடமாற்றங்கள் அரசியல் நடவடிக்கைகளின் காரணமாக செய்யப்பட்டவையென நிரூபிக்க முடியுமாயின் அல்லது அவை சார்பாக முறைப்பாடுகள்/ குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட மாட்டாதாயின் தேர்தல்கள் செயலகத்தை அறிவூட்டப்படுமாயின், அதற்கான அனுமதியை வழங்க முடியும்.

08. அரச ஆதனங்கள் விஷேடமாக அரச நிறுவனங்கள் மற்றும் அலுவலர்கள் வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்காக ஈடுபடுத்துவது அதிகரித்து வருவதாக கடந்தகால தேர்தல்களின் போது முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதால் அவ்வாறான முறையற்ற செயற்பாடுகளுக்கு எவ்விதத்திலும் அவகாசமளித்தலாகாது. கடந்தகால தேர்தல்களின் போது கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு அவசர கடமை அலுவல்கள் அல்லது விஷேட அபிவிருத்தி கருத்திட்டங்களை மேற்கொள்ளல் போன்ற விடயங்களை முன்வைத்து வேட்பாண்மை ஊக்குவிப்பதற்காக (அல்லது பாதிப்பை ஏற்படுத்துவதற்காக) அரச/ அரச நிறுவனங்களின் அலுவலர்கள் அரச/ அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான அல்லது வாடகைக்குப் பெறப்பட்ட வாகனங்களை இணைப்புச் செய்தல் போன்ற முறையற்ற செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு எந்தவோர் அலுவலருக்கும் இடமளித்தல் கூடாதென்பதைத் தயவன்புடன் அறியத் தருகின்றேன். அதேபோன்று தேர்தல் காலக்கெடுவினுள் விஷேட கருத்திட்டங்களை மேற்கொள்வதையும் பிற்போடல் வேண்டும்.

09. இந்த சனாதிபதித் தேர்தலின் போது எந்தவொரு வேட்பாளரையும் தேர்ந்தெடுப்பதை ஊக்குவிக்கின்ற அல்லது தடுக்கின்ற பணிகளுக்காக அரசாங்க ஆதனங்களைப் பயன்படுத்துவதைத் தடை செய்யும் விதத்திலான இத்தடை விதிப்பை கடுமையாக நடைமுறைப்படுத்தல் வேண்டும். மேலும் ஒவ்வோர் அமைச்சின் கீழுள்ள அனைத்து திணைக்களங்கள், அரசாங்க கூட்டத்தாபனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் பிரதானிகளுக்கு இது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு சகல அமைச்சுக்களின் செயலாளர்களிடமும் தயவன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றது. அதேபோன்று அவ்வனைத்து நிறுவனங்களினதும் அலுவலர்கள் இவ்வறிவுறுத்தல்களுக்கும் கட்டளைகளுக்கும் அமைய செயலாற்றுகின்றார்களென்பதை அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் திணைக்களத் தலைவர்களுக்கும் தெரிந்து கொள்ளலும் இன்றியமையாததாகும்.

10. சனாதிபதித் தேர்தலோடு தொடர்புடைய அனைத்து சட்டங்களையும் வலுவாக்கம் செய்வதற்கு, பாதுகாப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு ∴ தேர்தல்கள் ஆணையாளருக்கு ஒத்துழைப்பு வழங்குதல் உரிய சட்டங்களை வலுவாக்கம் செய்வதற்குப் பொறுப்பாகவுள்ள அனைத்து அரசாங்க அதிகாரிகளினதும் பணியாக இருத்தல் வேண்டுமென அரசியலமைப்பின் 104ஆ (2) ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் தொடர்பாக உங்களது மேலான கவனம் ஈர்க்கப்படல் இன்றியமையாததென்பதையும் தயவன்புடன் அறிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

11. இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் மற்றும் அமைச்சின் பணியாட் குழுவினர்கள் ஆகியோரை அறிவூட்டும் பொறுப்பு அமைச்சின் செயலாளருக்குப் பொறுப்பளிக்கப்படுகின்றதெனவும் மாகாண சபைகளின் முதலமைச்சர்கள், ஏனைய அமைச்சர்களை அறிவூட்டுதல், பிரதம செயலாளர் மற்றும் குறித்த மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்களின் பொறுப்பென்பதையும் கருத்தில் கொள்வது பொருத்தமாகும்.

12. அதேபோன்று பொருத்தமானவிடத்து ஆணைக்குழுக்களின் செயலாளர்கள் அவ்வாணைக்குழுக்களின் தவிசாளர்கள் மற்றும் அங்கத்தினர்களை இச்சுற்றறிக்கை தொடர்பாக அறிவுறுத்த நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

13. அரசியலமைப்பில் குறிப்பிடப்பிடப்பட்டள்ள விடயங்களுக்கு மேலதிகமாக தங்களது அமைச்சின்/ திணைக்களத்தின்/ நிறுவனத்தின் பிரதான கணக்கீட்டு அல்லது கணக்கீட்டு அலுவலர் என்ற வகையில் அரசாங்கத்திற்குச் சொந்தமான ஆதனங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதை தடுப்பதும் குறிப்பிட்ட அலுவலர்களின் பொறுப்பொன்றென்பதைக் குறித்துக் காட்ட விரும்புகின்றேன்.

14. இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக வழக்கம்போல் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், தேர்தல்கள் கண்காணிப்புக் குழுக்கள் என்பன அறிவூட்டப்படவுள்ளதோடு, "தேர்தல் திணைக்களத்தின் அலுவலர்கள், பொலிஸ் அலுவலர்கள், அரசியல் கட்சிகளின் முகவர்கள் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் முகவர்கள் என்போரை உள்ளடக்கிய தேர்தல்கள் தொடர்பான முறைப்பாடுகள் பற்றிய செயற்பாட்டு நிலையத்தினால்" இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களோடு தொடர்புடைய முறைப்பாடுகள் சார்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்படுமெனவும் தேர்தல்கள் மனுக்களின் போதும் பாதிக்கப்பட்ட தரப்பினரால், எடுக்கப்படும் வேறு நீதிமன்றச் செயன்முறைகளிலும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்காத விதத்திலான செயற்பாடுகள் தொடர்பான தகவல்களைச் சமர்ப்பிக்க அவகாசமுள்ளதெனவும் தயவன்புடன் அறிவித்துக் கொள்கின்றேன்.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

பிரதிகள் :-

01. சனாதிபதியின் செயலாளர் - அறிந்து கொள்வதற்காக
02. பிரதம மந்திரியின் செயலாளர்∴ அமைச்சரவை செயலாளர் - அறிந்து கொள்வதற்காக
03. கணக்காய்வாளர் நாயகம், கணக்காய்வாளர் திணைக்களம் - அறிந்து கொள்வதற்காக
04. பணிப்பாளர் நாயகம், இலஞ்சம் அல்லது ஊழல்கள் குற்றச் சார்த்துதல்கள் புலன்விசாரணை ஆணைக்குழு - அறிந்து கொள்வதற்காக
05. அனைத்து அமைச்சுக்களினதும் மேலதிக செயலாளர்கள்
- அறிந்து கொள்வதற்காகவும் தேவையான நடவடிக்கைகளுக்காகவும்
06. முப்படைத் தளபதிகள்/ சிவில் பாதுகாப்புப் படையணியின் கட்டளையிடும் அதிகாரி
- அறிந்து கொள்வதற்காகவும் தேவையான நடவடிக்கைகளுக்காகவும்

07. பொலிஸ் மா அதிபர் - அறிந்து கொள்ளவும் தேர்தல் சட்டங்களை வலுவாக்கம் செய்கின்ற அலுவலர்களை அறிவூட்டுவதற்காகவும்

08. அனைத்து தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும்

- இக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மற்றும் விடுமுறைகளுக்கெதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் பற்றி உடனடியாக எனக்கு அறிக்கையிடுவதற்கும் அத்தகைய நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும்.

09. அனைத்து மாவட்ட பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கும்

- அறிந்து கொள்வதற்காகவும் தங்களது மாவட்டத்தின் அனைத்து அரசாங்க நிறுவனங்களின் தலைவர்கள், அனைத்து பிரதேச செயலாளர்கள் மற்றும் மாநகர ஆணையாளர்கள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளின் செயலாளர்கள் ஆகியோருக்கு இக்கடிதத்தின் பிரதியொன்றை அனுப்பி வைப்பதற்கும் இதில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவிப்பதற்கும்.

தேர்தல்கள் திணைக்களத்தின் ஓர் அறிவித்தல்.

சனாதிபதித் தேர்தல் - 08.01.2015
1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல் சட்டம்
தேர்தல் சட்ட மீறல்களைத் தவிர்ந்து கொள்ள வேண்டியதன் தேவைப்பாடு.

(1) போட்டியிடுகின்ற வேட்பாளர்களை ஊக்குவிப்பதற்காக கொடிகள், பதாகைகள், அறிவித்தல் பலகைகள், ஸ்ரிக்கர்கள், வேட்பாளர்களின் உருவப்படங்கள், தேர்தல் சின்னங்கள், ஏனைய குறியீடுகள், பிரச்சாரத் தொனிப்பொருள் வாக்கியங்கள் அல்லது சித்திரங்கள் என்பவற்றை அனுமதிபெறாத இடங்களில் காட்சிப்படுத்தல் தடுக்கப்பட்டுள்ளமை.

சனாதிபதித் தேர்தல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கட்சிகள் / வேட்பாளர்களின் ஊக்குவிப்புக்காக கொடிகள், பதாகைகள், துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், அறிவித்தல்கள், வேட்பாளர்களின் உருவப்படங்கள், தேர்தல் சின்னங்கள், தொனிப்பொருள் வாக்கியங்கள், உரிய குறியீடுகள் அல்லது சித்திரங்கள் என்பவற்றை காட்சிப்படுத்த முடிவது வேட்பாளர்களின் பிரச்சாரக் கூட்டம் நடைபெறுகின்ற தினத்தன்று அக்கூட்டம் நடைபெறுகின்ற வளவிற்குள் மாத்திரமேயாகும்.

எனினும், 2005 ஆம் ஆண்டில் போட்டியிட்ட வேட்பாளர்கள், கட்சிகளின் செயலாளர்கள், பொலிஸ்மா அதிபர் மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் ஆகியோரிடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டிற்கிணங்க வேட்பாளர்களின் அனுமதி பெறப்பட்ட, அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களில் மாத்திரம் பிரச்சாரப் பலகைகளை காட்சிப்படுத்த இடமளிக்கப்படுவதோடு, 2010 ஆம் ஆண்டில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாடொன்றிற்கமைய போட்டியிடுகின்ற கட்சியின் தலைவர், சனாதிபதி வேட்பாளர் கலந்து கொள்கின்ற கூட்டங்களில் கூட்ட வளவிற்கு வெளியே நியாயபூர்வமான தூரமொன்றிற்கு சோடணைகளை மேற்கொள்வதற்கும் அனுமதி வழங்கப்படுகின்றது. அத்தகைய சோடணைகள் கூட்டம் நடைபெறுகின்ற தினத்திற்கு முந்திய தினம் பிற்பகலில் மேற்கொள்ளப்பட்டு கூட்டத்திற்கு அடுத்த நாள் முற்பகலில் அகற்றப்படல் வேண்டும.

பொது மக்களுக்கு புலப்படத்தக்க விதத்தில் பொது வீதிகளுக்கு அணித்தாக அமைந்துள்ள தனியார் வீடுகளில் வேட்பாளர் பிரச்சாரப் பலகைகளைக் காட்சிப்படுத்தல் உள்ளிட்ட ஏனைய அனைத்து பொது இடங்களிலும் மேற்கொள்ளப்படுகின்ற பிரச்சாரப் பலகைகளின் காட்சிப்படுத்தல்கள் சட்டத்திற்கு முரணானவையென பிரசைகள் அனைவருக்கும் இத்தால் தயவன்புடன் அறிவிக்கப்படுகின்றது.

கட்சி / வேட்பாளர் அலுவலகங்களை நிறுவுவது என்ற பெயரில் உண்மையான அலுவலகமொன்று இல்லாத இடங்களிலோ அல்லது அலுவலகத்திற்கு அருகிலுள்ள பெருந்தெருக்களிலோ சோடணைகள் செய்வது முற்றிலும் தடையாகும். அதேபோன்று அனுமதிபெறப்பட்ட, அறிவித்தல் கொடுக்கப்பட்ட அலுவலகங்களில் கூட பொது மக்களுக்கு தெரியத்தக்கவாறு தொலைக்காட்சி அலைவரிசைகளூடாகவோ அல்லது டிஜிடல் திரைகளூடாகவோ கட்சி / வேட்பாளர் ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலும் சட்ட முரணனானவையென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. வாகனங்களில் கட்சி / வேட்பாளர் ஊக்குவிப்புக்காக கொடிகள், பதாகைகள், ஸ்ரிக்கர்கள் என்பவற்றின் காட்சிப்படுத்தலை மட்டுப்படுத்தல்.

தேர்தல் காலப்பகுதிக்குள் வேட்பாளர் அல்லது வேட்பாளர் சார்பாக முழு நாட்டிற்குமென நியமிக்கப்படுகின்ற தேர்தல் முகவர் பயணம் செய்கின்ற வாகனம்

தவிர்ந்த வேறெந்த பொது அல்லது தனியார் வாகனத்திலும் கட்சி / வேட்பாளர் ஊக்குவிப்புக்கான கொடியொன்றையோ, பதாகையொன்றையோ காட்சிப்படுத்தல் சட்ட முரணானதென்பதும் தயவன்புடன் அறிவிக்கப்படுகின்றது.

கட்சி / வேட்பாளர் ஊக்குவிப்புக்காக பொருத்தப்பட்டுள்ள பிரச்சாரப் பலகைகள் / பதாகைகள் / தோரணங்கள் என்பவற்றை உடனடியாக அகற்றிக் கொள்ளுமாறு அப்பலகைகளைப் பொருத்தியுள்ள அனைவருக்கும் இத்தால் அறிவிக்கப்படுவதோடு, வேட்பாளரின் உருவம் அல்லது கட்சியின் சின்னம் மாத்திரம் மறையத்தக்க விதத்தில் சிறிய பொலீதீன் துண்டொன்றினால் மாத்திரம் மறைப்பது போதியதாகாதெனவும் அறிவிக்கப்படுகின்றது.

அதேபோன்று அரசாங்க நிறுவனங்களினால் பல்வேறு பணிகளுக்காக பொருத்தப்பட்டுள்ள பிரச்சாரப் பலகைகளூடாக கட்சி / வேட்பாளர் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் இடம்பெறுகின்றதென தெரியவருகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அத்தகைய பலகைகளை முழுமையாக மறைப்பதற்கோ அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கையெடுக்குமாறு அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் அரசாங்க நிறுவனங்களின் தலைவர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு தயவன்புடன் அறியத் தரப்படுகின்றது. அதேபோன்று மேலே குறிப்பிடப்பட்டுள்ள சட்ட முரணான பிரச்சாரப் பலகைகள் / பதாகைகள் / ஸரிக்கர்கள் போன்றவற்றை அகற்றிக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு பொலீஸ்மா அதிபரூடாக மாகாண / மாவட்ட சிரேட்ட பொலீஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் அறிவூட்டப்பட்டுள்ளனர்.

03. தேர்தல் காலப்பகுதிக்குள் ஊர்வலங்கள், நடை பவனிகளை மேற்கொள்வதை மட்டுப்படுத்தல்

வேட்புமனுத் தாக்கல் தினத்திலிருந்து சனாதிபதித் தேர்தல் நடாத்தப்பட்டு முடிவுகள் வெளியிடப்பட்டு ஒரு வாரம் கழியும் வரை கட்சி / வேட்பாளர் ஊக்குவிப்புக்காக வாகன பவனிகள், மோட்டார் சைக்கிள் மற்றும் துவிச்சக்கர வண்டி சவாரிகள் அல்லது பொதுமக்கள் ஊர்வலங்கள் என்பவற்றை மேற்கொள்ளல் முற்றிலும் தடையாகும். அத்தகைய ஊர்வலங்களைத் தவிர்ப்பதற்கும் அச்சட்டங்களை மீறுகின்றவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் ஆவன செய்யுமாறு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உரிய அறிவுறுத்தல்கள் பொலிஸ்மா அதிபரினால் வழங்கப்பட்டுள்ளன.

04. வேட்பாளரின் உருவப்படம், தேர்தல் சின்னங்கள் அல்லது வேறேதேனும் குறியீடு அல்லது வாக்கியம் அல்லது சித்திரம் ஒன்றைப் பயன்படுத்தி மேற்குறித்த விதத்திலான கட்சி / வேட்பாளர் ஊக்குவிப்புக்கான சட்ட முரணான காட்சிப்படுத்தலை மேற்கொள்கின்றவர்கள் நீதிமன்றத்தினால் தண்டிக்கப்படத்தக்க தவறொன்றை இழைக்கின்றனரெனவும் அத்தகைய அனுமதியற்ற காட்சிப்படுத்தல்களை அகற்றுமாறு பொலிஸ் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளதாகவும் தயவன்புடன் அறியத் தருவதோடு, இத்தகைய அனுமதியற்ற காட்சிப்படுத்தல்களூடாக கட்சி / வேட்பாளர் ஊக்குவிப்புச் செயன்முறைகளை மேற்கொள்கின்றவர்கள் சட்டமீறல், நியாயப்படுத்தல் என்பவற்றினூடாக சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றுக்குத் தேவையான சிறந்த சூழ்நிலையொன்றைப் பேணுவதற்கு இடையூறு விளைவிக்கின்ற நபர்களெனக் கருதப்பட வேண்டுமெனவும் மேலும் அறிவித்துக் கொள்கின்றேன்.

05. மேலும் இத்தகைய சட்டமுரணான செயல்கள் காரணமாக தேர்தல் தொடர்பாக மக்களின் நம்பிக்கை அற்றுப் போவதற்குள்ள சாத்தியப்பாட்டை முற்றாக நீக்குவதற்காக

இத்தகைய அனுமதி பெறப்படாத காட்சிப்படுத்தல்களை உடனடியாக தத்தம் ஆதரவாளர்களின் மூலம் அகற்றிக் கொள்ள நடவடிக்கையெடுக்குமாறு அனைத்து முன்னணி அரசியல் தலைவர்களுக்கு ஏற்கனவே என்னால் அறிவிக்கப்பட்டுள்ளதோடு, அனைத்து சிறந்த அரசியல் தலைவர்களும், சட்டத்தை மதிக்கும் அரசியல் தொழிற்பாட்டாளர்களும் இத்தகைய பிரச்சாரப் பலகைகளை உடனடியாக அகற்றிக் கொள்வரென வினயமாக எதிர்பார்க்கப்படுகின்றது.

06. தேர்தல் சட்டங்களை வலுவாக்கம் செய்வதற்காகவும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்காகவும் அனைத்து அரசியல்வாதிகளினதும், பிரசைகளினதும் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும். ஆதலால், அதற்காக தமது பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு அக்கறையுள்ள அனைத்துத் தரப்பினரிடமும், பிரசைகளிடமும் தயவன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

குறிப்பு :-

1. மேற்குறிப்பிடப்பட்ட விதத்திலோ அல்லது வேறு விதத்திலோ நிகழ்கின்ற தேர்தல் சட்டமீறல்கள் தொடர்பாக மாவட்ட செயலகத்தில் அல்லது கச்சேரியில் / மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ள தேர்தல் முறைப்பாட்டு இணைப்பு நிலையத்திற்கும், தேர்தல்கள் செயலகத்தின் தேர்தல்கள் முறைப்பாட்டு விசாரணை மத்திய நிலையத்திற்கும், உரிய பொலிஸ் நிலையங்களுக்கும், மாவட்ட சிரேட்ட பொலிஸ் அலுவலர்களுக்கும், பொலிஸ் தலைமையகத்திற்கும் கூட முறைப்பாடுகளைச் செய்யலாம்.

2. 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்தலோடு தொடர்புடைய தவறுகள், ஊழல் பழக்கங்கள் தொடர்பான பிரிவுகள் தேர்தல்கள் திணைக்களத்தின் இணையத்தளமான www.slelections.gov.lk இல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

ஊடக அறிவித்தல் - 28

சனாதிபதித் தேர்தல் - 2015 சனவரி 08
தொலைபேசி வலையமைப்புகளூடாக மேற்கொள்ளப்படுகின்ற
வேட்பாளர்களின் பிரச்சார அறிவித்தல்கள்

பல்வேறு தொலைபேசி வலையமைப்புக்களுடன் தொடர்புபட்ட தொலைபேசிகளூடாக சனாதிபதி வேட்பாளர்களின் பிரச்சார அறிவித்தல்கள் பிரச்சாரம் செய்யப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அதே போன்று அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் ஊக்குவிப்புக்கான பிரச்சார குறுஞ் செய்திகள் அனுப்பும் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் இடம்பெறுவதாகவும் முறைப்பாடுகள் கிடைத்தவண்ணமுள்ளன. இவ்வாறான பிரச்சார அலுவல்கள் வாடிக்கையாளர்களின் விருப்பமின்ற தொலைபேசி வலையமைப்புகளூடாக மேற்கொள்ளப்படுவது நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்குத் தடையொன்றெனவும் அம்முறைப்பாடுகளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆதலால் வாடிக்கையாளர்களின் விருப்பமின்றி வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட சுதந்திரத்திற்கு பாதிப்புக்கள் ஏற்படும் வகையில் தொலைபேசி வலையமைப்புகளூடாக தேர்தலுடன் தொடர்புடைய பிரச்சார அலுவல்களை மேற்கொள்வதிலிருந்து தவிர்ந்திருத்தல் வேண்டுமென தேர்தலில் போட்டியிடுகின்ற அனைத்து வேட்பாளர்களுக்கும் மற்றும் வேட்பாளர்களின் ஆதரவாளர்களுக்கும் தயவன்புடன் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது. தேர்தலுக்கு 48 மணித்தியாலயங்களுக்குள் செய்யப்படும் அவ்வாறான பிரச்சார அலுவல்கள் தேர்தல் சட்டங்களை மீறுவதாக அமையும்.

02. வாடிக்கையாளர்களுக்குத் தெரியாமல் அல்லது அவர்களது விருப்பமின்றி நிலையான மற்றும் கையடக்க தொலைபேசி சேவைகளை வழங்கும் தனியார் நிறுவனங்களின் ஊடாக திட்டமிட்ட விதத்தில் இவ்வாறான ஒலிப்பதிவு செய்யப்பட்ட செய்திகளை அல்லது குறுஞ் செய்திகளை அனுப்புவதிலிருந்து தவிர்ந்திருக்குமாறு அனைத்து நிலையான மற்றும் கையடக்க தொலைபேசி சேவைகளை வழங்கும் நிறுவனங்களுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்படுமெனவும் மேலும் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

மஹிந்த தேசப்பிரிய
தேர்தல்கள் ஆணையாளர்

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய.
2015.01.01

ஊடக அறிவித்தல் 30

சனாதிபதித் தேர்தல் - 2015
கட்சிகளை/வேட்பாளர்களை ஊக்கப்படுத்துவதற்காக நிதிசார் மற்றும் பொருள்சார் உதவிகளைப் பகிர்ந்தளித்தல்

2015 சனவரி 08 ஆந் திகதி நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் வேட்புரிமையை ஊக்கப்படுத்துகின்ற வகையில் பல்வேறு பொருள்சார் உதவிகளைப் பகிர்ந்தளித்தல், நிதிசார் உதவிகளை வழங்குவதற்காக தகவல் திரட்டுதல் முதலான சட்டவிரோத செயற்பாடுகள் அரசியல்வாதிகளினால் அல்லது சங்கங்களினால் அரசாங்க அல்லது தனியார் இடங்களிலும் விஹாரைகள், கோயில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் முதலிய மதவழிபாட்டுத்தலங்களிலும் மேற்கொள்ளப்படுகின்றமை பற்றிய முறைப்பாடுகள் கிடைக்கும் வேகம் தீவிரமாக அதிகரித்து வருகிறது.

அரச துறையினால் பொது மக்களுக்கு வழங்கப்படும் சலுகை உதவிகளை விநியோகிப்பதற்குரிய பணிகள் குறித்து வீட்டுக்கு வீடு செல்லும் கள அலுவலர்களினால் அரசியல்சார் பிரசார நடவடிக்கைகள் இடம்பெறுகின்ற விதத்தில் பொருள்சார் உதவிகள், வேட்பாளரின் புகைப்படங்கள், துண்டுப்பிரசுரங்கள் முதலியன பகிர்ந்தளிக்கப்படுவதாகவும் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இத்தகைய முறைப்பாடுகளின் உண்மைநிலை எவ்வாறமைந்த போதிலும், யாதேனும் வேட்பாளர் ஒருவரின் வேட்புரிமையை ஊக்கப்படுத்துகின்ற விதத்தில் பொருள்சார் உதவிகளைப் பகிர்ந்தளித்தல் போன்றே பொருள்சார் அல்லது நிதிசார் உதவிகளை வழங்குவதாக வாக்குறுதியளித்தல், தேர்தல் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய ஒரு குற்றமாகும் என்பதுடன், யாதேனும் பொருள்சார் உதவிகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றபோது கட்சிகளை/வேட்பாளர்களை ஊக்கப்படுத்துவதற்குக் காரணமாக அமையும் துண்டுப்பிரசுரங்கள், எழுத்தாவணங்கள், புகைப்படங்கள் முதலியவற்றை விநியோகித்தல் சொல்லப்பட்ட குற்றத்தை மேலும் முனைப்பாக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

ஆதலால், இந்த முனைப்பான தேர்தல் காலப்பகுதியில் கட்சிகளை/வேட்பாளர்களை ஊக்கப்படுத்துவதற்கு காரணமாக அமைகின்ற எந்தவொரு விதத்திலான பொருள்சார் அல்லது நிதிசார் உதவிகளையும் விநியோகிப்பதை அல்லது விநியோகிக்க வாக்குறுதியளிப்பதை தவிர்க்க வேண்டும் என்பதை அனைத்து அரசியல்வாதிகளுக்கும் செயற்படு அரசியல் ஆதரவாளர்களுக்கும் சங்கங்களின் செயற்பாட்டாளர்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன். மேலும் எந்தவொரு விஹாரையிலும் கோயிலிலும் தேவாலயத்திலும் அல்லது பள்ளிவாசலிலும் கட்சிகளை/வேட்பாளர்களை ஊக்கப்படுத்துவதற்குக் காரணமாக அமைகின்ற எந்தவொரு விதமான பொருள்சார் உதவிகளையும் விநியோகிப்பதற்கு அல்லது அவ்வாறான வைபவங்களை நடாத்துவதற்கு அல்லது மத வைபவங்கள் ஊடாக அரசியல்சார் உரைகளை ஆற்றுவதற்கு எந்தவொரு வாய்ப்பையும் வழங்காதிருக்குமாறு அனைத்து விஹாராதிபதி தேரர்கள் உள்ளிட்ட மகா சங்கத்தினரிடமும் கத்தோலிக்க/கிறிஸ்தவ துறவுநிலை பூண்டவர்களிடமும் இந்து மதகுருமார்களிடமும் முஸ்லிம் மௌலவிமார்களிடமும் மிகவும் தயவுடனும் கௌரவத்துடனும் வேண்டிக் கொள்கின்றேன்.

புடவைகள், உணவுப் பொருள்கள், வேறு பொருள்களாதியன உள்ளிட்ட பொருள்சார் உதவிகளைப் பகிர்ந்தளிக்கும் நிகழ்வுகள் மற்றும் அரச கொள்கை அமுலாக்கத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் கள நிகழ்ச்சிகள் ஏற்கனவே ஏற்பாடுசெய்யப்பட்டிருப்பின், அவ்வாறான நிகழ்ச்சிகளை 2015 சனவரி 08 ஆந் திகதிக்குப் பின்னர் அமுல்படுத்துமாறும் சம்பந்தப்பட்ட அனைத்து அரசியல்வாதிகளுக்கும் அமைப்புகளுக்கும் தயவுடன் அறிவிக்கப்படுகிறது.

மஹிந்த தேசப்பிரிய
தேர்தல் ஆணையாளர்

தேர்தல்கள் செயலகம்
சரண மாவத்தை
இராஜகிரிய
2015.01.02

குறிப்பு:
அண்மையில் ஏற்பட்ட மோசமான காலநிலை காரணமாக இடம்பெயர்ந்த அல்லது அனர்த்தங்களுக்கு உள்ளான பிரசைகளுக்கு நிவாரண உதவிகளை வழங்கும் பணிகளுக்கு இந்த விதிப்பு செயல்வலுப்பெறாதபோதும், அவ்வாறான சந்தர்ப்பங்களிலும் கட்சிகளை/வேட்பாளர்களை ஊக்கப்படுத்துகின்ற செயற்பாடுகள் எவ்விதத்திலும் மேற்கொள்ளப்படலாகாதென்பது தயவுடன் வலியுறுத்தப்படுகின்றது.

வாக்கு உங்கள் உரிமை.

1. உங்களது வாக்கை நீங்கள் விரும்பும் பிரகாரம் இரகசியமாக, சுதந்திரமாக பயன்படுத்துவதற்கு உங்களுக்கு இருக்கும் உரிமைக்கு இடையூறு விளைவிப்பதற்கு எவருக்கும் உரிமையில்லை.

2. வாக்கெடுப்பை உரிய முறையில் நடாத்துவதற்கும், உங்களது வாக்கின் இரகசிய தன்மையை பாதுகாப்பதற்கும் வாக்கு மற்றும் விருப்பு வாக்குகளை உரிய முறையில் எண்ணி பெறுபேறுகளை வெளியிடுவதற்கும் தேர்தல்கள் திணைக்களம் கடமைப்பட்டுள்ளது.

3. உங்களது வாக்கை எந்த கட்சிக்கு அல்லது குழுவுக்கு அளித்தீர்கள் என்பதனையும், விருப்பு வாக்கை எந்த வேட்பாளருக்கு அளித்தீர்கள் என்பதனையும் எவராலும் கண்டுபிடிக்க முடியாது.

4. உங்களுடைய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையை வாக்கெடுப்பு நிலையத்திற்கு எடுத்துச் செல்லுதல் வாக்களிப்பை இலகுவாக்கும்.

5. வாக்கை அளிப்பதற்கு தேசிய அடையாள அட்டை அல்லது விதித்துரைக்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் அடையாள அட்டையொன்று அத்தியாவசியமாகும்.

6. தேருநர் இடாப்பில் உங்களுடைய பெயர் உள்ளடக்கப்பட்டிருப்பின் மற்றும் வாக்களிப்பதற்கு செல்லுபடியாகும் அடையாள அட்டையொன்றை சமர்ப்பித்தால் வாக்களிப்பதற்கு எந்த தடையும் கிடையாது.

7. உங்கள் வாக்கை அளிக்காதிருத்தல் அரசியலமைப்புச் சட்டத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள பிரசைகளுக்கான உரிமையை கைவிடுவதாகும்.

8. எந்தவித பயமோ அல்லது சந்தேகமோ இன்றி காலையிலேயே வாக்கெடுப்பு நிலையத்திற்கு சென்று உங்களுடைய விருப்பத்திற்கமைய உங்களது வாக்கை அளியுங்கள்.

9. இது பற்றி உங்களுடைய குடும்ப அங்கத்தவர்களுக்கு, அயலவர்களுக்கு மற்றும் அறிந்தவர்களுக்கு தெரிவிக்கவும்.

10. அமைதியான மற்றும் நீதியான தேர்தலை நடாத்துவதற்கு அனைத்து வாக்காளர்களதும் அரசியல்வாதிகளதும் ஒத்துழைப்பு அவசியமாகும். எனவே தயவுசெய்து அதற்காக ஒத்துழைப்பு வழங்குங்கள்.

- தேர்தல் காலப்பகுதியில் மற்றும் தேர்தல் முடிவடைந்த காலப்பகுதியில் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பதாக பொலிஸ் மா அதிபர் உறுதிப்படுத்தியுள்ளார்.

தேர்தல்கள் ஆணையாளர்

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய.

தொலைபேசி : 0112868441/42/43
தொலைநகல் : 0112868426

சனாதிபதித் தேர்தல் - 2015

வாக்களிக்கும் முறை

01. 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆம் திகதி நடாத்தப்படவுள்ள சனாதிபதித் தேர்தலில் மூன்று வேட்பாளர்களுக்கு மேற்பட்டவர்கள் போட்டியிடுகின்றமையினால், ஒரு வேட்பாளருக்கு வாக்கு அல்லது முதலாம் விருப்பையும், ஏனைய வேட்பாளர்களில் இருவருக்கு இரண்டாம் விருப்பு மற்றும் மூன்றாம் விருப்பை வாக்குச் சீட்டொன்றில் அடையாளமிட முடியுமென்பதோடு, அவசியமெனில் வாக்கை மாத்திரம் அடையாளமிடவும் முடியும்.

02. வாக்குச் சீட்டொன்றில், வாக்காளரொருவர் தனது இரண்டாம் மற்றும் மூன்றாம் விருப்புக்களை அடையாளமிட்டிருக்காவிடினும், அவ்வாக்குச் சீட்டு முறையாக ஒரு வேட்பாளருக்கு அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டொன்றெனில் அவ்வாக்குச் சீட்டு அங்கீகரிக்கப்பட்ட வாக்குச் சீட்டொன்றாக ஏற்றுக் கொள்ளப்படும். ஆயினும் வாக்கை அடையாளமிடாது இரண்டாவது மற்றும் மூன்றாவது விருப்பு வாக்குகள் மாத்திரம் அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டை வாக்கை அடையாளமிடப்படாத வாக்குச் சீட்டாக கருதி நிராகரிக்க வேண்டியேற்படும்.

03. வாக்குச் சீட்டில் அடையாளமிடப்பட வேண்டிய முறை சனாதிபதித் தேர்தல் சட்டத்தின் மூன்றாவது அட்டவணையில் கீழ் உள்ளவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

3.1. "1" என்ற இலக்கத்தினை அடையாளமிடுவதன் மூலம் வேட்பாளரொருவருக்கு தனது வாக்கை அல்லது முதலாம் விருப்பை அளிக்க முடியும்.

3.2 "2" என்ற இலக்கத்தினை அடையாளமிடுவதன் மூலம் வேட்பாளரொருவருக்கு தனது இரண்டாம் விருப்பை அளிக்க முடியும்.

3.3 "3" என்ற இலக்கத்தினை அடையாளமிடுவதன் மூலம் வேட்பாளரொருவருக்கு தனது மூன்றாம் விருப்பை அளிக்க முடியும்.

04. வாக்காளர் ஒருவர் ஒரு வாக்கை மாத்திரம் அளிப்பதற்கு எதிர்பார்ப்பராயின்,

4.1. அவ்வாறான வாக்குச் சீட்டொன்றில் அடையாளமிடப்படும் அடையாளத்தினூடாக வாக்காளரின் விருப்பம் வெளிப்படுத்தப்படுமாயின், அது வாக்காளரின் ஆளடையாளம் வெளிப்படுத்தப்படாத வரை செல்லுபடியாகும் வாக்குச் சீட்டாகவிருக்கும்.

4.2. வாக்காளரால் வாக்குச் சீட்டில் அடையாளமிடப்பட்ட அடையாளம் "2" அல்லது "3" ஆகிய இலக்கங்கள் அல்லாதவிடத்து அவ்வாறான அடையாளத்தை கொண்ட வாக்குச் சீட்டையும் செல்லுபடியான வாக்குச் சீட்டாக ஏற்றுக்கொள்ள முடியும்.

05. அதாவது வாக்காளரொருவர் ஒரு வேட்பாளருக்கு மாத்திரம் தனது வாக்கை அளிப்பதற்கு எதிர்பார்ப்பாராயின் மேலே மூன்றாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் 2 ஆவது 3 ஆவது விருப்பு வாக்குகளை அடையாளமிடாது வாக்கை மாத்திரம் அளிக்க முடியும். அதற்காக தான் விரும்பும் வேட்பாளரின் பெயர் மற்றும் வாக்குச் சின்னத்திற்கு வலதுபுறமாக காணப்படும் கூட்டில் '1' அல்லது 'X' அடையாளத்தை இடமுடியும்.

06. எவரேனுமொரு வாக்காளரால் வாக்குச் சீட்டொன்று,

6.1 எந்தவொரு வேட்பாளருக்கும் வாக்களிக்கப்படவில்லையெனில், அல்லது,

6.2 ஒரு வேட்பாளரை விட அதிக எண்ணிக்கையினருக்கு வாக்கு அடையாளமிடப்பட்டிருப்பின் அல்லது,

6.3 ஒரு வேட்பாளருக்கு "1" உம் மற்றுமொரு வேட்பாளருக்கு "X" உம் அடையாளமிடப்பட்டிருப்பின் அல்லது,

6.4 இரண்டாம் விருப்பு அல்லது மூன்றாம் விருப்பு மாத்திரம் அடையாளமிடப்பட்டிருப்பின் அல்லது,

6.5 வாக்காளரை இனங்கண்டு கொள்ள முடியுமான விதத்தில் ஏதேனும் எழுதப்பட்டிருப்பின் அல்லது வரையப்பட்டிருப்பின் அல்லது,

அவ்வாறான வாக்குச் சீட்டுக்கள் செல்லுபடியற்றதாக கருதி வாக்கெண்ணும்போது நிராகரிக்கப்படும்.

ஊடக அறிவித்தல் இல. 31

சனாதிபதித் தேர்தல் - 2015
தனியார் பிரிவுகளில் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள், தேசிய மட்டத்திலான தேர்தல்களின்போது சம்பளம் அல்லது சொந்த லீவுகள் இழப்பொன்றின்றி தமது வாக்கை அளிப்பதற்கு வசதியாக விடுமுறை வழங்குதல்

தமது வாக்கை அளிப்பதற்காக தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு விடுமுறை வழங்குவதற்கு தொழில்தருநர்கள் நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென 1981 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டத்தின் 110 ஆம் பிரிவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் 2015.01.08 ஆந் திகதி நடாத்தப்படவுள்ள சனாதிபதித் தேர்தலின்போதும் அதை உரியவாறு நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது.

அரச பிரிவின் அலுவலர்களின் விசேட விடுமுறைகள் தொடர்பான தாபன விதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 12.3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளவாறு, சனாதிபதித் தேர்தலுக்காக ஆகக் குறைந்தது 4 மணித்தியாலங்களெனவும், வாக்களிக்க செல்வதற்கு தேவைப்படுமென கருதக்கூடிய தொடர்ச்சியான காலப்பகுதியொன்றுக்கு சம்பள இழப்பற்ற விசேட விடுமுறை வழங்க வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆயினும் தனியார் பிரிவுகளில் கடமையிலீடுபட்டுள்ளவர்களுக்கு எழுத்து மூலமான அத்தகைய விசேட விடுமுறை வழங்குவது தொடர்பான விதிமுறையொன்று இல்லாததன் காரணமாக பெரும்பாலான தொழில்தருநர்கள் தனது தொழிலாளர்களுக்கு வாக்களிக்கச் செல்ல லீவு வழங்குவதில்லையென கடந்த கால பல தேர்தல்களின் போது முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளமையால் மேற்குறித்த விடயம் தொடர்பாக 2014.12.22 ஆம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் தொழில், தொழில் உறவுகள் அமைச்சின் செயலாளர், தொழில் ஆணையாளர் நாயகம், தேர்தல்கள் ஆணையாளர் ஆகியோர் அழைக்கப்பட்டு ஆணைக்குழுவின் கௌரவத் தலைவர், கௌரவ ஆணையாளர்கள் மற்றும் சட்டச் செயலாளர் உள்ளிட்ட ஏனைய அலுவலர்களுடன் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டிற்கிணங்க தனியார் பிரிவுகளில் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தேசிய மட்டத்திலான தேர்தலொன்றின்போது வாக்களிக்க செல்வதற்கும் திரும்பி வருவதற்கும் விடுமுறை வழங்குவதற்காக தூரம் மற்றும் காலம் ஆகியனவற்றுக்கிடையில் தொடர்புபடுத்தலொன்றைத் தயாரிக்குமாறு கௌரவ ஆணைக்குழுவின் அறிவித்தலுக்கிணங்க, கீழ்க்காணும் அட்டவணைக்கு இசைவாக தனியார் பிரிவுகளில் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் தமது வாக்கை அளிப்பதற்காக விடுமுறை வழங்க தொழில்தருநர்கள் நடவடிக்கை எடுத்தல் பொருத்தமாகுமெனத் தேர்தல்கள் திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

வாக்கையளிப்பதற்காக கடமை நிலையத்திலிருந்து தனது வாக்கெடுப்பு நிலையத்திற்கு செல்ல வேண்டியுள்ள தூரளவு	வழங்கவேண்டிய ஆகக் குறைந்த விடுமுறைக் காலம்
கி. மீ 40 அல்லது அதற்குக் குறைவாயின்	அரை நாள்
கி. மீ 40 க்கும் 100 க்கும் இடைப்பட்டதெனில்	ஒரு நாள்
கி. மீ 100 க்கும் 150 க்கும் இடைப்பட்டதெனில்	1 ½ நாட்கள்
கி. மீ 150 க்கு அதிகமாயின்	2 நாட்கள்

மேலுள்ள அட்டவணையில் மிகக் குறைந்த காலம் முன்மொழியப்பட்டுள்ளதுடன் நாட்டில் சில வாக்காளர்களுக்கு வாக்கெடுப்பு நிலையத்திற்கு சென்றுவருவதற்கு மூன்று நாட்கள் தேவைப்படும் சந்தர்ப்பங்களும் குறிப்பிடத்தக்களவில் இருப்பதனால் சந்தர்ப்பத்திற்கேற்ப மூன்று நாட்கள் விடுமுறை வழங்கவேண்டியேற்படும் என்பதனையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

இங்கு தொழிலாளர்கள், எழுத்துமூலமான கோரிக்கையொன்றினூடாக விடுமுறையைக் கோர வேண்டுமென்பதுடன் அனைத்து தொழில் வழங்குநர்களும் விசேட விடுமுறையைக் கோரிய நபர்கள் மற்றும் விடுமுறை வழங்கிய காலப்பகுதி என்பன போன்ற விடயங்கள் குறிப்பிடப்பட்ட ஆவணமொன்றைத் தயாரித்து அதனை சேவை நிலையமொன்றில் காட்சிப்படுத்தல் வேண்டும்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வழிகாட்டல்களைக் கவனத்தில் கொண்டு தொழில் மற்றும் தொழிலாளர் உறவுகள் அமைச்சின் செயலாளர், தொழில் ஆணையாளர் ஆகியோருடன் நானும் கலந்துகொண்ட கலந்துரையாடலின் போது காணப்பட்ட இணக்கப்பாட்டுக்கமைய தயாரிக்கப்பட்டுள்ள மேற்கூறப்பட்ட பரிந்துரைகளுக்கு இணங்கியொழுகி தமது நிறுவனத்தின் தொழிலாளர்கள் வாக்களிக்கச் செல்வதற்கு மற்றும் திரும்பி வருவதற்கு போதுமானளவு விடுமுறையை வழங்குமாறு அனைத்து தொழில் வழங்குநர்களிடமும் தயவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மஹிந்த தேசப்பிரிய
தேர்தல்கள்
ஆணையாளர்

தேர்தல்கள் செயலகம்
சரண மாவத்தை
இராஜகிரிய
2015 சனவரி மாதம் 05 ஆந் திகதி

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் நிரந்தர முகவர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் - 2014.11.21

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் நிரந்தர முகவர்களுடன் தேர்தல்கள் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் குறிப்பு.

கலந்து கொண்டோர் :

1. வண. பத்தரமுல்ல சீலரதன தேரர்	- ஜனசெத பெரமுண
2. திரு. சுனில் வட்டகல	- மக்கள் விடுதலை முன்னணி
3. திரு. சம்பானி பத்மசேகர	- ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி
4. திருமதி. சியாமலா பெரேரா	- புதிய ஜனநாயக முன்னணி
5. திரு. சலீல முணசிங்க	- புதிய ஜனநாயக முன்னணி
6. திரு. ஏ. திசாநாயக்க	- ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி
7. திருமதி. சேபாலிகா கமகே வீரசிங்க	- ஜனசெத பெரமுண
8. திரு. சரத் மனமேந்திர	- நவ சிஹல உறுமய
9. திருமதி. ருவினி பத்திரனகே	- நவ சிஹல உறுமய
10. திரு. லலித் ரோஹண லியனகே	- மஹஜன எக்சத் பெரமுன
11. திரு. சரத் அத்துகோரல	- மலையக மக்கள் முன்னணி
12. திருமதி. தம்மிகா த சில்வா	- ஐக்கிய சோசலிச கட்சி
13. திரு. எம்.கே. பியரத்ன	- ஐக்கிய சோசலிச கட்சி
14. திரு. ஷான் குகவர்தன	- ஜனநாயக மக்கள் முன்னணி
15. திரு. பானி விஜேவர்தன	- சோசலிச சமத்துவக் ட்சி
16. திரு. நிசாநத சுவர்ணசிங்க	- ஜாதிக ஹெல உறுமய
17. திரு. லலித ஹேவாகமகே	- தேசிய ஐக்கிய முன்னணி
18. திரு. வை.எல்.எஸ். ஹமீட்	- அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்
19. திரு. இந்திக்க கால்லகே	- ஜனநாயகக் கட்சி
20. திரு. ஐ.டப்ளிவ்.ஜீ. பிரியங்ஜித் விதாரண	- தேசிய சுதந்திர முன்னணி
21. திரு. பியசேன திசாநாயக்க	- ஸ்ரீ லங்கா தேசிய முன்னணி
22. திரு. சாந்த ஹேரத்	- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
23. திரு. எம். விநாயகமூர்த்தி	- இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (அரசியற் கிளை)
24. திரு. துமிந்த நாகமுவ	- முன்னிலை சோசலிசக் கட்சி
25. திரு. சுஜித் குருவிட்ட	- முன்னிலை சோசலிசக் கட்சி
26. திரு. வீ. நல்லநாதர்	- ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி
27. திரு. ரி. சித்தார்த்தன்	- ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி
28. திரு. பாலித கமகே	- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
29. திரு. ஏ.டீ. சுசில் பிரேமஜயந்த	- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
30. திரு. பாட்டலி சம்பிக்க ரணவக	- ஜாதிக ஹெல உறுமய
31. திரு. கபில கமகே	- தேசிய சுதந்திர முன்னணி
32. திரு. திஸ்ஸ யாபா	- மஹஜன எக்சத் பெரமுன

33. திரு. தம்மிக பிரனாந்து - மௌபிம ஜனதா பக்ஷய
34. திரு. அசங்க நவரத்ன - ஸ்ரீ லங்கா மஹஜன பக்ஷய
35. திரு. ஜீவந்த திசாநாயக்க - ஸ்ரீ லங்கா மஹஜன பக்ஷய
36. திரு. எம். அசாத் சாலி - தேசிய இனங்களின் ஐக்கியத்திற்கான அமைப்பு/ முஸ்லிம் தமிழ் தேசிய கூட்டமைப்பு
37. திரு. ரவீ கருணாநாயக்க - ஐக்கிய தேசியக் கட்சி
38. திரு. மனோ கணேசன் - ஜனநாயக மக்கள் முன்னணி

தேர்தல்கள் திணைக்களத்தின் அலுவலர்கள்

1. திரு. யூ. அமரதாச - மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (பாராளுமன்றம்)
2. திரு. ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க - மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் (உள்ளூராட்சி)
3. திரு. எம்.எம். மொஹமட் - மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் (சட்டம் மற்றும் விசாரணை)

தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அவர்களின் தலைமையில் சபை அலுவல்கள் 15.10 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டதுடன் கலந்துகொண்ட அனைத்துத் தரப்பினரையும் தேர்தல் ஆணையாளர் வரவேற்றார்.

கடந்த கூட்டத்தின் போது அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடன் ஏற்படுத்திக் கொண்ட இணக்கப்பாட்டின் பிரகாரம் இக்கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் தேர்தல் தொடர்பான சட்டங்களை செயல்வலுப்பெறச்செய்தல் தொடர்பாக மற்றும் 2014 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு மீளாய்வு நடவடிக்கைகளில் முன்னேற்றம் சம்பந்தமாக இன்றைய தினம் கலந்துரையாடுவதற்கு உத்தேசித்திருந்த போதிலும் அதனிடையே சனாதிபதித் தேர்தலொன்றை நடாத்துவதற்காக தனது விருப்பத்தை சனாதிபதியவர்கள் தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்ததன் காரணமாக ஏற்பட்ட புதிய நிலைமையின் அடிப்படையில் இக்கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த கட்சிகள் தவிர ஏனைய கட்சிகளின் செயலாளர்களுக்கும் அறிவிப்பதற்கே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் சில அரசியல் கட்சி செயலாளர்களுக்கு இந்த கலந்துரையாடல் சம்பந்தமாக தொலைபேசியூடாக மிக அவசரமாக அறிவிக்கவேண்டி ஏற்பட்டதாகவும் ஆயினும் அந்த அறிவித்தலுக்கு இணங்க இன்றைய தினம் வருகை தந்திருக்கும் அனைத்துத் தரப்பினருக்கும் தமது பாராட்டுக்களைத் தெரிவிப்பதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டார். அத்துடன் பதிவு செய்யப்பட்ட அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லையெனவும் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியற் கட்சிகள் 2014 ஆம் ஆண்டு தேருநர் இடாப்பு மீளாய்வு நடவடிக்கைகளின் போது தமது பிரதிநிதிகளை நியமித்த அரசியல் கட்சிகள் போன்ற உண்மையான ஆர்வத்தைக் கொண்ட செயலூக்கத்துடன் செயற்படும் அரசியல் கட்சிகளை மாத்திரம் இன்றைய தினம் கூட்டத்திற்கு அழைப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

02. பின்னர் கடந்த கலந்துரையாடலின் குறிப்புக்கள் மீது சபையின் கவனத்தை ஈர்க்கச்செய்த தேர்தல்கள் ஆணையாளர் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள சனாதிபதித் தேர்தல் காரணமாக அக்கூட்டத்தில் இணக்கப்பாடு ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட சில விடயங்களை இச்சந்தர்ப்பத்தில் நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்பு இல்லையெனவும் அதாவது அங்கு கவனம் ஈர்க்கப்பட்ட வெளிநாட்டில் வசிப்பவர்களுக்கு தமது வாக்கை அளிப்பதற்கு வாய்ப்பு வழங்குவதற்கு முறையொன்றை தயாரித்தல் சம்பந்தமாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரதிநிதி திரு. சுனில் வட்டகல அவர்களால் கொண்டுவரப்பட்ட பிரேரணை தொடர்பாக இச்சந்தர்ப்பத்தில் கவனத்தில் கொள்வதற்கான வாய்ப்பு இல்லையென தெரிவித்தார்.

அத்தியவசிய சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு தமது வாக்கை அளிப்பதற்கான வாய்ப்பை வழங்குதல் சம்பந்தமான பிரேரணையொன்று பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படுமாயின் அது தொடர்பாக இச்சந்தர்ப்பத்திலாவது செயற்படுவதற்கான ஆற்றல் நிலவுவதாகவும் அது சம்பந்தமான வரைவொன்று ஏற்கனவே தேர்தல் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருப்பதினால் அதனை கட்சி செயலாளர்களுக்கு அனுப்பியுள்ளதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. புகையிரதத் திணைக்களம், இலங்கை போக்குவரத்து சபை என்பவற்றிற்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள், அதிவேகப் பாதை நுழைவாயில்களில் சேவையிலீடுபட்டுள்ளவர்களுக்கு அஞ்சல் மூல வாக்களிப்பதற்கான முறையொன்றைத் தயாரித்தல் சம்பந்தமாக ஆராயுமாறு தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.

03. சனாதிபதித் தேர்தலுக்கு ஏற்கனவே ஒரு கட்சி மாத்திரம் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாகவும் ஆனாலும் தற்போதய சனாதிபதி தேர்தலொன்றை நடாத்துவதற்கான தனது விருப்பத்தை அறிவித்திருக்கும் வர்த்தமானி அறிவித்தலுக்கமைய அவரும் ஒரு வேட்பாளராக தோற்றவுள்ளார் என தேர்தல்கள் ஆணையாளர் சபைக்கு அறிவித்ததுடன் அவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இருந்ததனால் அங்கீகரிக்கப்பட்ட கட்சி சின்னமொன்று இன்றியும் சுயாதீனமாக தற்போதய சனாதிபதிக்கு சனாதிபதித் தேர்தலுக்கு போட்டியிடுவதற்கான வாய்ப்பு நிலவுவதாகத் தெரிவித்தார். ஏனைய அரசியற் கட்சிகள் எதிர்வரும் சனாதிபதித் தேர்தலின் போது போட்டியிடுவதா இல்லையாயென இதுவரை அறிவிக்கப்படவில்லையெனவும் தெரிவித்தார்.

ஏனைய கட்சிகள் எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு அபேட்சகர் ஒருவரை முன்னிறுத்துதல் அல்லது அவ்வாறு செய்வதற்கு எதிர்பார்ப்பதாக அல்லது போட்டியிடும் பிரிதொரு வேட்பாளருக்கு ஆதரவு வழங்குதல் சம்பந்தமாக தேர்தல்கள் திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென எழுத்து மூலமாக அறிவிப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் மேலும் தெரிவித்ததுடன் அரசியல் கட்சியொன்று நடுநிலையாக செயற்படுவதற்கு எதிர்பார்ப்பதாக அறிவித்தால் அவ்வாறான கட்சிகளுக்கு எதிர்வரும் காலங்களில் நடாத்தப்படவிருக்கும் கூட்டங்களில் கலந்துகொள்வதற்கு அழைப்புவிடுப்பதற்கான வாய்ப்பு இல்லையெனவும், ஆயினும் அவர்கள் தமது விருப்பத்தை நேரடியாக தேர்தல்கள் திணைக்களத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இங்கு தெரிவிக்கப்பட்டது ஆயினும் அவ்வாறான கட்சிகளினால் தற்போது நியமிக்கப்பட்டுள்ள பிரதிநிதிகளுக்கு முறைப்பாடுகளை விசாரணை செய்யும் குழுவின் அலுவல்களில் பங்கேற்பதற்கு மற்றும் செயலாளர்களின் கூட்டங்களில் பங்கேற்பதற்கு முடியுமெனவும் அறிவிக்கப்பட்டது.

04. தோட்டங்களை சார்ந்த அல்லது ஏனைய தனியார் துறைகளில் பணியாற்றும் வாக்காளர்களுக்கு தேசிய ரீதியிலான தேர்தலின் போது தமது வாக்கினை அளிப்பதற்காக நிரந்தர வசிப்பிடத்திற்கு செல்வதற்கு தேவையான விடுமுறைகளை பெற்றுக்கொடுத்தல் தொடர்பாக செயல்முறையொன்றை தயாரித்தல் சம்பந்தமாகவும் முன்னைய கலந்துரையாடல்களின் போது கவனத்திற் கொள்ளப்பட்ட விடயமெனவும் அவர்களுக்கு அஞ்சல் மூல வாக்களிப்பு முறையொன்றைத் தயாரிப்பதற்கான வாய்ப்பு இல்லையெனினும் அது தொடர்பில் தேவையான அனைத்துத் தரப்பினரையும் அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார். அத்துடன் தோட்டத் தொழிலாளர்களாக சேவையிலீடுபட்டுள்ள இடங்களுக்குச் சென்று தமது வாக்கினை அளிப்பதற்கு விடுமுறை வழங்கப்பட வேண்டுமென தொழிலமைச்சினூடாக அறிவிப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் இங்கு தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்ததுடன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் (அரசியல் பிரிவு) பிரதிநிதி திரு. கே. மாரிமுத்து இது சம்பந்தமாக பல தடவைகள் விடயங்களை முன்வைத்துள்ளதாகவும் இது சம்பந்தமாக அவர் அறிக்கையொன்றைத் தயாரித்து முன்வைக்கவிருப்பதாகவும் அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுபவர்களின் வாக்குரிமையை பாதுகாப்பகற்காக அவர்களுக்கு தமது வாக்கை அளிப்பதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுத்தல் சம்பந்தமாக தேர்தல்கள்

திணைக்களத்தின் கருத்துக்களை சட்டவரைஞர் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

05. எவரேனுமொரு வேட்பாளர் எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு எதிர்பார்ப்பாராயின் அவர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினூடாக தோற்ற வேண்டுமெனவும் அல்லது முன்னாள் அல்லது தற்போதைய பாராளுமன்ற உறுப்பினராக இருக்கவேண்டுமெனவும் அல்லது தேசிய அரச பேரவையின் உறுப்பினராக செயற்பட்டிருத்தல் வேண்டுமென இங்கு தேர்தல்கள் ஆணையாளர் தெளிவுபடுத்தினார்.

06. முன்னர் குறிப்பிட்ட கலந்துரையாடல்களில் பங்குபற்றிய ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பிரதிநிதி திரு. உதய பிரபாத் கம்மன்பில கருத்துத் தெரிவிக்கையில் தேர்தல் தொடர்பான சட்டங்களை செயல் வலுப்பெறச் செய்யும் போது எழும் பாரிய பிரச்சினை வேட்பாளர்களின் பிரச்சார கட்அவுட்கள் மற்றும் வாகனங்களில் காட்சிப்படுத்தப்படும் உருவப்படங்களை அகற்றும் செயற்பாடு ஆகுமெனவும் போட்டியிடும் எந்தவொரு கட்சியினதும் அங்கீகரிக்கப்பட்ட அலுவலகங்களுக்கு அனுமதி வழங்கப்பட்ட கடிதத்திற்கு மேலதிகமாக காட்சிப்படுத்த முடியுமான பதாகையொன்றை தேர்தல்கள் திணைக்களத்தினால் வழங்க முடியுமாயின் சிறந்ததொரு முறையாக இருக்குமென சுட்டிக்காட்டினார். அந்தப் பிரேரணை மீது கவனத்தைச் செலுத்தி அங்கீகரிக்கப்பட்ட கட்சி அலுவலகங்களுக்கு அவ்வாறு வழங்குவதற்கு எதிர்பார்ப்பதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் இங்கு தெரிவித்தார்.

மேலும் குறிப்பிட்ட வேட்பாளர்களுக்கு மாவட்ட மட்டத்தில் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையில் கட்அவுட்களை பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்துவதற்கு வாய்ப்பு வழங்க முடியுமாயின் இது சம்பந்தமான சட்ட மீறல்களை தவிர்க்க முடியுமென திரு. உதய கம்மன்வில பிரேரணையொன்றை முன்வைத்துள்ளதாகவும் அதுவரை நடாத்தப்பட்டுள்ள நிரந்தரப் பிரதிநிதிகளுக்கான கூட்டங்களின் போது இது தொடர்பாக விரிவான வகையில் கலந்துரையாடப்பட்டதாகவும் அங்கு அரசியல் கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் அனைத்துக் கட்சிகளுக்கும் சம எண்ணிக்கையிலான கட்அவுட்களை பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்துவதற்கு அனுமதி வழங்கும் வேலைத் திட்டமொன்றை செயல்படுத்துதல் மீது விஷேட கவனம் ஈர்க்கப்பட்டதாக தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டதுடன் இவ்வாறே 2005 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட பிரேரணையொன்றுக்கமைய அங்கீகரிக்கப்பட்ட கட்சி அலுவல்களில் மாத்திரம் இவற்றைக் காட்சிப்படுத்த அனுமதி வழங்க முடியுமாக இருந்ததாக இது தொடர்பாக மேலும் கலந்துரையாடியதன் பின்னர் தீர்மானங்கள் எடுப்பதற்கான வாய்ப்பு நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

07. மேலே குறிப்பிடப்பட்ட கலந்துரையாடல்களின் போது கவனத்தில்கொள்ள்பட்ட மேலுமொரு விஷேட விடயம் மீது சபையின் கவனத்தை ஈர்க்கச்செய்த தேர்தல்கள் ஆணையாளர் தேசிய அடையாள அட்டை இல்லாத வாக்காளர்களுக்கு அவற்றை வழங்கும் முகமாக திருகோணமலை, பதுளை ஆகிய மாவட்டங்களில் தேர்தல் திணைக்களம், ஆட்பதிவுத் திணைக்களம் மற்றும் CaFFE அமைப்புடன் இணைந்து நடமாடும் சேவையொன்று ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாகவும் அத்துடன் PAFFRAL, CMEV மற்றும் NPOC போன்ற தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் நாட்டின் ஏனைய பிரதேசங்களில் இந்த நடமாடும் சேவையை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்தார்.

2014.11.07 ஆம் திகதி நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் போது தேருநர் இடாப்பில் தேசிய அடையாள அட்டை இலக்கம் குறிப்பிடப்படாதிருந்த நபர்களின் எண்ணிக்கை ஆகிய அனைத்து புள்ளிவிபரங்களையும் அதில் கலந்துகொண்ட தரப்பினருக்கு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர், பதிவுசெய்யப்பட்ட மொத்த வாக்காளர்கள் சுமார் 15 மில்லியன் ஆக இருப்பதாகவும் அதில் சுமார் 01 மில்லியன் வாக்காளர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கம் தேருநர் இடாப்பில் இல்லையென அறியக்கிடைப்பதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது. ஆனாலும் இந்த 01 மில்லியன்

வாக்காளர்களுக்கும் அடையாள அட்டை இல்லையென உறுதியாகக் கூற முடியாதெனவும் உதாரணமாக கம்பஹா மாவட்டத்தின் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களிடையே தேசிய அடையாள அட்டை இலக்கம் குறிப்பிடப்படாத வாக்காளர்களின் எண்ணிக்கை 98,000 ஆக இருந்த போதிலும் அதில் அரைவாசிக்கும் அதிகமானோருக்கு தேசிய அடையாள அட்டை, செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம் அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு இருப்பதாக அனுமானிக்க முடியுமென தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் மேலும் தெரிவிக்கையில் கடந்த மாகாண சபைத் தேர்தல்களுடன் ஒப்பிட்டு நோக்கும் போது சுமார் 04 இலட்சம் வாக்காளர்களுக்கு செல்லுபடியாகும் அடையாள அட்டை இல்லையென கருத முடியுமாக இருப்பினும் அதிலும் சுமார் 01 இலட்சம் வாக்காளர்களுக்கு கடந்த மாகாண சபைத் தேர்தலின் போது பயன்படுத்துவதற்காக வழங்கப்பட்ட தற்காலிக அடையாள அட்டைகள் இருப்பதாக தெரிவித்தார். தினமும் முழு நேரமாக கடமையில் ஈடுபட்டு 02 மாதத்திற்குள் வழங்க முடியுமான அடையாள அட்டைகளின் எண்ணிக்கை சுமார் 02 இலட்சம் மாத்திரமே என ஆட்பதிவுத் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டிருப்பதனால் தனது தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்வதற்கான தேவை சம்பந்தமாக பொதுமக்களை ஆர்வமூட்டுவதற்காக அரசியல் கட்சி மட்டத்தில் செயற்படுமாறு அறிவிக்கப்பட்டதுடன் முடியுமானவரை உச்சஅளவு எண்ணிக்கையிலான தேசிய அடையாள அட்டைகளை வாக்காளர்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்காக தேர்தல்கள் திணைக்களத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அனைத்து தேர்தல் கண்காணிப்பாளரிடமும் கோரிக்கைவிடுக்கப்பட்டது. எவ்வாறாயினும் தேசிய தேர்தலொன்றின் போது எந்தவொரு வாக்காளருக்கும் அவரது வாக்கினை அளிப்பதற்கான சந்தர்ப்பம் இழக்கப்படக்கூடாதென்பதினால் இந்த நடவடிக்கையை சிறப்பான வகையில் நிறைவேற்றிக்கொள்வதற்கு அனைத்துத் தரப்பினரும் அர்ப்பணிப்புடனும் ஆர்வத்துடனும் செயற்பட வேண்டுமெனவும் தேர்தல்கள் ஆணையாளர் இங்கு வலியுறுத்தினார். தேர்தல் தினமன்று வாக்காளர் ஒருவரின் தேசிய அடையாள அட்டை/ செல்லுபடியாகும் அடையாள அட்டை காணாமற் போனால் அந்த வாக்காளரின் வேண்டுகோளிற்கு இணங்க தற்காலிக அடையாள அட்டையொன்றை வழங்குவதற்கு தேர்தல்கள் திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்வதாகவும் இவ்வாறான சந்தர்ப்பங்கள் கடந்த காலத் தேர்தல்களின் போதும் நிகழ்ந்துள்ளதுடன் நியாயமானதென உறுதிப்படுத்தப்படும் அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது தராதரம் பாராது குறிப்பிட்ட வாக்காளருக்கு இந்த தற்காலிக அடையாள அட்டையை வழங்குவதற்கு தேர்தல்கள் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் அதரிவித்தார். செல்லுபடியாகும் அடையாள அட்டையொன்றை சமர்ப்பிக்காமையின் காரணமாக வாக்கெடுப்பு நிலையத்தில் சில மக்கள் பிரதிநிதிகளின் வாக்கினை அளிக்கமுடியவில்லையெனவும் நினைவுபடுத்திய தேர்தல்கள் ஆணையாளர் செல்லுபடியாகும் அடையாள அட்டையை சமர்ப்பிக்காத எந்தவொரு வாக்காளருக்கும் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படாதெனவும் எனவே தேசிய அடையாள அட்டை அல்லது வேறு செல்லுபடியாகும் அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வதற்கு பொதுமக்களை அறிவுறுத்துவதற்கு அரசியல் கட்சிகள் நடவடிக்கை மேற்கொள்ளுதல் அத்தியாவசியமெனவும் இது தொடர்பில் கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அனைத்துப் பிரதிநிதிகளிடமும் வேண்டிக்கொள்ளப்பட்டது.

08. கலந்துரையாடலில் முதன் முறையாக இணைந்து கொள்ளும் தரப்பினரின் தகவலுக்காக 2014 ஆம் ஆண்டிற்கான தேருநர் இடாப்பின் மீளாய்வின் முன்னேற்றம் சம்பந்தமாக மீண்டும் அறிவித்த தேர்தல்கள் ஆணையாளர் 2014.10.31 ஆம் திகதி நடப்பு ஆண்டின் தேருநர் இடாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து இடம்பெயர்ந்து வாழும் வாக்காளர்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ள குறைநிரப்பு தேருநர் இடாப்பும் தற்போது நிறைவுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். எதிர்வரும் சனாதிபதித் தேர்தலின்போது இந்த குறைநிரப்புத் தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கு மாத்திரமே வாக்களிப்பதற்கான வாய்ப்பு நிலவுவதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் இங்கு விஷேடமாக வலியுறுத்தினார். எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்துள்ள கட்சிகளினால் வேண்டிக்கொள்ளப்படின் அதன் இறுவட்டை (CD) வழங்குவதற்கான வாய்ப்பு நிலவுவதாகவும் அத்துடன் அக்கட்சிகளிலிருந்து

ஒரு வேட்பாளர் மாத்திரம் போட்டியிடுவதாக உறுதிப்படுத்தியிருத்தல் அவசியமெனவும் தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் ஏனைய எந்தவொரு கட்சியும் போட்டியிடும் போது அதுபற்றி எழுத்து மூலமாக அறிவித்தால் மற்றும் கட்டுப் பணத்தை செலுத்தியதன் பின்னர் அவர்களுக்கு இந்த இறுவட்டுக்களை வழங்குவதாக குறிப்பிட்டுள்ளார்.

09. கடந்த மாகாண சபைத் தேர்தலின் போது 2013 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பை பயன்படுத்திய பிரகாரம் எதிர்வரும் சனாதிபதித் தேர்தலின் போது அந்த தேருநர் இடாப்பைப் பயன்படுத்தாமல் 2014 ஆம் ஆண்டிற்கான தேருநர் இடாப்பை பயன்படுத்துவதற்கான காரணம் என்னவென சில தரப்பினர் தம்மிடம் வினவுவதாக இங்கு தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் 2013 ஆம் ஆண்டிற்கான தேருநர் இடாப்பின் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கையைப் பார்க்கிலும் 2014 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை சுமார் 03 இலட்சத்தினால் அதிகரித்திருப்பதனால் இந்த புதிய வாக்காளர்களின் ஜனநாயக உரிமையான வாக்குரிமையை தடுப்பதற்கு எந்தவிதத்திலும் சட்ட ரீதியான அதிகாரமோ பண்பாட்டு ரீதியான உரிமையோ தேர்தல்கள் திணைக்களத்திற்கு இல்லாதிருப்பதனாலும் மனச்சாட்சிப் பிரகாரம் அவாவாறான செயற்பாடொன்றிகு இடமளிக்க முடியாதிருப்பதினாலும் எதிர்வரும் சனாதிபதித் தேர்தலின் போது 2014 ஆம் ஆண்டிற்கான தேருநர் இடாப்பைப் பயன்படுத்துவதாக மேலும் தெரிவித்தார்.

10. பின்னர் முக்கியமாக கலந்துரையாடப்பட்ட தேர்தல் காலப்பகுதியில் பிரசாரக் கூட்டங்களை நடாத்துவதற்காக விளையாட்டு மைதானங்கள்/ திடல்களை ஒதுக்கிக்கொள்ளும் போது எழும் சிக்கல்மிக்க நிலைமைகள் மீது கவனத்தைச் செலுத்திய தேர்தல்கள் ஆணையாளர், கடந்த மாகாண சபைத் தேர்தல் காலப்பகுதியில் இந்த விளையாட்டு மைதானங்கள்/ திடல்களை ஒதுக்கிக்கொள்ளும் போது அதிகளவு பிரச்சினைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜனநாயக் கட்சி ஆகியன முகங் கொடுத்துள்ளதாகவும் சில சந்தர்ப்பங்களில் இந்த விளையாட்டு மைதானத் திடல்களை ஒதுக்கிக் கொள்வதற்கு தேர்தல்கள் ஆணையாளர் என்ற வகையில் தானும் தலையிட வேண்டியேற்பட்டதாகவும் ஆனாலும் எதிர்காலத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்தில் அவ்வாறானதொரு நிலைமையொன்று ஏற்படாத வகையில் அனைத்துத் தரப்பும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் தெரிவித்தார். நியாயமான காரணமின்றி விளையாட்டு மைதானங்கள்/ திடல்களை நீண்டகாலமாக வைத்துக் கொள்வதற்கு எந்தவொரு தரப்பும் நடவடிக்கை மேற்கொண்டால் அந்த இடங்களை தேர்தல்கள் திணைக்களம் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் கடந்த தேர்தலின் போது மகரகம பிரதேசத்தில் திடலொன்று மலர் கண்காட்சியை நடாத்துவதற்காக முழு நேர அடிப்படையில் ஒதுக்கிக்கொள்ளப்பட்டிருந்ததாகவும் தேசிய தேர்தலொன்று அறிவிக்கப்பட்டுள்ள இச்சந்தர்ப்பத்தில் விளையாட்டு மைதானங்கள்/ திடல்களை தேர்தல் வேட்பாளர்களின் பிரசார நடவடிக்கைகளுக்கு ஒதுக்கிக்கொள்வதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமே தவிர வேறு கண்காட்சிகளுக்கு வழங்க வேண்டாமென உரிய தரப்பினருக்கு எழுத்துமூலமாக அறிவிப்பதற்கு நடவடிக்கையெடுப்பதாகவும் தெரிவித்தார். சனாதிபதி அவர்கள் பங்குபற்றும் பிரசாரக் கூட்டம் நடைபெறும் கால அட்டவணையை நேர காலத்துடன் தேர்தல்கள் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் திரு. சுசில் பிரேம ஜயந்த அவர்களிடம் வேண்டிக்கொள்ளப்பட்டது. அதனுடாக ஏனைய வேட்பாளர்களின் பிரசாரக் கூட்டங்களை அந்த விளையாட்டு மைதானங்கள்/ திடல்களில் குறிப்பிட்ட திகதிகளில் நடாத்தாது இருப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு சிக்கல்களைக் குறைத்துக் கொள்வதற்கு முடியுமெனவும் தெரிவித்தார். எவ்வாறாயினும் தேர்தல் அல்லது பிரசார நடவடிக்கைகளுக்காக எந்தவொரு ஆர்வமும் காட்டாத கட்சிகள்/ தரப்பினரால் உபாயமொன்றாக இந்த விளையாட்டு மைதானங்கள்/ திடல்களை நீண்டகாலத்திற்கு ஒதுக்கி வைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்காள்ளப்படுமாயின் அந்தக் கட்சி/ தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் தேர்தல்கள் ஆணையாளர் வலியுறுத்தினார். எவ்வாறாயினும் தமது

பிரசார நடவடிக்கைக்குத் தேவையான விளையாட்டு மைதானங்கள், மண்டபங்களை நேரகாலத்துடன் ஒதுக்கிக் கொள்வதற்கு அரசியல் கட்சிகள் நடவடிக்கை மேற்கொண்டால் தம்மிடம் முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் குறைவடையுமெனவும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.

பெயர் குறித்த நியமனங்கள் பொறுப்பேற்கப்பட்டதன் பின்னர் போட்டியிடும் அரசியல் கட்சிகள் எவையெனவும் பிரதான கட்சிகளுக்கு ஆதரவினை வழங்கும் ஏனைய ஆதரவுக் கட்சிகள் (Proxy Party) எவையெனவும் உறுதியாக அறிந்துகொள்வதற்கான வாய்ப்பு நிலவுவதனால் இந்த மைதானங்களை ஒதுக்கிக்கொள்ளும் முறையை உரிய மேற்பார்வையுடன் நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு கட்சிகளினதும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களை நடாத்துவதற்கு உத்தேசித்திருக்கும் திகதிகள் மற்றும் இடங்களை விஷேடமாக சனாதிபதி அவர்கள் பங்கேற்கும் கூட்டங்கள் பற்றிய தகவல் உள்ளடக்கப்பட்ட பொருத்தமான கால அட்டவணையொன்றை தயாரிப்பதற்கு எதிர்வரும் தினங்களில் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தேர்தல்கள் ஆணையாளனர் இங்கு தெரிவித்தார்.

இங்கு பிரதிநிதியொருவர், மைதானங்களை ஒதுக்கிக் கொள்ளுதல் சம்பந்தமாக கொழும்பு மாநகர சபையினாலும் முறைகேடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்ததுடன் அவ்வாறான நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு இம்முறை எவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென வினவினார். இது தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளர் கருத்துத் தெரிவிக்கையில் அவ்வாறான விடயம் தொடர்பாக எந்தவொரு தரப்பினரும் எழுத்து மூல முறையீடொன்றை தம்மிடம் முன்வைக்கவில்லையெனவும் அவ்வாறு முன்வைத்திருந்தால் அவ்வாறான முறைகேடுகளை மேற்கொள்ளுதல் சம்பந்தமாக உரிய தரப்பினரிடம் வினவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவித்தார். இவ்வாறான நடவடிக்கைகள் சம்பந்தமான முறைப்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் அல்லது மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் செய்வதன் மூலம் எந்தவிதமான பெறுபேறுகளும் கிடைக்காதென இது தொடர்பாக மேலெழுந்தவாரியாக நோக்கும் சிலர் கருத்துத் தெரிவித்தாலும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொண்டு சில சந்தர்ப்பங்களில் மிக முக்கியமான தீர்மானங்களை எடுப்பதற்கான வாய்ப்பு இருப்பதாக தெரிவித்த தேர்தல் ஆணையாளர் இந்த விளையாட்டு மைதானங்கள்/ திடல்களை ஒதுக்கிக்கொள்ளுதல் தொடர்பில் ஏதேனும் சிக்கல்கள் இருப்பின் உடனடியாக தனக்கு அல்லது உரிய தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

11. புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபைகளுக்கான தேர்தலை நடாத்துதல் சம்பந்தமான வழக்கு 2014.11.12 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுடன் அச்சந்தர்ப்பத்தில் வாதிகள் மற்றும் அவர்கள் சார்பாக தோற்றும் சட்டத்தரணிகள் வருகை தராமையின் அடிப்படையில் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதுடன் இந்த நிலைமை கவலைக்குரிய விடயமாகுமென தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.

12. இச்சந்தர்ப்பத்தில் கருத்துத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதி திரு. ரவி கருணாநாயக்க, தேர்தல்கள் ஆணையாளர் மிகவும் சுயாதீனமாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் சம்பந்தமாக தனது மகிழ்ச்சியை தெரிவித்துக்கொள்வதாகவும் சனாதிபதித் தேர்தலை 2015.01.08 ஆம் திகதி நடாத்தாதிருக்குமாறு கேட்டுக்கொள்வதாகவும் தெரிவித்தார். அத்துடன் எதிர்காலத்தில் நடாத்தப்படவிருக்கும் சனாதிபதித் தேர்தலை கண்காணிப்பதற்கு உள்நாட்டைப் போன்றே ஐரோப்பிய, ஆசிய, இந்திய கண்காணிப்புக் குழுக்களையும் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் திரு. ரவி கருணாநாயக்க கேட்டுக்கொண்டார். இங்கு மேலும் விடயங்களைத் தெளிவுபடுத்தி திரு. ரவி கருணாநாயக்க

கருத்துத் தெரிவிக்கையில், சனாதிபதித் தேர்தலொன்றை பிரகடனப்படுத்துவதற்கு முன்னிருந்தே தற்போதய சனாதிபதியவர்களின் கட்அவுட்கள் அனேகமான பிரதேசங்களில் அனைத்து மின்கம்பங்களிலும் காட்சிப்படுத்தப்படுவதனைக் காணக்கூடியதாக இருப்பதாகவும் தேர்தல் காலங்களில் இந்த நிலைமை மேலும் உக்கிரமடைவதற்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவித்தார். மேலும் அக்கட்சியின் பல்வேறு செயற்பாட்டாளர்கள் தாம் நினைத்தவாறு கட்சியின் அலுவலகங்களை திறக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு சட்டத்தை மீறும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் சம்பந்தமாக தனது அதிருப்தியை தெரிவித்த திரு. ரவி கருணாநாயக்க அவர்கள் அனைத்து வேட்பாளர்களுக்கும் ஊடகங்களைப் பயன்படுத்துவதில் சம உரிமை இருத்தல் வேண்டுமெனவும் அந்த சந்தர்ப்பத்தை அனைவருக்கும் நியாயமான முறையில் பெற்றுக் கொடுத்தல் வேண்டுமெனவும் சுட்டிக்காட்டினார். மேலும் தேர்தல்கள் ஆணையாளர் உட்பட தேர்தல்கள் திணைக்களத்தின் பணியாட்தொகுதி அங்கத்தவர்கள் மிகச் செயலூக்கத்துடன் கடமைகளை நிறைவேற்றுபவர்களாக இருந்த போதிலும் ஒரு நிகழ்வு நடப்பதற்கு முன்னரே அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டுமெனவும் சில விடயங்கள் தொடர்பாக பின்னர் கவனத்தில் கொள்வதில் சிறந்த பெறுபேறைப் பெற்றுக்கொள்ள முடியாதென்பது தனது கருத்தாகும் எனவும் எனவே இது தொடர்பாக கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மிகத் தேவையுடன் கேட்டுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக தாம் குறித்துக்கொள்வதாகவும் தேர்தல் திகதி சம்பந்தமாக இதுவரை பல்வேறு தரப்பினரால் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருப்பதாகவும் எவ்வாறாயினும் புனித பாப்பரசரின் இலங்கை விஜயத்திற்கு தடைகள் ஏற்படாத வகையில் தேர்தலை நடாத்துவதற்கான அலுவல்களை நிறைவேற்றுவதற்கு பெற்றுக்கொள்ள முடியுமான உச்சளவு தினங்களைப் பெற்று தேர்தலை நடாத்த முடியுமான திகதியில் அதனை நடாத்துவதற்கு தேவையான அறிவித்தல்கள் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார். அவ்வாறே மின்கம்பங்களில் தொங்கவிடப்பட்டிருக்கும் கட்அவுட்கள் காட்சிப்படுத்தல் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளர் கருத்துத் தெரிவிக்கும் போது பெயர் குறித்த நியமனங்கள் பொறுப்பேற்கப்படும் காலப்பகுதியில் ஏனைய எந்தவொரு வேட்பாளருக்கும் அந்தவிதமாக தமது கட்அவுட்களை காட்சிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைப்பதாக தெரிவித்தார். அத்துடன் அவை கட்டணம் செலுத்தாமல் காட்சிப்படுத்தப்படுபவைகளாக இருப்பின் அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குறிப்பிட்ட மாநகர சபைக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் உதாரணமாக கொழும்பு நகரில் காட்சிப்படுத்தப்படும் கட்அவுட்கள் தொடர்பாக செயற்படுத்துவதற்கான அதிகாரம் நகர முதல்வருக்கு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் தேர்தல்கள் ஆணையாளர் என்ற வகையில் பொலிஸ் ஊடாக அவற்றை அகற்றுவதற்கான அதிகாரம் பெயர் குறித்த நியமனங்கள் பொறுப்பேற்கப்பட்டதன் பின்னரே தமக்கு கிடைப்பதாகவும் அவ்வாறு அதிகாரம் கிடைத்தவுடனேயே பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இச்சந்தர்ப்பத்தில் ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதிநிதி திரு. மனோ கணேசன் கருத்துத் தெரிவிக்கையில் அது தொடர்பாக உரிய நிறுவனங்களுக்கு எழுத்து மூலமாக அறிவிக்க வேண்டுமென தெரிவித்தார். குறிப்பிட்ட வேட்பாளருக்காக கட்டுப்பணம் செலுத்தியதன் பின்னர் இது சம்பந்தமாக உரிய நிறுவனங்களுக்கு எழுத்து மூலமாக அறிவிப்பதற்கு நடவடிக்கையெடுப்பதாக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.

இங்கு திரு. சுனில் வட்டகல அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் சுற்றாடல் சட்டம், தேசிய சாலைகள் சட்டம் ஆகிய சட்டங்களின கீழ் அலுவல் மேற்கொண்டு இதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனத் தெரிவித்தார்.

மீண்டும் தனது கருத்துக்களை தெரிவித்த தேர்தல் ஆணையாளர், இந்த அனைத்து செயற்பாடுகளும் வெறுமனே சட்டங்கள், ஒழுங்கு விதிகளின் அடிப்படையில் மாத்திரம்

தங்கியிருப்பதில்லையெனவும் உண்மையிலேயே இது பற்றி நோக்கும் போது அனேகமான விடயங்கள் மனிதர்களின் மனசாட்சிக்கும் பண்பாட்டிற்கும் இயைந்து செல்கின்றனவா என்பதன் மீதே தங்கியிருப்பதாகவும் தெரிவித்தார். எவ்வாறாயினும் ஏதோவொரு விதத்தில் சட்டம் மீறப்பட்டிருக்குமாயின் அது தொடர்பாக எடுக்க வேண்டிய உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

திரு. ரவி கருணாநாயக்க அவர்களால் ஊடகப் பயன்பாடு சம்பந்தமாக எழுப்பப்பட்ட பிரச்சினை தொடர்பாக பதிலளிக்கையில் அரசியலமைப்புச் சட்டத்தின் 18 ஆவது திருத்தத்தின் பிரகாரம் ஊடக நெறிமுறைகளை முன்வைப்பதற்கு மாத்திரமே தேர்தல்கள் ஆணையாளருக்கு வாய்ப்பு இருப்பதாகவும் சில சந்தர்ப்பங்களில் அரச ஊடகங்களைப் பார்க்கிலும் தனியார் ஊடகங்கள் பக்கச்சார்பாக நடவடிக்கை மேற்கொள்வதாக தெரியவருவதுடன் அதனால் அரச ஊடகங்களுக்கு மாத்திரம் பக்கச்சார்பாக செயற்பட்டமை தொடர்பாக குற்றம் சுமத்துவதற்கான வாய்ப்பு இல்லையெனவும், எவ்வாறாயினும் எதிர்வரும் நாட்களில் தேர்தல் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டவுடன் தேர்தல் காலங்களில் ஊடகங்கள் செயற்பட வேண்டிய விதம் சம்பந்தமாக அரச மற்றும் தனியார் ஊடகங்களை அறிவுறுத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார். அத்துடன் ஊடக பயன்பாட்டின்போது அனைத்து வேட்பாளர்களுக்கும் சம வாய்ப்பை பெற்றுத்தருமாறு ஊடகங்களுக்கு அறிவிப்பதற்கு கட்சி செயலாளர்கள் மற்றும் வேட்பாளர்களுக்கும் வாய்ப்பு இருப்பதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் இங்கு சுட்டிக்காட்டினார்.
எதிர்வரும் சனாதிபதித் தேர்தலின்போது கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக கண்காணிப்பு குழுக்களை அழைத்தல் தொடர்பில் கருத்து தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர், இலங்கையில் தேர்தலொன்று நடாத்தப்படும் சந்தர்ப்பத்தில் வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை அழைக்கும் நடவடிக்கை 20 ஆம் நூற்றாண்டின் இறுதி பகுதியில் அதாவது 1988 ஆம் ஆண்டில் நிலவிய பயங்கர சூழ்நிலையில் ஆரம்பிக்கப்பட்டதுடன் அவ்வாறான சூழ்நிலையொன்று நிலவாத இந்த காலத்திலும் சம்பிரதாயமாக கருதப்பட்டு வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை அழைத்தல் ஒரு வகையில் கவலைதரும் விடயமாக இருப்பதாக தெரிவித்தார். மேலும் வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் வருகைதரல் அல்லது வருனைதராதிருத்தலின் அடிப்படையில் தேர்தல் பெறுபேறுகளில் எந்தவித மாற்றங்களும் இடம்பெற மாட்டாதெனவும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார். எவ்வாறாயினும் இந்த வேண்டுகோள் பற்றி கவனம் செலுத்தி வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை அழைப்பதற்காக தெற்காசிய தேர்தல் அதிகாரிகளின் சங்கத்திற்கும் ஏற்புடைய ஏனைய நிறுவனங்களுக்கும் எழுத்துமூலமாக அறிவித்தல் விடுப்பதாக தேர்தல்கள் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். எவ்வாறாயினும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தேர்தல் அமைப்புக்களை கலந்துகொள்ளச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் பெயர்குறித்த நியமனங்கள் பற்றிய அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் கண்காணிப்பு குழுக்களை ஈடுபடுத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. திஸ்ஸ அத்தநாயக்க வேண்டுகோள் விடுத்துள்ள போதிலும் அன்றைய திகதி முதல் கண்காணிப்பு குழுக்களை ஈடுபடுத்துதல் நடைமுறை சாத்தியமற்ற விடயமாகவிருப்பினும் அதன் பின்னர் முடியுமான உச்சளவு காலம் இந்த கண்காணிப்பு குழுக்களை ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.

இச்சந்தர்ப்பத்தில் மீண்டும் திரு. ரவி கருணாநாயக்க அவர்கள் கருத்து தெரிவிக்கையில் அநேகமான சந்தர்ப்பங்களில் வாக்கெண்ணும் நிலையங்களிலேயே சிக்கல்கள் ஏற்படுவதாக அறியக் கிடைப்பதனால் இந்த கண்காணிப்பாளர்களை அவற்றில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்தார்.

தேர்தலில் வாக்கெண்ணும் நடவடிக்கைகளின்போது வெளிவாரியான அழுத்தமொன்று, அச்சுறுத்தலொன்று கண்காணிப்பாளர்களுக்கு/ அலுவலர்களுக்கு விடுக்கப்படுமென உண்மையிலேயே அறியக் கிடைத்தால் வாக்கெண்ணும் அலுவல்களை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார். தேர்தல்

நடைமுறையில் அல்லது வாக்கெண்ணும் அலுவல்கள் மீது எதிர்க்கட்சி செயற்பாட்டாளர்கள் நிதமும் தெரிவிக்கும் நம்பிக்கையின்மை எதிர்கட்சி ஆதரவாளர்களிடத்தில் பிரச்சினைக்குரிய நிலைமையொன்றை ஏற்படுத்துவதாக சுட்டிக்காட்டிய தேர்தல்கள் ஆணையாளர் ஒரு கட்சி தேர்தல் முறை மற்றும் தேர்தல்கள் திணைக்களத்தை விமர்சிப்பதனூடாக தமது ஆதரவாளர்கள் வாக்கெடுப்பு நிலையத்திற்கு வருகைதராதிருப்பதற்கு இடமிருப்பதாக மேலும் தெரிவித்தார்.

அத்துடன் தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்திக் கொள்வதன் நோக்கம், தேர்தல்கள் திணைக்களத்தில் முறைகேடுகள் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படும் கருத்திற்கமைய அத்திணைக்களத்தை கண்காணிப்பதற்காக அல்லவெனவும் பொதுமக்களின் உள்ளங்களில் நம்பிக்கையை ஏற்படுத்துதல், "Vote is Your Rights" என்பதிலிருந்து உணர்த்தப்படும் அவர்களது வாக்குரிமையைப் பாதுகாத்தல் மற்றும் தேர்தல் தொடர்பான அலுவல்களில் வெளிப்படை தன்மையை சுட்டிக்காட்டுவதற்காகவே எனவும் இங்கு தேர்தல்கள் ஆணையாளர் வலியுறுத்தினார். எந்தவொரு அரசியல் கட்சிகள் தொடர்பிலும் விஷேட கவனிப்பு, எதிர்ப்பு அல்லது பக்கச்சார்பு தேர்தல்கள் ஆணையாளர் அல்லது தேர்தல்கள் திணைக்களத்தினுள் இல்லாதிருப்பதுடன் அரசாங்கத்தை பாதுகாத்தல் அல்லது வீழ்த்துதல் தேர்தல்கள் திணைக்களத்தின் அலுவல் இல்லையெனவும் "அரசு" இனை பாதுகாப்பதற்காக மாத்திரமே தேர்தல்கள் ஆணையாளரை போன்றே தேர்தல்கள் திணைக்களமும் முன்வருவதாகவும் மேலும் வலியுறுத்தினார்.

உள்நாட்டு கண்காணிப்பாளர்களை வாக்கெண்ணும் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக அதிலும் விஷேடமாக விருப்பு வாக்கெண்ணல் சந்தர்ப்பத்தை கண்காணிப்பதற்காக ஈடுபடுத்தப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் சில சந்தர்ப்பங்களில் வாக்கெண்ணும் நிலையங்களில் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளதாக அறியக் கிடைத்துள்ளதாகவும் அதாவது அவ்வாறான நிகழ்வுகள் சம்பந்தமாக மாத்தளை, அநுராதபுரம், குருநாகல் போன்ற பிரதேசங்களில் இடம்பெற்றுள்ளதாக அறியக் கிடைத்தாலும் அச்சந்தர்ப்பத்தில் அது தொடர்பான முறைப்பாடுகள் அனைத்து நடவடிக்கைகளும் நிறைவுபெற்றதன் பின்னரே முன்வைக்கப்பட்டிருப்பதாகவும் சில நிகழ்வுகள் சம்பந்தமாக முறையாக அறிவிக்கப்படாதிருப்பதாகவும் எதிர்காலத்தில் அவ்வாறான நிலைமைகள் ஏற்படாதென நம்புவதாக அவ்வாறான நிலைமைகள் ஏற்படுவதனை தடுப்பதற்கு முடியுமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் தெளிவுபடுத்தினார். அத்துடன் ஆதரவளிக்கும் கட்சிகளின் வேட்பாளர்களை (Proxy Candidaties) தேவையற்ற அளவில் வாக்கெண்ணும் நிலையத்திற்குள் ஈடுபடுத்துவதனை தவிர்க்குமாறு இங்கு கேட்டுக்கொண்ட தேர்தல்கள் ஆணையாளர் தேர்தல் கண்காணிப்பு குழுக்களின் பிரதிநிதிகள், தேர்தல்கள் ஆணையாளர் நியமிக்கும் தனிப்பட்ட அலுவலரொருவர் மற்றும் மாவட்ட செயலாளரின் அலுவலரொருவர் என ஒவ்வொரு மாவட்டங்களிலும் முறைப்பாடுகளை பெற்றுக்கொள்வதற்காக ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் மேலும் குறிப்பிட்டார்.

13. சில மாவட்ட செயலாளர்கள், வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் ஊடாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு கிடைக்கும் நன்மைகள் காரணமாக அரசாங்கத்தைப் பாதுகாத்தல் சம்பந்தமாக அரசாங்க உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளதாக கடந்த கலந்துரையாடலின் போது எழுந்த விடயம் சம்பந்தமாக கவனத்தை ஈர்த்து கருத்துத் தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் அது சம்பந்தமாக ஆராய்ந்ததாகவும் கடமைகளுடன் தொடர்பான உத்தியோகபூர்வ அலுவல்கள் தவிர்ந்த ஏனைய எந்தவொரு முறைகேடும் அங்கு நிகழவில்லையென அறியக்கிடைத்ததாகவும் தெரிவித்தார். அத்துடன் எதிர்வரும் நாட்களில் அமைச்சுக்களின் செயலாளர்களுடன் தாம் கலந்துரையாடவிருப்பதாகவும் அதனூடாக தேர்தல் அலுவல்களை சிறப்பான வகையில் நிறைவேற்றத் தேவையான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

14. இச்சந்தர்ப்பத்தில் திரு. சுனில் வட்டகல கருத்துத் தெரிவிக்கையில் தேர்தல் காலத்தில் நிகழும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் இடமாற்றல் தொடர்பில் முறைகேடுகள் நிகழ்வதனால் இது சம்பந்தமாக விஷேட கவனம் ஈர்க்கப்படல் வேண்டுமெனவும் அவ்வாறான முறைகேடுகளை தவிர்ப்பதற்காக பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் முதல் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் வரை அலுவலர்களின் தகவல் அடங்கிய ஆவணமொன்றை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளர் கருத்துத் தெரிவிக்கையில், அது சம்பந்தமாக ஏற்கனவே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அந்தத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக எழுத்து மூல வேண்டுகோளொன்றை இன்றைய தினம் (2014.11.21) சிரேட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பப்படவுள்ளதாக தெரிவித்தார். இதுவரை சுமார் 75 பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் இடமாற்றப்பட்டுள்ளதுடன் பொலிஸ் மா அதிபரைப் போன்றே உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் அதனிலும் உயர்ந்த பதவிகளிற்கான இடமாற்றல்கள் சம்பந்தமான அதிகாரம் அமைச்சின் செயலாளர்களுக்குரியதாக இருப்பதாகவும் அதற்குக் கீழான பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களை இடமாற்றும் அதிகாரம் பொலிஸ் மா அதிபரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் பொலிஸ் மா அதிபருக்கு உரித்தாகுவதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார். அத்துடன் இது தொடர்பாக எவரேனுமொரு தரப்புக்கு ஏதெனுமொரு சிக்கல் நிலைமை ஏற்பட்டிருப்பின் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்வதற்கான வாய்ப்பு நிலவுவதாகவும் மேலும் இது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயலாளர் (சட்டம்) திரு. நிமல் புஞ்சிஹேவா அவர்களின் பங்கேற்புடன் குறிப்பிட்ட பகுதிகளின் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடுவதற்கு எதிர்வரும் நாட்களில் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் எந்தவொரு பொலிஸ் உத்தியோகத்தரும் இந்த இடமாற்றல் சம்பந்தமாக எந்தவொரு முறைப்பாடும் இது வரையில் முன்வைக்கப்படாதிருப்பதுடன் வேறு எந்தவொரு தரப்பினராலும் அல்லது இதற்கு எதிர்ப்பை தெரிவிக்காதிருப்பின் தேர்தல்கள் ஆணையாளருக்கு மாத்திரம் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கான ஆற்றல் இல்லையெனவும் தேர்தல்கள் ஆணையாளர் சுட்டிக் காட்டினார்.

இச்சந்தர்ப்பத்தில் திரு. மனோ கணேஷன் அவர்கள், இதுவரை இடமாற்றம் செய்யப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென வினவினார். 2014.11.22 ஆம் திகதி முதல் பொலிஸ் உத்தியோகத்தர்களின் இடமாற்றல்களை இடைநிறுத்துவதற்கு வாய்ப்பு இருப்பதாகவும் ஆனாலும் இதுவரையில் இடமாற்றல் பெற்றுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பில் நடவடிக்கையெடுப்பதற்கு வாய்ப்பில்லை என தேர்தல்கள் ஆணையாளர் சுட்டிக்காட்டினார்.

இச்சந்தர்ப்பத்தில் திரு. மனோ கணேசன் அவர்கள், மீண்டும் கருத்துத் தெரிவிக்கையில் தமது கட்சி பொறுப்பு வாய்ந்த ஒரு அரசியல் கட்சி என்றவகையில் இவ்வாறான இடமாற்றல்கள் மீது கடும் எதிர்ப்பைத் தெரிவிப்பதாக கூறினார். இங்கு திரு. சுனில் வட்டகல அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் தமது கட்சியும் இந்த இடமாற்றல்கள் சம்பந்தமாக எதிர்ப்பைத் தெரிவிப்பதாகவும் தேர்தல்கள் ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பாக தெளிவுபடுத்திய தேர்தல்கள் ஆணையாளர், இது சம்பந்தமாக PAFFREL அமைப்பினாலும் தமக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் இந்த இடமாற்றல் தொடர்பாக எதிர்வரும் தினங்களில் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக திரு. மனோ கணேஷன் மற்றும் திரு. சுனில் வட்டகல ஆகியோரும் PAFFREL அமைப்பு இது தொடர்பாக எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாக இச்சந்தர்ப்பத்தில் விஷேடமாக குறித்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார். எவ்வாறாயினும்

தேர்தல் காலப்பகுதியில் இவ்வாறான முறைகேடுகள் நிகழுமாயின் அது தொடர்பாக எந்தவொரு தரப்பினரிடமிருந்தும் முறைப்பாடுகள் முன்வைக்கப்படாவிட்டாலும் இதற்கு உரிய நடவடிக்கையெடுப்பதற்கு தேர்தல்கள் ஆணையாளர் என்ற வகையில் தாம் அலுவல் மேற்கொள்வதாக தெரிவித்தார்.

15. எவ்வாறாயினும் தேர்தல் காலப்பகுதியினுள் முன்வைக்கப்படும் சில விடயங்கள் தொடர்பாக தாம் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்ப்பதில்லையென இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர், உதாரணமாக அமைய ஊழியர்களாக பணியாற்றுபவர்களை சேவையில் உறுதிப்படுத்துவதற்காக வரவு செலவுத் திட்டத்தின் கீழ் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளமையினால் அது தொடர்பான சுற்றறிக்கை தற்போது வெளியிடப்பட்டுள்ளதுடன் இந்த உறுதிப்படுத்தும் அலுவல் வெளிப்படைத் தன்மையுடனும் முறையாகவும் மேற்கொள்ளப்படுமாயின் அவற்றை இடைநிறுத்துவதற்கு அல்லது அரசாங்கத்தினால் பொதுமக்களுக்கு வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளினூடாக வழங்கப்படும் நிவாரணங்கள் ஆகியவற்றை இடைநிறுத்துவதற்கு தாம் நடவடிக்கை மேற்கொள்ள எதிர்பார்ப்பதில்லையென தெரிவித்தார். ஏற்கனவே நடமாடும் சேவைகளை நடாத்தி பொதுமக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருப்பினும் மீண்டும் நடமாடும் சேவைகளை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு முன்னணி அரசியல்வாதியொருவர் மாவட்ட செயலாளர்களுக்கு அறிவித்துள்ளதாக இரண்டு அரசியல் கட்சிகள் தமக்கு முறைப்பாடு செய்திருப்பதாக இங்கு தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் தேசிய தேர்தலொன்று பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நடமாடும் சேவைகளை நடாத்துதல் பொருத்தமில்லையென வலியுறுத்தினார். விஷேடமாக நாட்டின் சனாதிபதித் தேர்தல் என்பது ஒரு முக்கிய நிகழ்வாக இருப்பதினால் அது கட்டாயம் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றாக இருத்தல் வேண்டுமெனவும் அத்துடன் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலாக தெளிவாக வெளிப்படுத்தப்படல் வேண்டுமெனத் தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் தேர்தலொன்று/ வாக்கெடுப்பொன்று மிகவும் வெளிப்படைத் தன்மையுடன் நடாத்தப்படுவதன் காரணமாக நாட்டிற்கு சிறந்த கீர்த்தி நாமம் கிடைப்பதாகவும் இந்தியத் தேர்தல் ஆணைக்குழுவிற்குரிய அதிகாரங்கள் இலங்கைத் தேர்தல்கள் ஆணையாளர் என்ற வகையில் தமக்கு இல்லாதிருப்பினும் தேர்தல்கள் ஆணையாளர் என்ற வகையில் எல்லா விதத்திலும் தேர்தல் சட்டங்களை செயல் வலுப்பெறச் செய்து வெளிப்படைத் தன்மையுடனான தேசியத் தேர்தலொன்றாக எதிர்வரும் சனாதிபதித் தேர்தலொன்றை நடாத்துவதற்கு முடியுமான உச்சளவு நடவடிக்கைகளை எடுப்பதாகவும் இங்கு வலியுறுத்தினார்.

சோதிடர்களுக்கு தேவையான பிரகாரம் தேர்தல் தினம் தீர்மானிக்கப்படுவதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் பற்றி தெளிவுபடுத்திய தேர்தல்கள் ஆணையாளர் நாட்டின் பொதுமக்களிடையே சோதிடத்தை நம்புபவர்கள், நம்பாதவர்கள் என இரு தரப்பினர் இருப்பதினால் இங்கு அதிகாரம் செலுத்துவது சோதிடம் அன்றி பொதுமக்களின் வாக்குகள் எனவும் சோதிடத்தின் பிரகாரம் தனது தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொண்ட சில தரப்பினர் தேர்தல்களில் தோல்வியுற்றதற்கான ஏராளமான உதாரணங்களை வரலாற்றில் கண்டுகொள்ள முடியுமெனவும் தெரிவித்தார்.

16. திரு. சுனில் வட்டகல அவர்கள், கடந்த கூட்டங்களின் போது கலந்துரையாடப்பட்ட விடயமொன்றான பொலிஸ் அதிகாரங்களை அமுல்படுத்துவதற்கு தேர்தல்கள் ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் சம்பந்தமாக வினவியதுடன் விஷேடமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் தேர்தல் நடவடிக்கைகளில் இராணுவ உத்தியோகத்தர்கள் அதிகளவில் ஈடுபடுவதனால் அங்கு இராணுவத்தின் அதிகாரமா அல்லது பொலிஸ் அதிகாரமா செயல்வலுப்பெற வேண்டுமென்ற கேள்வி எழுகின்றது. அரசியல் கட்சிகள் என்ற வகையில் சில சந்தர்ப்பங்களில் தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு இராணுவத்தினரே ஈடுபடுத்துமாறு கட்சிப் பிரதிநிதிகள் கோருகின்ற போதிலும் அதன் தீமைபயக்கும் பெறுபேறாக பல்வேறு முறைகேடுகள் ஏற்பட முடியுமாக இருப்பதினால் தேர்தல் சட்டத்தின் 119 ஆவது பிரிவின் கீழ் தேர்தல்கள் ஆணையாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களின்

பிரகாரம் பொலிஸ் அதிகாரங்களை தேர்தல்கள் ஆணையாளர் ஊடாக அமுல்படுத்துவதற்கான வாய்ப்பு நிலவுவதனால் இது தொடர்பில் விஷேட கவனத்தைச் செலுத்தி தேர்தல்கள் ஆணையாளரின் அதிகாரங்களை நடைமுறைடப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்குமாறும் அவர் இங்கு மேலும் கேட்டுக்கொண்டார்.

இந்த விடயம் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளர் கருத்துத் தெரிவிக்கையில், பொலிஸ் அதிகாரங்களை அமுல்படுத்தல் தொடர்பாக எதிர்வரும் காலங்களில் கலந்துரையாடப்படவிருப்பதாகவும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தேர்தல் காலங்களில் இராணுவத்தை ஈடுபடுத்தல் தொடர்பில் சிக்கல் நிலைமைகள் ஏற்படமாட்டாதென நம்பமுடியுமெனவும் தெரிவித்தார். முன்னர் நடாத்தப்பட்ட தேர்தல்களின் போது இராணுவத்தினர் இணைக்கப்பட்டிருந்த பிரதேசங்களில் வெற்றியானது எதிர்க்கட்சிக்கு கிடைத்த சந்தர்ப்பங்கள் நிலவுவதனால் விஷேடமாக வட மாகாண சபையின் அதிகாரம் எதிர்க் கட்சியினுடையதாக இருப்பதினாலும் இராணுவத்தினரை ஈடுபடுத்துவதினால் ஒருதரப்பினருக்கு வெற்றி அல்லது தோல்வி ஏற்படுமென்ற முடிவுகளுக்கு வருவதற்தற்கான வாய்ப்பு இல்லையெனவும் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் பிரதேசமொன்றில் மக்கள் செயற்பாடு சிறப்பாக நிலவினால் எழும் சிக்கல்களை குறைத்துக்கொள்வதற்கான வாய்ப்பு நிலவுவதாகவும் அனுபவத்தின் அடிப்படையில் தெரிவிக்கமுடியுமெனவும் கூறினார்.

தேர்தலுக்கு முந்திய மற்றும் பிந்திய காலப்பகுதிகளில் பாதுகாப்பிற்காக இதற்கு முன்னரும் இராணுவத்தினரை ஈடுபடுத்தியதாக தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் இராணுவத்தினரின் ஒத்துழைப்பினை பெற்றுக்கொண்டமையின் காரணமாக தேர்தலில் வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்கான வாய்ப்பு இல்லையெனவும் சுட்டிக்காட்டினார். ஆயினும் எந்தவொரு இராணுவக் குழுவும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்படுவதாக அறியக்கிடைத்தால் உடனடியாக அது சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

17. இச்சந்தர்ப்பத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதிநிதி திரு.சம்பானி பத்மசேகர, கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது வாக்காளர்கள் பயன்படுத்திய தற்காலிக அடையாள அட்டையை எதிர்வரும் சனாதிபதித் தேர்தலின் போதும் பயன்படுத்துவதற்கு முடியுமா? என வினவினார்.

இந்த விடயம் தொடர்பாக தெளிவுபடுத்தும் வகையில் கருத்துத் தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் 2012,2013,2014 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்திய தற்காலிக அடையாள அட்டைகளில் ஸ்ரிக்கர் ஒன்றை ஒட்டுவதன் மூலம் அவற்றை செல்லுபடியானவைகளாக ஆக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுவதாக தெரிவித்தார்.

இச் சந்தர்ப்பத்தில் திரு.சுனில் வட்டகல, தேர்தல் காலத்தில் செயற்படும் முறைப்பாடுகள் விசாரணைகள் குழு எதிர்வரும் காலங்களிலும் செயற்படுமா என வினவியதுடன் அதற்குப் பதிலளித்த தேர்தல்கள் ஆணையாளர் வழமையான பிரகாரம் இம்முறையும் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுப்பதாக தெரிவித்தார்.

தோட்டப் பகுதிகளில் மற்றும் கொழும்புப் பிரதேசத்தில் மீள் குடியேற்றப்பட்ட வதிவாளர்கள் தொடர்பான தகவல்களை கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தேசிய சுதந்திர முன்னணியின் பிரதிநிதி திரு.கபில கமகே அவர்களுக்கு அறிவித்த தேர்தல்கள் ஆணையாளர் இது தொடர்பாக ஆராய்ந்து தகவல்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு திரு.சுனில் வட்டகல அவர்களிடமும் தெரிவித்தார்.

18. பின்னர் எதிர்வரும் சனாதிபதித் தேர்தல் நடவடிக்கை மீது சபையின் கவனத்தை ஈர்க்கச்செய்த தேர்தல்கள் ஆணையாளர், மேலே குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் இம்முறை

இடம்பெயர்ந்த வாக்காளர்களாக வாக்களிப்பதற்கு குறைநிரப்புப் பெயர்ப் பட்டியலில் பெயர்கள் உள்ளடக்கப்பட்டவர்களுக்கு மாத்திரமே வாய்ப்பு நிலவுவதாகவும் அதாவது மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களுக்கு மாத்திரம் வாக்களிக்க முடியுமெனவும் அந்த வாக்காளர்களிடையே ஒரு வாக்கு மாத்திரம் அளிக்கப்படுமாயின் தேர்தல் இரகசியத்தைப் பாதுகாக்கும் முகமாக அந்த வாக்கை அளிப்பதற்கு வாக்குப் பெட்டியொன்றை வழங்குவதற்கான வாய்ப்பு இல்லாமையினால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள பிரதேசத்தின் குறிப்பிட்ட வாக்காளர் தமது வாக்கை அளிக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

அத்துடன் வேறொருவரின் தேசிய அடையாள அட்டையை பயன்படுத்தி வாக்குகளை போலியான வாக்குகளை போலியான வழியில் வாக்களிப்பதற்கு எந்தவொரு தரப்பினரும் வாய்ப்பு வழங்கப்படாதிருப்பதுடன் அவ்வாறு செயற்பட முனைவோரை பொலீசாரிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் வாக்களிப்பதற்கு வருகைதரும் எவரொருவர் சம்பந்தமாக சந்தேகம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அந்த நபரிடமிருந்து அவரது கையொப்பதுடனான வாக்குமூலமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலுருக்கு (SPO) அதிகாரம் இருப்பதுடன் இது தொடர்பாக நிலவும் சட்ட ஒழுங்குவிதிகளை கடுமையாக அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.

19. எதிர்காலத்தில் நடாத்தப்படவுள்ள சனாதிபதித் தேர்தலின்போது அஞ்சல்மூல வாக்குகளுக்கான விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் இறுதி திகதி 2014.12.04 ஆம் திகதியாக தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் தேர்தலுக்குரிய அனைத்து அலுவல்களையும் ஏற்பாடு செய்துகொள்வதற்கு மிக குறுகிய காலமொன்றே இருப்பதனால் அன்றைய திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் எந்தவொரு அஞ்சல்மூல வாக்கு விண்ணப்பங்களை பொறுப்பேற்பதற்கு வாய்ப்பு இல்லையெனவும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார். 2014.12.15 ஆம் திகதி அஞ்சல்மூல வாக்குகளை வெளியிடுவதற்கு எதிர்பார்ப்பதுடன் தற்போதைய நிலைமையின் அடிப்படையில் சிறு மாற்றங்கள் ஏற்பட முடியுமெனவும் தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் தற்காலிக அடையாள அட்டைகளை வழங்குவதற்கான இறுதி திகதி 2014.12.31 ஆம் திகதியாகுமெனவும் தெரிவித்தார்.

அத்துடன் பெயர்குறித்த நியமனங்களை பொறுப்பேற்கும் இறுதி திகதியை தீர்மானிக்கும்போது க.பொ.த. (சா.த) பரீட்சை நடைபெறும் திகதி சம்பந்தமாக கவனத்தில் கொள்ளப்பட்டதுடன் தேர்தல்கள் திணைக்களத்தை அண்டிய வகையிலும் பாடசாலைகள் அமைந்திருப்பதனால் 2014.12.09 ஆம் திகதி அந்த பாடசாலைகளில் க.பொ.த (சாதாரண) தரப் பரீட்சை நடைபெறுவதனால் அன்றைய தினம் பெயர்குறித்த நியமனப் பத்திரங்களை பொறுப்பேற்கும் தினமாக பிரகடனப்படுத்தினால் தேர்தல்கள் செயலகத்தில் பெயர் குறித்த நியமனங்களை ஒப்படைத்ததன் பின்னர் அரசியல் கட்சி ஆதரவாளர்கள் தேர்தல்கள் செயலகத்தை அண்டிய பகுதிகளில் ஊர்வலங்களை நடாத்துவதனை தடுக்க முடியாதபட்சத்தில் பரீட்சை தேர்வுநாடிகளுக்கு இதனால் பாதிப்பு ஏற்படுவதன் காரணமாக நாட்டின் எதிர்காலமான பிள்ளைகளின் கல்விக்கு எந்தவிதத்திலும் பாதிப்பு ஏற்படாத வகையில் பெயர்குறித்த நியமனங்களைப் பொறுப்பேற்கும் திகதியை 2014.12.08 ஆம் திகதியாக தீர்மானித்து இருப்பதாகவும் விசேடமாக வலியுறுத்திய தேர்தல்கள் ஆணையாளர் இந்த அனைத்து விடயங்களையும் கவனத்தில் கொண்டு பெயர்குறித்த நியமனங்களை பொறுப்பேற்கும் இறுதி திகதி தீர்மானிக்கப்பட்டதாகவும் தேர்தல் தினத்தை தீர்மானிக்கும்போது பரிசுத்த பாபரசரின் இலங்கை விஜயத்திற்கு இடையூறு ஏற்படாத வகையில் அதற்காக பெற்றுக்கொள்ள முடியுமான உச்சளவு தினங்களை வழங்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் மேலும் தெளிவுபடுத்தினார்.

எதிர்காலத்தின் நடாத்தப்படவிருக்கும் சனாதிபதித் தேர்தலை சிக்கல்கள் குறைத்து சுதந்திரமானதும் நீதியானதுமான மிகச் சிறந்த முறையில் நடாத்துவதற்கு அனைத்து

தரப்பினரும் பொறுப்புடனும் ஆர்வத்துடனும் நடவடிக்கை மேற்கொள்வார்களென தாம் நம்புவதாகவும் இங்கு தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் வேறு விடயங்கள் இருப்பின் முன்வைக்குமாறும் சபைக்கு தெரிவித்தார். வேறு விடயங்கள் முன்வைக்கப்படாமையினால் இன்றைய தினம் கூட்டத்தில் பங்குபற்றியவர்களுக்கும் மீண்டும் நன்றியைத் தெரிவித்ததுடன் 16.30 மணியளவில் கூட்டம் நிறைவுபெற்றது.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் நிரந்தர முகவர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் - 2014.12.05

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் நிரந்தர முகவர்களுடன் தேர்தல்கள் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் குறிப்பு.

கலந்து கொண்டோர் :

1. திரு. சம்பானி பத்மசேகர	- ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி
2. திரு. கே. மாரிமுத்து (அரசியற் கிளை)	- இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்
3. திரு. சாந்த ஹேரத்	- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
4. திருமதி. சியாமலா பெரேரா	- புதிய ஜனநாயக முன்னணி
5. திரு. உதய கம்மன்பில	- ஜாதிக ஹெல உறுமய
6. திரு. ஸ்ரீநாத் பெரேரா	- ஐக்கிய சோசலிச கட்சி
7. திரு. எஸ். விஜேசந்திரன்	- மலையக மக்கள் முன்னணி
8. திரு. சரத் அத்துகோரல	- மலையக மக்கள் முன்னணி
9. திரு. அஜித் குமார	- மலையக மக்கள் முன்னணி
10. திரு. ஜீ. ராஜகுமார்	- ஈழ மக்கள் ஜனநாயக கட்சி
11. திரு. வீ. திருநாவுக்கரசு	- நவ சம சமாஜக் கட்சி
12. திரு. எஸ். மகேந்திரன்	- நவ சம சமாஜக் கட்சி
13. திரு. சுரநிமல ராஜபக்ஷ	- ஐக்கிய தேசியக் கட்சி
14. திரு. தயா பெல்பொல	- ஐக்கிய தேசியக் கட்சி
15. திரு. ஜோசப் மைக்கல் பெரேரா	- ஐக்கிய தேசியக் கட்சி
16. திரு. ஆர். யோகராஜா	- ஐக்கிய தேசியக் கட்சி
17. திரு. சுனில் த சில்வா	- ஜனநாயகக் கட்சி
18. திரு. ஆனந்த மானவடு	- ஜனநாயகக் கட்சி
19. திரு. இந்திக்க கால்லகே	- ஜனநாயகக் கட்சி
20. திரு. மஞ்சுள சேனாநாயக்க	- எமது தேசிய முன்னணி
21. திரு. சேனக த சில்வா	- எமது தேசிய முன்னணி
22. திரு. லலித் ரோஹண லியனகே	- மஹஜன எக்சத் பெரமுன
23. திரு. திஸ்ஸ யாபா	- மஹஜன எக்சத் பெரமுன
24. திரு. வை.எல்.எஸ். ஹமீட்	- அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்

தேர்தல்கள் திணைக்களத்தின் அலுவலர்கள்

1. திரு. யூ. அமரதாச - மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (பாராளுமன்றம்)
2. திரு. ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க - மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் (உள்ளூராட்சி)
3. திரு. எம்.எம். மொஹமட் - மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் (சட்டம் மற்றும் விசாரணை)

தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய அவர்களின் தலைமையில் 15.10 மணிக்கு கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டது. கலந்துகொண்ட அனைவரையும் தேர்தல்கள் ஆணையாளர் வரவேற்றார்.

2014.11.21 ஆம் திகதி அரசியல் கட்சி செயலாளர்கள் மற்றும் நிரந்தர பிரதிநிதிகளுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் அறிக்கை மீது முதலில் கவனம் செலுத்தப்பட்டது. இங்கு தேர்தல்கள் ஆணையாளர் கருத்து தெரிவிக்கையில் முன்னைய

கலந்துரையாடலின்போது கலந்துரையாடப்பட்டதன் பிரகாரம் சுகாதார சேவை மற்றும் அதிவேக பாதைகளில் சேவையாற்றுபவர்களுக்கு அஞ்சல்மூல வாக்களிப்பு வாய்ப்பினை வழங்குவதற்கு செயல்முறையொன்றை தயாரிப்பதற்கு இச்சந்தர்ப்பத்தில் நடவடிக்கை எடுக்க முடியாமைக்கு கவலை தெரிவித்தார். ஏனெனில் அந்த பிரேரணையை முறையாக சட்டமொன்றினூடாக அங்கீகரித்துக் கொள்ள முடியாமையினால் மேலே குறிப்பிடப்பட்டவர்களுக்கு எதிர்வரும் சனாதிபதி தேர்தலின்போது அஞ்சல்மூலம் வாக்களிப்பதற்கு வாய்ப்பு கிடைக்காதென தெரிவித்தார்.

02. மேலும் கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் தொழில்புரியும் தோட்டங்கள் மற்றும் ஏனைய கிராம பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கு தேசிய ரீதியில் நடாத்தப்படும் தேர்தலொன்றின்போது தமது வாக்கினை அளிப்பதற்கு தமது வசிப்பிடங்களுக்கு செல்வதற்கு போதுமான பிரகாரம் விடுமுறைகளை வழங்குதல் சம்பந்தமாக முறையான திட்டமொன்றை தயாரித்தல் சம்பந்தமாக அனைத்து தரப்பினரதும் கவனம் ஈர்க்கப்பட வேண்டுமெனவும் பெருந்தோட்டங்களில் வாழும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளோடு ஒத்துழைப்புடன் செயற்படும் எதிர்வரும் சனாதிபதி தேர்தலுக்கு வேட்பாளர்களை முன்னிறுத்தி போட்டியிடும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் புதிய ஜனநாயக முன்னணி போன்ற கட்சிகள் மற்றும் அக்கட்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி செயற்படும் ஏனைய கட்சிகள் இந்த விடயம் தொடர்பாக தமது விசேட கவனத்தை செலுத்த வேண்டுமென தேர்தல்கள் ஆணையாளர் வலியுறுத்தினார். அத்துடன் ஏற்கனவே கட்டுப்பணம் செலுத்தியுள்ள வேட்பாளர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய வேட்பாளர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் பிரதிநிதிகளும் இது தொடர்பாக தத்தமது கவனத்தை ஈர்த்தல் அத்தியாவசியமெனவும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.

நாட்டில் தேசிய ரீதியில் நடாத்தப்படும் தேர்தலொன்றின்போது ஆடை தொழிற்சாலைகள் உட்பட ஏனைய கைத்தொழிற்சாலைகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு தமது வாக்கினை அளிப்பதற்காக அவர்கள் வாழும் பிரதேசங்களுக்கு செல்வதற்காக போக்குவரத்து வசதிகளை குறிப்பிட்ட கைத்தொழிற்சாலைகளின் நிருவாகிகள் பொதுவாக ஏற்பாடு செய்வதுடன் ஆனாலும் ஹோட்டல்களுடன் தொடர்புடைய தொழில்களில் ஈடுபடுபவர்களுக்கு அவ்வாறான வாய்ப்பு இல்லாமையினால் அவர்கள் சிரமங்களுக்கு முகங்கொடுப்பதாக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார். எவ்வாறாயினும் கொழும்பு, கண்டி மற்றும் காலி போன்ற பிரதேசங்களில் பணியாற்றுபவர்களுக்கு தேர்தல் நடைபெறும் சந்தர்ப்பத்தின்போது தனது வாக்கினை அளிப்பதற்கு முடியுமான வகையில் அந்த பணியாளர்களுக்கு விடுமுறை வழங்குதல் சம்பந்தமாக திரு. பிச்சை அந்தோனிமுத்து அவர்கள் முன்னைய சந்தர்ப்பங்களில் திட்டமொன்றை செயற்படுத்தியதாக இச்சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்திய தேர்தல்கள் ஆணையாளர் இம்முறை சனாதிபதித் தேர்தலின்போதும் அவ்வாறான முறையொன்றை நடைமுறைப்படுத்துவதற்கும் அவரை அழைத்து கலந்துரையாடுதல் பொருத்தமென சுட்டிக்காட்டப்பட்டதன் பின்னர் அதற்கு ஏனையோரின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது.

இச்சந்தர்ப்பத்தில் தேர்தல்கள் ஆணையாளர் விடயங்களை தெளிவுபடுத்தும்போது தேர்தல்கள் திணைக்களம் மற்றும் தொழில் அமைச்சு இணைந்து இப்பிரச்சினை தொடர்பாக மேலதிக கலந்துரையாடல்களை மேற்கொண்டு இதுதொடர்பாக ஆர்வம் காட்டும் ஏனைய தரப்பினரான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதிநிதியொருவர் மற்றும் புதிய ஜனநாயக முன்னணியின் பிரதிநிதியொருவருடன் நிரந்தர பிரதிநிதிகளான சட்டத்தரணி திரு. ஸ்ரீநாத் பெரேரா, சனாதிபதி சட்டத்தரணி திரு. ஏ.எஸ்.எம். பெரேரா, திரு. கே. மாரிமுத்து, திரு. ஆர். யோகராஜா, திரு. சாந்த ஹேரத் ஆகியோரை கொண்ட குழுவினூடாக இது தொடர்பாக பொருத்தமான செயல்முறையொன்றை தயாரிக்க வேண்டுமெனவும் சுதந்திர வர்த்தக வலயங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு தேசிய தேர்தலொன்றின் போது தமது வாக்குகளை அளிப்பதற்கு தாம் வாழும் பிரதேசங்களுக்கு செல்வதற்காக பொருத்தமான

வேலைத்திட்டமொன்றை மேற்கொள்ளுதல் தொடர்பாக திரு. அனுர ஜயசிங்க மற்றும் திரு. சுரனிமல ராஜபக்ஷ ஆகியோர் நடவடிக்கை மேற்கொள்ளுதல் பொருத்தமென தேர்தல்கள் ஆணையாளர் இங்கு பிரேரித்தார்.

03. தேர்தல் தினமன்று மருத்துவமனைகளில் பணியாற்றும் மருத்துவர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு உரிய பணிமுறை பட்டியல் ஊடாக அவர்களுக்குரிய பணியிலீடுபடுத்தல் மற்றும் தூர பிரதேசங்களில் வாழ்பவர்களை சேவையிலிருந்து விடுவித்தல் மற்றும் மருத்துவமனை அமைந்துள்ள பிரதேசங்களில் வாழ்பவர்களை சேவையிலீடுபடுத்தி வாக்களிக்க செல்வதற்காக சேவையிலிருந்து விடுவிக்க முடியாத நபர்களை தேர்தல் தினமன்று முதலுதவி பிரிவுகளுடன் இணைத்து அவர்களுக்கு அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு முடியுமான வகையில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குறிப்பிட்ட மருத்துவமனை அதிகாரிகள் மற்றும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலர்களை அறிவுறுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.

04. சனாதிபதி தேர்தலுக்கான பெயர்குறித்த நியமனங்களை பொறுப்பேற்கும் 2014.12.08 ஆம் திகதியின் பின்னர் தேர்தல் சம்பந்தமாக நடுநிலை செயல்முறையொன்றை பின்பற்றுவதா அல்லது எவரேனுமொரு வேட்பாளருக்கு நேரடியாக உதவி வழங்குவதா என்பது பற்றி அறியத் தருமாறு போட்டியிடாத அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் எழுத்துமூலமாக அறிவிப்பதற்கு எதிர்பார்ப்பதாக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார். மேலும் முன்னணி அபேட்சகர்களின் பிரசார கூட்டங்களில் உரையாற்றும் எந்தவொரு தரப்பினரும் ஆதரவு வழங்கும் கட்சிகளின் வேட்பாளர்களின் பிரசார கூட்டங்களில் உரையாற்றுவது உறுதிப்படுத்தப்படும்போது அவ்வாறு கூட்டங்களில் உரையாற்றுவதற்கு குறிப்பிட்ட தரப்பினருக்கு பேச்சாளருக்கு வழங்கப்பட்டிருக்கும் சலுகையை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் இது தொடர்பான சட்ட ஒழுங்கு விதிகளை கடுமையாக அமுல்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் இங்கு வலியுறுத்தினார்.

05. கட்சி அலுவலகங்களை அமைத்தல் தொடர்பில் விடயங்களை தெளிவுபடுத்தும் வகையில் தேர்தல்கள் ஆணையாளர் உரையாற்றுகையில் கடந்த தேர்தல்களின்போது அனைத்து வாக்கெடுப்பு மாவட்டங்களுக்கும் ஒரு கட்சி அலுவலகத்தை அமைப்பதற்கு வாய்ப்பிருந்ததாகவும் வேட்பாளரின் வீட்டில் அலுவலகமொன்றை அமைப்பதற்கு வாய்ப்பு இருந்ததுடன் இந்த தேர்தலின் போது மாவட்டத்திற்கு ஒரு முன்னணி அலுவலகத்தை அமைப்பதற்கு மாத்திரம் வாய்ப்பு இருப்பதாகவும் எனவே வாக்காளர்கள் மற்றும் வேட்பாளர்கள் ஆகிய இருதரப்பினருக்கும் முக்கியமாக இருப்பதனால் 160 வாக்கெடுப்பு பிரதேசங்களுக்கும் அலுவலகங்களை அமைப்பதற்கு வேட்பாளர்களின் இணக்கப்பாட்டுடன் வாய்ப்பை வழங்க முடியுமாவென பல கட்சி பிரதிநிதிகள் தம்மிடம் வினவியதாக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார். ஆனாலும் தேர்தல் காலத்தின் போது குறிப்பிட்ட வேட்பாளர்கள் இது சம்பந்தமாக தீர்மானம் எடுக்க வேண்டுமெனவும் அதற்கான அதிகாரத்தை நிரந்தர பிரதிநிதிகளுக்கு வழங்க முடியாதெனவும் தெரிவித்ததுடன் இது பொருத்தமானதா அல்லது பொருத்தமற்றதா என்ற விடயம் சம்பந்தமாக பரிந்துரையை வழங்க முடியுமாயின் இது தொடர்பான தீர்மானத்திற்கு வர முடியுமென தெரிவித்தார்.

ஆயினும் இதுவரை 17 கட்சிகள் மற்றும் 02 சுயாதீன வேட்பாளர்களால் சனாதிபதி தேர்தலுக்கு கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளதுடன் இந்த அனைத்து தரப்பினரும் இந்த வாய்ப்பை கோருதல் அல்லது கோராதிருத்தல் தொடர்பாக முடிவை எடுக்க முடியாத போதிலும் இது தொடர்பாக எதிர்ப்பேதும் இருப்பின் அவற்றை முன்வைக்குமாறும் தேர்தல்கள் ஆணையாளர் தெளிவுபடுத்தினார்.

இச்சந்தர்ப்பத்தில் வருகைதந்திருந்த சில பிரதிநிதிகள் கருத்து தெரிவிக்கையில் வேட்பாளரொருவர் தேர்தல்கள் ஆணையாளரிடம் இதற்கான எழுத்துமூல அனுமதியை கோரினால் அச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட கட்சி அலுவலகத்தை அமைப்பதற்கு அனுமதி வழங்குதல் பொருத்தமென தெரிவித்தனர். இங்கு தேர்தல்கள் ஆணையாளர் மீண்டும்

தெளிவுபடுத்துகையில் கட்சி அலுவலகத்தினுள் பதாகைகளை காட்சிப்படுத்துவதற்கான அனுமதி கடந்த காலத்தில் ஐக்கிய சோசலிச கட்சியின் பிரதிநிதி திரு. ஸ்ரீதுங்க ஜயசூரிய அவர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் பெறுபேறாக கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் இது தொடர்பாக வேட்பாளர்கள் மற்றும் நிரந்தர பிரதிநிதிகளின் இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்ளுதல் மிக முக்கியமானதாகவும் தெரிவித்ததுடன் இந்த கட்சி அலுவலகங்களை அமைப்பதனூடாக வேட்பாளரின் செயற்பாடுமிக்க பிரதிநிதியொருவர் இருத்தலும் குறிப்பிட்ட வாக்கெடுப்பு பிரதேசத்திற்கு ஒரு கட்சி அலுவலகம் இருப்பதனால் வேட்பாளர்களுக்கு அனுப்பவேண்டிய செய்திகள்/ அறிவித்தல்களை அனுப்புவதற்கு இலகுவாயிருத்தல் தேர்தல்கள் திணைக்களத்திற்கு முக்கியமென சுட்டிக்காட்டப்பட்டது.

இச்சந்தர்ப்பத்தில் பிரதிநிதியொருவர் ஏற்கனவே நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் தற்போதைய சனாதிபதி அவர்களை ஊக்குவிப்பதற்காக கட்சி அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய வேட்பாளர்களும் ஊக்குவிக்கப்பட வேண்டியிருப்பதனால் அவர்களும் கட்சி அலுவலகங்களை அமைக்க வேண்டியிருப்பதாக தெரிவித்தார். இது தொடர்பாக விடயங்களை முன்வைத்து உரையாற்றிய தேர்தல்கள் ஆணையாளர் இது சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு பெயர்குறித்த நியமன திகதிக்கு பின்னரே தேர்தல்கள் ஆணையாளருக்கு அதிகாரம் கிடைப்பதாகவும் 2014.12.07 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி ஆகும் போது அலங்காரங்கள், பதாகைகள், சட்டவிரோத அலுவலகங்களை அகற்றுதல் வேண்டுமென ஏற்கனவே அனைத்து மாவட்ட செயலகங்கள், பொலீஸ் நிலையங்களுக்கு அறிவித்தல் விடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் முக்கியமாக இவற்றை அகற்றுதல் சம்பந்தமாக பொலீசார் பொறுப்புடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

இந்த அலங்காரங்கள், பதாகைகள், கட்டவுட்கள் அரச வைபவங்களில் காட்சிப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுவதாக சில பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். இது தொடர்பாக கருத்து தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் அரச வைபவங்களை நடாத்துவதாயின் தேசிய கொடியை மாத்திரம் பயன்படுத்த வேண்டுமென அனைத்து நிறுவனங்களுக்கும் எழுத்து மூலம் அறிவித்துள்ளதாக தெரிவித்தார்.

06. இச்சந்தர்ப்பத்தில் ஐக்கிய சோசலிச கட்சியின் பிரதிநிதி சட்டத்தரணி ஸ்ரீநாத் பெரேரா அவர்கள், சட்டத்தின் பிரகாரம் கவனத்தில் கொள்ளும்போது தேர்தல் காலத்தில் உபசரிப்புக்களை மேற்கொள்வது சட்டவிரோதமான செயலென தெரிவித்தார். இது தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளர் கருத்து தெரிவிக்கும்

போது இந்த சட்டமீறல்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் தெளிவாக அறியக் கிடைக்கப்பெற்ற போதிலும் எந்தவொரு தரப்பும் இது தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லையென தெரிவித்தார். உதாரணமாக ஊவா மாகாண சபை தேர்தலின் போது வேட்பாளரொருவரை ஊக்குவிக்கும் வகையில் சீலங்காத்தல் கிரியைகளில் ஈடுபட்டிருந்த உபாசகர்கள் அணியும் ஆடையை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக மிக தெளிவாக ஊடகங்கள் ஊடாகவும் அறியக் கிடைத்த போதிலும் எந்தவொரு தரப்பும் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கையெடுப்பதற்கு முன்வரவில்லையென தெரிவித்தார். எவரேனுமொருவர் அச்சந்தர்ப்பத்தில் நீதிமன்ற நடவடிக்கை எடுத்திருந்தால் குறிப்பிட்ட மாகாண சபை உறுப்பினரின் உறுப்புரிமையை நீக்குவதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் மேலும் தெரிவித்தார்.

ஜனநாயகக் கட்சியின் பிரதிநிதி திரு. இந்திக்க கால்லகே கருத்து தெரிவிக்கையில் சில விடயங்கள் சம்பந்தமாக சட்டமா அதிபரின் அனுமதியின்றி நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வாய்ப்பு இல்லையென தெரிவித்தார். இதற்கு பதிலளிக்கும் வகையில் தேர்தல்கள் ஆணையாளர், அரச நிறுவனங்கள் மாத்திரமே சட்டமா அதிபரூடாக வழக்கு தாக்கல் செய்யவேண்டுமெனவும் எந்தவொரு தனிநபருக்கும் இது தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய முடியுமெனவும் தெரிவித்தார். மீண்டும் திரு.

இந்திக்க கால்லகே உரையாற்றுகையில் சட்டவிரோத கட்டவுட், தோரணைகள் ஆகியவற்றை அகற்ற வேண்டுமெனவும் அரச ஊடகங்களில் கட்டுப்பாடு இருத்தல் வேண்டுமெனவும் சில ஊடகங்கள் பண்பாடின்றி செயற்படுவதாகவும் தெரிவித்தார். தேர்தல்கள் ஆணையாளர் கருத்து தெரிவிக்கும்போது அரச ஊடகங்களை கட்டுப்படுத்தும் அதிகாரம் 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின்போது நீக்கப்பட்டிருப்பதனால் சனாதிபதி தேர்தல்கள் சட்டத்தின் 117 ஆவது பிரிவின கீழ் தேர்தல்கள் ஆணையாளருக்கு அந்த அதிகாரம் பெயர்குறித்த நியமனங்களை பொறுப்பேற்ற தினத்திலிருந்தே கிடைக்கப்பெறுவதாகவும் அதற்கமைய தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாகவும் வானொலி மற்றும் தேசிய தொலைக்காட்சி நிகழ்ச்சித் திட்டங்களை கட்டுப்படுத்துவதற்கான வாய்ப்பு இருந்தாலும் சுயாதீன தொலைக்காட்சி சேவை கம்பனியொன்றின் கீழ் நிலவுவதாகவும் தெரிவித்தார். ஆயினும் எந்தவொரு தரப்பினரும் இது தொடர்பாக எழுத்துமூலமாக ஊடக நிறுவனங்களுக்கு விடயங்களை முன்வைக்கவில்லையெனவும் வெறுமனே கருத்து தெரிவித்தல் மாத்திரம் முறைகேடுகளை தவிர்ப்பதற்கான வழியில்லையெனவும் அரச ஊடகங்களுக்கு பொறுப்புடன் நடந்துகொள்ளுமாறு அறிவிப்பதற்கு எந்தவொரு தரப்பிற்கும் வாய்ப்பிருப்பதாகவும் தெரிவித்தார்.

கடற்படையினர் போலி வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் முறைகேடான செயலை மேற்கொள்வதற்கு திட்டமிட்டு செயற்படுவதாக தகவல் கிடைத்துள்ளதுடன் வெறுமனே அது தொடர்பான விமர்சனங்களை முன்வைப்பது தவிர கடற்படை தளபதியிடம் வினவி அது சம்பந்தமாக உறுதிசெய்துகொள்வதற்கு எந்தவொரு தரப்பும் இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளவில்லையெனவும் இந்த நிலைமை தேர்தலின் நம்பகத் தன்மை மீது கடும் தாக்கத்தை ஏற்படுத்துவதனால் தேர்தல்கள் ஆணையாளர் என்ற வகையில் இது தொடர்பாக கடற்படை தளபதியிடம் எழுத்துமூலமாக வினவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் தெளிவுபடுத்தினார். மேலும் ஆட்பதிவு திணைக்களத்திற்கு சொந்தமான ஆளடையாள அட்டை அச்சிடும் இயந்திரமொன்று காணாமல் போயுள்ளதாக தகவல் கிடைத்த சந்தர்ப்பத்தில் தாம் அது தொடர்பாக ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்திடம் வினவிய போது அவ்வாறானதொரு விடயம் இடம்பெறவில்லையென அவர் உறுதிப்படுத்தினார். ஆனாலும் வேறு எந்த தரப்பினரும் அது சம்பந்தமாக உறுதிப்படுத்திக்கொள்வதற்கு முன்வரவில்லையென தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் இவ்வாறான விடயங்கள் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் ஒவ்வொரு தரப்பினர் மீதும் குற்றச்சாட்டுகளை சுமத்துதல் தீர்வாக இருக்காதென வலியுறுத்தினார்.

கடற்படை தொடர்பாக அவ்வாறான முறைகேடுகள் ஏற்படுவதில்லையென்பது தனது நம்பிக்கையாக இருந்தாலும் ஏதோவொரு வகையில் அவ்வாறான சட்ட விரோத நடவடிக்கை மேற்கொள்ளப்படுமாயின் அதனை தடுப்பதற்காகவும் தேர்தல் சம்பந்தமாக சந்தேகத்திற்கிடமான விடயமொன்று இருப்பின் அதனை நிச்சயமாக தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதனாலும் இது தொடர்பாக கடற்படைத் தளபதிக்கு எழுத்து மூலமாக அறிவித்து, எழுத்து மூலமான தெளிவுபடுத்தலைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

இச் சந்தர்ப்பத்தில் திரு. தயா பெல்பொல கருத்துத் தெரிவிக்கையில், அரசாங்க அச்சகத்தில் பாரியளவிலான இடமாற்றலொன்று சம்பந்தமான தகவலொன்றை அறியக் கிடைப்பதாகவும், இது தொடர்பாக கண்டறிந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார். இது பற்றி தேர்தல்கள் ஆணையாளர் கருத்துத் தெரிவிக்கையில் அந்த உள்ளக இடமாற்றல் பிரச்சினைக்குரிய இடமாற்றலாகத் தெரிய வருவதாகவும் ஆயினும் அந்த விடயத்தில் தலையிட்டு குறித்த பிரச்சினையை தீர்ப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

திருமதி ஷர்மிலா பெரேரா, அரசாங்க அச்சகத்தின் இரகசியப் பிரிவுக்கு புதிய ஊழியர்கள் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதாக அறியக் கிடைப்பதனால் அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவையென வினவினார்.

அரசாங்க அச்சகத்தின் இரகசியப் பிரிவுக்கு புதிய ஊழியர்கள் ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பின், தேர்தல் நடவடிக்கைகளின்போது அவர்களை ஈடுபடுத்தாமல் அனுபவம் வாய்ந்த ஊழியர்களை ஈடுபடுத்தி நிறைவேற்றுமாறும், தேசிய தேர்தலொன்றின்போது நம்பகத்தன்மை சீர்குலையும் வகையில் வதந்திகள் பரவுவதற்கு இடமளித்தல் மிகவும் பயங்கரமான நிலைமை வரை வளர்ச்சியடைய முடியுமாகையினால் நம்பகத்தன்மையைப் பாதுகாத்தவாறு சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடாத்துவதன் நிமித்தம் ஒத்துழைப்பு வழங்குமாறு அரசாங்க அச்சகத்திற்கு எழுத்து மூலமாக அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக இதற்குப் பதிலளிக்கும் வகையில் தெளிவுபடுத்தினார்.

07. தேர்தல் தினமன்று வாக்கெடுப்பு பிரிவு மட்டத்தில் கட்சி அலுவலகங்களை திறப்பதற்கு சட்டத்தின் பிரகாரம் வாய்ப்பு இருப்பினும் வாக்கெடுப்பு நிலையத்திற்கு 500 மீட்டர் தூரத்திற்குள் அமைக்கப்பட்டுள்ள அனைத்துக் கட்சி அலுவலகங்களையும் உரிய தினமற்று மூடிவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும், இதற்கு முன்னைய தேர்தல்களின்போது இவற்றை திறந்து வைப்பதற்கு இடமளிக்கவில்லையெனவும் இவற்றை திறந்து வைப்பதற்கு இடமளித்தால் உரிய பிரதேசங்களின் வாக்காளர்களுக்கு அழுத்தம் பிரயோகிக்கும் வகையிலான துண்டுப் பிரசுரங்களை பகிர்தல், காடைத்தனத்தை மேற்கொள்ளல், அச்சுறுத்துதல் போன்ற முறைகேடுகள் நிகழ்வதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் சுட்டிக்காட்டிய தேர்தல்கள் ஆணையாளர் பொதுமக்களின் சுயாதீனமான கருத்துக்கு அழுத்தம் ஏற்படும் வகையில் ஒரு தரப்பினரால் இந்த அலுவலகங்களை திறந்துவைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதன் காரணமாக ஏதேனுமொரு வகையில் சிக்கல் எழுமாயின் அந்த வாக்கெடுப்பு பிரதேசத்தின் வாக்கெடுப்பை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் வலியுறுத்தினார்.

இச்சந்தர்ப்பத்தில் கேள்வியொன்றை எழுப்பிய ஐக்கிய தேசியக் கட்சியின் திரு. தயா பெல்பொல அவர்கள், இந்த கட்சி அலுவலகங்களை அமைப்பதற்காக யார் அனுமதி கோர வேண்டுமென வினவினார். பிரதிநிதிகளை நியமிக்கும்வரை இந்தக் கட்சி அலுவலகங்கள் சட்ட ரீதியற்ற கட்சி அலுவலகங்களாக இருப்பதாகவும் 2014.12.08 ஆம் திகதி பெயர் குறித்த நியமனங்கள் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் அந்தக் கட்சி அலுவலகங்களை சட்ட ரீதியானவைகளாக மாற்றியமைப்பதற்கு கட்சி செயலாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க அனுமதி வழங்கப்படுவதுடன் 2014.12.12 ஆம் திகதியின் பின்னர் இந்தக் கட்சி அலுவலகங்களின் சட்ட ரீதியான தன்மையைப் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் இங்கு சுட்டிக்காட்டினார். அத்துடன் சனாதிபதி வேட்பாளர்களாக தோற்றுவதற்காக கட்டுப்பணத்தை வைப்புச்செய்த வேட்பாளர்களுக்கு அவர்களுடைய பிரதிநிதிகளை நியமிப்பதற்கான விண்ணப்பப் பத்திரத்தை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவற்றை குறிப்பிட்ட மாவட்டங்களுக்கு தேவையான அளவில் விநியோகிப்பதாகவும் 2014.12.08 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் இவற்றை மாவட்ட தேர்தல் அலுவலகங்களில் வேட்பாளர்களால் பெற்றக்கொள்வதற்கு முடியுமெனவும் தெரிவித்தார்.

08. தேர்தலுடன் தொடர்பான முறைகேடுகளை தடுப்பதற்கு மற்றும் சட்ட மீறல்களை தடுப்பதற்கும் தேர்தல் ஆணையாளர் உரிய நடவடிக்கை மேற்கொள்வதில்லையென சில தரப்புக்கள் கருத்துத் தெரிவிப்பதுடன், தேர்தல் சட்டங்களை செயல்வலுப் பெறச் செய்தல் / பாதுகாப்பதற்கு மற்றும் மேற்கொள்ளப்படும் முறைகேடுகளை குறைப்பதற்கு / தடுப்பதற்காக தாம் எற்கனவே அநேகமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் இது தொடர்பாக ஆர்வம் காட்டும் அனைத்துத் தரப்பினரதும் தகவலுக்காக தேவையாயின் இந்த நடவடிக்கை / அறிவுறுத்தல் / கட்டளை தொடர்பான தகவல்கள் மற்றும் அது சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பைக்கொண்ட தரப்பினர் யார் எனவும் சுருக்கமாக தேர்தல்

திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் ஊடாக பிரசித்தப்படுத்துவதற்கான வாய்ப்பு நிலவுவதாகவும் இங்கு தெரிவித்த தேர்தல் ஆணையாளர் அது தொடர்பாக சபையோரின் கருத்தையும் வினவினார்.

09. கூட்டுறவு மொத்த விற்பனைக் கூட்டுத்தாபனத்திற்கு (ச.தொ.ச) 93 புதிய வாகனங்களை கொள்வனவு செய்து அவற்றைப் பயன்படுத்தி கிராமியப் பிரதேசங்களில் குறைந்த விலையில் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாகவும் ஆனாலும் அந்த வாகனங்களில் தற்போதைய சனாதிபதியவர்களின் பாரியளவிலான புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்படுவதாகவும் இது சட்ட விரோதமான செயலெனவும் திரு. தயா பெல்பொல இங்கு வினாவொன்றை எழுப்பினார்.
தேர்தல் ஆணையாளர் அதற்கு பதில் அளிக்கையில், இது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதாகவும், அந்த வாகனங்களைப் பயன்படுத்தி குறைந்த விலையில் பொருட்கள் விநியோகிக்கப்பட்டாலும், அவற்றைப் பயன்படுத்தவதன் ஊடாக வேட்பாளர் ஊக்குவிப்பு நடவடிக்கையை மேற்கொள்ளக்கூடாதெனவும் வர்த்தக அமைச்சின் செயலாளர் ஜீ.கே.டீ.அமரவர்தன அவர்களுக்கு இது சம்பந்தமாக எழுத்துமூலம் அறிவிப்பதற்கு குறித்துக்கொள்வதாகவும் தெரிவித்தார்.

10. நாட்டின் அநேகமான இடங்களில் டிஜிட்டல் பதாதைகளைப் பயன்படுத்தி சனாதிபதி வேட்பாளரான தற்போதைய சனாதிபதியவர்களை ஊக்குவிக்கும் வகையில் விளம்பரம் / செய்திகளை காட்சிப்படுத்துவதாக பிரதிநிதியொருவர் இங்கு சுட்டிக்காட்டினார். இது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் கருத்துத் தெரிவிக்கையில், இந்த டிஜிட்டல் பதாதைகளை பயன்படுத்தி தமது விளம்பரங்களை காட்சிப்படுத்துவதற்கு எந்தவொரு நிறுவனத்திற்கும் முடியுமெனினும் அதனூடாக அரசியல் கட்சிகளின் விளம்பரம் / செய்திகள் மற்றும் வேட்பாளரின் உருவப்படத்தை காட்சிப்படுத்துதல் முற்றாகத் தடை செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். இவ்வாறான செயல்களை மேற்கொள்ளுதல் தேர்தல் சட்டம் மீது மிகவும் பாரதூரமான வகையில் பாதிப்புச் செலுத்துவதாகவும் உரிய தரப்பினர் இவற்றை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால் அவற்றை பகிரங்கமாக அப்புறப்படுத்த வேண்டியேற்படுவதாகவும், அத்துடன் இந்த டிஜிட்டல் பதாதைகள் விளம்பரப்படுத்தப்படும் இடங்கள் பற்றிய தகவல்கள் இரப்பின் தேர்தல் திணைக்களத்திற்கு அறியத்தருவதற்கு எந்தவொரு அரசியல் கட்சிக்கும் முடியுமெனவும், அவற்றை அகற்றுமாறு பொலீசாருக்கு அறிவித்தல் விடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

திரு.இந்திக்க கால்லகே மீண்டும் கருத்துத் தெரிவிக்கையில், மின் கம்பங்களில் தொங்கவிடப்பட்டுள்ள பாரியளவிலான கட்டவுட்கள் போக்குவரத்தின்போது பாரிய இடையூராக இருப்பதாகவும், அவற்றை அகற்றும் பணியை தேர்தல் ஆணையாளர் அன்றி பொலீஸாரே மேற்கொள்ளல் வேண்டுமெனவும் தெரிவித்தார். இவற்றை அகற்றுவதற்கான அதிகாரம் பொலீசாருக்கு இல்லையென பொலீஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பதுடன், அந்தக் கூற்றை சவாலுக்குட்படுத்தி அந்த அதிகாரம் தேசிய சாலைகள் சட்டத்தின் கீழ் பொலீஸாருக்குரியதாகுமென சுட்டிக்காட்டுவதற்கு எந்தவொரு தரப்பினரும் நடவடிக்கை மேற்கொள்ளவில்லையெனவும், ஆனாலும் தேர்தல் ஆணையாளர் என்ற வகையில் தாம் இது பற்றி கொழும்பு மற்றும் கோட்டை மாநகர சபைகளுக்கு மற்றும் ஏனைய உள்ளூராட்சி அதிகார நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளதாகவும் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் திரு.உப்புல் ஜயசூரிய அவர்களும் இந்த கட்டவுட்களை அகற்ற வேண்டுமென மாநகர சபைகளுக்கு எழுத்து மூலமாக அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அறியக் கிடைத்துள்ளதாகவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். ஆயினும் 2014.12.08 ஆம் திகதியாகும்போது குறிப்பிட்ட தரப்பினரால் இந்த கட்டவுட்களை அகற்றிக்கொள்வதாக அறிவித்துள்ளதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். மேலே குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் தேர்தல் ஆணையாளர் என்ற வகையில் இவற்றை அகற்றுவதற்கு பெயர் குறித்த நியமனத் திகதியின் பின்னரே தமக்கு அதிகாரம் கிடைப்பதுடன் சனாதிபதி வேட்பாளராக தோற்றுவதற்கான தனது விருப்பத்தை எவரேனுமொரு தரப்பினர் அறிவித்ததன் பின்னர் இந்த

கட்டவுட்களை காட்சிப்படுத்துதல் பொருத்தமில்லையெனவும் அத்துடன், கட்டுப்பணத்தை வைப்புச் செய்ததன் பின்னர் எவரேனுமொரு வேட்பாளர் வெளிப்படையான வேட்பாளராகுவதாகவும் (Obvious Candidate) மேற்கொள்ள வேண்டிய மற்றும் மேற்கொள்ளக் கூடாத விடயங்கள் எவை என்பது தொடர்பாக அனைத்து வேட்பாளர்களையும் அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் மேலும் தெரிவித்தார். அத்துடன் 2014.12.07 ஆம் திகதி நள்ளிரவின் பின்னர் வெலிக்கடை சந்தியில் இருந்து ராஜகிரிய சந்தி வரை பிரசார விளம்பரங்களை அகற்றுவதற்கு தாம் நடவடிக்கை மேற்கொள்வதாகவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

இவ்வாறான சட்ட விரோதமான காட்சிப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுமாயின் அது சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு தடையாகுமென தாம் தெரிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும்அனைத்து தரப்பினருக்கும் இது தொடர்பாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அரசபாங்கத்தை காப்பாற்றுவதற்கோ அரசாங்கத்தை வீழ்த்துவதற்கோ தேர்தல் ஆணையாளர் என்ற வகையில் தாம் நடவடிக்கை மேற்கொள்வதில்லையெனவும், ''அரசு'' என்ற விடயத்தைப் பாதுகாப்பதற்காக உயிருள்ளவரை நடவடிக்கை மேற்கொள்வதாகவும் தேர்தல் ஆணையாளர் இங்கு வலியுறுத்தினார்.

11. 2014 ஆம் ஆண்டில் தேருநர் இடாப்பில் தேசிய அடையாள அட்டை இலக்கம் குறிப்பிடப்படாத வாக்காளர்களுக்கு தேசிய அடையாள அட்டை அல்லது வேறு செல்லுபடியாகும் அடையாள அட்டையொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு ஆவண செய்யுமாறு கடந்த கூட்டங்களின்போது உரிய தரப்பினரை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டதுடன் அங்கு சில அரசியல்வாதிகள் நடமாடும்

சேவைகளை நடாத்தவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டதுடன் அவற்றைத் தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியேற்பட்டதாகவும் இங்கு சுட்டிக்காட்டிய தேர்தல் ஆணையாளர் தேர்தல் காலத்தில் அரசியல் கட்சிகள் அல்லது அரசாங்கத்தின் தலைமையில் நடமாடும் சேவையை நடாத்துதல் பொருத்தமற்றதாக இருப்பதனால் அங்கு ஏற்பட முடியுமான மோதல்களை தவிர்ப்பதற்கு அவ்வாறு நடவடிக்கை மேற்கொண்டதாகத் தெரிவித்தார்.

12. தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக கூட்டங்களை நடாத்தவதற்கு விளையாட்டு மைதானம் / மைதானங்களை ஒதுக்கிக்கொள்ளல் தொடர்பாக இரண்டு முறைப்பாடுகள் தற்போது கிடைக்கப்பெற்றுள்ளதுடன் கொழும்பு நகர சபை விளையாட்டு மைதானத்தை தேர்தல் பிரசாரத்துடன் தொடர்பில்லாத நடவடிக்கையொன்றுக்காக ஒதுக்கிக்கொள்வதற்கான வாய்ப்பு ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் அத்துரலியே ரதன தேரருக்கு கிடைக்காமை கவலைக்குரிய விடயமாகுமென தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பிரதிநிதி திரு.உதய கம்மன்பில இங்கு கருத்துத் தெரிவிக்கையில் அந்தப் பிரச்சினைக்குரிய நிலைமை தேர்தல் நடவடிக்கையின்போது எழவில்லையாதலால் அது பற்றி தேர்தல் ஆணையாளருக்கு முறைப்பாடு செய்வதற்கு தமது கட்சி நடவடிக்கை மேற்கொள்வில்லையெனத் தெரிவித்தார். இங்கு தேர்தல் ஆணையாளர் கருத்துத் தெரிக்கையில் தொடர்ந்தும் இவ்வாறான விடயங்கள் நிகழுமாயின் கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளருக்கு எழுத்து மூலமாக அறிவிப்பதற்கு எந்தவொரு தரப்பினருக்கும் வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவித்தார்.

இங்கு அபே ஜாதிக பெரமுன கட்சியின் தலைவர் திரு.சேனக டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், அநீதியான முறையில் விளையாட்டு மைதானம் / மைதானங்களை ஒதுக்கிக்கொள்வதனை தடுப்பதற்காக தமது கட்சியினால் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவதாகவும் ஆயினும் விளையாட்டு மைதானம் / திடல்கள் அன்றி சிறிய ஹோட்டல் அறையொன்றைக்கூட தமது கட்சியினால் ஒதுக்கிக்கொள்ளவதற்கு தற்போது

சிரமமாகவுள்ளதாகத் தெரிவித்தார். விளையாட்டு மைதானம் / திடல்கள் மற்றும் மண்டபங்கள் போன்ற நியாயமான காரணங்களின்றி ஒதுக்கிக்கொள்வதற்கு இடமளிக்காத இடங்களில் அவற்றை தேர்தல் திணைக்களத்தின்கீழ் உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கான ஆற்றல் சம்பந்தமாக கண்டறிவதாக இங்கு தெரிவித்த தேர்தல் ஆணையாளர் நாளைய தினம் அதாவது 2014.12.06 ஆம் திகதி நடாத்தப்படவுள்ள கலந்துரையாடலின்போது இது சம்பந்தமாக மேலும் கலந்துரையாடுதல் பொருத்தமென இங்கு தெரிவிக்கப்பட்டது. மேலும் இந்தக் கூட்டத்தில் விசேடமாக பெயர் குறித்த நியமனத் தினத்தில் பயன்படுத்தப்படும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் வாகன ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் சம்பந்தமாக தெளிவுபடுத்தப்படுவதுடன் ஏதேனும் சிக்கல்கள் இருப்பின் அங்கு முன்வைப்பதற்கு வாய்ப்புக் கிடைப்பதாக தெளிவுபடுத்தப்பட்டது. குறிப்பிட்ட கலந்துரையாடல் 2014.12.06 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு பதிய ஜனநாயக முன்னணியுடனும் மு.ப. 11.30 மணிக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் பி.ப.12.30 மணிக்கு ஏனைய அனைத்துக் கட்சிகளுடனும் நடாத்துவாதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்ததாகவும் தேர்தல் ஆணையாளர் இங்கு சுட்டிக்காட்டினார். விளையாட்டு மைதானம் / திடல்கள் ஆகியவற்றை ஒதுக்குவதனைப் போன்றே ஏனைய விடயங்கள் சம்பந்தமாக நிலவும் சிக்கல்கள் சம்பந்தமாகவும் இந்தக் கலந்துரையாடல்களின்போது கவனத்தைச் செலுத்த முடியுமெனவும் அனைத்துச் சிக்கல்களையும் கலந்துரையாடி இணக்கப்பாட்டுடன் தீர்த்துக்கொள்ளுதல் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு மிகவும் முக்கியமெனச் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும்,சனாதிபதியவர்கள் கலந்துகொள்ளும் கூட்டங்கள் நடாத்தப்படும் திகதிகள் மற்றும் இடங்கள் போன்ற தகவல்கள் உள்ளடக்கப்பட்ட கால அட்டவணையொன்றை முன்னரே தேர்தல் திணைக்களத்திற்கு அனுப்ப முடியுமாக இருப்பின் ஏனைய வேட்பாளர்களுக்கும் குறிப்பிட்ட திகதிகளில் மைதானம் / திடல்களை ஒதுக்கிக்கொள்ளாதிருப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் பொருத்தமாகுமென இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

13. பின்னர் பொலீஸ் திணைக்களத்தில் மேற்கொள்ளப்படும் இடமாற்றல்கள் மீது தனது கவனத்தைச் செலுத்தி கருத்துத் தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் 2014.11.19 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட இடமாற்றல்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்கான ஆற்றல் இல்லாதபோதிலும் எதிர்காலத்தில் எந்த விதத்திலும் இடமாற்றல்களை மேற்கொள்வதற்கு இடமளிப்பதில்லையெனவும் அமைச்சின் செயலாளரது பணிப்புரைப் பிரகாரம் மேற்கொள்ளப்படும் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி பதவிகளின் இடமாற்றல்களும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் இடமாற்றப்பட்டிருப்பின் இடமாற்றப்படுவதற்கு முன்னர் அவர்கள் பணியாற்றிய சேவை நிலையம் மற்றும் இடமாற்றலுக்குப் பின்னர் பணியாற்றும் சேவை நிலையம் என்பன பற்றிய விபரங்களை உடனடியாக உரிய தரப்பினருக்கு சமர்ப்பிக்க முடியுமெனவும் தேர்தல் ஆணையாளர் இங்கு தெரிவித்தார்.

14. இச் சந்தர்ப்பத்தில் விடயங்களைச் சுட்டிக்காட்டி பிரதிநிதியொருவர், அமைச்சின் செயலாளர்கள் அரசியல் மேடைகளில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதனைத் தடுப்பதற்கு தேர்தல் ஆணையாளர் என்ற வகையில் தலையிட்டு நடவடிக்கை மேற்கொள்ள முடியுமா? என வினவினார். அண்மைக் காலமாக அவ்வாறான நிகழ்வுகள் இடம்பெறுவதாக சுட்டிக்காட்டிய தேர்தல் ஆணையாளர் இந்தப் பிரச்சினை இன்றைய தினக் கூட்டத்தின் போது எழுப்பப்பட்டதாக குறித்துக்கொள்ளுமாறும் அத்துடன் ஏற்கனவே அவ்வாறான சந்தர்ப்பங்களில் தேர்தல் ஆணையாளர் என்ற வகையில் தாம் தலையிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

15. இச்சந்தர்ப்பத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதி திரு.வை.எல்.எஸ்.ஹமீட், சில ஊடகங்கள் அநீதியான மற்றும் பண்பாடற்ற விதத்தில் தமது நிகழ்ச்சிகளை முன்வைப்பதாக தெரிவித்தார். ஊடகமொன்றின் பிரதிநிதியான அரசியல்

கட்சியொன்றுடன் தொடர்புடைய ஊடகவியலாளர் ஒருவர் தமது கருத்து வெளியிடும் சுதந்திரத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்தி அரசியல் நிகழ்ச்சியொன்றுக்கு அதிதியாக அழைக்கப்பட்டிருந்த அமைச்சர் ஒருவரை தொடர்ந்து சிரமத்திற்கும், விமர்சனத்திற்கும் உள்ளாக்கும் வகையில் வினாக்களை முன்வைப்பதற்கும், விடயங்களை முன்வைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவித்தார். இந்த நிலைமை உண்மையிலேயே ஊடகத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்துவதாக இருப்பதுடன் இது தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் சுட்டிக்காட்டினார்.

குறிப்பிட்ட அரசியல் நிகழ்ச்சியூடாக அரசியல் கட்சியை சிரமத்திற்குள்ளாக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தால் அது சம்பந்தமாக தமது அதிருப்தியை தெரிவித்த தேர்தல் ஆணையாளர் இது தொடர்பாக குறிப்பிட்ட ஊடகவியலாளருக்கு எழுத்து மூலமாக அறிவிப்பதாகவும் தேர்தல் காலங்களில் ஊடகங்கள் செயற்பட வேண்டிய விதம் தொடர்பிலான ஊடக நெறிமுறைகளை அனைத்து ஊடகங்களுக்கும் அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

16. இங்கு புதிய ஜனநாயக முன்னணியின் செயலாளர் திருமதி ஷியாமிலா பெரேரா கருத்துத் தெரிவிக்கையில் சுயாதீன தொலைக்காட்சி சேவையின் நிகழ்ச்சியொன்றினூடாக தொடர்ந்து தனக்கு எதிராக பிரச்சாரம் செய்யப்படுவதாகவும் தனது பெயரை நேரடியாகப் பயன்படுத்தி தம்மைத் தூற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் தேர்தல் ஆணையாளர் கருத்துத் தெரிவிக்கையில் இந்த நிலைமை சம்பந்தமாக சுயாதீன தொலைக்காட்சி சேவையின் தலைவருடன் கலந்துரையாடுவதற்கு குறித்துக்கொள்வதாகவும் இது தொடர்பில் கண்டறிந்து உரிய நடவடிக்கை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

17. வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் ஊடாக அங்கீகரிக்கப்பட்டதன் பிரகாரம் தொடர்ந்து 180 நாட்கள் அமைய அடிப்படையின் கீழ் சேவையிலீடுபட்டுள்ள ஊழியர்களை நிரந்தரமாக்கும் செயற்பாட்டை இடைநிறுத்துவதற்கு தாம் நடவடிக்கை மேற்கொள்வதில்லையெனவும் நிபுணத்துவ அறிவு மற்றும் தொழில் தகைமைகளைக் கொண்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்களுக்கு தாம் அனுமதி வழங்குவதாகவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். அத்துடன் சில போட்டிப் பரீட்சைகளூடாக ஆட்சேர்த்துக்கொள்ளப்படும் பதவிகளுக்கும் அனுமதி வழங்குவதுடன் சில ஆட்சேர்ப்புக்கள் தொடர்பாக பல்வேறு முறைகேடுகள் நிகழ்வதாக அறியக் கிடைப்பதனால் பதவிநிலை அல்லாத தரங்களுக்கான புதிய ஆட்சேர்ப்புக்களை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கையெடுப்பதாகவும் அதாவது பரீட்சைத் திணைக்களம் மற்றும் வேறு தொழில்சார் நிறுவனங்களினால் நடாத்தப்படும் போட்டிப் பரீட்சைகள் தவிர ஏனைய பரீட்சைகளை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகவும் தெளிவுபடுத்தினார். இங்கு மீண்டும் பிரதிநிதியொருவர் கருத்துத் தெரிவிக்கையில் சனாதிபதி வேட்பாளர் திரு. மைத்திரிபால சிறிசேன அவர்களால் சுகாதார சேவையில் நியமனங்கள் வழங்கப்பட்ட ஏராளமானோரை சேவையிலிருந்து நீக்கியிருப்பதாகவும் மீண்டும் அவர்களை சேவையில் இணைத்துக்கொள்வதற்கு வாய்ப்பிருப்பதாகவும் தகவலறிந்த வட்டாரங்களூடாக அறியக்கிடைத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

ஒருவேளை முறைகேடுகள் நிகழ்ந்தால் தேர்தலின் பரிசுத்தத் தன்மைக்கு பாதிப்பு ஏற்பட முடியுமென உரிய தரப்பினருக்கு அறிவித்துள்ளதாகவும் சிலவேளை மேலே குறிப்பிடப்பட்ட பிரகாரம் சேவையிலிருந்து நீக்கப்பட்ட ஊழியர்களை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்வதாயின் அந்த நிகழ்வுக்காக வைபவங்களை நடாத்தாமல் தேவையான அலுவலர்கள் மாத்திரம் பங்கேற்றல் பொருத்தமென உரிய தரப்பினருக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

18. சனாதிபதி தேர்தலில் போட்டியிடாவிட்டாலும் கலந்துரையாடல்களில் உண்மையிலேயே பங்களிப்பை வழங்கிய நிரந்தர பிரதிநிதிகளை உரிய அனைத்துக் கூட்டங்களுக்கும் அழைப்பதாகவும் இதனிடையே பொதுவான கூட்டங்கள் நடாத்தப்படுவதாகவும் இங்கு தெரிவித்த தேர்தல் ஆணையாளர் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால் நாட்டின் முன்னணி எதிர்க்கட்சிக்கு கூட்டங்களில் பங்கேற்பதற்கான வாய்ப்பு கிடைக்காமலிருக்க முடியுமெனவும் எவ்வாறாயினும் போட்டியிடும் கட்சிகளுக்கு உரிய கூட்டங்களை தனித்தனியாக நடாத்துவதற்கு எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

19. இச்சந்தர்ப்பத்தில் மத்திய போக்குவரத்து சபையின் சுதந்திர ஊழியர் சங்கத்தின் தலைவரால் டிப்போ முகாமைக்கு ஊழியர்களின் அஞ்சல் மூல வாக்கை பெற்றுக்கொள்ளுதல் தொடர்பாக அனுப்பப்பட்ட சட்டவிரோத கடிதமொன்றை சபையில் முன்வைத்து இவ்வாறான முறைகேடுகளின் பாதிப்பை சுட்டிக்காட்டிய திரு சுரனிமல ராஜபக்ஷ அவர்களின் வேண்டுகோளின் பிரகாரம் அதன் பிரதிகள் அனைவருக்கும் பெற்றுக் கொடுக்கப்பட்டது. ஊழியர்களின் அஞ்சல் மூல வாக்கை கட்டாயமாக பெற்றுக்கொள்வதற்கு டிப்போ முகாமை குறிப்பிட்ட ஊழியர்களை வீடுகளிலிலிருந்து அழைத்துவரும் வேலைத் திட்டமொன்று சம்பந்தமாக அக்கடிதத்தில் குறிப்பிடப்படுவதாகவும்இவ்வாறான நிலைமைடியான்று இதற்கு முன்னர் எச்சந்தர்ப்பதிலும் ஏற்படவில்லையெனவும் எவ்வாறாயினும் மத்திய போக்குவரத்து சபையின் அஞ்சல் மூல வாக்கெடுப்பு நடவடிக்கைகளுக்கு தேர்தல் அலுவலர்களை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கையெடுப்பதாகவும் ஒருவேளை அது சுதந்திரமானதும் நீதியானதுமான அஞ்சல் மூல வாக்கெடுப்பு இல்லையென உறுதிப்படுத்தப்பட்டால் அந்த வாக்கெடுப்பை இரத்துச்செய்வதற்கு நடவடிக்கையெடுப்பதாக இக்கலந்துரையாடலின்போது தேர்தல் ஆணையாளர் வலியுறுத்தினார்.

20. தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கண்காணிப்பபாயளர்களை ஈடுபடுத்துதல் சம்பந்தமாக தேர்தல் ஆணையாளர் கருத்துத் தெரிவிக்கையில், முன் கண்காணிப்புக் குழுவொன்றை (Advance Party) நாட்டுக்கு அனுப்புமாறு பொதுநலவாய அமைப்புக்கு அறிவித்திருப்பதாகவும் அதற்கமைய ஐந்து பிரதிநிதிகளைக் கொண்ட குழுவொன்று தேர்தலுக்கு முன்னரே வருவதாகவும் தேர்தல் அண்மிக்கையில் ஐந்து பிரதிநிதிகளைக் கொண்ட மேலுமொரு கண்காணிப்புக் குழுவொன்று வருவதாகவும் தெரிவித்தார். இதற்குப் புறம்பாக தெற்காசிய தேர்தல் முகாமைத்துவ ஒன்றியம் FEMBOSA மற்றும் ஆசிய தேர்தல் அதிகாரிகளின் சங்கத்தினால் AAEA 60 கண்காணிப்பாளர்களை இந்த நாட்டுக்கு அனுப்புமாறு கோரிக்கைவிடுத்துள்ளதாகவும் உள்நாட்டுக் கண்காணிப்பு அமைப்பான PAFFRAL இனால் 35 கண்காணிப்பாளர்களை இந்த நாட்டிற்கு இஅழைப்பதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளதுடன் அதற்கு அனுமதி வழங்கி உத்தியோகபூர்வக் கடிதமொன்றை வழங்க நடவடிக்கையெடுப்பதாக மேலும் தெரிவித்தார்.

வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை இந்த நாட்டிற்கு அழைப்பதற்கு பாரிய தொகையொன்றை செலவிடவேண்டியிருப்பதனால் அதிக எண்ணிக்கையிலானோரை ஒரே தடவையில் அழைத்தல் சிரமமான அலுவலெனவும் இம்முறை வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் மற்றும் ஏனைய கண்காணிப்புக் குழுக்களுக்கு மேலதிகமாக தேர்தல் கண்காணிப்பாளர்களாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு சில தரப்பினர் அதாவது பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் தொழில் நிபுணர்கள் அமைப்பு, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஆகியன க்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு எதிர்பார்ப்பதாக தேர்தல் ஆணையாளர் இங்கு தெரிவித்தார். கண்காணிப்பு அலுவல்களை வாக்கெடுப்பு தொடர்பான கண்காணிப்புக்கு மாத்திரம் வழங்குவதா அல்லது வாக்கெண்ணல் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு வாய்ப்பளிப்பதா மற்றும் வாக்கெண்ணல் மண்டபத்திற்குள் கண்காணிப்பாளர்கள் நுழைவதற்கு அனுமதி வழங்குவதா என பிரதிநிதிகள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் வகையில் வாக்கெண்ணல் மண்டபத்திற்குள் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான கண்காணிப்பாளர்களுக்கு செல்வதற்கு அனுமதி வழங்க எதிர்பார்ப்பதாகவும் அது சம்பந்தமாக பின்னர் அறிவிக்ககப்படுமென தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். மேலும் மொத்த வாக்கெண்ணல் நிலையங்களின்

எண்ணிக்கை சுமார் 1200 ஆம் இருப்பதுடன் அவற்றில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சுமார் 300 கண்காணிப்பாளர்களை அனைத்து அமைப்புக்களுக்கும் நியாயமான முறையில் பகிர்ந்து வாய்ப்பளிப்பதற்கு தெரிவித்தார். கண்காணிப்பு அமைப்புக்களினால் வாக்கெடுப்பு அல்லது வாக்கெண்ணல் நடவடிக்கைகளை கண்காணித்தல் அல்லது கண்காணிக்காமையின் அடிப்படையில் தேர்தலின் துல்லியத் தன்மை தங்கியிருப்பதில்லையெனவும் வெறுமனே வெளிப்படைத் தன்மையின் நிமித்தமே இவ்வாறான முறை பின்பற்றப்படுவதாகவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

வாக்கெடுப்பு நிலையங்கள், வாக்கெண்ணும் மண்டபங்கள் ஆகியன சம்பந்தமான பொறுப்பை தேர்தல் திணைக்களம் ஏற்பதாகவும் முறைகேடுகள் நிகழ்ந்தால் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது தடுப்பதற்கு அனைத்துத் தரப்பினருக்கும் இங்கு பொறுப்பு ஒப்படைக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

21. திருமதி ஷியாமலி பெரேரா இங்கு கருத்துத் தெரிவிக்கையில் கடந்த தேர்தல்களின் போது பயன்படுத்தப்பட்ட வாக்குச்சீட்டுக்கள் (Ballot Papers) பல்வேறு இடங்களில் காணப்பட்டதாகவும் இது பிரச்சினைக்குரிய விடயமாக இருந்ததாகவும் தெரிவித்தார். இது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் தெளிவுபடுத்துகையில் இந்த விடயத்தில் எந்தவித முறைகேடுகளும் நிகழவில்லையென தாம் உறுதிப்படுத்துவதாக சில உத்தியோகத்தர்களின் கவனயீனத்தின் காரணமாக ஏற்பட்ட தவறினால் குறிப்பிட்ட வாக்குச்சீட்டுக்கள் தெருவில் மற்றும் வாக்கெண்ணும் நிலையத்தில் காணப்பட்ட போது கண்டறியப்பட்டதுடன் அவை அனைத்தும் அளிக்கப்பட்ட மற்றும் எண்ணப்பட்ட வாக்குச்சீட்டுக்கள் எனவும் தேவையான சந்தர்ப்பத்தில் சாட்சியாக முன்வைப்பதற்கு மூன்று மாவட்டங்களின் எண்ணப்பட்ட வாக்குச்சீட்டுக்கள் தம்மிடம் பாதுகாப்பாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

தேர்தல் செயற்பாடுகள் மீது அவநம்பிக்கை ஏற்படும் வகையில் கூற்றுக்களை வெளியிடுவதன் பாதிப்பு தேர்தல் திணைக்களத்திற்கு, தேர்தல் ஆணையாளருக்கு அல்லது அரசாங்கத்திற்கு ஏற்படுவதில்லையெனவும் அந்தப் பாதிப்பு வேட்பாளர்களுக்கே ஏற்படுவதாகவும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேர்தல் ஆணையாளர் அல்லது தேர்தல் திணைக்களம் மீது அவநம்பிக்கையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டாமெனவும் தெரிவித்த தேர்தல் ஆணையாளர் ஏதேனுமொரு சிக்கல் இருப்பின் அதனை தீர்த்துக்கொள்வதற்கு பொருத்தமான நடவடிக்கையை பின்பற்றுவதன்றி அவற்றை விமர்சித்தவாறு நாட்டு மக்களின் நம்பிக்கையில் பாதிப்பு ஏற்படும் வகையில் செயற்பட வேண்டாமென அனைத்துத் தரப்பினரிடமும் வேண்டுகோள் விடுத்தார். வாய்ப்பிருப்பின் பல்வேறு வலைத்தளங்களினூடாக விமர்சிக்கும் தரப்பினரையும் அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தெரிவித்தார்.

22. இங்கு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதி திரு.சுரனிமல ராஜபக்ஷ அவர்கள், தேர்தல் காலத்தில் ஆளும் கட்சியினரால் மேற்கொள்ளப்படும் வன்முறைகள் சம்பந்தமாக எடுக்கமுடியுமான நடவடிக்கைகள் யாவையென வினவினார். இது தொடர்பாக விடயங்களை முன்வைத்து கருத்துத் தெரிவித்த தேர்தல் ஆணையாளர் இதனை காலத்திற்கேற்ற பிரச்சினையாக குறித்துக்கொள்வதாகவும் இது சம்பந்தமாக ஏற்கனவே எழுத்து மூலமாக பொலிஸாருக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் மாவத்தகம மற்றும் பேருவளை ஆகிய இடங்களில் நிகழ்ந்த கவலைக்குரிய நிகழ்வுகள் மீது சபையின் கவனத்தை ஈர்த்து இந்த நிகழ்வுகளை பொலிஸாரால் தடுக்க முடியுமாக இருந்ததாக தெரியவருவதாகவும் விஷேடமாக மாவத்தகம நிகழ்வுகளிக் போது அதனுடன் சம்பந்தப்பட் பிரதான சந்தேக நபரை தெளிவாக இனங்கண்டுகொள்ள முடியுமாக இருக்கையில் அச்சந்தேக நபரை கைது செய்வதற்கு பொலிசாரால் முடியாதிருந்தமை ஆச்சரியமான விடயமெனவும் இது சம்பந்தமாக எழுத்து மூலமாக உரிய பொலிஸிற்கு அறிவித்துள்ளதாகவும் வலியுறுத்தினார். மேலும் இந்த விடயம் தொடர்பாக தெளிவுபடுத்துமாறு

இன்றைய தினமும் பொலிஸிற்கு மீண்டும் அறிவிப்பதற்கு நடவடிக்கையெடுப்பதாகவும் தெரிவித்தார்.

23. எதிர்காலத்தில் நடாத்தப்படவிருக்கும் நிரந்தரப் பிரதிநிகள் கூட்டத்திற்கு சிரேட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் (நிர்வாகம் மற்றும் தேர்தல்கள்) திரு. காமினி நவரத்ன, பிரதிப் பொலிஸ் மா அதிபர் (சட்டம்) திரு. காமினி திசாநாயக்க ஆகியோரை அழைப்பதற்கும் கூட்டங்களின் போது பொது இணக்கப்பாட்டுக்கு வரமுடியுமாக இருப்பின் மிகப் பொருத்தமென தேர்தல் ஆணையாளர் தெரிவித்ததுடன் சனாதிபதி வேட்பாளர்கள் / வாக்கெடுப்புப் பிரதிநிதிகள் / செயலாளர்கள் ஆகியோரை அழைக்கும் கூட்டங்களில் மற்றும் ஏனைய கூட்டங்களில் கலந்துகொள்பவர்கள் ஒழுக்கமாகவும் கட்டுப்பாட்டுடனும் தமது கருத்துக்கள் மற்றும் பிரச்சினைகளை முன்வைக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

24. 2014 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்புக்கள் அடங்கிய இறுவட்டுக்களை (CD) வேட்பாளர்களுக்கு மாத்திரம் வழங்குவதாகவும் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடாத போதிலும் தேருநர் இடாப்பு மீளாய்வு நடவடிக்கைகளில் செயலூக்கத்துடன் பங்களிப்பை வழங்கிய ஐக்கிய தேசியக் கட்சிக்கு இவற்றை வழங்குவதற்கான வாய்ப்புக்கள் நிலவுவதாகவும் இங்கு தேர்தல்கள் ஆணையாளர் தெளிவுபடுத்தினார்.

எதிர்காலத்தில் நடாத்தப்படவிருக்கும் சனாதிபதித் தேர்தலை சிற்பான வகையில் நடாத்துவதற்காக அனைத்துத் தரப்பினரும் பொறுப்புடனும் ஆர்வத்துடனும் நடவடிக்கை மேற்கொள்வார்களென தாம் நம்புவதாகவும் நிரந்தரப் பிரதிநிதிகளின் ஒத்துழைப்பு வழமையைப் போன்று தமக்கு கிடைக்குமென உறுதியாக அறிந்திருப்பதாகவும் இங்கு குறிப்பிட்ட தேர்தல் ஆணையாளார் வேறு பிரச்சினைகள் இருப்பின் முன்வைக்குமாறு கலந்துகொண்டோருக்கு கால அவகாசம் வழங்கியதுடன் அவ்வாறான பிரச்சினைகள் முன்வைக்கப்படாததனால் கலந்துகொண்ட அனைவருக்கும் மீண்டும் நன்றியைத் தெரிவித்ததன் பின்னர் சபை அலுவல்கள் 16.50 மணிக்கு நிறைவு பெற்றது.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

சனாதிபதித் தேர்தல் - 2015

போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் / முகவர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல். 2014.12.12

போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் / முகவர்களுடன் தேர்தல்கள் செயலகத்தின் கேட்போர் கூடத்தின் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் குறிப்பு.

கலந்து கொண்டோர்

1.	திரு. எஸ்.வீ.சீ. அலொக்செண்டர்	- இலங்கை தொழிலாளர் கட்சி
2.	திரு. சாந்த ஹேரத்	- ஐக்கிய மக்கள் சுந்திர முன்னணி
3.	திரு. சலீல முணசிங்க	- புதிய சனநாயக முன்னணி
4.	திரு. நாமல் ராஜபக்ஷ	- எமது தேசிய முன்னணி
5.	திரு. சரத் மனமேந்திர	- நவ சிஹல உறுமய
6.	திரு. ருவன் திலக்க பேதுரு ஆரச்சி	- எக்சத் லங்கா பொதுஜன பக்ஷய
7.	திரு. எம்.எஸ்.எம். கபீர்	- சனாதிபதி வேட்பாளர் திரு. ஐதுரூஸ் மொஹமட் இல்லியாஸ் அவர்களின் முகவர்.
8.	திரு. சிறிதுங்க ஜயசூரிய	- ஐக்கிய சோசலிசக் கட்சி
9.	திரு. டப்ளியூ.ஏ. சுனில்	- சோசலிச சமத்துவக் கட்சி
10.	திருமதி. சேபாலிகா கமகே வீரசிங்க	- ஜனசெத பெரமுன
11.	திரு. ஜயந்த குலதுங்க	- எக்சத் லங்கா மஹா சபா கட்சி
12.	திரு. சரத் அத்துகோரால	- மலையக மக்கள் முன்னணி
13.	திரு. தசுன் நாகஸ்கேன	- புதிய சனநாயகக் கட்சி
14.	திரு. சேனாதீர குணதிலக்க	- முன்னிலை சோஷலிஸக் கட்சி
15.	திரு. எஸ்.எம். கிறிஷாந்த பிரியதர்சன	- முன்னிலை சோஷலிஸக் கட்சி
16.	திரு. ரவி கருணாநாயக்க	- ஐக்கிய தேசியக் கட்சி
17.	திரு. விஜயதாச ராஜபக்ஷ	- புதிய சனநாயகக் கட்சி
18.	திரு. கே. ரஸ்மான்	- ஐக்கிய சமாதான முன்னணி
19.	திரு. ஐ. மிப்லார்	- ஐக்கிய சமாதான முன்னணி
20.	திரு. பி.ஜே. நஸ்முல்லா	- சனாதிபதி வேட்பாளர் திரு. ஐதுரூஸ் மொஹமட் இல்லியாஸ் அவர்களின் முகவர்.

பொலிஸ் திணைக்களத்தின் அலுவலர்கள்

1.	திரு. காமிணி நவரத்தின	- சிரேட்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் (நிருவாகம்/ தேர்தல்கள்)
2.	திரு. காமிணி திசாநாயக்க	- பிரதி பொலிஸ் மாஅதிபர்(சட்டம்)

தேர்தல்கள் திணைக்களத்தின் அலுவலர்கள்

1.	திரு. யூ. அமரதாச	- மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (பாராளுமன்றம்)
2.	திரு. ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க	- மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் (உள்ளூராட்சி)
3.	திரு. எம்.எம். மொஹமட்	- மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் (சட்டம் மற்றும் விசாரணை)

(கலந்துரையாடல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது வந்து கலந்து கொள்ளல்.)

திரு. சுசில் பிரேமஜயந்த - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

தேர்தல்கள் ஆணையாளர் திரு. மஹிந்த தேசப்பிரிய அவர்களின் தலைமையில் கூட்ட அலுவல்கள் 1635 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டதுடன் கலந்து கொண்டுள்ள அனைத்து தரப்பினரையும் தேர்தல்கள் ஆணையாளர் வரவேற்றார்.

02. 2015.01.08 ஆந் தேதி நடாத்தப்படவுள்ள சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளரின் முகவர்கள் இன்றைய கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளதாகவும் தற்போதைய சனாதிபதி, சனாதிபதி வேட்பாளர் திரு. மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் பிரதிநிதியாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த் அவர்கள் இன்று கலந்து கொள்வார்களாவென ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முகவரொருவராகக் கலந்து கொண்ட திரு. சாந்த ஹேரத் அவர்களை தேர்தல்கள் ஆணையாளர் வினவியதோடு, இக்கலந்துரையாடலின் போது தற்போதைய சனாதிபதி அவர்களை பிரதிநிதித்துவம் செய்வதற்காக எவருமே கலந்துகொள்ளவில்லையென திரு. சுசில் பிரேமஜயந்த் அவர்களுக்கு அறிவிக்குமாறு திரு. சாந்த ஹேரத் அவர்களுக்கு அறிவித்தார். அங்கு திரு. சாந்த ஹேரத் அவர்கள் தெரிவிக்கும் போது சனாதிபதி வேட்பாளர் தற்போதைய சனாதிபதி அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்வதற்காக திரு. சுசில் பிரேமஜயந்த் அவர்கள் நியமிக்கப்பட்டிருப்பினும் தவிர்க்க முடியாத கடமை அலுவல்கள் காரணமாக அவர் சார்பாக கலந்து கொள்ளுமாறும் தன்னைப் பணித்ததாகவும் தெரிவித்தார்.

இங்கு தேர்தல்கள் ஆணையாளர் சுட்டிக்காட்டும் போது அவ்வாறு நியமனம் செய்யப்பட்ட கடிதம் திரு. சாந்த ஹேரத் அவர்களிடம் காணப்படினும், சனாதிபதி அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்வதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி முகவரொருவரை நியமனம் செய்யவேண்டியுள்ளதாகவும், கட்சியின் செயலாளர் மற்றும் தேர்தல் முகவர் மற்றும் மேலும் ஓரு முகவரை நியமனம் செய்வதற்கு சாத்தியமுள்ளதாகவும் தெரிவித்தார். அதேபோன்று இக்கூட்டம் நடாத்தப்படுவதாக அனைத்து வேட்பாளர்களுக்கும் எழுத்து மூலமும் வாய்மொழி மூலமும் அறிவித்ததாகவும் தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் திரு. சுசில் பிரேமஜயந்த் அவர்கள் தாமதித்தேனும் வருகைதர முடியுமென இங்கு தெரிவித்தார்.

திரு. சாந்த ஹேரத் அவர்கள் மீண்டும் தெரிவிக்கும் போது அவசர தேவையொன்று காரணமாக இந்நிலைமை ஏற்பட்ட போதிலும் எதிர் காலத்தில் அவ்வாறு ஏற்படாதென தெரிவித்தார். இக்கலந்துரையாடலின் போது எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் எவரேனும் தரப்பொன்று வருகைத்தராமை காரணமாக வலுவிழக்கமாட்டாதென்பதோடு, அனைத்து தரப்பினரும் இவ்வாறான கூட்டங்களுக்கு கலந்து கொள்வது பொருத்தமெனவும், அதேபோன்று வேட்பாளரொருவருக்காக வேறொருவர் கலந்து கொள்ள முடியாதென்பதோடு, போட்டியிடுகின்ற எந்தவொரு வேட்பாளரும் தனக்காகப் போட்டியிட வேண்டுமெனவும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார். எவரேனும்மொரு வேட்பாளர் வேறொரு வேட்பாளர் சார்பாக பிரச்சாரம் செய்வாராயின் அவருக்கு கட்சி அலுவலகங்களை அமைக்கக் கூடிய உரிமைகளையும் வழங்குவதற்கான சாத்தியமில்லையென தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலின் போது விமர்சனங்கள், கருத்துக்கள், முன்மொழிவுகள், குற்றச்சாட்டுக்கள் எழமுடியுமென்பதோடு பல்வேறு விடயங்கள் தொடர்பாக முடிவுகளை எடுப்பதற்கு மற்றும் இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு சந்தர்ப்பம் கிட்டுவதாகவும், அதேபோன்று இக்கலந்துரையாடல்களில் எடுக்கப்படுகின்ற விடயங்கள் ஊடகங்களுக்கு வழங்கக் கூடியவையல்லவெனவும் நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்காக அனைத்துத் தரப்பினரையும் தெளிவுபடுத்துவதற்கேயெனவும் தெரிவித்தார்.

03. 2014.12.14 ஆந் தேதி நள்ளிரவு 12.00 மணிவரை அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களை நியமனம் செய்வதற்கு வேட்பாளர்களுக்கு அவகாசமுண்டெனவும் அவற்றின் மூலப்பிரதிகளை தேர்தல் செயலகத்திற்கும் அவற்றின் பிரதிகளை மாவட்டச் செயலகத்திற்கும் அனுப்ப வேண்டுமென தெரிவித்தார். முன்கூட்டியே செய்யப்பட்டுள்ள நியமனங்கள் செல்லுபடியற்றவையெனத் தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் இதுதொடர்பாக அனைத்து வேட்பாளர்களையும் அறிவூட்டுவதற்கு நடவடிக்கையெடுப்பதாகவும் தெரிவித்தார்.

04. வேட்பாளர்கள் பெரும்பாக முகவர்களை (பிரதேச முகவர்களை) 2014.12.21 ஆந் தேதிக்கு முன்னர் நியமனம் செய்ய வேண்டுமெனவும், இதுவரை குறித்த நியமனம் செய்யப்பட்டிருப்பது தற்போதைய சனாதிபதி திரு. மஹிந்த ராஜபக்ஷ அவர்களும் சனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன அவர்களும் மாத்திரமென்பதால் எதிர்காலத்தில் அஞ்சல் வாக்கு அலுவல்களைக் கண்காணிப்பதற்கு கண்காணிப்பாளர்களை அனுப்புமாறும் இவ்விரு தரப்பினருக்கும் மாத்திரம் அறிவிக்க முடியுமெனத் தெரிவித்தார். இதன்போது நியமனம் செய்யமுடியுமான முகவர்களின் எண்ணிக்கை தொடர்பான விபரங்களை வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. முல்லைத்தீவு. மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் அஞ்சல் வாக்கு விநியோகிக்கப்பட்ட போதும் அஞ்சல் வாக்குப் பெட்டிகள் அங்கு பொறியிடப்படாதெனவும், கிளிநொச்சி மாவட்டம் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்திற்குட்படுகின்றமையால் அவை யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கும், மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களின் அஞ்சல் வாக்குகள் வவுனியா தேர்தல் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலருக்கும் அனுப்பிவைக்கப்படுமெனத் தெரிவித்தார்.

அஞ்சல் வாக்கு அடையாளமிடப்படல் 2014.12.23, 24 ஆந் தேதிகளில் அடையாளமிடப்படுமெனவும் முகவர்களுக்கு அதனை கண்காணிக்க முடியுமெனவும் தெரிவித்தார். அஞ்சல் வாக்களிப்பின் போது இ.போ.ச. டிப்போக்களில் ஏதேனும் முறைகேடுகள் இடம்பெறின் உரிய நடவடிக்கையெடுக்கப்படுமெனவும், இ.போ.ச டிப்போக்களிலும் பஸ் வண்டிகளிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பதாகைகள், சுவரொட்டிகள் என்பனவற்றை அகற்ற விசேட நடவடிக்கையெடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

இங்கு ஐக்கிய தேசியக் கட்சியின் முகவர் திரு. விஜயதாச ராஜபக்ஷ அவர்கள், கருத்துத் தெரிவிக்கும் போது மஹரகம டிப்போவிலும் அஞ்சல் வாக்கு அடையாளமிடும் போது முறைகேடுகள் இடம்பெறலாம் என தகவல்கள் தெரியவந்துள்ளதாகவும், அஞ்சல் வாக்காளர்கள் அச்சுறுத்தப்படுவதாகவும் இதன் அஞ்சல் வாக்கு அடையாளமிடப்படுதலை மஹரகம பிரதேச செயலக அலுவலகத்திற்கு மாற்றுவது பொருத்தமெனவும் தெரிவித்தார்.

இதேபோன்று நாரஹேன்பிட்டி மத்திய போக்குவரத்து சபை தலைமையகத்திலும் அஞ்சல் வாக்கை அடையாமிடும் போதும் அதன் அதிகாரிகளுக்கு காண்பித்து அடையாமிடவேண்டுமென வாக்காளர்கள் அறிவுறுத்தப்பட்டிருப்பதாக தகவல் கிடைத்துள்ளதாக தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர், இது தொடர்பில் உரிய நடவடிக்கையெடுக்கப்படுமெனவும் ஏதேனும் சிக்கல்கள் ஏற்படின் உடனடியாக தொலைபேசி மூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கையெடுக்குமாறும் பொலிசார் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

அடையாளமிடப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் எண்ணப்படும் தினம் வரை எங்கு வைக்கப்படுமென திரு. விஜயதாச ராஜபக்ஷ அவர்கள் வினவியதற்கு அவை மாவட்டச் செயலகத்தில்

பாதுகாப்பாக வைக்கப்படுமெனவும், 2014.12.23/24 ஆந் தேதிகளில் அடையாளமிடப்படும் அஞ்சல் வாக்குகள் அன்றைய தினமே அஞ்சலுக்குக் கையளிக்கப்படுமெனவும், இவ்விரு தினங்களில் வாக்களிக்க முடியாமற் போகின்றவர்களுக்கு 2014.12.30 ஆந் தேதி அடையாளமிட முடியுமெனவும் தெரிவித்தார்.

05. சனாதிபதி தேர்தல் கண்காணிப்பு அலுவல்களுக்காக வெளிநாட்டுக் கண்காணிப்பு அமைப்புக்கள் பலவற்றிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள போதிலும் ஐரோப்பிய சங்கத்திற்கு தேர்தல் கண்காணிப்பு அலுவல்களுக்காகப் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் சிலர் ஆட்சேபனை தெரிவித்ததன் காரணமாக அழைக்கவில்லையெனவும் தெரிவித்தார்.

ஏதேனும் வாக்கெண்ணும் நிலையத்திற்கு கணிசமானளவான கண்காணிப்பாளர்கள் கலந்துகொள்ள இடமளிக்க முடியுமெனினும் வாக்கெண்ணலின் போது பிழையற்ற தன்மைத் தொடர்பாக எந்தவொரு கண்காணிப்பு அமைப்பினதும் சான்றிதழ் தேவையில்லையென தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.

வேட்பாளர்களின் முகவர்கள் வாக்கெண்ணல் மண்டபங்களைக் கண்காணிப்பதற்காக ஈடுபடுத்தப்படுவதாலும் அவர்கள் பெறுபேற்று அட்டவணையில் கையொப்பமிடுவதாலும் வாக்கெண்ணல் செயற்பாடுகளில் சந்தேகமோ அச்சமோ கொள்ளத் தேவையில்லையெனவும் தெரிவித்தார்.

06. சனாதிபதித் தேர்தல் சட்டத்தில் 117 ஆம் பிரிவின் கீழ் தேர்தலொன்றின் போது ஊடகங்கள் செயற்பட வேண்டிய விதம் தொடர்பாக இலங்கை ரூபவாஹினி, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் என்பனவற்றிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவ்வறிவித்தலின் பிரதி அரசியல் கட்சிகள், முறைப்பாட்டு விசாரணைக்குழு, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத் தலைவர் ஆகியோருக்கு அனுப்பபடவுள்ளதாகவும் தெரிவித்தார்.

07. கட்சி அலுவலகங்களை அமைப்பதற்காக முறையான அங்கீகாரத்தை இதுவரை எந்தவொரு தரப்பும் பெற்றுக்கொள்ளவில்லையெனவும், இருப்பினும் பிரதான அலுவலகங்களாக விளங்குகின்ற இடங்களில் பாரிய அளவிலான உருவப்படங்களை அகற்ற நடவடிக்கையெடுக்கவில்லையாயினும் இதர பிரதேசங்களிலுள்ள இவ்வுருவப்படங்களை அகற்றுவதற்கு முறையான நிகழ்ச்சித் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார். இதே நேரம் சகல சட்டவிரோத சுவரொட்டிகள், பதாகைகள் ,உருவப்படங்பள் அனைத்தும் அகற்றப்படுமென சிரேட்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் (நிருவாகம் மற்றும் தேர்தல்)திரு. காமிணி நவரத்ன தெரிவித்தார்.

அதேபோன்று இவ்வாறான சட்டவிரோத உருவப்படங்கள், பதாகைகள், சுவரொட்டிகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ள இடங்கள் தொடர்பாக முறைபாடு செய்யமுடியுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது சனாதிபதி வேட்பாளர் சிறிதுங்க ஜயசூரிய அவர்கள் இவ்வாறான சட்டவிரோத உருவப்படங்கள், பதாகைகள், சுவரொட்டிகளை நாடு பூராகவும் காணக்கூடியதாகவுள்ளதாகத் தெரிவித்தார். எதிர் காலத்தில் இவற்றை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

08. டிப்போக்களில், அதிவேக நெடுஞ்சாலைகளின் நுழைவாயில்கள் என்வற்றின் தற்போதைய சனாதிபதி அவர்களின் உருவப்படங்கள், சுவரொட்டிகள், பதாகைகள் என்பனவே காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இவ்வாறு வேட்பாளரின் உருவப்படத்தை காட்சிப்படுத்துவது தேர்தல் சட்டத்தின் கீழ் குற்றமொன்றெனவும் திரு. இந்திக கால்லகே சுட்டிக்காட்டினார். இதுதொடர்பாக பலமுறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகத் தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர், இவற்றை அகற்றுவதற்கு உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தல் வழங்குமாறும் திரு. சுசில் பிரேமஜயந்த அவர்களிடம் தேர்தல்கள் ஆணையாளர் கேட்டுக்கொண்டார்.

09. தேர்தல் பிரச்சார அலுவல்களுக்காக விளையாட்டு மைதானங்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் திரு. விஜயதாச ராஜபக்ஷ அவர்கள், மஹரகம நகர சபைக்குரிய விளையாட்டு மைதானத்தைக் கோரிய போது அதற்கு அனுமதி வழங்குமாறு தேர்தல்கள் திணைக்களம் அறிவித்திருந்த போதும் அதனையும் கருத்தில் கொள்ளாது சனாதிபதி வேட்பாளர் திரு. விமல் கீகனகே அவர்களின் கூட்டத்திற்காக வழங்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டதோடு, அனைத்து தரப்பினருக்கும் தேர்தல் பிரச்சார அலுவல்களுக்கு சமமான சந்தர்ப்பம் கிடைக்கவேண்டுமெனவும், தேர்தல்கள் ஆணையாளர் சுட்டிக்காட்டினார். திரு. விமல் கீகனகே அவர்கள் பகிரங்கமாக சனாதிபதி திரு மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு ஆதரவு வழங்குவதாக தெரிவித்துள்ளமையால் இதுதொடர்பில் அவரிடம் விடயங்களை விசாரிக்குமாறு திரு. சுசில் பிரேமஜயந்த அவர்களிடம் தேர்தல்கள் ஆணையாளர் கேட்டுக்கொண்டார்.

தேர்தல்கள் ஆணையாளரின் கடிதம் கிடைக்கப்பெற்றிருந்தும் மஹரகம நகர சபை மைதானத்தை தனக்கு வழங்காமை நியாயமற்ற செயலாகுமென திரு. விஜயதாச ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார். இதற்குப் பதிலளித்த தேர்தல்கள் ஆணையாளர், மஹரகம நகர சபை மற்றும் அதன் செயலாளருக்கு எதிராக பொருத்தமான நடவடிக்கையெடுக்கப்படுமெனத் தெரிவித்தார்.

நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தலொன்றுக்காக தேர்தல்கள் ஆணையாளர் எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு நன்றி தெரிவிப்பதாகவும், அதேபோன்று காட்சிப்படுத்தப்பட்டுள்ள உருவப்படங்கள், பதாகைகள், சுவரொட்டிகளை பொலிசார் அகற்றாவிடின் என்ன செய்ய வேண்டுமென அவர் மீண்டும் வினவினார். இச்சந்தர்ப்பத்தின் போது சட்டவிரோதமாக காட்சிப்படுத்தப்பட்டுள்ள இவ்வாறான இடங்கள் தொடர்பாக தேர்தல்கள் திணைக்களத்திற்கும், பொலிசாருக்கும் முறைப்பாடு செய்யுமாறு ஆணையாளர் தெரிவித்தார்.

10. அநுராதபுரத்தில் நடாத்தப்பட்ட சனாதிபதி அவர்கள் கலந்து கொண்ட கூட்டம் தேசிய ரூபவாஹின் மற்றும் சுயாதீன தொலைக்காட்சி ஊடாக நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டதாகவும், மேலும் CSN அலைவரிசை ஊடாகவும் ஒளிபரப்பப்பட்டதாகவும் திரு. சிறிதுங்க விஜயசூரிய அவர்கள் இங்கு சுட்டிக்காட்டினார். CSN அலைவரிசை தனியாருக்குரியதென்பதால் அதுதொடர்பில் தலையீடு செய்யமுடியாதெனவும் அரச ஊடகங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படுமெனவும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் முகவர்கள் உள்ளிட்ட தரப்பினரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், இதுதொடர்பில் கலந்துரையாடுவதற்கு நடவடிக்கையெடுக்குமாறு கோரியதாகவும் தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர், சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் இதற்காக பணம் அறவிடப்பட்டதாயின் எவ்வளவென்பதும்,

இலவசமாக ஒளிபரப்பப்பட்டதாயின் ஏனைய தரப்பினருக்கும் அவ்வாறு சந்தர்ப்பம் வழங்குமாறும் அதேபோன்று ஏனைய வேட்பாளர்களுக்கும் கூட்டங்களை இவ்வாறு பணம் செலுத்தி ஒளிபரப்ப சந்தர்ப்பம் வழங்குமாறும் CSN அலைவரிசையிடம் வேண்டுகோள் விடுக்குமாறும் தேர்தல்கள் ஆணையாளர் இங்கு சுட்டிக்காட்டினார்.

11. தேர்தல் பிரச்சார நடவடிக்கைக்கு 2014.12.13 ஆந் தேதி மு.ப 9.30 மணிக்கு நகராக்க அபிவிருத்தி அதிகார சபை ஊழியர்களுக்கு மருதானை புகையிரத நிலையத்திற்கருகில் கூடுமாறு பலவந்தப்படுத்தப்படுவதாக திரு. ரவிகருணாநாயக்க அவர்கள் தெரிவித்தார். 2014.12.13 ஆந் தேதி விடுமுறை தினமாதலால் இதனை நிறுத்த முடியாதெனவும், இது ஒரு முறைப்பாடாக கருதப்படுமெனவும் தேர்தல்கள் ஆணையாளர் கூறினார்.

12. 2014.12.25 ஆந் தேதி சனாதிபதி அவர்கள் மாத்தறையில் கலந்து கொள்ளும் கூட்டமொன்றிற்கு 200 இ.போ.ச பஸ் வண்டிகளில் ஆதரவாளர்களை அழைத்து வருவதற்கும் ஒரு வண்டிக்கு 5000 ரூபா வீதம் செலுத்துவதற்கு விவசாய அமைச்சின் செயலாளர், நடவடிக்கையெடுத்துள்ளதாகவும் ஒரு முகவர் தெரிவித்தார். முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளதால் வேறொரு திகதியில் அக்கூட்டத்தை நடாத்துமாறு தான் விவசாய அமைச்சின் செயலாளருக்கு அறிவித்தாக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.

13. அரசாங்க அச்சகத்திற்கு புதிதாக ஊழியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளமைத் தொடர்பாக அரசாங்க அழுத்தகருக்கு எதிராக கடும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக அரசாங்க அழுத்தகரிடம் வினவப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.

14. தேர்தல் பிரச்சார அலுவலகங்களை நிறுவுவதற்கான அனுமதியை 2014.12.14 ஆந் தேதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறும் அன்று முதல் அவை பரிசீலிக்கப்படுமெனவும் குறிப்பிட்ட தேர்தல்கள் ஆணையாளர், பெருந்தெருக்களில் டிஜிட்டல் திரைகளில் காட்சிப்படுத்தல் தடையெனவும் "ஆ.கே.ட்" வர்த்தக மைத்தில் நகராக்க அபிவிருத்தி அதிகார சபை இத்தகைய திரைகளில் காட்சிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இதுபற்றி குறித்த தரப்பினருக்கு அறிவிக்கப்படுமெனவும் தெரிவித்தார். தேர்தல் பிரச்சார அலுவலகங்களை நிறுவுவது மாவட்ட ரீதியான அதிகாரமளிக்கப்பட்ட முகவருக்கு 2015.01.06 ஆந் தேதி நள்ளிரவு வரை வாக்கெடுப்பு மாவட்டத்திற்கு ஓர் அலுவலகம் என்ற வகையில் நிறுவ முடியுமெனவும் 2015.01.07, 08, 09 ஆகிய மூன்று நாட்களிலும் வாக்கெடுப்புப் பிரிவுக்கு ஓர் அலுவலகம் வீதம் நிறுவமுடியுமெனவும் கூறினார். வாக்கெடுப்புப் பிரிவு மட்ட அலுவலகத்தை இறுதிவரை பேண அனுமதி கோரப்பட்டுள்ளதாவும், அதுபற்றி சபையோரின் கருத்துக்களை தெரிவிக்குமாறும் கேட்கப்பட்டுதோடு, அதற்கு சபையோரின் அனுமதி கிடைக்கப்பெற்றது.

15. தற்போதுள்ள சட்டத்தின் படி கொடிகள், பதாகைகள் காட்சிப்படுத்துவது சனாதிபதி வேட்பாளர்களும், தேர்தல் முகவர்களும் பயணிக்கின்ற வாகனங்களில் மாத்திரமே என்பதோடு அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் தலைவர்களின் பங்குபற்றல்களின்றியும் கூட்டங்களை நடாத்துவதால் அவர்களது வாகனங்களிலும் இக்காட்சிப்படுத்தல்களை மேற்கொள்ள அனுமதியளிப்பது சிறந்ததெனவும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார். இது நிலைமையை மோசமடையச் செய்யுமென திரு ரவி கருணாநாயக்க அவர்கள்

தெரிவித்ததோடு, திரு. சிறிதுங்க அவர்கள் இதுமாவட்டத்தில் மாவட்ட முகவர்களுக்கு மாத்திரமே வழங்கப்பட வேண்டுமெனவும் கூறினார்.

16. வாக்குப் பெட்டிகள் எடுத்துவரப்படுகின்ற பஸ்வண்டிகளில் வேட்பாளர்களின் முகவர்களும் செல்ல அனுமதி வழங்க முடியுமா? என திரு. ரவி கருணாநாயக்க அவர்கள் கேட்டதோடு, வாக்குப் பெட்டிகள் தொடர்பான மோசடிகள் ஒருபோதும் நடக்கமாட்டாதெனவும் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களான அரசாங்க உத்தியோத்தர்கள் ஒருபோதும் இத்தகைய மோசடிகளில் ஈடுபட மாட்டார்களெனவும் தேர்தல்கள் திணைக்களமும் அதன் உத்தியோத்தர்களும் எப்போதும் சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலொன்றிற்காக அர்ப்பணத்தோடு கடமையாற்றுவதற்தாக தேர்தல்கள் ஆணையாளர் வலியுறுத்திக் கூறினார்.

17. சிரேட்ட பிரசைகளான இளைப்பாறியோருக்கு கையடக்கத் தொலைபேசி வழங்குவதாயின் கட்சி பேதமின்றி வழங்குமாறு கோரியுள்ள போதிலும் மொபிட்டல் நிறுவனம் வழங்கியுள்ள கடிதம் ஊடாக வேட்பாளர் ஊக்குவிப்பு மேற்கொள்ளப்படுவதாக முறைப்பாடு கிடைத்துள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் கூறினார்.

18. கடற்படையினர் போலி வாக்குச் சீட்டுக்களை அச்சிடுவதற்கான முயற்சிக்களை மேற்கொள்வதாக கிடைத்த முறைப்பாட்டிற்கிணங்க கடற்படைத் தளபதியை உசாவியதாகவும், அத்தகைய சட்ட முரணான செயலொன்றில் கடற்படை ஈடுபட மாட்டாதென தான் முழுமையாக நம்புவதாகவும் தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர், போலி அடையாள அட்டைகள் அச்சிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுப்பற்றியும் தான் ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரை வினவி அத்தகையதொன்று நடைபெறமாட்டாதென்பதை உறுதிப்படுத்திக்கொண்டாகவும் தெரிவித்தார்.

தேர்தல் முறைப்பாட்டுக் கையேற்பு நிலையத்திற்கு கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகளை வேட்பாளர்கள், முகவர்கள் பரிசீலிக்க அவகாசம் உண்டெனவும் தேர்தல்கள் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

19. திரு. சிறிதுங்க ஜயசூரிய அவர்கள் ஒலிபெருக்கியைப் பயன்படுத்தி பிரச்சாரம் மேற்கொள்ள அவகாசமளிப்பது சிறந்ததெனவும் பெரிய கூட்டங்களுக்கன்றி வேட்பாளர்களை வரவேற்பதற்கும் இச்சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமெனவும் கூறியதோடு, சிரேட்ட பொலிஸ் மாஅதிபர் (நிருவாகம், தேர்தல்) திரு. காமிணி நவரத்தின அவர்கள் சட்டத்திற்கமைய ஒலிபெருக்கியைப் பயன்படுத்த முடிவது அனுமதிப்பெறப்பட்ட கூட்ட வளவுகளில் மாத்திரமே எனவும் கூறிப்பிட்டார்.

இங்கு வெலிகம நிகழ்வொன்று தொடர்பான 38/2005 ஆம் இலக்க உயர் நீதிமன்ற வழக்குத் தீர்ப்புத் தொடர்பாக திரு. காமிணி திசாநாயக்க அவர்கள் தெரிவித்த கருத்துத் தொடர்பாக கவனம் செலுத்திய தேர்தல்கள் ஆணையாளர், நாடாளவிய ரீதியில் ஒலிபெருக்கிக்கான அனுமதியை வழங்க பொலிசாருக்கு அதிகாரமில்லையென உயர் நீதிமன்ற நீதியரசரின் கட்டளையில் காட்டப்பட்டுள்ளதாகவும், ஆதலால் அதற்கான அனுமதியை பிரதேச அலுவலகங்களில் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் கூறினார். துண்டுப் பிரசுரம் வழங்குதற்காக மெகாபோன் ஒன்றைப் பயன்படுத்துவதாயின் அருகிலுள்ள பொலிஸ்

நிலையத்திற்கு அறிவித்து அனுமதியைப் பெறவேண்டுமெனக் கூறினார். ஆனால் சிரேட்ட பொலிஸ் மாஅதிபர் திரு. காமிணி நவரத்தின அவர்கள் கருத்து தெரிவிக்கையில் இத்தகைய இடங்களில் எதிர்க் கட்சி செயற்பாட்டாளர்களும் இருக்க முடியுமாதலால் பிரச்சினைகள் உருவாக முடியுமெனக் கூறியதோடு, தேர்தல்கள் ஆணையாளர் திறந்த இடவசதியுள்ள இடமொன்றில் துண்டுப் பிரசுரம் விநியோகிக்கப்படின் அவ்விடங்களில் ஒலிபெருக்கியை பயன்படுத்த அதிகாரமளிக்க முடியுமெனவும் முன்கூட்டியே அதுபற்றி அறிவிக்க வேண்டுமெனவும் தேர்தல்கள் ஆணையாளர் கூறினார்.

இதுபற்றி மீண்டும் கருத்து தெரிவித்த சிறிதுங்க ஜயசூரிய அவர்கள் நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் அரசாங்க கட்சியின் உறுப்பினர்களும், அமைச்சர்களம் சட்டவிரோத ஒலிபெருக்கி பயன்பாட்டை மேற்கொள்வதாகவும் சட்டத்தை முறையாக அமுல் செய்வதாயின் இவற்றை தடுக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

20. திரு. ரவி கருணாநாயக்க அவர்கள் உள்நாட்டு கண்காணிப்பு குழுக்களின் முகவர்கள் மற்றும் பொலிஸ் மாஅதிபர், தேர்தல்கள் ஆணையாளர் ஆகியோரின் பங்களிப்போடு கலந்துரையாடப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார். PAFFREL மற்றும் CaFFE போன்ற கண்காணிப்பு அமைப்புக்களுக்கு சனாதிபதித் தேர்தல் அலுவல்கள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு தேவையென அவர் தெரிவித்தார். இவ்வமைப்புக்கள் அடிக்கடி தன்னை சந்திப்பதாகவும் ஆனால் கலந்துரையாடல் தேவையெனத் தனக்கு அறிவிக்கவில்லையெனவும் தெரிவித்ததோடு, கலந்துரையாட வேண்டுமாயின் அதற்கான சந்தர்ப்பத்தை வழங்க முடியுமெனவும் தெரிவித்தார்.

21. அரச ஊழியர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள் தேர்தல் பிரச்சார அலுவல்களில் ஈடுபடுவதாக முறைப்பாடு கிடைத்தவண்ணமுள்ளதாகவும், ஹோமாகம பிரதேசத்தில் அரசியல் கூட்டமொன்றில் பாதுகாப்புச் செயலாளர் கலந்து கொண்டாக பத்திரிகையொன்றில் அறிக்கையிடப்பட்டுள்ளதாகவும் முறைப்பாடு கிடைத்துள்ளதால் இதுதொடர்பாக சனாதிபதியின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

22. சோசலிச சமத்துவக் கட்சியின் வேட்பாளர் தவிர ஏனைய அனைத்து சனாதிபதி வேட்பாளர்களும் தமது சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையைக் கையளித்துள்ளதாக அறிவித்த தேர்தல்கள் ஆணையாளர் 2014.12.15 ஆந் தேதியாகும் போது அவரும் தனது சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையை கையளிப்பதற்கு நடவடிக்கையெடுப்பார் என நம்புவதாக தெரிவித்தார்.

23. இச்சந்தர்ப்பத்தின் போது சனாதிபதி வேட்பாளர் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் அவர்களின் முகவர் திருமதி சேபாலிகா கமகே அவர்கள் குறிப்பிடும் போது பத்தரமுல்ல சீலரத்ன தேரர் அவர்களின் பாதுகாப்புக்காக பாதுகாப்பு அலுவலர்கள் இதுவரை வழங்கப்படவில்லையெனவும், அன்மையில் சிரச தொலைக்காட்சியின் “சடன” நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக சென்று கொண்டிருக்கின்றபோது சீலரத்ன தேரர் அவர்கள் பொலிசாரினால் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டதாகவும் அதன் காரணமாக அவ்விடத்தில் தாமதிக்க நேர்ந்ததாகவும் தெரிவித்தார்.

சனாதிபதி வேட்பாளர்களுக்கு காணப்படுகின்ற அச்சுறுத்தல்களைக் கருத்தில் கொண்டு பாதுகாப்பு அலுவலர்களை வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்கமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக

தெரிவித்தார். வேட்பாளர்கள் வதிந்துள்ள பிரதேசத்திற்கு வெளியில் தேர்தல் பிரச்சாரத்திற்காக செல்வதாயின் அப்பிரதேசத்திலிருந்து பாதுகாப்பு வழங்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

திரு. சரத் மனமேந்திர அவர்கள் தெரிவிக்கும் போது பிரச்சார கூட்டங்கள் பலவற்றிற்கு செல்லவேண்டி ஏயற்படும் போது வாகன நெரிசல் காரணமாக காலதாமதம் ஏற்படுவதாகவும், இதனால் பிரச்சார அலுவல்களுக்கு தடையேற்படுவதாகவும், அவ்விடங்களை விரைவாக சென்றடைவதற்காக பொலிஸ் மோட்டார் சைக்கலொன்றை வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்க முடியுமாயின் மிகவும் உசிதமெனவும் தெரிவித்தார்.

வேட்பாளர்கள் கூட்டங்களுக்கு அல்லது ஊடக நிகழ்ச்சிகளுக்கு செல்லுகின்ற சந்தர்ப்பங்களில் பொலிசாருக்கு அறிவிப்பார்களாயின் தேவையான வசதிகளை வழங்க முடியுமென சிரேட்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் (நிருவாகம் மற்றும் தேர்தல்) திரு. காமிணி நவரத்தின அவர்கள் தெரிவித்தார்.

வேட்பாளர்களுக்கு போக்குவரத்து தொடர்பான பிரச்சினைகள் காணப்படுமாயின் தெரிவிக்குமாறும் அவ்வாறானவர்களுக்கு அதற்காக தேவையான ஒழுங்குகளை செய்யமுடியுமெனவும் தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் பகிரங்கமாக வேறு வேட்பாளரொருவருக்கு ஆதரவு வழங்குவதாக தெரிவிக்கின்ற வேட்பாளர்களுக்கு அவ்வாறான சந்தர்ப்பங்களை வழங்குவதற்கான சாத்தியமொன்றில்லையெனவும் தெரிவித்தார்.

எவரேனும் வேட்பாளரொருவர் கோருகின்ற எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பாதுகாப்பு வழங்குவதற்கான சாத்தியம் பொலிசாருக்கு காணப்படுவதாகவும் சீருடை தரித்த இரு பாதுகாப்பு அலுவலர்களையாவது குறைந்தபட்சம் சனாதிபதி வேட்பாளரொருவருக்கு வழங்கப்படுமெனவும் தெரிவித்தார். சனாதிபதி வேட்பாளர் திரு. மைத்தீரிபால சிறிசேன அவர்களின் பாதுகாப்புக்காக இணைப்புச் செய்யப்பட்ட பாதுகாப்பு அலுவலர்களை ஐந்து பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகவும் வேட்பாளர் கோருகின்ற அலுவலர்களைப் பெற்றுக்கொடுக்க முடியுமெனவும் சிரேட்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் (நிருவாகம் மற்றும் தேர்தல்) திரு. காமிணி நவரத்தின அவர்கள் தெரிவித்தார்.

நடாத்தப்படவுள்ள சனாதிபதித் தேர்தலை நீதியாகவும் சுதந்திரமாகவும் நடாத்துவதற்கு அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியமெனவும் அதற்காக பொறுப்புடனும், ஆர்வத்துடனும் அனைத்து தரப்பினரும் செயற்பட வேண்டுமெனவும் தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் வேறு ஏதேனும் கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்கள் இருப்பின் சமர்ப்பிக்குமாறு தெரிவித்தார். வேறு கருத்துக்கள் எதுவும் முன்வைக்கப்படாமையால் பங்களிப்பு வழங்கிய அனைவருக்கும் மீண்டும் நன்றி தெரிவித்ததோடு கூட்ட அலுவல்கள் 1840 மணிக்கு நிறைவு செய்யப்பட்டது.

மஹிந்த தேசப்பிரிய.
தேர்தல்கள் ஆணையாளர்.

சனாதிபதித் தேர்தல் - 2015

பேட்டியிடுகின்ற வேட்பாளர்கள் / முகவர்களுடனான கலந்துரையாடல் - 2014.12.19

2014.12.19 ஆந் தேதி 1030 மணியளவில்

பங்குபற்றியோர்

1.	திரு. சிறிதுங்க ஜயசூரிய	- ஐக்கிய சோசலிச கட்சி
2.	திரு. சம்பானி பத்மசேகர	- ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி/ ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
3.	திரு. எம்.கே. பியரத்ன	- ஐக்கிய சோசலிச கட்சி
4.	திரு.அநுர ஜயசிங்ஹ	- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
5.	திரு. ஜயந்த குலதுங்க	- எக்சத் லங்கா மஹா சபா கட்சி
6.	திரு. காமிணி ரணசிங்ஹ	- எக்சத் லங்கா மஹா சபா கட்சி
7.	திரு. கபில கமகே	- தேசிய சுதந்திர முன்னணி
8.	திரு. ஆர்.ஐ.எம். இல்யாஸ்	- சனாதிபதி வேட்பாளர்
9.	திருமதி. ஷியாமிலா பெரேரா	- புதிய ஜனநாயக முன்னணி
10.	திரு. சலீல முணசிங்ஹ	- புதிய ஜனநாயக முன்னணி
11.	திரு. சபுமல் வலவ்வத்த	- ஸ்ரீ லங்கா தேசிய முன்னணி
12.	திரு. ஐ. மிப்லார்	- ஐக்கிய சமாதான முன்னணி
13.	திரு. ருவன் திலக	- எக்சத் லங்கா பொதுஜன பக்ஷய
14.	திரு. விஜயதாச ராஜபக்ஷ	- புதிய ஜனநாயக முன்னணி
15.	சட்டத்தரணி தசுன் நாகஸ்ஹேன	- புதிய ஜனநாயக முன்னணி
16.	திரு. ஏ.எஸ்.பீ. லியனகே	- ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி
17.	திரு. எஸ்.வீ.சீ. அலெக்செண்டர்	- ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி
18.	திரு. ஆர்.யோகராஜன்	- ஐக்கிய தேசியக் கட்சி
19.	திரு. டப்ளியூ.ஏ. சுனில்	- சோசலிசக் சமத்துவக் கட்சி
20.	திரு. எச்.டப்ளியூ. நிஹால் பிரேமகுமார	- எக்சத் லங்கா பொதுஜன பக்ஷய
21.	திரு. வை.எல்.எஸ். ஹமீட்	- அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்
22.	திரு. சுமித் விஜேசிங்ஹ	- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
23.	திரு. சுசில் பிரேமஜயந்த	- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
24.	வணக்கத்துக்குரிய பத்தரமுல்ல சீலரத்ன தேரர்	- ஜனசெத பெரமுண
25.	திரு. கபீர் ஹசீம்	- ஐக்கிய தேசியக் கட்சி
26.	திரு. பாலித கமகே	- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
27.	திரு. எம்.ஏ. சுமந்திரன்	- இலங்கை தமிழ் அரசுக் கட்சி
28.	திரு. தயா பெல்பொல	- ஐக்கிய தேசிய கட்சி

தேசிய கண்காணிப்பு அமைப்புக்களின் முகவர்கள். (மனித உரிமை ஆணைக்குழுவின் கலந்துரையாடலொன்று காரணமாக முழுமையாக கலந்து கொள்ளவில்லை.

1. திரு. கீர்த்தி தென்னகோன் - சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (CaFFE)

2. திரு. ரசங்க ஹரிஸ்சந்திர - தேசிய தேர்தல்கள் கண்காணிப்பு நிலையம் (NPOC)

3. திரு. ஹோரண ஹெட்டிஆரச்சி - சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாடு

(PAFFREL)

4. திரு. மஞ்சுல கஜநாயக்க - தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு நிலையம் (CMEV)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் அலுவலர்கள்.

1. திரு. காமிணி நவரத்ன - சிரேட்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் (நிருவாகம் மற்றும் தேர்தல்கள்)
2. திரு. காமிணி திசாநாயக்க - பிரதி பொலிஸ் மாஅதிபர் (நீதி)
3. திரு. பீ.பி. நிக்கஹெட்டிய - பிரதி பொலிஸ் மாஅதிபர் (போக்குவரத்து மற்றும் .....)
4. திரு. எல்.எச்.பீ. குரே - பொலிஸ் அத்தியட்சகர் - கட்டளையிடும் அதிகாரி, வெளிக்கள படையணி

தேர்தல்கள் திணைக்களத்தின் அலுவலர்கள்.

1. திரு. யூ. அமரதாச - மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் (பாராளுமன்றம்)
2. திரு. ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க - மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் (உள்ளூராட்சி)
3. திரு. எம்.எம். மொஹமட். - மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் (சட்டம் மற்றும் விசாரணை)

தேர்தல்கள் ஆணையாளரின் தலைமையில் 1035 மணிக்கு கலந்துரையாடல் ஆரம்பித்ததோடு, பெரும்பான்மையான வேட்பாளர்கள் பிரதிநிதித்துவம் படுத்தப்பட்டுள்ளமை மகிழ்ச்சி தருவதாக அவர் குறிப்பிட்டார்.

02. இத்தேர்தலுக்கான வேட்பாளர்களின் தேர்தல் முகவர்களும், அதிகாரமளிக்கப்பட்ட முவர்களும் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளமையால் பெரும்பாக முகவர்கள் 2014.12.21 ற்கு முன்னர் நியமிக்கப்பட வேண்டுமெனக் கூறினார்.

03. ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளவாறு 2014.12.23, 24 ஆந் தேதிகளில் அஞ்சல் வாக்குகள் அடையாளமிடப்படவுள்ள போதிலும், அம்பாந்தோட்டையைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களின் பொலிஸ் நிலையங்களில் 26 ஆந் தேதியே அது அடையாளமிடப்படவுள்ளதாகக் கூறினார். அதற்குக் காரணம் முக்கியமாக சர்ச்சைக்குள்ளாகியுள்ள டிப்போ போன்ற இடங்களில் அஞ்சல் வாக்குகள் அடையாளமிடப்படும் நடவடிக்கைக்குப் பாதுப்பு வழங்கவுள்ளதாலும், அரசியற் கட்சிகளின் கூட்டங்களுக்கு பாதுகாப்பு வழங்கவுள்ளதாலும் இம்முடிவு எடுக்கப்பட்டதென்றார். அம்பாந்தோட்டை மாவட்டத்தில் எதிர்வரும் 26 ஆந் தேதி சுனாமியை நினைவு கூருவதற்காக "2015 ஆம் ஆண்டின் அரசாங்கப் பாதுகாப்புத் தினக் கொண்டாட்டம்" இடர் முகாமைத்துவ அமைச்சினால் நிகழ்த்தப்படவிருப்பதால் அம்மாவட்ட பொலிசார் 24 ஆம் தேதி அஞ்சல் வாக்கினை அளிப்பரெனவும் கூறிய தேர்தல்கள் ஆணையாளர், 23,24 மற்றும் 26ஆகிய தேதிகளில் அடயாளமிட முடியாமல் போனவர்கள் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களினதும் தெரிவத்தாட்சி அலுவலர்

அலுவகங்களினதும் உத்தியோகத்தர்களின் அஞ்சல் வாக்குகள் அடையாளமிடுகின்ற 2014.12.30 ஆந் தேதி அடையாளமிட முடியுமெனவும் கூறினார்.

04. அஞ்சல் வாக்கு யாருக்கு அடையாளமிடப்பட்டுள்ளதென்பதைத் தெரிந்து கொள்ளமுடியுமென பொது மக்களிடம் நிலவுகின்ற தப்பபிப்பிராயம் நீக்கப்பட வேண்டுமென்பதால், அஞ்சல் வாக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டதென அறிவிக்கின்ற அறிவித்தலுக்கு மேலதிகமாக இம்முறை விசேட அறிவித்தல் கடிதமொன்றை அனுப்புவதற்கும், முக்கியமாக டிப்போ போன்ற முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ள இடங்களில் இவற்றைப் பகிர்ந்தளிக்க நடவடிக்கையெடுத்துள்ளதாகவும் PAFFREL இவ்வறிவித்தலை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல ஒத்துழைப்பு வழங்கியதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் கூறினார்.

05. இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் முகவர் திரு. எம்.ஏ. சுமந்திரன் அவர்களால் முன்வைக்கப்பட்ட ஒரு வினாவுக்கு விளக்கமளித்த தேர்தல்கள் ஆணையாளர், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளவர்களுக்கு கடந்த மாகாண சபைத் தேர்தலில் அஞ்சல் வாக்கு வசதி செய்து கொடுக்கப்படாமைக்குக் காரணம், அப்பகுதியின் பாதுகாப்புக்காக அவர்களின் உதவி தேவைப்பட்டிருக்கவில்லையென்பதோடு, தேவையான பொலிசார் வெளிமாவட்டங்களிலிருந்து தருவிக்கக் கூடியதாக இருந்ததனாலேயேயெனத் தெரிவித்தார். ஆனால் நாடளாவிய ரீதியிலான தேர்தலொன்றின் போது பொலிசாரின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அவர்களின் உதவி தேவைப்படுமென பொலிஸ் மா அதிபர் அறிவித்துள்ளமையால் இவர்களுக்கு தேர்தல் உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் அஞ்சல் வாக்குகளை அடையாளமிட அவகாசமளிக்கபட்டுள்ளதெனவும் கூறினார்.

இச்சந்தர்ப்பத்தில் மீண்டும் வினா எழுப்பிய திரு. எம்.ஏ சுமந்திரன் பொலிசாருக்கு இவர்களின் உதவி தேவைப்படுமாயின் அவர்களின் வாக்குகளை பொலிஸ் நிலையத்தில் வைத்து அடையாளமிடுவதே ஒழிய இராணுவ முகாம்களில் வைத்து அடையாளமிடுவது பொருத்தமாயிருக்காது எனக் கூறினார்.

இதற்குப் பதிலளித்த ஆணையாளர் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் அஞ்சல் வாக்கு அடையாளமிடல் தொடர்பாக அழுத்தங்கள் செலுத்தப்படுவதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளமையால் அவ்வாறான ஒன்று நிகழாது இருக்க அனைத்து விதமான முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதெனவும் அவ்விடங்களுக்கு சனாதிபதி வேட்பாளர்களின் கண்காணிப்பாளர்களை அனுப்ப முடியுமெனவும் கருத்துத் தெரிவித்ததோடு, இவ்வடடையாளமிடல்களின் போது ஏதேனும் அழுத்தம் மேற்கொள்ளப்பட்டமை நிரூபிக்கப்படின் அவ்வாக்களிப்பை தான் வறிதாக்குவதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக பலரும் பல கருத்துக்களை முன்வைத்ததோடு, ஐக்கிய சோசலிசக் கட்சியின் வேட்பாளர் திரு. சிறிதுங்க ஜயசூரிய இந்த சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் வாக்குகளை இராணுவ முகாமிற்கு வெளியே அடையாளமிடுவதற்கான முறைமையொன்றை தயாரித்தல் பொருத்தமெனக் கூறினார். இது பற்றிக் கருத்து தெரிவித்த ஆணையாளர், நீண்ட கலந்துரையாடல்களுக்குப் பின்னரே இவர்களுக்கு அஞ்சல் வாக்குரிமை வழங்க முடிவெடுத்ததாகவும், இவர்களுக்கு மாத்திரம் இவ்வுரிமை வழங்கப்படாவிடின் அது நீதிமன்றம் வரை செல்லக்கூடுமென்றும் தெரிவித்தார். சிரேட்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் (நிருவாகம் மற்றும் தேர்தல்கள்) திரு. காமினீ நவரத்ன இது பற்றித் தெரிவிக்கையில், தேர்தல் காலப்பகுதிக்குள் பொலிசாரின் நடமாடும் ஒவ்வொரு

வண்டியிலும் இரண்டு சிவில் பாதுகாப்பு உத்தியோத்தர்கள் வீதம் சேவையிடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளமையால் அவர்களுக்கு அவ்வாக்குரிமையை வழங்குமாறு பொலிஸ் மாஅதிபர் தேர்தல்கள் ஆணையாளரிடம் கேட்டுக்கொண்டமைக்கிணங்க இந்நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் கூறினார்.

இச்சந்தர்ப்பத்தில் அஞ்சல் வாக்கு அடையாளமிடும் நடவடிக்கைகளில் மேற்பார்வை தொடர்பாக தயாரிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் எத்தகையவை என சபைக்கு அறிவிக்க தேர்தல்கள் உதவி ஆணையாளர் (நிருவாகம்) சபையினரின் முன்னால் அழைக்கப்பட்டு தெளிவுபடுத்தப்பட நடவடிக்கையெடுக்கப்பட்டது. தமிழ் மொழியில் உரையாட முடிந்த 5 அலுவலர்களையேனும் இவ்விடங்களில் சேவையிலீடுபடுத்த நடவடிக்கையெடுக்குமாறும் ஆணையாளர் கூறினார். யாழ்ப்பாண மாவட்டத்திலும் அஞ்சல் வாக்குரிமை அளிக்கப்பட்டுள்ள சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வாக்கினைப் பிரயோகித்தன் பின்னர் பொலிஸ் நடமாடும் சேவைக்கு இணைக்கப்படும் சாத்தியக்கூறு காணப்படுவதாக தேர்தல்கள் ஆணையாளர் சுட்டிக்காட்டினார்.

06. மனித உரிமை ஆணைக்குழு மத்திய போக்குவரத்து சபைத் தவிசாளர், அரசாங்க அழுத்தகர், அஞ்சல் மாஅதிபர் மற்றும் பாதை அபிவிருத்தி அதிகார சபைத் தவிசாளர் உள்ளிட்ட தரப்பினர்களை நேற்றைய தினம் (2014.12.18) அங்கு அழைத்திருந்ததாகவும், அப்போது பஸ் வண்டிகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள சுவரொட்டிகள் / பதாகைகளை அகற்றும் பொறுப்பை அதன் தவிசாளர் ஏற்றுக்கொண்டதாகவும் தெரிவித்த ஆணையாளர், ஏதேனும் அஞ்சல் வாக்கு அடையாளமிடும் இடத்தில் ஊழல் இடம்பெற்றதாக நிருபிக்கப்படின் "சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்குத் தேவையான அனைத்து செயன்முறைகளையும் மேற்கொள்வதற்கு தேர்தல்கள் ஆணையாளருக்கு முடியும்" என்ற சட்ட ஏற்பாட்டுக்கமைய உரிய நடவடிக்கையெடுக்கப்படுமெனக் கூறினார்.

மேலும் கருத்துத் தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர், மத்திய போக்குவரத்துச் சபை பஸ் வண்டிகள் பதவியிலுள்ள சனாதிபதியின் தேர்தல் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளமை தொடர்பாகத் தான் தேடிப்பார்த்ததாகவும், அவ்வண்டிகளைப் பயன்படுத்துவதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற கட்சி மத்திய போக்குவரத்து சபைக்கு 25 மில்லியன் ரூபாவைக் கொடுப்பனவு செய்துள்ளதாகவும் அதுபற்றி வங்கிக் கணக்கு வெளிப்படுத்துகையில் குறிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். அதேபோன்று இந்த பஸ் வண்டிகளை ஒரு கூட்டத்திற்கு ஆகக் கூடியது 1000 பஸ்கள் என்ற எண்ணிக்கைக்குட்பட்டு பணக் கொடுப்பனவு செய்து பெற்றுக்கொள்ள உண்மையிலேயே போட்டியிடுகின்ற வேட்பாளர் ஒருவருக்கும் கூட சந்தர்ப்பம் உண்டெனவும் கூறினார்.

07. இங்கு கருத்துத் தெரிவித்த திரு. சிறிதுங்க ஜயசூரிய அவர்கள், தேர்தல் சட்டங்களை மீறும் விதத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வளவிற்குள் பதவியிலுள்ள சனாதிபதி அவர்களின் பாரியளவிலான உருவப்படமொன்று காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வாறான சட்டமீறல்கள் தொடர்பான தான் மிகவும் விசனம் அடைவதாகவும் இதுபற்றி வாய்மொழி மூலம் அறிவிக்க நடவடிக்கையெடுத்ததாகவும் கூறினார்.

இதுபற்றி கருத்துத் தெரிவித்த ஆணையாளர், முறைப்பாடுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்படல் வேண்டுமெனவும், இது முறைப்பாடொன்றாக குறித்துக்கொள்ளப்பட நடவடிக்கையெடுக்கப்படுமெனவும்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு உத்தியோகத்தர் ஒருவர் அனுப்பப்பட்டு இது பற்றி உறுதிப்படுத்திக்கொள்ள நடவடிக்கையெடுக்கப்படுமெனவும் கூறினார்.

இதுபற்றி கருத்துத் தெரிவரித்த திரு. தயாபெல்பொல அவர்கள் இவற்றை அகற்ற பொலிசார் ஏன் பின்நிற்கிறார்கள் என வினவினார். தேர்தல்கள் திணைக்களம் இவற்றை அகற்றுவதற்காக 50 மில்லியன் ரூபாக்களை பொலிஸ் திணைக்களத்திற்கு வழங்கியுள்ள போதிலும் அவர்கள் இவற்றை அகற்றாமலிருப்பது நீதியானதல்லதெனவும் இதற்குப் பொலிசார் பொறுப்பு கூற வேண்டுமெனவும் கூறிய அவர், இவற்றுக்கெதிராக பொலிசார் நடவடிக்கையெடுக்காவிடின் சுதந்திரமானதும் நீதியானதுமான ஒரு தேர்தலை நடாத்துவது எவ்வாறு எனக் கேட்டார்.

இதுபற்றி விளக்கிய ஆணையாளர், நாடெங்கிலும் பரந்துபட்டுக் காணப்படுகின்ற அனைத்து சுவரொட்டிகள் / உருவப்படங்கள் / பதாகைகள் / அறிவித்தல்களை ஒரே இரவில் அகற்றுவது நடைமுறைச் சாத்தியமான ஒரு விடயமல்ல எனக் குறிப்பிட்டார். மீண்டும் கருத்துத் தெரிவித்த திரு. தயாபெல்பொல அவர்கள், மொணராகலை மாவட்டமெங்கிலும் காணப்படுகின்ற இத்தகைய காட்சிப்படுத்தல்கள் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் திரு. ரன்ஜித் மத்தும பண்டார முறைப்பாடு செய்தபோது அவற்றை அகற்ற தொழிலாளர்கள் இல்லையென பொலிசார் அறிவித்துள்ளமை கவலைக்குரிய விடயமெனவும் கூறினார். இதுதொடர்பாக உரிய நடவடிக்கையெடுக்குமாறு சிரேட்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் திரு. காமினீ நவரத்தினவிடம் ஆணையாளர் கோரிக்கை விடுத்தார். தம்புள்ளை, திவுலபிட்டிய, ஹோமாகம, மினுவாங்கொடை, இரத்தினபுரி ஆகிய பிரதேசங்களிலும் இவ்வாறான சட்டமீறல்கள் தொடர்பாக அறிக்கையிடப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தேர்தல் திணைக்கள ஊழியர்கள் உள்ளிட்ட பொறுப்புக் கூறவேண்டியவர்களின் கவனம் ஈர்க்கப்படவேண்டுமெனவும், திரு. சலீல முணசிங்க தெரிவித்தார்.

இதற்கு சிரேட்ட பொலிஸ் மாஅதிபர் திரு. காமினீ நவரத்ன பதிலளிக்கையில் இத்தகைய விடயங்களை தடுக்க முடிந்தளவு முயற்சி எடுக்கப்படுமெனத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி முகவர் திரு. ஆர். யோகராஜன் கருத்துத் தெரிவிக்கையில், வேட்பாண்மை ஊக்குவிப்பைத் தூண்டுகின்ற டிஜிட்டல் விளம்பரத் திரைகள் பல இடங்களிலும் காணப்படுவதாகவும், சுதந்திர சதுக்கம், பாராளுமன்ற சுற்றுவட்டம் போன்ற இடங்களில் இவை உள்ளமையால் இவற்றை உடனடியாக அகற்ற வேண்டுமெனவும் கூறினார். இதுபற்றித் தெரிவித்த ஆணையாளர், சுதந்திர சதுக்க டிஜிட்டல் திரை தனது அறிவிப்புக்கமைய ஏற்கனவே அகற்றப்பட்டுள்ளதாகவும், பாராளுமன்ற சுற்றுவட்ட திரையும் விரைவில் அகற்றப்படுமெனவும் தெரிவித்தார். எனினும் சில டிஜிட்டல் திரைகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு கூட வழங்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளமையால் உரிய தரப்பினர் இவற்றை அகற்றாவிடின், தேர்தல் திணைக்களம் அகற்ற நடவடிக்கையெடுக்குமெனவும் தெரிவித்த ஆணையாளர், இத்தகைய விடயங்களை தவிர்ந்து கொள்ளுமாறு உரிய தரப்பினரை அறிவூட்டும் படி திரு. சுசில் பிரேம்ஜயந்த் அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

08. மூன்று சர்வதேச கண்காணிப்புக் குழுக்கள் நாட்டிற்கு வருகை தந்திருப்பதாகவும் கம்பஹா பிரதேசத்தில் சுவரொட்டிகள், உருவப்படங்கள் அகற்றப்படாமலிருக்க ஏதேனும் விசேட காரணம் உண்டா என ஒரு கண்காணிப்பாளர் கம்பஹா மாவட்ட செயலாளரிடம் வினவியதாகவும், இந்த கண்காணிப்பாளர்கள் இலங்கையின் தேர்தல் முறைமை, அரசியல் அதிகாரப் பகிர்வு என்பன பற்றி

நன்கு வாசித்தறிந்ததன் பின்னரே கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும், ஆதலால் இவற்றைத் தவிர்ந்து கொள்ளவேண்டுமெனவும் கூறினார்.

09. திரு. சிறிதுங்க ஜயசூரிய அவர்களின் வினாவொன்றுக்கு விடையளித்த ஆணையாளர் சமநிலைத் தன்மையற்ற விதத்தில் வேட்பாளர் ஊக்குவிப்புக்காக ஊடகம் பயன்படுத்தப்படுகின்றமை பற்றி சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்திற்கு (ITN) அறிவித்துள்ளதாகவும் அவ்வூடக நிறுவனம் எதிர்காலத்தில் சமநிலைத்தன்மையுடன் கூடிய நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப நடவடிக்கையெடுக்கத் தவறினால் இந்நிறுவனம் பக்கச்சார்புள்ளதாக நடந்துகொள்கின்றதென்ற ஊடக அறிவித்தலொன்றை வெளியிடுவதாகவும் தெரிவித்தார். ஒன்று நிகழ்ந்ததன் பின்னர் மேற்கொள்ளப்படுகின்ற பின்னாய்வு நடவடிக்கைகளினால் பயனில்லையெனவும் இதற்கெதிராக கிளர்ந்தெழுமாறு பொதுமக்களுக்கு அறிவிக்க வேண்டுமென்பதே தனது கருத்தென திரு. சிறிதுங்க ஜயசூரிய கூறினார். தேர்தல்கள் ஆணையாளர், என்ற வகையில் தனக்கு அவ்வாறு கூறமுடியாதெனக் கூறிய ஆணையாளர், வேட்பாளர்கள் தொடர்ந்தும் சட்ட மீறல்களில் ஈடுபட்டால் தேர்தல் சட்டங்கள் மீறப்படுவது பற்றிய பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டிவருமெனவும் தெரிவித்தார்.

10. சில விளையாட்டுத் திடல்களை பல்வேறு தரப்பினர் நியாயமற்ற முறையில் நீண்ட ஒரு காலத்திற்கு குறித்தொதுக்கிக் கொண்டதாகத் தெரிவித்த ஆணையாளர் பெல்மடுல்ல பஸ் வண்டித்தரிப்பிடம் 2014 திசெம்பர் மாதம் 08 ஆந் தேதி முதல் 2018 சனவரி மாதம் 07 ஆந் தேதி வரை ஒரு தரப்பினரால் குறித்தொதுக்கப்பட்டுள்ளதால் ஏதேனும் காரணத்தால் கூட்டமொன்றை நடாத்துவதற்கு அத்தகைய திடல்களை பெற்றுக்கொள்ள முடியாதிருப்பின், அதுபற்றி அறிவிக்குமாறும், அப்போது உரிய நடவடிக்கையெடுக்கப்படுமெனவும், பொலிசாருக்கும் இதுபற்றி அறிவிப்பதாகவும் திரு. தயாபெல்பொல அவர்களுக்கு ஆணையாளர் தெரிவித்தார்.

11. கடந்த நாட்களில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஸ்ரீ ரங்கா அவர்களால் நெறிப்படுத்தப்படுகின்ற அரசியல் விவரண நிகழ்ச்சியொன்றில் கௌரவ அமைச்சர் ரிசாட் பதியுதீன் அவர்கள் வேண்டுமென்றே விமர்ச்சிக்கப்படுவதனால் அவருக்கு அநீதி இழைக்கப்படுவதாகக் கருத்துத் தெரிவித்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் செயலாளர் திரு. வை.எல்.எஸ் ஹமீட் அவர்கள், ஓர் ஊடகவியலாளர் மாத்திரமன்றி பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்கின்ற அரசியற்கட்சியொன்றின் அங்கத்துவமாதலால் இத்தகைய நிகழ்ச்சியொன்றை நெறிப்படுத்த அனுமதி வழங்குவதால் ஆணையாளரின் ஊடக வழிகாட்டு நெறிகள் மீறப்படுவதாக கூறினார். இதுபற்றிக் கருத்துத் தெரிவித்த ஆணையாளர், இன்று நடைபெறுகின்ற ஊடக நிறுவனங்களுக்கான கலந்துரையாடலில் கலந்துகொள்ளவுள்ள சிரச ஊடக வலையமைப்பின் முகவர்களுக்கு இதுபற்றி அறிவிப்பதாகக் கூறினார்.

12. தேர்தல் சட்டங்களை மீறும் விதத்திலான போஸ்டர், உருவப்படங்களை அகற்ற பொலிசாருக்கு அதிகாரமில்லையென பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறிய விடயத்தை அவர் திருத்திக்கொள்ள வேண்டுமென தெரிவித்த போதிலும், இன்னும் அது நடைபெறவில்லையென திரு. விஜயதாச ராஜபக்ஷ அவர்கள் சுட்டிக்காட்டினார். இதுபற்றி கருத்துத் தெரிவித்த ஆணையாளர், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இதனை திருத்திக்கொள்ள வேண்டுமென சிரேட்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் திரு. காமனீ நவரத்ன அறிவித்ததாகவும் அதனை திருத்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நடவடிக்கையெடுத்ததாகவும் கூறினார்.

13. தொடர்ந்து கருத்து வெளியிட்ட திரு. சிறிதுங்க ஜயசூரிய தான் வெள்ளவத்தை பொது வர்த்தக கட்டிடத்தொகுதிக்கு முன்னால் உள்ள காணியை பிரச்சாரத்திற்காக அனுமதி கோரிய போது வீதி போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படக்கூடுமெனக் கூறிய தன்னிடம் பசு வைத்தியரின் அறிக்கை தேவைப்படுவதாக கொழும்பு மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளதாகத் தெரிவித்தார். இதுபற்றி கொழும்பு மாநகர ஆணையாளருக்கு விசேட கடிதமொன்றை அனுப்புவதற்காக அக்கடிதத்தின் பிரதியொன்றை தனக்குத் தருமாறு திரு. சிறிதுங்க ஜயசூரியவிடம் கூறிய ஆணையாளர், வீதி தடையேற்படுமென தனக்கு தெரிவித்திருந்த ஒரு காணியை சனாதிபதி அவர்கள் கலந்து கொண்ட கூட்டமொன்றிற்கு வீடமைப்பு அதிகார சபை வழங்கியதாக திரு. ரவி கருணாநாயக்க அறிவித்ததாகவும், அதுபற்றி அனைத்து தரப்பினருக்கும் எழுத்து மூலம் தான் அறிவித்துள்ளதாகவும் தெரிவித்தார். இதுபற்றி ஏதேனுமொரு தரப்பு தேர்தல் ஆணையாளரையும் பிரதிவாதியாகக் குறிப்பிட்டு மனித உரிமை ஆணைக்குழுவிற்கு முறைப்பாடொன்றை சமர்ப்பிக்குமாறும் ஆணையாளர் கேட்டுக்கொண்டார். உள்ளூர் அதிகார சபைகளின் தவிசாளர்கள் கூட்டங்களை நடாத்துவற்காக சபைக்குரிய கூட்டங்களுக்கான காணிகளை குறித்தொதுக்கும் பொழுது நியாயமான முறையில் நடந்துகொள்ளுமாறு பிரதேச அரசியல் வாதிகளுக்கு அறிவிக்குமாறு திரு. சுசில் பிரேம்ஜயந்த் அவர்களிடம் ஆணையாளர் கேட்டுக்கொண்டார்.

14. ஒரு முகவர் கருத்துத் தெரிவிக்கையில் தேர்தல் பிரச்சார ஒலிபரப்புக்களின் போது சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகிய எந்த மொழியிலும் மக்களுக்கு உரையாற்ற அவகாசமளிக்குமாறு கேட்டிருந்த போதிலும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினர் சிங்கள மொழியில் மாத்திரம் அதனை மேற்கொள்ளுமாறு தனக்கு அறிவிப்பதாகவும் கூறினார். இதுபற்றிக் கருத்துத் தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர், வேட்பாளர்களுக்கு தமிழ் மொழியிலும் பிரச்சாரம் செய்ய சந்தர்ப்பம் அளிக்குமாறு அறிவிக்க தான் நடவடிக்கையெடுப்பதாகவும், அவ்வாறு முடியாவிடின் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரச்சாரம் செய்ய முடிந்த ஊடகமொன்றைப் பயன்படுத்துவதற்கு வேட்பாளர்களுக்கு செலவாகும் செலவை மீளளிப்புச் செய்யுமாறு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தவிசாளருக்கு அறிவிப்பதாகவும் தெரிவித்தார். இத்தகைய முறைப்பாட்டை தனக்கு எழுத்து மூலம் அறிவிப்பதாயின் அவ்வாறு அறிவிக்கின்ற அதிகாரிக்கு எதிராக அரசியலமைப்பிற்கிணங்க நடிவடிக்கையெடுக்க முடியுமெனவும் கூறினார்.

15. ஏற்கனவே இரண்டு வேட்பாளர்கள் தாம் பதவியிலுள்ள சனாதிபதி சார்பாக போட்டியிட முன்வந்துள்ளதென அறிவித்துள்ளமையால் அவ்வேட்பாளர்கள் மேற்கொள்கின்ற தேர்தல் சட்ட மீறல்கள் பதவியிலுள்ள சனாதிபதியையும் சாருமாதலால் அது தொடர்பாக சனாதிபதி அவர்களுககோ அவர்களின் முகவர்களுக்கோ கருத்து தெரிவித்த முடியுமெனவும் ஆணையாளர் கூறினார். எவ்வாறாயினும் இவ்விரண்டு வேட்பாளர்களுக்கும் பிரச்சார அலுவலகங்கள் இடமளிக்கப்படாதெனவும், இவர்களுக்கென குறித்தொதுக்கப்பட்டுள்ள வானலைக் காலத்தை ஏனைய தரப்பினரின் ஊக்குவிப்புக்காக பயன்படுத்தக் கூடாதெனவும் அறிவித்தார். அத்தோடு, சில வேட்பாளர்கள் பகிரங்கமாகவே ஏனைய வேட்பாளர்களை விமர்சிக்கும் விதத்தில் நடந்து கொள்கின்றமை கவலைக்குரிய விடயமெனவும், ஊடகங்களினூடாக வேட்பாளர்களுக்கு பிரச்சாரத்திற்கான அவகாசமளிக்கப்படுகின்ற பொழுது அடுத்த வேட்பாளர்களை மிகத் தரக்குறைவாக துவேச வார்த்தைகளைக் கொண்டு சாடுவதற்கு அவகாசமளிக்க வேண்டாமெனவும், அவ்வேட்பாளர்களுக்காக மாத்திரம் பிரச்சாரம் செய்ய இடமளிக்குமாறும் தேசிய ரூபவாஹினீ சேவை மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் என்பவற்றிற்கு எழுத்து மூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கையெடுப்பதாகவும் ஆணையாளர் கூறினார்.

16. அரசாங்க அலுவலகங்கள், பாடசாலைகள் என்பவற்றின் ஊழியர்களிடம் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாதென வேட்பாளர்களைக் கேட்டுக்கொண்ட ஆணையாளர், மாதிரி வாக்குச் சீட்டொன்றைப் பயன்படுத்தி வாக்கினை அளிக்கும் விதம் குறித்து ஊழியர்களுக்கு விளக்கமளிக்க சில தரப்பினர் நடவடிக்கையெடுத்துள்ளதாக அறியக் கிடைத்துள்ளதாகவும், அத்தகைய விடயங்கள் தவிர்ந்து கொள்ளப்பட வேண்டுமெனவும் சுட்டிக்காட்டினார்.

17. 2014.12.27 ஆந் தேதிக்கு முன்னர் பெரும்பாக முகவர்களை நியமிக்குமாறு பதவியிலுள்ள சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ் அவர்களின் முகவர் திரு. சுசில் பிரேமஜயந்த் அவர்களையும் சனாதிபதி வேட்பாளர் திரு. மைத்தீரிபால் சிறிசேன அவர்களின் முகவர் திரு. விஜயதாச ராஜபக்ஷ அவர்களையும் கேட்டுக்கொண்ட ஆணையாளர் ஏனைய வேட்பாளர்களின் தேர்தல் முகவர்களும் இது தொடர்பாக நடவடிக்கையெடுக்க வேண்டுமெனவும் கேட்டார்.

18. தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் முகவர்கள் பக்கச் சார்பாக நடந்து கொள்வதாக இலங்கை சுதந்திர சட்டத்தரணிகள் சங்கத்தின் திரு. பீ.சீ. மெண்டிஸ் அவர்களினால் எழுத்து மூலம் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட ஆணையாளர், அத்தலைவர் அதன் செயலாளர் திரு. சம்பானி பத்மசேகர, பொருலாளர் திரு. சாலிய மெத்திவ் அதன் அங்கத்தவர்களை திரு. அநுர ஜயசிங்க, திரு. பாலித கமகே மற்றும் திரு. சுமித் விஜயசிங்ஹ ஆகியோருடன் கண்காணிப்புக் குழுக்களின் தலைவர்களோடு கலந்துரையாடி இப்பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

19. இங்கு கருத்துத் தெரிவித்த திரு. விஜயதாச ராஜபக்ஷ பதவியிலுள்ள சனாதிபதி அவர்களின் பாரியளவிலான போஸ்டர்களும், உருவப்படங்களும் அகற்றப்படாமல் அப்படியே இருக்கின்றபோது சனாதிபதி வேட்பாளர் திரு. மைத்தீரிபால சிறிசேன அவர்களின் பிரச்சார கூட்டமொன்றை அறிவிப்பதற்காக பல்வேறு இடங்களிலும் காட்சிப்படுத்தப்படுகின்ற மிகச் சிறியளவிலான சுவரொட்டிகளை அகற்ற மஹரகம மற்றும் கொட்டாவை ஆகிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் நடவடிக்கையெடுத்ததாக கூறியதோடு, இதுபற்றி விசாரிப்பதற்காக உரிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் இருவரையும் தேர்தல்கள் செயலகத்திற்கு தருவிக்குமாறு ஆணையாளர் அறிவுறுத்தினார்.

இதுதொடர்பாக கருத்துத் தெரிவித்த சிரேட்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் திரு. காமினீ நவரத்ன அச்சுவரொட்டிகளில் வேட்பாளரின் உருவப்படம் காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை காரணமாக உரிய பொலிஸ் அதிகாரிகள் அவற்றை அகற்ற நடவடிக்கையெடுத்ததாகவும் கூறினார்.

இதுபற்றி மேலும் விளக்கிய ஆணையளர், பிரச்சாரக் கூட்டங்கள் தொடர்பாக காட்சிப்படுத்தப்படுகின்ற வரையறுக்கப்பட்ட அளவுடன் கூடியதாக தயாரிக்கப்பட்டுள்ள சுவரொட்டியொன்றில் உரிய கூட்டம் நடைபெறுகின்ற திகதி, நேரம், இடம் மற்றும் கலந்துகொள்கின்ற பேச்சாளர்கள் தொடர்பான தகவல்களுக்கு மேலதிகமாக் வேட்பாளரின் உருவப்படத்தை காட்சிப்படுத்தல் பிழையாதொன்றல்லவென ஒரு பொது இணக்கப்பாட்டிற்கு வரமுடியுமாயின் அது அனைத்து தரப்பினருக்கும் சௌகரியமாகவிருக்குமெனவும் கூறினார். இதற்கு சபையின் இணக்கப்பாடு கிடைக்கப்பெற்றது.

மேலும் சிலாபம் பகுதியில் தேர்தல் பிரச்சார அலுவலகமொன்று திறந்து வைக்கப்பட்டபோது அப்பிரதேசத்தின் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அவ்வைபவத்தில் விளக்கேற்றியதற்கான தகவல்கள் நிருபிக்கப்பட்டமையால் இதுபற்றி விசாரணையொன்றை மேற்கொள்ளுமாறு சிரேட்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் திரு. காமினீ நவரத்ன அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. இதுபற்றி கருத்துத் தெரிவித்த சிரேட்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் ஏற்கனவே இத்தகைய விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

20. தொடர்ந்து கருத்துத் தெரிவித்த சனாதிபதி வேட்பாளர் வணக்கத்துக்குரிய பத்தரமுல்லை சீலரத்ன தேரர் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக பொலிசாரிடம் ஒலிபெருக்கிப் பாவனைக்கான அனுமதி கோரப்படுகின்ற பொழுது அதற்கான அனுமதியை வழங்க பலநாட்கள் எடுப்பதாகவும் அதனால் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் கூறினார்.

இதுபற்றிக் கூறிய ஆணையாளர், தேர்தல் காலப்பகுதிக்குள் பிரச்சார நடவடிக்கைகளுக்காக வேட்பாளர்கள்/ முகவர்கள் ஒலிபெருக்கிப் பாவனைக்காக அனுமதி கோருகின்ற போது அதற்கு முன்னுரிமை அளிக்க நடவடிக்கையெடுக்குமாறு அனைத்து பொலிஸ் நிலையங்களையும் அறிவூட்ட நடவடிக்கையெடுக்கப்படுமெனவும் கூறினார். மேலும் மாவனல்லை பிரதேசத்தில் பஸ் வண்டி தரிப்பிடக் காணியை ஒரு கட்சி பிரச்சாரத்துக்காகக் கோரிய போது அது வழங்கப்படாமை குறித்து ஊடகங்களினூடாக பெரியளவில் விமர்ச்சிக்கப்பட்டிருந்த போதிலும் இதற்கு முன்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அக்காணி பிரச்சார கூட்டங்களுக்காக வழங்கப்பட்டிருக்கவில்லையெனவும் அப்பகுதியில் வழமையாக வழங்கப்படுவது பாடசாலை விளையாட்டுத் திடல் எனவும் அன்றைய தினம் பரீட்சை இடம்பெற்றதனால் அதனை வழங்க முடியாமல் போயுள்ளதெனவும் தெரிவித்தார் ஆணையாள், அதனால் அக்கூட்டம் வேறோர் இடத்தில் நடாத்தப்பட்டதெனவும் இவ்விடயம் தொடர்பாக கேகாலை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளரும் தலையிட வேண்டிவந்தது எனவும் தெரிவித்ததோடு மாவனல்லை பிரதேச சபையை இதுதொடர்பாக குற்றம் சாற்றுவது பொருத்தமற்றதெனவும் எனத் தெரிவித்தார்.

வலுவிழப்புக்கு உள்ளானவர்கள் தமது வாக்கினைப் பிரயோகிப்பதற்காக வாக்களிப்பு நிலையத்திற்கு வெறொருவரை அழைத்துச்செல்ல சந்தர்ப்பம் உண்டெனவும் உரிய வாக்காளரின் வாக்குச் சீட்டை சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு முன்னால் அடையாளமிடுவதற்கு அவ்வாறு அழைத்து வருபவருக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படுமெனவும் கூறியதோடு, சில வலுவிழப்புக்குள்ளான வாக்காளர்கள் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் மூலம் தமது வாக்கினை அடையாளமிட்டுக்கொள்வதற்கு வருகை தருகின்றமையால் அச்சந்தர்ப்பத்தில் மற்றொரு அலுவலருக்கு முன்னால் வாக்கினை அடையாமிட அவகாசம் அளிப்பதற்காக முன்னைய கலந்துரையாடல்களில் எடுக்கப்பட்டது போன்று இங்கும் இணக்கப்பாடு எட்டப்பட்டது. தொழில் புரிபவர்களுக்கு வாக்களிப்பதற்காக தமது ஊர்களுக்குச் செல்வதற்கு வேலை நிலையங்களின் உரிமையாளர்கள் சட்டத்திற்கிணங்க லீவு வழங்க வேண்டியதன் தேவைப்பாடு தொடர்பான அறிவித்தலொன்றை பத்திரிகைகளில் பிரசுரிக்க நடவடிக்கையெடுக்கவுள்ளதாகவும் ஆணையாளர் கூறினார்.

23. சனாதிபதி வேட்பாளர் திரு. தைத்தீரிபால சிறிசேன அவர்கள் ஸ்ரீ லங்க சுதந்திர கட்சியின் செயலாளராக இருந்த போது பதவியிலுள்ள சனாதிபதியை புகழ்ந்து ஆற்றிய உரையொன்று தொடர்ச்சியாக ஊடகங்களினால் ஒளிபரப்பப்படுவதனால், அதைத் தடுத்து நிறுத்துமாறு திரு. விஜயதாச ராஜபக்ஷ அவர்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைய அதுபற்றி உரிய ஊடக

நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவ்வொளிபரப்பை நிறுத்த நடவடிக்கையெடுத்தமை பற்றி உரிய ஊடக நிறுவங்களுக்கு நன்றியைத் தெரிவித்த ஆணையாளர் இவ்வொளிபரப்பை நிறுத்துவதற்கு அறிவுறுத்துமாறு சனாதிபதி அவர்களை அறிவூட்ட நடவடிக்கையெடுத்ததாகவும் கூறினார்.

24. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் அனைத்து ஊடகங்களும் பக்கச்சார்பின்றி நடந்துகொள்ளுமென தான் நம்புவதாகவும், முக்கியமாக சுயாதீன ரூபவாஹினி சேவையும், லக்ஹண்ட வானொலிசேவையும் முன்பிலும் பார்க்க சமநிலைத் தன்மையோடு நடந்து கொள்ளுமென எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்ட ஆணையாளர், இதுபற்றி கண்காணிக்க உரிய அலுவலர்களை நியமித்துள்ளதாகவும் தொண்டர் நிறுவனங்களும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களும் இதற்கான முகவர்களை நியமித்துள்ளதாகவும் கூறினார்.

25. எவரேனும் ஒருவாக்காளருக்கு அச்சம் காரணமாக தனது வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிக்க முடியாதவிடத்து அவ்வாக்கினை ஆணையாளர் விதிக்கின்ற ஓர் இடத்தில் அடையாளமிட அவகாசமளிக்க முடியுமென்ற சட்டப்பிரிவைப் போன்றே வேலையின் இன்றியமையாத் தன்மை காரணமாக தமது வாக்கினை அளிக்க வாக்களிப்பு நிலையத்திற்குச் செல்லமுடியாதென கருதப்படுகின்றவர்களுக்கும் தேசிய மட்டத் தேர்தலொன்றின் பொழுது ஆணையாளரினால் விதிக்கப்படுகின்ற இடமொன்றில் வாக்களிக்க அவகாசமளிக்கின்ற சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்படின் பொருத்தமாயிருக்குமென ஆணையாளரினால் சுட்டிக்காட்டப்பட்டதோடு, அதற்கான போது இணக்கம் கிடைக்கப்பெற்றது. இத்திருத்தம் பாராளுமன்றத்தினூடாக மேற்கொள்ளப்படவேண்டியது அத்தியவசியமாகும்.

26. அரசாங்கப் பாடசாலைகளில் மஹிந்தோதய தொழிநுட்பக் கூட திறப்பு விழா, தபால் அலுவலக திறப்பு விழா உள்ளிட்ட பல்வேறு திறப்பு விழாக்களில் பதவியிலுள்ள சனாதிபதி கலந்துக்கொள்வதனால் அவரின் வேட்பாண்மை ஊக்குவிக்கப்படுவதாக திரு. சலீல முணசிங்ஹ அவர்கள் கருத்துத் தெரிவித்ததோடு, தமக்கும் இத்தகைய முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக ஆணையாளர் குறிப்பிட்டார். தனது பதவிநிலை காரணமாக கட்டாயம் கலந்து கொள்ள வேண்டிய அரச வைபவங்கள் அதிவிசேட வருடாந்த நிகழ்வுகள் / நினைவு கூறல் வைபவங்கள் தவிர்ந்த வேறு வைபவங்களில் பதவியிலுள்ள சனாதிபதி கலந்து கொள்ளமாட்டார் என தான் எதிர்பார்ப்பதாகவும், தேவையற்ற வைபவங்களுக்காக அவருக்கு அழைப்பு விடுப்பதை தவிர்ந்து கொள்ளமாறு அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு தான் அறிவித்துள்ளதாகவும் கூறிய ஆணையாளர், மஹிந்தோதய வைபவங்கள் ஏனைய அரச வைபவங்கள் என்பவற்றை ஒளிப்படம் எடுப்பதற்கும் கட்சி / வேட்பாளர் ஊக்குவிப்பு இடம்பெறுகின்ற வைபவங்களை ஒத்திவைக்க நடவடிக்கையெடுப்பதற்கும் ஆவன செய்வதாக கூறிப்பிட்டார்.

27. அபிவிருத்திப் பணிகளுக்காகவும் சனாதிபதியின் உருவப்படத்தை காட்சிப்படுத்துவது சட்டமுரணானதெனக் குறிப்பட்ட ஆணையாளர், நாட்டின் பலபகுதிகளில் இதனைக் காணக்கூடியதாகவுள்ளதாகவும் சட்டத்தை ஏமாற்ற முயற்சி எடுக்காமல் உரிய தரப்பினர் அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென சிலாபம் பகுதியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள போஸ்டர் ஒன்று தொடர்பாக உதாரணம் காட்டி விளக்கியதோடு, அவ்வாறின்றேல் இவற்றை அகற்ற தேர்தல் திணைக்களம் நடவடிக்கையெடுக்குமெனவும் கூறினார்.

இக் காட்சிப்படுத்தல்களை அகற்றுமாறு கல்வி அமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படுமெனவும், தேசிய பாடசாலைப் பணிப்பாளர் மற்றும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் ஆகியோர் தேர்தல் செயலகத்திற்கு தருவிக்கப்பட்டு கலந்துரையாடப்பட எதிர்ப்பார்ப்பதாகவும், அவற்றை அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு உரிய தரப்பினர் அகற்றாவிடின் தேர்தல் திணைக்களம் அகற்ற நடவடிக்கையெடுக்குமெனவும் கூறினார்.

சட்டம் ஒழுக்க சீலம் தொடர்பாக எவ்வித அக்கறையுமின்றி அறிவுறுத்தல்களுக்கெதிராக ஏதேனுமொரு தரப்பு தொடர்ந்தும் சட்டமீறல்களில் ஈடுபடின் அவ்வேட்பாளர்கள் சட்டமீறல்களில் ஈடுபடுவதாக பகிரங்க பத்திரிகை அறிவித்தலொன்றை வெளியிட வேண்டிவருமெனவும் ஆணையாளர் குறிப்பிட்டார்.

28. எத்தரப்பினருக்கும் எப்பிரச்சினையையும் தேர்தல்கள் ஆணையாளரை சந்தித்து கலந்துரையாட எப்போதும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ள போதிலும் அதற்குரிய நடவடிக்கையிலீடுபடாமல் தேர்தல்கள் செயலகத்திற்கு முன்னால் கடந்த தினமொன்றில் ஆர்பாட்டமொன்றுதொடர்பாக தனது கவலையைத் தெரிவித்த ஆணையாளர், இந்நடவடிக்கைகளினால் நிகழ்வது தேர்தல் தொடர்பான மக்களிடையேநிலவுகின்ற நல்லெண்ணம் பாதிக்கப்படுவதே எனத் தெரிவித்தார்.

29. இச்சந்தர்ப்பத்தில் திரு. தயாபெல்பொல அவர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது வெளிநாட்டில் தொழில் புரியும் வாக்காளர்கள் 130,000 பேர் வரையில் எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்காக இந்நாட்டிற்கு வருகைத்தரவுள்ளதாக பத்திரிகையொன்றில் அறிக்கையிடப்பட்டிருந்ததாகவும், இவர்கள் இந்நாட்டிற்கு வருகைதருவதற்கெனில் அதிகளவு விமானங்களை பயன்படுத்த வேண்டுமெனவும் அதிலிருந்து தெரியவருவது உண்மையில் வாக்காளர்கள் இந்நாட்டிற்கு வராமலேயே அவர்களின் வாக்குகளை போலியாக இடுவதற்கான திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டமொன்றை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் அவ்வாறான முறைகேடொன்று இடம்பெறுவதற்கு எந்தவொரு விதத்திலும் வாய்ப்பில்லையெனவும், வெளிநாட்டில் வதிகின்ற வாக்காளர்களெனில் வாக்கெடுப்பு நிலையத்திற்கு அனுப்பப்படுகின்ற வாக்காளர் பட்டியலில் வெளிநாட்டில் வதிகின்ற வாக்காளரொருவரென குறிப்பிட்டு அனுப்பப்படுவதாகவும் அதற்கிணங்க "A" (ABROAD) அடையாளமிடப்பட்டுள்ளதாகவும் எவரேனும் வாக்காளரொருவர் அவ்வாறு அடையாளமிடப்பட்டதன் பின்னர் இந்நாட்டிற்கு வருகைதருவராயின் தனது வாக்கை அளிப்பதற்காக அவரின் செல்லுபடியான வெளிநாட்டு கடவுச் சீட்டை சமர்ப்பிக்க வேண்டுமெனவும் தெளிவுபடுத்தினார்.

அதற்கிணங்க தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிக்கும் போது வாக்கெடுப்பு நிலையத்திற்கு வழங்கப்பட்டுள்ள தேருநர் இடாப்பில் தனது பெயருக்கெதிரே "A" குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து வாக்காளர்களும் தனது வாக்கை வாக்கெடுப்பு நிலையத்தில் அளிப்பதற்காக செல்லுபடியான கடவுச்சீட்டை சமர்ப்பிக்க வேண்டுமென உரிய தரப்பினரை அறிவூட்டுவதற்கு குறித்துக்கொள்வதாக தெரிவித்தார்.

30. கல்னேவ பிரதேசத்தில் தேர்தல் வன்முறைச் செயற்பாடுகளில் ஈடுபட்ட நான்கு பேரை கைது செய்வதற்கு நடவடிக்கையெடுத்தமை மகிழ்ச்சிகரமான விடயமொன்றென சுட்டிக்காட்டியதோடு, இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பாக அவதானமாக இருக்கின்றமை தொடர்பில் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களுக்கும் நன்றி தெரிவித்தார். அதேபோன்று தற்போதைய சனாதிபதி

அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து பொரளை பிரதேசத்தில் நடாத்தப்பட்ட ஊர்வலம் தொடர்பாக உரிய நடவடிக்கையெடுக்கத் தவறிய பொரளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடமிருந்து அதற்கான விடயங்களை விசாரிப்பதற்காக தேர்தல்கள் செயலகத்திற்கு அழைப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

மேலும் தமது கட்சிக்காரர்கள் / ஆதரவாளர்கள் தேர்தல் வன்முறைச் செயற்பாடுகளில் ஈடுபடுவதன் காரணமாக பொலிசார் கைது செய்ததன் பின்னர் அவர்களை விடுவிப்பதற்காக பொலிசாருக்கு அழுத்தம் கொடுக்க அரசியல் வாதியொருவர் செயற்பட்டுள்ளமை கவலைக்குரிய விடயமெனவும் இது உண்மையாக சட்டத்திற்கு சவலாகுமெனவும் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்காக இவ்வாறான செயற்பாடுகளை தடுப்பதற்கு அனைத்து தரப்பினரும் பொறுப்புடன் செயற்பட வேண்டுமெனவும், அரசியல் வாதிகள் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றமை காரணமாக சட்டத்திற்கு ஏற்படுகின்ற பாதிப்பு பாரியதொன்றெனவும் இவ்வாறான செயற்பாடுகளுக்கெதிராக சட்டத்தை மிக கடுமையாக செயற்படுத்த வேண்டுமெனவும் தெரிவித்தார்.

31. இச்சந்தர்ப்பத்தில் போது கருத்துத் தெரிவித்த இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் திரு. எம்.ஏ. சுமந்திரன் அவர்கள் குறிப்பிடுகையில், யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் தமது கட்சியினரும் பிரதம அமைச்சரும் கலந்துகொண்ட கூட்டமொன்றின் போது தேர்தல்கள் ஆணையாளர் மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டத்தின் போது அரசியல் விடயங்களை கலந்துரையாட வேண்டாமென அறிவிக்கப்பட்டிருந்த கடிதத்தை மாவட்ட செயலாளர் குறித்த கூட்டத்தில் சமர்ப்பித்ததன் பின்னரும் கௌரவ டக்ளஸ் தேவானந்த அவர்கள் அரசியல் உரையொன்றை ஆற்றியமை தமது கட்சியின் செயற்பாட்டாளர்களால் வெளியிடப்பட்ட ஆட்சேபனை காரணமாக சபையில் அமைதியின்மையொன்றை ஆளும் தரப்பினரால் ஏற்படுத்தப்பட்டதாக தெரிவித்தார்.

இது தொடர்பாக தெளிவுபடுத்திய தேர்தல்கள் ஆணையாளர் குறித்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் விசாரிப்பதற்கு நடவடிக்கையெடுப்பாரெனவும் இதனை முறைப்பாடொன்றாக குறித்துக்கொள்வதற்கு நடவடிக்கையெடுப்பதாகவும் தெரிவித்தார்.

திரு. தயாபெல்பொல அவர்கள் இச்சந்தர்ப்பத்தில் கருத்து தெரிவிக்கும் போது 10 வருடங்களுக்கு மேலாக எதிரக் கட்சி செயற்பாட்டாளரொருவராக செயற்பட்டுள்ள அனுபவத்தோடு, தற்கால நிலைமையை அவதானிக்கின்றபோது எதேனும் வன்முறை நிலைமையொன்று எதிர்காலத்தில் ஏற்படுவதற்கான அறிகுறிகள் காணப்படுதாகவும் ஆதலால், அவ்வாறான நிலைமையொன்று ஏற்படுவதை தடுப்பதற்காக முடியுமான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

அங்கு கருத்துத் தெரிவித்த சிரேட்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் திரு. காமினீ நவரத்ன (நிருவாகம் மற்றும் தேர்தல்) அவர்கள் தெரிவிக்கும் போது நாட்டின் சகல பிரதேசங்களிலும் வீதித் தடைகள், பாதுகாப்பு அரண்கள் என்பன உரியவாறு அமைப்பதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதாகவும் முறைகேடுகள் இடம்பெறுவதை தடுப்பதற்காக அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதுதொடர்பில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லையெனவும் தெரிவித்தார்.

32. இங்கு மீண்டும் கருத்துத் தெரிவித்த திரு. விஜயதாச ராஜபக்ஷ அவர்கள் குறிப்பிடும் போது பொலன்னறுவையில் 5 விசேட அதிரடிப்படை முகாம்கள் மற்றும் 2 இராணுவ முகாம்கள் அவரசமாக

அமைக்க நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதாகவும் மக்கள் வாக்களிக்கும் போது இம்முகாம்களினால் ஏதேனும் அழுத்தமொன்று ஏற்படலாம் என்ற சந்தேகம் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

அதுதொடர்பான விடயங்களை தெளிவுபடுத்திய தேர்தல்கள் ஆணையாளர் பொலன்னறுவை ரோயல் வித்தியாளத்தின் புனரமைப்பு அலுவல்களுக்காக சில காலங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்டிருந்த முகாம்கள் இப்போது அங்கு காணப்படுவதாகவும் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற இடத்தில் இராணுவ முகாமொன்று இல்லையெனவும் குறிப்பிட்டார். இருப்பினும் விசேட அதிரடிப்படை முகாம்கள் 5 புதிதாக அமைக்கப்பட்டுள்ளதாகவும் அம்முகாம்கள் பொலிஸ் மாஅதிபரின் கீழ் அன்றி சட்டம் மற்றும் ஒழுங்குகள் தொடர்பான அமைச்சின் செயலாளரின் கீழ் நிருவகிக்கப்படுவதாகவும் இம்முகாம்கள் காரணமாக ஏதேனும் அழுத்தமொன்று ஏற்படமுடியுமென்ற நிலவுகின்ற சந்தேகம் காரணமாகவும் இம்முகாம்களை தேர்தல் காலத்தினுள் குறித்த பிரதேசத்தில் பேணிச் செல்வதற்குள்ள தேவைப்பாடு தொடர்பாக சட்டம் மற்றும் ஒழுங்குகள் தொடர்பான அமைச்சின் செயலாளர் திரு. மஹிந்த பாலசூரிய அவர்களிடம் வினவப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

33. கிராம மட்டத்தில் நடாத்தப்படவுள்ள சிறிய கூட்டமொன்றாக (Pocket Meeting) இருப்பினும் அது தொடர்பில் பொலிசாருக்கு அறிவித்து உரிய பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கையெடுக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் அனைத்து தரப்பினருக்கும் அறிவித்தார். அங்கு திரு. விஜயதாச ராஜபக்ஷ அவர்கள் குறிப்பிடுகையில் கூட்டமொன்றை நடாத்துவதற்காக ஒலிபெருக்கி உபகரணத்திற்கான அனுமதியை பெற்றுக்கொண்டதும் குறித்த இடத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்க இதற்கு முன்னர் பொலிசார் நடவடிக்கையெடுத்த போதும் தற்போது அவ்வாறான நிலைமையொன்றில்லையெனவும் தெரிவித்தார்.

மீண்டும் கருத்துத் தெரிவித்த சிரேட்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் திரு. காமினீ நவரத்ன (நிருவாகம் மற்றும் தேர்தல்) தற்காலத்தில் மீறல்கள் எச்சந்தர்ப்பதிலும் எதிர்பார்க்க முடியுமென்பதால் அது தொடர்பாக கவனமாக செயற்பட வேண்டுமெனவும் கூட்டமொன்றை நடாத்துவதாயின் அதுதொடர்பாக முன்கூட்டியே அறிவித்து பொலிஸ் பாதுகாப்பை பெற்றுக்கொள்ளுமாறும் தெரிவித்தார்.

அங்கு கருத்துத் தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர், வேட்பாளர்களால் நடாத்தப்படுகின்ற கூட்டங்களுக்கு போதுமான விதத்தில் பாதுகாப்பு வழங்குமாறும் நடமாடும் பிரச்சார அலுவல்கள் (Canvasing) மேற்கொள்வதாயின் அதற்காக நடமாடும் பாதுகாப்பு சேவைகளின் பாதுகாப்பை வழங்குவதற்கு நடவடிக்கையெடுக்குமாறும் நாட்டின் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் எழுத்து மூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கையெடுப்பதாகவும் தெரிவித்தார்.

34. சில தொகுதி அமைப்பாளர்களால் தமது விருப்பத்திற்கிணங்க பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளை மாற்றம் செய்து அழைத்துக்கொள்வதற்கு நடவடிக்கையெடுத்துள்ளதாக திரு. விஜயதாச ராஜபக்ஷ அவர்கள் சுட்டிக்காட்டினார். அங்கு அது தொடர்பில் கருத்து தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர், பொலிசாரின் இடமாற்றம் தொடர்பாக செயற்படுவதற்கு தனக்கு அதிகாரம் கிடைத்த பெயர் குறித்த நியமன அறிவித்தல் திகதி தொடக்கம் அதாவது 2014.11.21 ஆந் தேதி தொடக்கம் அவ்வாறான செயற்பாடொன்று இடம்பெறவில்லையெனவும் எதிர் காலத்திலும் அவ்வாறான ஒன்று இடம் பெறுவதற்கு எந்தவிதத்திலும் இடமில்லையெனவும் தெரிவித்தார்.

இந்த சந்தர்ப்பத்தில் திரு. எம்.ஏ. சுமந்திரன் அவர்கள் சட்டத்தின் 104 (சீ) பிரிவை மேற்கோள் காட்டி தேர்தல் காலக்கெடுவினுள் தனது விருப்பின் பேரில் பொலிசாரை ஈடுபடுத்துவதற்கு தேர்தல்கள் ஆணையாளருக்கு சாத்தியம் காணப்படுவதாக சுட்டிக்காட்டியதோடு, சட்டத்தின் பிரகாரம் தெளிவாக தேர்தல்கள் ஆணையாளரின் உத்தரவின் பிரகாரம் குறித்த காலக்கெடுவினும் பொலிசார் செயற்பட வேண்டுமெனவும் தெரிவித்தார். அங்கு திரு. விஜயதாச ராஜபக்ஷ அவர்கள் சட்டத்தின் 119 (பி) பிரிவை மேற்கொள் காட்டி தேர்தல்கள் ஆணையாளரின் உத்தரவின் பிரகாரம் தேர்தல் அலுவல்கள் தொடர்பில் பொலிசார் செயற்பட வேண்டுமென சுட்டிக்காட்டினார்.

இத்தேர்தலை நீதியாகவும், சுதந்திரமாகவும் நடாத்துவதற்காக அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்பு தேர்தல்கள் திணைக்களத்திற்கு அவசியமெனவும் அதேபோன்று எந்தவோர் அழுத்தமுமின்றி பொதுமக்கள் தமது வாக்கை விருப்பத்தின் பிரகாரம் அளிப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமெனவும் அதற்காக பொறுப்புடனும் ,ஆர்வத்துடனும் அனைத்து தரப்பினரும் செயற்பட வேண்டுமெனவும் தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர், வேறு கலந்துரையாடுவதற்கான விடயங்கள் இருப்பின் சமர்ப்பிக்குமாறு தெரிவித்தார். சபையிலிருந்து அவ்வாறான எந்தவொரு பிரச்சினையும் முன்வைக்கப்படாத காரணத்தால் இன்றைய தின கலந்துரையாடலில் பங்கு கொண்ட அனைவருக்கும் மீண்டும் நன்றி தெரிவித்தார். கூட்ட அலுவல்கள் 1245 மணிக்கு நிறைவு செய்யப்பட்டது.

மஹிந்த தேசப்பிரிய.
தேர்தல்கள் ஆணையாளர்.

சனாதிபதித் தேர்தல் - 2015

போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் / முகவர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல். 2014.12.26

2014.12.26 ஆம் திகதி 1530 மணிக்கு போட்டியிடுகின்ற வேட்பாளர்கள்/ முகவர்களுடன் தேர்தல்கள் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்ட கலந்துரையாடல் குறிப்பு.

கலந்து கொண்டோர் :

1. திரு. அட்டலுகமமே ரஞ்சித்	- நவ சம சமாஜக் கட்சி
2. திரு. கே. மகேந்திரன்	- தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
3. திரு. வீரசிங்க ஆரச்சிகே சுனில்	- சோசலிச சமத்துவக் கட்சி
4. திரு. ஏ. ஸ்ரீநாத் ம. பெரேரா	- ஐக்கிய தேசியக் கட்சி
5. திரு. ஹேமந்த விக்கிரமசிங்க	- எமது தேசிய முன்னணி
6. திரு. அனுருந்த பொல்கம்பொல	- சனாதிபதி வேட்பாளர்
7. திரு. இந்திக்க கால்லகே	- ஜனநாயகக் கட்சி
8. திரு. ஏ.யூ.எம். மௌபீர்	- முகவர் (திரு. ஐ.எம். இல்யாஸ்)
9. திரு. எச்.பீ. துசித	- முகவர் (திரு. அனுருந்த பொல்கம்பல)
10. திரு. ஸ்ரீநாத் பெரேரா	- முகவர் (திரு. சிறிதுங்க ஜயசூரிய)
11. திரு. ருவன் எப். குருகே	- எமது தேசிய முன்னணி
12. திரு. சங்க த சில்வா	- எமது தேசிய முன்னணி
13. திரு. நிசாந்த ஸ்ரீவர்ணசிங்க	- ஜாதிக ஹெல உறுமய
14. திரு. சம்பானி பத்மசேகர	- ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி/ ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
15. திரு. அனுர ஜயசிங்க	- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
16. திரு. ஜயந்த குலதுங்க	- எக்ஸத் லங்கா மஹா சபா கட்சி
17. திரு. காமிணி ரணசிங்க	- எக்ஸத் லங்கா மஹா சபா கட்சி
18. திரு. கபில கமகே	- தேசிய சுதந்திர முன்னணி
19. திருமதி. சியாமலா பெரேரா	- புதிய ஜனநாயக முன்னணி
20. திரு. சலீல முணசிங்க	- புதிய ஜனநாயக முன்னணி
21. திரு. சபுமல் வலவ்வத்த	- ஸ்ரீ லங்கா தேசிய முன்னணி
22. திரு. ஐ. மிப்லார்	- ஐக்கிய சமாதான முன்னணி
23. திரு. ருவன் திலக்க பேதுருஆரச்சி	- எக்சத் லங்கா பொதுஜன பக்ஷய
24. திரு. விஜயதாச ராஜபக்ஷ	- புதிய ஜனநாயக முன்னணி
25. திரு. எஸ்வீ.சீ. அலெக்சாண்டர்	- ஸ்ரீ லங்கா தொழிலாளர் கட்சி
26. திரு. ஆர். யோகராஜன்	- ஐக்கிய தேசியக் கட்சி
27. திரு. சுசில் பிரேமஜயந்த	- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
28. திரு. சேபாலிகா கமகே வீரசிங்க	- ஜனசெத பெரமுண

29. திரு. தயா பெல்பொல - ஐக்கிய தேசியக் கட்சி
30. திரு. கே. மாரிமுத்து - இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (அரசியற் கிளை)
31. திரு. நிஹால் பிரேமகுமார - எக்சத் லங்கா பொதுஜன பக்ஷய
32. திரு. சரத் மனமேந்திர - நவ சிஹல உறுமய
33. திரு. ஹரேந்திர குணதிலக்க - ஜாதிக ஹெல உறுமய
34. திரு. எஸ்.எம். கிரிஷாந்த - முன்னிலை சோசலிஸ கட்சி
35. திரு. நுவன் போபகே - முன்னிலை சோசலிஸ கட்சி
36. திரு. அசாத் சாலி - தேசிய ஐக்கிய முன்னணி
37. திரு. உபுல் ஜயசூரிய - ஸ்ரீ லங்கா நீதிபதி சங்கம்
38. திரு. அஜித் பத்திரண - ஸ்ரீ லங்கா நீதிபதி சங்கம்
39. திரு. வைத்தியர் நந்த விஜேரத்ன - ஸ்ரீலங்கா தெட்டு புரவெசி சம்மேளனய
40. திரு. எஸ்.சீ. மாயாதுன்ன - இலங்கை தொழில் வல்லுனர்கள் சங்கம்

தேசிய கண்காணிப்பு அமைப்புக்களின் முகவர்கள் :

1. திரு. கீர்த்தி தென்னக்கோன் - சுதந்திரமானதுமானதும் நீதியானதுமான தேர்தலொன்றுக்கான அமைப்பு (CaFFE)
2. திரு. ஹர்ஷ குணசேன - சுதந்திரமானதுமானதும் நீதியானதுமான தேர்தலொன்றுக்கான அமைப்பு (CaFFE)
3. திரு. ரோஹன ஹெட்டியாரச்சி - சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL)
4. திரு. ரசங்க ஹரிச்சந்திர - தேசிய தேர்தல்கள் கண்காணிப்பு நிலையம் (NPOC)
5. திருமதி தயா ஹேரத் - இலங்கையின் அன்னையரும் புதல்வியரும் அமைப்பு
6. திரு. சான் விஜேதுங்க - டான்பெரன்சி இன்டர்நெசனல் ஸ்ரீலங்கா (TISL)
7. திரு. சந்திரசிறி த சில்வா - தேசிய தேர்தல்கள் கண்காணிப்பு நிலையம் (NPOC)
8. திரு. மஞ்சுல கஜநாயக்க - தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு நிலையம் (CMEV)

பொலிஸ் திணைக்களத்தின் அலுவலர்கள்

1. திரு. காமிணி நவரத்தின - சிரேட்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் (நிருவாகம்/ தேர்தல்கள்)
2. திரு. காமிணி திசாநாயக்க - பிரதி பொலிஸ் மாஅதிபர் (சட்டம்)
3. திரு. பீ.பி. நிக்கவெரட்டிய - பிரதி பொலிஸ் மாஅதிபர் (போக்குவரத்து மற்றும் தொடர்பாடல்) 4. திரு. எல்.எச்.டீ. குரே - பொலிஸ் அத்தியட்சகர் - கட்டளையிடும் அதிகாரி களப்படையணி

தேர்தல்கள் திணைக்களத்தின் அலுவலர்கள்

1. திரு. யூ. அமரதாச - மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (பாராளுமன்றம்)
2. திரு. ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க - மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் (உள்ளூராட்சி)
3. திரு. எம்.எம். மொஹமட் - மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் (சட்டம் மற்றும் விசாரணை)

தேர்தல்கள் ஆணையாளர் திரு. மஹிந்த தேசப்பிரிய அவர்களின் தலைமையில் 15.30 மணிக்கு கலந்துரையாடல் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டதுடன் பங்குபற்றிய அனைவரையும் தேர்தல்கள் ஆணையாளர் வரவேற்றார். அத்துடன் இன்றைய தினம் எந்த வேட்பாளர்கள்/ பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர் என்பதனை சபைக்கு அறிவித்தார்.

இன்றைய கலந்துரையாடலில் வழமையான கண்காணிப்பு அமைப்புக்களின் பிரதிநிதிகளுக்கு மேலதிகமாக கொழும்பு பல்கலைகழகத்துடன் இணைந்த கலாநிதி ஹேமசிறி குருப்பு அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "டெட்டு புரவெசி அமைப்பு", முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் திரு. சரத் மாயாதுன்ன அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள கற்றறிந்தோர் அமைப்பு மற்றும் இலங்கை சட்டத்தரணிகளின் சங்கத்தின் பிரதிநிதிகளையும் அழைத்துள்ளதாகவும் தனிப்பட்ட அரசியல் கருத்துக்களை கொண்டுள்ள இந்த மூன்று அமைப்புக்களும் அரசியலில் ஈடுபடாத அமைப்புக்கள் என நம்புவதாகவும் இங்கு சுட்டிக்காட்டிய தேர்தல்கள் ஆணையாளர் ஏதேனுமொரு விடயம் தொடர்பாக தமது கருத்துக்களை தெரிவிப்பதற்கு அவர்களுக்கு தேவையாயின் அவற்றை எழுத்துமூலமாக பெற்றுத்தர முடியுமாயின், அந்த விடயம் தொடர்பாக கலந்துரையாட முடியுமென தெரிவித்தார்.

02. ஒவ்வொரு வேட்பாளருக்கும் ஒத்துழைப்பு வழங்குவதற்காக பல்வேறு தரப்பினரால் கட்சி மாறுதல் அலுவல் நடவடிக்கைகளின் போது தேர்தல்கள் திணைக்களத்திற்கு பாரிய பிரச்சினையாக இருப்பதாகவும் இதன் காரணமாக வாக்கெண்ணும் நிலையங்களுக்கு பிரதிநிதிகளை நியமிக்கும் போது சிக்கல்கள் எழுவதுடன் அந்த பிரதிநிதிகளின் இறுதி பெயர்ப்பட்டியலை தயாரிக்க வேண்டியிருப்பதனாலும் இந்த மாறுதல்களை குறிப்பிட்ட ஒரு திகதியில் முடிவுறுத்திக் கொள்ளுமாறும் தேர்தல்கள் ஆணையாளர் கேட்டுக் கொண்டதுடன் அந்த குறிப்பிட்ட திகதியின் பின்னர் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கட்சி மாறுதல்களையும் பதிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதில்லையெனத் தெரிவித்தார். இது தொடர்பாக வேட்பாளர்களை அறிவுறுத்துமாறும் 2014.12.29 ஆம் திகதி நடாத்தப்படவிருக்கும் ஊடகக் கலந்துரையாடலின் போது இது சம்பந்தமாக அறிவிப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் மேலும் தெரிவித்தார். மேலும் இது சம்பந்தமாக பிரதான சனாதிபதி வேட்பாளர்கள் இருவருக்கும் கட்சி செயலாளர்களுக்கும் அறிவுறுத்துமாறு அனைத்து தரப்பினரிடமும் கோரப்பட்டது.

03. 2015 சனாதிபதித் தேர்தலின் அஞ்சல்மூல வாக்கெடுப்பு அனைத்து அரச நிறுவனங்களிலும் 2014.12.23 மற்றும் 24 ஆகிய இரு தினங்களில் நடாத்தப்பட்டதாகவும் அது தொடர்பாக குறிப்பிடத்தக்களவில் சிக்கல்கள் அறிக்கைப்படுத்தப்படாமை மகிழ்ச்சிக்குரிய விடயமெனவும் இங்கு சுட்டிக்காட்டிய தேர்தல்கள் ஆணையாளர் ஹோமாகம பிரதேசத்தில் மாத்திரம் ஒரு நிகழ்வு இடம்பெற்றதாகவும் தேர்தல் தினத்தில் போன்று அதிகாரம்பெற்ற பிரதிகளுக்கு/ பிரதேச பிரதிநிதிகளுக்கு/ வேட்பாளர்களுக்கு வாக்கெடுப்பு நிலையங்களுக்கு செல்வதற்கு அனுமதி இல்லாத போதும் அதுபற்றி அறிந்திராத சில தரப்பினர் அவ்வாறு நடந்து கொண்டமையின் காரணமாக அந்த நிகழ்வு ஏற்பட்டதாகவும் எவ்வாறாயினும் நிலைமையை இணக்கப்பாட்டிற்கு கொண்டுவர முடியுமாக இருந்ததாகவும் தெரிவித்தார்.

மேலும் வாகனமொன்றின் உதவியுடன் விளம்பர பத்திரமொன்றை பகிர்ந்து கொண்டிருந்த ஒரு தரப்பினர் சம்பந்தமாக பிரபல அரசியல்வாதி ஒருவரிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் செயற்பட்டு அந்த விளம்பர பத்திரங்களுடன் குறிப்பிட்ட வாகனத்தையும் கைது செய்வதற்கு முடியுமாகியதென தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பாக தனது கவலையை தெரிவித்தார். இரத்தினபுரி, மொறட்டுவை மறறும் அலவ்வ போன்ற இலங்கை போக்குவரத்து சபை டிப்போக்களில் அஞ்சல் வாக்கெடுப்பு தொடர்பாக சில அழுத்தங்களை பிரயோகிப்பதற்கு

ஒருசில தரப்பினரால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் அவற்றை முறியடிப்பதற்கு முடியுமாகியதெனவும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.

2014.12.26 ஆம் திகதி அதாவது இன்றைய தினம் அம்பாந்தோட்டை மாவட்ட பொலிஸ் நிலையங்களில் வாக்கெடுப்பு நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தாலும், பொலீஸ் திணைக்களத்தின் தொடர்பாடல் தவறு காரணத்தினால் நுவரெலியா, பதுளை போன்ற பிரதேசங்களின் அமைந்துள்ள பொலீஸ் நிலையங்களிலும் இன்றைய தினம் அஞ்சல்மூல வாக்கெடுப்பை நடாத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார். ஆனாலும் அந்த இடங்களில் அஞ்சல் வாக்கெடுப்பை கண்காணிப்பதற்காக பிரதிநிதிகள் அல்லது கண்காணிப்பு குழுக்கள் வருகைதராவிட்டால் அவர்கள் வரும் வரை வாக்கெடுப்பினை மேற்கொள்ள வேண்டாமென பணிப்புரை விடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டதுடன் குறிப்பிட்ட மாவட்டங்களின் உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களால் அந்த இடங்களுக்கு தேர்தல் அலுவலர்களை அனுப்பி அங்கு உரிய முறையில் அலுவல்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கையெடுத்தாகவும் இங்கு குறிப்பிட்டார்.

அத்துடன் தேர்தல் திணைக்களம் உட்பட அஞ்சல்மூல வாக்கெடுப்பை நடாத்துவதற்கு முடியாதுபோன ஏனைய அரச நிறுவனங்களின் அஞ்சல்மூல வாக்கெடுப்பை 2014.12.30 ஆம் திகதி மேற்கொள்ளவிருப்பதாகவும் இங்கு குறிப்பிட்டதுடன் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் தபால்மூல வாக்கெடுப்பு எந்தவித முறைப்பாடுகளுமின்றி நிறைவு செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார். எவ்வாறாயினும் சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அனைவரும் அருகிலுள்ள கிராமங்களில் வசிப்பவர்களாக இருப்பதனால் அவர்களுக்கு இலகுவாக தமக்குரிய வாக்கெடுப்பு நிலையங்களுக்கு சென்று வாக்களிப்பதற்கான வாய்ப்பு இருப்பதனாலும் அவர்கள் பொலீஸ் சீருடையில் கடமைகளில் ஈடுபடுவதற்கு இணைப்புச் செய்யப்படாமையினாலும் அவர்களுக்கென அஞ்சல் வாக்கெடுப்பை நடாத்துவதற்கு மேற்கொள்ளப்படும் செலவு பயனற்றதென தெரியவருவதனால் அடுத்த தேர்தலின் போது அவர்களுக்கு அஞ்சல்மூல வாக்கெடுப்பிற்கான வாய்ப்பு வழங்குவதாயின் சிரேட்ட பிரதி பொலீஸ் மா அதிபரின் பரிந்துரையின் அடிப்படையில் மாத்திரம் வழங்குவதற்கு கொள்கை ரீதியிலான தீர்மானமொன்றை எடுப்பதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் கருத்து தெரிவித்தார்.

மேலும் அப்பிரதேசங்களில் அஞ்சல்மூல வாக்கெடுப்பை நடாத்துவதற்கான முந்திய தினம் அதற்கான பணிப்புரைகளை வழங்கியவாறு தேர்தல்கள் திணைக்களத்தினால் அறிவுறுத்தும் நிகழ்ச்சி நடாத்தப்பட்டதாகவும் அப்பிரதேசங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்ட கௌரவ ரஜீவ் விஜேசிங்க மற்றும் கௌரவ வசந்த சேனாநாயக்க ஆகியோர் இந்த விடயம் தொடர்பாக தமது பாராட்டுக்களை தெரிவித்துள்ளதாக அறியக் கிடைப்பதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் தெளிவுபடுத்தினார்.

அதற்கமைய சிவில் பாதுகாப்பு சேவை உத்தியோகத்தர்களின் அஞ்சல்மூல வாக்கெடுப்பு நடவடிக்கைகளை சிறப்பான மேற்பார்வை மற்றும் முறையாக மேற்கொள்வதற்கு இயலுமாகியமை சம்பந்தமான இந்த கலந்துரையாடல்களின் போது கருத்து தெரிவித்த இலங்கை தமிழ் அரசுக் கட்சியை சேர்ந்த திரு. எம்.ஏ. சுமந்திரன் அவர்களுக்கும் தேர்தல்கள் ஆணையாளர் தனது நன்றிகளை இங்கு தெரிவித்தார்.

04. சில இலங்கை போக்குவரத்து சபை பஸ் வண்டிகளில் இதுவரைக்கும் நிகழ்கால சனாதிபதி அவர்களுக்கு நன்மை பயக்கும் வகையிலான போஸ்டர்களை காணமுடியுமாக இருப்பதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுவதனால் இந்த விடயம் சம்பந்தமான ஆர்வம் காட்டும் எந்தவொரு தரப்பினருக்கும் நீதிமன்ற நடவடிக்கைகளை எடுக்க முடியுமெனவும் ஹொரணை, மத்துகம, களுத்துறை போன்ற இடங்களில் இவ்வாறான நிலைமைகள் இருப்பதாக அறியக் கிடைத்திருப்பதனால் இவற்றை தடுப்பதற்கு முடியுமான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென ஆணையாளர் தெரிவித்தார். அத்துடன் அஞ்சல்மூல வாக்கெடுப்பு அலுவல்களில் ஈடுபடும் அலுவலர்களின் போக்குவரத்திற்காக இலங்கை போக்குவரத்து சபையினால் தேர்தல்கள் திணைக்களத்திற்கு வழங்கியிருந்த பஸ் வண்டிகளிலும் போஸ்டர் ஒட்டுவதற்கு பயன்படுத்திய பசை மற்றும் தூரிகைகளை

காணக்கூடியதாக இருந்ததாகவும் இது மிகவும் கவலைக்குரிய நிலைமை எனவும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.

05. சனாதிபதி வேட்பாளர் திரு. பிரசன்ன பிரியங்கர அவர்களின் பிரதிநிதியாக அலுவல் மேற்கொள்ளும் திரு.அனுர சொய்ஸா என்பவர் தாக்கப்பட்டுள்ளதாக அறியக் கிடைத்திருப்பதாகவும் ஆனாலும் அது தொடர்பாக இதுவரை பாதிப்புக்குட்பட்ட தரப்பினரிடமிருந்து முறைப்பாடு முன்வைக்கப்படவில்லை எனவும், எனினும் இது தொடர்பாக காலி பொலீஸ் நிலையத்திடம் வினவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் ஆணையாளர் தெரிவித்தார்.

06. பெரியளவிலான பதாதைகளை காட்சிப்படுத்தியவாறு நிட்டம்புவ பிரதேசத்தில் நடாத்தப்பட்டுவந்த போலியான கட்சி அலுவலகமொன்றின் பதிவை இரத்துச் செய்து அதற்காக வழங்கப்பட்டிருந்த அனுமதிப் பத்திரத்தை அகற்றிக்கொள்ளுமாறு வாய்மூலமாக அறிவித்திருந்த போதிலும் அந்த கட்டளையை கவனத்தில் கொள்ளாது அந்த அலுவலகத்தை தொடர்ந்தும் நடாத்திவருவதற்கு அரசியல்வாதியொருவர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதுடன் அச்சந்தர்ப்பத்தில் அதனை அகற்றுவதற்கு அங்கு சென்றிருந்த உத்தியோகத்தர்களை தடுத்து வைப்பதற்கு அந்த அரசியல்வாதி நடவடிக்கை மேற்கொண்டமை வெட்கப்பட வேண்டிய விடயமென தெரிவித்த தேர்தல் ஆணையாளர் இவ்வாறு அதிகளவில் சுவரொட்டிகள்/ பதாதைகளை காண முடியுமாகவிருக்கும் கம்பஹா போன்ற பிரதேசங்களில் அவற்றை அகற்றுவதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால் எதிர்வரும் வாரங்களில் தேர்தல் திணைக்களத்தினால் அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென தெரிவித்தார்.

தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர்களூடாக சுவரொட்டிகள்/ பதாதைதகள்/ அறிவித்தல்கள் என்பவற்றினுடாக காட்சிப்படுத்தப்படும் வேட்பாளர்களின் முகங்களை மறைப்பதற்கு அல்லது அவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாமெனவும் அதன் மூலம் அந்த பிரபுக்களைப் போன்றே தேர்தல் திணைக்கள அதிகாரிகளும் சிரமத்திற்கு ஆளாகுவதாக குறிப்பிட்டு இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் ஜே.பீ. கமகே என்பவர் தனக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளதாக தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் மேலே குறிப்பிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் அந்த கடிதத்திற்கிடையில் ஏதேனுமொரு தொடர்பு இருப்பதாக சந்தேகிக்க முடியுமெனவும் இன்றைய தினத்தினுள் இந்த நிலைமையை இயல்பு நிலைக்கு கொண்டு வராவிட்டால் இந்த கடிதத்தை முறைப்பாடொன்றாக பொலிசுக்கு சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

07. சில வெளிநாட்டு தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்புகள் தற்போது இலங்கைக்கு வருகை தந்துள்ளதுடன் அவர்களுக்கு வடமாகாணத்திற்கு கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கான அனுமதியை (MOD Clearance) பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் இங்கு தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்ததுடன் தெற்காசிய தேர்தல்கள் அதிகாரிகள் சங்கத்தின் (Fembosa) கண்காணிப்பு அமைப்பின் 30 உத்தியோகத்தர்கள் கலந்துகொள்வதாகவும் அக்குழுவின் தலைவராக நேபாளத்தின் தலைமை தேர்தல் ஆணையாளர் திரு.சஹாப்தீன் யாகூப் குரெசி அவர்கள் பணியாற்றுவதாகவும் பொதுநலவாய அமைப்பின் தேர்தல் கண்காணிப்பு குழுவிற்கு கயானாவின் முன்னாள் சனாதிபதி அவர்கள் தலைமை வகிப்பதாகவும் இங்கு குறிப்பிட்டதுடன் உள்நாட்டு தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்புக்களான PEFFRAL மற்றும் CMEV அமைப்புக்களும் சில வெளிநாட்டு கண்காணிப்பு குழுக்களை இங்கு அழைத்துவரவிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டது. மேலும் இதற்கு முன்னர் நடைபெற்ற தேர்தல்கள்/ வாக்கெடுப்புக்களின் போது இலங்கையில் தேர்தல்கள்/ வாக்கெடுப்புக்கள் தொடர்பாக பாராட்டுக்களைத் தெரிவித்த தாய்வானின் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கும் இம்முறை சனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு தேர்தல் திணைக்களத்தினால் அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் “One Chine” எனும் கொள்கை நடைமுறைப்படுத்துவதன் காரணமாக அந்த அமைப்புக்கு இந்த நாட்டிற்கு வருவதற்கான வாய்ப்பு இல்லையெனவும் குறிப்பிடப்பட்டது.

பொதுநலவாய அமைப்பில் தேர்தல் கண்காணிப்பு குழு அங்கத்தவர்களில் கண்காணிப்பு நடவடிக்கைகள் மீது தேர்தல் திணைக்களத்தின் நேரடி தொடர்பு இல்லாதிருப்பதுடன் அவர்களுக்கு வடக்குப் பிரதேசத்தில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு தேவையான அனுமதி மாத்திரம் தேர்தல் திணைக்களத்தினால் வழங்கப்பட்டதாகவும் அவர்கள் தேர்தல் திணைக்களத்தின் வாகனங்கள் அல்லது மொழிபெயர்ப்பாளர்களை அவர்களது அலுவல்களுக்காக பயன்படுத்திக் கொள்வதில்லையெனவும் எனவே அவர்களுடன் அலுவல் மேற்கொள்வதற்கு தேவையான தரப்பினர் இருப்பின் அதற்கான ஒருங்கிணைப்பை தேர்தல் திணைக்களத்தினூடாக மேற்கொள்ளாது சுயாதீனமாக பேணிவருமாறும் தேர்தல் ஆணையாளர் இங்கு அனைத்து தரப்பினருக்கும் அறிவித்தார்.

08. தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் தொடர்பில் சுயாதீன தொலைக்காட்சி சேவை மற்றும் ஏனைய ஊடகங்களின் செயற்பாடுகள் சம்பந்தமாக கவனமாகவிருந்து தமக்கு அறிக்கைப்படுத்துமாறும் அனைத்து தரப்பினரையும் அறிவுறுத்துவதாகவும் ஆனாலும் எந்தவொரு தரப்பினரும் அதுதொடர்பான விடயங்களை இதுவரை சுட்டிக்காட்டவில்லையெனவும் இங்கு தெரிவித்த தேர்தல் ஆணையாளர் இது சம்பந்தமாக சுயாதீன தொலைக்காட்சி சேவையின் தலைவரிடம் வினவியதுடன் தமது தொலைக்காட்சி சேவை கருத்து தெரிவிக்கும் சுதந்திரத்தை நடைமுறைப்படுத்துவதாகவும் தேர்தல் ஆணையாளருக்கு கிடைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் யாவை? எனவும் அது சம்பந்தமாக வினவுவதற்கு தேர்தல் ஆணையாளருக்கு இருக்கும் சட்டரீதியான அதிகாரம் என்ன என்பது பற்றியும் அந்த தொலைக்காட்சி சேவையில் தலைவர் கேள்வி எழுப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. எவ்வாறாயினும் தேர்தலின் வெளிப்படைத்தன்மை மற்றும் பரிசுத்தம் தொடர்பாக தமக்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியேற்படுவதாக குறிப்பிட்ட தொலைக்காட்சி சேவைக்கு அறிவிப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் அத்துடன் அந்த தொலைக்காட்சி சேவையை வேட்பாளர் ஊக்குவிப்பு செயற்பாடு சம்பந்தமாக கவனமாக கண்காணித்து எழுத்து மூலமாக தமக்கு அறியத்தருமாறு மீண்டும் அறிவித்தார்.

இங்கு கருத்து தெரிவித்த சட்டத்தரணி ஸ்ரீநாத் பெரேரா, சுயாதீன ரூபவாஹினி சேவையைப் போன்றே இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனமும் தீவிரமாக பக்கச்சார்பு கொள்கையுடன் செயற்படுவதாகவும் நியாயமான பண்பட்ட மக்கள் அவ்வாறான ஊடகங்களை பயன்படுத்தக் கூடாதெனவும் தெரிவித்தார். இங்கு தனது கருத்தை தெரிவித்த தேர்தல் ஆணையாளர் 18வது அரசியல் அமைப்பு திருத்தத்தினூடாக ஊடகக் கட்டுப்பாட்டுக்கு மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரியை நியமிப்பதற்காக தேர்தல் ஆணையாளரிடம் காணப்பட்ட அதிகாரம் நீக்கப்பட்டுள்ளதாகவும் 18 வது அரசியல் அமைப்புத் திருத்தத்திற்கு பங்களிப்பு செலுத்திய அனைத்து தரப்பினரும் இதில் பங்களிப்பு செலுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

09 தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக விளையாட்டு மைதானங்களை ஒதுக்கிக்கொள்ளும் போது எழுந்த பல்வேறு இடையூறுகளை நீக்கிக்கொள்வதற்கு தலையிட்டு நடவடிக்கை மேற்கொண்டமை சம்பந்தமாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் சனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் பிரதிநிதி திரு.சுசில் பிரேம ஜயந்த் அவர்களுக்கும் ஐக்கிய மக்கள் சுந்திர முன்னணியின் பிரதிநிதி திரு.அநுர ஜயசிங்க அவர்களுக்கும் தனது நன்றியை தெரிவித்த தேர்தல் ஆணையாளர் சில விளையாட்டு மைதானங்களை ஒதுக்கி தரமுடியாதென பொலிசாரால் அறிவிக்கப்பட்ட இடங்களில் எழுந்த சிக்கல்களையும் இவ்விருவரின் தலையீட்டினால் தீர்த்துக்கொள்வதற்கு முடியுமாகியது எனவும் இங்கு பாராட்டி கருத்து தெரிவித்தார்.

சில அரசியல் செயற்பாட்டாளர்களுக்கு சில இடங்களில் விளையாட்டு மைதானங்களை ஒதுக்கிக்கொள்வதற்கு சிரமமான சந்தர்ப்பங்களில் தாம் அவற்றைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டதாகவும் பிந்திய காலங்களில் அந்த அரசியல்வாதிகள் இதனை கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு தேர்தல் ஆணையாளர் மூலமாக அடைந்து கொண்டதாக ஊடகங்களுக்கு பொய்யான அறிக்கைகளை வெளியிட்டு இருப்பதனை காணக்கூடியதாகவிருப்பதனால் தொடர்ந்தும் சிலதரப்பினர் இவ்வாறு நடந்து

கொண்டால் விளையாட்டு மைதானங்களை ஒதுக்கி தருவதற்கு எதிர்காலத்தில் தாம் தலையீட்டை மேற்கொள்வதில்லையெனவும் தெரிவத்தார்.

சட்டத்தரணி ஸ்ரீநாத் பெரேரா அவர்கள் இங்கு கருத்து தெரிவிக்கையில் பிரச்சார நடவடிக்கைகளுக்கு விளையாட்டு மைதானங்களை ஒதுக்கிக்கொள்வது தொடர்பாக பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டியேற்படுவதாகவும் சனாதிபதி அவர்களின் கூட்டங்கள் தவிர்ந்த ஏனைய எந்த தரப்பினருக்கும் கூட்டங்களை நடாத்துவதற்காக விளையாட்டு மைதானங்களை ஒதுக்கித்தருவதில்லையென சில பிரதேச சபை தலைவர்கள் நேரடியாக தெரிவிப்பதாகவும் எஹலியகொட, வெள்ளவத்தை ஆகிய இடங்களிலும் இவ்வாறான சிக்கல்கள் நிலவுவதாகவும் தெரிவித்தார். அதுதொடர்பாக கருத்து தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் அவ்வாறு நியாயமற்ற முறையில் விளையாட்டு மைதானங்களை பெற்றுத்தராவிட்டால் அதுபற்றி செய்திப் பத்திரிகைகளூடாக அறிவித்தல் விடுப்பதற்கு முடியுமெனவும் எவ்வாறாயினும் அவ்வாறான சிக்கல்கள் நிலவும் இடங்கள் இருப்பின் எழுத்து மூலமாக அறிவிக்குமாறும் அப்போது அவற்றை பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித்தர முடியுமெனவும் தெரிவித்தார். அத்துடன் பிரச்சார கூட்டங்களுக்காக பெரியளவிலான மைதானங்களை ஒதுக்கிக்கொள்ளும் போது கூட்டத்தில் கலந்துகொள்ளும் மக்கள் சம்பந்தமாக கவனம் செலுத்துமாறும் குறிப்பிடத்தக்களவு மக்கள் பங்கு பற்றாவிட்டால் பெரிய மைதானங்களை ஒதுக்கிக்கொள்ள வேண்டாமெனவும் தேர்தல் ஆணையாளர் இங்கு அனைத்து தரப்பினரிடமும் வேண்டிக்கொண்டார்.

10. தேர்தல் சட்டங்களை மீறி அனேகமான மாகாணங்களின் வேட்பாளர்களை ஊக்குவிக்கும் போஸ்டர்கள் காட்சிப்படுத்தப்படுவதாகவும், அங்கு போஸ்டர்களை காட்சிப்படுத்தும் ஆதரவாளர் மாத்திரமின்றி குறிப்பிட்ட வேட்பாளரும் சட்டத்தை மீறுவதாக பிரசித்திப்படுத்த வேண்டியேற்படுமெனவும் எவ்வாறாயினும் சட்டத்தை செயல்வலு செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளை எடுப்பதாகவும் இங்கு தேர்தல் ஆணையாளர் கருத்து தெரிவித்தார்.

11. சில தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் பக்கச்சார்பாக செயற்படுவதாக தெரிவித்து இலங்கை சுயாதீன சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் திரு.டி.பி.மெண்டிஸ் அவர்களால் முன்வைக்கப்பட்ட கடிதம் கடந்த கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டதன் பிரகாரம் அது சம்பந்தமாக கவனத்திற்கொள்ளப்பட்டு அந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு திரு.டி.பீ.மெண்டிஸ் அவர்கள், இலங்கை சுயாதீன சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் திரு.சம்பானி பத்மசேகர மற்றும் பொருளாளர் திரு.சாலிய மெத்திவ், ஜக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதிநிதி திரு. அநுர ஜயசிங்ஹ, திரு.சாந்த ஹேரத், திரு.சுமித் விஜேசிங்ஹ மற்றும் திரு. பாலித கமகே உட்பட சிரேட்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் திரு. காமிணி நவரத்ன (நிருவாகம் மற்றும் தேர்தல்கள்) ஆகியோருடன் கலந்துரையாடுவதற்கு எதிர்பார்ப்பதாகவும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களுடன் கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பமொன்று அவசியமென இதற்கு முன்னர் அறிவித்துள்ளமையினால் திரு.ரவிகருணாநாயக்க அவர்களையும் அழைக்க முடியுமெனவும் அதற்கான திகதி மற்றும் நேரத்தை ஒதுக்கிக்கொள்ளுதல் பொருத்தமெனவும் தேர்தல்கள் ஆணையாளர் தெளிவுபடுத்தினார். இங்கு ஸ்ரீநாத் பெரேரா அவர்கள் எந்தவொரு தேர்தல் கண்காணிப்பு அமைப்பினால் பக்கச்சார்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதென்பனை அறிந்துகொள்ளுதல் முக்கியமாகையினால் ஏனைய பிரதிநிதிகளுக்கும் இந்த உள்நாட்டு/ வெளிநாட்டு கண்காணிப்பு அமைப்புக்களுடன் மேற்கொள்ளப்படும் இந்த கலந்துரையாடலில் பங்குபற்றுவதற்கு வாய்ப்புக் கிடைத்தால் மிகவும் பொருத்தமாகவிருக்குமென தெரிவித்தார். ஆனாலும் அனேகமானோரை ஒரே தடவையில் அழைத்து கலந்துரையாடுவதற்கு நீண்ட நேரம் எடுப்பதனால் இந்த விடயங்கள் சம்பந்தமாக ஏனைய தரப்பினரை பின்னர் அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார். வெளிநாட்டு கண்காணிப்பாளர்களுடன் கலந்துரையாடுவதற்கான தேவை நிலவும் தரப்பினர் இருப்பின் குறிப்பிட்ட விடயங்களை எழுத்து மூலமாக முன்வைக்குமாறு இதற்கு முன்னர் வாய்ப்பு

வழங்கப்பட்டிருந்தாலும் ஒரு கட்சியை தவிர வேறு எந்த தரப்பினரும் அவ்வாறு விடயங்களை முன்வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லையெனவும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார். 8 வெளிநாட்டு கண்காணிப்பு அமைப்புக்கள் கலந்துரையாடலில் பங்குபற்றியதாகவும் அவர்களுடன் கலந்துரையாடலில் நவ ஜனநாயக முன்னணியின் சனாதிபதி வேட்பாளரின் பிரதிநிதி சட்டத்தரணி விஜேதாச ராஜபக்ஷ மற்றும் சனாதிபதி சட்டத்தரணி லோரன்ஸ் பெரேரா ஆகியோர் மாத்திரம் பங்குபற்றினார்களெனவும் தெரிவித்தார். இங்கு லோரன்ஸ் பெரேரா அவர்களும் இதில் கலந்துகொண்ட சாந்த ஹேரத் அவர்களும் விடயங்களை முன்வைத்ததுடன் எந்தவொரு தரப்பினருக்கும் விடயங்களை முன்வைக்க வேண்டியிருப்பின் சிங்கள மொழியிலெனில் 2014.12.22 ஆந் தேதியும், ஆங்கில மொழியிலெனில் 2014.12.22 ஆந் தேதிக்கு முன்னரும் முன்வைக்குமாறு அறிவித்திருந்த போதிலும் அவ்வாறு முன்வைக்கப்படாமைக்கு காரணமாக கண்காணிப்புக் குழுக்களுடன் கலந்துரையாடுவதற்கான வாய்ப்பை கலந்துரையாடலில் பங்குபற்றுவதற்கு தமது விருப்பத்தை தெரிவித்த தரப்பினருக்கு மாத்திரம் வழங்கமுடியுமாகவிருந்ததாக தேர்தல் ஆணையாளர் இங்கு தெரிவித்தார்.

12. மஹிந்தோதய பாடசாலைகளை திறந்து வைக்கும் வைபவங்களின் போது அரசியல் ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருக்குமாறு தேர்தல் ஆணையாளர் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன அவர்களிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கமைய மஹிந்தோதய பாடசாலைகளை திறந்து வைக்கும் வைபவங்களையும் தேர்தல் நடவடிக்கைகள் நிறைவு பெறும் வரை ஒத்திவைப்பதற்கு அமைச்சர் நடவடிக்கை மேற்கொண்டமை மிகவும் பாராட்டத்தக்க விடயமெனவும் அது சம்பந்தமாக தாம் அமைச்சருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார். அத்துடன் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடுவது சம்பந்தமாக வினவப்பட்டதாகவும் பரீட்சையில் உயர் பெறுபேறுகளைப் பெற்ற மாணவ மாணவிகளை சனாதிபதியிடம் அழைத்து செல்லும் போது அதனூடாக தற்போதைய சனாதிபதியை ஊக்குவிக்கும் ஏதேனும் ஒரு விடயம் நிகழாவிட்டால் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதில் எந்தவித பாதிப்பும் இல்லையென தேர்தல் ஆணையாளர் சபையில் அறிவித்ததற்கமைய தேர்தல் காரணமாக பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடுவதை இடைநிறுத்துவதற்கான தேவையில்லையெனவும் அதனூடாக மாணவர்களை சிரமத்திற்கு உள்ளாக்கக்கூடாதெனவும் சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

13. இங்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதிநிதி திரு. அனுர ஜயசிங்ஹ அவர்கள் கருத்து தெரிவிக்கையில், தற்போது ஏற்பட்டுள்ள வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தம் காரணமாக தேசிய அடையாள அட்டைகளை இழந்த வாக்காளர்களுக்கு தற்காலிகமாக வழங்கப்படும் அடையாள அட்டையை வெளியிடும் காலத்தை நீடிப்பதற்கான வாய்ப்பிருக்கின்றதா என வினவினார். தேசிய அடையாள அட்டையில்லாத வாக்காளர்களுக்கு தற்காலிக அடையாள அட்டையை வழங்கும் காலம் 2014.12.31 ஆந் தேதியுடன் முடிவடையவிருந்தாலும் தற்போதைய நிலைமையை கவனத்திற்கொண்டு அந்த திகதி 2015.01.03 ஆந் தேதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் கருத்து தெரிவித்தார்.

தேசிய அடையாள அட்டை இல்லாத வாக்காளர்களுக்கு தற்காலிக அடையாள அட்டையை வெளியிடும் திகதி 2014.12.31 ஆம் திகதியுடன் முடிவடைய இருந்த போதிலும் தற்போதைய நிலைமையை கவனத்தில் கொண்டு அத்திகதியை 2015.01.03 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் பதிலளித்தார்.

14. இங்கு கேள்வியொன்றை எழுப்பிய திரு.அனுர ஜயசிங்க, கட்சி அலுவலகங்களில் டிஜிட்டல் திரைகளை காட்சிப்படுத்துதல் தொடர்பாக வினவியதுடன் மாவட்ட அலுவலகங்களில் மாத்திரம் டிஜிட்டல் திரைகளை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்க முடியுமாயின், அது மிகவும் வசதியாகயிருக்குமெனவும் ஏனைய அரசியல் கட்சிகளின் கருத்துக்களை வினவி இது தொடர்பில் ஒரு தீர்மானத்தை எடுத்தல் பொருத்தமெனவும் தெரிவித்தார். இந்த திரைகளை குறிப்பிட்ட மாவட்ட அலுவலகங்களினுள் மாத்திரம் காட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். இங்கு

கருத்து தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் இந்த டிஜிட்டல் திரைகளை அனுமதிக்கப்பட்ட மாவட்ட அலுவலகங்களில் மாத்திரம் பயன்படுத்துதல் பாதிப்பில்லை. எனினும் இவற்றை பொதுமக்களுக்கு மற்றும் சாரதிகளுக்கு இயைூறு விளைவிக்காத வகையில் பயன்படுத்த வேண்டியுள்ளதுடன் அவ்வாறு இடையூறு விளைவிப்பதாக தெரியவரின் அவற்றை நீக்குவதன் கீழ் அனுமதி வழங்க முடியுமெனவும் தெரிவித்தார். எவ்வாறாயினும் இந்த டிஜிட்டல் திரைகளில் தற்போதைய சனாதிபதி அவர்களின் அல்லது ஏனைய வேட்பாளர்களின் உருவங்களையோ கட்சி சின்னத்தையோ காட்சிப்படுத்துவதற்கு இடமளிக்கப்பட மாட்டாதெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுடன் இந்த டிஜிட்டல் திரைகளை காட்சிப்படுத்துதல் அவசியமில்லையெனவும் சில தரப்பினர் கருத்து தெரிவித்தனர். எவ்வாறாயினும் இது தொடர்பாக எதிர்காலத்தில் மேலும் கலந்துரையாடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

கொழும்பு நகரை அண்டிய வகையில் காட்சிப்படுத்தப்பட்ட அறிவித்தல் பலகைகள் (Bill Boards) ஊடாக தற்போதைய சனாதிபதி அவர்களை ஊக்குவிப்பதற்கு துணை புரியும் விதத்திலான அறிவித்தல்கள் காட்சிப்படுத்தப்பட்டமையினால் அவற்றை அகற்ற வேண்டியேற்பட்டதெனவும் இங்கு தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார்.

15. இதன் பின்னர் இன்றைய தினம் கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்கள் மீது சபையின் கவனத்திற்குக் கொண்டு வந்த தேர்தல்கள் ஆணையாளர், மிக நீண்ட காலமாக நடாத்தப்பட்டு வரும் மறைந்த திரு.காமினி அத்துகோரள அவர்களை நினைவுகூறும் முகமாக அப்பியாச கொப்பிகளை வழங்கும் வைபவத்தை வழங்குவதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும் அதற்கு அனுமதி வழங்குவதாகவும் தெரிவித்தார்.

16. அத்துடன் மிக முக்கிய விடயமொன்றின் மீது சபையின் கவனத்திற்கு கொண்டுவந்த தேர்தல்கள் ஆணையாளர், திரு.திஸ்ஸ அத்தநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியின் பொது செயலாளர் பதவியிலிருந்து இராஜினாமா செய்த கடிதத்தை அவரது பாராளுமன்ற முத்திரையைப் பயன்படுத்தி அஞ்சலில் அனுப்புவதற்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் தயார்செய்து கொண்டிருந்ததுடன் அந்த கடிதங்களை அவற்றை எழுதி கொண்டிருக்கும் போதே கைப்பற்ற முடியுமாகவிருந்ததாக இது தொடர்பாக புதிய ஜனநாயக முன்னணியின் முறைப்பாட்டு பிரிவு தலைவர் திரு.ரஜீவ் சேனேவிரத்ன, PEFFRAL அமைப்பு மற்றும் ஏனைய கண்காணிப்பு அமைப்புக்களும் இது தொடர்பில் முறைப்பாடுகளை முன்வைத்ததாகவும் அதற்கமையவே இவ்வாறு அக்கடிதங்களை கைப்பற்ற முடியுமாகவிருந்ததாகவும் தெரிவித்தார்.

அத்துடன் இது தொடர்பாக தொடர்ந்தும் விடயங்களை முன்வைத்த தேர்தல்கள் ஆணையாளர் ஐக்கிய தேசியக் கட்சியில் உட்பூசல்கள் நிலவுவதாகக் குறிப்பிடப்பட்டு அச்சிடப்பட்ட புத்தகமொன்று மகரகம பிரதேசத்தின் அச்சகமொன்றில் அச்சிடப்பட்டுக்கொண்டிருக்கையில் கைப்பற்ற முடியுமாக இருந்ததாகவும், அங்கு, அந்தப் புத்தகங்களில் சுமார் 50,000 புத்தகங்கள் கைப்பற்றப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக மகரகம பொலீஸில் தடுத்துவைத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

சுமார் 100 கோடி ரூபா பெறுமதிமிக்க சீலங்காக்கும்போது அணியும் ஆடைகளை எதிர்வரும் போயா தினமன்று பகிர்ந்தளிப்பதற்கு தயாராகுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும், அது மிகவும் பிரசித்தமான தேரர் ஒருவர் மேற்கொள்வதாக காண்பித்து இந்த நடவடிக்கையை விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் கைத்தொழில் அமைச்சின் ஊடாக செலவிடப்பட்டு மேற்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாக அறியக் கிடைத்துள்ளதாகத் தெரிவித்த ஆணையாளர் அவர்கள், அந்த சீலங்காக்கும் துணிகளை 2015 ஜனவரி மாதம் வரும் போயா தினத்தில் மேற்கொள்ள வேண்டாமெனவும், அதனை பின்னர் பகிர்ந்தளிக்கலாமெனவும் அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

நுவரெலியா நகரில் கைவிடப்பட்டுள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான சில கட்டிடங்களை அமைச்சர் சீ.பீ.ரத்நாயக்க அவர்களின் அலுவலகங்களை அமைப்பதற்குப்

பயன்படுத்தியிருத்தல் சம்பந்தமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அது தொடர்பாக கண்டறிந்து அரசாங்கத்திற்குச் சொந்தமான கட்டிடங்களில் அமைக்கப்பட்டுள்ள அலுவலகங்களை அகற்றிக்கொள்ளுமாறு உரிய தரப்பினருக்கு அறிவிக்குமாறும் இங்கு தேர்தல் ஆணையாளர் சுசில் பிரேமஜயந்த் அவர்களிடம் வேண்டிக்கொண்டார்.

அத்துடன் இராணுவத்தினால் ஒரு வேட்பாளரை ஊக்குவிக்கும் வகையிலான கடிதமொன்றை தபாலில் அனுப்புவதற்கு தயாராக வைத்திருப்பதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடு விசேட கவனத்திற்கு உட்படுத்தப்பட வேண்டியதொன்றாக இருப்பதாகவும் இது சம்பந்தமாக PEFFRAL அமைப்பைப் போன்றே TI (Transparency International) அமைப்பினாலும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் வேறு இராணுவம் அல்லாத சிவில் அமைப்பொன்றுக்கும் இந்தக் கடிதம் கிடைக்கப்பெற்றாலும் அவர்கள் அதனை முன்வைப்பதிலிருந்து தவிர்ந்திருப்பதற்கு தீர்மானித்துள்ளதாக அறியக் கிடைப்பதாகவும் இது சம்பந்தமாக அஞ்சல் மா அதிபருக்கு தெளிவுபடுத்தி தேர்தல் காலத்தின் பின்னர் அவற்றை தபாலிலிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவித்தல் விடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

17. இராஜகிரிய HSBC இற்கருகில் தற்போதைய ஜனாதிபதியவர்களின் உருவப்படத்தை காட்சிப்படுத்தியவாறு நடாத்தப்பட்டுவரும் அலுவலகமொன்று சம்பந்தமாக இச் சந்தர்ப்பத்தில் விடயங்களை முன்வைத்த புதிய ஜனநாயகக் கட்சியின் பிரதிநிதி திருமதி ஷாமிலா பெரேரா சட்ட விரோதமான விதத்தில் அந்த அலுவலகம் நடாத்தப்பட்டு வருமாயின் அதனை அகற்றுவதற்கு உடனடியாக சுட்டிக் காட்டினார். அது சம்பந்தமாக கண்டறிந்து அது அங்கீகரிக்கப்பட்ட அலுவலகம் இல்லாவிடின் அதனை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உதவித் தேர்தல்கள் ஆணையாளருக்கு (பாராளுமன்றம்) தேர்தல்கள் ஆணையாளர் பணிப்புரை விடுத்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த திருமதி ஷாமிலா பெரேரா சட்டத்தின் பிரகாரம், வேட்பாளர் பயணிக்கும் வாகனங்களில் மாத்திரமே பிரசார போஸ்ட்டர்களை காட்சிப்படுத்த முடியுமாயினும் வேறு வாகனங்களிலும் வேட்பாளரை ஊக்குவிக்கும் வகையில் ஸ்டிக்கர் / போஸ்ட்டர்கள் காட்சிப்படுத்தப்படுவதாகவும் தெரிவித்ததுடன் GG - 2872 வாகனமும் அவ்வாறு சட்ட விரோதமாக போஸ்ட்டர்களை காட்சிப்படுத்தியவாறு பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதனை தாம் அவதானித்ததாக தெரிவித்தார்.

பல்வேறு வாகனங்களில் வேட்பாளரை ஊக்குவிக்கும் வகையில் ஸ்டிக்கர் / போஸ்ட்டர்கள் காட்சிப்படுத்தப்படுவதாக முறைப்பாடுகளை முன்வைத்துள்ள போதிலும் எந்தவொரு தரப்பினரும் அவ்வாறான வாகனங்கள் பற்றிய தகவல்களை வழங்கவில்லை. திருமதி ஷாமிலா பெரேரா அவர்கள் இது தொடர்பாக அவதானமாக இருந்து அறிவித்தமையைப் பாராட்டுவதாக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்தார். இவ்வாறான சட்ட விரோத செயற்பாடுகளில் ஈடுபடும் வாகனங்கள் இருப்பின் இது தொடர்பாக தேர்தல்கள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு அல்லது Tell Commissioner ஊடாக அல்லது தொலைபேசி ஊடாக அல்லது பெக்ஸ் ஊடாக அறிவிக்குமாறு அனைத்துப் பிரஜைகளுக்கும் செய்திப் பத்திரிகை அறிவித்தல் ஊடாக அறிவித்துள்ளதாகவும் இங்கு மேலும் தெளிவுபடுத்தப்பட்டது.

இச்சந்தர்ப்பத்தில் திரு.ஆர்.யோகராஜா அவர்கள், தாம் 2014.12.07 ஆம் திகதி இவ்வாறான முறைப்பாடொன்றை தேர்தல்கள் திணைக்களத்தின் இணையத்தளத்திற்கு முன்வைத்துள்ள போதிலும் அது தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.

தேர்தல் சட்டங்களை மீறுதல் தொடர்பாக, பெயர் குறித்த நியமனங்களை எற்றுக்கொள்ளப்பட்ட திகதியின் பின்னரே தேர்தல் ஆணையாளருக்கு அதிகாரம் ஒப்படைக்கப்படுவதுடன் அதாவது 2014.12.08 ஆம் திகதியிலிருந்து எனவும் அத்திகதியின்

பின்னர் கிடைக்கப்பெற்ற அனைத்து முறைப்பாடுகள் தொடர்பாகவும் எடுக்க முடியமான உச்சளவு நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

18. 2014.12.19 ஆம் திகதி மட்டக்களப்பு நகரில் கெவிலியாமடு கிராமத்தில் மக்கள் தமது வாக்குரிமையைக் கோரி அமைதியான வகையில் எதிர்ப்பைத் தெரிவித்துக்கொண்டிருக்கும் போது அவர்கள் மீது மோசமான முறையில் தாக்குதலை மேற்கொண்டமை தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை எனவும் ஜாதிக ஹெல உருமய கட்சியின் பிரதிநிதி திரு.நிஷாந்த வர்ணசிங்க வினவினார். இங்கு தனது கருத்தை தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர், இது சம்பந்தமாக நிஷாந்த வர்ணசிங்கவுக்கு மேலதிகமாக அக்மீமன தயாரத்ன தேரரும் முறைப்பாடு செய்துள்ளதாகவும், கெவிலியாமடு கிராமத்தின் மக்கள் தற்போதைய சனாதிபதியவர்களுக்கு வாக்களிப்பதற்காக தமது வாக்குரிமையைக் கோரி எதிர்ப்பார்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையினால் தேர்தல் ஆணையாளர் என்ற வகையில் தம்மால் பக்கச்சார்பான விடயத்திற்கு தலையிட முடியாதென தெரிவித்தார். ஆயினும், இது தொடர்பாக எடுக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து பொலீஸாரையும் அறிவுறுத்துவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த தேர்தல் ஆணையாளர் வாக்குரிமையைப் பெற்றுக்கொள்வதற்காக 2015 ஆம் ஆண்டின் ஜூன் மாதத்திலிருந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும், எவரேனுமொருவரை அவமதிக்கும் வகையில் நடந்துகொண்டமை தொடர்பாக போதுமானளவு சாட்சிகள் மற்றும் தகவல்களுடன் நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்ய முடியுமெனவும் தெரிவித்தார். அத்துடன், இது தொடர்பாக கவனம் செலுத்தும்போது ஆறு நபர்களின் பெயர்கள் 2014 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்படவில்லையெனவும், ஏனையோர் அம்பாறை போன்ற கஷ்டப் பிரதேசங்களில் நிரந்தரமாக வசிப்பவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது. அதனால் அவர்களது உண்மையான வசிப்பிடம் அம்பாறை மாவட்டமாக இருப்பதனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் பதிவு செய்யப்படாதவர்கள் எனவும் அறிவித்த தேர்தல் ஆணையாளர் எத்தரப்பினராயினும் உரிய காலப் பகுதிக்குள் தேருநர் இடாப்பில் தனது பெயரை பதிவு செய்துகொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் அத்தியாவசியமெனத் தெரிவித்தார்.

19. இங்கு அசாத் சாலி அவர்கள், பிரதியமைச்சர் ஒருவர் தேர்தல் ஆணையாளர் 'ஜில்மாட் (தந்திர வேலைகள்)' செய்பவர் எனவும், இம்முறை சனாதிபதித் தேர்தலிலும் அவ்வாறான முறையின் ஊடாக நிச்சயமாக தனது கட்சியின் வேட்பாளர் தற்போதைய சனாதிபதி வெற்றி பெறுவார் என தெரிவித்துள்ளனர் எனவும் இது தேர்தல் ஆணையாளர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டொன்றெனவும் தெரிவித்தார். இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்ட பிரதியமைச்சரின் கூற்று தொடர்பாக கவலையைத் தெரிவித்ததுடன், அந்த பிரதியமைச்சரின் கையொப்பத்துடன் நியமிக்கப்படும் எந்தவொரு நபரையும் வாக்கெடுப்பு நிலைய அலுவல்களில் ஈடுபடுத்திக்கொள்வதில்லையெனவும், குறிப்பிட்ட பிரதியமைச்சரின் நியமனத்தை இரத்துச்செய்து வேறொருவரை நியமிக்குமாறு திரு.சுசில் பிரேமஜயந்த் அவர்களிடம் வேண்டிக்கொண்டார். இவ்வாறான கூற்றுக்கள் ஊடாக தேர்தல் தொடர்பாக பொது மக்களிடையே நிலவும் விசுவாசம் இழக்கப்படுவதாகவும், அதனூடாக சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடாத்துவதற்கு இடையூறு ஏற்படுவதாகவும் தெரிவித்தார்.

20. இலங்கையின் கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் சனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிரிசேன ஆகியோர் சார்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திரு.கபீர் ஹசீம் அவர்களால் கையொப்பமிடப்பட்ட ஆவணமொன்றை விஜயதாச ராஜபக்ஷ அவர்கள் முன்வைத்து அது கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் சனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிரிசேன ஆகியோருக்கிடையில் கைச்சாத்திடப்பட்டதாக திரு. திஸ்ஸ அத்தனாயக்க வெளியிட்டுள்ள உடன்படிக்கை பொய்யான உடன்படிக்கை ஒன்றெனவும் அதற்கெதிராக ஏற்கனவே நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இங்கு தெரிவித்த தேர்தல் ஆணையாளர் இ அந்த உடன்படிக்கையின் மூலப் பிரதியை கண்ணால்

பார்த்துள்ளாரா? அத்துடன் அதன் உண்மைத்தன்மை சம்பந்தமாக உறுதிப்படுத்த முடியுமா? போன்ற விடயங்களை உறுதிப்படுத்துமாறு திரு.திஸ்ஸ அத்தனாயக்கவுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் இது தொடர்பாக அறிவிக்கப்பட்ட கொழும்பு 10, ரீ.பீ.ஜாயா மாவத்தையில் இலக்கம் 301 எனும் இடத்தில் இயங்கும் ஐக்கிய தொழிலாளர் சங்கம் அச்சு ஊடகங்களின் ஊடாக இந்தத் தகவல்களை அறிவிக்கும்போது பிரச்சினைக்குரிய உடன்படிக்கையின் மூலப் பிரதியை கண்டீர்களா? அதன் உண்மைத்தன்மை தொடர்பாக திருப்தியடைய முடியுமா? மற்றும் அவ்வாறு திருப்தியடைய முடியாவிட்டால் ஊடக ஒழுக்க நெறியை மீறியவாறு இவ்வாறான ஆவணங்களை பிரசுரிப்பதனைத் தவிர்க்குமாறு குறிப்பிட்ட ஐக்கிய தொழிலாளர் சங்கத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் மேலும் தெரிவித்த தேர்தல் ஆணையாளர் ஏதேனும் முறைகேடுகள் நடைபெறும்போது அதற்கெதிராக மேற்கொள்ள வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டுமென வலியுறுத்தினார்.

இச்சந்தர்ப்பத்தில் சிரிகொத்த ஐக்கிய தேசியக் கட்சி அலுவலகத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக திரு.அசாத் சாலி விடயங்களைச் சுட்டிக்காட்டியதன் பின்னர் தேர்தல் ஆணையாளர் கருத்துத் தெரிவிக்கையில், பெருந்தெருக்கள், அரசியல் கட்சி அலுவலகங்கள் மற்றும் அரசாங்க நிறுவனங்களின் முன்னே எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடாத்த வேண்டாமென மிகவும் தயவாய் பொது மக்களிடம் கேட்டுக்கொள்வாகத் தெரிவித்தார்.

21. 2014.12.25 அம் திகதி மத்துகம பிரதேசத்தில் ஒரு நிகழ்வை அறியக் கிடைத்ததாகவும் அது, நவ சமசமாஜ கட்சியின் பிரதிநிதி மற்றும் பிரதேச அமைப்பாளர் மழை பெய்துகொண்டிருக்கம்போது முச்சக்கர வண்டியில் பயணித்துக்கொண்டிருக்கையில் அவருக்குப் பின்னால் வந்த வாகனமொன்று வேண்டுமென்றே முச்சக்கர வண்டியுடன் மோதியதாகவும் அதனால் முச்சக்கர வண்டியில் பயணித்தவர்களுக்கு சிறு காயம் ஏற்பட்டதாகவும் இது சம்பந்தமாக மத்துகம பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் சந்தேகத்திற்குரிய வாகனத்தின் இலக்கத்தை குறித்துக்கொள்ள முடியவில்லையெனவும் பிரதிநியொருவர் சுட்டிக்காட்டியதுடன், இது தொடர்பாக மத்துகம பொலீஸில் வினவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். இங்கு சில பிரதிநிதிகள், நிட்டம்புவ பிரதேசத்தில் ஒரே இலக்கத்தினைக்கொண்ட 10 டிபென்டர் வண்டிகள் ஓடுவதாக தெரிவித்தனர். இவற்றின் புகைப்படங்களுடன் எழுத்து மூலமாக அறியத்தருமாறும் அப்போது உரிய நடவடிக்கை மேற்கொள்ள முடியமெனவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

இங்கு திரு. விஜயதாச ராஜபக்ஷ அவர்கள் கருத்து தெரிவிக்கும்போது இவ்வாறான செயற்பாடுகள் சம்பந்தமாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பொறுப்பு பொலீசிடம் காணப்படுவதாகவும் அந்த பொறுப்புக்களை தட்டிக்கழித்தல் பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் கீழ் தவறெனவும் தெரிவித்தார். திரு. ஸ்ரீநாத் பெரேரா அவர்களும் இங்கு கருத்துத் தெரிவிக்கையில் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் காலத்திலும் கட்சி அலுவலகங்களை அமைப்பதற்கு குறிப்பிட்ட ஒரு இடத்திற்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டாலும் தற்போது காணப்படும் அனைத்து வெற்று காணிகளிலும் பாரிய பதாகைகளுடன் கூடிய கட்சி அலுவலகங்களை காண கூடியதாக இருக்கின்றது.

தேர்தல் ஆணையாளர் இங்கு கருத்து தெரிவிக்கையில் இந்த தேர்தலுக்கு ஒரு சிறிய காலப்பகுதியே காணப்படுவதனால் தேர்தல் அலுவலர்களை இந்த அனைத்து அலுவல்களுக்கும் ஒரே தடவையில் ஈடுபடுத்துதல் சிரமமெனவும் எவ்வாறாயினும் இந்த அலுவலகங்கள் அனுமதிக்கப்பட்ட அலுவலகங்களா அல்லது சட்டவிரோத அலுவலகங்களா என்பது பற்றி தேர்தல்கள் திணைக்களம் மற்றும் பொலீசார் பரீட்சித்து உறுதிசெய்துகொள்ள வேண்டுமெனவும் தெரிவித்தார்.

22. பின்னர் வாக்குப் பெட்டிகளை விநியோகிப்பதிலிருந்து வாக்கெண்ணல் செயற்பாடுகள் மற்றும் பெறுபேறுகளை வெளியிடும் விதம் சம்பந்தமாக தேர்தல்கள் ஆணையாளர் கீழே குறிப்பிடப்பட்டவாறு விடயங்களை தெளிவுபடுத்தினார்.

i. விநியோகிக்கும் நிலையங்களில் வாக்குப் பெட்டிகளை சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கு விநியோகிக்கப்படுவதுடன் இந்த வாக்குப் பெட்டிகளில் அவற்றுக்குரிய தொடர் இலக்கம் (Serial Numbers) குறிப்பிடப்படுவதுடன் அந்த அனைத்து இலக்கங்களை வேட்பாளர்களின் பிரதிநிதிகளும் உரித்து கொள்வார்கள்.

ii. வாக்குச் சீட்டுக்கள் இந்த வாக்குப் பெட்டிகளில் இடப்பட்டு அதன் பின்புறமாக மூன்று சீல்களில் எழுமாறாக தெரிவுசெய்யப்படும் ஒரு சீலை பயன்படுத்தி உத்தியோகபூர்வ முத்திரை இடப்படும். தேவையாயின், பிரதிநிதிகளின் முத்திரைகளையும் இங்கு இடமுடியும்.

iii. வாக்குச் சீட்டுக்கள் கணக்கின் பிரதியொன்றும் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படும்.

iv. வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து வாக்குப் பெட்டிகளை கொண்டுவரும் போது மிகவும் பாதுகாப்பான முறையொன்று பின்பற்றப்படுவதுடன் அனைத்து பெட்டிகளிலும் காபனைஸ் பிரதியில் சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் தனது கையொப்பத்தை இடுவதுடன் எழுமாறாக தெரிவுசெய்யப்பட்ட பணியாட்டொகுதி அங்கத்தவர்கள் இருவரின் கையொப்பங்களும் இடப்படும். அத்துடன், பிரதிநிதிகளின் கையொப்பம் அடங்கிய பத்திரமும் ஒட்டப்படும்.

v. வாக்குப் பெட்டிகளை பொறுப்பேற்கும் நடவடிக்கைகள் அதனை விநியோகித்த இடத்திலேயே இடம்பெறுவதுடன் அவ்வாறு கொண்டுவரப்படும் வாக்குப் பெட்டிகள் முத்திரையிடப்பட்டு பிளாஸ்டிக் உறையொன்றில் இடப்பட்டு அந்த உறை யொ்யொன்றினால் மூடப்பட்டு பாதுகாப்பாக கொண்டுவரப்படும். வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து வாக்கெண்ணும் இடத்திற்கு கொண்டுவரும் போது அதனை எந்தவொரு தரப்பினருக்கும் அவதானிக்க முடியுமாகவிருப்பதுடன் வாக்கெண்ணும் மண்டப வளவில் கட்சி பிரதிநிதிகளுக்கும் தரித்திருப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றது எனவே வாக்கெடுப்பு நிலையத்திற்கு மற்றும் வாக்கெண்ணும் மண்டப வளவிற்கு பிரதிநிதிகளை நியமித்தல் மிக முக்கியமாகும்.

vi. வாக்கெண்ணும் நிலையத்தில் ஒவ்வொரு வாக்குப்பெட்டிகளுக்குமுரிய வாக்கெடுப்பு நிலையத்தின் பெயர் உரத்து வாசிக்கப்படும். பின்னர் பாதுகாப்பான பூட்டு திறக்கப்பட்டு அனைத்து தரப்பினருக்கும் வாக்குப் பெட்டியை பரீட்சிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்படும். பின்னர் வாக்குப்பெட்டியின் உள்ளே குறிப்பிடப்பட்டிருக்கும் தொடர் இலக்கம் உரத்து வாசிக்கப்படும். வாக்குப் பெட்டிகளை விநியோகிக்கும் போது கட்சி பிரதிநிதிகள் அந்த இலக்கத்தை குறித்துக் கொண்டிருப்பதனால் வாக்கெண்ணும் நிலையத்திற்கு கொண்டுவரப்பட்ட பெட்டியும் விநியோகிக்கப்பட்ட பெட்டியென்பதனை உறுதிசெய்துகொள்வதற்கு இதனால் வாய்ப்பு கிடைக்கின்றது.

vii. அனைத்து கட்சிகளுக்கும் ஐந்து பிரதிநிதிகள் இருப்பதனால் இந்த அனைத்து அலுவல்களையும் அவதானிப்பதற்கு அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கின்றது.

viii. வாக்கெண்ணும் அலுவலின் ஆரம்பத்தில் பிரதான மேசையின் மேல் அனைத்து வாக்குச் சீட்டுக்களும் போடப்பட்டு கட்சிகளுக்கமைய வகைப்படுத்தப்படும். இங்கு தமது கட்சிக்கு குறைந்தளவு வாக்குகள் கிடைத்திருந்தாலும் வாக்கெண்ணும் நிலையத்திலிருந்து வெளியேறிச் செல்லாமல் அப்பிரதிநிதிகள் அங்கு தொடர்ந்தும் தரித்திருத்தல் உகந்ததாகும்.

ix. வாக்குச் சீட்டுக்கள் ஒருபோதும் பிரதிநிதிகளின் கைகளுக்கு கிடைக்காதிருப்பதுடன் ஏதேனுமொரு வாக்குச் சீட்டு தொடர்பாக சிக்கல் நிலைமை தோன்றும் போது அது தொடர்பாக தீர்மானிக்கும் அதிகாரம் கட்சி

பிரதிநிதிகளின் கருத்தை வினவியதன் பின்னர் தலைமை வாக்கெண்ணும் அலுவலருக்கே உண்டு.

x. எந்தவொரு பிரதிநிதியோ கண்காணிப்பாளரோ இல்லாத போது பிரதான வாக்கெண்ணும் அலுவலர் உரிய அலுவலை சரியாகவும் நம்பகத் தன்மையுடனும் மேற்கொள்வார்.

xi. மேலே குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் வாக்குச் சீட்டுக்கள் வகைப்படுத்தப்பட்டதன் பின்னர் ஏனைய கட்சிகளின் வாக்குச் சீட்டுக்கள் அந்த வேறுபடுத்திய வாக்குச் சீட்டுக்களுடன் கலந்துள்ளதா என்பதனை பரீட்சிக்கும் வகையில் இரண்டாவது தடவையாகவும் வகைப்படுத்தி உண்மை தன்மை மீண்டும் உறுதிசெய்து கொள்ளப்படும்.

xii. வகைப்படுத்தப்பட்டதன் பின்னர் வாக்குச் சீட்டுக்கள் 50 இனைக் கொண்ட கட்டுக்களாகக் கட்டப்படும். மூன்றாவது குழு அதனை மீண்டும் பரீட்சிக்கும் பின்னர் இரண்டு உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களால் சிறப்பு பரீட்சிப்புக்குட்படுத்தப்படும். மீண்டும் அவற்றை தலைமை வாக்கெண்ணும் அலுவலரால் பரீட்சிக்கப்படும். (பல்வேறு தரப்பினரிடையே நிலவும் 45 வாக்குச் சீட்டுக்களை கொண்ட கட்டு அல்லது 55 வாக்குச் சீட்டுக்களை கொண்ட கட்டுக்களாக வேறுப்படுத்தப்படும் என்ற மூடக்கருத்து ஒருபோதும் ஏற்படுவதில்லை.

xiii. பின்னர் பெறுபேறுகள் குறிப்பிடப்படுவதுடன் அனைத்து பிரதிநிதிகளும் தமது வேட்பாளரின் பெயரின் முன்னே கையொப்பத்தை இடுவர்.

xiv. இந்த பெறுபேறுகள் ஆவணம் கையினால் மற்றும் கணினி பிரிவினால் தனித்தனியாக தயாரிக்கப்படுவதுடன் தெரிவத்தாட்சி அலுவலர்களும் தனித்தனியாக தயாரிப்பார்கள். பின்னர் கையினால் தயாரிக்கப்பட்ட பெறுபேறுகள் மற்றும் கணினியினால் தயாரிக்கப்பட்ட பெறுபேறுகளின் பிரதிகளை மேலதிக தேர்தல்கள் ஆணையாளர்கள் மீண்டும் பரீட்சிப்பார்கள்.

xv. இதன் பின்னர் இறுதி பெறுபேறு ஆவணத்தின் அடிப்படையில் தேர்தல்கள் ஆணையாளரின் கையொப்பம் இடப்படும். அந்த பெறுபேறு பெக்ஸ் மூலம் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு 3 நிமிடங்களுக்கு தேர்தல்கள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படுவதுடன் அனைத்து ஊடகங்களுக்கும் அரசாங்க தகவல் திணைக்களத்திற்கும் பெக்ஸ் ஊடாக அனுப்பப்படும்.

23. தேர்தல் வன்முறை செயற்பாடுகளுக்கு ஆளாகிய பிரதேசங்களில் "Vote is Your Right" என்பதனை தெளிவுபடுத்தும் வகையில் நாடகமொன்றை காண்பிப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் இதுதொடர்பாக மாவட்ட பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களையும் அறிவுறுத்தியிருப்பதாகவும் இங்கு தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் கடந்த காலத்தில் கொலன்னாவ பிரதேசத்தில் நிகழ்ந்த திரு.பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர அவர்களின் கொலை சம்பந்தமான கவலைக்கிடமான நிகழ்வை நினைவுபடுத்தி அவ்வாறான நிகழ்வொன்று மீண்டும் ஏற்படுவதற்கு எந்த வகையிலும் இடமளிக்க முடியாதென மேலும் தெரிவித்தார். இத்திட்டத்தை விசேடமாக கொலன்னாவ பிரதேசத்தின் செயற்படுத்துவதாகவும் ஏற்பட்ட சில பயங்கர நிலைமைகள் காரணமாக கொலன்னாவ பிரதேச வாக்காளர்கள் அச்சத்துடன் இருப்பதாகவும் மேல் மாகாண சபை உறுப்பினர் திரு.எஸ்.எம்.மரிக்கார் அவர்களின் அலுவலகத்திற்கு இன்றைய தினம் துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அப்பிரதேசத்திற்கு விசேட அதிரடிப்படையை அனுப்புவதற்கு எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

24. வாக்கெண்ணும் மண்டபம் அமைந்திருக்கும் வளவினுள் கட்சி அலுவலகங்களை அமைத்தல் சம்பந்தமாக விடயங்களை தெளிவுபடுத்தி தேர்தல்கள் ஆணையாளர் கருத்து தெரிவிக்கையில் ஒரு வளவிற்குள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஒரு அலுவலகத்தையும் புதிய ஜனநாயக முன்னணி ஒரு அலுவலகத்தையும் இடதுசாரி அபேட்சகர்களுக்கு ஒரு அலுவலகமும் ஏனைய அனைத்து அபேட்சகர்களுக்கு ஒரு அலுவலகமும் என அலுவலகங்களை ஒதுக்கிக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தார். அத்துடன் இத்தேர்தலின் போது விருப்பு வாக்குகள் எண்ணப்படுவதில்லையாதலால், மடிக் கணினிகள் மற்றும் அலைபேசிகளை வாக்கெண்ணும் நிலையத்திற்குள் கொண்டு செல்வதற்கு அனுமதியில்லையெனவும் தேர்தல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படும் CDMA தொலைபேசிகளைப் பயன்படுத்தி தொடர்பாடல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியுமெனவும் தேவையான கணிப்புக்களுக்கு கணிப்பான்களை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்குவதாகவும் மேலும் தெரிவித்தார்.

இங்கு திரு. ஆர். யோகராஜா அவர்கள், பெறுபேறு குறிப்புக்களின் அச்சுப் பிரதிகளை பெற்றுக் கொள்வதற்கு வசதியாக இருப்பதனால் மடிக் கணினியொன்றை கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்குமாறு வேண்டிக்கொண்டார். இதுதொடர்பாக கருத்துத் தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் தற்போது சிறிய மட்டத்திலான பல்வேறு ஊடக வலையமைப்புக்களினால் தேர்தல் பெறுபேறுகள் பெற்றுக்கொள்ளப்பட்டு தேர்தல்கள் திணைக்களத்தின் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு திட்டமிடப்பட்ட வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருவதாக தகவல் கிடைக்கப்பெற்றுள்ளமையினால் அலைபேசிகள் மற்றும் மடிக் கணினிகளை வாக்கெண்ணும் மண்டப வளவிற்குள் கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்குவதற்கான வாய்ப்புக்கள் இல்லையென தெரிவித்தார். தலைமை வாக்கெண்ணும் அலுவலருக்கு மாத்திரம் அலைபேசியொன்றை பயன்படுத்த முடியுமெனவும் அதனையும் முன்னரே சோதனைக்குட்படுத்தப்பட்டு முத்திரையிடப்பட்டதன் பின்னர் வாக்கெண்ணும் மண்டப வளவிற்குள் எடுத்துச் செல்வதற்கு அனுமதி வழங்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

25. சனாதிபதி சட்டத்தரணி திரு.ஸ்ரீநாத் பெரேரா, வாக்கெண்ணும் அலுவலின் இறுதி பெறுபேறு சனாதிபதி பெறுபேறை சனாதிபதி செயலகத்தினூடாக வெளியிடுவதாக கருத்தொன்று நிலவுவதாகவும் அது சம்பந்தமாக ஏதேனும் தெளிவுபடுத்தலை மேற்கொள்ள வேண்டுமென வேண்டிக்கொண்டார். அத்துடன் 2015.01.15 ஆம் திகதி தைப்பொங்கல் பண்டிகை தினமாக இருப்பதனால் கொழும்பு நகரில் பணியாற்றும் தமிழ் மக்களுக்கு தேர்தல் தினமன்று விடுமுறை வழங்காமல் தைப்பொங்கல் தினமன்று விடுமுறையை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று நிலவுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் சனாதிபதி செயலகத்தினூடாக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேர்தல் பெறுபேறுகள் வெளியிடப்படுவதில்லையெனவும் அது வெறுமனே பொய்யான செய்தி எனவும் தெரிவித்தார். அத்துடன் தேர்தல் தினமன்று பணிபுரியும் ஊழியர்களுக்கு விடுமுறை வழங்குதல் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் தீர்மானமொன்று எடுக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் திணைக்களத்தின் பரிந்துரைகளை அதற்காக பெற்றுக்கொடுத்துள்ளதாகவும் தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் 40 கி.மீ இற்குள் வசிப்பவர்களுக்கு அரை நாள் விடுமுறையும் 40 கி.மீ – 120 கி.மீ இற்கிடையில் வசிப்பவர்களுக்கு ஒரு நாள் விடுமுறையும் 120 கி.மீ இலும் அதிகமான தூரம் வசிப்பவர்களுக்கு இரண்டு நாள் விடுமுறையும் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டு அது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அதற்கமைய இங்கு மேலும் கருத்து தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் ஊழியர்களுக்கு தமது வாக்கை அளிப்பதற்கு இயலுமான வகையில் போதுமான பிரகாரம் விடுமுறைகளை அங்கீகரிக்குமாறு மனித உரிமை ஆணைக்குழுவினால் உரிய தரப்பினருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படுவதாகவும் இந்த விடுமுறை தொடர்பாக அநேகமான

தரப்பினரால் வினவப்படுவதால் அது தொடர்பாக பத்திரிகையில் விளம்பரப்படுத்துவதற்கும் தேர்தல்கள் திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

26. இங்கு கருத்து தெரிவித்த திரு. தயாபெல்பொல அவர்கள் தற்போது நிலவும் காலநிலை மிகவும் மக்களின் இயல்பு வாழ்க்கை மீது பாதகமான வகையில் தாக்கம் செலுத்தியுள்ளமையினால் அநேகமான மாவட்டங்கள் வெள்ளத்திற்கு மற்றும் மண்சரிவுக்கு உட்பட்டுள்ளதாகவும் இப்பிரதேசங்களில் வாழும் மக்கள் தமது வாக்குகளை எவ்வாறு அளிப்பார்கள் என வினவினார். இதற்கு பதிலளித்த தேர்தல்கள் ஆணையாளர் இது சம்பந்தமாக 2014.12.27 ஆம் திகதி மாவட்ட செயலாளர்களுடன் கலந்துரையாடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். அத்துடன் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் சிரிகொத்த கட்சி தலைமையகம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை போன்ற நிகழ்வுகள் எதிர்காலத்திலும் ஏற்பட முடியுமாகையால் அவ்வாறான நடவடிக்கைகளை தடுப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை எனவும் பொலிஸ் நடமாடும் சேவைகள் எப்போதிலிருந்து ஆரம்பிக்கப்படும் என பொலிசாரிடம் வினவுவதாகவும் வன்முறை நிகழ்வுகளின் முன்னே பொலீசார் மேற்கொள்ளும் அமைதிப்போக்கு மீது பொதுமக்கள் உண்மையிலேயே ஏமாற்றமடைந்துள்ளதாகவும் தெரிவித்தார். இங்கு கருத்து தெரிவித்த சிரேட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் (நிருவாகம்/ தேர்தல்கள்) திரு. காமினீ நவரத்ன அவர்கள் சிரிகொத்த நிகழ்வு சம்பந்தமாக குறிப்பிட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் மாவட்ட உதவி பொலிஸ் மா அதிபர் ஆகியோரிடமிருந்து அறிக்கை கோரப்பட்டுள்ளதாகவும் மிக விரைவில் அந்த அறிக்கை தமக்கு கிடைக்குமெனவும் தெரிவித்தார்.

27. மீண்டும் கருத்து தெரிவித்த திரு.அசாத் சாலி அவர்கள், கடந்த காலங்களில் ஒரு சந்தர்ப்பத்தில் சனாதிபதி வேட்பாளர்களாக இருந்த திரு.காமினி திசாநாயக்க உட்பட சிலர் கொலை செய்யப்பட்டதாகவும் அத்துடன் முன்னர் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் திரு.பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர அவர்களும் தெருவில் மனிதாபிமானமின்றி கொலை செய்யப்பட்டதாகவும் இவ்வாறான நிகழ்வுகள் ஏற்படும் போது மனித உரிமைகளுக்கு என்ன நடந்தது என்ற நியாயமான கேள்வி எழுவதாகவும் தெரிவித்தார். அத்துடன் பொலீசாருக்கும் அவருடைய கடமைகளை எந்தவொரு தரப்பினரதும் தலையீடுன்றி மிகவும் நியாயமான மற்றும் சுதந்திரமாக நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு இருக்க வேண்டுமெனவும் இங்கு மேலும் தெரிவித்தார்.

இங்கு திரு. உபுல் ஜயசூரிய அவர்கள் கருத்து தெரிவிக்கையில் தேர்தல்கள் ஆணையாளருக்கு பொலீசாரின் கடமைகளை நிறைவேற்ற முடியாதெனவும் பொலீஸ்மா அதிபர் உட்பட்ட பொலீஸ் திணைக்களம் அர்ப்பணிப்புடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியிருப்பதுடன் தேர்தல் நடவடிக்கை தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுறுத்தல் மற்றும் கட்டளை பிரகாரம் அலுவல் மேற்கொள்வதற்கு பொலீசார் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் அத்துடன் குறைந்தது தேர்தல் சட்டத்தை செயல்வலுப்பெறச் செய்வதற்காகவாவது பொலீசார் இதனை பார்க்கிலும் முனைப்புடன் செயற்பட வேண்டுமெனவும் சுவரொட்டிகள் மற்றும் பதாகைகள் தேர்தல் சட்டத்தை மீறுபவைகளாக இருப்பதுடன் பொலீசார் அவற்றை அகற்றுவதற்கு இதனை பார்க்கிலும் பொறுப்புடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

இது சம்பந்தமாக தேர்தல்கள் ஆணையாளர் கருத்து தெரிவிக்கையில் இந்த விடயம் தொடர்பாக பொலிசாருடன் தனியான கலந்துரையாடலை நடாத்துவது பொருத்தமெனவும் எவ்வாறாயினும் சட்டத்தை செயல்வலுப்பெறச் செய்தல் சம்பந்தமாக பொலீசாருக்கு மாத்திரம் செயற்படுவதற்கான சாத்தியம் இல்லாதிருப்பதுடன் அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்பு அதற்கு தேவையெனவும் சுட்டிக்காட்டினார். தேர்தல் அலுவல்களை சுதந்திரமாகவும் நீதியாகவும் வெளிப்படை தன்மையுடனும் நிறைவேற்றுவதற்காக எடுக்க முடியுமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாகவும் பிரச்சினைகள் இருப்பின் அது சம்பந்தமாக கலந்துரையாடி தேவையான நடவடிக்கைகளை எடுக்க முடியுமெனவும் மேலும் சுட்டிக்காட்டினார். சிலவேளை பொலீசார் உரிய நடவடிக்கையை எடுக்காவிடின் அது

சம்பந்தமாக நீதிமன்றத்தின் உதவியை நாடுவதற்கு எந்தவொரு தரப்புக்கும் வாய்ப்பு இருப்பதாகவும் சட்டத்தை செயல்வலுப்பெறச் செய்வதற்கு பொலீசார் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லையென குற்றம் சுமத்துவது நியாயமில்லையெனவும் தேர்தல்கள் ஆணையாளர் இங்கு தெளிவுபடுத்தினார்.

சிரேட்ட பிரதி பொலீஸ்மா அதிபர் (நிருவாகம் மற்றும் தேர்தல்கள்) திரு. காமினீ நவரத்ன அவர்கள் கருத்து தெரிவிக்கையில் நாடுபூராகவும் காட்சிப்படுத்தப்படும் சுவரொட்டிகள், பதாகைகள், டிஜிட்டல் திரைகள் என்பவற்றை ஒரே தடவையில் அகற்றுவதற்கு முடியாவிடினும் முடியுமானவரை இவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்தார். அத்துடன் எதிர்க்கட்சி சனாதிபதி வேட்பாளரும் இதேபோன்று சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளை காட்சிப்படுத்தினால் இப்பிரச்சினை இதனை பார்க்கிலும் சிக்கலாக இருப்பதற்கு வாய்ப்பு இருந்ததெனவும் மேலும் தெரிவித்தார்.

பின்னர் வாக்குச் சீட்டுக்களில் வாக்கினை அடையாளமிட வேண்டிய முறையை சுட்டிக்காட்டிய தேர்தல்கள் ஆணையாளர் கீழ் குறிப்பிடப்படும் விடயங்களை தெரிவித்தார்.

i. X,1 அல்லது ✓ செல்லுபடியான இடப்பட்டிருக்கும் வாக்குச் சீட்டுக்கள் மாத்திரம் செல்லுபடியான வாக்குச் சீட்டாக ஏற்றுக்கொள்ளப்படும்.

ii. விருப்பு வாக்குகளை அடையாளமிடுவதாயின் மாத்திரம் 1,2 மற்றும் 3 என இலக்கமிட முடியும்.

iii. X உடன் ஒரு போதும் 1,2 அல்லது 3 இடமுடியாது. அத்துடன் புள்ளடியுடன் 2 மற்றும் 3 இனை பயன்படுத்தினால் அந்த வாக்குச் சீட்டு நிராகரிக்கப்படும்.

iv. வாக்குச் சீட்டு பூராகவும் பெரியளவில் இடப்படும் புள்ளடி காரணமாக வாக்குச் சீட்டு செல்லுபடியற்றதாகும்.

v. இனங்காணல் குறியீடுகளை பயன்படுத்தப்பட்டிருக்கும் வாக்குச் சீட்டுக்களும் செல்லுபடியற்ற வாக்குச் சீட்டாக கருதப்படும்.

vi. தனது வாக்கினை அளிக்கும் போது முடியுமானவரை X மாத்திரம் பயன்படுத்துதல் பொருத்தமானதாகும். அதனை உரிய கூட்டிற்குள் மாத்திரமே இடுதல் வேண்டும்.

vii. சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள பிரகாரம் வாக்குச் சீட்டு செல்லுபடியானதா/ செல்லுபடியற்றதா என தீர்மானிக்கப்படும்.

29. 50% வாக்குகளை பிரதான வேட்பாளர்கள் இருவரில் எவரும் எடுக்காவிட்டால் எடுக்கப்படும் நடவடிக்கை யாதென பல்வேறு தரப்பினர் கேள்வி எழுப்புவதாகவும் அச்சந்தர்ப்பத்தில் ஏனைய வேட்பாளர்களின் வாக்குச் சீட்டுக்களில் அந்த இரு வேட்பாளர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ள விருப்பு வாக்குகளின் எண்ணிக்கையை அவர்களது வாக்குகளுடன் சேர்க்கப்பட்டதன் பின்னர் அதிக வாக்குகளைப் பெற்றுக் கொண்ட வேட்பாளர் தெரிவு செய்யப்படுவார் என தேர்தல்கள் ஆணையாளர் சுட்டிக்காட்டினார்.

30. இச்சந்தர்ப்பத்தில் கருத்துத் தெரிவித்த திரு. யோகராஜா அவர்கள், முன்வைக்கப்பட்ட அனைத்து விடயங்களையும் நோக்கும்போது தேர்தலில் வாக்கெடுப்பு முதல் வாக்கெண்ணும் செயற்பாடு வரையிலான அலுவல்களின் போது எந்தவிதமான முறைகேடுகளும் நிலவுவதில்லை என்பதனை புரிந்துகொள்ள முடியுமாக இருப்பதுடன் தேர்தலுக்கு முன்னர் இது தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவிக்க முடியுமாயின் உகந்ததாக இருக்குமென தெரிவித்தார்.

தேர்தல்கள் திணைக்களம் மீது அவ்வாறான நம்பிக்கை எழுந்துள்ளமை சம்பந்தமாக தனது மகிழ்ச்சியை தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் இது சம்பந்தமாக ஊடகங்களின்

ஊடாக சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் போன்ற மும்மொழிகளிலும் தெளிவுபடுத்துவதற்கு எதிர்வரும் காலத்தில் நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவித்தார்.

31. காலி சட்டத்தரணிகள் சங்கத்தினால் வெளியிடப்பட்ட பிரேரணையொன்றில் சுயாதீன தொலைகாட்சி சேவை, இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம், லேக்கவுஸ் நிறுவனம், அரசாங்க அச்சகம் மற்றும் தேர்தல்கள் திணைக்களம் சட்டவிரோதமாக செயற்படுவதாகவும் அதனை தடுப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டிருந்ததென தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர், தேர்தல்கள் திணைக்களம் அல்லது தேர்தல்கள் திணைக்கள உத்தியோகத்தர்கள் எச்சந்தர்ப்பத்திலும் முறைகேடுகளை மேற்கொள்ளவில்லையெனவும் ஒருபோதும் வாக்குப் பெட்டிகளை மாற்றுதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட மாட்டாதெனவும் அது தொடர்பான கருத்துக்கள் வெறுமனே மூடக்கருத்துக்கள் மாத்திரமே எனவும் சுதந்திரமான தேர்தலை தேர்தல்கள் ஆணையாளர் என்ற வகையில் தாம் உறுதிப்படுத்துவதாகவும் இங்கு மேலும் தெரிவித்தார்.

32. வாக்கெண்ணும் நிலையத்திற்கு நியமிக்கப்படும் கட்சி பிரதிநிதிகள் பகல் காலங்களில் வாக்கெடுப்பு நிலையங்களில் பணியாற்றாதவர்களாக இருத்தல் மிகவும் பொருத்தமெனவும் மதுபானம் அருந்தியுள்ள பிரதிநிதிகளை வாக்கெண்ணும் நிலையத்திற்கு அனுப்ப வேண்டாமெனவும் தேர்தல்கள் ஆணையாளர் அனைத்து தரப்பினரிடமும் வேண்டிக் கொண்டார். வாக்கெண்ணும் மண்டபத்தினுள் தனது வேட்பாளருக்கு எந்தளவு வாக்குகள் கிடைத்துள்ளன என்பதனை குறித்து கொண்டு வாக்குச் சீட்டுக் கணக்குடன் ஒப்புநோக்கி உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குறிப்பிட்ட பிரதிநிதிகளுக்கு அறிவுறுத்தல் வழங்குமாறும் தெரிவித்தார். எவ்வாறாயினும், வாக்கெண்ணும் மண்டபத்திற்கு எந்தவொரு பிரதிநிதியை நியமிக்காத போதிலும், எந்தவொரு கண்காணிப்பு அமைப்பு பங்கேற்காத போதிலும் வாக்கெண்ணும் நடவடிக்கை மிகச் சரியாக தலைமை வாக்கெண்ணும் அலுவலர்களினால் நிறைவேற்றப்படுமெனவும் இங்கு சுட்டிக்காட்டிய தேர்தல்கள் ஆணையாளர் வேறு எந்தவொரு தரப்பினரதும் சான்றிதழ் தேர்தல் செயற்பாடுகளின் உண்மை தன்மை சம்பந்தமாக தேர்தல்கள் திணைக்களத்திற்கு அவசியமில்லையெனவும் மேலும் தெரிவித்தார்.

33. எதிர்வரும் சனாதிபதித் தேர்தலை சுதந்திரமாகவும் நீதியாகவும் வெளிப்படை தன்மையுடனும் நடாத்துவதற்காக அனைத்து தரப்பினரும் பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் செயற்பாடுவார்களென எதிர்பார்ப்பதாக இங்கு தெரிவித்த தேர்தல்கள் ஆணையாளர் கலந்துரையாடப்படவேண்டிய வேறு விடயங்கள் இருப்பின் அவற்றை முன்வைக்குமாறும் தெரிவித்தார். எவரும் வேறு கருத்துக்களை முன்வைக்காமையினால் கலந்துகொண்ட அனைத்து தரப்பினருக்கும் தனது நன்றியை மீண்டும் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்ததன் பின்னர் 18.10 மணிக்கு கலந்துரையாடல் நிறைவுபெற்றது.

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

ஊடக அறிவித்தல் - 37

சனாதிபதித் தேர்தல் - 2015 சனவரி 08
தேர்தல்கள் ஆணையாளரின் அறிவித்தல்

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் சனாதிபதித் தேர்தல், 15,044,490 வாக்காளர்களுக்காக 12,314 வாக்கெடுப்பு நிலையங்களில் 2015.01.08 ஆம் திகதி மு.ப 7.00 மணி தொடக்கம் பி.ப 4.00 மணிவரை நடாத்தப்பட்டது. சனாதிபதித் தேர்தலுக்கான தனது விருப்பத்தை கௌரவ சனாதிபதி அவர்கள் வெளியிட்ட 2014.11.20 ஆம் திகதியிலிருந்து ஆரம்பமான தேர்தலுக்கு முன்னரான காலக்கெடுவினுள் சில அரசியற் கட்சிகளின் ஆதரவாளர்கள் வன்முறையாகச் செயற்பட்டு தேர்தல் சட்டங்களையும் சாதாரண சட்டங்களையும் மீறி அரசியல் அலுவல்களிலீடுபட்டமை தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை மற்றும் அக்காலக்கெடுவினுள் இடம்பெற்றதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற சட்டமுறையற்ற செயற்பாடுகள் தொடர்பாக கருத்திலெடுக்கும் போது தேர்தல் தினத்தன்று பதாகைகள், உருவப்படங்களிலின்றி வாக்கெடுப்பு நிலைய தொகுதிக்குள் மாத்திரமின்றி அதற்கு வெளியிலும் மோதல்கள் இடம்பெறாது அமைதியான நிலைமையொன்றில் தேர்தல் நடாத்துவதற்கு முடிந்தமை தொடர்பாக பெரிதும் மகிழ்ச்சி அடைவோம். தேர்தலுக்கு முன்னரான காலக்கெடுவினுள் இச்செயற்பாடுகளுக்கு பொறுப்புடைய நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையெடுப்பதற்கும் எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்களை தடுப்பதற்குத் தேவையான முன்னேற்பாடுகளை எடுப்பதும் தேர்தல் காலக்கெடுவினுள் மற்றும் தேர்தலுக்கு பின்னரான காலக்கெடுவினுள்ளும் ஊர்வலங்கள், வாகனப் பேரணிகள் நடாத்தப்படுவதை தடுப்பதற்கு கடும் நடவடிக்கையெடுப்பதும் கட்டாயமென்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். இது தொடர்பாக பொலிஸ்மா அதிபரிடம் விஷேட கோரிக்கையொன்றினூடாக அறிவிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும் முழு நாட்டிலும் வாக்காளர்களுக்கு வாக்களிப்பு நிலையங்களுக்கு வருகை தருவதிலும் சுதந்திரமாகவும் இரகசியமாகவும் பிரயோகிப்பதிலும் எவ்வித தடங்கலும் ஏற்பட்டதாக முறைப்பாடு கிடைக்கப்பெறாதமை பற்றி பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

தேர்தலை வெற்றிகரமாக நடாத்துவதற்காக அனைத்து மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்கள் / தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் மற்றும் ஏனைய அலுவலர்கள் மற்றும் அவர்களின் பணியாட் குழு அங்கத்தினர்கள் / கிராம அலுவலர்கள் போன்றே தேர்தலுக்குரிய ஒருங்கிணைப்பு மற்றும் செயற்பாட்டு பணிகளிலீடுபட்ட அனைத்து அரச அலுவலர்கள் மற்றும் தேர்தல் தொழில் வல்லுனர்கள் ஆற்றிய சேவையை பெரிதும் மெச்சுதல் வேண்டும். விஷேடமாக மாவட்ட மட்டத்தில் தேர்தலுக்குரிய அனைத்து பணிகளுக்கும் பொறுப்பாக செயற்பட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள் அவர்களின் உதவு பணிக்குழுவினரின் விலைமதிக்க முடியாத ஒத்துழைப்பு இந்த சனாதிபதித் தேர்தலை குறுகிய காலக்கெடுவினுள் முறையாக மேற்கொள்வதற்கு பெரிதும் உதவியாக அமைந்தது. அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் சமமான பதவிகளை வகிக்கும் அரசாங்க சேவையின் சிரேட்ட அலுவலர்கள் தொடக்கம் அமய ஊழியர்கள் வரை அனைத்து அரச சேவையின் மற்றும் மாகாண அரச சேவையின் அனைத்து அலுவலர்களதும் அதிபர்கள் / ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களதும் ஒத்துழைப்பு கிடைக்கப்பெறவில்லையெனில், தேர்தலுக்குரிய பணிகளை முறையாக ஆற்றிக் கொள்ள முடியாது போயிருக்கும் அரசாங்க சேவையின் கௌரவத்தையும் புகழையும் காப்பாற்றி தேர்தலை வெற்றிகரமாக நடாத்த ஒத்தழைப்பு நல்கிய அனைவருக்கும் எமது நன்றி உரித்தாகட்டும். இங்கு கடந்த தேர்தலின் போது மாத்தறை, மஹியங்கனை, கெஸ்பேவ, ஹோமாகம, மஹர ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற முறையற்ற சம்பவங்கள் காரணமாக மற்றும் வாக்கெண்ணலின் போதும் பெறுபேறுகளை வெளியிடும் போதும் தேர்தல் அலுவலர்கள் ஊழலான விதத்தில் சட்ட முறையற்றவாறு செயற்படுவதாக அடிக்கடி செய்யப்பட்ட குற்றசாட்டுக்கள் காரணமாக அதிருப்தியடைந்திருந்த போதிலும், தேர்தலுக்குரிய பூர்வாங்க ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் மற்றும் நியதிச்சட்ட அலுவல்களில் ஈடுபடுவதற்கு மேலதிகமாக தேர்தல் பிரச்சார கூட்டங்களுக்கான இடங்களை குறித்தொதுக்கல் பிரச்சினைகள், சட்டவிரோத பிரச்சார அலுவல்கள் தொடர்பான பிரச்சினைகள், அரச அலுவலர்கள் அரசியல் நடவடிக்கைகளில்

ஈடுபடுகின்றமை மற்றும் அரச ஆதனங்களின் முறையற்ற பாவனை தொடர்பான முறைப்பாடுகள் ஆகிய அனைத்து விடயங்களிலும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு தேவையான சிறந்த சூழ்நிலையொன்றை பேணுவதற்காக எனது அறிவுறுத்தல்களுக்கமைய உடனடியாக தலையிட்டு அச்சமின்றியும் சிக்கலின்றியும் அத்தேர்தல் காலக்கெடுவினுள் தேர்தல் சட்டங்களை பாதுகாப்பதற்காக விஷேட முயற்சிகளையெடுத்து தேர்தலை முறையாக நடாத்துவதற்கு மகத்தான பங்களிப்பை நல்கிய தேர்தல்கள் திணைக்களத்தின் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர்கள், ஏனைய பதவிநிலை அலுவலர்கள் மற்றும் பணியாட் குழுவினர்கள், மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களின் சிரேட்ட பிரதி / பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் அவர்களின் பணிக்குழுவினர்கள், தேர்தல்கள் திணைக்களத்தின் அமய உதவு பணிக்குழுவினர் மற்றும் தேர்தல் திணைக்களத்திற்கு தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கிக் கொண்டிருக்கின்ற அலுவலர்களின் சாரதிகள், உதவியாளர்கள் ஆகியோரின் சேவையை பெரிதும் மெச்சுகின்றேன். அவர்களுக்கு எமது நன்றியறிதலும், புகழ்ச்சியும் உரித்தாகட்டும் தேர்தல் காலக்கெடுவின் முதல் சில வாரங்களினுள் தேர்தல் சட்டங்களை செயற்வலுப் பெறச் செய்வதற்கு செயற்பட வேண்டியேற்பட்டது, தேர்தல் திணைக்களத்தின் அலுவலர்கள் மற்றும் சிவில் அலுவலர்களுக்கும் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த வரையறுக்கப்பட்ட பொலிஸ் அலுவலர்களுக்குமாகும். அவ்வலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட பதாகைகள் / உருவப்படங்களை அகற்றும் செயற்பாடுகள் காரணமாக தேர்தல் தொடர்பான மக்கள் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தமையால் அச்சுருத்தல்களுக்கு பயமின்றி முகங்கொடுத்து அவ்வலுவல்களில் ஈடுபட்ட அனைத்து சிவில் அலுவலர்களுக்கும்,பொலிஸ் அலுவலர்களுக்கும், சாரதிகளுக்கும் மற்றும் உதவியாளர்களுக்கும் விஷேட நன்றி உரித்தாகும்.

தேர்தல் சட்டங்களை பாதுகாப்பதற்கு தேர்தல்கள் திணைக்களம் நடவடிக்கையெடுத்தமை எந்தவொரு அரசியற் கட்சியை அல்லது குழுவை இன்றேல் வேட்பாளரொருவரை ஊக்குவிப்பதற்கோ பாதிப்புக்குட்படுத்துவதற்கோ இல்லையென்பதோடு, அது எவ்விதத்திலும் துவேச மனப்பான்மை கொண்ட நோக்கத்தோடு மேற்கொள்ளப்பட்ட செயலொன்றல்லவெனவும் மேலும் குறிப்பிட விரும்புகின்றேன். தேர்தல்கள் திணைக்களம் தேர்தல் சட்ட மீறல்களை தவிர்ப்பதற்கு தேவையான அனைத்து பணிகளையும் ஆற்ற முடிந்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வதற்கு காரணம் நாட்டிற்குள் தேர்தல் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது காலத்தின் தேவையொன்றாக காணப்படுகின்றமையினாலேயே என்பதை சுட்டிக் காட்டுவது அவசியமாகும். அதேபோன்று எதிர்காலத்திலும் இந்நோக்கங்களுக்காக தேர்தல்கள் திணைக்களம் அயராது முயற்சிக்குமெனவும் வெளிப்படுத்தப்படுகின்றது.

வாக்களிப்பின் போது செல்லுபடியான ஆளடையாள ஆவணமொன்றின் மூலம் தனது ஆளடையாளத்தை நிரூப்பித்தல் வேண்டுமென்ற சட்ட ஏற்பாட்டை முறையாகப் பேணி மக்களின் வாக்குரிமையை பாதுகாப்பதற்காக வாக்களிப்பு நிலையங்களை உரியவாறு நடாத்திச் சென்று தேவையான தனிப்பட்ட வசதிகளையும் சிரமத்துக்கு மத்தியில் பெற்றுக் கொடுக்க வேண்டி வந்த பின்தங்கிய பிரதேச வாக்கெடுப்ப நிலையங்களிலும் குறைகூறாது மகிழ்ச்சியோடு பணியிலீடுபட்டு கடமைகளை மேற்கொண்ட தலைமை அலுவலர்கள் உள்ளிட்ட வாக்கெடுப்பு நிலையத்தில் கடமையாற்றிய அனைத்து அரசாங்க அலுவலர்களதும் சேவையை பணத்தால் அளவிட முடியாது. அவர்களின் பணியை அனைத்து இலங்கையர்களும் மெச்சுவார்களென எண்ணுகிறேன். மேலும் மிகவும் கலைப்படைய செய்யதக்க பணிகளில் ஒன்றான தேர்தலின் மிக முக்கியமானவொன்றாக கருதப்படுகின்ற வாக்குகளையும் விருப்புகளையும் எண்ணுகின்ற பணியிலீடுபட்ட தலைமை வாக்கெண்ணல் அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களுக்கும் உதவியாளர்களுக்கும் எமது நன்றி உரித்தாகும். வாக்களிப்புப் பணிகள், வாக்குப் பெட்டிகளை விநியோகித்தல் மற்றும் கையேற்றல் பணிகள் ஆகிய வாக்கெண்ணல், வாக்களிப்பு பணிகளோடு நேரடித் தொடர்புடைய செயற்பாடுகள் மற்றும் பணிகளுக்கு மேலதிகமாக நலன்புரி, போக்குவரத்து, மண்டப வசதிகள், பொது வசதிகள், அஞ்சல் வாக்கு நடவடிக்கைகள், பணியாட் குழுவினர்களின் நியமனங்கள் மற்றும் தேர்தல் முடிவுகளை அட்டவணைப்படுத்தல் ஆகிய பணிகளுக்கு பொறுப்பாகவிருந்து செயற்பட்டவர்களும், அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிய அலுவலர்களும் தமக்குக் கையளிக்கப்பட்ட பொறுப்புக்களை முறையாக ஆற்றியமை இத்தேர்தலின் வெற்றிக்கு காரணமாக

அமைந்த கற்புலனாகாத விடயங்கள் ஆகும். அவ்வலுவலர்கள் அனைவருக்கும் எமது நன்றி உரித்தாகும்.

வேட்பாளர்களில் பலரும் அவர்களின் ஆதரவாளர்களும் மேற்கொண்ட வன்முறைகள் மற்றும் சட்டவிரோத தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் தொடர்பாக பெரிதும் வருந்துவதோடு, பிரச்சார அலுவல்களுக்காக மேடை அமைத்து கொண்டிருக்கும் போது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக காயமடைந்து மரணமடைந்த இரத்தினபுரி, கஹவத்தை பிரதேசத்தின் எதிர்க்கட்சி ஆதரவாளரான திரு. சாந்த தொடங்கொட அவர்களின் மரணம் தொடர்பாக எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம். அதேபோன்று வன்முறை செயற்பாடுகளால் காயமுற்று வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகின்ற அனைவருக்கும் விரைவில் சுகம் கிட்டவேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

அமைதியாகவும் சட்டத்தை மதித்தும் தேர்தல் பிரச்சாரங்களிலீடுபட்ட அனைத்து வேட்பாளர்கள், அவ்வேட்பாளர்களை வழிநடாத்திய அனைத்து கட்சிகளினதும் செயலாளர்கள், அரசியல் கட்சிகளின் சிரேட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் தொழிட்படு ஆதரவாளர்கள், முறைப்பாட்டு விசாரணைக் குழுவின் அரசியற் கட்சிகளின் நிரந்தர முகவர்கள் ஆகியோர் இத்தேர்தலை வெற்றிகரமாக நடாத்தி முடிக்க வழங்கிய ஒத்துழைப்புத் தொடர்பாகவும் பெரிதும் நன்றியுடையவனாவேன். சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்காக தேர்தல்கள் திணைக்களத்தினால் எடுக்கப்படுகின்ற முயற்சியை சாத்தியப்படுத்திக் கொள்ள அத்தகைய சிறந்த அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பு பெரிதும் பயனுடையதாகும்.

வாக்கெடுப்புக்கு அண்மித்த சில தினங்கள் வரை சில பிரதேசங்களின் பொலிஸ் அலுவலர்கள் தேர்தல் சட்டங்களை செயல்வலுப் பெறச் செய்வதில் அசமந்தப்போக்கைக் காட்டிய போதிலும் ஆரம்பத்திலிருந்து எமக்கு ஒத்துழைப்பு வழங்கிய பொலிஸ்மா அதிபர், தேர்தல்கள் விடயத்துக்குப் பொறுப்பான சிரேட்ட பிரதி பொலிஸ்மா அதிபர், மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேட்ட பிரதி பொலிஸ்மா அதிபர்கள் மற்றும் ஏனைய பொலிஸ்மா அதிபர்கள் மற்றும் சிரேட்ட பொலிஸ் அலுவலர்கள் உள்ளிட்ட இத்தேர்தலில் பங்களிப்பு வழங்கிய அனைத்து நீதிதவறாத மற்றும் சட்டங்களை செயல்வலுப் பெறச் செய்வதற்கு அர்ப்பணிப்போடு செயற்பட்ட பொலிஸ் அலுவலர்கள் மற்றும் விஷேட அதிரடிப்படை அங்கத்தவர்கள் ஆகியோரினால் வழங்கப்பட்ட ஒத்துழைப்பை பெரிதும் மதிப்பதோடு, அவ்வனைவருக்கும் பெரிதும் நன்றியுடையவனாவேன். தேர்தல் தினத்தன்றும் அதற்கு முன்னரும் தொழிற்பட்ட தேசிய இணைப்பு நிலையம் மற்றும் பிரதேச இணைப்பு நிலையங்களுக்கு பொறுப்பாகவிருந்து பணியாற்றிய அனைத்து சிரேட்ட பொலிஸ் அலுவலர்கள், அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிய பொலிஸ் அலுவலர்கள் ஆகியோரினால் ஆற்றப்பட்ட பணியையும் பெரிதும் மதிக்கின்றேன். தேர்தல் தினத்திற்கு முந்திய தினம், தேர்தல் தினம் மற்றும் வாக்கெண்ணல் தினம் ஆகிய நாட்களிலும் வாக்கெடுப்பு நிலையங்களிலும், வாக்கெண்ணல் நிலையங்களிலும் பாதுகாப்பு வழங்குவதற்காக களைப்பையும், வசதிகளையும் பொருட்படுத்தாமல் பணியிலீடுபட்ட அனைத்து பொலிஸ் அலுவலர்களுக்கும் விஷேட அதிரடிப்படை உத்தியோகத்தர்களுக்கும் எமது தனிப்பட்ட நன்றி உரித்தாக வேண்டுமென இங்கு குறித்தல் எமது கடமையும் பொறுப்புமாகும். மேலும் தேவையான எச்சந்தர்ப்பத்திலும் பொலிஸ் திணைக்களத்திற்கு உதவும் நோக்கோடு தயார் நிலையிலிருந்த இராணுவத் தளபதி உள்ளிட்ட இராணுவ அலுவலர்களுக்கும் எமது நன்றி உரித்தாகும். அதேபோன்று வட மாகாணத்தின் வாக்கெடுப்பு நிலையங்களுக்கு கடல் மார்க்கமாகவும் மற்றும் ஆகாய மார்க்கமாகவும் பயணிப்பதற்கான போக்குவரத்து வசதிகளை வழங்கியமைக்காக விமானப்படை மற்றும் கடற்படை தளபதிகளுக்கும் அவர்களது பணிக்குழுவினர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தேர்தல் நடாத்தப்பட்ட காலக்கெடுவிற்குள் எப்பொழுதும் தேர்தல் கண்காணிப்பு குழுக்களினால் தேர்தல் சட்டமீறல் சந்தர்ப்பங்கள் தொடர்பாகக் கண்டறிந்து அறிக்கை சமர்ப்பித்தலூடாகவும், வேட்பாளர்கள் மற்றும் அரசியல் தொழிற்பாட்டாளர்கள் ஆகியோரை தேர்தல் சட்டங்களுக்கு அமைவான விதத்தில் நடந்து கொள்ளச் செய்வதற்கு முயற்சியெடுத்தலூடாகவும் காட்டிய ஒத்துழைப்புக்கும், ஆர்வத்திற்கும் எமது நன்றி உரித்தாகும். முறைப்பாடுகள் மற்றும் அறிக்கைகளை சமர்ப்பிக்கின்ற போது நிரூபிக்க முடிந்த விடயங்கள் தொடர்பாக மாத்திரம் தகவல்களை பகிரங்கப்படுத்த நடவடிக்கையெடுக்குமாறு எம்மால்

முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு இணக்கப்பாடு காட்ட முயற்சியெடுத்த கண்காணிப்புக் குழுக்களுக்கும் இது தொடர்பான விஷேட நன்றி உரித்தாகும். சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்காக கட்சி சார்பற்ற கண்காணிப்பு அமைப்புக்களின் செயற்பாடு மிக இன்றியமையாததால், தேர்தல்கள் திணைக்களம் எதிர்காலத்திலும் கண்காணிப்பு அமைப்புக்களின் ஒத்துழைப்பை மிக ஆவலோடு எதிர்பார்க்கின்றது.

தேர்தல் செயன்முறைகளை கண்காணிப்பதற்காக எனது அழைப்பின் பேரில் வெளிநாட்டு கண்காணிப்பு அமைப்புக்கள் அதாவது தெற்காசிய தேர்தல் அலுவலர்களின் அமைப்பு மற்றும் ஆசிய தேர்தல்கள் அலுவலர்களின் அமைப்பு ஆகிய அமைப்புக்களின் முகவர்கள் இந்நாட்டிற்கு வருகைதந்திருந்தனர். அக்கண்காணிப்பாளர்கள் தேர்தலுக்கு முன்னரான காலக்கெடுவினுள் நாடு பூராகவும் தேர்தல் கண்காணிப்பு அலுவல்களில் ஈடுபட்டனர். தேர்தல் சட்டங்களை செயற்படுத்தல் போன்று வேட்பாளர்கள் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்கள் ஆகியோரை தேர்தல் சட்டங்களுக்கு இசைவாக செயற்படச்செய்வதற்கு இவ்வெளிநாட்டு கண்காணிப்பாளர்களின் வருகை பெரிதும் பங்களிப்புச் செய்தது என்பது எனது நம்பிக்கையாகும். ஆகையால் சனாதிபதித் தேர்தல் கண்காணிப்புக்காக இந்நாட்டிற்கு வருகைதந்து பங்களிப்பு வழங்கியமை தொடர்பாக அவ்வெளிநாட்டு கண்காணிப்பு அமைப்புக்களுக்கும் அவற்றின் முகவர்களுக்கும் எனது உளப்பூர்வமான நன்றிகள் உரித்தாகும்.

தேர்தல் செயன்முறை பூராகவும் மிக குறுகிய காலமொன்றினுள் வாக்குச் சீட்டுக்களை அச்சிடல், இதர ஆவணங்களை துரிதமாக அச்சிட்டு வழங்கிய அரசாங்க அச்சக திணைக்களத்தின் அழுத்தகர் உள்ளிட்ட அனைத்து உத்தியோகத்தர்களும், உதவியாளர்களும், உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளின் விநியோகம், அஞ்சல் வாக்குகள் தொடர்பாக நடவடிக்கையெடுத்தல் மற்றும் துரித தேர்தல் கடிதங்களைப் பகிர்ந்தளித்தல் ஆகிய பணிகளை முறையாக ஆற்றிய அஞ்சல் திணைக்களத்தின் அஞ்சல்மா அதிபர் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களும், உதவியாளர்களுக்கும், அடையாள அட்டையற்ற வாக்காளர்களுக்கு தேசிய அடையாள அட்டைகளை விநியோகிக்கும் பணிகளைத் துரிதப்படுத்திய ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட அதன் பணியாட் குழுவினர்கள், இலங்கை மின்சார சபையின், ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையின் அலுவலர்கள், உதவியாளர்கள் ஆகியோர் காட்டிய ஒத்துழைப்புத் தொடர்பாகவும், தேர்தல் பணியாட் குழுவினர்களின் போக்குவரத்துக்காக வசதியேற்படுத்தித் தந்த இலங்கை புகையிரத சேவைக்கும், இலங்கை போக்குவரத்து சபைக்கும், அவற்றின் பணியாட் குழுவினர்களுக்கும், தனியார் போக்குவரத்தாளர்களின் அனைத்து அமைப்புக்களுக்கும், அத்தகைய தனிப்பட்ட பஸ் வண்டிகளில் சேவையிலீடுபட்ட அனைவருக்கும், வாடகை அடிப்படையில் சேவையாற்றிய தனியார் வாகன உரிமையாளர்களுக்கும், சாரதிகளுக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன். செல்லுபடியான அடையாள அட்டையொன்று காணப்படாத வாக்காளர்களுக்கு மாற்று தீர்வொன்றென்ற வகையில் தற்காலிக அடையாள அட்டைகளை வழங்குவதற்கு நடவடிக்கையெடுத்த அனைத்து கிராம அலுவலர்கள், தோட்ட அத்தியட்சகர்கள் ஆகியோருக்கும் அதற்காக ஒத்துழைப்பை வழங்கிய கண்காணிப்பு அமைப்புக்களுக்கும் எனது நன்றி உரித்தாகட்டும்.

வாக்களிப்பு நடவடிக்கைகளுக்காகவும், வாக்கெண்ணல் நடவடிக்கைகளுக்காகவும் அரசாங்க பாடசாலைகளை வழங்கியமைக்காக கல்வி அமைச்சுக்கும் மற்றும் அதன் செயலாளர் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களுக்கும், அனைத்து மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், மாகாண கல்வி அமைச்சுக்களின் செயலாளர்கள், அப்பாடசாலைகளில் அத்தியவசிய வசதிகளை வழங்குவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய பாடசாலை அதிபர்களுக்கும் நன்றி தெரிவிக்கின்றேன். அதேபோன்று வாக்கெண்ணலுக்காக தொழிநுட்ப கல்லூரிகள் உள்ளிட்ட இதர இடங்களை வழங்கிய அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கும் எமது நன்றி உரித்தாவதோடு, வாக்கெடுப்பு நிலையங்களுக்காக தமது பொறுப்பின் கீழுள்ள விகாரைகளையும் சமய தலங்களையும் வழங்கிய வணக்கத்துக்குரிய விகாராதிபதிகளுக்கும் ஏனைய சமயத் தலைவர்களுக்கும் மிக மரியாதையோடு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் வாக்கெடுப்பு நிலையங்களை நிறுவுவதற்காக தமது கட்டிடங்களை / காணிகளை வழங்கிய அச்சொத்துக்களின் உரிமையாளர்களுக்கும் எனது நன்றி உரித்தாகும்.

தேர்தல் சட்டங்களை அமுலாக்கம் செய்வதற்காக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ஒத்துழைப்புத் தொடர்பாக அதன் கௌரவ தவிசாளர் உள்ளிட்ட ஆணையாளர்களுக்கும், செயலாளர்கள் உள்ளிட்ட மொத்தப் பணியாட் குழுவினர்களுக்கும் பெரிதும் நன்றியுடையவனாவேன்.

தேர்தல் திணைக்களத்தின் அனைத்து அறிவித்தல்களையும் ஊடகங்களில் வெளியிடும் போதும் தேவையான எல்லா சந்தர்ப்பங்களிலும் ஊடக ஒருங்கிணைப்பின் போதும் பாரிய பணிப்பொறுப்புக்களை மேற்கொண்ட அரச தகவல் பணிப்பாளர் நாயகம், தகவல் பணிப்பாளர் உள்ளிட்ட அனைத்து பணிக்குழுவினர் மற்றும் பெயர் குறித்த நியமன அறிவித்தல் வெளியிடப்பட்ட தினம் தொடக்கம் தேர்தல்கள் திணைக்களத்தோடு, ஒன்றிணைந்து சரியான தகவல்களை வழங்குவதற்கும் மற்றும் வாக்காளர்களை அறிவூட்டுவதற்கும் செயற்பட்ட ஊடக நிறுவனங்கள், அவ்வூடக நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்திய ஊடகவியலாளர்கள் காட்டிய ஒத்துழைப்பை நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.

மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களினால் தயாரிக்கப்படுகின்ற தேர்தல் பெறுபேறுகளை தேர்தல் செயலகத்தில் மீளப் பரிசீலிப்பதற்காக ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து அரச அலுவலர்களுக்கும் மற்றும் அனுமதிக்கப்பட்ட பெறுபேறுகளை ஊடக நிறுவனங்களுக்கு வழங்க அனுசரணை வழங்கிய கொழும்பு பல்கலைகழகத்தின் கணனிப் பிரிவின் அனைத்து அலுவலர்களுக்கும் அதற்குத் தேவையான இலத்திரனியல் தொடர்பாடல் வசதிகளை வழங்கிய இலங்கை ரெலிகொம் நிறுவனத்திற்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தேர்தலை முறையாக நடாத்துவதற்கு தேவையான சட்டதிட்டங்கள் மற்றும் தத்துவங்கள் அனைத்தும் காணப்பட்ட போதிலும் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்த முடிவது அரசியற் கட்சிகளின் தலைவர்கள், கட்சிக் செயலாளர்கள், அரசியற் கட்சிகளின் தொழிற்பாட்டாளர்கள் மற்றும் வாக்காளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றால் மாத்திரமேயாகும். ஆகையால் இத்தேர்தலின் வெற்றி தொடர்பாக ஏதேனும் கௌரவமொன்று கிட்ட வேண்டுமெனில், அதன் பெறும் பகுதி சட்டத்தை மதித்து செயற்பட்ட அரசியல்வாதிகளுக்கும் அச்சமின்றி சுதந்திரமாக தமது வாக்குகளை அளித்த வாக்காளர்களுக்கும் உரித்துடையதாகும். பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் 80% வீதத்திற்கு அதிகமான வாக்குகள் அளிக்கப்பட்டிருந்தமை எந்தவொரு நிலைமையின் கீழும் உயர்ந்த சதவீதமாகக் கருத முடியும். ஆகையால், தமது வாக்குரிமையை பயன்படுத்திய நாட்டின் அனைத்து வாக்காளர்களுக்கும் எனது கௌரவமும், நன்றியும் மற்றும் பாராட்டும் இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

கடந்த தேர்தல்களுக்குரியதாக பிரச்சாரம் செய்யப்பட்ட அடிப்படைகளற்ற போலி குற்றச்சாட்டுக்கள் விஷேடமாக வாக்குப் பெட்டிகளை மாற்றுதல், வாக்கெண்ணல் தொடர்பான முறைக்கேடுகள் பெறுபேறுகளை வெளியிடும் நிலையங்களின் பெறுபேறுகளை மாற்றம் செய்தல் மற்றும் புதிய தொழிநுட்பங்களினூடாக மேற்கொள்ள முடியுமென வெளியிடப்பட்ட போலியான உபாயங்கள், வாக்களித்தது யாருக்கென்பதை கண்டு கொள்ள முடியுமெனவும், மற்றும் ஊவா மாகாணத்தின் உறுப்பினர் கணக்கிடலுக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட பிரச்சாரம் காரணமாகவும் தேர்தல் திணைக்களம் மற்றும் தேர்தல் அலுவலர்கள் தொடர்பாக ஏற்பட்டிருந்த அவநம்பிக்கை ஊடகங்களூடாக செய்யப்பட்ட அறிவுறுத்தலூடாக சனாதிபதித் தேர்தல் நிறைவடையும் போது குறைந்த மட்டத்தில் இருந்தமை தேர்தல் தினம் உள்ளிட்ட அண்மித்த தினங்களில் அச்சமின்றி வாக்களிக்குமாறு பிரச்சாரம் செய்யப்பட்ட அறிவித்தல், மக்களை அறிவூட்டும் வீதி நாடகங்கள் என்பன அளிக்கப்பட்ட வாக்குகளின் சதவீதம் அதிகரிப்பதற்கு காரணமாக முடியுமென எண்ணுகிறேன்.

சனாதிபதித் தேர்தலை முறையாக நடாத்தியமை தொடர்பாக தேர்தல்கள் திணைக்களத்திற்கும் மற்றும் தேர்தல்கள் ஆணையாளராகிய எனக்கும் பாராட்டுக்கள் கிடைத்த வண்ணமுள்ளன. அவ்வாறு எமக்கு பாராட்டு தெரிவிக்கின்ற அனைவருக்கும் எமது நன்றிகளை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன். நாம் மேற்கொண்டது எமக்கு கையளிக்கப்பட்டுள்ள கடமைகளை முறையாக மேற்கொள்ளுதல் அல்லது மக்கள் விருப்பத்தை முறையாக அச்சமின்றி வெளியிடுவதற்கு தேவையான நிலைமையொன்றை ஏற்படுத்தல் மற்றும் அம்மக்கள் கருத்தை அளிக்கப்பட்ட வாக்குச் சீட்டுக்களை முறையாக எண்ணி சரியாக முடிவுகளை வெளியிடுவதற்கு

நடவடிக்கையெடுத்தமை மாத்திரமெனவும், எமக்கு கிடைக்கின்ற பாராட்டுக்களை இதற்கு முன்னர் கிடைக்கப்பெற்ற விமர்சனங்களைப் போன்றே நன்நம்பிக்கையோடு ஏற்றுக்கொள்கின்றேன் எனத் தயவன்புடன் அறிவித்துக் கொள்கின்றேன்.

பொதுவாக தேர்தலோடு தொடர்புடைய இடைக்கால அறிக்கையிலும் பிரதான அறிக்கையிலும் தவிர இவ்வாறான ஊடக அறிவித்தலுக்கு உள்ளடக்கப்படாத விடயங்கள் சிலவற்றை அனைத்து தரப்பினரும் அறிந்து கொள்வதற்காக உரிய அலுவலர்களின் தயவன்பான கவனத்திற்கு உட்படுத்துமாறு கோருவதற்காகவும் இவ்விடயங்களை குறிப்பிட விரும்புகின்றேன்.

- தேர்தல் காலக்கெடுவினுள் அரச ஆதனங்களின் முறையற்ற பாவனை அதாவது, கட்சிகள் / வேட்பாளர்களின் ஊக்குவிப்புக்காக அல்லது வேறு வேட்பாளரொருவரை பாதிப்புக்குட்படுத்துவதற்காக அரச ஆதனங்கள் மறைமுகமாக மாத்திரமின்றி நேரடியாகவும் ஈடுபடுத்தப்படுகின்றமை தொடர்பில் கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை படிப்படியாக உயர்வடைகின்ற போக்கொன்று ஏற்பட்டுள்ளமை பெரிதும் கவலைக்குரியதாகும். இவ்வலுவல்கள் இடம்பெறுவது குறித்த முக்கிய அரசியல்வாதிகளின் அனுமதியின்றியென தெரியவருகின்ற சந்தர்ப்பங்களும் உள்ளதென்பதோடு, மேலே காட்டப்பட்டுள்ள விதத்திலான முறைபாடுகள் அனைத்தையும் உண்மையற்றதென கருதி ஒதுக்கிவிட முடியாது. ஆகையால், எதிர்வரும் தேர்தல்களின் போது இந்நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு உறுதியான நடவடிக்கைகளையெடுக்க வேண்டியுள்ளது. அதற்காக இவ்வாறான முறைப்பாடுகள் தொடர்பான விசாரணை அலுவல்களைத் தேர்தலுக்குப் பின்னரான காலக்கெடுவினுள்ளும் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் தொடர்பாக கவனம் செலுத்துவது கட்டாயமாகும்.

- இன்றைய சமுகத்தில் தொடர்பாடல் துறையில் ஏற்பட்டுள்ள பாரிய மாற்றம் மற்றும் புதிய போக்கு காரணமாக தேர்தல் காலக்கெடுவினுள் "ஊடக பாவனை தொடர்பான விதிகளை மேற்கொள்ளல்" செய்ய முடியாத அல்லது தேவையற்ற ஒன்றென ஒருவருக்கு தென்பட முடியும். இருப்பினும், தொடர்ந்தும் எமது சமுகத்தின் பெரும்பாலான மக்கள் அச்சு ஊடகங்களை அதாவது பத்திரிகைகள் இலத்திரனியல் ஊடகங்கள் அதாவது வானொளி, தொலைகாட்சி தொடர்பில் நம்பிக்கை வைத்துள்ளமையால் கட்சிகள் / வேட்பாளர்களின் ஊக்குவிப்புக்காக அரசியற் கட்சிகளின் கருத்துக்களை மக்களிடையே கொண்டு செல்வது தொடர்பில் ஊடகங்கள் முக்கியமான வகிப்பாகமொன்றை வகிக்கின்றன. ஆதலால், அரச மற்றும் தனியார் ஊடகங்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்படுகின்ற வழிகாட்டு நெறிகளுக்கு இசைவாக செயற்படுவதன் தேவைப்பாடு தொடர்பாக விஷேட கவனமொன்றை காட்ட வேண்டியுள்ளது. இதற்காக ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள தேர்தல் காலக்கெடுவினுள் மாத்திரம் செயல்வலுவிலுள்ள விஷேட ஊடக ஆணைக்குழுவொன்றை நியமனம் செய்வது போன்ற விடயம் தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பது உசிதமென முன்மொழியப்படுகின்றது.

- நேரடியாக அரச நிறுவனங்களான இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ஒளிப்பரப்பு கூட்டுத்தாபனம், அரசுக்குரிய நிறுவனமான சுயாதீன தொலைக்காட்சி சேவை (ITN) மற்றம் அதனோடிணைந்த வரையறுக்கப்பட்ட ஜக்கிய செய்திப் பத்திரிகை நிறுவன் (லேக்ஹவுஸ் நிறுவனம்) என்பன தேர்தல் காலக்கெடுவினுள் மாத்திரமின்றி ஏனைய காலக்கெடுவினுள்ளும் ஆளும் கட்சியின் நிறுவனமொன்றாகவன்றி அரச நிறுவனமொன்றாக செயற்படச் செய்வது நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு கட்டாயமாகுமென வெளியிடப்படுகின்ற கருத்துடன் நான் முழுமையாக இணங்குகின்றேன்.அதற்காக எப்போதும் முன் நிற்பேன்.

- அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்கள் அரசியல் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல், அவர்கள் கட்சிகள் / வேட்பாளர்கள் ஊக்குவிப்பதற்கு அல்லது பாதிப்புக்குட்படுவதற்கு ஏதுவான விதத்தில் கருத்துக்களை வெளியிடுதல் என்பன சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்கு

பாரிய தடையொன்றாகும். "அமைச்சுக்களின் செயலாளர்கள் அதிமேதகு சனாதிபதி அவர்களால் நியமனம் செய்யப்படுகின்ற ஆட்களென்பதால் அவர்கள் அரசியல் உரிமையுடையவர்களாவர்" என்ற கருத்து சில அரசியல்வாதிகளினால் வெளியிடப்பட்டிருந்தமை காரணமாக மற்றும் நேரடியாக அரசியல் தொடர்புடைய நபர்கள் அமைச்சுக்களின் செயலாளர்களாக நியமனம் செய்யப்படுகின்றமை காரணமாகும். இந்நிலைமை ஏற்பட்டுள்ளதென தெரியவருகின்றது. ஆகையால், சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதற்குப் போன்றே சனநாயக சமுகமொன்றின் இருப்புக்கும் தடையான விதத்தில் செயற்படுவதை தடுப்பதற்காக அமைச்சுக்களின் செயலாளர்கள் அரசியல் செயற்பாடுகளிலிருந்து முழுமையாக விலகியிருத்தல் வேண்டுமென விதித்தல் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்களாக அரசியல் செயற்பாடுகளுடன் தொடர்பற்ற அலுவலர்களை / நிபுணர்களை நியமனம் செய்வதற்கு கூடிய முயற்சிகளையெடுப்பது உசிதமாகுமென தயவன்புடன் சுட்டிக் காட்டவிரும்புகின்றேன்.

- தேர்தல் சட்டத்திருத்தம் முன்மொழிவுகளை செயற்படுத்துவதாயின் அது தொடர்பில் தேர்தல்கள் திணைக்களத்தின் சிரேட்ட அலுவலர்களின் மற்றும் தேர்தல்கள் திணைக்களத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற சிரேட்ட அலுவலர்களை கொண்ட தேர்தல்கள் தொழில் வல்லுனர்களின் அமைப்பிடமும் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ள தயவன்புடன் நடவடிக்கையெடுக்குமாறு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆம் திகதி நடாத்தப்பட்ட சனாதிபதித் தேர்தலை சுதந்திரமாகவும் நீதியாகவும் நடாத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் மீண்டும் நன்றி தெரிவிப்பதோடு, அதன் கௌரவம் அதற்காக பங்களிப்புச் செய்த அனைவருக்கும் உரித்தாக வேண்டுமெனவும், ஏதேனும் சிறிய தவறொன்று அல்லது கவனக்குறைவால் வழுவொன்று ஏற்பட்டிருப்பின் அதன் பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன் எனவும் தெரிவித்து இக்குறிப்பை இத்தால் நிறைவு செய்கின்றேன்.

மஹிந்த
தேசப்பிரிய,
தேர்தல்கள்
ஆணையாளர்.

தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை,
இராஜகிரிய,
12.01.2015

பிற்குறிப்பு

கணிசமான காலமொன்று தேர்தல்கள் திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டு பணியாற்றி வந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் பொலிஸ் கொஸ்த்தாபல் திரு.பீ.டப்ளிவ்.ஐ.கே.பிரனாந்து அவர்கள் தேர்தலுக்குப் பின்னரான கடமைகளுக்காக உத்தியோபூர்வ பயணமொன்றில் ஈடுபட்டிருந்த போது பாடசாலைச் சேவை வேன் வண்டியொன்றின் சாரதியின் கவனக்குறைவு காரணமாக திடீர் விபத்திற்குட்பட்டு மரணமடைந்தமை தொடர்பாக எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.